சுந்தர காண்டம்

காட்சிப்படலம்




3479
இலங்கை
894.811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா விவேயிடெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACC No- 3479



Digitized by Navaharm Foundation
Foundation.org | aavaraharm.org

உ

கம்பராமாயணம்

சுந்தரகாண்டம்

காட்சிப்படலமும் — நிந்தனைப்படலமும்

(159 செய்யுள்கள்)

விளக்கவுரை

இரவல் வழங்கும் பகுதி

பொது நூலகம்
வல்வெட்டித்துறை


க பொ. த. (சாதாரண) பரீட்சை
1979 — 1980

உரையாசிரியர்
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்
க. வேந்தனார் அவர்கள்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு 1961
திருந்திய இரண்டாம் பதிப்பு 1962
மூன்றும் பதிப்பு 1979



ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

உரிமை பதிப்பாளருக்கு] [விலை ரூ. 12-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

1979ஆம் ஆண்டு இலக்கியம் ''அ'' பாடத்திட்டத்தின் செய்யுட் பகுதியாகக் கம்பராமாயணம்: சுந்தரகாண்டம், காட்சிப்படலம் (அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு - முதற்பகுதி செய்யுள் 330 - 488) கல்வியமைச்சினால் அமைக்கப்பட்டுள்ளது. 'மாடு நின்றவம் மணிமலர்' எனத் தொடங்கும் செய்யுள் முதல் 'அறிந்தாரன்ன முச்சடை' எனத் தொடங்கும் செய்யுள் வரையுள்ள 159 செய்யுள்கள் இதில் அடங்குகின்றன.

கம்பராமாயணம்-காட்சிப்படலம், நிந்தனைப் படலம் என்ற இருபடலங்களையும் சேர்த்தே அண்ணுமலைப் பல்கலைக் கழகம் 'காட்சிப் படலம்' என்ற பொதுத் தலைப்பிலே நூல் வெளியிட்டுள்ளது என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது இந்தச் செய்யுட் பகுதி 1962 தொடக்கம் சில ஆண்டுகள் க. பொ. த. ப.(சாதாரணதரம்)பரீட்சைக்குப் பாடநூலாய் அமைந்திருந்தது. அவ்வேளையில் இப்பாடல்களுக்கு **வித்துவான், பண்டிதர், சைவப்புலவர் க. வேந்தனார் அவர்களைக்** கொண்டு விளக்கம் எழுதுவித்து வெளியிட்டோம். இன்று அவர் எம்மிடை இல்லை. அமரராகிவிட்ட அந்தத் தமிழறிஞர் பெருந்தகையின் ஆன்மாவிற்கு எமது நன்றி என்றும் உரியது.

கம்பன் கவிச்சக்கரவர்த்தி அவன் எழுதிய காவிய மணியாரத்தின் ஒளிச்சுடர் மணியாக ஒப்பற்று நின்று இலங்குவது சுந்தரகாண்டம். இதன் சிறப்புக் கருதியே அழகு பொருந்திய பாகம் என்னும் பொருளிலே சுந்தரகாண்டம் என்ற பெயர் இதற்கு அமைந்தது. இந்தக் காண்டத்தின் உயிர் நாடியாகவும் உச்சமாகவும் விளங்குவன காட்சிப் படலம், நிந்தனைப்படலம் ஆகிய இரண்டுமே எனில் அது மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்க்குக் கவிஞனை மகாகவி கம்பனின் மிகச் சிறந்த படலங்களுக்கு ஈழத்தின் தலைசிறந்த தமிழ்ப் பேரறிஞரான அமரர் வேந்தனார் எழுதிய விளக்கவுரையை இன்று நாம் வெளியிடுவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். இந்நூல் தமிழிலக்கிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இதனை வெளியிட அனுமதி வழங்கிய திருவாட்டி வேந்தனார் அவர்களுக்கு எமது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பதிப்பாளர்

ஸ்ரீ லங்கா பதிப்பகம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
1-05-79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பர் வரலாறும் காவியப் பண்பும்

கவிஞர் பெருமானுகிய கம்பர் சோழநாட்டிலே உள்ள திரு வழுந்தூரிலே தோன்றினர். திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த வேளாண் பெருங்குடிச் செல்வராகிய சடையப்பவள்ளலார் கம்பரை வளர்த்தார். சடையப்பவள்ளலாரின் அன்பும், ஆதரவும் கம்பரைத் தமிழகத்துக்குத் தந்தன. கம்பர் சடையப்பவள்ளலாரை "வெண்ணெய் வாழ் வண்ணன்" என அகலிகைப் படலத்திலும், "மழையென்று ஆசங்கைகொண்ட கொடைமீனி அண்ணல்" என, நாகபாசப் படலத்திலும் பாராட்டியுள்ளார்.

கம்பர் வாழ்ந்த (கி. பி. 1178) கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு தமிழர் வரலாற்றில் மிகச்சிறந்த காலமாகும். இக் காலத்திலேதான், சோழப்பெருவேந்தர்கள் தமிழ் நாட்டை ஆண்டார்கள். ஆட்சித்திறமையும், ஆண்மையும் மிக்க சோழரின் காலத்திலே தமிழகத்தின் பெருமை வெளிநாடெல்லாம் பரவி விளங்கியது. கங்கையைக் கொண்டும் கடாரத்தை வென்றும், பெரும்புகழீட்டிய சோழப் பெருவேந்தர்களால் தமிழகம் தழைத்தது. இங்ஙனம் தமிழர்களும், தமிழ் நாடும் உயர்ந்து விளங்கிய உரிமையாட்சிக் காலத்திலே கம்பர் உலாவினர். கம்பரின் கனிந்த உள்ளம் சோழப் பெருவேந்தரின் வெற்றித் திருவாலும், சடையப்பவள்ளலாரின் வண்மைத்திருவாலும் வளம் பண்டத்து மலர்ந்தது.

இங்ஙனம் புலமைச் செல்வம் வாய்ந்த கம்பர் பொதுமக்களின் வாழ்வை நோக்கினர். சோழர் காலத்திலே வடமொழிக் கல்வி தமிழ்நாட்டில் பரவியது. வான்மீக முனிவர் வடமொழியில் இயற்றிய இராமாயண வரலாற்றைத் தமிழிற்பாடக் கம்பர் விரும்பினர். கம்பரின் புலமை ஆற்றலை உணர்ந்த சடையப்பவள்ளலாரும், சோழப் பெருவேந்தனுகிய மூன்றாம் குலோத்துங்கனும், கம்பரை ஊக்கி இராமாயணத்தைப் பாடும்வண்ணம் அடிக்கடி வேண்டிக் கொண்டார்கள். கம்பர் வான்மீக முனிவரின் இராமாயண வரலாற்றைத் தமிழ்ப் பண்பாட்டிற் கேற்ப, மாற்றியும், புதுக்கியும் தமிழ்ப் பெருங்காப்பியமாகப் பாடினர். வடமொழி வான்மீகத்தில் உள்ள வரலாறுகள் சில வற்றையும், பாத்திரங்களின் பெயர்களையும் விட, மற்றைய பகுதிகளையெல்லாம் கம்பர் தமிழ்க்கோலம் செய்துவிட்டார். தாம் வாழ்ந்த தமிழ்நாட்டையும், அங்கு வாழ்ந்த தமிழ் மக்களின் பண்பாட்டையுமே, கம்பர் தாம் பாடிய இராமாயணத்தில் காட்டுகின்றார். தமிழ் மரபிலே ஊறிச்செழித்த கம்பர் ஆக்கிய இராமாயணம் தமிழ்நாட்டுக் காவியமாகவே விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியப்பண்பு

வான்மீக முனிவரின் உள்ளொளியுடன், கம்பரின் உள்ளங் கலந்து சுரந்த கம்பராமாயணத்தால் தமிழ் மொழி புதிய ஆற்றலும் வாழ்வும் பெற்றுப் பொலிகின்றது. அறத்தின் சிறப்பை அடிப்படையாகக் கொண்டே கம்பர் தமது காவியத்தை நடத்துகின்றார். ஆற்றலும் ஆண்மையும், அழியாத தவப்பேறுகளும் அறத்தை மறந்தால் அழிந்துபோகும் என்பதைக் கம்பர் காட்டுகின்றார். கற்பின் ஆற்றலும் ஒளியும் கம்பரின் புலமை ஆற்றலுடன் கலந்து காட்சியளிக்கின்றன. உடன்பிறந்தாரின் உண்மை அன்பும், நன்றி உணர்ச்சியும், நட்பின் மேம்பாடும், கம்பரின் கவிதைகளிலே கிடந்து அலைமோதுகின்றன. பற்பல நூற்றாண்டுகளாகத் தமிழர் இனத்திலே ஊறிக்கிடந்த பண்பாடுகள் எல்லாம் கம்பர் பெருமானால் உருப்பெற்று இராமாயணப் பெருங் காப்பியமாக விளங்குகின்றது. மக்களின் உள்ளத்திலே தோன்றுகின்ற பல்வேறுவகையான உணர்ச்சிகளையும் வேறுவேறான பாத்திரங்களில் அமைத்துக் காட்டுகின்ற கற்பனை ஆற்றல் கம்பருக்கே உரிய தனிப்பண்பாகும். தன்னிகர் இல்லாத் தலைவனாகிய இராமனைப் படைத்து, அறத்தின் வெற்றியை வாழ்வித்தற்காகக் கம்பர் தமது வாழ்நாட்களில் பெரும்பகுதியைச் செலவிட்டுள்ளார் என்பது தெளிவாகும். இராமாயணத்திலே, உலகம் உள்ளளவும், நிலைபெறக்கூடிய உயர்ந்த கொள்கைகள் இடம் பெற்றுள்ளன. கம்பரின் அழுத்தமான பழுத்த புலமையும், பரந்துபட்ட கலை உணர்ச்சியும் இராமாயணத்தில் பெருகிப் பாய்கின்றன. கம்பரின் செய்யுள்நடை எடுத்துக் கொண்ட பொருளுக்குப் பொருத்தமான இயற்கையுடன் தொடர்ந்து செல்லும் திறமை வாய்ந்தது. சொல்லின்பம், தொடையின்பம், பொருளின்பம், ஓசையின்பம் என்னும் இவற்றைத் தாங்கிப் பெருமிதத்துடன், கற்பவர் உள்ளத்தை அள்ளி உலாவுகின்ற எழுச்சியைக் கம்பரின் கவிதைகளிற் காணலாம். இங்ஙனம் பல நலங்களும் பொருந்திய இராமயணத்தால் தமிழ் இலக்கியம் பெருமதிப்பைப் பெற்று விட்டது.

கம்பர் தாம் பாடிய இராமாயணத்தைப் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களாக வகுத்துள்ளார். காட்சிப்படலமும், நிந்தனைப்படலமும், சுந்தர காண்டத்திலுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரகாண்டம்

கம்பர் தாம் வகுத்த ஏனைய ஐந்து காண்டங்களுக்கும் அமைத்துள்ள பெயர்களை நோக்கும் போது இக்காண்டத்தை இலங்கா காண்டம் என வைத்திருக்கலாமே என்ற எண்ணம் எழுகின்றது; அவர் சுந்தரகாண்டமெனப் பெயர் வைத்ததன் காரணம் ஆராயத் தக்கதாகும். கம்பர் முதல் நான்கு காண்டங்களிலும் எமக்கு அறிமுகஞ் செய்து வந்த காவியத் தலைமக்களாகிய, இராமன், சீதை என்னும் இருவரின் அக அழகாகிய உயர்ந்த பண்பாடுகளின் தூய்மையை நிலைநாட்டுகின்ற சிறப்பு நிகழ்ச்சிகள், சுந்தரகாண்டத்திலேதான் இடம்பெற்றுள்ளன. கம்பர், இராமாயணம் என்னும் பெருங்காப்பியத்திலுல் உலகுக்குணர்த்த வந்த உயர்ந்த பண்பாடுகள் யாவும் சுந்தரகாண்டத்தில் இடம் பெற்றுள்ளன என்றே கொள்ளலாம். இராமாயணம் சுந்தர காண்டத்துடன் நிறைவெய்திவிட்டது. சீதாதேவி, தான்பிறந்த குலத்தையும் புகுந்த குலத்தையும் மேம்படுத்திவிட்டாள் என்ற அளவில் இராமாயணத்தின் பயன் உலகில் நிலைபெற்றுவிட்டதென்றே கூறலாம்; அனுமான் திருவடி தொழுத படலத்துடன் இராமாயணத்தைக் கம்பர் முடித்திருந்தாலும் ஒரு குறைவும் இல்லை.

எனவே, இச்சுந்தரகாண்டம் சிறப்பாகச் சீதாதேவியின் அக அழகென்னும் குணசௌந்தரியத்தை எடுத்துக் கூறுகின்றது; அத்துடன் இராமபிரானின் குணசௌந்தரியமும் அனுமானின் வீரசௌந்தரியமும் கலந்து கிடக்கின்றன. இங்ஙனம் முப்பெரும் பாத்திரங்களாகிய சீதாதேவி, இராமபிரான் அனுமான் என்பவரின் அக அழகென்னும் குணசௌந்தரியங்கள் அறத்துடன் கலந்து பேரொளி பரப்புகின்ற சிறப்பு நோக்கியே சுந்தரகாண்டம் எனப்பெயர் பெற்றதென்க. சுந்தரம் — அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிப் படலம்

காட்சிப்படலம் என்பது, இராமபிரானின் தூதனுகிய அனுமான் சீதாதேவியை அசோகவனச் சிறையில் கண்டநிகழ்ச்சியைக் கூறும் பகுதியாகும். (காட்சி - காண்டல்) இப்பகுதியில் சிறையிருந்த செல்வியாகிய சீதாதேவியின் தவக்கோலத்தை அனுமான் கண்டு வியக்கின்ற செயல் பெண்குலத்தின் மேம்பாட்டை எடுத்துக் காட்டுவதாகும். சீதாதேவியை இராமபிரான் மிதிலை மாநகரில் கண்ட செயல் பாலகாண்டத்தில் கூறப்படுகின்றது; அச்சீதாதேவி தன் ஆருயிர்த் தலைவனுகிய இராமபிரானைப் பிரிந்து, சிறைச்சாலையிலே துன்பமே உருவமாக இருந்து வருந்துகின்ற தவக்கோலத்தை அனுமான் காண்கின்ற செயல் சுந்தரகாண்டத்தில் கூறப்படுகின்றது. அங்கே மிதிலையில் உலகைக் காட்சியையும், இங்கே சிறைச்சாலையில் சோகக் காட்சியையும் கம்பர் சித்திரிக்கின்றார். இராமபிரான் மிதிலைமாநகரிலே சீதாதேவியாரிடங் கண்ட உடல் அழகினும் மிகமிக உயர்ந்த அக அழகுகளாக விளங்கும் சீதாதேவியின் குடிப்பிறப்பையும் பொறையையும், கற்பையும் அசோகவனத்திலே அனுமான் கண்ட வரலாற்றை நாம் காட்சிப் படலத்தில் காண்போம்.

நிந்தனைப் படலம்

நிந்தனைப்படலம் என்பது, காமவேட்கையால் அறிவழிந்து அருவருக்கத்தக்க மொழிகளைக் கூறித் தன்னை இரக்கின்ற இராவணனைச் சீதாதேவியார் வஞ்சின மொழிகளால் வைதுரைக்கும் செயலைக் கூறும் பகுதியாகும். நிந்தனைப் படலத்தில் அறத்தை மறந்த இராவணனுக்கு, அறத்தின் சிறப்பையும், அருளின் சிறப்பையும் எடுத்துக் காட்டி இடித்துக் கூறும் சீதாதேவியின் கருணையுள்ளத்தைக் காணலாம். இராவணனைச் சீதாதேவியார் நிந்தித்ததாகப் படலப் பெயர் அமைந்திருந்தாலும், படலத்தில் உள்ள பொருளைப் படித்துணரும் பொழுது, சீதாதேவி, இராவணனைத் திருத்தி வாழ்விக்க வேண்டுமென்னும் பெருங் கருணையினுல் அவனுக்குத் தரும உபதேசம் செய்வதாகவே தோன்றும். சீதாதேவியின் கற்பென்னும் கலங்கா நிலைமையையும், அறநூற் புலமையையும் இன்னு செய்தாற்கும் இனியவே செய்யும் பெருங்குணத் திறத்தையும் நிந்தனைப் படலத்தில் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் வணக்கம்

அலங்கலில் தோன்றும் பொய்மை யரவெனப் பூத மைந்தும்
விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால் அவரென்பர் கையில் ஏந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்.

பொருள்

அலங்கலில் – மாலையின் கண்ணே (உலர்ந்து சரு கானமாலையைக் காணும்போது),தோன்றும்-மனத்தின் கண்ணேஉண்டாகின்ற, பொய்மை அரவு என–பொய் யாகிய பாம்பைப்போல,(பின் பாம்பென்னும் தன்மை இல்லாது ஒழிதல் போல) பூதம் ஐந்தும்–நிலம், நீர், நெருப்பு, வான், காற்று என்னும் ஐந்து பூதங்களும், விலங்கிய • (ஒவ்வொன்றும் தனித்தனியாயிருக்கும் தன்மையை விட்டு) மாறி ஒன்றுகச் சேர்ந்ததனல் உண்டானதும், விகாரப்பாட்டின் - விகாரப்படுதலை உடையதும்,வேறுபாடுஉற்ற-(வானவர்,மக்கள்,விலங்கு மரம் முதலிய) பாகுபாடு கொண்டதுமான, வீக்கம்– மிகுதிப்பாட்டால் உண்டாகின்ற பிறப்பு, எவரைக் கண்டால் – யாரைக்கண்ட உடனே (யாருடைய சந்நி தானத்தில்), கலங்குவது-வேறுபாடுகள் உள்ள பொருள் கள் எல்லாம் கரைந்து பரம்பொருளோடு ஒன்றெனக் கலங்கிவிடுகிறதோ, அவர் அன்றே - அவரேதான் (அப் பரம் பொருளேதான்), கையில் ஏந்தி-கையில்கோதண் டம் என்னும் வில்லைத்தாங்கி, இலங்கையிற் பொரு தார்–இலங்கையில் இராவணனோடு இராமனாக நின்று போர் புரிந்தார். என்பர் – என்று சொல்வார்கள் (அங்ஙனம் சொல்கின்றவர்கள் யாவரெனில்) மறைக ளுக்கு – வேதங்களிற் சொல்லியுள்ள, இறுதியாவர்– இறுதியான பொருளைக்கண்டு உணர்ந்த தத்து வ ஞானிகளேயாவர்.

பொழிப்பு

மாலையின் தோற்றத்தை மயக்க உணர்ச்சியினல் பாம் பெனக் கொள்கின்ற எண்ணம் பின் பொய்யாக ஒழிதல்போல, வேறுபட்ட ஐம்பெரும் பூதங்களும் ஒன்றுபட்டு நிற்கின்ற விகா ரத்தினல் உண்டாகின்ற பிறப்பு எவரின் சந்நிதானத்தில் வேறு பாடுள்ள பொருள்கள் எல்லாம் கரைந்து ஒன்றெனக் கலங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றதோ அவரே தான் தன் கையில் கோதண்டம் என்னும் வில்லைத்தாங்கி இலங்கையில் (இராவணனோடு இராமனாக நின்று) யோர் புரிந்தது என்பதாம்.

விளக்கம்

ஒரேயொரு உண்மைப் பொருள்தான் இந்தப் பெரிய உலகில் இருக்கிறது. அப்பொருள்தான் கடவுள். அந்த உண்மைப் பொருளாகிய கடவுள் எல்லாமாய் உருவெடுத்து விளங்குகின்றதென்பதையும், அக்கடவுள் தான் இராமனாகத் தோன்றி உலகில் அறத்தை நிலை நாட்டுவதற்காக அறத்தை மறந்த கொடியோனாகிய இராவணனை அழித்து, வேத வாக்கை வாழ்வித்தது என்ற உண்மையையும் தமது உள் உணர்ச்சியால் தெளிந்த கம்பர் விளக்கிக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிப் படலம்

1. அசோகவனத்துள் அனுமன் புகுதல்

[1 — 2 செய்யுள்]

இலங்கை மாநகரின் மணிமாடங்களிலும் மற்றைய இடங்களிலும் சீதாதேவியைத் தேடிக்காணுத அனுமான் சிந்தை சோர்ந்தான். இனி எங்கு நான் சென்று சீதாதேவியைத் தேடிக் காண்பேன் என்றெல்லாம் எண்ணியெண்ணி ஏக்கங்கொண்ட அனுமான் தேன் மணங் கமழ்கின்ற மாமலர்ச் சோலையொன்றைக் கண்டான். கண்டதும் அச்சோலையை அடைந்தான். யான் சீதாதேவியை இப் பூஞ்சோலையின் கண்ணே தேடிக் காண்பேனுகில் என் துன்பம் தீர்ந்துவிடும். சோலையில் தேவியைக் காணமுடியாது போனுல் என்னுல் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. இந்த இலங்கை மாநகரைப் பெயர்த்தெடுத்துத் திரிகூட மலையின்மேல் மோதியழித்து நானும் என் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று துணிந்தான்.

இங்ஙனம் துணிவுகொண்ட அனுமான் அழகு நிறைந்த அசோகவனத்தை அடைந்தான். அனுமான் அசோகவனத்துள் புகுந்ததைக் கண்ட அமரர்கள் ஆனந்த மேலீட்டினுல் அனுமான்மேல் பூமழை பொழிந்தார்கள். இங்ஙனம் அமரர்களின் செயல் நிகழ, போர்ப் படைகளை தாங்கிய இராவணனின் சிறையிலிருந்து வருந்துகின்றவளும், நெருங்கி இருண்ட கூந்தலையுடையவளுமாகிய சீதாதேவியின் அப்போதைய நிலைமையை இனிக் கூறுகின்றேம் என்பதாம்.

அனுமானின் முடிபு

1. மாடு நின்றவம் மணிமலர்ச் சோலையை மருவித்
தேடி யிவ்வழிக் காண்பெனேற் றீருமென் சிறுமை
ஊடு கண்டிலெ னெனிற்பின்ன ருரியதொன் றில்லை
வீடு வேன்மற்றிவ் விலங்கன்மே லிலங்கையை வீட்டி.

கொண்டு கூட்டு : மாடுநின்ற அ மணிமலர்ச் சோலையை (அனுமான்) மருவி, இ வழி தேடிக்காண்பென் ஏல் (காண்பேன்) என் சிறுமை தீரும். ஊடு கண்டிலன் எனின் பின்பு உரியது ஒன்று இல்லை. இலங்கையை இ விலங்கல் மேல் வீட்டி (நானும்) விடுவென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

மாடு நின்ற - (அனுமானின்) அருகில் பொருந்திய, அ(வ்)- அந்த, மணி- அழகு வாய்ந்த, மலர்ச்சோலையை- மலர்கள் பூத்துக் குலுங்குகின்ற பூஞ்சோலையை, (பூங் காவை) மருவி – அடைந்து, இ(வ்)வழி – இச்சோலை யிடத்தில் (இவ்விடத்தில்), தேடி – (ஆராய்ந்து) தேடி (சீதாபிராட்டியை), காண்பனேல் - காண்பேனுனுல், என் சிறுமை - (சீதா தேவியைத் தேடிக் கண்டிலேன் என்பதனுல் உண்டான) எனது துன்பம், தீரும்-ஒழிந்து விடும், ஊடு – அச்சோலையில் நுழைந்து அதனுள்ளும், கண்டிலன் எனில் - (சீதாபிராட்டியை) காணமுடியாத வனுனுல், பின்னர் - அதன்பின்பு, உரியது ஒன்றில்லை- (என்னுல் செய்ததற்கு) உரிய செயல் வேறொன்றுமில்லை (இதன்மேல் யான் செய்யக்கூடிய ஒரே காரியம்) இலங் கையை–இலங்காபுரியை, இ விலங்கல்மேல் - இந்தத் திரிகூடமலையின்மேல் (பெயர்த்து மோதி) வீட்டி–அழிவு செய்து (அதன் பின் யானும்) வீடுவேன்-உயிர்விடுவேன்.

பொழிப்பு

அனுமான் தன் பக்கத்திலே பொருந்தியுள்ள பூஞ்சோலையை அடைந்து இனிச் சீதாதேவியை இப்பூஞ்சோலையின் கண் தேடிக் காண்பேன் அங்ஙனம் காண்பேனுகில் என் துன்பம் ஒழிந்து விடும். சோலையினுள்ளும் சீதாதேவியைக் காணமுடியாது போனுல் என்னுல் செய்யக்கூடியது ஒன்றுமில்லை இந்த இலங்கா புரியைத் திரிகூடமலையின் மேல் மோதி அழித்து நானும் இறந்து படுவேன் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் வீரம் நிரம்பிய அனுமானின் இறுதியான முடிவைக் காண்கின்றேம். மலர்ச்சோலை ஒழிந்த இலங்கையின் ஏனைய இடங்களெல்லாம் சீதை யைத் தேடிக்காணுத அனுமான் மிகச் சோர்ந்துவிட் டான். தேவியைக் காணமுடியாமல் தோல்வியுடன் திரும்பவேண்டிய நிலைமை தனக்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற ஏக்கம் அனுமான் உள்ளத்தில் தோன்றிவிட் டது. தோல்வியுடன் திரும்புதல் இராமபிரான் தன் மீது கொண்ட பெருமதிப்பிற்கும், தான் அவருக்கு உன் தேவியைக் கண்டுதான் வருவேன் எனக்கூறிய உறுதி மொழிக்கும் பொருந்தாது என்பதை எண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ண அனுமானின் உள்ளம் துன்பத்தால் துடிக்கின்றது.

"தேடி இவ்வழிக் காண்பனேல் திரும் என் சிறுமை
ஊடு கண்டிலென் எனில் பின்னர் உரியது ஒன்றில்லே"

எனவும், "இலங்கையை வீட்டி வீடுவேன்" எனவும், வருகின்ற அனுமான் மொழிகளில் அவனின் உயிர்த் துடிப்பைக் கம்பர் அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றார்.

சோலை புகுந்த தூதன்

2. என்று சோலைபுக் கெய்தினன் இராகவன் றூதன்
ஒன்றி வானவர் பூமழை சொரிந்தன ருவந்தார்
அன்று வாளரக் கன்சிறை யவ்வழி வைத்த
துன்ற லோதிதன் னிலையினைச் சொல்லுவான் றுணிந்தான்.

கொண்டு கூட்டு: என்று எண்ணி இராகவன் தூதன் சோலை புக்கு எய்தினன் (அப்போது வானவர் ஒன்றி பூமழை சொரிந்தனர் உவந்தார் (இது நிற்க) அ வாள் அரக்கன் (இராவணன்) அ வழி சிறை வைத்த துன்று அல் ஓதிதன் (சீதாபிராட்டியாரின்) அன்று நிலையினை சொல்லுவான் துணிந்தாம்.

பொருள்

என்று - என்று மேற்கூறியவாறு எண்ணி, இராகவன் தூதன் - இராமபிரானின் தூதுவனுகிய அனுமான், சோலை – (சீதாதேவி சிறை இருக்கின்ற) அசோகவனத்தை, புக்கு எய்தினன் – போய் அடைத்தான். (அனுமான் அசோகவனத்தை எய்திய செயலைக் கண்ட) வானவர் - தேவர்கள், ஒன்றி - (இராவணன் அழிவான் என்ற எதிர்கால இன்பத்தால்) ஒருங்கு சேர்ந்துநின்று பூமழை சொரிந்தனர் - மலர்களை (வாரி) மழைபோல (அனுமான்மேல்) பொழிந்து உவந்தார் - மகிழ்ச்சி கொண்டார்கள். (தேவர்களின் செயல் இவ்வாறுநிகழ) அ(வ்)வாள் அரக்கன் – போர்ப்படைகளைத் தாங்கிய அந்த அரக்கனுகிய இராவணன், அவ்வழி – அந்த அசோகவனம் என்னும் சோலையில், சிறை வைத்த–தன்னுல் சிறை காவலில் வைக்கப்பட்டிருக்கின்ற, துன்று–மிக நெருக்கம்கொண்ட, அல்ஓதிதன் - இருள் போலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமை பொருந்திய கூந்தலையுடையவராகிய சீதாபி ராட்டியாரினது, அன்று நிலையினை - அப்பொழுதைய- (அந்த நேரத்தின்) நிலைமையை, சொல்லுவான் துணிந்தாம் - (இனியாம்) சொல்லுதற்குத் துணிந்தோம்.

பொழிப்பு

மேற்கூறியவாறு எண்ணிய இராமதூதனாகிய அனுமான் சீதாதேவி சிறைஇருக்கின்ற அசோகவனத்தைப் போய் அடைந்தான். அனுமான் அசோகவனத்தை அடைந்த செயலைக்கண்ட அமரர்கள் இராவணனுக்கு அழிவு கிட்டிவிட்டதென்று ஆனந்த மேலீட்டால் அனுமான் மேல் பூமழை பொழிந்தார்கள். இங்ஙனம் அமரர்களின் செயல் இருக்கப் போர்ப்படைகளைத் தாங்கிய இராவணனால் அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்டவளும், நெருங்கி இருண்ட கூந்தலையுடையவளுமாகிய சீதாபிராட்டியாரின் அன்றைய நிலைமையைக் கூறுகின்றோம் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுள் கம்பரின் கூற்றாகும். (கவிக்கூற்று) இதில் அனுமான் அசோக வனத்தில் புகுந்ததைக் கண்ட அமரர்கள் இனி இராவணன் அழிந்தேபோவான் என்ற துணிவினால் அனுமான் மேல் பூமழை பொழிந்தார்கள்) என்னும் மங்களச் செய்தியைக் கம்பர் மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார் இராவணனின் ஆணைக்கு அஞ்சி அங்குமிங்குமாக சிதறி அலைந்து திரிந்த அமரர்கள் அசோகவனத்தின் கண் அனுமான் புகுந்தவுடன் இராவணனால் இனிமேல் தமக்கு ஓர் இன்னலும் ஏற்படாது என்ற துணிவினால் ஒன்றுபட்டு விட்டார்கள் என்பதைக் கம்பர் குறிப்பாகக்காட்டுகின்றார்.

''ஒன்றின் வானவர் பூமழை சொரிந்தனர் உவந்தார்'' என்னும் தொடரில் கம்பருடைய எதிர்காலச் சிந்தனையின் எழுச்சியைக் காண்கின்றோம். கொல்லும் கொடிய போர்ப் படைகளைத் தாங்கிய இராவணன் சீதாபிராட்டியாரின் வெளி அழகினால் அள்ளுப்பட்டு அழிகின்றான் என்பதை எண்ணிய கம்பர் **''துன்று அல் ஓதி''** எனச் சிறையிலிருந்து வாடுகின்ற சீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியின் விரிந்த கூந்தலைக் கூறுமல், இராவணன் சீதாதேவியைப் பர்ணசாலையுடன் பெயர்த்தெடுத்த போது அவன் கண்ட நெருங்கி இருண்டு நீண்ட கூந்தலையே நினைவூட்டுகின்றார்.

"சொரிந்தனர் உவந்தார்" என்பது சொரிந்து உவந்தார் என முற்றெச்சமாக நின்றது.

---

2. அரக்கியர் நடுவிலிருந்து அல்லலுறும் சீதை

[3 — 11 செய்யுள்]

அசோகவனச் சிறையின்கண் அரக்கியர் நடுவிலிருந்து அல்லலுறும் சீதையின் நிலைமையைப் பின் வரும் பதினொரு பாக்களால் கம்பர் படம் பிடித்துக் காட்டுகின்றார். தன் ஆருயிர்த் தலைவனை எண்ணி யெண்ணி அல்லலே உருவமாக இருந்து ஆவி துடிக் கின்ற சீதாதேவியின் அக உணர்ச்சிகளையெல்லாம் கம்பர் அள்ளிக் கூறுகின்ற அருமையைக் காண்போம்.

கற்பாறையின் இடையே முளைத்து ஒருதுளி நீரை யேனும் காணுது வாடுகின்ற நல்ல சஞ்சீவிச் செடி யைப் போலச் சிறைச்சாலையிலிருந்து அழகுகெடச் சீதாதேவி வாடுகின்றாள். அவள் துன்பத்தினால் வருந்தி வருந்தி தனது மெல்லிய இடையைப் போல எல்லா உறுப்புக்களும் இளைத்து விட்டாள். வலிமை பொருந் திய அரக்கியர்கள் வாடி வருந்துகின்ற சீதையை அச் சுறுத்தி ஆவி துடிக்கச் செய்கின்றார்கள். இங்ஙனம் அச்சத்தாலும் பிரிவுத்துயரத்தாலும் வாடுகின்ற சீதை மயில் போன்ற சாயலையும் குயில் போன்ற குதலை மொழிகளையும் உடையவள். அவள் உறக்கம் வந்த தென்று கண்களை மூடுதலையும் உறக்கம் தெளிந்து கண்களை விழித்தலையும் மறந்தாள். எறிக்கின்ற வெயி லிலே வைத்த விளக்கைப் போல உடம்பின் ஒளி குறைந்தாள். கொல்லும் புலிக்கூட்டத்தின் நடுவே அகப்பட்ட நல்ல இளம் பெண்மானைப் போல நடுங் கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நிலைமையினும் கூட அவள் இராம பிரானை மறக்கவில்லை. அவன் இருக்கும் திக்கை நோக் கித் தொழுகின்றாள். உடனே தளர்ந்து கீழே விழு கின்றாள். வாய்விட்டு புலம்புகின்றாள். துன்பத்தீயால் உடல் வெந்து துடிக்கின்றாள்; அஞ்சுகின்றாள், பர த விக்கின்றாள். எழுந்திருக்கின்றாள். உடனே சோர்ந்து நடுங்குகின்றாள். பெருமூச்சு விடுகின்றாள். ஓவென்று அழுகின்றாள். செய்வது இன்னதென்று தெரியாமல் திகைக்கின்றாள். நூல் இழையினும் நுட்பமான இடை யையுடைய சீதாதேவி மேற்கூறிய வண்ணம் துன்ப உணர்ச்சிகளால் தாக்குண்டு கண்களால் கண்ணீர் வெள்ளத்தைப் பொழிகின்றாள். மழைபோலக் கண் ணீரைப் பொழிவதால் நன் கண்களைக் மழைக்கண் எனக் கூற வைத்தாள்.

எவ்வளவு துன்பம் ஏற்பட்ட பொழுதிலும் அத் துன்பத்திற்கு இடையிலும் சீதாதேவி ஓர் இன்பத் தைக் காண்கின்றாள். அழகு பொருந்திய அருமை யான நீலமேகம் கண்ணிற்கு இடுகின்ற அஞ்சன மை முதலிய கருமையான பொருள்களைப் பார்த்த உடனே தன் ஆருயிர்க் காதலனுகிய இராமபிரானின் நினைவு சீதாதேவியின் உள்ளத்தில் வந்து விடுகிறது. அவள் இராமபிரானின் திருமேனியை நினைந்து கண்களில் நின்றும் விடுகின்ற கண்ணீர் வெள்ளமானது ஆருகப் பெருகிக் கடலைப் போய்ச் சேருகின்றது. ஒத்த அன் பினால் கருத்தொருமித்த தலைமகன் தலைமகள் என்னும் இருவரில் ஒருவர் ஒருவரை விட்டுப் பிரிவதால் ஏற் படும் துன்பமானது தன் அருவ நிலையைவிட்டுச் சீதா தேவி என்னும் ஓர் உருவத்தைக் கொண்டு விட்டதோ என்று சொல்லும்படி சீதாதேவி துன்பமே உருவமாக விளங்கினாள்.

மேற்கூறிய வண்ணம் துன்பத்தினால் வாடிய சீதா தேவி துன்பம் பெருகப் பெருக இராமபிரானை இடை விடாமல் நினைக்கின்றாள். நினைக்கும் பொழுதெல்லாம் அவளின் காதளவு நீண்ட கண்களிலிருந்து பெருகு கின்ற கண்ணீரால் அவள் அணிந்திருக்கும் ஆடை நனைகின்றது. பின் அவளின் உடம்பிலும் பெருமூச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுமிருந்து எழுகின்ற வெப்பத்தினால் அந்த ஆடை காய்ந்து விடுகின்றது. மீண்டும் நனைகின்றது. உடனே காய்கின்றது. இப்படியே மாறி மாறி நனைந்தும் காய்ந்தும் சீதாதேவியின் ஆடை அவளைப்போலவே ஒரு நிலைப்படாமல் உலைகின்றது, பாதுகாவலையுடைய சிறைச்சாலையை விட்டுத் தப்பிப்போதல் என்பது முடியாது. விதியின் வலியைக் கடத்தலும் முடியாது என்றெல்லாம் எண்ணி எண்ணி அச்சங் கொள்கிறாள். தன் தலைவனுகிய இராமபிரான் தன்னை மீட்க வராவிட்டாலும் அவர் தோன்றிய சூரிய குலத்தின் பெருமையைப் பாதுகாக்கவும், அக்குலத்திற்கு ஏற்பட்டுள்ள சிறுமையைப் போக்கவும் எண்ணியாதல் தன்னை மீட்க வருவார் என்ற துணிவினால் திக்குக்களை எல்லாம் நோக்கிய வண்ணம் இருப்பாள்.

இங்ஙனம் தலைவனையே எண்ணி வருந்திய சீதாதேவியின் கூந்தல் சடையாகத் திரண்டு இராகு என்னும் கரிய பாம்பைப் போலக் கிடந்தது. அக்கூந்தலால் கன்னங்கள் எல்லாம் மறைக்கப்பட்டு சீதாதேவியின் முகம் மாத்திரம் விளங்கிய காட்சி இராகுவினால் விழுங்கி உமிழப்பட்ட முழுச்சந்திரனைப் போன்று இருந்தது.

அச்சீதாதேவி இராவணனால் கவரப்பட்டபொழுது அணிந்துள்ள அழகிய ஆடை ஒன்றல்லால் வேறோர் ஆடையும் மாற்றிக் கட்டாமலும், நீர் ஆடாமலும் இருந்ததினால் அவளின் உடல் அழகு குறைந்து தேவாமிர்தத்தைக் கொண்டு மன்மதனால் தீட்டப்பட்ட ஓவியம் புகையேறி மழுங்கியது போல் தோன்றினாள்.

நலன் அற உணங்கிய நங்கை

3. வன்ம ருங்குல்வா ளரக்கியர் நெருக்கவங் கிருந்தாள்
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணு
நன்ம ருந்துபோ னலனற வுணங்கிய நங்கை
மென்ம ருங்குல்போல் வேறுள வங்கமு மெலிந்தாள்.

கொண்டுகூட்டு : கல் மருங்கு எழுந்து என்றும் ஓர் துளி வரக்காணு (நீர்த்துளியைப் பெறுத) நல் மருந்துபோல் நலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற உணங்கிய உணங்கிய நங்கை (சீதாதேவியானவள் தனது) மெல் மருங்குல்போல் வேறு உள அங்கமும் (மிக) மெலிந்தாள். (மெலிந்தவளாகி) வல் மருங்குல் வாள் அரக்கியர் அங்கு (தன்னைச் சுற்றி இருந்தவர்களாய்) நெருங்க (அச்சம் உறுத்த) இருந்தாள்.

பொருள் :

கல் மருங்கு – கற்பாறையின் இடையே, எழுந்து - முளைத்து (தோன்றி என்றும்-எப்பொழுதேனும், ஓர்துளி-ஒருதுளி நீராயினும், வரக்காண்-தன்மேல் சிந்துதலை (துளித்தலை)ப் பெறுத, நல் மருந்துபோல் - (உயிருக்கு நலம் புரிகின்ற) நல்ல சஞ்சீவியென்னும் மருந்தைப்போல (சஞ்சீவிச் செடியைப்போல), நலன் அற-அழகு அழிய (கெட) உணங்கிய– (பிரிவுத் துன்பத்தினால்) வாடிய, நங்கை - இளமை நலம் நிரம்பிய சீதாதேவியானவள், மெல் மருங்குல் போல் - மென்மையான தன் இடையைப் போல, வேறு உள அங்கமும்—வேறுக உள்ள தனது (இடையையொழிந்த ஏனைய) கண், கை, கால் முதலிய உறுப்புக்களும், மெலிந்தாள் – மிக (மெலிந்து) இளைத்தவளாகி (இளைத்தவளாய்), வல் மருங்குல் - வலிமை வாய்ந்த இடையை உடையவர்களான, வாள் அரக்கியர் - வாட்படையைக் கையிலே தாங்கிய அரக்கர் குலப்பெண்கள் பலர், அங்கு - சிறைச்சாலையாகிய அவ்விடத்தில், (தன்னைச்சுற்றி இருந்தவர்களாய்) நெருங்க- அச்சங்காட்டி (பயமுறுத்தி) வருத்தி, இருந்தாள்-இருந்தாள்.

பொழிப்பு :

கற்பாறையினிடையே முளைத்து ஒரு துளி நீராகிலும் பெறுது வாடுகின்ற நல்ல சஞ்சீவிச் செடியைப்போலச் சிறைச்சாலையிலிருந்து அழகுகெட வாடிய சீதாதேவியானவள் தனது மெல்லிய இடையைப் போலவே ஏனைய உறுப்புகளாகிய கை, கால் முதலியனவும் மெலிந்து இளைத்தவளாய் வலிமை பொருந்திய இடையை உடையவர்களான கொடிய அரக்கியர்கள் சிறைச்சாலையில் தன்னை அச்சங்காட்டி வருத்த இருந்தாள் என்பதாம்.

விளக்கம் :

இச்செய்யுளில் அரக்கியரின் நடுவிலிருந்து வாடுகின்ற சீதாதேவியின் அங்கங்களின் மெலிவு கூறப்படுகின்றது. கல்லினிடையிலே தோன்றிய உயிர் மருந்தாகிய இளஞ் சஞ்சீவிச் செடி ஒரு துளிநீரையேனும் பெற்றுத் தளிர்க்க முடியாமல் வாடுவதுபோல் அரக்கியர்களின் நடுவில் இருக்கின்ற சீதாதேவியாரும் ஒரு சிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனும் அவர்களிடத்திலிருந்து அன்பையோ ஆதரவையோ பெறமுடியாமல் அல்லும் பகலும் வருந்தி வருந்தி வாடுகின்றாள் எனக் கம்பர் கூறுகின்றார். அரக்கியர் கூட்டத்தைக் கல்லாகவும், அரக்கியர்களின் நடுவில் இருக்கின்ற சீதாதேவியாரைச் சஞ்சீவிச் செடியாகவும், சஞ்சீவிச் செடி நீர்த்துளியைப் பெறுமல் வாடுவசைச் சீதாதேவி அரக்கியர்களிடம் அன்பைப்பெறுது வருந்துவதாகவும் கம்பர் எமக்குக் காட்டுகின்றார்.

கல் – உவமானம். அரக்கியர் - உவமேயம். பொதுத் தன்மை – கசிவில்லாமை. நல்மருந்து – உவமானம். சீதாதேவி – உவமேயம். பொதுத்தன்மை – நன்மை பயத்தல், சஞ்சீவிச்செடி நீர்த்துளியைப் பெறுமை – உவமானம். சீதாதேவி அரக்கியர்களிடத்து அன்பைப் பெறுமை - உவமேயம். பொதுத்தன்மை - வாடுதல்.

எனவே, உயிர் மருந்தாகிய சஞ்சீவிச்செடி கல்லினிடையே தோன்றி நீர்த்துளியைப் பெறுமல் வாடுவதுபோல உலக அன்னையாகிய சீதாபிராட்டியாரும் அரக்கியர் நடுவில் இருந்து அன்பைப் பெற முடியாமல் வாடுகிறார் என்பதே கம்பரின் கருத்தாகும். மழைத்துளியைப் பெற்றவுடன் சஞ்சீவிச்செடிதளிர்த்து நயம் பயப்பதுபோலச் சீதாதேவியாரும் இராமபிரானின் கருணை மழைத்துளியாகிய அனுமானின் ஆறுதல் மொழிகளால் ஆவி தாங்கி வாழ்ந்து தனது குடிப்பிறப்பையும் ஒழுக்கத்தையும் கற்பையும் காத்து பெண்மையின் தெய்வப்பண்பை வாழ்விப்பார் என்பதைக் குறிப்பாலே அறிகின்றோம்.

சீதாதேவியின் மெலிவைக் கூறவந்த கம்பர் அவளின் இடையைப்போல் கை கால் முதலிய (அவளின்) ஏனைய உறுப்புக்களும் மெலிந்தன எனக்கூறிச் சீதாதேவியின் இடையின் மென்மைப் பண்பையும் நினைவூட்டுகின்றார்.

"கன்மருந்து எழுந்து என்றும் ஓர் துளி வரக்காணு
நன்மருந்து போல் நலன் அற உணங்கிய நங்கை"

எனக் கம்பர் சீதாதேவியின் நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுகின்ற திறன் பாராட்டுதற்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிக்கூட்டத்துள் பெண்மான்

4- துயிலெனக் கண்க ளிமைத்தலு முகிழ்த்தலுந் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்
மயிலி யற்தயின் மழலையாண் மாணிளம் பேடை
அயிலே யிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னுள்.

கொண்டுகூட்டு : மயில் இயல் குயில் மழலையாள் (ஆகிய சீதாபிராட்டியார்) துயில் என, கண்கள் முகிழ்த்தலும், இமைத்தலும் துறந்தாள். (விட்டவளாய்) வெயில் இடை தந்த விளக்கு என ஒளி இலா (இல்லா) மெய்யாள். (ஆகி) அயில் எயிற்று வெம் புலிக்குழாத்து அகப்பட்டது. (அகப்பட்ட) மான் இளம் பெடை அன்னாள்.

பொருள் :

மயில் இயல்-மயில்போன்ற சாயலையும், குயில் மழலையாள்-குயிலின் இனிய குரலினைப்போன்ற, இனிய குதலை மொழிகளைப் பேசுகின்றவளும் ஆகிய சீதாதேவி, துயில் என–உறக்கம் என்று, கண்கள் முகிழ்த்தலும்-கண்களை (உறக்க மயக்கத்தால்) மூடுதலையும், இமைத்தலும் துறந்தாள்-(உறக்க மயக்கம் தெளிந்து) கண்களை விழித்தலையும் விட்டவளும்]துயில் கொள்ளாதவளும்) வெயில் இடை தந்த - எறிக்கின்ற வெயிலிலே கொளுத்தி வைத்த, விளக்கு என - விளக்கினைப் போல, ஒளி இலா – ஒளியில்லாத (பிரகாசமற்ற) மெய்யாள் - உடம்பினை உடையவளுமாகி, அயில் எயிறு - கூர்மை பெருந்திய பற்களை உடையனவும், வெம் – கொடியனவுமாகிய, புலி குழாத்து – புலிகளின் கூட்டத்தின் நடுவே, அகப்பட்டது - அகப்பட்டுக் கொண்டதான, மான் இளம்பேடை–(இளமான்பேடை) இளமை பொருந்திய ஒரு பெண் மானினை, அன்னாள் - ஒத்தாள்.

பொழிப்பு :

மயில் போன்ற சாயலையும் குயிலின் இனிய குரலைப் போன்ற இனிய குதலை மொழிகளைப் பேசுகின்றவளுமாகிய சீதாதேவி உறக்கம் வந்ததென்று கண்களை மூடுதலையும் உறக்க மயக்கந் தெளிந்து கண்களை விழித்தலையும விட்டவளும் எறிக்கின்ற வெய்யிலிலே கொளுத்தி வைத்த விளக்கினைப் போல ஒளி குறைந்த உடம்பினை உடையவளுமாகிக் கூர்மை பொருந்திய பற்களையுடைய கொடிய புலிக்கூட்டத்தின் நடுவே அகப்பட்டுக் கொண்ட ஓர் இளம் பெண்மானைப் போல இருந்தாள் என்பதாம்

விளக்கம் :

இச்செய்யுளில் கொடிய அரக்கியர்களின் நடுவே அகப்பட்டு அல்லலுறுகின்ற சீதாதேவியின் நிலைமை சொல்லப்படுகின்றது, சீதாதேவி துயில் கொள்ளாமல் துன்பமேலீட்டால் வருந்தி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி கண்ணீர் வடித்ததினால் அவளின் உடம்பின் எழில் (ஒளி) குறைந்துவிட்டது என்பதைக் கம்பர் சிறந்த உவமானங் கூறி விளக்குகின்றார். எறிக்கின்ற உச்சி வெயிலில் கொளுத்தி வைத்த விளக்கைப் போலச் சீதாதேவியின் உடல் ஒளி குறை கின்றது - இதனை "வெயிலிடைத் தந்த விளக்கு என ஒளி யிலா மெய்யாள்" என்னுந் தொடரால் கம்பர் விளக்கிக் கூறுகின்றார். இதில் வெயிலிலே வைத்த விளக்கு – உவ மானம், துன்பத்தினால் உடம்பின் ஒளிகுறைந்து வருந்து கின்ற சீதாதேவி – உவமேயம், ஒளி குறைதல் - பொதுத் தன்மை. இங்ஙனம் சீதாதேவியின் உடம்பின் ஒளி குறைந்த தன்மையை விளக்கிய கம்பர் அவள் அரக்கியர் கூட்டத்தின் நடுவே அகப்பட்டு அல்லலுறுகின்ற செயலையும் சிறந்த உவ மானத்தால் விளக்குகின்றார். கூர்மையான பற்களையும், கொல் லும் கொடிய குணத்தையுங் கொண்ட புலிக்கூட்டத்தின் நடு வில் அகப்பட்டுக் கொண்ட இளம் பெண் மானைப் போலச் சீதாதேவி அரக்கியர் கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டாள் எனக் கம்பர் கூறுகின்றார். கூரிய பற்களையும் கொடிய குணத் தையும் கொண்ட பல புலிகளால் சூழப்பட்ட இளம் பெண் மானினது அஞ்சி அஞ்சி அலமந்து ஆவி துடிக்கின்ற காட்சி யைக் கம்பர் எமக்கு முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றார். சீதாதேவியின் மென்மையையும் இனிய பெண்மைப் பண்பை யும் எண்ணிய கம்பர் அவளை ஓர் மான் இளம் பேடையாகக் கூறிய திறன் பாராட்டற்குரியதாகும். இரக்கம் என்பது எள்ளளவும் இல்லாத அரக்கியர் கூட்டத்தைக் கொல்லும் கொடிய புலிக்கூட்டங்களாகச் சொல்லிய கம்பரின் உவமைத் திறன் மிக மிக உயர்ந்ததாகும்.

இதில் மான் இளம் பெடை – உவமானம், சீதாதேவி உவமேயம்.

மென்மையும் வெருட்சியும் அஞ்சுதலும் - பொதுத் தன்மைகள்.

புலிக்குழாம் - உவமானம், அரக்கியர் கூட்டம் - உவ மேயம்,

அன்பின்மையும் கொடுமையும் அஞ்சத்தக்க உருவ மும் - பொதுக்குணங்கள்.

"மான் இளம் பெடை அயில் எயிற்று
வெம்புலிக் குழாத்து அகப்பட்டது அன்னாள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுந் தொடர்களைப் படிக்கும்போது அரக்கியர் கூட்டத்தின் நடுவில் இருந்து அல்லலுறும் சீதாதேவியின் அவல நிலைமை, எங்கள் உள்ளத்தையும் உருக்குகின்றது.

சீதாதேவியின் செயல்கள்

5 விழுதல் விம்முதன் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுத லேங்குத லிரங்குத லிராமனை யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள்.

கொண்டுகூட்டு: இராமனை எண்ணி (அவன் இருந்த திசையை நோக்கிய வண்ணம்) தொழுதல். விழுதல், விம்முதல். மெய் உற வெதும்புதல், வெருவல், (பின்) எழுதல், ஏங்குதல், இரங்குதல், சோருதல். துளங்குதல். துயர் உழந்து உயிர்த்தல், (ஆற்றுமை பெருகலால்) அழுதல் அன்றி மற்று அயல் ஒன்றும் செய்குவது அறியாள். (சீதாதேவி என்பதாம்.)

பொருள்

இராமனை எண்ணி–இராமபிரானை மனதிலே நினைந்து(தியானித்து) தொழுதல்– (திடீரென்று இராமபிரான் இருக்கும் திக்கை நோக்கி) வணங்குதலும், விழுதல்–கீழே விழுதலும், விம்முதல் - (பிறகு) வாய்விட்டுப் புலம்புதலும், மெய் உற வெதும்புதல்–உடல் மிகவும் (துன்ப மிகுதியினால்) வெம்மை கொள்ளுதலும், வெருவல், (உடனே) அஞ்சுதலும், எழுதல்–எழுந்திருத்தலும், ஏங்குதல்–மனங்கலங்கலும், இரங்குதல்–பரிதவித்தலும், சோருதல் – தளர்தலும், துளங்குதல்–(அஞ்சி) நடுங்குதலும், துயர் உழந்து–(நீங்காத) துன்பங்கொண்டு வருந்தி, உயிர்த்தல்–பெருமூச்சு எறிதலும், அழுதல்-ஓவென்று (கண்ணீர்விட்டு) அழுதலும், அன்றி – ஆகிய இச்செயல்களை அல்லாமல், மற்று அயல் ஒன்றும்–வேறு யாதொன்றும், செய்குவது–செய்யக்கூடிய தொழிலை, அறியாள்–அறியாதவளாயினள்.

பொழிப்பு :

சீதாதேவி இராமபிரானை மனத்தில் நினைக்கின்றாள். திடீரென்று அவன் இருக்கும் திக்கை நோக்கித் தொழுகின்றாள். உடனே தளர்ந்து கீழே விழுகின்றாள். பிறகு வாய்விட்டுப் புலம்புகின்றாள். துன்ப மிகுதியால் உடல் மிகவும் வெம்மை கொள்ள வருந்துகின்றாள். அஞ்சுகின்றாள் அப்பாற் பரிதவிக்கின்றாள். பின் எழுந்திருக்கின்றாள். உடனே சோர்ந்து நடுங்குகின்றாள். துன்பத்தால் வருந்தி பெருமூச்சு விடுகின்றாள். அடுத்த கணத்தில் ஓவென்று அழுகின்றாள். வேறென்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே இருக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச் செய்யுளில் தன் தலைவனுகிய இராமபிரானைப் பிரிந்து சிறையிலிருந்து வருந்துகின்ற சீதாதேவியின் துன்பச்செயல்கள் கூறப்படுகின்றன. மனத்திலிருந்து ஊறுகின்ற துன்ப உணர்ச் சிகளை வெளிப்படுத்துகின்ற சீதாதேவியின் மெய்ப்பாடுகளைச் சொல், என்னுப் கருவியால் நிழற்படம் பிடித்துக் கம்பர் எமக்குக் காட்டுகின்ருர். இச் செய்யுளைப் படிக்குந்தோறும் சீதாதேவியின் துன்ப உணர்ச்சியின் மிகுதி எமது உள்ளத் தையும் தொடுகின்றது. துன்ப உணர்ச்சியை வெளிப்படுத்தும் தமிழ்ச் சொற்களின் ஆற்றலையும், கம்பரின் கவிதை ஆற்றல யும் இச் செய்யுளிற் காண்கின்ருேம்.

மழைக்கண்

6. தழைத்த பொன்முலைத் தடங்கடந் தருவிபோய்த் தாழப்
புழைத்த போலநீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால்
இழைக்கு நுண்ணிய மருங்குலா ளிணைநெடுங் கண்கள்
மழைக்க ணெண்பது காரணக் குறியென வகுத்தாள்.

கொண்டுகூட்டு : இழைக்கும் நுண்ணிய மருங்குலாள் இணை நெடுங் கண்கள் (கண்களை) மழைக்கண் என்பது நீர் அருவி தழைத்த பொன் முலைத்தடம் (ஆகிய மலைகளை) கடந்து போய் தாழ, (அவ்வெள்ளங்களை) புழைத்தபோல் நிரந்தரம் பொழி கின்ற பொலிவால் (வந்து) காரணக்குறியென (சீதாதேவி) வகுத்தாள்.

பொருள்

இழைக்கும் - பஞ்சின் நூல் இழையிலும் (பஞ்சிலிருந்து) எடுத்த சிறுநூல் இழையிலும்) நுண்ணிய - மிகச் சிறுத்த (நோக் கரிய நுட்பமான) மருங்குலாள்–இடையினையுடையவளாகிய சீதா தேவி, இணை நெடுங் கண்கள்- (தன்னுடைய) ஒன்றேடொன்று ஒத்த தன்மை வாய்ந்த கண்கள் இரண்டினையும், மழைக்கண் என்பது - மழைக்கண் என்று சொல்வது. நீர் அருவி-(அழுதழுது சுரக்கின்ற) கண்ணீர் வெள்ளங்களை, தழைத்த-மிகவும் வளர்ந்த பொன் - பொன்னிறமான தேமலையுடைய, முலைத்தடம்–கொங் கைகளாகிய மலைகளை, கடந்து, கடந்து பெருகி (தாண்டிப் பெருகி) போய் – ஓடிச்சென்று, தாழ - கீழே விழுந்து பாயும் வண்ணம் (அவ்வெள்ளப் பெருக்குகளை) புழைத்தபோல் - துளை யில் நின்றும் வழிவனபோல, நிரந்தரம்–எப்பொழுதும்(இடை விடாமல்) பொழிகின்ற - சொரிகின்ற, பொலிவால் - மிகுதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டினுல் (வந்த) காரணக்குறியென - காரணப் பெயராகும் என்று, வகுத்தாள் புலப்படுத்தினுள் (தெரிய வைத்தாள்.)

பொழிப்பு :

பஞ்சில் நின்று எடுத்த சிறு நூல் இழையிலும் நுட்பமான இடையையுடையவளான சீதாதேவி ஒன்றோடொன்று ஒத்த தன்மை வாய்ந்த தனது கண்கள் இரண்டினையும் மழைக்கண்கள் என்று சொல்லுவது, கண்ணீர் வெள்ளம், மிகவும் வழிந்து பொன்னிறமான தேமலைக்கொண்ட கொங்கைகளாகிய மலைகளைக் கடந்து பெருகி ஓடிச்சென்று கீழே விழுந்து பாயும் வண்ணம் வெள்ளப்பெருக்கு துளையில் நின்று வழிவதுபோல இடைவிடாமல் சொரிகின்ற மிகுதிப் பாட்டினுல் வந்த காரணப் பெயராகும் என்று புலப்படுத்தினுள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் துன்ப மிகுதியால் இடைவிடாது கண்ணீர் சொரிகின்ற சீதாதேவியின் நிலைமை சொல்லப்படுகின்றது. மழை போல மிகக் குளிர்ச்சியான இயல்பைக் கொண்டிருப்பதால் பெண்களின் கண்களை மழைக்கண் என வழங்குவது புலமை மரபாகும். சீதாதேவியின் கண்கள் இடைவிடாமல் அழுத வண்ணமாய் மழைபோல நீரைச் சொரிந்து கொண்டிருத்தலால் மழைக்கண் எனக் கூறுதற்கு ஏற்றவாயின என்ற உண்மையைக் கம்பர் எமக்குப் புலப்படுத்துகின்றார். எனவே, சீதாதேவி மழைக்கண் என்பதை இடையறாது அழுதழுது மழையைக் கொட்டுகின்ற தனது கண்களுக்குக் காரணப் பெயராகச் செய்து விட்டாள் என்பதாம். இதனுல் மழை போலக் குளிர்ச்சி பெற்றிருப்பதால் பெண்களின் கண்களுக்கெல்லாம் பொதுப் பேராக அமைந்த மரபு பற்றிச் சீதாதேவியின் கண்களுக்கும் வந்த மழைக்கண் என்ற பெயருக்கு, இச்செய்யுளில் கண்ணீர் மழை பொழிவதனுல் வந்த பெயரென்று வேறு ஒரு காரணம் காட்டியதை " பிரிநிலைநவிர்ச்சிஅணி " எனக் கூறுவார்கள். ஒரு காரணத்தால் வந்த பெயருக்கு வேறொரு காரணத்தைக் கற்பித்துக் கூறுவதால், பிரிநிலை நவிற்சிஅணி எனப் பெயர் பெற்றது. ஒரு பொருளுக்கு இயல்பாக உள்ள காரணத்தைப் பிரித்து வேறொரு காரணத்தை அப்பொருளுக்கு ஏற்றிக் கூறுவதே பிரிநிலையாகும்.

கண் இரண்டாதலால் அவற்றின்கண் நின்று பாய்கின்ற வெள்ளத்தையும் இரண்டாகக் கூறினுர். சீதாதேவியின் கண்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின்று வழிகின்ற வெள்ளமானது அவளின் கொங்கை மலைகளைக் கடந்துபோய் வீழ்கின்றது எனக்கம்பர் நயம்படக்கூறியுள்ளார்.

பிரிவுத்துயரின் உருவம்

7. அரிய மஞ்சினேடு அஞ்சன முதலிவை யதிகம்
கரிய கண்டலுங் கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலி னொருவரோ டொருவரை யுலகில்
பிரிவெ னுந்துய ருருவுகொண் டாலன்ன பிணியாள்.

கொண்டுகூட்டு : அரிய மஞ்சினேடு அஞ்சனம் முதல் அதிகம் கரிய இவை கண்டலும் (இராமபிரானின் திருமேனி நினைவுக்கு வருதலால்) கண்ணின் நீர் கடல் புக (சீதாதேவி) கலுழ்வாள். உலகில் உரிய காதலின் ஒருவரோடு ஒருவரை (தலைமகனையும் தலைமகளையும் ஊழ் பிரிப்பதனால் உண்டாகும்) பிரிவு எனும் துயர் உருபு கொண்டால் அன்ன பிணியாள்.

பொருள்

அரிய - அழகிய (அருமையான), மஞ்சினேடு - நீலமேகத்தோடு, அஞ்சனம்-கண்ணுக்கு இடுகிற மையும், முதல்-முதலிய, அதிகம் கரிய-மிகக்கரிய நிறம் பொருந்திய, இவை–இப்பொருள்களை, கண்டலும்-பார்த்த உடனே (தன் தலைவனுகிய இராமபிரானின் திருமேனி நினைவிற்கு வருதலால்) கண்ணின் நீர்-கண்களினின்றும் (வெள்ளமாகப் பெருகுகின்ற) நீரானது (ஆறு போலப் பெருக்கெடுத்துப் பாய்ந்து) கடல் புக-கடலைப் போய்ச் சேரும்வண்ணம், கலுழ்வாள் - அழுகின்றவளாகிய சீதாதேவி, உலகில் - இவ்வுலகின்கண், உரிய காதலின் - ஒத்த அன்பினால் கருத்தொருமித்த, ஒருவரோடு ஒருவரை - தலைமகன் தலைமகள் என்னும் இருவரில் ஒருவரை, பிரிவு எனும்- (உயிரோடு இருக்கும் பொழுதே ஒருவரை ஒருவர் விட்டுப்) பிரிதலாலாகியதென்னும் துயர்-துன்பமானது உருவு கொண்டால் அன்ன - (தனக்கென உருவில்லாத அருவ நிலையைவிட்டு) ஒரு வடிவத்தை எடுத்து வந்து தோன்றியது போன்ற, பிணியாள்-துன்பத்தை உடையவளாயிருந்தாள். (துன்பத்துக்கு ஆளானாள்.)

பொழிப்பு

அழகு பொருந்திய அருமையான நீலமேகத்தோடு கண்ணிற்கிடுகின்ற அஞ்சனமை முதலான கருமை நிறம் பொருந்திய இப்பொருள்களைப் பார்த்த உடனே சீதாதேவி தன் தலைவனுகிய இராமபிரானின் திருமேனியை நினைந்து கண்களினின்றும் விடுகின்ற கண்ணீர், வெள்ளமாக வழிந்து ஆறுபோலப் பெருக்கெடுத்துப் பாய்ந்து கடலைப் போய்ச் சேருகின்றது. இங்ஙனம் அழுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாதேவியானவள் இவ்வுலகின்கண் ஒத்த அன்பினுல் கருத்தொருமித்த தலைமகன் தலைமகள் என்னும் இருவரில் ஒருவர் (உயிரோடு இருக்கும் பொழுதே) ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிதலால் ஆகிய தென்னும் துன்பமானது தனக்கென உருவில்லாத அருவநிலையை விட்டு ஒரு வடிவத்தை எடுத்து வந்து தோன்றியது போன்ற துன்பத்தை உடையவளாயிருந்தாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் தன் ஆருயிர்த் தலைவனின் பிரிவுத் துயரால் வருந்துகின்ற சீதாதேவியின் நிலை சொல்லப்படுகின்றது. சீதாதேவியின் உள்ளம் முழுதும் இராமபிரானின் நினைவினுல் விழுங்கப்பட்டுவிட்டது. நீலமேகம் அஞ்சனமை முதலிய கருமை நிறம் மிகுந்த பொருள்களைக் காணக் காணச் சீதையின் உள்ளம் இராமபிரானின் திருமேனியை நினைந்து நினைந்து உருகுகின்றது. இங்ஙனம் இராமபிரானை நினைந்து உருகும்போது சீதாதேவியின் கண்களிலிருந்து பாய்கின்ற கண்ணீர்வெள்ளம் ஆறுக ஓடிக் கடலில் வீழ்கின்றது எனக் கம்பர் கூறுகின்றார். இதில் கருத்தொருமித்த காதலன்பின் எல்லையைக் கண்டுவிட்டாற் போன்ற உணர்ச்சி கம்பரின் கவிதை உள்ளத்தில் பெருக்கெடுத்துப்பாய்கின்ற ஓர் பெருமிதத்தைக் காண்கிறோம். இதனை

> ''உரிய காதலின் ஒருவரோடு ஒருவரை உலகில்
> பிரிவு எனும் துயர் உருவு கொண்டால் அன்ன பிணியாள்''

என வரும் தொடர்களால் உணர்கின்றோம். கருத்தொருமித்த காதலர்களில் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதனுல் உண்டாகின்ற துன்பம் கவிஞர்களின் கற்பனை ஆற்றலுக்கும் அப்பாற் பட்டதாகும். காதலனைப் பிரிந்து வாடுகின்ற சீதாதேவியாரின் பிரிவுத்துன்பத்தைக் கற்பனைப் பெருங் கவிஞனுகிய கம்பன் எமக்கு எடுத்துக்காட்ட முயல்கின்றன். காதலனைப் பிரிந்து வாடுகின்ற காதலியின் அருவமான பிரிவுத் துன்பத்திற்கோர் உருவத்தைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பைச் சீதாதேவி கம்பனுக்குக் கொடுத்து விட்டாள். உடனே கம்பன் அருவமாகிய பிரிவுத் துயருக்கு உருவமாகச் சீதாதேவியை எமக்கு முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளான். அவன் சீதாதேவியை துன்ப உருவமாக எமக்கு முன் நிறுத்திக்காட்டும் கவிதைத் தொடர்களைப் படித்து உணரும் பொழுதுதான் அவனின் கற்பனை ஆற்றலும் சீதாதேவியின் கருத்தொருமித்த காதல் உள்ளமும் எமக்குப் புலனுகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உலகில் உரிய காதலின் ஒருவரோடு ஒருவரை
பிரிவு எனும் துயர் உருவு கொண்டால் அன்ன பிணியாள்''

என மீண்டும் மீண்டும் படித்து உணர்ந்து உணர்ந்து மகிழுங்கள்.

இச் செய்யுளில் மஞ்சு அஞ்சனம் என்பன உவமானம். இராமபிரானின் திருமேனி உவமேயம், கருமை நிறம்–பொதுத்தன்மை.

பிரிவுத் துயராகிய அருவப் பொருளே சீதாதேவி யென்னும் உருவப்பொருளின் வடிவத்தைத் தாங்கி வந்தாற் போன்றது எனப் புலவன் தன்னுடைய குறிப்பைச் சீதாதேவியாகிய பொருளின் மேல் ஏற்றிக் கூறியபடியால் தற்குறிப்பேற்றம் என்னும் அணி அமைந்திருத்தல் காண்க.

ஒரு நிலையுருத துகிலாள்

8. துப்பினுற் செய்த கையொடு காற்பெற்ற துளிமஞ்சு
ஒப்பி னன்றனை நினைதொறும் நெடுங்கண்க ளுகுத்த
அப்பி னனைந்த் தருந்துய ருயிர்ப்புடை யாக்கை
வெப்பி னுற்புலர்ந்[1] தொருநிலை யுருதமென் றுகிலாள்.

கொண்டுகூட்டு : துப்பினுல் செய்த கையொடு கால் பெற்ற துளி மஞ்சு ஒப்பினுன் தனை நினைதொறும், நெடுங்கண்கள் உகுத்த அப்பினுல் நனைந்து, (உடனே) அருந்துயர் உயிர்ப்பு உடை யாக்கை வெப்பினுல் புலர்ந்து, (இங்ஙனம் நனைதலும் உலர்தலும் ஆகிய செயல்கள் மாறிமாறி நிகழ்தலால்) ஒரு நிலை உருத மென் துகிலாள்.

பொருள்

(மேற்கூறிய வண்ணம் துன்பத்தின் உருவமாய் இருந்து வாடிய சீதாதேவியார்) துப்பினுல் செய்த-பவழத்தால் ஆக்கிய கையோடு-கைகள் உடனே, கால் பெற்ற-(பவழத்தால் ஆக்கிய) கால்களையும் உடைய, துளிமஞ்சு - மழைத்துளிகளைச் சொரிகின்ற மழை முகில (காளமேகத்தை) ஒப்பினுன் தனை-(தனக்கு) உவமையாகக் கொண்ட இராமபிரானை, நினைதொறும் - நினைக்கும் பொழுதெல்லாம், நெடுங்கண்கள் - காதளவு நீண்ட அழகிய கண்கள், உகுத்த - சொரிந்த, அப்பினுல் - கண்ணீர்ப்பெருக்கினுல், நனைந்து-ஈரமாகி, (உடனே) அருந்துயர்-(தாங்கமுடியாத) கொடிய துன்பத்தினையும். உயிர்ப்பு-(அத்துன்பத்தினுல் தோன்றுகின்ற) பெருமூச்சையும், உடை-பொருந்திய தாயுள்ள, யாக்கை-(தனது) உடம்பின் கண்ணே நின்று (துன்பமிகுதியினுல் வெளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்ற) வெப்பினுல் - சூட்டினுல், புலர்ந்து - காய்ந்து (இங்ஙனம் அடுத்தடுத்து நனைதலும் காய்தலுமாய் இருத்தலால்) ஒரு நிலை உறுத - (எப்பொழுதென்றாலும்) ஒரு தன்மையைக்கொண்டிராத, மென் துகிலாள் - மெல்லிய ஆடையை உடையாள்.

பொழிப்பு

மேற்கூறிய வண்ணம் துன்பத்தினுல் வாடிய சீதாதேவியானவள் மீண்டும் மீண்டும், பவளத்தாலாகிய கைகளையும் கால்களையும் உடையவனும், மழைத்துளிகளைச் சொரிகின்ற மழைமுகிலைத் தனக்கு உவமையாகக் கொண்டவனுமாகிய இராமபிரானை நினைக்கும்பொழுதெல்லாம் அவளின் காதளவு நீண்ட கண்களிலிருந்து பெருகுகின்ற கண்ணீரால் நனைந்தும் உடம்பிலும் பெருமூச்சிலும் இருந்து எழுகின்ற வெப்பத்தினுல் காய்ந்தும் ஒரு நிலைப் பெறுமல் இருக்கின்ற ஆடையை உடையளாயினுள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் தன் ஆருயிர்த் தலைவனுகிய இராமபிரானின் பிரிவினுல் சீதாதேவியாருக்குத் துன்பக்கண்ணீர் வழிவதும் வெப்பம் பொருந்திய பெருமூச்சுத் தோன்றுவதுமாகிய செயல்கள் மாறி மாறி இடைவிடாது நிகழ்கின்றன என்பதைக் கம்பர் கூறுகின்றுர். சீதாதேவியின் உள்ளத்திரையில் இராமபிரானின் உருவத்தோற்றம் இடைவிடாது தோன்றுகின்றன என்பதை இதனுல் அறிகின்றேம். இராமபிரானின் நிறத்தைச் சீதாதேவி நினைந்து நினைந்து வருந்துவது போலவே கம்பனும் வருந்துகின்றுனென்று எண்ணத்தக்கதாகக் கவினதத்தொடர்களில் கம்பனின் உள்ளத் துடிப்பும் கலந்து நிற்கிறது.

> ''துப்பினுல் செய்த கையொடு காற்பெற்ற துளி மஞ்சு
> ஒப்பினுன் தனை.

எனவரும் தொடர்கள் அப்படியே இராமபிரானின் உருவத் திருமேனியின் அழகை நிழற்படம் பிடித்துக் காட்டுகின்றது. பவழத்தினுற் செய்த கைகளையும் கால்களையும் பெற்ற மழை முகில் உலகில் இல்லாத பொருளாகும். இங்ஙனம் உலகில் இல்லாத பொருளைக் கம்பன் கற்பனையாற் படைத்து இராமனின் உருவத் திருமேனிக்கு உவமை கூறியுள்ளான். இங்ஙனம் இல் பொருளைப் படைத்தும் காட்டுகின்ற உவமையை அணி நூலார் ''இல் பொருள் உவமை'' எனக் கொள்வார்கள்.

துப்பினுல் செய்த கையொடுகால் பெற்றுளி மஞ்சு, உவமானம். இராமபிரானின் உருவத் திருமேனி – உவமேயம். நீல நிறம் (வண்ணம்) - பொதுத்தன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாதேவியின் கண்களில் நின்று சொரிகின்ற நீர்ப்பெருக்கி னல் அவள் அணிந்துள்ள ஆடை நனைகின்றதென்றும். அத்தேவி யின் பெருமூச்சுக் காற்றோடு கலந்த மேனியின் வெப்பத்தி னல் நனைந்த ஆடை உடனே காய்ந்து விடுகின்றதென்றும் கம்பன் கூறித் தானும் கண்ணீர் வடிக்கின்றான். சீதாதேவி யின் உள்ளம் போலவே அவள் அணிந்துள்ள ஆடையும் ஒரு நிலைப்பெறாமல் உலைகின்றன எனக்கூறிய கம்பனின் கற்பனை, துன்பத்திலுமோர் கவி இன்பத்தை எடுத்து எமக்குக் காட்டு கின்றது. ஆடை நனைவதும் பின் உலர்ந்து முன்னைய நிலை யினை அடைதலுமாகிய செயலைக் கூறுவதை ''தொல் உருப் பெறல் அணி'' எனச் சொல்வார்கள்.

சுருதி நாயகன் வரும் என்னும் துணிபு

9. அரிது போகலோ விதிவலி கடத்தலென் றஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும்வரு மென்பதோர் துணிவால்
கருதி மாதிர மனைத்தையு மளக்கின்ற கண்ணுள்.

கொண்டுகூட்டு: போகலோ அரிது (ஏனெனில்)விதி வலி கடத்தல் அரிது என்று அஞ்சி, சுருதி நாயகன் (என்பொருட்டு இங்கு வாராராயினும் தான்பிறந்த) பரிதி வானவன் குலத்தையும். (அக்குலத்திற்கு நேர்ந் துள்ள) பழியையும் பாரா (பார்த்து அவற்றை நீக்கவா யினும்) வரும் வரும் என்பது ஓர் துணிவால் (அவரின் வரவையே) கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணுள்.

பொருள்

போகலோ அரிது -(பாதுகாவலையுடைய இச்சிறைசாலையை விட்டுத்) தப்பிப் போதல் என்பது முடியாது. (ஏனெனில்) விதி வலி - விதியினுடைய வல்லமையை, கடத்தல் அரிது - வெல்லு தல் முடியாது. என்று - என்றெல்லாம் எண்ணி எண்ணி, அஞ்சி- அச்சங் கொண்டவளாகிய சீதாதேவி, சுருதி நாயகன் –வேதங் களின் தலைவனுகிய இராமபிரான் (பிறரால் கவரப்பட்ட என்னை மீட்க இங்கு வராவிட்டாலும்), பருதி வானவன் குலத் தையும் - தான் பிறந்த சூரிய பகவானின் (சூரிய குலத்தையும்) மேலான குலத்தின் மதிப்பையும், பழியையும் - (அக்குலத்திற்கு உண்டாகியுள்ள) பழியின் (வசையின்) கீழ்மையையும், பாரா– ஆராய்ந்து பார்த்து (தெளிந்து அவற்றைப் போக்கவாயினும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகும் வரும்–விரைவிலே வருவார் வருவார், என்பது ஓர் துணி வால்–என எண்ணுகின்ற ஓர் உறுதிப்பாட்டினால், கருதி-(இராம பிரானின் வரவையே) நினைந்து கொண்டு, மாதிரம் அனைத் தையும் திக்குகள் எல்லாவற்றையும், அளக்கின்ற கண்ணுள்-அளந்து (அளாவிப்) பார்க்கின்ற அழகிய கண்களை உடையாள்.

பொழிப்பு

பாதுகாவலையுடைய இச் சிறைச்சாலையை விட்டுத் தப்பிப் போதல் என்பது முடியாது. ஏனெனில் விதியின் வலியைக் கடத் தல் முடியாததாகும், என்றெல்லாம் எண்ணி எண்ணி அச்சங் கொண்டவளாகிய சீதாதேவி வேதங்களின் தலைவனாகிய இராம பிரான் என்னை மீட்க வராவிட்டாலும் தான் பிறந்த சூரிய குலத்தின் மதிப்பையும் அக்குலத்திற்கு வந்துள்ள பழியையும் ஆராய்ந்து பார்த்து அவற்றைப் போக்கவாயினும் விரைவிலே வருவார் வருவார் என எண்ணுகின்ற உறுதிப்பாட்டினால் அவரின் வரவையே நினைத்துக்கொண்டு எல்லாத் திக்கையும் அளந்து பார்க்கின்ற அழகிய கண்களையுடையாள் என்பதாம்.

''அரிது போகலோ விதிவலி ககத்தல் அஞ்சி'' என்னுந் தொட ரை போக விதிவலி கடத்தல் அருமையென்று அஞ்சி எனக் கொண்டு கூட்டி உயிர் நீங்கட்டும் என்றால் ஊழ்வினையின் வலி மையை மீறுதல் கூடாத காரியமாம் என்று எண்ணி வலிய உயிர் விடுதற்கும் பயந்து என உரை கூறுவாரும் உளர்.

விளக்கம்

இச்செய்யுளில் இராமபிரானின் வரவை எதிர்பார்த்த வண்ணம் இருக்கும் சீதையின் நிலை கூறப்படுகின்றது. அவள் சிறைக்காவலைக் கடந்து தானாகவே தப்பிப்போக முடியாது என் பதை எண்ணி விட்டாள். அங்ஙனம் சிறைக்காவலைக் கடந்து போக முயலுதல் விதியின் வலியைக் கடக்க முயலுதல் போன்ற செயலாகும் எனவும் தெரிந்து கொண்டாள். இதனை,

''அரிது போகலோ விதிவலி கடத்தல்'' என்னும் தொட ரால் கம்பர் எமக்குக் கூறுகின்றார். இதில் விதிவலி கடத்தல் எனவரும் தொடர்

''ஊருற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.''

எனவரும் திருக்குறளின் கருத்தை நினைவூட்டுகின்றது. எனவே சிறையிலிருந்து தப்பவும் முடியாது. ஊழ்வலியைக் கடக்கவும் முடியாது எனத்தெளிந்த சீதாதேவி உயிர்விடாது ஏன் இருந் தாள் என்பதற்குச் சீதையின் உள்ளத்தோடு ஒன்றுபட்ட குர லால் கம்பர் எமக்குக் காரணம் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறனால் கவரப்பட்ட சிறுமையோடு பொருந்திய தன்னை மீட்கத் தன் தலைவனாகிய இராமபிரான் நினையாவிட்டாலும் அவர் பிறந்த சூரிய குலத்தின் மேன்மையையும், சூரியகுலத் தோன்றலாகிய இராமரின் மனைவி அரக்கனால் கவரப்பட்டாள் என அக்குலத்திற்கு ஏற்பட்டிருக்கும் பெரிய வடுவையும் போக்குதற்காகவேனும் இலங்கைமா நகர்க்கு வந்து தன்னைச் சிறை மீட்பார் என்ற எண்ணத்தினால் இராமபிரானின் வருகையைப் பார்த்த வண்ணமாய் சீதாதேவி இருக்கின்றாள் என்பதே கம்பர் கூறும் காரணமாகும். இதனை,

''பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும் வரும் என்பதோர் துணிவால் கருதி''

என்னுந் தொடர்களால் கம்பர் தெளிவுபடுத்திக் கூறியிருத்தல் காண்க.

''அரிது போகலோ விதிவலி கடத்தல்'' என்னுந் தொடரை போகலோ அரிது எனவும், விதிவலி கடத்தல் அரிது எனவும் கொண்டு கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது.

போகவோ எனப் பாடம் கொள்வாரும் உளர்.

சடைக்கூந்தலாள்

10. கமையி னுடிரு முகத்தயல் கதுப்புறக் கவ்விச்
சுமையு டைக்கற்றை நிலத்திடைக் கிடந்த தூமதியை
அமைய வாயிற்பெய் துமிழ்கின்ற வயிலெயிற் றரவின்
குமையு றத்திரண் டொருசடை யாகிய குழலாள்.

கொண்டுகூட்டு: கமையினுள் (ஆகிய சீதை) திரு முகத்து அயல் கதுப்பு உறக்கவ்வி, சுமை உடை கற்றை, நிலத்து இடைக்கிடைந்த தூமதியை அமைய வாயில் பெய்து, (விழுங்கி) உமிழ்கின்ற அயில் எயிற்று அரவின், (ராகுவின்) குமை உறத் திரண்டு, ஒரு சடை ஆகிய குழலாள்.

பொருள்

கமையினுள்-பொறுமையை உடையவளான (பொறுமையே உருவமான) சீதாதேவி, திருமுகத்து அயல் – (தனது) அழகு நிரம்பிய முகத்தின் பக்கங்களில், கதுப்பு-இரு கன்னங்களையும், உறக்கவ்வி–நன்றாக (மூடிப்) பற்றி, சுமைஉடை–மிகப்பாரத்தை யுடையதாகிய, கற்றை–(கூந்தலின்) மயிர்த்தொகுதி, நிலத்தி னிடைக் கிடந்த–நிலத்தின் கண்ணே பொருந்தியதும், தூமதியை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுவில்லாத பூரண சந்திரனை (முழுமதியை), அமைய– நன்றாக (உள்ளே அடங்கும் வண்ணம்), வாயில் பெய்து – வாயினுள்ளே விழுங்கிக் (கொண்டு), உமிழ்கின்ற – மீண்டும் வெளியே கக்குகின்ற (விடுகின்ற), அயில் - கூர்மை பொருந்திய, எயிற்று அரவின் – பற்களை உடைய ராகு என்னும் கரிய பாம்பு போன்ற தோற்றத்தை உடையதாய், குமைஉறை – நெருக்கமாக, திரண்டு - ஒன்று சேர்ந்து, ஒரு சடை ஆகிய - ஒரே சடை உருவமாகத் திரிபட்டுள்ளதுமான, குழலாள் - கூந்தலையுடையாள்.

பொழிப்பு

பொறுமையே உருவமான சீதாதேவி தனது அழகு நிரம்பிய முகத்தின் பக்கங்களில் இரு கன்னங்களையும் நன்றாகப் பற்றி மிகப் பாரத்தை உடையதாகிய மயிர்த்தொகுதி நிலத்தின் கண்ணே பொருந்தியதும், மறுவில்லாத பூரண சந்திரனை நன்றாக வாயினுள்ளே விழுங்கி மீண்டும் வெளியே கக்குகின்ற கூர்மையான பற்களையுடைய ராகு என்னும் கரிய பாம்பைப் போன்ற தோற்றத்தையுடையதாய் நெருக்கமாகத் திரண்டு ஒரே சடை உருவமாகத் திரிபட்டுள்ளதுமான கூந்தலையுடையாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் தலைவனைப் பிரிந்த பிரிவுத் துயரால் தன் செயலற்றிருந்த சீதாதேவியின் கூந்தல், ஒப்பனை செய்யப்படாமையால் ஒரே சடையாகத் திரண்டு கிடந்த தோற்றத்தைக் கம்பர் கூறுகின்றார். சீதாதேவியின் கூந்தல் இராமபிரானின் உள்ளத்தை மிக மிக அள்ளிய அழகுடையதாதலால் அக்கூந்தல் தன் அழகெல்லாம் சிதைந்து ஒரே சடையாகத் திரண்டு கிடக்கும் நிலைமையைக் கம்பர் எமக்கு நினைவூட்டுகின்றார். இத்தகைய தோர் துன்பக்கோலம் சீதாதேவிக்கும் உண்டானதே என்ற இரக்க உணர்ச்சியுடன் கம்பரும் ஒன்றுபட்டுவிட்டார்.

> காரினைக் கழித்துக்கட்டிக் கள்ளினெடு ஆவி ஊட்டிப்
> பேரிருள் பிழம்பு தோய்த்து நெறிவு உறீஇப் பிறங்கு கற்றைச்
> சோர் குழல் தொகுதியென்று சுட்மை செய்து அனையது அம்மா.

என அனுமானுக்குச் சீதாதேவியின் கூந்தல் அழகை இராமபிரான் கூறியதாக உள்ளது இச்செய்யுள்.

மழை முகிலைப் பிடித்து வெட்டிக்கட்டி அதற்கு மென்மையையும் வாசனையையும் உண்டாக்கி மீண்டும் கருநிறம் அடையச் செய்து நெளிவைப் பொருத்தி குழற்கற்றை என்று பெயரிட்டுப் பாரமாக வைத்தாற் போன்றது சீதையின் கூந்தற் தொகுதி என்பதே மேற்கூறிய செய்யுட் பகுதியின் கருத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். இதனுல் அருள் வள்ளலான இராமபிரானுல் பாராட் டப்பெற்ற அழகுக் கூந்தல் ஒரே சடையாகி அழகிழந்து கிடக் கும் நிலைமையும் வந்துவிட்டதே என்பதைக் கம்பர் எமது சிந்தனைக்குத் தருகின்ருர்,

சீதாதேவியின் முகம் மாத்திரம் தெரியத்தக்கதாக அவ ளின் இரு கன்னங்களையும் மூடிக்கொண்டு ஒற்றைச் சடைப் பின்னலாகத் தொங்குகின்ற கூந்தல் சந்திரனைத் தனது வாயி னுல் விழுங்கி மீண்டும் அச்சந்திரனை வெளியே கக்கிவிடுகின்ற இராகு என்னும் பெரிய கரிய பாம்பைப்போல விளங்குகின்றது எனக் கம்பர் உவமானம் சுாட்டியுள்ளார்.

சீதாதேவியின் முகம் – உவமேயம். முழுமதி - உவ மானம். அழகும் கண்டவர்க்கு உவகை செய்தலும் குளிர்ச்சியும் ஒளியும் முழுமதிக்கும் சீதாதேவியின் முகத் திற்குமுள்ள பொதுத்தன்மைகள். இராகு என்னும் கரும் பாம்பு – உவமானம். கன்னங்களை மூடி ஒரே சடையாகத் தொங்குகின்ற சீதையின் கூந்தல் – உவமேயம். (பாம்பின் படம் உள்ள பகுதி சீதையின் தலைப்பகுதிக்கும் தொங்கும் சடைப்பகுதி பாம்பின் உடற் பகுதிக்கும் உவமை)

கருமையும் நீளமும் பொதுத்தன்மைகள். கிடந்த குழலாள் எனவும் சடையாகிய குழலாள் எனவும் இயைத்துக் கொள்க.

புகையுண்ட ஓவியம்

11. ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தென்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்.

கொண்டுகூட்டு: (சீதாதேவி) புனைவது ஆவி அம் துகில் ஒன்று அன்றி வேறு (ஒரு ஆடையையும் மாறிக் கட்டி) அறியாள்;. தூவி அன்னம் (வாழ்வதற்குரிய) மென்புகலிடை தோய்கிலா (தோயாத) மெய்யாள்; (ஆனபடியால்) அனங்கவேள் தென்கடல் தோன்றின தேவு (தெய்வத் தன்மையான) அமுது கொண்டு செய்த ஓவியம் புகை உண்டது ஒக்கின்ற உருவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

புனைவது — (தான் முன்னமே இராவணன் தூக்கிய பொழுது) அணிந்து கொண்டிருந்ததாகிய, ஆவி அம் துகில்-புகையைப் போன்ற மென்மை பொருந்திய, அழகிய ஆடை ஒன்று, அன்றி – ஒன்றையுமே அல்லாமல், வேறு அறியாள்– வேறு ஒரு ஆடையைக் கண்டும் அறியாள் (மாறிக் கட்டி அறியாள்). தூவி அன்னம் – மென்மையான இறகுகளையுடைய அன்னங்கள் (இருத்தற்குரிய தாமரை மலர்கள் பூத்துப் பொலிகின்ற) மென்புனலிடை – மென்மைப் பண்பு நிரம்பிய தண்ணீரில், தோய்கிலா - (இராவணனுல் கவரப்பட்டபின்) மூழ்கிடாத, (படிந்திடாத) மெய்யாள் - (அழுக்கேறிய) உடம்பினை உடையாள், இங்ஙனம் அழுக்கேறிய ஆடையுடனும் மெய்யுடனும் இருக்கின்ற சீதாதேவி) அனங்கவேள் - உருவமில்லாதவனுகிய மன்மதன், தெள் (தெண்) கடல் - தெளிவு பொருந்திய பாற்கடலின் கண் தோன்றிய. தேவு – தெய்வத்தன்மை வாய்ந்த, அமுதுகொண்டு – அமுதத்தைக் (மையாக) கொண்டு, செய்த – தீட்டிய (எழுதிய) ஓவியம் – சித்திர உருவம், புகை உண்டது – புகையினுல் பற்றப்பட்டதை. ஒக்கின்ற – ஒத்து விளங்குகின்ற, உருவாள் - வடிவத்தை (மேனியை) உடையவள்.

பொழிப்பு

இராவணனுற் கவரப்பட்ட பொழுது அணிந்துள்ள அழகிய ஆடை ஒன்றையுமே அல்லாமல் வேறு ஒரு ஆடையையும் கண்டும் அறியாள். அன்னங்கள் தங்குகின்ற மென்மைப் பண்பு நிரம்பிய தண்ணீரில் படியாமையால் அழுக்கேறிய உடம்பினையுடையாள். இங்ஙனம் ஆடைமாறி அணியாமலும் நீர் ஆடாமலும் இருக்கின்ற சீதாதேவியின் தோற்றம் மன்மதன் பாற்கடலின் கண் தோன்றிய தேவாமிர்தத்தைக் கொண்டு தீட்டிய சித்திர உருவம் புகையினுல் பற்றப்பட்டு இருப்பதைப் போல் விளங்குகின்றது என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் அழுக்கேறிய ஒரே துகிலுடனும் நீராடாமல் ஒளி மங்கிய மேனியுடனும் துன்பமே உருவாய்ச் சிறைச்சாலையில் இருக்கின்ற சீதாதேவியின் தன்மை கூறப்படுகின்றது. சீதாதேவியின்மேல் தீராத காதல்கொண்ட இராவணன் வீலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பில்லாத மிக உயர்ந்த ஆடைகளையும் அணிகளையும் அள்ளிக்கொடுத்து அடிபணியக் காத்திருந்தபோதும் அவற்றை யெல்லாம் வெறுத்துத் தன் உள்ளத்தில் இராமபிரானையே எண்ணிய வண்ணம், அழுக்கேறிய ஆடையுடனும் ஒளி குறைந்த மேனியுடனும் இருக்கின்ற சீதாதேவியின் தோற்றத்தை அப்படியே கம்பர் எமது மனத்திரையில் பதிக்கின்றார். சீதாதேவியின் அழகுத் தோற்றத்தை எடுத்துக்காட்டும் உவமானமாக கம்பர் கூறியுள்ள கவிதைத் தொடரைப் பாருங்கள்.

"அனங்கவேள் தேவு தெண்கடல் அமுது கொண்டு
செய்த ஓவியம் புகைஉண்டதே ஒக்கின்ற உருவாள்".

இதில் காதற்கடவுளாகிய மன்மதன் தேவாமிர்தத்தைத் தனது எழுதுகோலில் தோய்த்து எழுதிய ஓவியம் ஒன்று புகை ஏறி ஒளி மழுங்கியது போலச் சீதாதேவி இருக்கின்றாள் என்பதே கம்பர் காட்டும் உவமானம். காதல் உணர்ச்சியை எழுப்புகின்ற அழகுத் தெய்வமாகிய மன்மதனையும் கிடைத்தற்கரிய சாவா மருந்தாகியும் மிக இனிமையுடையதாயும் உள்ள தேவாமிர்தத்தையும் தேடி எடுத்து அழகுக் கலையுணர்ந்த மன்மதனின் கையினாலேயே அமிர்தத்தைக் கொண்டு சீதா தேவியின் உருவை எழுதுவித்து மகிழ்ந்த கம்பர் அந்த எழில் ஓவியத்தின்மேல் புகையைப் படியச்செய்து எம் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் மாறி மாறி எழுப்புகின்ற கற்பனைத் திறன் போற்றத்தக்கதாகும்.

புகையுண்ட ஓவியம் – உவமானம். ஒளி குறைந்த மேனியுடனிருக்கும் சீதாதேவி – உவமேயம். ஒளியும் அழகும் குறைதல் – பொதுத்தன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சீதாதேவியின் சிந்தனைகள்

[12 — 18 செய்யுள்]

சிறையிலிருந்த சீதாதேவி பலவாறு சிந்திக்கின்றாள். தன் ஆருயிர்த் தலைவனைப் பிரிந்து அல்லலுறும் தன் நிலைமையை எண்ணியெண்ணி இதயம் துடிக்கின்ற சீதாதேவியின் உள்ளக் குமுறலை அப்படியே கம்பர் கவிதை வெள்ளமாகப் பெருக விடுகின்றார்.

அக்கவிதைகளில் சீதாதேவியின் உள்ளத்தில் தோன்று கின்ற பலவேறு வகையான எண்ணங்களுக்கெல்லாம் கம்பர் உருவங் கொடுத்துள்ள சொல்லோவியத் திறனைக் காண்போம்.

இலக்குமணனும் மானின் பின்னே சென்ற தன் முன்னவ னாகிய வள்ளலைக் கண்டிலனே என்று எண்ணிச் சீதாதேவி கலங்குகின்றாள். இலக்குமணன் இராமபிரானைக் கண்டு உணரத் தானையினும் உலகை உலக்கும் கொடியவனாகிய இராவணன் என்னை எடுத்துச் சென்ற செய்தியை இன்னும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லையோ? அறிந்தாராயினும் அலைமோதி ஆர்ப்பரிக்கின்ற கருங்கடலின் நடுவே இலங்கை மாநகரம் இருக்கின்ற தென்பதை அவர்கள் இன்னும் உணர்ந்திலரோ என்றெல்லாம் எண்ணியெண்ணிச் சீதாதேவி உள்ளம் இடி கின்றாள். புண்ணின்வாய் திறந்திருக்க அதிலே கனல் புகுந்தாற் போலத் தாங்கமுடியாத துன்பத்தால் பெருமூச்செறிந்து தளர்கின்றாள் என்னை இராவணன் எடுத்துச் சென்றபொழுது அவனை மறித்துப் போர் செய்து வாளால் வெட்டுண்டு வீழ்ந்த கழுகரசனாகிய சடாயுவும் இறந்துவிட்டானே? அவன் இறந்து விட்டால் இராவணன் என்னை எடுத்துச் சென்ற வரலாற்றை அவர்களுக்கு யார் இயம்புவார்கள். என் நிலைமையை, என்னைத் தேடித்திரிகின்ற என் தலைவருக்கும் இளவலுக்கும் சொல்ல ஒருவரும் இல்லாமையால் என்னை அவர்கள் இப்பிறப்பில் காணவேமுடியாது என்று சொல்லிச் சொல்லித் துடிக்கின்ற வளாகிய சீதாதேவியின் துன்பநிலை மிகக் கூடிவிட்டது. நெருப் பில் விழுவதும் எழுந்து வருவதும் மீண்டும் நெருப்பில் விழு வதும் எழுந்து வருவதும் போன்றதோர் துன்பத்திற்குள்ளாகி அவள் துடிதுடிக்கின்றாள். தீவினையுடைய யான் இளையபெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளாகிய இலக்குமணனைச் சிறிதேனும் மதியாமற் சீறி உரைத்த கடுஞ்சொற்கள் என் தலைவருக்குத் தெரிந்துவிட்டனவோ? ஆராய்ச்சி இல்லாமல் தன் ஆருயிர்த் தம்பியை அவமதித்துப் பேசிய என்னை அவர் வெறுத்துவிட்டாரோ? அல்லது யான் முற்பிறப்பினிற் செய்த தீவினையின் பயனை இப்பிறப்பில் எனக்கு ஊட்டுகின்ற விதியின் செயலோ; என்று சொல்லிச் சொல்லி நாவரண்டு ஆவி துடித்துச் சீதாதேவி அல்லற்பட்டாள். அவள் தான் சிறைச்சாலையில் இருக்கின்ற நிலத்திலே கறையான் புற்றுக் கட்டி அரித்தாலும் உணராதவளாய் உள்ளம் சோர்ந்தாள். காட்டில் வாழும் தன் தலைவனுக்கு இலை உணவு முதலியவற்றை எவர் எடுத்துப் பரிமாறுவார்கள் என்று எண்ணி ஏக்கங் கொள்வாள். விருந்தினர் வந்தால் அவர் என்ன செய்வார் என்று எண்ணி வெம்புவாள்.

இராக்காலம் என்றும் பகற்காலம் என்றும் வேறுபாடு அறியாதவளாய் வருந்துகின்ற சீதாதேவியின் மனத்தில் மற்று மோர் எண்ணம் எழுகின்றது. இலங்கையில் வாழும் இராக்கதர்கள் என்னைத் தின்றேயிருப்பார்கள். என்ற சிந்தனையால் என்னை மீட்க வந்திலரோ? அல்லது தான் பிறந்த சூரியகுலத்தாரிடம் இயல்பாகவேயுள்ள பொறுமை என்னும் பெருங் குணத்தைத் தாமும் மேற்கொண்டு சினந் தணிந்து விட்டாரோ என்றும் எண்ணுவாள்.

இராமபிரானைப் பெற்ற தாய்மாரும் அவரின் அடுத்த தம்பியாகிய பரதனும் மீண்டும் வந்து அயோத்திக்கு அழைத்துச் சென்றுவிட்டார்களோ? என்னைத் தேடிவரும் பொழுது அவர்களுக்கு ஏதும் இடையூறு நேர்ந்துவிட்டதோ என நினைந்து எவரும் அடையாத பெருந்துன்பத்திற்கு இரையாகிச் சோர்வாள். அவர் பதினான்கு ஆண்டுகளும் கழிந்தாலன்றிக் காட்டை விட்டு அயோத்திக்குச் செல்ல மாட்டாரே என்றும் மனத்தைத் திடப்படுத்திக் கொள்கின்றாள் முராசுரனைப் போன்ற தோள்வலிமை வாய்ந்தவர்களும் கரனுடன் அவர் போராற்றிய காலத்தில் போர்புரிந்த வஞ்சனையும் மாயமும் வல்ல அரக்கர்களைப் போன்றவர்களுமாகிய கொடிய அரக்கர்கள் மீண்டும் வந்து அவருடன் போர் செய்யவும் கூடும் என்று நினைத்தவுடன் முன்னர் கரனுடன் இராமபிரான் ஆற்றிய கொடும் போரைக் கண்முன்னே கண்டாற்போலக் கலங்குவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை உணர்ந்திலர்

12. கண்டி லன்கொலா மிளவலுங் கனைகட னடுவண்
உண்டி லங்கையென் றுணர்ந்தில ருலகெலா மொறுப்
கொண்டி றந்தமை யறிகில ராமெனக் குழையாப் [பான்
புண்டி றந்ததி லெரிநுழைந் தாலெனப் புகைவாள்.

கொண்டுகூட்டு: (தன் முன்னவனுகிய இராம பிரானை) இளவலும் கண்டிலன் கொல் ஆம் (கண்டானுகிலும்)உலகு எலாம் ஒறுப்பான் (ஆசிய இராவணன் என்னை) கொண்டு இறந்தமை அறிகிலர் ஆம்(அங்ஙனம் அறிந்தனராகிலும்)கனைகடல் நடுவன் இலங்கை உண்டு என்று உணர்ந்திலர் என குழையா, (வருந்தி) புண் திறந்து அதில் எரி நுழைந்தால் என புகைவாள்.

பொருள்

இளவலும் - இலக்குமணனும், கண்டிலன் கொல் ஆம் – மானின் பின்னே சென்ற தன் முன்னவனைக் கண்டான் இல்லைப் போலும் (முன்னவனைக் கண்டானுகிலும்) உலகு எலாம் – உலகத்தை எல்லாம், ஒறுப்பான் - வருந்துகின்றவனுன இராவணன், கொண்டு - என்னை எடுத்துக்கொண்டு (கவர்ந்து கொண்டு) இறந்தமை - கடலைக் கடந்து சென்றதை, அறிகிலர் ஆம் - (அவர்கள் அறிந்து கொள்ள முடியாதவர்களானுர் போலும் (முடியாதுதானே என்பதாம்.) அங்ஙனம் அறிந்தாராயினும்) கனைகடல் நடுவண் - அலைமோதி ஆர்ப்பரிக்கின்ற பெருங்கடலின் நடுவே, இலங்கை உண்டு என்று—இலங்கைமாநகரம் உள்ளதென்று, உணர்ந்திலர்-(அவர்களிருவரும்) அறிந்திலர் போலும், என-என்றெல்லாம் எண்ணி, குழையா – வருத்தம் அடைந்து, புண்திறந்து—புண்ணின் வாய் திறந்திருக்க, அதில் எரி நுழைந்தால் என - அப்புண்வாயின் கண் கனல் புகுந்தாற் போலத் (தாங்கமுடியாத துன்பத்தால்) புகைவாள்-பெருமூச்செறிவாள்.

பொழிப்பு

இலக்குமணனும் மானின் பின்னே சென்ற தன் தமையனுரைக் கண்டிலன் போலும். கண்டானுயினும் உலகத்தை எல்லாம் வருத்துகின்றவனுன இராவணன் என்னை எடுத்துக் கொண்டு கடலைக் கடந்த செய்தியை அவர்கள் அறிந்துகொள்ளவிலையோ? அறிந்தாராயினும் அலைமோதி ஆர்ப்பரிக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கடலின் நடுவே இலங்கைமா நகரம் உள்ளதென்று அறிந்திலர் போலும் என்றெல்லாம் எண்ணியெண்ணி வருத்தம் அடைந்து புண்ணின் வாய் திறந்திருக்க அப்புண்ணின் வாயிலே கனல் புகுந்தாற் போலத் தாங்கமுடியாத துன்பத்தால் (சீதா தேவி) பெருமூச்செறிந்தாள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் ஐயத்தோடு கலந்த துன்ப உணர்ச்சியினால் அள்ளுப்பட்டு வருந்துகின்ற சீதாதேவியின் உள்ளநிலை சொல்லப்படுகிறது. இராவணனால் தான் கவரப்பட்ட செய்தியைத் தன் தலைவனாகிய இராமபிரான் அறிந்தால் உடனே வந்து தன்னை மீட்டிருப்பான் என்ற எண்ணம் சீதையின் உள்ளத்தில் எழுகின்றது. அவள், தான் சிறையிருக்கும் செய்தியும் இடமும் இன்னும இராமபிரானால் அறியப்படவில்லையென்றே துணிகின்றாள். அவளின் ஐய நினைவுகளை

> ''கண்டிலன் கொலாம் இளவலும் கனைகடல் நடுவண்
> உண்டு இலங்கை என்று உணர்ந்திலர் உலகு எலாம்ஒறுப்பான்
> கொண்டு இறந்தமை அறிகிலர் ஆம் என குழையா''

என்னுந் தொடர்களால் கம்பர் அறிவிக்கின்றார்.

சீதையின் துயர மிகுதியை

> ''புண்திறந்து அதில் எரி நுழைந்தால் எனப் புகைவாள்''

எனக் கம்பர் விளக்கிக் காட்டுகின்றார்.

இதில், திறத்த புண் – உவமானம். இராவணனால் கவரப்பட்ட கவலையோடிருக்கும் சீதையின் உள்ளம்–உவமேயம். பொதுத்தன்மை - ஆறுத துன்பம். திறந்த புண்ணில் எரி நுழைதல் - உவமானம். இராவணனால் கவரப்பட்ட கவலையோடிருக்கும் சீதையின் உள்ளத்தில் தன் தலைவன் தன்னை மீட்க வந்திலன் என்பதினால் மீண்டும் மீண்டும் எழுகின்ற பெரும்துன்பம் - உவமேயம் துன்பம் மிகுந்து கொண்டேயிருத்தல் - பொதுத்தன்மை.

கொண்டிருந்தமை எனப் பாடம் கொள்வாரும் உளர்.

இப்பிறப்பில் காண்டல் அரிது

13. மாண்டு போயின னெருவைகட் கரசன்மன் மற்றேர்
யாண்டை யென்னிலை யறிவுறுப் பார்களிப் பிறப்பிற்
காண்ட லோவரி தென்றென்று விம்முறுங் கலங்கும்
மீண்டு மீண்டுபுக் கெரிநுழைந் தாலென மெலிவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: எருவைகட்கு அரசன் (சடாயு) மாண்டுபோயினன். மற்றோர் என்னிலை யாண்ட அறிவு உறுப்பார்கள் இப்பிறப்பில், (அவர்கள் என்னை) காண்டலோ அரிது என்று என்று விம்முறும் கலங்கும், மீண்டும் மீண்டும் புக்கு எரி நுழைந்தால் என மெலிவாள்.

பொருள்

எருவைகட்கு அரசன் – கழுகளுக்கு அரசனை சடாயுவும், மாண்டு போயினன் - இறந்து போய்விட்டான் (என்னை இராவணன் தூக்கிச் சென்றபொழுது நேரிற் கண்ட சடாயு இறந்து போனபடியால்), மற்றோர் – சடாயுவை ஒழிந்த வேறு யார், யாண்டை - எங்கே இருக்கிறார்கள் (ஒருவரும் இல்லை என்பதாம்). என்னிலை - என்னை (இராவணன்) எடுத்து வந்த செய்தியை, அறிவு உறுப்பார்கள் - (இராம இலக்குமணர்களுக்கு) தெரிவிப்பவர் பிறர் இல்லாமையால், இப்பிறப்பிலே-இந்தப் பிறப்பிலே, காண்டலோ-(அவர்கள் என்னைத் தேடி) காணுதல் அரிது - முடியாது, என்று என்று – என்றெல்லாம் நினைந்து நினைந்து, விம்முறும் - அழுவாள், கலங்கும் - மனந்தடுமாறுவாள், எரிபுக்கு மீண்டு – ஒருமுறை நெருப்புக்குள்ளே விழுகிறதும் பின் வெளியே வருகிறதும், மீண்டு நுழைந்தால் என– மறுபடியும் நெருப்புக்குள்ளே விழுகிறதுமாக இருந்தால் எவ்வகையான துன்பம் உண்டாகுமோ அத்தகைய துன்பத்திற்குள்ளாகி, மெலிவாள் – வருந்துவாள்.

பொழிப்பு

என்னை இராவணன் எடுத்துச் சென்றபொழுது அவனை மறித்துப் போர்செய்து வாளால் வெட்டுண்ட கழுகுகளுக்கு அரசனுகிய சடாயுவும் இறந்துவிட்டானே? அவன் இறந்துவிட்டால் என் நிலைமையைச் சொல்ல வேறு ஒருவரும் இல்லாமையால் இந்தப் பிறப்பிலே அவர்கள் என்னைத் தேடிக்காணுதல் முடியாது என்றெல்லாம் எண்ணி யெண்ணி மனந்தடுமாறிக் கலங்குகின்றவளாகிய சீதாதேவி ஒருமுறை நெருப்புக்குள்ளே வீழுகிறதும், பின் வெளியே வருகிறதும் மறுபடியும் நெருக்புக்குள்ளே விழுகிறதுமாக இருந்தால் எவ்வகையான துன்பம் உண்டாகுமோ அத்தகைய துன்பத்திற்குள்ளாகி வருந்துவாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் தன்தலைவனுகிய இராமபிரானுக்கும் அவரின் தம்பியாகிய இலக்குமணனுக்கும் தான் இராவணனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்டு வரப்பட்டமையை அறிவிக்கக்கூடியவர்கள் ஒருவரும் இல்லையென எண்ணி யெண்ணி ஏங்குகின்ற சீதாதேவியின் நிலைமை சொல்லப்படுகின்றது. சீதாதேவியை இராவணன் எடுத்துச்செல்லும்பொழுது அவனைத்தடுத்துப் போர் செய்த தசரதனின் நண்பனும், கழுகுகளின் அரசனுமாகிய சடாயுஎன்பவன் இராவணனின் வாளினால் சிறகு அறுந்து குற்றுயிராகக் கிடந்தமையை நேரில்கண்ட சீதாதேவி அச்சடாயு உயிர்தாங்கியிருந்து தன்னைத் தேடிதந்த இராம இக்குமணனுக்குக் கூறியிருக்க முடியாது என்னுந்துணிவால்

"மாண்டு போயினன் எருவைகட்கு அரசன்"

என எண்ணுகின்றாள்,

தன் நிலைமையைத் தலைவனுகிய இராமபிரானுக்கும், அவரின் தம்பிக்கும் எடுத்துக் கூறக்கூடியவர்கள் சடாயுவையொழிய வேறுஒருவரும் இல்லாமையால் ஒருகாலமும் தன்னை இராமபிரான் வந்து மீட்க முடியாது என எண்ணுகின்ற சீதாதேவியின் துன்பத்தைக் கம்பர்

"மீண்டும் மீண்டும் புக்குஎரி நுழைந்தால் என மெலிவாள்"

என்னும் தொடர்களால் எடுத்துக் கூறுகின்றார்.

இதில் எரிபுக்கு மீண்டும் மீண்டும் எரி நுழைதல்—உவமானம். துன்பப்பட்டு மறுபடியும் தீராத துன்பத்தில் அமிழ்ந்தி அமிழ்ந்தி வருந்துகின்ற சீதாதேவியின் துன்ப நிலை—உவமேயம். தாங்கமுடியாதநிலைமையே பொதுத் தன்மையாகும்.

உயிர் பதைத்தாள்

14 என்னை நாயக னிளவலை யெண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தைகேட் டறிவில னெனத்துறந் தானே
முன்னை யூழ்வினை முடிந்ததோ வென்றென்று முறையாற்
பன்ன வாய்ப்புலர்ந் துணர்வுதேய்ந் தாருயிர் பதைப்பாள்.

கொண்டுகூட்டு: வினையேன் இளவலை (மானுக்குப்பின் தொடர்ந்த எனது தலைவனைத் தேடிச் செல்லும் வண்ணம்) எண்ணலா (மதியாமல்) சொன்ன வார்த்தை கேட்டு, அறிவு இலள் என நாயகன் (என்னை) துறந்தனே (அல்லது) முன்னை ஊழ்வினை முடிந்ததோ என்று என்று முறையால் பன்ன (சொல்லி) வாய் புலர்ந்து உணர்வு தேய்ந்து ஆருயிர் பதைப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

வினையேன்-(பாவத்திக்கு ஏதுவாகிய) தீவினையையுடைய யான் இளவலை-இளைய பெருமாளாகிய இலக்குமணனை எண்ணலா சிறிதேனும் மதியாமல், சொன்ன வார்த்தை கூறிய கடுஞ் சொற்களை (இலக்குமணன்) கூற, கேட்டு-கேட்டதனால் அறிவு இலள் என-(இவள்) அறிவில்லாதவள் என்று எண்ணி, நாயகன்-என் தலைவன் (இராமபிரான்) துறந்தானை-என்னை வெறுத்து விலக்கி விட்டாரோ (அல்லது) முன்னை ஊழ்வினை-நான் முற்பிறப்பில் செய்த பாவத்தின் பயனை ஊட்டுகின்ற விதியின் செயலால், முடிந்ததோ - (இவ்வாறு கொடியதுன்பம் எனக்கு) ஏற்பட்டதோ, என்று - என்று இப்படிப் பலவாறுக நினைந்து, முறையால் - தனக்குள்ள துன்பங்களை ஒன்றன்பின் ஒன்றுக, பன்ன (எடுத்துக்) கூறுவதினால், வாய்புலர்ந்து நாநீர்ப் பசுமை இல்லாமல் வரண்டு, உணர்வு தேய்ந்து- அறிவின் ஆற்றல் குறைந்து, ஆருயிர் பதைப்பாள் - அரிய உயிரும் நடுங்குவாள் (துடிப்பாள்).

பொழிப்பு

பாவத்திற்கு ஏதுவாகிய தீவினையையுடைய யான் இளைய பெருமாளாகிய இலக்குமணனைச் சிறிதேனும் மதியாமல் கடுஞ் சொற்கள் கூறி வைத செய்தியை அறிந்த என் தலைவர். அறிவில்லாதவள் என எண்ணி என்னைத் துறந்துவிட்டாரோ, அல்லது யான் முற்பிறப்பில் செய்த தீவினைகளின் பயனை ஊட்டுகின்ற விதியின் செயலோ என்று இப்படிப் பலவாறுக நினைந்து தான் பட்ட துன்பங்களை ஒன்றன்பின் ஒன்றுக எடுத்து உரைத்துக் கொண்டிருப்பதனால் நாவும் வரண்டு அறிவும் குறைந்து தன் ஆருயிர் துடித்தாள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தன் தலைவனுகிய இராமபிரான் தன்னை மீட்க வாராமைக்கு உரிய காரணங்களைத் தானுகவே கற்பனை செய்து கவலையுறுகின்ற சீதாதேவியின் மனநிலை சொல்லப் படுதுன்றது.

மாயமானுக வந்த மாரீசன் இராம பாணத்தால் தாக்குண்டு உயிர்துறக்கும் பொழுது இராமபிரானைப்போல் குரல் எடுத்து ஆ! சீதா இலக்குமண எனக் கூறியதைக் கேட்ட சீதாதேவி அக்குரலைத் தன் தலைவனுகிய இராமபிரானின் குரலென்று நினைத்து இலக்குமணனைப் போகும் வண்ணம் கூறினுள். இலக்குமணன் அதனை மறுத்து இராமபிரானுக்கு இடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூறு செய்ய ஒருவராலும் முடியாது எனக்கூறிய தேறுதல் மொழிகளைக் கேளாமல்

"குற்றம் வீந்த குணத்தின் எங்கோமகன்
மற்றை வாள் அரக்கன் புரி மாயையால்
இற்று வீழ்ந்தனன் என்னவும் என் அயல்
நிற்றியோ இலையோய் ஒரு நீ"

என்றும்,

நின்ற நிலை இது தெறி இற்று அன்று

என்றும்,

"ஒரு பகல் பழகினுல் உயிரை ஈவரால்
பெருமகள் உலைவுறு பெற்றி கேட்டும் நீ
வெருவலை நின்றனை யான் இனி
எரியிடைக் கடிது வீழ்ந்து உயிர் இறப்பல் ஈண்டு"

என்றும் அவனை வெறுத்துரைத்தாள்.

இங்ஙனம் தானுரைத்த மொழிகளை இலக்மணன் வாயிலாக அறிந்த இராமபிரான் தன்னைத் துறந்து விட்டாரோ என்ற அச்சமும் சீதாதேவியின் உள்ளத்தில் உண்டாகின்றது. அந்த அச்ச நினைவால் அவளின் நினைவு சோர்ந்து உயிர் பதைக்கின்றது என்பதைக் கம்பர் எடுத்துக்காட்டுகின்றார். தான் இலக்குமணனுக்குக் கூறிய கொடுஞ் சொற்களைச் சொல்லிப் பார்த்துப் பார்த்து அச் சொற்களின் கொடுமையை எண்ணிச் சீதாதேவி அடைகின்ற துன்ப நிலையை "வாய்ப்புலர்ந்து உணர்வு தேய்ந்து ஆருயிர் பதைத்தாள்" எனக் கம்பர் அப்படியே சொல்லோவியமாகக் காட்ட முயல்கின்றார். தான் கூறிய அக் கொடிய சொற்களைச் சொல்லிப் பார்த்தவுடன் அச்சத்தினால் சீதாதேவியின் நாக்கு வரண்டு விட்டது. அறிவு தேய்ந்து விட்டது. அதற்கு மேல் அவளின் உயிரும் சோர்ந்து விட்டது. என்பதே கம்பரின் கருத்தாகும்.

நோய்க்கு மருந்துமுண்டோ

15. அருந்து மெல்லட காரிட வருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறுமோ வென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள்

கொண்டுகூட்டு: இருந்த மாநிலம் (முழுவதும்) செல் அரித்திடவும் ஆண்டு எழாதாள் (ஆகிய சீதாதேவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரர்மபிரான் அருந்தும் மெல் அடகு ஆர் இட அருந்தும் என்று அழுங்கும் (அவர்)விருந்து கண்டபோது என் உறும் ஓ என்று எண்ணி விம்மும் (விம்முகின்ற வளாகிய சீதை) யான் கொண்ட நோய்க்கு மருந்தும் உண்டுகொல் என்று மயங்கும்,

பொருள்

இருந்த மாநிலம்—தான் (சிறைச்சாலையில்) இருக்கின்ற அகன்ற நிலம் முழுவதையும், செல் அரித்திடவும்—கறையான் பிடித்து அரிக்கவும் (புற்று எழுப்பி இருக்கவும்) ஆண்டு—(அங்கே) தான் இருந்த அவ் இடத்தை விட்டு, எழாதாள்—எழுந்திடாதவளாகிய சீதாதேவியானவள் (பின்வருமாறு நினைக்கின்றாள்). அருந்தும்—(எனது ஆருயிர்த் தலைவர் காட்டிலே யிருந்து) உண்ணுகின்ற, மெல் அடகு—மென்மையான இலை உணவு முதலியவற்றை, ஆர் இட—எவர் எடுத்துக் கொடுக்க (பரிமாற) அருத்தும்—அமுது செய்தருளுவார், என்று-என்று எண்ணி எண்ணி, அழுங்கும் — வருந்துவாள். (என் தலைவர்) விருந்து கண்டபோது—(காட்டில் இருக்கும் பொழுது தம்மிடம் வருகின்ற) விருந்தினரைக் கண்டபோழுது, என் உறும் ஓ—(அவ்விருந்தினரை உபசரிப்பார் இல்லையேயென்று எண்ணி) எப்படிப்பட்ட கவலையை அடைவாரோ, என்று-என்றெல்லாம் எண்ணி, விம்மும்—அழுவாள், யான் கொண்ட—யான் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற, நோய்க்கு—மனவருத்தத்திற்கு, மருந்தும், உண்டு கொல்—(அதனை) போக்கக் கூடிய மருந்தும் இருக்கின்றதோ, என்று—என்று, மயங்கும்—மயங்குவாள்,

பொழிப்பு

சீதாதேவியானவள் தான் இருக்கின்ற சிறைச்சாலையின் அகன்ற நிலம் முழுவதையும் கறையான் பிடித்து அரித்தாலும் எழுந்திருக்கமாட்டாள் இந்நிலையிலும் அவள் என்தலைவர் காட்டிலிருந்து மென்மையான இலை உணவு முதலியவற்றை எவர் எடுத்துப் பரிமாற உண்ணுவார் என்று எண்ணி வருந்துவாள். விருந்தினர் வந்தால் வந்த விருந்தினரை உபசரிக்க ஒருவரும் இல்லையென்று எவ்வகையான துன்பத்தை அடைகின்றாரோ என்பதை என்னி யெண்ணி அழுவாள் இங்ஙனம் எல்லாம் தான் அடைகின்ற நோயைத் தீர்க்க என்ன மருந்து இருக்கின்றது என்று நினைந்து நினைந்து மயக்கம் அடைவாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் தன் தலைவனுக்கு ஆற்ற வேண்டமை கூலையும் விருந்தோம்பல் முதலான இல் வாழ்வாரிய தரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களையும் செய்ய முடியவில்லையே என எண்ணி யெண்ணி ஏங்குகின்ற சீதாதேவியின் உள்ள நிலை சொல்லப்படுகின்றது. அன்பமே உருவான சீதாதேவி சிறைச்சாலையில் தான் இருக்கின்ற இடத்தில் கறையான் புற்று எழுப்பினாலும் அவ்விடத்தை விட்டு அசையாமல் செயலற்றிருந்த நிலையிலும் கூடத் தன் கணவனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்ற முடியாத அவலம் தனக்கு வந்துற்றதை எண்ணியெண்ணி ஏங்குகின்றாள். அரசபோகத்தைத் துறந்து காட்டிலே வாழ்கின்ற தன் தலைவனுக்கு இலைக்கறி உணவை இனியபதமாகச் சமைத்து அவர் அருகிலிருந்து அவ்வுணவை அவருக்குப் பரிமாறும் பொழுது அவர் அடைகின்ற இன்பத்தை எண்ண எண்ண சீதாதேவிக்கு அழுகை வருகின்றது. சீதையின் இதய உணர்ச்சியைத் தன தாக்கிக் கொண்ட கம்பர்

" அருந்தும் மெல்லடை ஆர் இட அருந்தும் என்று அழுங்கும் "

என தானும் அழுதுகொண்டே கூறுகின்றார் என்பதை அறிகின்றோம்.

குடும்பப் பெண்கள் தாம் ஆக்கிய உணவைத் தாமே தம் கணவனுக்குப் பரிமாறி உண்பிக்கும்பொழுது மகிழ்கின்ற இன்பத்திலும் மேலான இன்பத்தை உணரமாட்டார்கள் என்பதை கம்பர் கவிதை உருவமாகத் தந்துள்ளார்.

" தான் துழந்து அட்ட தீம் புளிப்பாகர் (இனிய புளிக்குளம்பு)
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண் இதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே,

என்பது குறுந்தொகை (197).

இங்ஙனம் இலை உணவையேனும் ஊட்டி மகிழும் வாய்ப்பை இழந்து விட்டேன் என்று வருந்திய சீதை, காட்டில் வாழ்கின்ற தன் கணவர் தம்மைக் காணவருகின்ற (தவ முனிவர்களாகிய) விருந்தினரை வரவேற்று உபசரிக்க முடியாமல் வருந்துவாரே எனநினைந்து அழுகின்றாள். கருத்தொருமித்து வாழும் அன்புத் தலைமக்கள் இருவரும் உடனிருந்து ஆற்றவேண்டிய தருமம் விருந்தோம்புதலே ஆகும். தன்னைப் பிரிந்தமையால் தன் தலைவனாகிய இராமபிரான் விருந்தோம்புதலாகிய தருமத்தை ஆற்றமுடியாமல் வருந்துகின்றார் என்பதை எண்ணி வருந்தி அழுகின்ற சீதாதேவி இல்வாழ்க்கையின் சிறப்பையும் எமக்கு உணர்த்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விருந்து கண்டபோது என் உறுமோ என்று விம்முழ்" என சீதாதேவியாரின் கவலையோடு கலந்த கடமை உணர்ச்சியைக் கம்பர் விம்மலோடு எமக்கு விருந்தாகத் தருகின்றார்.

தன் அன்புத்தலைவனாகிய கோவலனைப் பிரிந்து வாழ்ந்த கண்ணகி தேவியும், கணவனைப் பிரிந்து இருந்தமையால் இல்லறக் கடமைகளை ஆற்றும் பேறு தமக்குக் கிடைக்கவில்லை யென வருந்திக் கூறியதாக வரும்

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் இறப்பின்
விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை"

இச்செய்யுட் பகுதியை சீதாதேவியின் கூற்றுடன் ஒப்பிட்டு நோக்குக.

இராப்பகல் இல்லாள்

16. **வன்கண் வஞ்சனை யரக்கரித் துணைப்பகல் வையார்**
தின்ப ரென்னினிச் செயத்தக்க தென்றுதீர்ந் தானை
நன்கு லப்பொறை தன்பொறை யெனத்தணிந் தார்னை
என்கொ லெண்ணுவே னென்னுமங் கிராப்பக லில்லாள்

கொண்டுகூட்டு: இராப்பகல் இல்லாள் (ஆகிய சீதை)அங்கு வன்கண் வஞ்சனை அரக்கர் இத்துணை பகல் (சீதையை உயிரோடு) வையார், தின்பர் இனி செய்யத்தக்கது'என ஏன்று தீர்ந்தானை (அன்றி) தன் குலம் பொறை தன் பொறை என தணிந்தானை என் கொல் எண்ணுவேன் என்னும்.

பொருள்

இராப்பகல் இல்லாள்–இராக்காலம் என்றும் பகற்காலம் என்றும் வேறுபாடு காணுதவளாய் எப்பொழுதும் துன்பத்தால் வருந்துகின்ற சீதாதேவியானவள், (சிந்திக்கின்றாள்) அங்கு – அவ்விடத்து (இலங்கையின் கண்) வன்கண் — கொடிய தன்மையையும், வஞ்சனை-செய்தலையுமே தொழிலாக உடைய, அரக்கர்–அரக்கர்கள் (இராட்சதர்) இத்துணைப்பகல்–இத்தனை நாள் வரையும், வையார்–(சீதாதேவியை உயிரோடு) வைத்திருக்க மாட்டார்கள், தின்பர் – (கொலை செய்து) தின்றே இருப்பார்கள்' (ஆனபடியால்) இனி செயத்தக்கது–இனிமேல் நாங்கள் செய்யத் தக்க செயல் என்ன இருக்கின்றது (ஒன்றும் இல்லை) என்று–என்று எண்ணி, தீர்ந்தானை - (என் தலைவனாகிய இராமபிரான்) என்னைத் தேடுகின்ற செயலைக் கைவிட்டாரோ, (அன்றி) தன்குலப் பொறை - நான் பிறந்த சூரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தார்க்கு இயல்பாகவேயுள்ள பொறுமை யென்னும் பெருங்குணத்தினை, தன் பொறை – தனக்கும் உரியதொரு குணமாகும், என - என்று எண்ணி, தணிந்தாளே - (என்னை எடுத்துவந்த இராவணனைக் கொல்லவேண்டுமென்ற சினம்) தணிந்து விட்டாரோ, என்கொல் எண்ணுவேன் – என்ன காரணம் என்று நினைப்பேன். என்னும் – என்று (வருந்திக்) கூறுவாள்.

பொழிப்பு

இராக்காலம் என்றும், பகற்காலம் என்றும் வேறுபாடு காணுதளாய் எப்பொழுதும் துன்பத்தால் வருந்துகின்ற சீதா தேவி சிந்திக்கின்றாள். இலங்கையின்கண் வாழ்கின்றவரும், கொடுங்குணமும் வஞ்சனையும் கொண்டவர்களுமாகிய அரக்கர்கள் இவ்வளவு காலம் வரையும் சீதையை உயிரோடு வைத்திருக்கமாட்டார்கள். கொன்று தின்றே இருப்பார்கள். ஆனபடியால் இனிமேல் நாங்கள் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை என்ற எண்ணத்தினால் அவர் (இராமபிரான்) என்னைத் தேடுதலைக் கைவிட்டாரோ, அல்லது தான் பிறந்த சூரிய குலத்தார்க்கு இயல்பாகவே யுள்ள பொறுமை என்னும் பெருங்குணம் தனக்கும் உரியதோர் குணமாகும் என்று எண்ணி சினம் தணிந்து விட்டாரோ, என்னைத்தேடி வாராமல் இருப்பதற்கு உரிய காரணத்தை என்னென்று நினைப்பேன் என்று வருந்திக் கூறுவாள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தன்னைத் தன்தலைவன் மீட்க வாராமல் இருக்கின்றதற்குரிய காரணங்கள் எவையாகுமோ எனச் சிந்திக்கின்ற சீதையின் உள்ளத்துடிப்பைக் கம்பர் உரைக்கின்றார். கொடிய அரக்கர்கள் தன்னைக்கொன்று தின்று விடுவார்கள் என எண்ணியதினால்தான் தன்னை மீட்க வாராமல் விட்டிருக்கலாம் என்றும் பிறர் செய்த குற்றங்களைப் பொறுத்தருள்கின்ற கருணையுள்ளம் இயல்பாகவே சூரிய குலத்தார்க்கு உரியதாகும். சூரியகுலத் தோன்றலான இராமபிரானும் தம் குலத்தார்க்குரிய பொறுமையை மேற்கொண்டதனால் தன் கோபம் தணிந்துவிட்டாரோ எனவும் சீதாதேவி சிந்திக்கின்றாள். அவள் இரவென்றும் பகலென்றும் உணராமல் இன்னலை அனுபவித்துக்கொண்டு இருக்கின்றபொழுதும் தன் தலைவனை மறவாத சால்பு பொருந்தியவளாய் விளங்குகின்றாள் என்பதே கம்பரின் கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத நோய் உறுவாள்

17. பெற்ற தாயாருந் தம்பியும் பெயர்த்தும்வந் தெய்திக்
கொற்ற மாநகர் கொண்டெழுந் தார்களோ குறித்துச்
சொற்ற வாண்டெலா முறைந்தன்றி யந்நகர் துன்னுன்
உற்ற துண்டெனப் படருழந் துருதநோ யுறுவாள்

கொண்டுகூட்டு: (இராமபிராணைப்) பெற்ற தாயாரும் தம்பியும் (அயோத்தியில் நின்று) பெயர்த்தும் வந்து (காட்டை) எய்தி கொற்றம் மாநகர் கொண்டு எழுந்தார்களோ (அவர்) குறித்து, சொற்ற(சொன்ன) ஆண்டு எலாம் (காட்டில்) உறைந்து அன்றி அந்நகர் துன்னுன். (அவர் வந்து என்னை) மீட்காமையால்) உற்றது உண்டு எனை (என்று) படர் உழந்து உருத நோய் உறுவாள்.

பொருள்

(இராமபிராணைப்) பெற்ற தாயரும் – பெற்ற (பேறுபொருந்திய) தாய்மார்களும். தம்பியும் – அடுத்த தம்பியாகிய பரதனும், பெயர்த்தும் - மீண்டும் (அயோத்தியில் நின்று) வந்து, எய்தி – (இராமபிரானிடம்) வந்தடைந்து, கொற்றமாநகர் – வெற்றிச்செல்வம் பொருந்திய சிறந்த அயோத்திமாநகர்க்கு (பட்டினத்துக்கு)க், கொண்டு எழுந்தார்களோ - அழைத்துக் கொண்டு சென்றார்களோ, குறித்து சொற்ற - (அவர் கைகேசியிடம்) திட்டமாக வரையறுத்துக் கூறிய, ஆண்டு எலாம் - பதினென்கு ஆண்டு காலம் முழுவதும், உறைந்து அன்றி -(வனத்திலே) வதிந்து அல்லாமல் (வாசஞ்செய்தன்றி) அந்நகர் நண்ணுன் - அந்த அயோத்தி நகரத்துக்கு (மீண்டும்) செல்ல மாட்டார். (ஆனபடியால் அவர் என்னை மீட்கவராது இருத்தற்கு) உற்றது உண்டு - (அவருக்கு) நேர்ந்துள்ள இடையூறு யாதேனும் இருக்கக்கூடும். எனை - என்றெல்லாம் எண்ணி, படர் உழந்து - (தீராத) துன்பத்திலே வருந்தி, உருத நோய் -(எவரேனும் ஒருபோதும்) அடைந்திராத மனத்துயரை, உறுவாள்– அடைவாள் (அனுபவிப்பாள்)

பொழிப்பு

இராமபிராணைப் பெற்ற தாய்மாரும் அவரின் அடுத்த தம்பியாகிய பரதனும், மீண்டும் அயோத்தியில் நின்று வந்து, இராமபிராணை அந்த அயோத்திமாநகரத்துக்கே அழைத்துச் சென்று விட்டார்களோ. அவர் கைகேசியிடம் திட்டமாக வரைந்து கூறியவண்ணம் பதினென்கு ஆண்டுகளும், காட்டில் இருந்து வாழாமல் அயோத்திமாநகரத்துக்குச் செல்லமாட்டார். வேறேதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையூறு நேர்ந்துவிட்டதினாலேயே அவர் என்னை மீட்கவந்திலர், என்றெல்லாம் எண்ணித் தீராத மனத்துயரை அடைந்தாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் துன்பமே உருவாகிய சீதாதேவி, தன் தலைவன் தன்னை மீட்கவாராமல் இருந்ததற்குரிய காரணம் யாதாகுமோ என எண்ணி உள்ளம் வருந்துகின்ற நிலைமை சொல்லப்படுகின்றது.

பெற்ற தாய்மார்களும், அடுத்த தம்பியாகிய பரதனும் மீண்டும் வனத்துக்கு வந்து இராமபிரானை அயோத்தி நகரத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டார்களோ என்றும் சீதாதேவி நினைக்கின்றாள். பின் அவர்கள் அழைத்தாலும் தாம் கைகேசியிடம் கூறியவண்ணம் பதினான்கு ஆண்டுகளையும் காட்டிலே கழித்தல்லாமல் அவர் நகரத்துக்குச் செல்லமாட்டாரே என்றும் சிந்திக்கின்றாள். இங்ஙனம் மாறிமாறிப் பல காரணங்களையுங் கற்பனை செய்து வருந்துகின்ற சீதாதேவி, தன் தலைவன் சத்தியத்தில் தவறுதவன் என்ற பெருமிதமுங் கொள்கின்றாள். அவர் ஒருபோதும் சொன்ன உறுதிமொழியை மறந்து அயோத்திக்குச் செல்லவேமாட்டார். அவருக்கு வேறு யாதேனும் இடையூறு நேர்ந்திருக்கலாம். அதனாலேயே அவர் என்னை மீட்க வந்திலர் எனத் துணிகின்றாள். இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி வருந்துகின்ற சீதாதேவியின் உள்ளத் துடிப்புடன் தானுங் கலந்து ஒன்றுபட்ட கம்பர்,

> உற்றது உண்டு எனப் படர் உழந்து
> உருத நோய் உறுவாள்.

எனக் கூறுகின்றார். சீதாதேவியின் துயர் கம்பரின் கற்பனை ஆற்றலையுங் கடந்து அப்பாலுக்கப்பாலாய்ப் பரந்துவிட்டது. அத்துன்பத்தின் தன்மையைச் சொற்களால் வெளிப்படுத்த முடியாத கம்பர் **உருத நோய் உறுவாள்** என்றளவில் அமைந்துவிட்டார்.

இராமபிரானைப் பெற்ற கோசலாதேவியாரைப் போலவே தசரதனின் மற்றைய மனைவிமார் எல்லோரும், இராமபிரானைத் தாங்கள் பெற்ற பிள்ளையாகக் கருதி அன்பு செலுத்தினார்கள் என்பதை விளக்கப் **'பெற்றதாயர்'** எனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் மூண்டதோ

18. முரனெ னத்தகு மொய்ம்பினோர் முன்பொரு தவர்போல்
வரனு மாயமும் வஞ்சமும் வரம்பில வல்லோர்
பொரநி கழ்ந்ததோர் பூசலுண் டாமெனப் பொருமாக்
கரனெ திர்ந்தது கண்டன ளாமெனக் கவல்வாள்.

கொண்டுகூட்டு : முரண் என, தகும் மொய்ம்பினோர்(களும்) முன் பொருதவர் போல், வரம்பு இல வரனும் (வரங்களும்) மாயமும் வஞ்சமும் வல்லோர் (ஆகிய) அரக்கர் பொர, நிகழ்ந்தது, (நடக்கிறதாகிய) ஓர் பூசல், உண்டு ஆம் என, பொருமா, கரன் எதிர்ந்தது கண்டனள் ஆம் என, கவல்வாள்.

பொருள்

முரன் எனத்தகும் - முரன் என்னும் அசுரனை ஒத்தவர் என்று சொல்லத்தக்க, மொய்ம்பினோர் - தோள்வலிமை வாய்ந்தவரும், முன்பொருதவர் போல் - (கரனுடன் போர் ஆற்றிய) முன் நாளில் வந்து (இராமபிரானுடன்) போர் புரிந்த அசுரர்களைப் போல, வரம்பு இல் - அளவு சொல்ல முடியாதனவாகிய, வரனும் – வரங்களைப் பெற்றவர்களும், மாயமும் - (பிறர் அறியமுடியாத) மாயைச் செயல்களும், வஞ்சமும் - வஞ்சனைச் செயல்களும், வல்லோர் - (ஆற்றும் வன்மை படைத்தவர்களுமாகிய) அரக்கர், பொர – (வந்து) போர்புரிய, நிகழ்ந்தது – நிகழ்கின்றதாகிய (நடக்கின்றதாகிய), ஓர் பூசல் – ஒப்பற்றதான ஒரு பெரும்போர், உண்டாம் - உளவாய் இருத்தலும் கூடும், என – என்று எண்ணி, பொருமா - மனம் பொருமிக் கொண்டிருக்கும்போது, கரன் எதிர்ந்தது – முன்னே கரன் முதலானவர்கள் இராமபிரானை எதிர்த்து ஆற்றிய பயங்கரமான பெரும்போரை, கண்டனள் ஆமென - (இப்போதும்) கண்ணின் முன்னே கண்டவள் போல, கவல்வாள் - (சீதாதேவி) கவலைப்படுவாள்.

பொழிப்பு

முரனைப் போன்றவர்கள் என்று சொல்லத்தக்க தோள் வலிமை வாய்ந்தவர்களும், கரனுடன் போராற்றிய காலத்தில் வந்து போர்புரிந்தவர்களைப் போல வரங்களைப் பெற்றவர்களும், வஞ்சனையும் மாயமும் ஆற்ற வல்லவர்களுமாகிய அரக்கர் வந்து போர்புரியப் பெரும்போர் நிகழ்ந்திருத்தலுங் கூடும் என்றெண்ணி மனம் பொருமிக் கொண்டிருந்த சீதாதேவி, முன்னே கரன் முதலானவர்கள், இராமபிரானை எதிர்த்து ஆற்றிய பயங்கரமான பெரும் போரை இப்போதும் கண்ணால் கண்டவள் போலக் கலங்கினள் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச் செய்யுளில், தன் தலைவனுகிய இராமபிரானுடன் கொடிய அரக்கர்கள் போர் புரிகின்றார்களோ எனச் சீதாதேவி எண்ணி ஏங்குகின்ற நிலைமை சொல்லப்படுகின்றது.

வரம் பல பெற்றவர்களும் மாயமும் வஞ்சனையும் செய்வதில் வல்லவருமாகிய அரக்கர்கள் இராமபிரானை எதிர்த்துப் போர்புரிந்து கொண்டிருப்பதால்தான் அவர் தன்னை மீட்க வந்திலரோ என எண்ணிப் பொருமுகின்ற சீதாதேவியின் உள்ளத்தில், முன்னெரு நாள் தன் கண்முன்னே கரன் முதலான அரக்கர்களுடன் இராமபிரான் ஆற்றிய அதிபயங்கரமான போரைப்பற்றிய நினைவு வந்துவிட்டது. உடனே அவள் ஏங்கிவிட்டாள். எல்லையில்லாத கவலையால் விழுங்கப்பட்டு விட்டாள். தன் தலைவனின் வீரத்தையும் வில்லாற்றலையும் நன்குணர்ந்தவளாயினும் படைத்துணையின்றி மாயவல்ல அசுரர்களுடன் அவர் போர் செய்கின்றாரே என நினைத்தவுடன் அவளையும் அறியாமல் அவள் அழுதுவிட்டாள்.

> ''பொர நிகழ்ந்ததோர் பூசல் உண்டாமெனப் பொருமாக்
> கரன் எதிர்ந்தது கண்டன ளாமெனக் கவல்வாள்''

எனக் கம்பர் சீதாதேவியின் உள்ளம் பொருமிக் குழைந்து நெகிழ்ந்து கலங்குவதைக் கூறித் தாமும் கலங்குகின்றார்.

கரன் இலக்குமணனுல் மூக்கும் கையும் வெட்டுண்ட சூர்ப்பனகையின் ஏவலால் பல அரக்கர்களுடன் இராமபிரானை எதிர்த்து மாண்டவன்.

கரன் இராமபிரானை எதிர்த்தபோது சீதாதேவி கலங்கிய நிலையை

> ''நின்றவள் இருந்தாள் கண்ணீர்
> நிலனுறப் புலம்புகின்றுள் பால்'' எனவும்,
>
> ''குழையுறு மதியம் பூத்த கொம்பனாள்
> குழைந்து சோர'' எனவும்,
>
> ''அனிகவெம் சமத்து ஆருயிர் போகத்தான்
> தனியிருந்த உடல் அன்ன தையல்பால்''

எனவும், கம்பர் ஆரணிய காண்டத்தில் கூறுதல் காண்க. முரன் என்னும் அசுரன் தாகாசுரனின் அமைச்சன். பேராற்றல் நிரம்பியவன். இவன் திருமாலாற் கொல்லப்பட்டான். இவனைக் கொன்றதினுல் திருமாலுக்கு, முராரி என்னும் திருப்பெயர் உண்டாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இராமபிரானின் குண நலம் வில் நலம் என்பனவற்றை எண்ணியெண்ணிச் சீதாதேவி இன்னலுறுதல்

[19 – 29 செய்யுள்]

இச் செய்யுட்களில் தன் தலைவனுகிய இராமபிரானின் குண நலத்தை எண்ணியும், வில் ஆற்றலை எண்ணியும், வேறுபல நல் இயல்புகளை எண்ணியும் சீதாதேவி அடைகின்ற அல்லல்களையும் உள்ளப் பொருமல்களையும் சொல்லோவியமாகத் தீட்டிய கம்பனின் கவிதை உள்ளத்தையும், சீதாதேவி என்னும் பெண் தெய்வத்தின் கற்போடு கலந்த காதல் உள்ளத்தையும், காணலாம்.

கேகய நாட்டு மன்னன் மகளாகிய கைகேயி, பகைவரின் எதிர்ப்பில்லாததும் பரந்துபட்ட நிலப்பரப்பை உரியதுமான அயோத்தி நாட்டின் அரசுரிமை பரதனுக்கே உரித்தாகிவிட்டதென, இராமபிரானிடம் பகர்ந்தபொழுது அவரின் முகம் இயல்பாக உள்ள ஒளியிலும் மூன்று மடங்கு பொலிவுடன் விளங்கிய செயலைச் சீதாதேவி எண்ணுகின்றுள். எண்ணியவுடன் அவளின் உள்ளம் கவலையால் கலங்கி விடுகின்றது.

"நீ அயோத்திக்கு அரசனுக விற்றிருப்பாய்" என்று தசரதச் சக்கரவர்த்தி கூறிய பொழுதும், "அரசுரிமையைத் துறந்து காட்டிற்குச் செல்வாயாக" என்று கைகேயி கூறிய பொழுதும் ஒரு வேறுபாடும் இல்லாமல் சித்திரத்தில் தீட்டிய செந்தாமரை மலரைப் போல விளங்கிய இராமபிரானின் முகத் தோற்றம், சீதாதேவியின் நெஞ்சத்திரையில் நிழலாடுகின்றது. அவள் இராமபிரானின் முகப் பொலிவை மறக்க முடியாமல் வருந்துகின்றுள். இங்ஙனம் வருந்திய சீதாதேவியின் உள்ளத்தில் ஒருவராலும் வளைக்க முடியாமல் இருந்த வில்லை வளைத்துத் தன் தந்தையின் உள்ளத்தில் மகிழ்ச்சியைப் பெருக்கித் தன்னையும் மணம் செய்துகொண்ட இராமபிரானின் அருஞ்செயல் தோன்றுகின்றது. அவள் அப்படியே மயங்கி விட்டாள். இந்திரனை வென்றவர்களும், வரபலமும் தோள் வலியும் படைத்தவர்களாகிய பதின்ஞாயிரம் அரக்கர்களை மூன்று நாழிகைப் பொழுதில் வென்று அவர்களின் தலைவனுகிய கரனையும் கொன்ற இராமபிரானின் வீரச்செயலையும் சீதாதேவி நினைக்கின்றுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பேராற்றல் வாய்ந்த என் தலைவர் இன்னும் ஏனை என்னை மீட்க வந்திலர் என எண்ணி ஏங்குகின்றாள்.

இங்ஙனம் ஏங்கிய அவளின் உள்ளத்தில் ஏழை வேடனுகிய குகனுடன் நட்புக் கலந்தபொழுது தன் தலைவனுகிய இராம பிரான் அவனை நோக்கி 'என் தம்பியாகிய இலக்குமணன் உன் தம்பியாவான்' என்றும், 'நான் உனது தோழன்' என்றும், 'என் மனைவியாகிய சீதை உன் மைத்துனி' என்றும் வழுத்திய மாற்றங்களை மறக்க முடியாமல் வருந்துவாள்.

இங்ஙனம் பழைய செயல்களை எண்ணியெண்ணி வருந்து கின்ற சீதையின் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் அலை அலையாக எண்ணங்கள் எழுகின்றன. தன் தந்தையாராகிய சனகமகா ராசன் மிகவும் விருப்பத்துடன் தனது கையை இராமபிரா னின் வலக் கையில் எடுத்து வைத்துத் தன்னை அவரிடம் ஒப் படைத்த செயலையும் அவர் (இராமபிரான்) தமது வலக்கை யால் தன் கைகளைப் பற்றிய வண்ணம் திருமணக் கிரியைகளை ஆற்றியதையும், தனது வலக்காலினை அவர் தமது வலக்கை யினுல் தூக்கி அம்மியின் மேல் வைத்தருளிய அருமைப்பாட்டை யும் எண்ணியெண்ணி சீதாதேவி ஏங்கினுள்.

ஏங்கிய சீதாதேவியின் உள்ளத்தில் இன்னும் எண்ணங்கள் எழுந்த வண்ணமாகவே இருக்கின்றன. மலர்மாலையைச் சூடிய தலையின்கண் பொன்முடி புனைந்து அரசாள வேண்டிய தன் தம்பியாகிய பரதன், ஆசை வாழ்வைத் துறந்து சடைமுடி புனைந்தவனுய்த் தன்முன் வந்து தொழுது நிற்பதைக்கண்ட இராமபிரான் சொல்லும், செயலும் அற்று ஏங்கி நின்ற காட்சி அப்படியே சீதாதேவியின் உள்ளத்தை அள்ளி அள்ளி வருத்துகின்றது. இங்ஙனம் வருந்திய சீதாதேவி தன் தலைவ னுகிய இராமபிரான் நாட்டைத் துறந்து காட்டிற்குச் செல்ல வழிக்கொண்ட நாளில் அந்தணர்களுக்குப் பசுக்களைத் தான மாகக் கொடுத்ததையும் பசுத்தானத்தைப் பெற்ற அந்தணர் களின் பேராசை மிகுதியைக்கண்டு அவர் புன்சிரிப்புப் புரிந் ததையும் எண்ணி அழுதாள். அழுத சீதாதேவியின் உள்ளத் தில் மன்னர் குலத்தை இருபத்தொரு தலைமுறை யாளவும் தொடர்ந்து மழுப்படையினுல் கொன்றொழித்த மகாவீரனுகிய பரசுராமன், தன் தலைவனுகிய இராமனுல் தவவலிமையும் வீரமும் வில்லும் பறிக்கப்பட்ட வெற்றிச் செயலின் நினைவு எழுந்தது. எழுந்ததும் அவள் மிகவும் வருந்தினுள். வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க வீரரரய் விளங்கும் தன் தலைவர் இன்னும் தன்னை மீட்க வந்திலரே என்று எண்ண எண்ண அவளின் உள்ளம் இடிகின்றது.

காக உருக்கொண்ட இந்திரன் மைந்தனுகிய சயந்தன் செய்த குற்றத்திற்காக அவனைக் கொல்லும் வண்ணம் பாணம் செலுத்திய இராமபிரான், அவன் தன்னை வணங்கியவுடன் இரங்கி அவனைக் கொல்லாமல் கண்ணொன்றை மட்டும் கெடுத்து விட்ட கருணைச்செயலை எண்ணிக் கலங்குகின்றுள். இங்ஙனம் கலங்கிய சீதாதேவி கொடுமை மிகுந்த விராதன் என்னும் அரக்கன் செய்த குற்றத்தைப் பொறுத்தும் அவனின் தீவினைகளைப் போக்கிச் சாப விடுதலை செய்தும் உய்யக்கொண்ட இராமபிரானின் உயர்ந்த கருணைப் பண்பை நினைந்து நினைந்து உயிர் சோர்ந்தாள். இங்ஙனம் பிறர் செய்த குற்றங்களைப் பொறுக்கும் கருணையாளராகிய அவர், ''இலக்குமணனை இகழ்ந்து வைதுரைத்த என் குற்றத்தைப் பொறுத்து என்னை மீட்க வராமல் இருக்கின்றாரே'' என்றெல்லாம் எண்ணி யெண்ணி சீதாதேவி இன்னலுற்றுள்.

மும்மடங்கு பொலிந்த முகம்

19. தெம்ம டங்கிய சேணிலம் கேகயர்
தம்ம டந்தையுன் தம்பிய தாமென
மும்ம டங்கு பொலிந்த முகத்தினன்
வெம்ம டங்கலை யுன்னி வெதும்புவாள்.

கொண்டுகூட்டு: கேகயர் தம் மடந்தை (ஆகிய கைகேசி) தெம்மடங்கிய சேண்நிலம், (இராச்சியம்) உன் தம்பியது ஆம் என (என்று சொல்லியபொழுது முன் இருந்த பொலிவிலும்), மும்மடங்கு பொலிந்த முகத்தினன் (ஆன) வெம்மடங்கலை (ஒத்த இராமபிரானை) உன்னி வெதும்புவாள்,

பொருள்

கேதயர் தம் மடந்தை—கேகய நாட்டு அரசனின் மகளாகிய கைகேசி, தெம்மடங்கிய - பகைவர்கள் அனைவரும் (அஞ்சி) அடங்கிய (எதிரிகளின் இன்னல் இல்லாத) சேண் நிலம்-பரந்து பட்ட (விசாலமான) நிலப்பரப்பைக் கொண்ட பெரிய இராச்சியம் (அரசுரிமை) உன் தம்பியது ஆம் என - உன் தம்பியாகிய பரதனுக்கே உரிமையாகி விட்டது என்று சொல்லவும், (அவ்வுரையைக் கேட்டவுடனே) மும்மடங்கு பொலிந்த முகத்தினன்—(முன்னமே இயற்கையாக உள்ள) முகமலர்ச்சியிலும் (சோபையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org.

லும்)மூன்று மடங்கு மலர்ச்சியைக் கொண்ட முகத்தை உடைய வனை, வெம்மடங்கலை–ஆண் சிங்கம் (வீரசிங்கத்தை) போன்ற இராமபிரானை, உன்னி–நினைந்து, வெதும்புவாள்–வருந்துவாள்.

பொழிப்பு

கேகயர் நாட்டு அரசரின் மகளாகிய கைகேசி பகைவர்கள் அனைவரும் அஞ்சி அடங்கிய அரசுரிமை உன் தம்பியாகிய பரத னுக்கே உரிமையாகி விட்டது என்று கூறிய சொல்லைக் கேட்ட தும், முன்னமே இயற்கையாக உள்ள முகமலர்ச்சியிலும் மூன்று மடங்கு மலர்ந்த முகத்தை உடையவனும், ஆண் சிங்கம் போன் றேனுமாகிய இராமபிரானை நினைந்து (சீதாதேவி) வருந்துவாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் அயோத்திக்கு அரசனாக முடிசூட்டும் வண் ணம் வந்த இராமபிரானை நோக்கி அயோத்தி நகரின் அரசுரி மைப் பட்டத்திற்கு உரியவன் உனது தம்பியாகிய பரதனே யென்று கைகேசி கூறிய சொல்லைக் கேட்டபொழுது இராம பிரானின் முகத்திலே உண்டான பொலிவை எண்ணி வருந்து கின்ற சீதாதேவியின் மன நிலைமை சொல்லப்படுகிறது.

பகைவரின் அல்லலில்லாத பெரிய இராச்சியமாய் விளங்கு கின்ற அயோத்தியா நகரின் அரசுரிமைப்பேறு உனக்கு இல்லை உன் தம்பிக்கே உரியது எனக் கைகேசி கூறியபொழுது இராம பிரானின் முகத்திலே உண்டான புதிய மலர்ச்சியின் சிறப்பைப் பிறரால் கூறக்கேட்ட சீதாதேவி தன் துன்ப நிலையில் இருந்து சிந்திக்கின்றாள். சீதாதேவியின் உள்ளத்திரையில் இயற்கையான மலர்ச்சியிலும் மும்மடங்கு மலர்ச்சிகொண்ட இராமபிரானின் முகம் அப்படியே தோன்றுகின்றது. எல்லையில்லாத தியாக மூர்த்தியாகிய இராமபிரானின் முகமலர்ச்சியின் தோற்றம் துன்பம் எல்லாவற்றையும் போக்கிவிட்டது போன்ற ஓர் புத்துணர்ச்சியை அவளுக்குக் கொடுத்துவிட்டது. அவள் தன் துன்பத்தை மறந்து தன் தலைவனின் தியாக உணர்ச்சியையும் பொறுமையையும் எண்ணி ஏங்குகின்றாள். அந்த ஏக்கத்தின் இடையே ஆண் சிங்கம் போன்ற இராமபிரானின் ஆண்மையை யும் எண்ணுகின்றாள். தன் தலைவனின் அறத்தோடு கலந்த ஆண்மை அரக்கர் கூட்டத்தை அழித்துத் தன்னை மீட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் ஓர் நம்பிக்கையும் அவளுக்குத் தோன்றுகின்றது. இங்ஙனம் சீதாதேவியின் உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களைச் சொல்லோவியமாகப் புனைந்துவிட்டார் கம்பர்.

தெம்மடங்கிய சேண்நிலம் உன் தம்பியது ஆம் என்
மும்மடங்கு போலிந்த மூகத்தினன்
வெம்மடங்கலே உன்னி வெதும்புவாள்

எனக் கூறுகின்ற கம்பரின் கவிதைக் குரலிலே சீதாதேவியின் உள்ளமும் இராமபிரானின் திருமுகப் பொலிவும் பிரிவின்றிக் கலந்து நிற்கும் கற்பனை ஆற்றலைக் காண்கின்றோம்.

வெம்மடங்கல் உவமை ஆகுபெயர்: வெம்மடங்கலைப் போன்ற இராமபிரான் என விரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

வெம்மடங்கல்—உவமானம். இராமபிரான்—உவமேயம் அஞ்சாமையும் ஆண்மையும்—பொதுத்தன்மைகளாகும்.

இனி இச்செய்யுளில் முதல் இரண்டு அடிகளையும்
"தெம்மடங்கிய சேண்இடைத் திங்களின்
அம்மடங்கிய அம்புயம் தன்னினும்"

எனப் பாடங்கொண்டு பகை நீங்கிய வானிடையே சந்திரனைப் போன்று நீரிலே தோன்றியுள்ள தாமரை மலரைக் காட்டிலும், எனப் பொருள் கூறுவாரும் உளர். இப்பாடம் இராமபிரானின் தியாக வாழ்வை எண்ணுகின்ற சீதாதேவியின் உளநிலைக்கு பொருந்தாமை உணர்க. இராமபிரானின் முக அழகை மட்டும் சீதாதேவி சிந்தித்தாள் அல்லள். தம்பிக்கே அயோத்திநகர் ஆட்சி என்ற சொல்லைக்கேட்டபின்பு முன்னையிலும் மூன்று மடங்காகப் பொலிவு கொண்ட முகத்திலே (முக சௌந்தரியத்தில்) நிழலாடுகின்ற தெய்வச் சாயலைத் (தியாக ஒளியை) தான் சீதாதேவி சிந்திக்கின்றாள்.

கம்ப இராமாயணத் திறன் ஆய்வில் சிறந்த \டி. கே.சி., பி. ஸ்ரீ முதலான அறிஞர்களும் இப்பாடத்தை ஒப்புக் கொண்டிலர்.

சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை

20 மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருந்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை யுன்னுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: மெய்த்திருப்பதம் (அரசுரிமையை நீ) மேவு என்ற போதினும், இத்திரு துறந்து (அரசுரிமையை விட்டு) ஏகு என்ற போதினும், சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் (இராமபிரானின்) முகத்தினை உன்னுவாள்.

பொருள்

மெய்த்திருப்பதம்-நிலையான (பகைவரால் பற்றிக்கொள்ள முடியாத) சிறந்த (அயோத்தியின் அரசனுயிருக்கும்) சக்கரவர்த்திப் பதவியை, மேவு என்ற போதினும்—ஏற்றுக்கொள்வாயாக என்று (தசரதச் சக்கரவர்த்தி) சொன்னபொழுதும் இத்திருதுறந்து - இந்த (அயோத்தியை ஆளும்) அரசாட்சிச் செல்வத்தை விட்டு, ஏகு என்ற போதினும் - (காட்டிற்குச்) செல்வாயாக என்று (கைகேசி) சொன்னபோதும் (வேறுபாடில்லாமல்) சித்திரத்தில் அலர்ந்த - (ஓவியப் புலவனுல்) தீட்டப்பட்ட (சித்தரித்த) உருவத்தில் மலர்ந்த, செந்தாமரை-விரிந்த செந்தாமரை மலரினை, ஒத்திருக்கும் - போன்று (ஒத்து) விளங்கிய முகத்தினை - இராமபிரானின் திருமுகப் பொலிவை, உன்னுவாள் - (சீதாதேவி) மீண்டும் நினைப்பாள்.

பொழிப்பு

நிலையான சிறந்த சக்கரவர்த்திப் பதவியை நீ ஏற்றுக்கொள்வாயாக என்று தசரதச் சக்கரவர்த்தி கூறியபொழுதும், அயோத்தியை ஆளுகின்ற அரசுரிமையை விட்டு காட்டிற்குச் செல்வாயாக என்று கைகேசி சொன்னபோதும், ஒரு வேறுபாடும் இல்லாமல் ஓவியப் புலவனுல் தீட்டப்பட்ட உருவத்திலே மலர்ந்த செந்தாமரை மலரினைப் போன்று விளங்கும் இராமபிரானின் திருமுகப் பொலிவைச் சீதாதேவி மீண்டும் சிந்தித்தாள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தியாக உணர்ச்சியோடு கூடிய தன் தலைவனின் திருமுகப் பொலிவைச் சிந்தித்துத் தன் மனத்திரையிலே நிழலாடக் கண்ட சீதாதேவி தொடர்ந்து அத்திருமுகப் பொலிவை நுகர்ந்து நுகர்ந்து அனுபவிக்கின்ற நிலைமை சொல்லப்படுகின்றது.

இயற்கையாகப் பொய்கையின்கண் பூத்துள்ள செந்தாமரை மலரைப் பார்த்து அனுபவிக்கின்ற கலை இன்பம் ஒரு சிறிதுநேரம் தான் நிலைபெறும். அப்பால் படிப்படியாகச் செந்தாமரை மலரின் செவ்வி குறைந்துகொண்டே போகும். சீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியானவள் என்றும் ஒரே தன்மையாக விளங்குகின்ற இராமபிரானின் திருமுகச் செந்தாமரை மலரின் பொலிவை நுகருகின்றாள். அங்ஙனம் அவள் நுகருகின்ற தன்மையை எமக்குக் காட்டுதற்காகச் சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரை மலரைக் கம்பர் தேடி எடுத்துக்கொண்டார். செந்தாமரை மலரின் உருவத்தைத் தீட்டுகின்ற சித்திரப் புலவன் அதன் அழகை ஒவ்வோர் அணுவாக அனுபவிக்கின்றான். அவன் முதன் முதலாக ஒரு கோட்டைக் கீறுவான். பின் அக்கோட்டிலே ஓர் இதழை மலரவைப்பான். அடுத்து ஒரு இதழை மடக்கி வைப்பான். இப்படியே இதழ்களை அடுக்கியும் மடக்கியும் அவற்றிற்கு நிறம் தீட்டியும் அழுத்தம் கொடுத்தும் அப்பூவினைப் படைத்துவிடுகின்றான்.

அங்ஙனம் சித்திரத்திலே செந்தாமரைப் பூவை எழுதிவிட்டால் அந்தப் பூ வாடாமல் என்றும் ஒரே தன்மையாகப் பொலிந்திருக்கும் என்பதாம். சீதாதேவி இன்பதுன்ப வேறு பாட்டுணர்ச்சிகளால் தாக்குண்டு தன் பொலிவு குன்றுமல் என்றும் ஒரே தன்மையான பொலிவுடன் விளங்குகின்ற இராம பிரானின் முகமலரை நினைக்கின்றாள் என்பதே கம்பரின் கருத்தாகும்.

சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை – உவமானம். இராமபிரானின் திருமுகப்பொலிவு – உவமேயம். என்றும் பொலிவு குன்றுமல் ஒரே தன்மையாக விளங்குதல் - பொதுத்தன்மையாகும்.

''சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருந்த முகத்தினை உன்னுவாள்''

எனவரும் இச்செய்யுட் பகுதியை

''செப்பரும் குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு அவ்வாசகம் உணரக்கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா''

எனவரும் அயோத்தியா காண்டச் செய்யுட்பகுதியுடன் ஒப்பிட்டு நோக்குக.

எனவே, அலர்ந்த செந்தாமரையினை வென்ற முகத்திற்கு மீண்டும் அச்செந்தாமரையை உவமைகூற விரும்பாத கம்பர் சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரை மலரை உவமையாகக் கூறினர் என்பதாம்.

மெய்த்திருப்பதம் என்பதற்கு அற வழியிற் கிடைத்த இராச்சியச் செல்வம் எனவும் பொருள் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீங்குதோள்

21. தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணுன்
வாங்கு கோல வடவரை வார்சிலை
ஏங்கு மாத்திரத் திற்றிரண் டாய்விழ
வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள்,

கொண்டுகூட்டு: (சனக மகாராசன் இவர் வில்லை வளைப்பாரோ என எண்ணி) ஏங்கும் மாத்திரத்து, கங்கை தேங்கு திருமுடி செங்கண்ணுன் (ஆகிய சிவன்) வாங்கு கோலம் வடவரை வார்சிலை, இரண்டு ஆய் இற்று விழ (வீழும் வண்ணம்) வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள்.

பொருள்

ஏங்கும் மாத்திரத்து-(இந்தப் பெரிய வில்லை இவன் வளைப் பானே வளைக்கமாட்டானே என எண்ணிச் சனகமகாராசன்) ஏங்கிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், கங்கை தேங்கு – ஆகாயகங்கை வந்து தங்கிய, திருமுடி – அழகு நிரம்பிய சடா முடியையும், செங்கணுன் - சிவந்த மூன்று கண்களையும் உடைய சிவபெருமான், வாங்கு – (தன் கையினுல் எடுத்து) வளைத்த, கோலவடவரை - அழகு வாய்ந்ததும் வடக்கின்கண் உள்ளதுமா கிய மகாமேரு மலையின் தன்மை பொருந்தியதுமான, வார்சிலை- திரியம்பகம் என்னும் நீண்டவில் (சிவதனு) இரண்டு ஆய் இற்று விழ – இரு துண்டுகளாய் ஒடிந்து விழும் வண்ணம் (வளைத்து முரித்த) வீங்கு – பருமை கொண்ட, தோளை இராம பிரானது தோள்களை (தோள் வலியை) நினைந்து - எண்ணி, மெலிந்துளாள் - (சீதாதேவி) இளைப்புக்கொண்டாள் (இளைத்த வளானுள்).

பொழிப்பு

இந்தப் பெரிய வில்லை இவன் வளைப்பானே வளைக்கமாட் டானே என எண்ணிச் சனக மகாராசா ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில், கங்கை தங்கிய திருமுடியையும் சிவந்த மூன்று கண் களையுமுடைய சிவபெருமான் தன் கையினுல் எடுத்து வளைத்த தும் மகாமேரு மலையின் தன்மை பொருந்தியதுமான திரியம்பகம் என்னும் நீண்ட வில்லினை இரண்டு துண்டுகளாக ஒடிந்து விழும் வண்ணம் வளைத்து முறித்த இராமபிரானின் பருத்த தோள் வலிமையை நினைந்து சீதாதேவி வருந்தினுள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தான் நேரில் காணுது பிறரால் கேட்டு அறிந்த இராமபிரானின் திருமுகப் பொலிவை எண்ணி வருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய சீதாதேவியானவள், தான் நேரில் கண்ட இராமபிரானின் தோள் வலிமையை எண்ணி வருந்துகின்ற நிலைமை சொல்லப் படுகின்றது.

சீதாதேவியுடன் பிறந்த வில்லை வளைக்கும் வல்லமை யாளர் இல்லாமையால் அவளுக்குத் திருமணம் நிகழாமல் இருந்தது. தன் செல்வப் புதல்விக்குத் திருமணம் நிகழாது போய்விடுமோ என்னும் கவலை சனகமகாராசன் உள்ளத்தில் தோன்றிவிட்டது. இராமபிரான் வில்லை வளைக்கும் வண்ணம் எடுத்தபொழுது, இவன் இந்த வில்லை வளைப்பானே வளைக்க மாட்டானே என எண்ணிச் சனகமகாராசன் பெருமூச்சுவிட்ட அதே நேரத்தில் வில்லை எடுத்த இராமபிரான் வளைத்து முரித்துவிட்டான். இந்த ஆண்மைச் செயலைத் துன்பமே உருவா கிய சீதாதேவி சிந்திக்கின்றாள். முரிந்த வில் சிவபெருமானால் சனகனுக்குக் கொடுக்கப்பட்டதாகும். இவ்வில்லின் பெயர் திரியம்பகம். திரியம்பகம் என்னும் சிவதனுவை இராமபிரான் சிறிய விளையாட்டுப் பொருளைப்போல மிக எளிதாக வளைத்து முரித்த ஆண்மைச் செயலை எண்ணியவுடனே சீதாதேவி இளைத்து விட்டாள். இத்துணை ஆண்மை நிறைந்த என் தலைவன் என்னை மீட்க இன்னும் வந்திலரே என்ற உணர்ச்சி அவளை ஏங்க வைத்துவிட்டது.

வில்லின் நலம்

22. இன்ன லம்பர வேந்தற் கியற்றிய
பன்ன லம்பதி னாயி ரம்படை
கன்னல் மூன்றிற் களப்படக் கால்வளை
வின்ன லம்புகழ்ந் தேங்கி வெதும்புவாள்.

கொண்டுகூட்டு : அம்பரம் வேந்தற்கு இன்னல் இயற்றிய பல் நலம் (படைத்த) பதின்னாயிரம் படை(யை) கன்னல் மூன்றில் களம் பட கால்வளை வில் நலம் (யை) புகழ்ந்து ஏங்கி வெதும்புவாள்.

பொருள்

அம்பரம் வேந்தற்கு - வானுலகத்தின் அரசனாகிய இந்திர னுக்கு, இன்னல் – (பெருந்) துன்பங்களை, இயற்றிய – செய் தவர்களும், பல்நலம் – (வர பலம் தோள்வலி மாயை ஆற்றுந் திறன் முதலிய) பல நலன்களைப் படைத்தவர்களுமாய், பதின்னாயிரம் படை – (கரனோடு வந்து எதிர்த்த) பதினாலா யிரம் என்னுந் தொகையைக் கொண்ட அரக்கர் படை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னல் மூன்றில் – மூன்று நாழிகைப் பொழுதிலே, களம் பட-போர்க்களத்தின் கண் அழிந்துபடும் வண்ணம், கால் வளை – இரண்டு பக்கமும் (கோடியும்) வளைந்த, (வளைந்த அம்புகளைப் பொழிந்த) வில் நலம்–(இராமபிரானது) கோதண்டம் என்னும் பெயரையுடைய வில்லின் சிறப்பை (ஆற்றலை) புகழ்ந்து-போற்றிச் சொல்லி, ஏங்கி - இரங்கி, வெதும்புவாள் – வாடுவாள்.

பொழிப்பு

வானுலகத்தின் மன்னனாகிய இந்திரனுக்குத் துன்பத்தைச் செய்தவர்களும் வரபலம் தோள்வலி முதலிய பல நலன்களைப் படைத்தவர்களுமாய்க், கரனோடு சேர்ந்து எதிர்த்த பதின்னாயிரம் என்னுந் தொகையைக் கொண்ட அரக்கர் படைகளை மூன்று நாழிகைப் பொழுதில் போர்க்களத்தில் அழிந்து போகும் வண்ணம் கோதண்டம் என்னும் பெயரையுடைய வில் லை வளைத்து அம்புகளைச் சொரிந்த (இராமபிரானின்) வில்லாற்றலைப் பாராட்டி ஏங்கி வாடுவாள்.

விளக்கம்

இச் செய்யுளில் தன் தலைவனாகிய இராமபிரானின் வில்லாற்றலை எண்ணி வாடுகின்ற சீதாதேவியின் நிலை சொல்லப் படுகின்றது. தன்னைத் திருமணம் செய்தற்பொருட்டுத் திரியம்பகம் என்று சொல்லப்படும் சிவதனுவை (சிவபெருமானின் வில்லை) வளைத்து முரித்த, ஆண்மையை எண்ணி மனம் வருந்திய சீதாதேவியானவள், தன் கண்முன்னே இராமபிரானை எதிர்த்த கரனுக்குத் துணையாக வந்த பதின்னாயிரம் அரக்கர்களை மூன்று நாழிகைப் பொழுதில் தன் வில்லாற்றலாற் கொன்று குவித்த இராமபிரானின் பேராற்றலை எண்ணி ஏங்குகின்றாள். இத்துணைப் பெரும் வீரம் படைத்த என் தலைவன் தன்னை இன்னும் மீட்க வந்திலன் என்று எண்ண எண்ண அவளின் துன்பம் மிகுதிப்படுகின்றது என்பதே கம்பரின் கருத்தாகும்.

வாழி நண்பு

23. ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் றம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்

கொண்டுகூட்டு: ஆழம் நீர் கங்கை அம்பி கடாவிய ஏழை வேடனுக்கு, (குகனுக்கு) எம்பி நின் தம்பி என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் நீ (என்) தோழன் (என்றும்) மங்கை (உன்) கொழுந்தி (என்றும், இராமபிரான் கூறிய) வாழி நண்பினை உன்னி மயங்குவாள்.

பொருள்

ஆழ நீர்க்கங்கை – ஆழம்பொருந்தியதும் நீர்ப் பெருக்கினை உடையதுமாகிய கங்காநதியிலே, அம்பிகடாவிய – படகை ஓட்டிய, ஏழை வேடனுக்கு – (கல்வி அறிவில்லாத) எளிய வேட குலத்தில் தோன்றியவனுகிய குகனுக்கு, எம்பி - எனது தம்பியாகிய இலக்குமணன், நின்தம்பி – உனது தம்பியாவான், நீ (என்) தோழன் - நீ எனக்குத் தோழனுவாய், மங்கை - (என் மனைவியாகிய) சீதை, (உன்) கொழுந்தி - உனது மைத்துனி யாவாள் என்று (இராமபிரான்) திருவாய்மலர்ந்தருளிய, வாழி நண்பினை - என்றும் ஒருவராலும் மறக்க முடியாத உயர்ந்த நட்பின் சிறப்பை (சிநேக தர்மத்தை) உன்னி - நினைந்து மயங்குவாள் - கலங்குவாள்.

பொழிப்பு

ஆழமான நீர்ப்பெருக்கையுடைய கங்கை நதியிலே படகை ஓட்டி வாழ்கின்ற ஏழை வேடனுகிய குகனுக்கு எனது தம்பி யாகிய இலக்குமணன் உனது தம்பியாவான் என்றும், நீ எனக் குத் தோழனென்றும், எனது மனைவியாகிய சீதை உன் மைத் துனியென்றுப் இராமபிரான் கூறிய உயர்ந்த நட்பின் சிறப்பை நினைந்து மயங்குவாள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் எழை வேடனுகிய குகனுடன் இராம பிரான் கொண்ட தோழமையை எண்ணிக் கலங்குகின்ற சீதாதேவியின் மனத்துயர் சொல்லப்படுகின்றது.

மன்னர் குலத்தில் தோன்றிய இராமபிரான் கல்வி அறிவு நாகரிகம் என்பவை இன்ன தென்றும் தெரியாத ஏழை வேட னுகிய குகனுடன் தோழமை கொண்டாடிய செயலை எண்ண எண்ணச் சீதாதேவியின் உள்ளத்தில் மறக்க முடியாத ஓர் வியப்புணர்ச்சியை உண்டாக்குகின்றது. தன் தம்பியை அந்த ஏழை வேடனுக்கும் தம்பியாக்கியதோடும் நில்லாமல் தன்னை யும் அவனுக்குத் தோழனுக்கிக் கோடுத்தார். அத்துடன் என்னையும் அவனுக்குக் கொழுந்தியாக உரிமை பாராட்டிக் கூறினரே இதற்கு மேலும் உயர்ந்த நட்புக் காதலை சிநேகித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தை யாரிடத்தில் எங்கே காணமுடியும் என்று சீதா தேவி எண்ணுகின்றாள்.

இங்ஙனம் எண்ணுகின்ற சீதாதேவியைக் கொண்டே அந்த நட்பை வாழ்த்துவிக்கின்ற கம்பரின் கவிதை உள்ளம் மிகமிகச் சிறந்ததாகும். சீதாதேவியினால் வாழ்த்தப்பட்டால் இராம பிரானிடம் நின்று தோன்றிய தெய்வத்தன்மை வாய்ந்த சிநேகதர்மம் என்னும் நட்புக்காதல், அழிந்து போகாமல் உலகில் நிலைபெற்று வாழும் என்பதே கம்பரின் கருத்தாகும்.

''வாழி நண்பினை எண்ணி மயங்குவாள்''

என்னுந் தொடரில் சீதாதேவியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நட்புக்காதலை வாழ்த்திப் போற்றுகின்ற கம்பரின் மகிழ்ச்சிக் குரலைக் கேட்கின்றோம். இராமபிரானிடத்தில் அமைந்த அற்புத குணங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்த அற்புத குணமாகிய நட்புக்காதலை எண்ணி ஏங்குகின்ற சீதா தேவி, இத்தகைய உயர்ந்த பண்பு வாய்ந்த தலைவனை யான் பிரிந்து வாழ நேர்ந்து விட்டதே என்றும் எண்ணுகின்றாள். அந்த எண்ணம் வந்தவுடன் செயலற்று மயங்கி விடுகின்றாள் என்பதை அறிகின்றோம்.

குகன் கங்கையில் ஓடம் ஓட்டுபவன், ஆயிரம் ஓடங்களுக்கு அதிபதி. இவனே கங்கைக்கரையில் உள்ள வேடர்களின் தலை வனுமாவான். இராமபிரான், தம்பியாகிய இலக்குமணனோடும் மனைவியாகிய சீதையோடும் அயோத்தியை நீங்கிக் காட்டிற் குச் செல்ல வழிக்கொண்டு, கங்கைக் கரையை வந்து சேர்ந் தார். இராமபிரானின் வருகையை உணர்ந்த குகன், அளவில் லாத காணிக்கைப் பொருள்களை ஏந்திய வண்ணம் அவரை வந்து வணங்கினான். அவனின் அன்பின் தன்மையைக்கண்டு அருள் சுரந்த இராமபிரான் அவனைத் தன் நண்பனாக ஏற்றுக் கொண்டார். குகன் இராமபிரானை விட்டுப்பிரிய முடியாத நட்புக்காதலை உடையவனாய் அவருடன் காட்டிற் சென்று வாழக் கருதினான். இராமபிரான், அதற்கு இணங்காமல் அவனை அங்கு இருக்கும் வண்ணம் கூறி அவன் செலுத்திய படகில் ஏறிக் கங்கையைக் கடந்து சென்றார். குகன் இராமபிரானையே எண்ணியெண்ணிக் கசிந்து உருகுகின்ற காதல் அன்புடன் அவரின் கட்டளையைக் கடக்க முடியாதவனாய்க் கங்கைக் கரை யிலிருந்து வாழ்ந்தான் என்பது அயோத்தியா காண்டத்தில் காணும் அவனின் வரலாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதிகைச் செய்தி

24. மெய்த்த தாதை விரும்பின னீட்டிய
கைத்த லங்களைக் கைகளி னீக்கிவேறு
உய்த்த போது தருப்பையி லொண்பதம்
வைத்த வேதிகைச் செய்தி மனங்கொள்வாள்.

கொண்டுகூட்டு: மெய்த் தாதை விரும்பினன், நீட்டிய, (தன்) கைத்தலங்களை (அவரது) கைகளில் நீக்கி, வேறு உய்தபோது, தருப்பையில் ஒண்பதம், வைத்த வேதிகை செய்தி, (யை) மனங்கொள்வாள்.

பொருள்

மெய்த்த - உண்மை தவறுத, **தாதை** - (தன்) தந்தை யாகிய **சனகமகாராசன்**, **விரும்பினன்** - விருப்பம் கொண்ட வராய், **நீட்டிய** - பிடித்துக் கொடுத்த, **கைத்தலங்களை** - (தன் னுடைய) **கைகளை**, **கைகளின் நீக்கி** - (அவருடைய) **கைகளில்** நின்றும் அகற்றி, (தனது இடக்கையைத் தமது வலக்கையி னுல் பற்றிக்கொண்ட வண்ணம்) வேறு உய்த்தபோது, தருப் பையில் – (யாககாரியங்களுக்குரிய) தருப்பையைப்போல, ஒள்-தூய்மையான ஒளியையுடைய (பரிசுத்தமான) பதம்– (தனது) வலக்காலினை, வைத்த – (தன் தலைவர் ஆகிய இராமபிரான் தமது வலக்கையினுல் பிடித்து அம்மியின் மேல்) வைத்தருளிய, வேதிகைச் செய்தி – திருமணத்தின் பொருட்டு இட்ட திருமண மேடையில் நிகழ்ந்த திருமணக் கிரியையை (செய்கையை) மனங்கொள்வாள் - மனத்தில் நினைப்பாள் (எண்ணுவாள்).

பொழிப்பு

உண்மை தவறுத தன் தந்தையாராகிய சனக மகாராசன் மிகவும் விருப்பத்துடனே, பிடித்துக் கொடுத்த, தன் கைகளை இராமபிரான் தமது வலக்கையில் பற்றிய வண்ணம் மற்றைய கிரிகைகளைச் செய்யும்போது, தூய்மையான தருப்பையைப்போல ஒளி வீசுகின்ற தனது வலக்காலினைத் தமது வலக்கையினுல் எடுத்து அம்மியின் மேல் வைத்தருளிய திருமணக் கிரியையை மனத்தில் எண்ணுவாள்.

விளக்கம்

இச் செய்யுளில் தனக்கும் இராமபிரானுக்கும் திருமணம் நடந்த காலத்தில் நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சியை எண்ணிச் சீதா தேவி வருந்துகின்ற நிலைமை சொல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தந்தையாராகிய சனகமகாராசன் மிகுந்த ஆர்வத்தோடு தன் கைகளைப் பிடித்து இராமபிரானின் வலக் கையின் மேல் வைத்துப் பாணிக்கிரகணம் (கையில் ஒப்படைத்தல்) செய்தமையையும், அப்பொழுது இராமபிரான் தமது வலக்கையால் தன்னுடைய இடக்கையைப் பற்றிக் கொண்டவண்ணம் மற்றைய கிரியைகளைச் செய்யும் பொழுது தனது வலக்காலைத் தமது வலக்கையால் பிடித்து அம்மியின் மேல் தூக்கிவைத்த செயலையும் சீதாதேவி எண்ணி வருந்துகின்றாள்.

திருமணக் காலத்தில் நிகழ்ந்த இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் அப்பொழுதுதான் நடப்பது போலச் சீதாதேவிக்குத் தோன்றுகின்றன என்பதாம்.

செஞ்சடை கட்டிய செய்தி

25. உரங்கொ டேமலர்ச் சென்னி யுரிமைசால்
வரங்கொள் பொன்முடி தம்பி வணைந்திலன்
திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்கு
இரங்கி ஏங்குவ தெண்ணி யிரங்குவாள்.

கொண்டுகூட்டு: உரங்கொள் தேமலர்ச் சென்னி (யின் கண்) உரிமைசால் வரங்கொள் பொன்முடி (யைத் தன்) தம்பி வணைந்திலனுய், திரங்கு செம் சடை கட்டிய செய்வினைக்கு (இராமபிரான்) இரங்கி ஏங்குவது (ஏங்குவதை) எண்ணிச் (சீதாதேவி) இரங்குவாள்.

பொருள்

உரங்கொள் - வளப்பம் (செழிப்புப்) பொருந்தியதும், தேமலர் - வாசனையைக் கொண்டதுமான மலர்மாலையைச் சூடிய, சென்னி – தலையின்கண், உரிமைசால் – அரசுரிமை மிக்கதும், வரங்கொள் = மேன்மை கொண்டதுமான, பொன்முடி - பொன்னுற் செய்யப்பட்ட திருமுடியினை (கிரீடத்தை) தம்பி – (தன்) தம்பியாகிய பரதன், வணைந்திலன் - சூடாதவனுய், (புனைந்து கொள்ளாதவனுய்த் தன்னைப் போலவே) திரங்கு - திரைத்து விட்ட, செஞ்சடை கட்டிய - சிவந்த சடையைத் தலையில் முடி போலக் கட்டிய, செய்வினைக்கு – செயலுக்காக (செய்தொழிலுக்காக) இரங்கி ஏங்குவது - (இராமபிரான்) இரக்கங்கொண்டு, (வாய்பேச முடியாமல்) ஏங்கி நின்ற செயலை. எண்ணி - நினைந்து, (சீதாதேவி) இரங்குவாள் - வருந்துவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

வளப்பமானதும் வாசனையைக் கொண்டதுமான மலர்மாலையைச் சூடிய தலையின்கண், அரசுரிமை மிக்கதும் மேன்மை கொண்டதுமான திருமுடியினைத் தன் தம்பியாகிய பரதன் சூடாதவனுய்த் தன்னைப் போலவே சிவந்த சடையைத் தலையில் முடி போலக் கட்டிய செயலுக்காக (இராமபிரான்) இரக்கங்கொண்டு ஏங்கி நின்ற செயலை நினைந்து சீதாதேவி வருந்துவாள் என்பதாம்.

உரங்கொள் சென்னி எனக் கூட்டி, வன்மை கொண்ட சென்னி எனவும், வரங்கொள் பொன்முடி எனக் கூட்டி கைகேயி வரத்தினுல் கொண்ட முடி எனவும் பொருள் கூறுவாரும் உளர்.

விளக்கம்

இச் செய்யுளில் தன் தம்பியாகிய பரதன் தனக்குக் கிடைத்த அரசாட்சி உரிமையை ஏற்று பொன்முடி புனைந்து அரசனுக வீற்றிருந்து அயோத்தியை ஆளாமல், தன்னைப் போலவே சடையை முடியாகக் கட்டிய செய்கையை எண்ணி மிகவும் ஏக்கங் கொள்கின்ற இராமபிரானின் உயர்ந்த பண்பாட்டை நினைந்து இரங்குகின்ற சீதையின் நிலைமை சொல்லப் படுகின்றது.

பரதன் தனக்குத் தாயார் வாங்கிக் கொடுத்த அரசுரிமையை வெறுத்துத் தன் அண்ணனுகிய இராமனை அழைத்து வந்து அரசாள வைப்பேன் என்ற உணர்ச்சியினுல் அள்ளப் பட்டு ஆவி பதறப் பதறப் புலம்பியவண்ணம் தன் அண்ணனைப் போலவே சடைமுடி தரித்து அவன் இருந்து வாழும் காட்டை அடைந்தான். இங்ஙனம் தன்னைத் தேடி வந்தடைந்த தன் தம்பியாகிய பரதனின் தவக்கோலத்தைக் கண்டவுடன் இராமன் ஏங்கிவிட்டான். தந்தையின் ஆணைப்படி அரசுரிமையைத் துறந்து காட்டில் இருந்து வாழும் தன் செயலைத் தன் தாயின் முயற்சியால், தந்தை உதவிய அரசுரிமையைத் துறந்து தன்னைப் போலவே சடைமுடி கட்டிய தவக்கோலத்துடன் தன்னைத் தேடிவந்த பரதனின் செயலுடன் ஒப்பிட்டுணர்ந்த இராமபிரான் செயலற்றுவிட்டான்.

"என் பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றே"

என தன் சிறிய தாயாராகிய கைகேசிக்குக் கூறிய ஆர்வ உரையால் பரதன் அயோத்தி அரசுரிமையை ஏற்று ஆளுவான் என்ற எண்ணம் இராமபிரான் உள்ளத்தில் இருந்ததென்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிகின்றேம். அங்ஙனம் அவர் எண்ணிய எண்ணத்தைச் சிதறடித்துத் தன் முன்னவனிலும் பன்மடங்கு தியாக உள்ளம் படைத்தவனாய் விளங்கிய பரதனின் செயலைக் கம்பர் துன்பமே உருவமாய் இருந்து உயிர்துடிக்கின்ற சீதையின் வாயிலாக எமக்குத் தெரிவிக்கின்றார். தன் தம்பியின் செயலை நினைந்து ஏங்கிச் செயலற்று நின்ற தன் தலைவனாகிய இராமபிரானையும், அவரைப்போலவே தவக்கோலத்துடன் துன்பமே உருவமாய்த் தொழுதவண்ணம் நிற்கும் பரதனையும், சீதாதேவியின் துணை யுடன் கம்பர் எமது மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்து கின்றார்.

தாய்உரைகொண்டு தாதை உதவிய தரணிதன்னை
நீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கி
போயினை என்றபோழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா

என, பரதனின் மேலான தியாகப் பண்பை பாராட்டிக் குகனை நின்று கம்பர் எழுப்பிய கவிதைக் குரலுடன்

உரங்கொள் தேமலர்ச் சென்னி உரிமைசால்
வரங்கொள் பொன்முடி தம்பி வினைந்திலன்
திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்கு

எனச் சீதையாக நின்று கம்பன் எழுப்பிய இக்கவிதைக் குரலை யும் ஒப்பிட்டு நோக்குக.

சிரித்த செய்கை

26. பரித்த செல்வ மொழியப் படருநாள்
அருத்தி வேதியர்க் கான்குல மீந்தவர்
கருத்தி னுசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைத்தழுஞ் செய்கையாள்.

கொண்டுகூட்டு: பரித்த செல்வம் ஒழிய படரும் நாள்,(இராமபிரான் காட்டிற்குப் போகின்றபொழுது) அருத்தி வேதியர்க்கு ஆண் குலம் ஈந்து, அவர் கருத் தின் ஆசை(க்கு) கரை இன்மை கண்டு, இறை சிரித்த செய்கை நினைந்து, அழும் செய்கையாள்.

பொருள்

பரித்த - (பரம்பரை உரிமையாகப் பெற்றுத்தான்) தாங்கு வதற்கு உரிமையான, செல்வம் ஒழிய - அரசாட்சிச் செல்வம் (தம்மைவிட்டு) நீங்க, படரும் நாள் - (இராமபிரான் தந்தை யின் கட்டளைப்படி காட்டிற்குச்) செல்கின்ற நாளில், அருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர்க்கு – தானம் பெறுதலில் மிகவும் ஆசை பொருந்திய பிராமணருக்கு, ஆன்குலம் - பசு நிரைகளை (பசுக்கூட்டங்களை) ஈந்து - தானமாகக் கொடுத்து, அவர் - தானம் பெற்ற அந்தணர்களது, கருத்தின் - உள்ளத்தின்கண்ணே உள்ள, ஆசை- (கொடுத்த தானம் போதுமென்று அமையாமல் பின்னும் 'பெறவேண்டும் பெறவேண்டும் என எழுகின்ற) பேராசைக்கு கரையின்மை - எல்லையில்லாத தன்மையை, கண்டு - (அவர்களின் முகக்குறிப்பினால்) கண்டுகொண்டவராகிய இராமபிரான், இறை - சிறிது, சிரித்த - புன்னகை கொண்ட (புன்சிரிப்புக் கொண்ட) செய்கை – செயலை, நினைந்து - எண்ணி, அழும் - புலம்புகின்ற, செய்கையாள் - செய்கையை உடையாள்.

பொழிப்பு

பரம்பரை உரிமையாகப் பெற்றுத் தான் தாங்குதற்கு உரிய அரசாட்சிச் செல்வம் தம்மைவிட்டு நீங்க இராமபிரான் காட்டிற்குச் செல்லுகின்ற நாளில், தானம் பெறுதலில் மிகவுக் ஆசைகொண்ட அந்தணர்களுக்கு பசு நிரைகளைத் தானமாகக் கொடுத்தார். அப்பொழுது தானம் பெற்ற அந்தணர்கள் மகிழ்ச்சி கொள்ளாமல் மீண்டும் தானம் பெறவேண்டுமென்ற பேராசை உடையவர்களாய் இருப்பதை அவர்களின் முகக்குறிப்பினால் அறிந்து சிறிது புன்சிரிப்புச் செய்த செயலை எண்ணிச் சீதாதேவி வருந்துகின்றாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் காட்டிற்குச் செல்ல வழிக்கொண்ட இராமபிரான் தமக்கு உரிமையாக இருந்த பசுக்கூட்டங்களைப் பிராமணர்களுக்குத் தானம் செய்தபொழுது நிகழ்ந்த ஒரு செய்தியை எண்ணி வருந்துகின்ற சீதாதேவியின் நிலை சொல்லப்படுகின்றது.

நாட்டைத் துறந்து காட்டிற்கு ஏகும்போது அந்தணர்க்கு ஆநிரைகளைத் தானம் செய்த இராமபிரான் அவர்களின் பேராசையைக் கண்டதும் சிரிக்காமலிருக்க முடியவில்லை. அந்தணர்களிடத்தும் அறிஞர்களிடத்தும் பெருமதிப்புக் கொண்ட இராமபிரானது உள்ளத்திலும் நகைச்சுவையை ஊட்டக்கூடிய அளவிற்கு பசுக்கூட்டங்களைத் தானமாகப் பெற்ற அந்தணர்களின் பேராசைக் குணம் அமைந்துவிட்டது. இவர்களின் பேராசைப் பண்பைக் கண்டவுடன் வந்த சிரிப்பை அடக்கமுடியாமல் இராமபிரானும் சிறிது சிரித்துவிட்டார். அங்ஙனம் அவர் சிரித்த செயலை நேரிற் பார்த்த சீதாதேவி இப்பொழுது நினைத்து அழுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர் கருத்தின் ஆசைக் கரை இன்மை கண்டு
இறை சிரித்த செய்கை நினைந்தழும் செய்கையாள்''

எனக் கம்பன் இராமபிரானின் சிரிப்புடன் சீதாதேவியின் அழுகையையும் ஒன்றுபடுத்தி அத்துடன் அருத்தி வேதியரின் கருத்தின் ஆசைக் கரை இன்மையையும் கலந்து எமக்குப் புதியதோர் சிந்தனை விருந்தை அளிக்கின்றான். மதிப்பிற்குரிய அந்தணர்களின் பேராசைப் பண்பைக் கண்ட இராமபிரான் நாகரிகமாகத் தமக்கு வந்த சிரிப்பை அடக்க முயன்றும் முடியாத நிலையில் சிறிது சிரித்துவிட்டார் எனக்கூறி இராமபிரானின் பெருமைக் குணத்தையும் கம்பர் காப்பாற்றுகின்றார். இதனை ''இறை சிரித்த செய்கை'' எனக் கம்பர் குறிக்கின்றார். இறை - சிறிது என்னும் பொருளைத் தருகின்றது. எனவே புன்சிரிப்பு என்பதாம். இறை என்பதற்கு இராமபிரான் எனப் பொருள் கூறுவாரும் உளர். பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள் என வரும் தொடரால் இராமபிரான் என வருவித்து உரைக்கவேண்டி இருத்தலால் இறை என்பதற்கு இராமபிரான் எனப் பொருள் கொள்வதிலும் அடக்கமுடியாத நிலையில் சிறிய சிரிப்பு (புன்சிரிப்பு)க் கொண்டாரெனப் பொருள் கொள்ளுதலே பொருத்தமாகும்.

எனவே, அந்தணரின் பேராசையைக் கண்டு இராமபிரான் புன்சிரிப்புக் கொண்டபொழுது தனக்கு வந்த சிரிப்பை மிகுந்த பயபக்தியுடன் அடக்கிக் கொண்ட சீதாதேவியானவள் இப் பொழுது அச்சிரிப்பை எண்ணி அழுகின்றாள் என ஓர் குறிப்புப் பொருள் தோன்றுதல் காண்க.

மூரிவில் தழுவும் மேன்மை

27. மழுவின் வாயின மன்னரை மூவெழு
பொழுது நூறிப் புலவுறு புண்ணினீர்
மூழுகி னன்றவ மொய்ம்பொடு மூரிவில்
தழுவு மேன்மை நினைந்துயிர் சாம்புவாள்.

கொண்டுகூட்டு : இன மன்னரை மழுவின் வாய் மூவெழு பொழுது நூறி, புலவுறு புண்ணின் நீர் மூழ்கினன் (ஆகிய பரசுராமன்) தவம் மொய்ம்பு ஒடு மூரிவில் தழுவும் மேன்மை நினைந்து, உயிர் சாம்புவாள்.

பொருள்

இன மன்னரை - திரளான (கூட்டமான) அரசர்களை, மழுவின்வாய் - மழுப்படையின் முனையால் (கூர்மை பொருந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயால்) மூளமு பொழுது - இருபத்தொரு தலைமுறையாகவும் தொடர்ந்து, நூறி – அழித்து, புலவுறு புண்ணின் நீர் – (அங்ஙனம் அழித்த அரசர்களின் உடம்பிலேயிருந்து வழிகின்ற) புலால் நாற்றம் பொருந்திய இரத்தவெள்ளத்தில் (குருதியில்) மூழ்கினன் – மூழ்கியவனாகிய (முழ்கித் தருப்பணம் பண்ணின பரசுராமனின்) தவம் மொய்ம்பு ஒடு - தவத்தின் வலிமையோடு (ஆற்றலோடு) மூரிவில் - வலிமையையுடைய (அப்பரசுராமனின்) வில்லை (அவன் கொடுக்க வாங்கி) தழுவும் - கொண்ட, மேன்மை – (வீரம் மிகுந்த) மேம்பாட்டை, நினைந்து - எண்ணி, உயிர் சாம்புவாள் – (சீதாதேவி) உயிர் வாடுவாள்.

பொழிப்பு

திரளான அரசர்களை இருபத்தொரு தலைமுறை யளவும் தொடர்ந்து மழுப்படையினால் அழித்து, அழிந்த அரசர்களின் உடம்பிலேயிருந்து வழிகின்ற இரத்த வெள்ளத்திலே மூழ்கிய வனாகிய பரசுராமனின் தவ வலிமையோடு அவனின் வலிமை பொருந்திய வில்லையும் கொண்ட மேம்பாட்டை நினைந்து சீதா தேவி உயிர் வாடுவாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் அரசபரம்பரையை இருபத்தொரு தலைமுறை தொடர்ந்து தன் மழுவாயுதத்தால் அழித்து வெற்றி கொண்ட பரசுராமனின் பெருமிதத்தை அடக்கியருளும் இராமபிரானின் அருஞ் செயலை எண்ணி உயிர் வாடுகின்ற சீதாதேவியின் நிலைமை சொல்லப்படுகின்றது.

பரசுராமனின் தவவலிமையோடு அவனின் வில் வலிமை யையும் தனதாக்கிக் கொண்ட இராமபிரானின் எல்லையில்லாத ஆற்றலை எண்ணியவுடன் சீதாதேவி ஏங்கிவிட்டாள். பரசு ராமனை வென்ற இராமபிரானின் தலைவியாகிய தான் சிறை யிலிருந்து வருந்தும் செயலை எண்ணியவுடன் அவளால் பொறுக்க முடியவில்லை. பரசுராமனை வென்று பெரு வீரனாக விளங்கிய இராமபிரான் இன்னும் என் சிறையை மீட்க வந்திலர் என்பதே சீதாதேவியை வருத்தும் பெருந்துயராகும்.

பரசுராமன் : இவன் இருபத்தொரு தலைமுறையாகத் தொடர்ந்து மன்னர் குலத்தை மழுவால் அழித்த பெருவீரன். இவன் இராமபிரான், சீதாதேவியை மணஞ்செய்து அயோத் திக்கு மீண்டுவரும் பொழுது இராமபிரானுக்கு முன்வந்து தோன்றினன். தோன்றிய பரசுராமன் இராமபிரானை நோக்கி "நீ சீதையை அடைதற்காக வளைத்து ஒடித்த வில் சிவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். நான் வைத்திருக்கின்ற இந்த வில் திருமாலுடைய தாகும். இந்த வில்லை வளைப்பாயாக'' என்று இராமபிரானின் கையிற் கொடுத்தான். இராமபிரான், அவன் கொடுத்த வில்லை வளைத்துப் பாணம் தொடுத்தவண்ணம் அவனை நோக்கி ''நான் இவ்வில்லில் தொடுத்திருக்கும் அம்புக்கு இலக்கு என்ன'' வென்று கேட்டார். பரசுராமன் தான் பெற்றிருந்த தவவலிமை யாவற்றையும் இராமபிரான் தொடுத்த அம்புக்கு இலக்காகக் கொடுக்கச் சென்றான். தவக்கோலத்துடன் விளங்கிய பரசுரா மனைக் கொல்லுதல் நல்லதல்ல எனக் கருதிய இராமபிரான் அவன் ஆற்றிய தவ வலிமையைத் தன் அம்புக்கு இரையா கக் கொண்டு அவனைக் கொல்லாது செல்ல விடுத்தான் என்பது வரலாறாகும்.

மழுவின் வாய் இன மன்னரை என்னும் தொடரை மழுவின் வாளினின் என்றும், மழுவின் வாளினன் என்றும் பாடம் கொள்வாரும் உளர்.

இந்திரன் செம்மல்

28. ஏக வாளியவ் விந்திரன் செம்மன்மேல்
போக வேவி யதுகண் பொடித்தாள்
காக முற்றுமொர் கண்ணில வாகிய
வேக வென்றியைத் தன்றலை மேற்கொள்வாள்.

கொண்டுகூட்டு: அஇந்திரன் செம்மல் மேல்போக ஏக வாளி ஏவி அது (அவ்வாளி) கண் பொடித்த நாள், காகம் முற்றும் ஓர் கண் இல ஆகியவேகம் வென்றியை தன் தலைமேல் கொள்வாள்,

பொருள்

அ இந்திரன் செம்மல் மேல் - காகத்தின் உருவங்கொண்டு வந்த இந்திரன் மைந்தனாகிய சயந்தன்மேல், போக-(அவனைத் துரத்திச்) செல்லும்படி, ஏக வாளி - ஒப்பற்ற ஓர் அம்பை, ஏவி – செலுத்தி, அது - அங்ஙனம் செலுத்திய அம்பானது, கண் பொடித்த நாள் – (காக்கை உருக்கொண்ட சயந்தனின்) கண்ணைக் கெடுத்த காலத்தில், காகம் முற்றும் - (குற்றவாளி யாகிய காகத்திற்கு (சயந்தனுக்கு மட்டுமன்றி) காகங்கள் எல்லாவற்றிற்கும்(ஓர் கண் இல ஆய - ஓர் கண் இல்லாமற் போன, வேக வென்றியை - ஆற்றல் வாய்ந்த வெற்றியை, தன் தலைமேல் கொள்வாள் – தன் தலையின்மேல் வைத்து (மேலாக மதித்து)க் கொண்டாடுவாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

காகத்தின் உருவங் கொண்டுவந்த இந்திரன் மைந்தனாகிய சயந்தன் மேல் அவனைத் துரத்திச் செல்லும்படி ஓர் அம்பை (இராமபிரான்) செலுத்த அந்த அம்பானது காக்கை உருவங் கொண்ட சயந்தனின் கண்ணைக் கெடுத்தபொழுது காகங்கள் எல்லாவற்றிற்கும் ஓர் கண் இல்லாமற் செய்த ஆற்றல் வாய்ந்த வெற்றியை மேலாக மதித்துச் சீதாதேவி கொண்டாடுவாள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் காக உருக்கொண்ட இந்திரன் மைந்தனாகிய சயந்தனின் கண் ஒன்றைக் கெடுத்து அவன் செய்த பிழையைப் பொறுத்தருளிய இராமபிரானின் வெற்றியைக் கொண்டாடுகின்ற சீதாதேவியின் நிலைமை சொல்லப்படுகின்றது.

இராமபிரானும் சீதாபிராட்டியாரும் சித்திரகூட பர்வதத்தில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது இந்திரன் மைந்தனாகிய சயந்தன் தேவ உருவத்தை மறைத்துக் காக உருவம் கொண்டு வந்து இராமபிரான் மடியின்மேல் உறங்கிக் கொண்டிருந்த சீதாதேவியாரின் அழகிய மார்பிலே தனது அலகினைக் குத்தினான். அவன் செயலைக் கண்ட இராமபிரான் மிகுந்த சீற்றங்கொண்டார். அங்ஙனம் கொண்ட சீற்ற மிகுதியால் பக்கத்தில் கிடந்த ஒரு துரும்பை எடுத்து அதில் பிரமாத்திரத்திற்குரிய மந்திரத்தைச் சொல்லிப் பதித்து அந்தக் காகத்தைக் கொல்லும் வண்ணம் அதனைச் செலுத்தினார். அந்தப் பிரமாத்திரம் காக உருக்கொண்ட சயந்தனைத் துரத்திச் சென்றது. அவன் மூன்று உலகங்களிலும் உள்ளவர்களிடம் சென்று தன்னைக் காப்பாற்றும் வண்ணம் முறையிட்டான். ஒருவரும் அவனைக் காப்பாற்ற முன்வந்திலர். முடிவில் அவன் இராமபிரானை வணங்கித் தன் பிழையைப் பொறுத்தருளும் வண்ணம் வேண்டினான். இராமபிரான் காக உருக்கொண்ட அவன்மேல் அருள் சுரந்து அவனின் தலையைக் கொய்யாமல் ஒரு கண்ணைக் கெடுக்கும் வண்ணம் பிரமாத்திரத்திற்குக் கட்டளை இட்டுக் காக உருக்கொண்ட சயந்தனைக் கொல்லாது விடுத்தார் என்பது வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் குற்றம் செய்த இந்திரன் மகனைத் தண்டித்து அடக்கிய இராமபிரான் தன்னைச் சிறைப்படுத்தித் துன்பம் செய்யும் இராவணனை அடக்கித் தன்னை மீட்டருள்வார் என்பதே சீதையின் கருத்தாகும்.

இந்திரன் காதன்மேல் என்பதும் பாடம்.

உணர்வு ஓய்தல்

29. வெவ்வி ராதனை மேல்வருந் தீவினை
வவ்வி மாற்றருஞ் சாபமு மாற்றிய
அவ்வி ராமனை யுன்னித்தன் ஞருயிர்
செவ்வி ராதுணர் வோய்ந்துடல் தேம்புவாள்.

கொண்டுகூட்டு: வெவ்விராதனை மேவு அருந்தீவினை வவ்வி, (போக்கி) மாற்று அரும் சாபமும் மாற்றிய அ(வ்) இராமனை உன்னி, (சீதாதேவியானவள்) தன் ஆருயிர் செவ் இராது உணர்வு ஓய்ந்து, உடல் தேம்புவாள்.

பொருள்

வெவ் விராதனை - கொடுமை மிகுந்த (அரக்கனுகிய) விராதன் என்பவனை, மேவு - சேர்ந்த (அடைந்த), அருந்தீவினை - போக்க முடியாத (கொடிய) பாவச்செயலை, வவ்வி - நீக்கி அருளி, மாற்று அரும் - ஒருவராலும் போக்கமுடியாத (அவனது) சாபமும் - சாபத்தையும், மாற்றிய - போக்கி அருளினன், அ(வ்) இராமனை - (அருள் வள்ளலாகிய) அந்த இராமபிரானின் பெருங்கருணை உள்ளத்தை, உன்னி - நினைந்து, தன் ஆருயிர் - தனது அரிய உயிர், செவ் இராது - செவ்விதாய் (நல்லநிலையில்) நில்லாமல், உணர்வு ஓய்ந்து - அறிவு சோர்ந்து (ஒடுங்கி) உடல் தேம்புவாள் - உடம்பு வருந்துவாள்.

பொழிப்பு

கொடுமை மிகுந்த அரக்கனுகிய விராதன் என்பவனைச் சேர்ந்துள்ள கொடிய பாபச் செயலினை நீக்கியருளியதோடு அமையாது, அவனது சாபத்தையும் போக்கி அவனை உய்யக் கொண்ட இராமபிரானின் பெருங்கருணை உள்ளத்தை நினைந்த சீதாதேவியானவள், தனது அரிய உயிர் நல்ல நிலையில் இல்லாமல் அறிவு சோர்ந்து உடல் சோர்ந்து வருந்துவாள் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச் செய்யுளில் முன்புதுன்புரு என்னும் கந்தருவனுக இருந்து குபேரனது சாபத் தால் அரக்கனுகித் திரிந்து அளவில் லாத பாபச் செயல்களே ஆற்றிய விராதன் என்பவனே உய் வித்த இராமபிரானின் பெருங்கருணை உள்ளத்தை நினைந்து உயிர் தளர்ந்து வாடுகின்ற சீதாதேவியின் நிலை சொல்லப் படுகின்றது.

தீவினையாளனுகிய விராதனின் குற்றங்களேப் பொறுத்து உய்யக் கொண்ட கருணை வள்ளலாகிய இராமபிரான் இலக்கு மணனைக் கொடுஞ் சொற்களால் வைதுரைத்த தனது குற்றத் தையும் பொறுத்துத் தன்னை மீட்கும் வண்ணம் வாராது இருக்கின்ருரே என்பதை எண்ண எண்ண சீதையின் உயிர் நிலேதளர்ந்து விடுகின்றது என்பதே குறிப்பாகும்.

விராதன் : இவன் துன்புரு என்னும் பெயருடைய கந்தருவனுவான். குபேரன் இட்ட சாபத்தால் விரா தன் என்னும் அரக்கனுக மாறிக் கொடுஞ் செயல்களே ஆற்றித் திரிந்தான். இராமபிரான் சீதாதேவியுடனும், இலக்குமணனுடனும் காட் டில் செல்லும் பொழுது விராதன் என்பவன் இவர்களே எதிர்த்துச் சீதாதேவியைத் தூக்கிச் சென்ருன். இராம இலக்கு மணர்கள் அவனேத் தடுத்து எதிர்த்தார்கள். அவன் சீதா தேவியை விடுத்துத் தன்னே எதிர்த்த இராம , இலக்குமணர் களேத் தூக்கிச் சென்ருன். இராம இலக்குமணர்கள் அங்ஙனம் தூக்கிச் சென்ற விராதனின் தோள்களே வெட்டி அவனேக் கொன்ருர்கள். அவன் தன் பிறப்பின் வரலாற்றை உணர்த்தி இரந்து வேண்டிக் கொண்டபடி அவனின் உடம்பைப் பள்ளம் வெட்டிப் புதைத்துச் சென்ருர்கள். அவ்வரக்கன் இராம இலக்குமணர்களேத் தோளின்மேல் தூக்கிச் சென்றபொழுதும், இராமபிரான் அவனே உதைத்துப் பள்ளத்தில் தள்ளிய பொழு தும், அவரின் திருவடிகள் பட்ட பேற்றினுல் தீவினைகளும் ஒழிந்து சாபமும் நீங்கி முன்போலத் துன்புரு என்னும் கந்தரு வனுய்த் தன்னுலகம் சென்று இன்பம் அடைந்தான் என்பது ஆரணிய காண்ட வரலாருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. திரிசடைக்குச் சீதை கூறும் செய்திகள்

[30—35 செய்யுள்]

மேற்கூறிய வண்ணம் துன்பத்திலும் வெந்து துடித்த சீதாதேவியானவள், தன் அன்புத் தலைவனின் பண்புகளை எண்ணியெண்ணி ஏங்கி அழுதவண்ணமாய் இருந்தாள். அப் பொழுது கள்ளுண்டுகளித்த காவல் அரக்கியர்கள் எல்லோரும் கண் உறங்கி விட்டார்கள். இனிய சொல்லும், திருந்திய பண்பும் இயல்பாகவே கொண்ட திரிசடை என்பவள் உறங்காமலிருந்தாள். அவள் அருள் வள்ளலாகிய இராமனிடம் அடைக்கலம் புகுந்த அறிஞனாகிய விபீடணனின் அருந்தவப் புதல்வியாவாள். அவள் சீதாதேவியின்மேல் தாயினுமினிய அன்பு கொண்டவளாய் இருந்தாள். சீதாதேவி, தன்னைப்போலவே உறக்கமில்லாமல் இருந்து தனக்காக வருந்துகின்ற திரிசடையை நோக்கி "நீ மிகவும் தூய்மையான குணத்தைக் கொண்டவள், எனது உயிர்த்தோழியாக இருக்கின்றாய், நான் இப்பொழுது பொருள் பொதிந்த ஓர் நல்லுரையை உனக்குச் சொல்லப்போகின்றேன்".

"அழகு பொருந்திய உடுக்கைபோலும் இடையினை உடையாய்! எனது புருவம், கண், நெற்றி முதலிய உறுப்புக்கள் இடப்பக்கமாகத் துடிக்கின்றன. இவைகள் இடப்பக்கமாகத் துடிக்கின்ற குறியால் எனக்கு ஏற்பட இருப்பது என்னவென்று அறியேன். எனது உறுப்புக்கள் நன்மையை நல்கத்தான் இடப்பக்கமாகத் துடிக்கின்றதோ அல்லது யான் செய்த தீவினையின் பயனைக் கொடுத்து வருத்தத்தான் துடிக்கின்றதோ அறியேன். என்மேல் தாயினுமினிய தண்ணளி கொண்டவளே! என் தலைவராகிய இராமபிரான் மிதிலை மாநகரத்தின் மேல்மாடத்திலே என்னை எதிர்ப்பட்டபொழுது கண், தோள் முதலிய என் உறுப்புக்கள் இடப்பக்கமாகத் துடித்தன. இப் பொழுதும் அதைப்போலவே என் கண் முதலிய உறுப்புக்கள் இடப்பக்கமாகத் துடிக்கின்றன. இத்துடன் இன்னுமொரு செய்தியை உனக்குக் கூற மறந்துவிட்டேன். அறத்தைப் பாதுகாக்கும் என் ஆருயிர்த் தலைவன், அயோத்தி அரசுரிமை முழுவதையும் தன் அடுத்த தம்பியாகிய பரதனே ஆளும் வண்ணம் அளித்து, அரச வாழ்வைத் துறந்து வனம் புகுந்த காலத்தில் என் கண் முதலிய உறுப்புக்கள் வலப்பக்கமாகத் துடித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான் வருந்தி அழுவதைக்கண்டு அழவேண்டாமென்று எனக்காக இரங்கும் அன்புடையாய்! நஞ்சைப்போலக் கொடிய வஞ்சன இராவணன் தனியாக இருந்த என்னை வஞ்சித்துக் கவரவந்த நாளில் எனது கண் முதலிய உறுப்புக்கள் வலப் பக்கமாகவே துடித்தன. அவைகள் இப்பொழுது இடப்பக்க மாகவே துடிக்கின்றன. இந்த நிமித்தத்தினால் எனக்கு இனி வர இருக்கும் செயல் எதுவோ ! ஆராய்ந்து கூறுவாயாக" (என்று சீதாதேவி கேட்டாள்)

திரிசடை ஒழிந்த அரக்கியர் துயிலல்

30. இருந்தன டிரிசடை யென்னு மின்சொலில்
திருந்திஞ ளொழியமற் றிருந்த தீவினை
அருந்திற லரக்கிய ரல்லு நள்ளுறப்
பொருந்தலுந் துயினறைக் களிபொ ருந்தினர்.

கொண்டுகூட்டு: (சீதாபிராட்டி) இருந்தனள். நள் அல்லு உறப் பொருந்தலும் திரிசடை என்னும் இன் சொல்லின் திருந்தினள் ஒழிய, மற்று இருந்த தீவினை அருந்திறல் அரக்கியர், துயில் நறை களி பொருந்தினர்.

பொருள்

இருந்தனள் - மேற்கூறியவாறு வருந்திய சீதாதேவி இருந்தாள், நள் அல்லு உறப் பொருந்தலும் -- நடு இராப் பொழுது வந்து அடைந்த அளவில், திரிசடை என்னும் -- திரிசடை என்று சொல்லப்படுகின்றவளும், இன் சொல்லின் - இனிய சொல்லைப் பேசுகின்றவளுமாகிய, திருந்தினள் - திருந்திய பண்புவாய்ந்த ஒருத்தி மட்டும், ஒழிய - (உறக்கம்) தவிர்ந்திருக்க, மற்று இருந்த – இதன் மேல் அங்கு (சீதாதேவிக்குக்) காவலாக இருந்த, தீவினை -- தீய செயல்களையும், அருந்திறல்-- அரிய (வெல்லமுடியாத) வலிமையையும் உடைய, அரக்கியர்-- அரக்கியர்கள் (இராட்சதிகள்) எல்லோரும், துயில் பொருந்தினர் - உறக்கத்தையும் (அத்துடன்) நறைகளி – கள்ளுண்டதினால் ஆகிய களிப்பையும், பொருந்தினர் - உடையவராஞர். எனவே துயில் மயக்கத்துடன் கள்ளுண்ட மயக்கமும் சேர உறங்கிவிட்டார்கள் என்பதாம்)

பொழிப்பு

மேற்கூறியவாறு சீதாதேவி இருந்தாள். அப்பொழுது நடு இராப்பொழுதாய் விட்டது, இன்சொல்லும், திருந்திய பண்பு முடைய திரிசடை என்னும் அரக்கி ஒருத்தியை மட்டும் தவிரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாதேவிக்குக் காவலாயிருந்த மற்றைய அரக்கியர்கள் எல்லோரும் கள் உண்ட களிப்போடு துயில் மயக்கமும் சேர்ந்ததினால் உறங்கிவிட்டார்கள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் விபீடணன் மகளாகிய திரிசடை மட்டும் உறங்காமலிருக்க மற்றைய காவல் அரக்கியர்கள் எல்லோரும் உறங்கிவிட்டார்கள் என்னும் செய்தி சொல்லப்படுகின்றது.

சீதாதேவியின் துன்பத்தைக் கண்டு உள்ளம் உருகுகின்றவளாகிய திரிசடை மட்டும் சீதாதேவியைப் போலவே உறக்கம் நீத்து இருந்தாள் என்பதைக் கம்பர் கூறி மகிழ்கின்றார். திரிசடையின் உள்ளம் சீதையின் துன்பநிலையை எண்ணி இரங்கும் இயல்புடையதாய் இருந்தமையால் நடு இராப்பொழுது வந்தும் அவளும் உறங்காமல் இருந்தாள் என்பதாம். இதனை,

''திரிசடை என்னும் இன்சொலின் திருந்திழை''

எனக் கம்பர் பாராட்டிக் கூறுவதால் உணர்க. இனிய பண்புகள் வாய்ந்த விபீடணனின் மகளாதலால் அவளிடத்தில் மற்றைய அரக்கியரிடம் இல்லாத இன்சொல்லும், திருந்திய பண்பாடும் காணப்பட்டன. என்பதைக் கம்பர் நினைவூட்டுகின்றார். இன்சொல்லால் சீதாதேவிக்கு ஆறுதல் கூறினாலும் மனத்தில் அரக்கியர் குலத்துக்குரிய வஞ்சனை எண்ணம் கொண்டவளாய்த் திரிசடை நடிக்கின்றாளோ எனப் படிப்பிக்கின்றவர்கள் கருதா வண்ணம் **இன்சொலின்** என்றளவில் அமையாது **திருந்திழை** எனவும், கம்பர் அடைமொழி அமைத்துக் கூறிய திறன் பாராட்டற்குரியதாகும்.

இருந்தனள் என இப்பாட்டில் வரும் முதற்சொல்லை, முன் செய்யுட்களில் வந்துள்ள மெலிந்தாள், அறியாள் முதலிய முற்றுக்களை எச்சமாக்கி மெலிந்தாளாய், அறியாளாய் இருந்தாள் எனச் சேர்த்து முடித்துக்கொள்க. இனி இருந்தனள் என்பதைச் சீதைக்கு நல்லவளாக இருந்த திரிசடை எனப் பொருள் கூறுவாரும் உளர். **துயில் நறைக் களி பொருந்தினர்** என்னுந் தொடரை துயில் பொருந்தினர், நறைக்களி பொருந்தினர் எனக் கொண்டுகூட்டிப் பொருள் உரைக்கப் பட்டது. நறை - கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயினும் இனியவள்

31. ஆயிடைத் திரிசடை யென்னு மன்பினுல்
தாயினு மினியவ டன்னை நோக்கினுள்
தூயைநீ கேட்டியென் றுணைவி யாமெனு
மேயதோர் கட்டுரை விளம்பன் மேயினுள்.

கொண்டுகூட்டு: ஆய் இடை, (சீதாதேவி) திரிசடை என்னும் (பெயரை உடைய) அன்பினுல் தாயினும் இனியவள் தன்னை நோக்கினுள், (ஆய்) நீ தூயை என் துணைவி ஆம் (யான் கூறுவதை) கேட்டி (கேட்பாயாக) எனு, மேயது ஓர் கட்டுரை (யை) விளம்பல் மேயினுள்.

பொருள்

ஆய்இடை - (மேற்கூறிய வண்ணம் காவலரக்கியர்கள் துயின்ற) அப்பொழுது, திரிசடை என்னும் - திரிசடை என்னும் பெயரையுடையவளும், அன்பினுல் – (தன்மேல் கொண்ட) உரிமை அன்பினுல், (அன்புப் பெருக்கினுல்) தாயினும் இனிய வள் தன்னை - தாயைப் பார்க்கிலும் மேலானவளாய் (நல்ல வளாய்) விளங்குகின்றவளுமாகிய அவளை - நோக்கினுள் .. நோக்கி (பார்த்து) நீ தூயை – நீ தூய்மையான (பரிசுத்த மான) குணத்தைக் கொண்டுள்ளாய் (கொண்டவள்), என் துணைவி ஆம் – எனக்குத் (உயிர்த்) தோழியாவாய், (தோழி யாக இருக்கின்றாய்) கேட்டி எனு - (யான் கூறுவதை) கேட்பா யாக என்று கூறி, மேயது ஓர் கட்டுரை - பொருத்தமானதும், பொருள் பொதிந்ததுமான ஓர் நல்லுரையை, விளம்பல் மேயினுள் - (சீதாதேவி) கூறத்தொடங்கினுள்.

பொழிப்பு

காவல் அரக்கியர்கள் துயின்ற அந்நேரத்தில், தன்மேல் தாயினும் சிறந்த உரிமை அன்பு கொண்டவளாகிய திரிசடை யைப் பார்த்து, நீ மிகவும் தூய்மையான குணத்தைக் கொண் டவள். எனது உயிர்த் தோழியாக விளங்குகின்றாய். யான் கூறு வதைக் கேட்பாயாக என்று சொல்லிப் பொருத்தமானதும், பொருள் பொதிந்ததுமான ஓர் நல்லுரையைச் சீதாதேவி கூறத் தொடங்கினுள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தன் ஆருயிர்த் தோழியாகிய திரிசடை யிடம் தனக்குத் தோன்றிய நன்னிமித்தத்தைச் சமயம் நோக் கிக் கூறுகின்ற சீதாதேவியின் அரிய பண்புகளைக் காண்கின் றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிசடை சீதாதேவிமேற் கொண்டுள்ள அன்பின் அகலத்தையும், தூய்மையையும் எண்ணியெண்ணி இன்பம் உய்கின்ற கம்பர், திரிசடை என்னும் அன்பினுள் ''தாயினும் இனியவள்'' எனத் திரிசடையைப் பாராட்டி உரைக்கின்றார். திரிசடை சீதாதேவியோடு ஒத்த இளமைப் பருவமுடையவளாயிருந்தும், துன்பத் தீயில் குளித்தும், இரக்கமில்லாத அரக்கியர்களால் அச்சுறுத்தப்பட்டும், அலமந்து ஆதரவு இல்லாமல் ஆவி வெந்து துடிக்கின்ற சீதாதேவியின் அல்லலைக் கண்டதும் அன்புத் தாயாக மாறிவிட்டாள். இன்பக் காலத்தில் சீதாதேவியின் தாயார் காட்டிய அன்புப் பெருக்கைப் பார்க்கிலும், துன்பக்காலத்தில் திரிசடை, சீதாதேவியின் மேற் காட்டுகின்ற அன்புப் பெருக்கின் அகலத்தைத் தாயினும் இனியவள் என்ற தொடரில் கம்பர் அமைத்துக் காட்டியுள்ளார்.

அரக்கர் குலத்தில் பிறந்தவளாயினும், அறத்தையும், அன்பையும், திருந்திய பண்பையும் வளர்க்குந் தாய்போல விளங்குகின்ற திரிசடையின் தெய்வக்குணத்தை விளக்க வந்த கம்பர், கற்புத் தெய்வமாகிய சீதாதேவியின் மொழிகளால் எமக்கு மொழிகின்றார்.

''தூய நீ கேட்டி என் துணைவி''

என வருந் தொடர்களை நோக்குக.

வருவது ஓர் கிலேன்

32. நலந்துடிக் கின்றதோ நான்செய் தீவினைச்
சலந்துடித் தின்னமுந் தருவ துண்மையோ
பொலந்துடி மருங்குலாய் புருவங் கண்ணுதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன்.

கொண்டுகூட்டு: பொலம்துடி மருங்குலாய்! (எனது) புருவம் கண் நுதல் வலம் துடிக்கின்றில, (இடம் துடிக்கின்றன) வருவது ஓர்கிலேன், (இவை) நலம் துடிக்கின்றதோ (அன்றி), நான் செய்தீவினை சலம்துடித்து இன்னமும் (தீங்கு) தருவது உண்மையோ.

பொருள்

பொலம்துடி மருங்குலாய் - அழகு பொருந்திய உடுக்கை போலும் இடையினை உடையாய், (எனது) புருவம் - புருவமும். கண் - கண்ணும், நுதல் - நெற்றியும், வலம் துடிக்கின்றில - வலப்பக்கமாக துடிப்பனவல்ல (இடப்பக்கமாகத் துடிக்கின்றன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது - (இவ்வகை புருவமும், கண்ணும், நெற்றியும் இடப் பக்கம் துடிக்கின்ற குறியால்) இனி வருகின்ற பயனை, ஓர் கிலேன் - (இன்னதென்று) அறியேன், நலம் துடிக்கின்றதோ- (எனது புருவம் முதலிய உறுப்புக்கள்) நன்மையைத் தரத்தான் துடிக்கின்றனவோ (அன்றி), நான் செய் தீவினை – (முற்பிறப் பில்) யான் செய்த பாபத்தின், சலம் – கொடுமை (வஞ்சனை), துடித்து – மிகுதிப்பட்டு (அதிகப்பட்டு), இன்னமும் - (இப் பொழுது தந்த துன்பத்தோடு அமையாமல்) இனிமேலும், தருவது உண்மையோ – (தீமையை) கொடுப்பது தான் உண் டாகுமோ?

பொழிப்பு

அழகு பொருந்திய உடுக்கை போலும் இடையினை உடை யாய்! (உடைய திரிசடையே) எனது புருவம், கண், நெற்றி என் னும் உறுப்புக்கள் இடப்பக்கமாகத் துடிக்கின்றன. இவ்வண்ண இடப்பக்கமாகத் துடிக்கின்ற குறியால் எனக்கு வருகின்ற பயனை இன்னதென்று அறிகிலேன். எனது உறுப்புக்கள் நன்மையைத் தரத்தான் இடப்பக்கமாகத் துடிக்கின்றதோ? அல்லது நான் முற்பிறப்பில் செய்த தீவினையின் கொடுமை மிகுதிப்பட்டு இப் பொழுது தந்த துன்பத்தோடு அமையாமல் இனிமேலும் துன் பத்தைத் தருவதுதான் உண்டாகுமோ? (சொல்வாயாக) என் பதாம்.

விளக்கம்

இச் செய்யுளிற் தனது இடப்புருவம், இடக்கண் முதலி யன துடித்த அறிகுறியினால் நன்மை உண்டாகுமோ தீமை உண்டாகுமோ என்பதை அறிய எண்ணிய சீதாதேவி தனது ஆருயிர்த் தோழியான திரிசடையிடம் கேட்கின்ற செய்தி சொல்லப்படுகின்றது.

துன்பமே உருவமாக இருந்து வருந்துகின்ற சீதாதேவி தனது இடப்புருவம், இடக்கண் முதலியன துடித்தலால் தன் துன்பம் தீர்வதற்கு வழி உண்டாகுமோ என எண்ணுகின்றாள். அங்ஙனம் எண்ணியவள் உள்ளத்தில் ஓர் ஐயம் எழுகின்றது. இங்ஙனம் இடக்கண் இடப்புருவம் முதலியன துடிக்கின்ற அறி குறியால் இன்னும் துன்பம் வரக்கூடுமோ என்ற எண்ணம் சீதாதேவியை வாட்டுகின்றது. தன்மேல் அன்பு நிறைந்த திரிசடையிடம் தன் உள்ளத்தில் எழுந்து ஊசலாடுகின்ற எண் ணத்தை உரைத்து உண்மைகாண முயல்கின்றாள். பொலந்துடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருங்குலாய் என திரிசடையைச் சீதாதேவி அழைக்கின்ற குரலில் சுரக்கின்ற அன்புணர்ச்சி எமக்கும் ஆர்வம் ஊட்டுகின்றது. இத்துடன் திரிசடையின் இளமைப் பருவமும் அழகும் புலனாகின்றன.

ஆயின் (அன்னையின்) நல்குவாய்

33. முனியொடு மிதிலையின் முதல்வன் முந்துநாள்
துனியறு புருவமுந் தோளு நாட்டமும்
இனியன துடித்தன வீண்டும் ஆண்டென
நனிதுடிக் கின்றன வாயின் நல்குவாய்.

கொண்டுகூட்டு : ஆயின் நல்குவாய் முனியொடு முதல்வன் மிதிலையில் முந்துநாள், துனி அறு புருவமும், தோளும் நாட்டமும், ஆண்டு இனியன துடித்தன என ஈண்டும், நனி துடிக்கின்றன.

பொருள்

ஆயின் நல்குவாய் – (என்மேல்) தாயினுமினிய தலையளி (பேரன்பு) செய்பவளே, **முனியொடு** – விசுவாமித்திர முனியுடன், **முதல்வன்** – என் தலைவனுகிய இராமபிரான், **மிதிலையில் முந்துநாள்** – மிதிலைமாநகரத்தில் என்னை எதிர்ப்பட்ட பொழுது, **துனி அறு** – குற்றமற்ற, (எனது) **புருவமும் தோளும் கண்ணும்**, **ஆண்டு** – (என் தலைவனுகிய இராமபிரான் என்னை எதிர்ப்பட்ட) அப்பொழுது, **இனியன துடித்தன என** – இன்பத்தைத் தருவதற்கு அறிகுறியாக இடப்பக்கமாகத் துடித்தன போல, **ஈண்டும்** – இப்பொழுதும், **நனிதுடிக்கின்றன** – நன்றாக (அக்கண் முதலிய உறுப்புக்கள்) இடப்பக்கம் துடிக்கின்றன.

பொழிப்பு

என்மேல் தாயினுமினிய தண்ணளி உடையவளே! என் தலைவராகிய இராமபிரான் மிதிலைமாநகரில் என்னை எதிர்ப்பட்ட பொழுது எனது புருவம், தோள், கண் முதலிய உறுப்புக்கள் இடப்பக்கமாகத் துடித்தன. இப்பொழுதும் அதைப்போலவே புருவம் முதலிய உறுப்புக்கள் இடப்பக்கமாக மிகவும் துடிக்கின்றன. (காரணத்தைக் கூறுவாயாக என்பதாம்).

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியின் உள்ளத்திலே எழுகின்ற சிந்தனை சொல்லப்படுகின்றது. மிதிலைமாநகரத்தின் மேல்மாடத்திலே நின்று தன் தலைவனுகிய இராமபிரானைத் தான் எதிர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட பொழுது தனது கண் முதலிய உறுப்புக்கள் இடப்பக்க மாகத் துடித்ததினால் ஏற்பட்ட இன்பப் பேற்றை சீதாதேவி எண்ணுகின்றாள். இப்பொழுதும் முன்போலவே தனது கண் முதலிய உறுப்புக்கள் இடப்பக்கமாகத் துடிப்பதால் தனக்கு நன்மை வரக்கூடுமோ என்ற எண்ணமும் சீதாதேவியின் உள்ளத் தில் எழுந்துவிட்டது. இங்ஙனம் இன்ப உணர்ச்சி தோன்றிய வுடன் திரிசடையிடம் சொல்லி ஆராய முனைகின்ற சீதாதேவி யின் ஆர்வக்குரலில் கலந்து கம்பரும் ஆர்வம் உறுகின்றார்.

"முனியொடு மிதிலையின் முதல்வன் முந்து நாள்
துனியறு புருவமும் தோளும் நாட்டமும்
இனியன துடித்தன"

என, சீதாதேவி திரிசடையிடம் கூறுகின்ற குரலிலே கலந்துள்ள எழுச்சியை உணர்க. திரிசடையை ஆயின் நல்குவாய் எனச் சீதாதேவி கூறுகின்ற பாராட்டுரைகள் திரிசடைமேற் சீதா தேவி வைத்துள்ள பேரன்பைக் காட்டுகின்றன.

மகளிர்க்கு இடக்கண், இடப்புருவம் முதலியன துடித்தல் நன்னிமித்தமாகும். இதனை,

பல்லியும் பாங் கொத்து இசைத்தன
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே என்றும்,
நுண்ணேர் புருவத்த கண்ணும் ஆடும் என்றும்,
பூங்கண் இடமாடும்

என்றும் வரும் சங்கச் செய்யுட்களால் அறிக.

கான் புகுந்த நாள்

34. மறந்தனெ னிதுவுமோர் மாற்றங் கேட்டியால்
அறந்தரு சிந்தை யென்னுவி நாயகன்
பிறந்தபார் முழுவதுந் தம்பி யேபெறத்
துறந்துகான் புகுந்தநாள் வலந்து டித்ததே.

கொண்டுகூட்டு: இதுவும் ஓர் மாற்றம் (முன் சொல்ல) மறந்தனென் கேட்டியால் (சொல்கின்றேன் கேட்பாயாக) அறந்தரு சிந்தை (யையுடைய) என் ஆவி நாயகன், பார்முழுவதும் பிறந்த தம்பியே பெற (தான்) துறந்து, கான் புகுந்த நாள், (என் கண் முதலிய உறுப்புக்கள்) வலம் துடித்ததே.

பொருள்

இதுவும் ஓர் மாற்றம் - இந்த ஒரு சொல்லையும் (மறு மொழியையும்) மறந்தனென் – (முன் உனக்குச் சொல்ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்துவிட்டேன். கேட்டியால் - (இப்பொழுது கூறுகின்றேன்) கேட்பாயாக, அறந்தரு – அறத்தை (தருமத்தை)ப் பாதுகாக்கின்ற, சிந்தை - மனமுடையவனை, என் ஆவி நாயகன் - எனது ஆருயிர்த் தலைவன் (பிராண நாயகனாகிய இராமபிரான்), பார் முழுவதும் – நிலம் முழுவதையும் (அயோத்தியின் அரசுரிமைக் குட்பட்ட நிலம் என்பதாம்), பிறந்த தம்பியே பெற – (தன் பின் அடுத்துப்) பிறந்த தம்பியாகிய பரதனே பெறும் வண்ணம் (ஆளும்வண்ணம்) துறந்து - அரசவாழ்வை விடுத்து, கான் புகுந்த நாள் - வனத்திற்குச் செல்லும் காலத்தில் (வரும் பொழுது), வலம் துடித்ததே - எனது புருவம் முதலிய உறுப்புக்கள்) வலப்பக்கமாகத் துடித்தன.

பொழிப்பு

இந்த ஒரு மறுமொழியையும் நான் உனக்குக் கூற மறந்து விட்டேன். இப்பொழுது சொல்கின்றேன் கேட்பாயாக. அறத்தைப் பாதுகாக்கும் என் ஆருயிர்த் தலைவனாகிய இராமபிரான், அயோத்தி அரசுரிமை முழுவதையும் தன் அடுத்த தம்பியாகிய பரதனே ஆளும்வண்ணம் கொடுத்து, அரச வாழ்வைத் துறந்து, வனம் புகுந்த காலத்தில் எனது புருவம் முதலிய உறுப்புக்கள் வலப்பக்கமாகத் துடித்தன என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தனக்கு ஏற்பட்ட நன்னிமித்தம், தீய நிமித்தம் என்பவற்றைப்பற்றி ஆராய்கின்ற சீதாதேவியின் செயல் சொல்லப்படுகின்றது.

தனது கண் முதலிய உறுப்புக்கள் இடப்பக்கம் துடிப்பதினால் இனி வருவது நன்மையே என்ற எண்ணம் சீதாதேவியின் உள்ளத்தில் எழுந்துவிட்டது. அங்ஙனம் எழுந்த எண்ணத்தை நன்கு தெளிந்து கொள்வதற்காக முயல்கின்றாள். தன் தலைவனாகிய இராமபிரான் பரதனுக்கு நாடாளும் உரிமையைக் கொடுத்துக் காடேகப் புறப்பட்டபொழுது, தன் கண் முதலிய உறுப்புக்கள் வலப்பக்கமாகத் துடித்த தீய நிமித்தத்தைச் சீதாதேவி சிந்திக்கின்றாள். எனவே தன் கண் முதலிய உறுப்புக்கள் இடம் துடித்ததனால், தனக்கு இன்பம் ஏற்பட்டதையும் வலம் துடித்ததனால் தனக்குத் துன்பம் ஏற்பட்டதையும், திரிசடையிடம் சொல்லித் தன் எதிர்காலத்தை அறிய முயல்கின்ற சீதாதேவியின் ஆர்வத்துடிப்புப் புலனாகின்றது.

பிறந்த பார் முழுவதும் தம்பியே பெற
துறந்து கான் புகுந்தநாள் வலம் துடித்ததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே நம்பிக்கையின் அறிகுறி தோன்றுதல் காண்க.

பிறந்த பார் முழுவதும் என்பதற்கு பிறப்புரிமையால், தனக்கு உரிமையாக வந்த அரசுரிமை முழுவதையும் என உரை கூறுவாரும் உளர். பிறப்புரிமை என்பது இராமபிரான் தசரதச் சக்கரவர்த்திக்கு முதல் மகனாகப் பிறந்த உரிமையினால் அமைந்து கிடந்த அரசுரிமையைக் குறிக்கின்றது.

அடுப்பது யாது

35. நஞ்சனை யான்வனத் திழைக்க நண்ணிய
வஞ்சனை நாள்வலந் துடித்த வாய்மையால்
எஞ்சல வீண்டுதா மிடந்து டிக்குமால்
அஞ்சலென் றிரங்குதற் கடுப்பது யாதென்றாள்.

கொண்டுகூட்டு : அஞ்சல் என்று இரங்குவாய், நஞ்சனை யான் வனத்து வஞ்சனை இழைக்க நண்ணிய நாள், (எனக்கு) வலம் துடித்த வாய்மை ஆல் ஈண்டு தாம் எஞ்சல இடம் துடிக்கும் ஆல், அடுப்பது யாது என்றாள்.

பொருள்

அஞ்சல் என்று இரங்குவாய் – (யான் அழுவதைக் கண்டவுடன்) அச்சங்கொள்ள வேண்டாமென்று சொல்லி என்மேல் இரக்கம் கொள்பவளே, நஞ்சனையான் - நஞ்சுபோலக் கொடிய வனுகிய இராவணன், வனத்து – காட்டின்கண் யான் தனித் திருக்கும் பொழுது, வஞ்சனை இழைக்க - வஞ்சனையாகிய (கபடமான) செயலைச்செய்ய, நண்ணிய நாள் - (போலிச் சந்நியாசி வேடங்கொண்டு) (அருகில் வந்து) அடைந்தபொழுது, வலம் துடித்த - (எனது கண், தோள் முதலான உறுப்புக்கள்) வலப்பக்கமாகத் துடித்தன, வாய்மை - (இவை) உண்மையாகும், ஈண்டு – இப்பொழுது, தாம் - அந்தத்தோள், கண் முதலான உறுப்புக்கள், எஞ்சல - குறைவில்லாதனவாய், (மிகவும்) இடம் துடிக்கும் - இடப்பக்கமாகத் துடிக்கின்றன, அடுப்பது யாது - எனக்கு வருவதாகிய செயல் எதுவோ, என்றாள் – என்று கேட்டாள். (வாய்மையால், துடிக்குமால் என்னுந் தொடர்களில் வரும் ஆல் இரண்டும் அசைநிலையாகும்)

பொழிப்பு

யான் வருந்தி அழுவதைக் கண்டவுடன் அச்சங்கொள்ள வேண்டாமென்று சொல்லி எனக்காக இரங்கும் பண்புடையாய்! நஞ்சைப் போலக் கொடியவனுகிய இராவணன் யான் காட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்திருக்கும் பொழுது கபடமான செயலைச் செய்ய வந்த நாளில் எனது கண், தோள் முதலிய உறுப்புக்கள் வலப்பக்க மாகத் துடித்தன. இவை உண்மையாகும். இப்பொழுது அந்தக் கண், தோள் முதலான உறுப்புக்கள் இடப்பக்கமாகத் துடிக் கின்றன. இந்த நிமித்தத்தினால் எனக்கு வருவதாகிய செயல் எதுவோ என்று சீதாதேவி கேட்டாள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தனக்குத் தோன்றிய நிமித்தங்களால் வரப்போகும் எதிர்காலப் பயன்களை அறிய விரும்பிய சீதா தேவியின் மனநிலை சொல்லப்படுகின்றது.

கொடுமையே குணமாகக்கொண்ட இராவணன் வஞ்சனை யால் தன்னைக் கவர்ந்து செல்லும்வண்ணம் மாயச் சந்நியாச வேடத்துடன் வந்தபொழுது தனது கண் தோள் முதலிய உறுப்புக்கள் வலப்பக்கமாகத் துடித்த செயலைச் சீதாதேவி சிந்திக்கின்றாள்.

இங்ஙனம் சீதாதேவியின் சிந்தனையில் தோன்றிய எண்ணங் களைத் தூய்மைப்படுத்தி வழிகாட்டுபவள் திரிசடையே ஆவாள். எனவே, தன்தோள், கண் முதலிய உறுப்புக்கள் இடப்பக்க மாகத் துடிப்பதால் தனக்கு வர இருக்கும் ஆக்க அழிவுகளை அறிந்து கூறும்வண்ணம் அத் திரிசடையைச் சீதாதேவி அன் புரிமையோடு கேட்கின்ற ஆர்வக்குரலை அப்படியே கம்பர் எடுத்துக் கூறுகின்றார்.

''நஞ்சனையான் வனத்து இழைக்க நண்ணிய
வஞ்சனைநாள் வலம்துடித்த ஈண்டுதாம் இடம் துடிக்குமால்''

எனச் சீதாதேவி எடுத்து மொழிகின்ற குரலிற் கலந்தொலிக் கின்ற ஆர்வத் துடிப்பை அறிகின்றோம். அன்னையினும் இனிய வளாய்த் தன்மேல் இரக்கம்கொண்டு தனக்காக வருந்துகின்ற திரிசடையின் அருள் உள்ளத்தை நினைந்து ''அஞ்சல் என்று இரங்குவாய்'' எனச் சீதாதேவி ஆர்வத்துடன் அவளை அழைக் கின்ற ஈடுபாட்டைக் கம்பர் கூறி மகிழ்கின்றார்.

கொலையும், கொடுமையும் பூண்ட இராவணனை நஞ்சனை யான் எனக்கூறிய கம்பரின் உவமைத்திறன் போற்றத்தக்க தாகும்.

நஞ்சு—உவமானம். இராவணன்—உவமேயம் கொல் லுதலும், கொடுங்குணமும்—பொதுத்தன்மைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சிதாதேவியும் திரிசடையும்

[36—53 செய்யுள்]

எனது கண், தோள் முதலிய உறுப்புக்கள் இடந்துடிக் கின்றன, என்றுரைத்த சீதாதேவியின் ஆய்வுக்குரலைக் கேட்ட திரிசடை ஆவிதளிர்த்தாள். மங்கலமான செயல்கள் நிகழத் தக்க நிமித்தங்கள் இவையென மனம் மகிழ்ந்தாள். மகிழ்ந்த திரிசடை சீதாதேவியை நோக்கி, உன் ஆருயிர்த் தலைவனை நீ அடையப்போகின்றாய் ஐயமில்லை எனச் சொன்னாள். சொன்ன திரிசடை மீண்டும் சீதாதேவியை விளித்து, மின்னிடையாய்! பொன்னிறம் கொண்ட ஓர் வண்டு, இனிய நண்புடன் தானாகவே வந்து உன் காதில் இசை ஊதிச் செல்கின்றது. இங்ஙனம் பொன்வண்டு வந்துன் காதில் ஊதிய செயலை ஆராய்ந்து பார்த்தால், உன் ஆருயிர்த் தலைவன் அனுப்பிய தூதுவன் மிக அண்மையில் உன்னை வந்து காண்பான் என்னும் உண்மை புலனாகின்றது. அரக்கர்குலத் தலைவனாகிய இராவணனுக்கு அழிவு வந்துவிட்டதென்பதை நீ உணர்வாயாக.

வேல்விழியாய்! உறக்கமின்றி இருப்பதால் ஓர் கனவும் உனக்குத் தோன்றவில்லை. உறக்கங்கொண்ட யான் ஓர் பொருத்தமான கனாக்கண்டேன். நான் கண்ட கனவினால் உமக்கு நன்மையே விளையுமென்பது திண்ணம். சூரியன் தோன்றத் தவறினாலும் யான் கூறுகின்ற கனப்பயன் தவறாது நிகழும்.

குற்றமில்லாத கற்பினையுடையாய்! பெருமை பொருந்தியவனும், வேற்படையைக் கையிலே தாங்கியவனுமாகிய இராவணன், செந்நிறங் கொண்ட ஆடையை அணிந்து, தன் பத்துத் தலைகளிலும் எண்ணெய் பூசிக்கொண்டு, கழுதைகளும் பேய்களும் கலந்து பூட்டப்பட்ட தேரின்கண் ஏறி, தென்திசை நோக்கிச் சென்றான். இங்ஙனம் தென்திசை நோக்கிச் சென்ற இராவணனுடன் அவன் புதல்வர்களும் ஏனைய அரக்கர்களும் சென்றார்கள். இதுபோலவே, இராவணனின் அழிவுக்குக் காரணமான கொடிய அறிகுறிகள் பலவற்றைக் கண்டுள்ளேன்.

ஆண்மை மிக்கவனாகிய இராவணனால், நெய் முதலிய ஆகுதிப் பொருள்களைச் சொரிந்து வளர்க்கப்படுகின்ற ஓமத்தீக்கள் ஒங்கி எரியாமல் அவிகின்றன. ஓமம் வளர்த்த இடங்களில் எல்லாம் செந்நிறக் கறையான்கள் புற்றெடுத்து வாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. தூண்டாமணி விளக்குகள் ஒளிவீசுகின்ற தொன்மை யான இல்லம், விடியற்காலம் வீழ்ந்த இடியினால் தாக்குண்டு பிளந்தது. பெண் யானைகள் மதநீரைப் பொழிகின்றன. முரசப் பறைகள் அடிப்பார் இன்றியே முழங்குகின்றன. மின்னலைக் கொண்ட மேகக் கூட்டங்களே, இல்லாமலே அகன்ற ஆகாயம் அண்டமெல்லாம் அதிரும்வண்ணம் இடி இடிக்கின்றது. விண் மீன்கள் உதிர்ந்து வீழ்கின்றன. இராப்பொழுதிலும் சூரியன் பகல்போல ஒளியைப் பரப்புகின்றன். வீங்கிய தோள்களை உடைய வீரர்கள் அணிந்த கற்பக மாலைகள் புலால் நாற்றங் கமழ்கின்றன. இலங்காபுரியும் அதனைச் சூழ்ந்துள்ள மதில்களும் ஓர் நிலையில் நில்லாமல் சுழல்கின்றன. இலங்கையின் எல்லாத் திசைகளிலும் நெருப்புப்பற்றி எரிகின்றது. பார்த்த பக்கங்கள் எல்லாம் கந்தருவர்களின் பட்டினம் காணப்படுகின்றன. மங்கல கலசங்கள் வீழ்ந்துடைகின்றன. விளக்கின் ஒளியை இருள் சூழ்ந்து விழுங்குகின்றது. தோரணங்கள் ஒடிந்தன. போர் யானைகளின் தந்தங்கள் பொடிந்து வீழ்கின்றன. அந்த ணர்களால் வேதமந்திரம் சொல்லி வைக்கப்பட்ட நிறை குடங்களில் உள்ள நீர் கள்ளைப்போலப் பொங்குகின்றது. வெண் மதியை விண்மீன்கள் பிளந்துகொண்டு வெளித் தோன்றுகின் றன. மழைமுகில் இரத்தத்தைச் சொரிகின்றது. தண்டம், வாள் முதலிய படைக்கலங்கள் பெருமுழக்கத்துடன் தாமா கவே போர் புரிகின்றன. பெண்களின் மங்கல நாணில் உள்ள தாலிகள், அறுப்பார் ஒருவரும் இன்றியே அவர்களின் கொங் கைகளின்மேல் வீழ்கின்ற அற்புதச் செயலும் நிகழ்கின்றது. இராவணனின் மனைவியாகிய மண்டோதரியின் கூந்தல் மயிர்கள் நிலைமாறி வீழ்ந்தனவாய் நெருப்புப்பற்றி எரிந்ததினால், தீய நாற்றத்தை வீசுகின்றன. இங்ஙனம் நான் கண்ட தீய உற்பா தங்களால் இராவணன் அழிந்தொழிவான் என்பதில் ஐயமே இல்லையெனக் கூறிய திரிசடை மீண்டும் சீதாதேவியை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றாள்.

ஆண் சிங்கங்கள் இரண்டு, பெரிய மலையின்கண்ணே வாழும் புலிக்கூட்டத்தைத் தமக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டு இங்கே வந்து கூடின. அங்ஙனம் கூடிய சிங்கங்கள் அளவில்லாத மத யானைகள் வாழ்கின்ற அக்காட்டினைச் சுற்றி வளைத்துக்கொண்டனவாய் எதிர்த்து, அங்குள்ள மதயானை களைக் கொன்றொழித்தன. அவ்வனத்தில் இருந்த மயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும், பகைவரின் தாக்குதலே அறியாத அச் சிங்கங்களின் நகரத்தை அடைதற்குச் சென்றுவிட்டது. திருமகளானவள் இராவணனுடைய அரண்மனையில் நின்று, ஒரு விளக்கைத் தனது கையில் எடுத்துக் கொண்டு வீடணனுடைய அரண்மனையை அடைதலானுள். இங்ஙனம் திருமகளானவள் என் தந்தையாராகிய வீடணனின் அரண்மனையை அடைந்த அதே நிகழ்ச்சியை யான் கனவில் கண்டுகொண்டிருந்த நேரத்தில், என்னை நீ உறக்கத்திலிருந்து எழுப்பிவிட்டாய். அதனால் அக்கனவு முடியவில்லை என்று திரிசடை கூறினுள். திரிசடையின் கூற்றைக் கேட்ட சீதாதேவி, கைகூப்பித் திரிசடையை வணங்கிய வண்ணம் என் அன்னையே! அக்கனவின் குறையைக் காணும் பொருட்டு இன்னமும் துயில்வாயாக என வேண்டினுள்.

இயைந்த சோபனம்

36. என்றலுந் திரிசடை யியைந்த சோபனம்
நன்றிது நன்றெனு நயந்த சிந்தையாள்
உன்றுணைக் கணவனை யுறுத லுண்மையால்
அன்றியுங் கேட்டியென் றறைதன் மேயினுள்.

கொண்டுகூட்டு: என்றலும் இது நன்று நன்று சோபனம் என நயந்த சிந்தையாள், (ஆகிய திரிசடை சீதாதேவியை நோக்கி) உன் துணைக்கணவனை (நீ) உறுதல் உண்மை, அன்றியும் கேட்டி, என்று அறைதல் மேயினுள்.

பொருள்

என்றலும் – (மேற்கூறிய வண்ணம்) சீதாதேவி சொல்லுதலும், இது நன்று நன்று – இக்குறிகள் மிகவும் நல்லன, நல்லன, சோபனம் என - மங்கலமான (நன்மையான) காரியங்கள் நிகழப் போகின்றன என்று (தனக்குள் கூறி) நயந்த சிந்தையாள் - (சீதாதேவிக்கு வரப்போகின்ற நன்மைகளை எண்ணி) விருப்பம்கொண்ட மனத்தையுடையவளாகிய திரிசடை என்பவள் (சீதாதேவியைப் பார்த்து) உன் துணைக்கணவனை – உனக்கு உயிர்த்துணைவனுக விளங்கும் உன் கணவனை (கொழுனனை) இராமபிரானை, உறுதல் - (நீ) அடைதல், உண்மை - தவறாத உண்மையாகும் அன்றியும் - இதுமட்டும் அல்லாமல், கேட்டி - (யான் கூறுகின்ற) மற்றைய செய்திகளையும் கேட்பாயாக, என்று – என்று சொல்லி, அறைதல் மேயினுள் - (திரிசடை) சொல்லத் தொடங்கினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

மேற்கூறிய வண்ணம் சீதாதேவியார் சொல்லுதலும், இக் குறிகள் மிகவும் நல்லன, மங்கலமான காரியங்கள் நிகழப் போகின்றன, என்று தனக்குள் கூறி விருப்பங்கொண்ட மனத்துடன் விளங்கிய திரிசடையானவள் சீதாதேவியைப் பார்த்து, உன் உயிர்த்துணைவனுக விளங்கும் இராமபிரானே நீ அடைதல் திண்ணம். இதுமட்டுமன்றி யான் கூறுகின்ற மற்றைய செய்திகளையும் கேட்பாயாக என்று திரிசடை சொல்லத் தொடங்கினள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவி கூறிய நிமித்தங்களின் நன்மைகளை உணர்ந்த திரிசடையின் சிந்தனைக்குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவி கூறிய நிமித்தங்களில் அமைந்து கிடக்கும் நன்மைகளை உணர்ந்த திரிசடையானவள்,

''இயைந்த சோபனம் நன்று இது நன்று எனை''

என்று மிக ஆர்வக்குரல் எழுப்பிச் சீதாதேவியுடன் உரையாடத் தொடங்குகின்றாள். தன் ஆருயிர்த் தலைவனான இராமபிரானை அடையவேண்டும் என்ற எண்ணத்தினால், ஆவி தாங்கியிருக்கும் சீதாதேவியின் உளநிலையை உணர்ந்த திரிசடையானவள் நிமித்தங்களால் ஏற்படும் நன்மைகளை விரித்துக்கூறுமல்,

''உன் துணைக்கணவனை உறுதல் உண்மையால்''

என முதற்கண் இராமபிரானைச் சீதாதேவி அடைதலாகிய மங்கலச் செய்தியை எடுத்துக்கூறி அதனால் சீதாதேவியின் உள்ளத்தில் புதியதோர் எழுச்சியைத் தோற்றுவித்துப் பின் தனது கருத்துக்களைத் தொடர்ந்து கூறும் திறமை பாராட்டற்குரியதாகும்.

பொன்னிறத் தும்பி

37. உன்னிறம் பசப்பற வுயிரு யிர்ப்புற
இன்னிறத் தென்னிசை யினிய நண்பினால்
மின்னிற மருங்குலாய் செவியின் மெல்லவோர்
பொன்னிறத் தும்பிவந் தூதிப் போயதால்.

கொண்டுகூட்டு : மின் நிற மருங்குலாய் ஓர் பொன் நிறத் தும்பி இனிய நண்பினால் வந்து உன் நிறம் பசப்பு அற, உயிர் உயிர்ப்பு உற, இன் நிறத் தென் இசை உன் செவியில் மெல்ல ஊதிப் போயது.

பொருள்

மின் நிற மருங்குலாய் – மின்னலின் தன்மை பொருந்திய இடையினை உடையாய், ஓர் பொன் நிறத் தும்பி - ஓர் பொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறமாகிய வண்டு, இனிய நண்பினுல் வந்து - இனிய தன்மையினுல் தானுகவே வந்து, உன் நிறம் பசப்பு அற – (உன் தலைவனுகிய இராமபிரானைப் பிரிந்தமையால்) உன்னிடத்தில் உண்டான பசலை நிறம் நீங்க, உயிர் உயிர்ப்பு உற - உயிரானது உய்தியைப் (பிழைத்து வாழ்தலைப்) பெற, இன் நிறத் தென் இசை- இனிமையான இயல்பு பொருந்திய அழகிய இசையினை, உன் செவியில் – உனது காதில், மெல்ல ஊதிப் போயது - மெல்லவாக ஊதிச் சென்றது.

மொழிப்பு

மின்னலின் தன்மை பொருந்திய இடையினையுடையாய்! பொன்னிறங் கொண்ட ஓர் வண்டு இனிய தன்மையினுல் தானுகவே வந்து உன் தலைவனுகிய இராமபிரானைப் பிரிந்தமையால் உன்னிடத்தில் உண்டான பசலை நிறம் நீங்கவும், உன் உயிர் உய்தியைப் பெற்று வாழவும், இனிமையான இயல்பு பொருந்திய அழகிய இசையினை உனது காதில் மெல்லவாக ஊதிச் சென்றது என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியின் காதில் ஓர் பொன்னிற வண்டு மெல்ல ஊதிச் சென்ற நன்னிமித்தத்தைக் கண்ட திரிசடையின் ஆர்வத்தைக் கேட்கின்றோம்.

பொன்னிற வண்டு சீதாதேவியினுடைய செவியில் இன்னிசையை ஊதிச் சென்ற செயல் நல்ல அறிகுறியாகும் என உணர்ந்த திரிசடையின் ஆர்வத்தைக் கம்பர் அப்படியே இச் செய்யுளில் அமைத்துள்ளார். சீதாதேவி, தன் தலைவனுகிய இராமபிரானைச் சேர்ந்து வாழ்கின்ற பெரும்பேறு, வருங்காலம் கிட்டிவிட்டதென்ற மகிழ்ச்சிப் பெருக்கால்,

> ''உன் நிறம் பசப்பு அற உயிர் உயிர்ப்பு உற
> இன் நிறத் தென் இசை இனிய நண்பினுல்
> பொன் நிறத் தும்பி வந்து ஊதிப் போயது''

எனத் திரிசடை கூறுகின்ற குரலுடன் கம்பரும் கலந்து எல்லையில்லாத இன்பவெறியை எழுப்புகின்றார். ''**உன் நிறம் பசப்பு அற**'' என்றும், ''**உன் உயிர் உயிர்ப்பு உற**'' என்றும், வருகின்ற தொடர்களில் சீதாதேவியின் எதிர்கால வாழ்வுச் சிறப்புக்களையெல்லாம் அடக்கிக் கூறிய கம்பரின் புலமை ஆற்றல் போற்றத்தக்கதாகும். தலைவனைக் கூடுவதினுல் உடலிலுள்ள பசலை நீங்கிப் புதிய எழில் பெறுதலையும், தலைவனைப் பிரிந்த துன்பத்தினுல் உயிரோடு இருந்தும் உயிர் அற்றவள் போல் வருந்திய சீதாதேவி மீண்டும் புதுவாழ்வு பெற்றுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிதலையும், உணர்த்த எண்ணிய கம்பர் **''உன் நிறம் பசப்பு அற''** எனவும், **''உயிர் உயிர்ப்பு உற''** எனவும் கூறியுள்ளார்.

சீதாதேவி தலைவனைச் சேர்ந்து வாழ்வாள் என்ற துணிவினால் துன்பத்தினால் ஒளி மழுங்கியுள்ள அவளின் இடையினை **''மின் நிற மருங்குல்''** எனத் திரிசடையின் குரலோடு கலந்து கம்பர் கூறிய திறன் மிகச் சிறந்ததாகும். சீதாதேவி இராம பிரானைச் சேர்ந்த மகிழ்ச்சிப் பெருக்கினால் அவளின் மருங்குல் அடையும் புதிய எழிலையே கம்பர் எமக்கு நினைவூட்டுகின்றார்.

மின்னல் – உவமானம். சீதாதேவியின் இடை - உவமேயம். ஒளி - பொதுத்தன்மை. மின் நிற மருங்குல் என்பதில் வரும் நிறம் **உவமை உருபாகும்.**

'உன் நிறம் பசப்புற' எனப் பாடம் கொள்வாரும் உளர்.

தூது வந்து எதிரும்

38. ஆயது தேரினுன் ஆவி நாயகன்
ஏயது தூதுவந் தெதிரு மென்னுமால்
தீயது தீயவர்க் கெய்த றிண்ணமென்
வாயது கேளென மறித்துங் கூறுவாள்.''

கொண்டுகூட்டு : ஆயது (தும்பி ஊதிய அச்செயலை) தேரின் உன் ஆவி நாயகன் (ஆல்) ஏயது (ஏவிய) தூது வந்து எதிரும் என்னும் ஆல், தீயவர்க்கு தீது எய்தல் திண்ணம், என் வாயது கேள் என, மறித்தும் (திரிசடை) கூறுவாள்.

பொருள்

ஆயது - (பொன்வண்டு வந்து ஊதிய) அச்செயலை, **தேரின்** - ஆராய்ந்து பார்த்தால், **உன் ஆவி நாயகன்** — உன்னுடைய உயிர்த் தலைவனுகிய (பிராண நாயகனுகிய) இராமபிரானால், **ஏயது** – (உன்னைத் தேடும்படி) கட்டளையிட்டு அனுப்பப்பட்ட, **தூதுவந்து** – தூதன் வந்து, **எதிரும்** – உன்னைச் சந்திப்பான், **என்னும்** - என்ற உண்மையை எடுத்துச் சொல்லும் (இங்ஙனம் உனக்கு வருகின்ற நன்மையை நோக்கும்போது), **தீயவர்க்கு**- கொடியவர்களுக்கு (கொடியவர்களாகிய இராவணன் முதலியோருக்கு) **தீது எய்தல்** – தீமை (கெடுதி) வந்து சேருதல், **திண்ணம்** - திண்ணம் (கட்டாயம்) **என்று எண்ணுவாயாக, என் வாயது** - என்னிடம் நிகழ்ந்தவைகளையும், **கேள் என** -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பாயாக என்று, (திரிசடையானவள்) மறித்தும் - மீட்டும், கூறுவாள் - சொல்லுவாள் ஆயினள்.

பொழிப்பு

பொன்வண்டு வந்து காதில் ஊதிய அச்செயலை ஆராய்ந்து பார்த்தால் உன் உயிர்த்தலைவனுகிய இராமபிரானால் அனுப்பப் பட்ட தூதன் வந்து உன்னைச் சந்திப்பான் என்ற உண்மை புலனுகின்றது. இதனை நோக்கும் போது கொடியவனுகிய இராவ ணன் முதலியோருக்குத் தீமை வந்து சேருதல் திண்ணம் என்று எண்ணுவாயாக. இத்துடன் என்னிடம் நிகழ்ந்தவைகளையும் கூறுகின்றேன் எனத் திரிசடை சொல்லத் தொடங்கினுள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் பொன்னிற வண்டு சீதாதேவியின் செவி யிலே இன்னிசையை ஊதிச் சென்றதினால் எய்தக்கிடக்கும் இனிய செயல்களை எடுத்துச் சொல்கின்ற திரிசடையின் எழுச்சிக் குரலைக் கேட்கின்றோம்.

பொன்வண்டு சீதாதேவியின் செவியில் வந்து ஊதிய நன் நிமித்தத்தால் இராமபிரானால் ஏவப்பட்ட தூதுவன் வந்து சீதாதேவியாரைச் சந்திக்கின்ற காலம் மிக அண்மையில் உள்ளது என்னும் உண்மையைத் திரிசடை தெளிந்துவிட்டாள். தெளிந்த திரிசடையின் உள்ளத்தில் கொடியோனுகிய இராவ ணனும் அவனைச் சேர்ந்தோரும் அழிந்தேபோவார்கள் என்ற எண்ணமும் இடம்பெற்றுவிட்டது. தன் பெரிய தந்தையாகிய இராவணன் முதலியோரின் அழிவு மிக அண்மையில் நிகழப் போகின்றது என்பதை எண்ணியவுடன் திரிசடையின் உள்ளமும் கலங்கிவிட்டது. அங்ஙனம் கலங்கிய திரிசடை அவர்கள் அழி தற்கான காரணத்தைக்கண்டு தெளிவடைகின்றுள். இதனை,

''தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம்''

எனத் திரிசடையோடு கலந்து கம்பர் எமக்கு ஆறுதல் கூறு வதால் அறிக.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.

என வரும் திருக்குறளுடன்

தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம்.

எனவரும் தொடரை ஒப்பிட்டு நோக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயில்வன பழுதில

39. துயிலலே யாதலிற் கனவு தோன்றல
அயில்விழி யன்னையா னமைய நோக்கினேன்
பயில்வன பழுதில பரிவி னுண்டன
வெயிலினு மெய்யன விளம்பக் கேட்டியால்.

கொண்டுகூட்டு : அயில்விழி அன்னை (நீ) துயிலலை ஆதலின், (உனக்குக்) கனவு தோன்றல யான் அமைய நோக்கினேன், பயில்வன பழுதில பரிவின் ஆண்டன, வெயிலினும் மெய்யன விளம்பக் கேட்டி (ஆல்).

பொருள்

அயில்விழி அன்னை - வேல்போன்ற கண்களையுடைய தாயே, (நீ) துயிலலை – உறக்கமில்லாமல் இருக்கின்றாய், ஆதலின் -ஆன படியால், கனவு தோன்றல - (உனக்கு) கனவுகள் காணப் படவில்லை, யான் - (உறக்கங் கொண்டவளாகிய) நான், அமைய நோக்கினேன் -- பொருத்தமாக (ஓர் கனவைக்) கண்டேன், பயில்வன – (அங்ஙனம் யான் கண்ட கனவினுல்) நிகழ்பவை, பழுதில – தீமை அற்றவைகளாகும். பரிவின் - விருப்பத்துடன், ஆண்டன - (என்னுல் ஆராய்ந்து நன்மை தருவன என்றே) கைக்கொள்ளப் பட்டவையாகும், வெயிலினும் மெய்யன - (அக்கனவு நன்மையே தரும் என்ற முடிபு) தவறுது வருகின்ற சூரியனைக் காட்டிலும் தவறுது பலித்திடும் உண்மை உடையன, விளம்பக் கேட்டியால் – யான் கூறுகின்றேன் கேட்பாயாக.

பொழிப்பு

வேல்போன்ற கண்களையுடைய தாயே! நீ உறக்கமில்லாமல் இருக்கின்றபடியால் உனக்குக் கனாக்காணும் வாய்ப்புக் கிடைக்க வில்லை. யான் உறக்கம் கொண்டபடியால் ஒரு பொருத்தமான கனவைக் கண்டேன். அங்ஙனம் யான் கண்ட கனவினுல் நிகழ்வன நல்லனவேயாகுமெனத் துணிந்தேன். அத்துணிவு என்னுல் ஆராய்ந்து கைக்கொள்ளப்பட்டதாகும். அக்கனவினுல் நன்மையே ஏற்படுமென்ற என் முடிபு; சூரியன் தோன்றத் தவறினுலும் தவறுது நிகழும் உண்மையாகும். யான் அக்கனவினைக் கூறுகின்றேன் கேட்பாயாக என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவி கூறிய நிமித்தங்களுக்கு உரிய நன்மைகளைக் காரணம் காட்டி விளக்கிய திரிசடையானவள், தான் கண்ட கனவினுல் சீதாதேவிக்கு ஏற்படவிருக்கும் நன்மை களைக் கூறத்தொடங்குகின்ற ஆர்வக்குரலைக் கேட்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாதேவி உறக்கமே இல்லாமல் இராமபிரானை எண்ணி யெண்ணி வருந்தினமையால் கனுக்கண்டிலள் எனத் திரிசடை செப்புகின்றாள். சீதாதேவி இராமபிரானின் வரவையே நோக்கிய வண்ணம் உறக்கமில்லாது விழித்திருந்த கண்களின் கூர்மையையும் அக்கண்களிலேயிருந்து பெருகி வழிகின்ற கண்ணீர் வெள்ளத்தையும், கண்டு கண்டு உள்ளம் உருகிய திரிசடையானவள், சீதாபிராட்டியாரை 'அயில்விழி அன்னை' என ஆர்வத்துடன் அழைக்கின்றாள். இளமை நிரம்பிய சீதாதேவியானவள் பெண் குலத்தின் பெருமைக்கோர் எடுத்துக் காட்டாகச் சிறைச்சாலையிலிருந்து தவஞ்செய்த சிறப்பை உணர்த்த விரும்பிய கம்பர் திரிசடையின் குரலாலே சீதாதேவியை அன்னை என அழைப்பிக்கின்றார். உலகத்திற்கே சீதாதேவி அன்னையாய் விளங்குகின்றாள் என்பது கம்பரின் கருத்தாகும்.

பயில்வன பழுதில பரிவின் ஆண்டன
வெயிலினும் மெய்யன.

எனத் திரிசடை தான்கண்ட கனவினுல் ஏற்படும் நன்மைகளை மிக மிக விழிப்பாக ஆராய்ந்து கூறுகின்ற அமைப்பாடு அவளின் கனத்திறம் கண்டுரைக்கும் புலமையைக் காட்டுகின்றது.

தவறுது நிகழும் செயல்களுக்கு என்றும் பொய்யாமல் தோன்றியும், மறைந்தும் வருகின்ற சூரியனை உவமையாகக் கூறுதல் கவிமரபாகும்.

காலை அன்ன சீர்சால் வாய்மொழி

எனப் பதிற்றுப்பத்தில் வருதல் காண்க.

அயில்விழி என்பதில் உவமானம் - அயில் (வேல்), உவமேயம் - சீதாதேவியின் விழி. கூர்மையும் ஒளியும் - பொதுத்தன்மைகள்.

முதலாம் அடியில் கனவு தோன்றல என வருதலால், இரண்டாம் அடியில் அமைய நோக்கினேன் என்பதில் கனவு எனப் பொருந்திப் பொருள் உரைக்கப்பட்டது. 'துயிலிலே' எனவும், "ஒரு கனவு அமைந்து நோக்கினேன்" எனவும், பழுதி நாடென எனவும் பாடம் கொள்வாரும் உளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல் வேல் இராவணன்

40. எண்ணெய்தன் முடிதொறு மிழுகி யீறிலாத்
திண்ணெடுங் கழுதைபேய் பூண்ட தேரின்மேல்
அண்ணல் வேலிராவண னரத்த வாடையன்
நண்ணினன் றென்புலம் நவையில் கற்பினாய்.

கொண்டுகூட்டு : நவை இல் கற்பினாய் அண்ணல் வேல் இராவணன், அரத்த ஆடையன், (ஆய்) தன் முடிதொறும் எண்ணெய் இழுகி ஈறு இலா (இல்லாத) திண் நெடும் கழுதை பேய் (என்பன) பூண்ட தேரின் மேல், தென்புலம் நண்ணினன்.

பொருள்

நவை இல் கற்பினாய் – குற்றமில்லாத கற்பினை உடைய வளே, அண்ணல் - பெருமை பொருந்தியவனும், வேல் இராவணன் - வேற்படையைக் (கையிலே) கொண்டவனுமாகிய இராவணன் என்போன், அரத்த ஆடையன் - செந்நிறமான ஆடையை அணிந்து, தன் முடிதொறும் - தன்னுடைய பத்துத் தலைகளிலும், எண்ணெய் - எண்ணெயை, இழுகி - பூசிக்கொண்டு (தேய்த்துக்கொண்டு) ஈறு இலா - அளவு சொல்லமுடியாத (எண்ணில்லாத) திண் நெடுங் கழுதை – வலிமை வாய்ந்த பெரிய கழுதைகளும், பேய் - பேய்களும், பூண்ட - (கலந்து கட்டப்பட்டுள்ள) பூட்டப்பட்டுள்ள. தேரின்மேல் - தேரின் கண் ஏறி, தென்புலம் - தெற்குத் திசையை நோக்கி, நண்ணினன் – சென்றான்.

பொழிப்பு

குற்றமில்லாத கற்பினையுடையவளே! பெருமை பொருந்தியவனும், வேற்படையைக் கையிலே கொண்டவனுமாகிய இராவணன் என்பவன் செந்நிறமாகிய ஆடையை அணிந்து தன்னுடைய பத்துத்தலைகளிலும் எண்ணெயைப் பூசிக்கொண்டு வலிமை பொருந்திய பெரிய கழுதைகளும், பேய்களும், பூட்டப்பட்டுள்ள தேரின்கண் ஏறித் தெற்குத் திக்கை நோக்கிச் சென்றான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் திரிசடை, தான்கண்ட கனவைச் சீதாதேவியிடம் செப்புகின்ற செயல் கூறப்படுகின்றது.

இராவணன் சிவந்த ஆடையை அணிந்து பத்துத்தலைகளிலும் எண்ணெயைப் பூசிக்கொண்டு கழுதைகளும் பேய்களும் பூட்டப்பட்ட தேரில் ஏறித் தெற்குத் திக்கை நோக்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றனனெனத் திரிசடை கூறுகின்ற கனாச்செய்தி, அவனின் அழிவு காலத்தைச் சீதாதேவிக்கு அறிவிப்பதாகவே இருக்கின்றது. சிவந்த ஆடையை அணிதல், எண்ணெய் தேய்த்தல், கழுதைகளும் பேய்களும் பூட்டப்பட்ட தேரில் ஏறல், தென் திசை நோக்கிச் செல்லல் என்பனவெல்லாம் அமங்கலமான அறிகுறிகளாகும் என்பதே கனா நூலாரின் முடிபு. திரிசடை, தான் கண்ட கனாவைக் கூறக்கேட்ட சீதாதேவியின் உள்ளத்தில் இராவணன், தன் தலைவனாகிய இராமபிரானாற் கொல்லப்படப் போகின்றான் என்ற எண்ணம் தோன்றிவிட்டது என்பதை உணர்கின்றோம்.

சீதாதேவி இராவணனால் கவரப்பட்டு சிறையில் இருந்தாளாயினும் தன் கற்பு நெறியில் சிறிதும் தவறாதவளாய் தற்காத்துத் தற்கொண்டாற் பேணிய தலைமைப்பாட்டை நேரிற்கண்டவளாகிய திரிசடை "**நனவயில் கற்பினாய்**" என அழைத்த அருமை பாராட்டற்குரியதாகும்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்".

என்பது திருக்குறள்.

சிக்கற நோக்கினன்

41. மக்களுஞ் சுற்றமும் மற்று ளோர்களும்
புக்கன ரப்புலம் போந்த தில்லையால்
சிக்கற நோக்கினன் றீய வின்னமும்
மிக்கன கேட்கென விளம்பன் மேயினாள்.

கொண்டுகூட்டு : (இராவணனின்) மக்களும், சுற்றமும், மற்று உள்ளோர்களும், அப்புலம் புக்கனர் போந்தது இல்லை ஆல் (யான்) சிக்கற நோக்கினன் இன்னமும் தீய மிக்கன கேட்க என, (திரிசடை) விளம்பல் மேயினாள்.

பொருள்

மக்களும் – (இராவணனின்) புதல்வர்களும், சுற்றமும் - சுற்றத்தினரும் (உறவினர்களும்), மற்று உளோர்களும் - (இராவணனைச் சேர்ந்த) ஏனைய அரக்கர்களும், அப்புலம் - அந்தத் தெற்குத்திக்கை நோக்கியே, புக்கனர் - சென்றார்கள், போந்தது இல்லை - (அங்ஙனம் சென்றவர்கள்) திரும்பிவரக் கண்டதில்லை (திரும்பி வந்திலர்), சிக்கற நோக்கினன் - ஐயம் நீங்க ஆராய்ந்து பார்த்தேன், இன்னமும் - இனியும், தீய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கன - கொடுமை கொடுக்கும் அவற்றை உண்டாக்குவன வாகி மிகுந்துள்ளவற்றை, கேட்கென – கேட்பாயாக என்று கூறி, விளம்பல் மேயினள் – (திரிசடை) கூறத் தொடங்கினள்.

பொழிப்பு

இராவணனின் புதல்வர்களும், உறவினர்களும், ஏனைய அரக் கர்களும் அந்தத் தெற்குத் திக்கை நோக்கியே சென்றார்கள். அங்ஙனம் சென்றவர்கள் திரும்பி வந்திலர். யான் ஐயந்தீர ஆராய்ந்து பார்த்தேன். இன்னமும் கொடுமை கொடுக்கும வற்றை உண்டாக்குவனவாகி மிகுந்துள்ளவற்றைக் கூறுகின்றேன் கேட்பாயாக எனத் திரிசடை சொல்லத் தொடங்கினள் என் பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தான் கண்ட கனவினைத் தொடர்ந்து கூறு கின்ற திரிசடையின் குரலைக் கேட்கின்றோம்.

இராவணனின் மக்களும், உறவினர்களும், மற்றைய அரக்கர்களும், இராவணன் போன தெற்குத் திசையை நோக் கியே சென்றார்கள் என்றும், அங்ஙனம் சென்றவர்கள் திரும்பி வந்திலர் என்றும், திரிசடை கூறிய கனவு நிகழ்ச்சிகளைக் கேட்டவுடன் இராவணன் தன் குலத்துடன் அழிந்தொழிவான் என்னும் எண்ணம் சீதாதேவியின் உள்ளத்திலும் தோன்றி விட்டதென்றே கொள்ளவேண்டும்.

> "கிக்கற நோக்கினன் தீய இன்னமும்
> மிக்கன கேட்க"

எனத் திரிசடை கூறுகின்ற ஆர்வக் குரலில் கலந்து கிடக்கும் ஆக்கங்கள் சீதாதேவிக்குப் புதிய எழுச்சியைக் கொடுக்கத் தக்கனவாகும்.

ஆண்தகை இராவணன்

42. ஆண்டகை யிராவணன் வளர்க்கு மவ்வனல்
ஈண்டில பிறந்தவா லினங்கொள் செஞ்சிதல்
தூண்டரு மணிவிளக் கழலுந் தொன்மனை
கீண்டதால் வானவே றெறியக் கீழைநாள்.

கொண்டுகூட்டு : ஆண்தகை இராவணன் வளர்க் கும் அவ் அனல் ஈண்டில, (அழல் ஓம்பிய ஓமகுண்டத் தில்) இனம் கொள் செம் சிதல் பிறந்த ஆல் தூண்ட. அரும் மணிவிளக்கு அழலும் தொல்மனை கீழை நாள் வான ஏறு எறிய கீண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

ஆண்தகை இராவணன் - ஆண் தன்மையில் மிக்கவனுகிய இராவணன், **வளர்க்கும் அவ் அனல்** – நெய் முதலிய ஆகுதி களைச் சொரிந்து **வளர்க்கின்ற**தாகிய ஓமத்தீகள் (ஓமாக்கினி கள்) **ஈண்டில** - ஓங்கி எழுந்து எரியாமல் **அவிந்தன**, (ஓம குண்டங்கள் இருந்த இடத்தில்) **இனம் கொள்** - கூட்டமான, **செம் சிதல் பிறந்த** - செந்நிறமுடைய கறையான்கள் (கறை யான் புற்றுக்கள்) தோன்றின, **தூண்டு அரும் மணிவிளக்கு** – (தூண்டாமணி விளக்கு) தூண்டாமல் எரிகின்ற அழகிய விளக் குக்கள், **அழலும்** - ஒளி வீசுகின்ற (ஒளிர்கின்ற) **தொல்மனை** - பழமை பொருந்திய இல்லம் (வீடு) **கீழை நாள்** - விடியற் காலையில் (தோன்றி) **வான ஏறு எறிய** - இடியேறுனது **தாக்க, கீண்டது** - பிளந்தது.

பொழிப்பு

ஆண்தன்மை மிக்கவனுகிய இராவணனுல் நெய் முதலிய ஆகுதிகளைச் சொரிந்து ,ஆக்கப்படுகின்ற ஓமத்தீயானது ஓங்கி எரியாமல் அவிகின்றன. ஓமகுண்டங்கள் இருந்த இடத்தில் கூட்ட மான செந்நிறக் கறையான்கள் புற்றெடுத்து வாழ்கின்றன தூண்டாமல் எரிகின்ற அழகிய விளக்குகளின் ஒளி வீசுகின்றதும், பழைமை பொருந்தியதுமான வீடு விடியற்காலையில் தோன்றிய இடியினுல் தாக்குண்டு பிளந்தது என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணன் குலத்துடன் அழிவான் என் பதற்குரிய உற் பாதங்களைத் தான் கண்டதாகச் சீதாபிராட்டி யிடம் கூறுகின்ற திரிசடையின் ஆர்வக்குரலைக் கேட்கின்றேம்.

ஓமாக்கினிகள் அவிதலும், வீட்டில் இடி விழுதலும் அழி விற்குரிய உற்பாதங்களாகும். **ஆகவநீயம், காருக பத்தியம், தக்ஷிணக்கினி** (தென்திசை அங்கி), என ஓமாக்கினிகள் மூன்று வகைப்படுதலால் **''அவ் அனல் ஈண்டில''** எனப் பன்மை யாகக் கூறினர். வானஏறு என இடியைக் கூறுதல் மரபு. **ஆல்** – அசை.

தான் கண்ட கனவுக்களின் அறிகுறியால் இராவணன் குலத்துடன் அழிந்தேவிடுவான் எனச் சீதாதேவிக்கு விளக்கிக் கூறிய திரிசடை, அங்ஙனம் தான் கூறியவண்ணம் இராவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவான் என்பதற்குச் சான்றாக, அவன் நாட்டில் நிகழும் உற்பாதங்களை எடுத்துக் காட்டுகின்றாள் என்பதை உணர்கின்றோம்.

பிடிமதம் பிறந்தன

43 பிடிமதம் பிறந்தன பிறங்கு பேரியும்
இடிபட முழங்கின விரட்ட லின்றியே
தடியுடை முகிற்குல மின்றித் தாவில்வான்
வெடிபட வதிருமா லுதிரு மீனெலாம்.

கொண்டுகூட்டு : (இலங்கை மாநகரிலுள்ள) பிடி மதம் பிறந்தன; பிறங்குபேரியும், இரட்டல் இன்றியே, இடிபட முழங்கின தடி உடை முகில் குலம் இன்றி, (இல்லாமல்) தா இல்வான் வெடிபட அதிரும் ஆல்; மீன் எலாம் உதிரும்.

பொருள்

பிடி - பெண் யானைகள், மதம் பிறந்தன - மதநீர்ப் பெருக்கை உடையனவாயின (மதநீரைப் பொழிந்தன), பிறங்கு பேரியும் – விளங்குகின்ற முரசப் பறைகளும், இரட்டல் இன்றியே – (பிறரால்) அடிக்கப்படாமலே (கொட்டுதல் இல்லாமலே) இடிபட முழங்கின - இடி ஓசைபோல (கொடுமையாக) ஒலித்தன, தடி உடை - மின்னலை உடைய, முகிற்குலம் - மேகக் கூட்டங்கள், இன்றி – இல்லாமலே, தா இல் வான் - கெடுதல் இல்லாத (குற்றமற்ற) ஆகாயம், வெடிபட - (அண்டமெல்லாம் அதிரும் வண்ணம்) ஓசை உண்டாக, அதிரும் - இடி இடிக்கும், மீன் எலாம் – (விண்மீன் எனச் சொல்லப்படுகின்ற) நட்சத்திரங்கள் எல்லாம், உதிரும் - உதிர்ந்து விழும்.

பொழிப்பு

பெண் யானைகள் மதநீரைப் பொழிந்தன. முரசப் பாறைகள் பிறரால் கொட்டப்படாமல் தாமாகவே இடியைப்போல ஒலித்தன. மின்னலையுடைய மேகக் கூட்டங்கள் இல்லாமலே கெடுதல் இல்லாத ஆகாயம் அண்டமெல்லாம் அதிரும் வண்ணம் இடி இடித்தது. விண்மீன்கள் எல்லாம் உதிர்ந்து விழுந்தன என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணனின் அழிவிற்கு அறிகுறியாக முற்படத்தோன்றிய உற்பாதங்களை முறைப்படுத்திக் கூறுகின்ற திரிசடையின் சிந்தனைக் குரலைக் கேட்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்யானை மதநீரைப் பொழிதலும், முரசங்கள் அடிக்கப்படாமலே முழங்குதலும், ஆகாயத்தில் முகிற்கூட்டங்கள் இல்லாமல் இடி இடித்தலும், விண்மீன்கள் உதிர்ந்து வீழ்தலும், அழிவை அறிவிக்கும் அவலக் குறிகளாகும். (உற்பாதங்களாகும்)

"மடப்பிடி மருப்பெழ மதம் பொழியு மாலோ"

எனவும்,

"வார்முரசு இருந்து வறிதே அதிருமாலோ"

எனவும், கலிங்கத்துப் பரணியில் கலிங்க நாட்டின் அழிவிற்கு அறிகுறியாகக் கண்ட உற்பாதங்களைக் கூறியிருத்தல் காண்க.

கற்பகமாலை புலால் காலுதல்

44. விற்பக லின்றியே யிரவு விண்டற
எற்பக லெறித்துள தென்னத் தோன்றுமால்
மற்பக மலர்ந்ததோண் மைந்தர் சூடிய
கற்பக மாலையும் புலவு காலுமால்.

கொண்டுகூட்டு : வில் பகல் இன்றியே, இரவு விண்டு அற, எல் (சூரியன்) பகல் எறிந்துளது என்னத் தோன்றும் ஆல், மல்பக மலர்ந்ததோள் மைந்தர் (வீரர்கள்) சூடிய கற்பக மாலையும் புலவு காலும் ஆல்.

பொருள்

வில் பகல் இன்றியே - ஒளியோடு கூடிய பகற் பொழுது இல்லாமலே, இரவு - இராப்பொழுது, விண்டு அற - கெட்டு ஒழியும்படி, எல் - சூரியன், பகல் எறித்துளது என்ன - பகற் காலத்திலே ஒளி செய்துள்ளது என்று சொல்லும்படி, தோன்றும் - விளங்கும், மல்பக - வலிமை மிகும்படி, மலர்ந்த - வீங்கிய (பூரித்த) தோள் மைந்தர் - தோள்களையுடைய வீரர்கள், சூடிய - அணிந்துள்ள, கற்பகமாலையும் – கற்பக மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளும், புலவு காலும் - (நல்ல மணத்தை வீசாமல்) புலால் நாற்றம் வீசும்.

பொழிப்பு

ஒளியோடு கூடிய பகற் பொழுதிலன்றி இராப்பொழுதில் சூரியன் பகற்காலத்தில் ஒளி செய்துள்ளது என்று சொல்லும்படி தோன்றி ஒளியை விரிக்கும், வலிமை மிகும்படி வீங்கிய தோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையுடைய வீரர்கள் அணிந்துள்ள கற்பகப்பூ மாலைகள் புலால் நாற்றத்தை வீசும் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் திரிசடை மீண்டும் மீண்டும் தான் கண்ட உற்பாதங்களை விளக்கிக் கூறுகின்ற செயலைக் காண்கின்றோம்.

பகற்பொழுதிலன்றி இராப்பொழுதில் சூரியன் தோன்றுதலும், வீரர்கள் அணிந்த கற்பக மலர்மாலைகள் புலால் நாற்றம் வீசுதலும் பின்வரும் கெடுதிகளை அறிவிக்கும் கொடிய உற்பாதங்களாகும்.

''பூ விரியும் மாலைகள் புலால் கமழுமாலோ''

எனக் கலிங்கத்துப் பரணியில் வருதலையும்,

இராவணன் வதைப்படலத்தில்

''நாள்மலர் பூவின் மாலை புலால் வெறி பூத்ததால்''

எனக் கம்பரும் கூறுதலையும் காண்க.

மங்கல கலசம் சிந்தின

45. திரியுமா லிலங்கையு மதிலுந் திக்கெல்லாம்
எரியுமாற் கந்தர்ப்ப நகரம் எங்கணும்
தெரியுமால் மங்கல கலசஞ் சிந்தின
விரியுமால் விளக்கினை விழுங்கு மாலிருள்.

கொண்டுகூட்டு : இலங்கையும் மதிலும் திரியும் ஆல், திக்கு எலாம் எரியும் ஆல், கந்தர்ப்ப நகரம் எங்கணும் தெரியும் ஆல், மங்கல கலசம் சிந்தின இரியும் ஆல், இருள் விளக்கினை விழுங்கும் ஆல்.

பொருள்

இலங்கையும் - இலங்கை மாநகரும், மதிலும் - (அதனைச் சூழ்ந்துள்ள) மதில்களும், திரியும் - (ஓர் நிலையில்லாமல்) சுழலும், திக்கு எலாம் — எல்லாத் திசைகளிலும், எரியும் - நெருப்புப் பற்றி எரியும், கந்தர்ப்ப நகரம் - கந்தருவருடைய பட்டினம், எங்கணும் தெரியும் - எல்லாத் திக்கிலும் தோன்றும், மங்கல கலசம் - மங்கல காரியத்திற்குரிய நிறை குடங்கள் (பூரண கும்பங்கள்) சிந்தின, இரியும் - விழுந்து உடையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் - இருளானது, விளக்கினை விழுங்கும் - தீபத்தைச் சூழ்ந்து மறைத்து விடும்.

பொழிப்பு

இலங்கை மாநகரும், அதனைச் சூழ்ந்துள்ள மதில்களும், ஓர் நிலையில் நில்லாமற் சுழலும். எல்லாத் திசைகளிலும் நெருப்புப் பற்றி எரியும். கந்தருவருடைய பட்டினம் பார்த்த பக்கங்களி லெல்லாம் தோன்றும். மங்கல காரியத்திற்குரிய நிறை குடங்கள் விழுந்து உடையும். இருள் தீபத்தைச் சூழ்ந்து விழுங்கிவிடும் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் திரிசடை தொடர்ந்து கூறுகின்ற உற் பாதங்களை உணர்கின்றோம்.

இலங்கைமாநகரும், அதனைச் சூழ்ந்துள்ள மதில்களும், நிலையில்லாமல் சுழலுதல், திக்குகள் எல்லாம் நெருப்புப்பற்றி எரிதல், கந்தருவரின் பட்டினம் எங்கணும் தோன்றுதல், நிறைகுடங்கள் வீழ்ந்து உடைதல், விளக்கினை இருள் விழுங்கு தல் என்பன தீமை வருதலைத் தெரிவிக்கும் உற்பாதங்களாகும்.

இவற்றுள் கந்தருவ நகரம் தோன்றுதல் என்பது கந்தருவ நகரம் ஆகாய வீதியில் தோன்றி மறையும் தன்மை உடைய தென்றும், அந்நகரம் எல்லாத்திக்கிலும் எப்போதும் தோன்று மாயின் அரசனுக்கும் அவனால் ஆளப்படுகின்ற நாட்டிற்கும் பெரும் தீங்கு வரும் என்பதற்கு ஏற்ற உற்பாதமாகும் என்றும், வராகமிகிரர் என்னும் அறிஞர் கூறியுள்ளார்.

பூரணகுடத்துநீர்

46. தோரண முறியுமாற் றுளங்கிச் சூழிமால்
வாரண முறியுமால் வலத்த வான்மருப்
பாரண மந்திரத் தறிஞர் நாட்டிய
பூரண குடத்துநீர் நறவிற் பொங்குமால்.

கொண்டுகூட்டு : தோரணம் முறியும் ஆல், சூழி மால் வாரணம் துளங்கி வலத்தவால் மருப்பு முறியு மால், அறிஞர் ஆரண மந்திரத்து நாட்டிய பூரண குடத்து நீர் நறவில் பொங்குமால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

தோரணம் – தோரணங்கள், முறியும் (ஆல்) – ஒடிந்தன, சூழி – நெற்றிப்பட்டத்தையும், மால் – மதத்தினால் உண்டாகிய மயக்கத்தையும் கொண்ட, வாரணம் – யானைகள், துளங்கி – நடுங்கி, வலத்தவால் மருப்பு – வெற்றியைத் தரும் வெள்ளை நிறமான கொம்புகள் (தந்தங்கள்), முறியும்(ஆல்) – ஒடிபடும், அறிஞர் – (வைதிகக் கிரியைகளை) அறிந்த அந்தணர், ஆரண மந்திரத்து – வேத மந்திரங்களின் சக்தியைக்கொண்டு, நாட்டிய – நிலைநிறுத்திய (பிரதிட்டை செய்த) பூரணகுடத்து நீர் – நிறை குடங்களிலுள்ள தூய்மையான நீர் (தீர்த்தம்) நறவில் – கள் ளைப்போல, பொங்கும் (ஆல்) – பொங்கும்.

பொழிப்பு

தோரணங்கள் ஒடிந்தன. நெற்றிப்பட்டத்தையும், மதத்தி னால் உண்டாகிய மயக்கத்தையும் கொண்ட யானைகள் நடுக்கம் கொள்ளும்படி அவற்றிக்கு வெற்றியைத் தருகின்ற வெள்ளை நிறமான கொம்புகள் ஒடிபடும். வைதிகக் கிரியைகளை அறிந்த அந்தணர்கள் வேதமந்திரங்களின் துணையைக்கொண்டு நிலை நிறுத்திய நிறைகுடங்களிலுள்ள தூய்மையான நீர், கள்ளைப் போலப் பொங்கும் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் அழிவிற்கு அறிகுறிகளாய் நிகழ்ந்த உற் பாதங்களைக் கூறும் திரிசடையின் குரலைக் கேட்கின்றோம்.

தோரணங்கள் முறிந்து வீழ்தலும், வெற்றிக்குரிய போர் யானைகளின் தந்தங்கள் ஒடிந்து வீழ்தலும், வேதங்களில் வல்ல அந்தணர்கள் மந்திரத்தினால் பிரதிட்டை செய்துவைத்த நிறை குடங்களில் (பூரணகும்பங்கள்) உள்ள தூய நீர், கள்ளைப்போலப் பொங்குதலும், எல்லையில்லாத இன்னல் வரும் என்பதைக் காட்டும் அவலக் குறிகளாகும் (உற்பாதங்களாகும்).

"மதக்கரி மருப்பு இற மதம் புலரு மாலோ"

என வரும் கலிங்கத்துப்பரணிச் செய்யுளையும் நோக்குக. எனவே இங்ஙனம் திரிசடை கூறுகின்ற உற்பாதங்களால் சீதா தேவியின் உள்ளத்தில் நம்பிக்கையும் எழுச்சியும் தோன்றும் என்பதை உணர்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதிபோல மழை பொழியும்

47 விண்டொடர் மதியினைப் பிளந்து மீனெழும்
புண்டொடர் குருதியிற் பொழியும் மான்மழை
தண்டொடு திகிரிவா டனுவென் றின்னன
மண்டமர் புரியுமா லாழி மாறுற.

கொண்டுகூட்டு : மீன் விண்தொடர் மதியினைப் பிளந்து எழும். மழை புண்தொடர் குருதியில் பொழியும் (ஆல்) தண்டு ஒடு திகிரி வாள் தனு என்று இன்னன, ஆழி மாறு உற, மண்டு அமர் புரியும் ஆல்.

பொருள்

மீன்- நட்சத்திரங்கள், விண்தொடர் - ஆகாயத்தில் செல்லுகின்ற, மதியினை – சந்திரனை, பிளந்து – பிளந்துகொண்டு, எழும் – வெளிப்படும் (புறப்படும்) மழை - (வானத்தின்கண் நின்று பொழிகின்ற) மழையானது, புண்தொடர் – புண்ணிலிருந்து வழியும், குருதியில் - இரத்தத்தைப் போல, பொழியும்(ஆல்) - சொரியும், தண்டு - தண்டம், திகிரி - சக்கரப்படை, வாள் – வாட்படை, தனு – வில், என்று - என்று சொல்லப்படுகின்ற படைகளும், இன்னன - இவை போன்ற பிற படைகளும், ஆழி மாறு உற - (முழக்கத்தால்) கடலோடு மாறுகொள்ளும்படி, மண்டு அமர் புரியும் (ஆல்) – நெருங்கிய போரைச் செய்யும்.

பொழிப்பு

ஆகாயத்தில் செல்லுகின்ற சந்திரனை நட்சத்திரங்கள் பிளந்து கொண்டு தோன்றும் மழையானது புண்ணிலிருந்து வழிகின்ற இரத்தத்தைப் போலச் சொரியும். தண்டம், திகிரி, சக்கரம், வாள் முதலிய படைகள் கடலோடு மாறுகொள்ளும்படி பெரு முழக்கத்துடன் தாமாகவே போர் புரிகின்றன என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தான் கண்ட உற்பாதங்களை ஒழுங்குபடுத்திக் கூறும் திரிசடையின் உறுதிப்பாட்டை உணர்கின்றோம்.

விண்மீன்களுக்குத் தலைவனைப் போற்றப்படுகின்ற சந்திரனை, விண்மீன்கள் பிளந்துகொண்டு எழுதலும், வானம், இரத்த மழையைச் சொரிதலும், தண்டம் முதலிய படைக்கலங்கள் பேரிரைச்சல் உண்டாகும் வண்ணம் தம்மொடு தாம் எதிர்த்துப் போர் புரிதலும், அழிவை அறிவுறுத்தலும் கூறுதல் கவி மரபாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறு புனல் செங்குருதி நாற வருமாலோ
என வரும் கலிங்கத்துப்பரணிச் செய்யுளையும் நோக்குக.

மங்கையரின் மங்கலத்தாலி

48. மங்கையர் மங்கலத் தாலி மற்றவர்
அங்கையின் வாங்குந ரெவரு மின்றியே
கொங்கையின் வீழ்ந்தன குறித்த வாற்றினுல்
இங்கித னற்புத மின்னுங் கேட்டியால்.

கொண்டுகூட்டு : மங்கையர் மங்கலத்தாலி அங்கையில் வாங்குநர் எவரும் இன்றியே, மற்று அவர் (அம் மங்கையர்களின்) கொங்கையில் வீழ்ந்தன; குறித்த ஆற்றினுல், இங்கு இதன் அற்புதம் இன்னும் கேட்டி (ஆல்).

பொருள்

மங்கையர் - பெண்களினுடைய, மங்கலத்தாலி - (சுபவாழ்விற்குரிய) மங்கலம் பொருந்திய (நன்மை மிகுந்த திருமங்கலியங்கள்) தாலிகள், அங்கையில் - அழகிய கைகளால், வாங்குநர் எவரும் இன்றியே – அறுப்பவர் (கழிபவர்) ஒருவரும் இல்லாமலே, அவர் கொங்கையில் – அப்பெண்களினுடைய கொங்கைகளின்மேல், வீழ்ந்தன - தாமாகவே (அத்தாலிகள்) விழுந்தன, குறித்த ஆற்றினுல் - (யான் உற்பாதங்களைப்பற்றி) இப்பொழுது சொன்ன ஒழுங்கின்படியே, இதன் – (அறுப்பார் இன்றித் தாமாகவே) தாலிகள் பெண்களின் கொங்கைகளின் மேல் வீழ்ந்த, அற்புதம் – அதிசயத்தைக் காட்டிலும் சிறந்த அதிசயச் செய்திகளை, இன்னும் கேட்டி - இன்னமும் கேட்பாயாக.

பொழிப்பு

பெண்களினுடைய திருமங்கலியங்கள் கைகளால் அறுப்பார் ஒருவரும் இல்லாமலே அவர்களின் கொங்கைகளின்மேல் தாமாகவே வீழ்ந்தன. இப்பொழுது சொன்ன ஒழுங்கின்படியே தாலிகள் பெண்களின் கொங்கைகளின்மேல் தாமாகவே வீழ்ந்த அதிசயத்தைக் காட்டிலும் மேலான அற்புதச் செய்திகளை இன்னமும் கூறுகின்றேன் கேட்பாயாக என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணன் அழிவான் என்பதற்கு அறிகுறியாய் நிகழ்ந்த உற்பாதங்கள் யாவற்றையும் சீதாதேவிக்குச் சொல்லிய திரிசடையானவள் மீண்டும் ஓர் அற்புதமான உற்பாதத்தைக் கூறத் தொடங்குகின்றுள் என்னும் செய்தி சொல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் அணிந்துள்ள திருமங்கலியங்கள் அறுப்பார் ஒரு வருமின்றித் தாமாகவே அப்பெண்களின் கொங்கைகளின்மேல் வீழ்தலாகிய உற்பாதம் மிகக் கொடியதாகும் என்பதைத் திரிசடையின் குரலாகக் கம்பர் கூறுகின்றார்.

மங்கையர் மங்கலத்தாலி மற்றவர்
அங்கையின் வாங்குநர் எவரும் இன்றியே
கொங்கையில் வீழ்ந்தன

என்னும் தொடர்களைப் படிக்கும்போது எழுகின்ற சோக உணர்ச்சி எம்மையும் உருக்குகின்றது. எனவே, இலங்கைமா நகரிலுள்ள அரக்கியர்கள் எல்லோரும் தம் கணவன்மாரை இராமபாணத்திற்கு இரையாகக் கொடுத்துத் தங்கள் மங்கலத் தாலிகளை இழந்து வருந்துகின்ற காலம் கிட்டிவிட்டது என்பது குறிப்புப் பொருளாகும்.

மயன் மடந்தை

49. மன்னவன் றேவியம் மயன்ம டந்தைதன்
பின்னவி ழோதியும் பிறங்கி வீழ்ந்தன
துன்னருஞ் சுடர்சுட சுறுக்கொண் டேறின
இன்னலுண் டெனுமிதற் கேது வீதெனை.

கொண்டுகூட்டு : மன்னவன் தேவி, (ஆகிய) மயன் மடந்தை தன் பின்னவிழ் ஓதியும், பிறங்கி வீழ்ந்தன; துன்னரும் சுடர்சுட சுறுக்கொண்டு ஏறின; (ஆனபடி யால்) இன்னல் உண்டு எனும் இதற்கு ஈது ஏது எனை.

பொருள்

மன்னவன் தேவி - அரக்கர் வேந்தனுகிய இராவணனின் மனைவியும், மயன் மடந்தை தன் – தெய்வத்தச்சனுகிய மயனின் மகளுமாகிய மண்டோதரியின், பின் அவிழ்—பின்னல் அவிழ்ந்த, ஓதியும் – கூந்தல் மயிர்கள், பிறங்கி - நிலைதடுமாறி, வீழ்ந்தன- வீழ்ந்தனவாய், துன்னரும் – கிட்டுதற்கரிய, சுடர்சுட – நெருப் புப் பற்றி எரிந்ததினால், சுறுக் கொண்டு ஏறின – தீய நாற் றத்தை உடையதாயின, இன்னல் உண்டு - (நான் கண்ட தீமை யைத் தரும் உற்பாதங்களால் இராவணனுக்குத்) துன்பம் உண்டாகும், எனும் இதற்கு – என்று கூறிய என்னுடைய கூற்றிற்கு, ஈது – (இப்பொழுது யான்) மண்டோதரியின் கூந்தல் நிலைகெட்டுத் தீயால் எரியுண்ட நாற்றத்தை உடையதாயிற்று என்னும் இச்செய்தி, ஏது எனை – காரணம் ஆகும் என்று சொல்லிய திரிசடையானவள் (மீண்டும் சொல்லத் தொடங்கு கின்றாள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

இராவணனின் மனைவியும், மயனின் மகளுமாகிய மண்டோதரியின் பின்னல் அவிழ்ந்த கூந்தல் மயிர்கள் நிலைமாறி வீழ்ந்தனவாய் நெருப்புப்பற்றி எரிந்ததினால் தீயநாற்றத்தை உடைய தாயின என்னும் இச்செய்தி நான் கூறிய தீமைதரும் உற்பாதங்களால் இராவணன் அழிவான் என்பதற்குக் காரணமாகும் எனக் கூறிய திரிசடை மீண்டும் சீதாதேவியை நோக்கிக் கூறத் தொடகினாள் என்பதாம்.

விளக்கம் :

இச் செய்யுளில் தான் கூறிய பலதிறப்பட்ட உற்பாதங்களின் பொருளை நன்குதெளிந்த திரிசடையானவள் இராவணன் அழிவது திண்ணம் என்பதை வற்புறுத்திக் கூறுகின்ற வல்லமைப் பாட்டை அறிகின்றோம்.

இராவணனின் முதல் மனைவியாகிய மண்டோதரியின் கூந்தல் மயிர்கள் நிலைமாறி வீழ்ந்து நெருப்பினால் எரிக்கப்பட்ட நாற்றத்தை உடையனவாய் விளங்கக்கண்ட உற்பாதத்தினால் ஏற்படப்போகும் விளைவுகளைத் திரிசடை தெளிந்துவிட்டாள். தெளிந்த திரிசடை,

மன்னவன் தேவி அம்மயன் மடந்தை தன்
பின்அவிழ் ஓதியும் பிறங்கி வீழ்ந்தன
துன்னரும் சுடர்சுடச் சுறுக்கொண்டு ஏறின

என மிக ஆர்வத்துடன் சீதாதேவிக்குச் செப்புகின்றாள் என்பதைப் பாட்டின் ஓசையில் வைத்துக் கம்பர் எமக்குக் காட்டுகின்றார்.

இன்னல் உண்டு எனும் இதற்கு ஏது ஈது

என முடிந்த முடிபாகத் துணிந்து கூறும் திரிசடையின் சிந்தனைக் குரல், நொந்து நைந்துருகிய சீதாதேவியின் உள்ளத்திலே என்றுமில்லாத ஓர் உவகை உணர்ச்சியை எழுப்பி விட்டதென்றே கூறலாம். சீதாதேவியின் உள்ளத்தில் எழுச்சிகொண்ட இன்பத் துடிப்பை இனிதுணர்ந்த திரிசடையும் புத்தெழுச்சி கொண்டவளாய் மீண்டும் மீண்டும் தான் கண்ட நன்நிமித்தங்களை விரைந்து சொல்லத் தொடங்கினாள் என்பதே கம்பரின் கருத்தாகும்.

கோளரி இரண்டு

50 என்றன வியம்பிவே றின்னுங் கேட்டியால்
இன்றிவ ணிப்பொழு தெழிந்த தோர்கனி
வன்றிணைக் கோளரி யிரண்டு மாறிலாக்
குன்றிடை யுழுவையங் குழுக்கொண் டீண்டியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு : என்று அ(ன்)ன இயம்பி (யவளாகிய திரிசடை சீதாதேவியை நோக்கி) இன்னும் கேட்டி ஆல், இன்று இவன் இப்பொழுது, ஓர் கனி எழுந்த வன்துணை கோளரி இரண்டு மாறு இ(ல்)லா குன்று இடை உழுவை அம் குழுக்கொண்டு ஈண்டியே.

பொருள்

என்று - (மேற்கூறிய வண்ணம்) கூறி, அன்ன இயம்பி - அவை போல்வன பிறவற்றையும் சொல்லி (யவளாகிய திரிசடை சீதாதேவியை நோக்கி) இன்னும் கேட்டி ஆல் - (யான் கூறப் போகின்ற உற்பாதங்களை) இன்னும் கேட்பாயாக, இன்று - இன்றைக்கு, இவண் - இந்த இடத்தில், இப்பொழுது - (நீர் என்னை உறக்கத்தால் எழுப்பிய) இப்பொழுதுதான், ஓர் கனி எழுந்த - ஒரு கனவு (எனக்குத்) தோன்றியது, (அக் கனி என்ன வென்றால்) வன்துணைக் கோளரி இரண்டு - வலிமை படைத்தனவும் ஒன்றைவிட்டொன்று பிரியாதனவுமாகிய சிங்கங்கள் இரண்டு, மாறு இல்லாக் குன்று இடை - உவமை சொல்லமுடியாத ஓர் பெரி[illegible]ன்கண்ணே உள்ள, உழுவை (அம்) குழு - புலிக்[illegible]த, கொண்டு - தமக்குத் துணையாகக் கொண்டு, ஈ[illegible]ய - அவற்றோடு சேர்ந்து வந்து (இத்தொடரில் வரும் ஈண்டி என்பது அடுத்த பாட்டில் வரும் கொண்டை என்னும் வினையைக்கொண்டு முடிவடையும்), உழுவை அம்குழு, என்பதில் அம் சாதியை.

பொழிப்பு

மேற்கூறிய வண்ணம் அவைபோல்வன பிறவற்றையும், சீதாதேவிக்குச் சொல்லியவளாகிய திரிசடை, மீண்டும் சீதாதேவியை நோக்கி இன்னும் தொடர்ந்து யான் கூறப்போகின்ற உற்பாதங்களைக் கேட்பாயாக. இன்று இப்பொழுதுதான் நான் ஓர் கனாக்கண்டேன். வலிமை படைத்தனவும் ஒன்றைவிட்ட ஒன்று பிரியாதனவுமாகிய ஆண் சிங்கங்கள் இரண்டு பெரிய மலையின் கண்ணேயுள்ள புலிக் கூட்டத்தைத் தமக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டு இவ்விடத்திலே வந்து சூழ்ந்து கொண்டன என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியின் உள்ளத்திலே உவகை உணர்ச்சியை அரும்பச் செய்வதில் மிக ஊக்கம் கொண்டவளாகிய திரிசடை தான் கண்ட கனி ஒன்றினைக் கூறி உவக்குங் குரலைக் கேட்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமைமிக்க இரண்டு ஆண் சிங்கங்கள் பெரிய மலையின் கண்ணே தங்கிய புலிக்கூட்டங்களைத் தமக்குத் துணையாகக் கொண்டு இங்கே வந்து கூடிவிட்டன எனத் திரிசடை கூறுகின்ற கனாச் செய்தியில் பொதிந்துள்ள குறிப்புப் பொருளைச் சீதாதேவி உணர்ந்து உயிர் தளிர்ப்பாள் என்பதற்கோர் ஐயமில்லை.

"கோளரி இரண்டு" எனக் கூறியவுடன் சீதாதேவியின் உள்ளத்தில் இராம இலக்குமணருடைய எண்ணம் தோன்றியிருக்கலாம். அந்த ஆண்சிங்கங்கள் மலைகளின்கண் உள்ள புலிக் கூட்டங்களைத் துணையாகச் சேர்த்துக்கொண்டன என்பதில் பொதிந்துள்ள குறிப்புப் பொருள் சீதாதேவிக்குத் தோன்றுமிருக்கலாம். ஏனெனில் இராம இலக்குமணர்கள் வானர வீரர்களைத் துணையாகக் கொண்ட செய்தியைச் சீதாதேவி அறியமுடியாது.

இங்ஙனம் சீதாதேவியின் உள்ளத்தில் புதிய எழுச்சியைத் தரக்கூடிய குறிப்புப் பொருள்களை இடையிடையே புகுத்தித் தான் கம்பரும் கலந்துவிட்டார் என்பதைக் காண்கின்றோம்.

மயிலும் போயது

51. வரம்பிலா மதகரி யுறையு மவ்வனம்
நிரம்புற வளைந்தன நெருக்கி நேர்ந்தன
குரம்பறு பிணம்படக் கொன்று மாறிலாப்
புரம்புக விருந்ததோர் மயிலும் போயதால்.

கொண்டுகூட்டு : வரம்பு இலா (இல்லா) மதகரி, உறையும் அவ்வனம் (அவ்வனத்தை இரண்டு கோளரிகள்) நிரம்பு உற வளைந்தன (வளைந்தனவாய்) நெருக்கி நேர்ந்தன (நேர்ந்து) குரம்பு அற, பிணம்படக்கொன்று, (அங்கு) இருந்ததோர் மயிலும் மாறு இலா (இல்லா) புரம் புக, போயது (ஆல்).

பொருள்

வரம்பு இலா - அளவு இல்லாத எண்ணில்லாத), மதகரி- மதங்கொண்ட யானைகள், உறையும் – (தங்கி) வாழ்கின்ற, அவ்வனம் – அந்தக் காட்டினை, நிரம்பு உற – நிரம்புதல் பொருந்த (வெற்றிடம் சிறிதும் இல்லாமல் எங்கும் நிறைந்து), வளைந்தன – சுற்றி வளைத்து முற்றுக்கை இட்டனவாய் (சூழ்ந்து கொண்டனவாய்), நெருக்கி – (வனத்தில் உள்ள யானைக் கூட்டங்களை) தாக்கி, நேர்ந்தன - எதிர்த்து, குரம்பு அறு –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லாத (அற்ற), பிணம்பட – பிணங்கள் (காடெங்கும்) உண்டாகும் வண்ணம் (பொருந்தும்படி) கொன்று - கொன்றன (கொன்றொழித்தன) இருந்தது, ஓர், மயிலும் – (அந்தக் காட்டின் கண் மத யானைகளின் நடுவிலே) இருந்த ஒப்பற்ற ஒரு மயிலும், மாறு இலா - பகை இல்லாத (பகைவரின் தாக்குதலை அறியாத), புரம்புக - அக்கோளரிகளின் (நகரத்தை அடைதற்குப் போயது – (அக்கோளரிகளுடன்) சென்றுவிட்டது.

பொழிப்பு

அக்கோளரிகள் இரண்டும், அளவில்லாத மதயானைகள் வாழ்கின்ற வனத்தினைச் சுற்றி வளைத்துக் கொண்டனவாய் எதிர்த்து அங்குள்ள மதயானைகள் யாவற்றையும் கொன்றொழித்தன. அவ் வனத்தில் இருந்த மயில் ஒன்றும் பகைவரின் தாக்குதலை அறியாத அக்கோளரிகளின் நகரத்தை அடைதற்குச் சென்று விட்டது என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில், தான் கண்ட கனவின் தொடர்ச்சியை எடுத்துக் கூறுகின்ற, திரிசடையின் எழுச்சிக் குரலைக் கேட்கின்றோம்.

இரண்டு கோளரிகள் புலிகளைத் துணையாகச் சேர்த்துக் கொண்டு வந்தன எனக்கூறிய திரிசடை, தொடர்ந்து அக் கோளரிகள் ஆற்றிய ஆண்மைச் செயல்களையும், அவற்றுல் நேர்ந்த பயனையும் ஆர்வத்துடன் சீதாதேவிக்குச் சொல்கின்றாள்.

அந்தக் கோளரிகள் இரண்டும் அளவிறந்த மதயானைகளைக் கொன்றொழித்தன. அம் மதயானைகள் வாழ்ந்த காட்டில் இருந்த மயில் ஒன்று, கோளரிகளுடன் சேர்ந்து அவைகள் வாழ்கின்ற நகருக்குச் சென்றுவிட்டன என்பதே திரிசடை சொல்லியதாகும்.

வரம்பிலா மதகரி உறையும் அவ்வனம் என்றவுடன் சீதாதேவியின் உள்ளத்தில் அரக்கர்களையும் இலங்கையையும் பற்றிய எண்ணந் தோன்றியிருக்கலாம். **குரம்பறு பிணம்படக் கொன்ற** என்றவுடன் அரக்கர்களைத் தன் தலைவனுகிய இராம பிரான் கொன்றொழிப்பான் என்ற எண்ணம் சீதாதேவியின் உள்ளத்தில் இடம் பெற்றிருக்கலாம். **மாறிலாப் புரம் புக இருந்ததோர் மயிலும் போயது** என்றவுடன், சீதாதேவி தனது விடுதலையை எண்ணி உயிர்தளிர்த்து உவகை பூத்திருப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் படிப்படியாகச் சீதாதேவியின் உள்ளத்தில் நம்பிக்கையும் உவகையும் அரும்பிப் போதாகி மலரும்வண்ணம், திரிசடையாக நின்று கம்பன் எழுப்புகின்ற கவிதைக்குரல் எம்மையும் சீதாதேவியாரின் நிலைக்குக் கொண்டுவருகின்றது.

வரம்பிலா மதகரி என்பது, குறிப்பாக அரக்கர்களைக் குறிக்கின்றது. வனம் என்பது, குறிப்பாக அரக்கர்கள் வாழும் இடமாகிய இலங்கையைக் குறிக்கின்றது. மயில் என்பது குறிப்பாகச் சீதாதேவியைக் குறிக்கின்றது.

மதகரி போன்ற அரக்கர் என்பதாம். மதகரி - உவமானம். அரக்கர் - உவமேயம். உருவப்பொலிவும், மதம் மிகுத்து அல்லல் புரிதலும், அடங்காமையும் பொதுத் தன்மைகள்.

காடு போன்ற இலங்கை என்பதாம். காடு - உவமானம். இலங்கை - உவமேயம். கொடுமை, அச்சம் என்பன பொதுத்தன்மைகள். அறத்தை மறந்து அல்லல் புரியும் கொடிய அரக்கர்கள் வாழ்தலால், இலங்கையைக் காடென்றார்.

மயில் போன்ற சீதாதேவி என்பதாம். மயில் உவமானம். சீதாதேவி - உவமேயம். சாயலும், அழகும் பொதுத் தன்மைகள். மயில் மழை முகிலைக் காணுது வனத்திலே நின்று வருந்துவது போலச் சீதாதேவியும் தன் தலைவனாகிய இராமபிரானைக் காணுது காடுபோன்ற சிறையில் இருந்து வருந்தினாள், என்னுமோர் குறிப்புப்பொருள் தோன்றுதலும் காண்க.

மாறிலாப் புரம் என்றது, பகைவரால் அல்லலுறுத (பகைவரில்லாத) அயோத்தியைக் குறிக்கின்றது.

வீடணன் கோயில்

52 ஆயிரந் திருவிளக் கமைய மாட்டிய
சேயொளி விளக்கமொன் றேந்திச் செய்யவள்
நாயகன் றனிமனை நின்று நண்ணுதன்
மேயினள் வீடணன் கோயின் மென்சொலாய்.

கொண்டுகூட்டு : மென் சொலாய்! செய்யவள், நாயகன் (இராவணன்) தனிமனை, நின்று, ஆயிரம் திருவிளக்கு அமையமாட்டிய, சேய் ஒளி, விளக்கம் (விளக்கு) ஒன்று ஏந்தி (யவளாய்) வீடணன், கோயில் (அரண்மனையை) நண்ணுதல் மேயினள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

மென்சொலாய் – மென்மையான (இனிய) மொழிகளை உடையவளே (இன்சொல்லை உடையவளே என்பதாம்) செய்யவள் - திருமகளானவள், நாயகன் – அரக்கர்களின் தலைவனுகிய இராவணனுடைய, தனிமனை நின்று - ஒப்பற்ற அரண்மனையின்கண் நின்று, ஆயிரம் திருவிளக்கு – ஆயிரம் அழகிய விளக்குகள், அமைய மாட்டிய – பொருந்த இணைக்கப்பட்ட (கொழுவிய) சேய் ஒளி - செவ்விய (சிவந்த) ஒளியை உடைய, விளக்கம் ஒன்று - (ஒன்று விளக்கும்) ஒரு விளக்கை, ஏந்தி - (தனது) கையிற் தாங்கி (எடுத்து)க் கொண்டு, வீடணன் கோயில் - வீடணனுடைய அரண்மனையை, நண்ணுதல் மேயினள் - அடைதலானுள்.

பொழிப்பு

மென்மையான மொழிகளை உடையாய்! திருமகளானவள், இராவணனுடைய அரண்மனையில் நின்று, அழகான ஆயிரம் விளக்குகள் பொருந்த இணைக்கப்பட்ட, சிவந்த ஒளியையுடைய ஒரு விளக்கைத் தனது கையில் எடுத்துக்கொண்டு, வீடணனுடைய அரண்மனையை அடைதலானுள் என்பதாம்,

விளக்கம்

இச்செய்யுளில் சீதாதேவியின் உள்ளத்திலே உவகைத் தேனைச் சொரியும் இனிய பொருள் பொதிந்த கனைப்பகுதியைக் கூறுகின்ற திரிசடையின் அமுதக்குரலைக் கேட்கின்றோம்.

கனவைச் சொல்கின்ற சீதாதேவிக்கும் உள்ளக்கிளர்ச்சியையும், உவகைப் பெருக்கையும் அள்ளிச் சொரிகின்ற அமுதப் பெருக்காகக் கனவின் பொருள் அமைந்திருக்கின்றது.

செய்பவள் நாயகன் தனிமனை
நின்று நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயில்

என்பதில் திருமகள் இராவணனின் அரண்மனையை விட்டு வீடணனின் அரண்மனையை அடைந்தாள் என்னும் பொருள் வெளிப்படையாக விளங்குகின்றது. கனவைச் சொல்லிய திரிசடையின் உள்ளத்திலே தன் தந்தையாராகிய வீடணனே இனிவரும் இலங்கையின் மன்னனுவான், என்னும் இன்ப எழுச்சியும், கனவைக் கேட்கின்ற சீதாதேவியின் உள்ளத்திலே, தன் ஆருயிர்த் தலைவனுகிய இராமபிரான், அரக்கர் தலைவனுகிய இராவணனைக் கொன்று தன்னை ஆட்கொள்வார் என்னும் ஆர்வ எழுச்சியும் அலையெறிந்து மோதுகின்றனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் இருவர் உள்ளத்திலும் இனிய உணர்ச்சிகளை எழுப்பிய கம்பர், எமக்கும் அரிய கவிதை விருந்தளித்துக் களிக்கின்றார்.

அன்னையே! இன்னமுந் துயில்

53. பொன்மனை புக்கவப் பொருவில் போதினில்
என்னைநீ யுணர்த்தினை முடிந்த தில்லென
அன்னையே! யதன்குறை காணென் றுயிலை
இன்னமுந் துயில்கென விருகை கூப்பினாள்.

கொண்டுகூட்டு : பொன் (வீடணன்) மனை புக்க அப்பொரு இல் போதினில், நீ, என்னை, உணர்த்தினை, (ஆனபடியால் அக்கனு) முடிந்தது இல், என (என்று திரிசடை சொல்ல) ஆய் இழை (ஆகிய சீதாதேவி) அன்னையே, அதன் குறை காண் என்று (சொல்லி) இன்னமும் துயில் என (சீதாதேவி) இருகை கூப்பினாள்.

பொருள்

பொன் – திருமகளானவள், மனை - (எனது தந்தையாராகிய வீடணனின்) அரண்மனையை, புக்க – அடைந்த, அப் பொருவில் போதினில் – அந்த ஒப்புச்சொல்ல முடியாத (தன்னிகரற்ற) நேரத்தில், நீ - நீ, என்னை – (உறக்கத்தில் மூழ்கிக் கனுக் கண்டவண்ணமாய்க் கிடந்த) என்னை, உணர்த்தினை– (துயிலில் நின்றும்) எழுப்பிவிட்டாய், (ஆனபடியால்) முடிந்தது இல்-நான் கண்ட கனு முடிவுபெறவில்லை. என - என்று திரிசடை சொல்ல, (அதனைக் கேட்ட) ஆயிழை - (ஆராய்ந்து செய்த அணிகலன்களையுடையவளாகிய) சீதாதேவி, (திரிசடையை நோக்கி) அன்னையே – (என்) அன்னையே, (தாயே) அதன் குறைகாண்- அக்கனுவின் குறையைக் காண்பாயாக, என்று - என்று சொல்லி, இன்னமும் துயில்-(அக்கனுவின் குறையைக் காணும் பொருட்டு இன்னமும் உறங்குவாயாக, என என்றும் சொல்லி, இருகை கூப்பினாள் - (தனது) இரண்டு கைகளையும் குவித்து வணங்கினாள்.

பொழிப்பு

திருமகளானவள் என் தந்தையாராகிய வீடணனின் அரண்மனையை, அடைந்த அந்த நேரத்தில், உறங்கிக்கிடந்த என்னை நீ எழுப்பிவிட்டாய், அதனால் அக்கனு முடியவில்லை என்று திரிசடை கூறினாள். அதனைக் கேட்ட சீதாதேவி திரிசடையை வணக்கி, என் அன்னையே! அக்கனுவின் குறையைக் காணும் பொருட்டு இன்னமும் உறங்குவாயாக என்று வேண்டினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச்செய்யுளில் இன்னமும் திரிசடையைத் துயில்கொண்டு கனைக்காணும்படி வணங்கிக் கேட்கின்ற சீதாதேவியின் குழந்தை உள்ளத்தையும் ஆர்வத் துடிப்பையும் அறிகின்றோம்.

கண்ட கனவின் பயனைப் பகர்ந்து பகர்ந்து தன் ஆவிக்கு அமுதம் ஊட்டிய திரிசடையின் அன்பையும், ஆதரவையும் எண்ணிய சீதாதேவி, தன் அன்னையையும் மறந்துவிட்டாள். பெற்ற அன்னையினும் பேரன்பு காட்டித் தான், உற்ற இன்னலைக் கண்டு உருகுகின்ற திரிசடையை, ஆனந்த மேலீட்டினால் அன்னையே எனற்கூவி அழைக்கின்ற சீதாதேவியின் குரலை அப்படியே கம்பரும் கேட்டுத் தன்னை மறந்துவிட்டார். கனவின் குறையைக் கண்டு முடித்தற்காக இன்னமும் துயில்கொள்வாயாக எனத் திரிசடையை வேண்டுகின்ற சீதாதேவியின் குழந்தை உள்ளத்தை எண்ண எண்ண எமக்கும் இரக்கம் வருகின்றது.

அன்னையே அதன்குறை காண்என்று ஆயிழை
இன்னமுந் துயில்கென இருகை கூப்பினாள்

என்னும் தொடர்களைப் படிக்கும்பொழுது, கூப்பிய கைகளுடன் திரிசடையைக் கும்பிடுகின்ற சீதாதேவியின் தோற்றம் எமது மனத்திரையில் நிழலாடுகின்றது.

ஓர் அணிகலமும் அணியாமல் இருக்கின்ற சீதாதேவியை, ஆயிழை எனக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். அவள் விரைந்து அணிகலன்களை அணிந்து ஆயிழையாக விளங்குவாள் என்பதே அவர் கருத்தாகும். துன்பமே உருவமாக இருந்து கண்ணீர் பெருக்கிய சீதாதேவி, திரிசடை கூறிய கனைச்செய்தியால் இன்பமே உருவமாக இருக்கின்றாள் எனக்கண்ட கம்பரின் கவிதை உள்ளம் உடனே அவளுக்கு, அணிகலன்களை அணிந்து ஆயிழையாகக் கண்டு ஆனந்தம் அடைகின்றது.

ஆயிழை இருகை கூப்பினாள்

எனக் கம்பர் கூறுகின்ற குரலிலே அமைந்துகிடக்கும் ஆர்வத்தை உணருங்கள். சீதாதேவியை ஆயிழையாகக் கண்டு மகிழ்வதில், இராமபிரானைக் காட்டிலும் கூடிய ஆசை கம்பருக்கிருக்கின்றதென்பதைக் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. காவலரக்கியரின் துயிலெழுச்சி
[54 – 60 செய்யுள்]

மேற் கூறியவண்ணம் சீதாதேவி சிந்தித்துக் கொண்டிந்த தருணத்தில், இராமபிரானால் அனுப்பப்பட்டவனாகிய ஆற்றல் வாய்ந்த அனுமான் என்னும் தூதுவன், அந்த அசோக வனத்தை வந்தடைந்தான். இங்ஙனம் அசோகவனத்தை அடைந்த அனுமான் சீதாதேவி சிறையிருக்கும் இடத்தைக் கண்டுவிட்டான். (சீதாதேவியைக் கண்டிலன்).

அனுமான் சீதாதேவி சிறை இருக்கும் இடத்தைச் சென்றடைந்த அதேநேரத்தில், சீதாதேவியைக் காவல் புரியும் காவலரக்கியர்கள், (முன்) கள்ளுண்ட களிமயக்கத்தினால் உறங்கிய உறக்கம் நீங்கி விழித்தெழுந்தார்கள். வேல், வாள் முதலிய போர்க்கருவிகளைத் தாங்கியவண்ணம் சீதாதேவியைச் சுற்றித் திரண்டார்கள்.

அங்ஙனம் திரண்ட அரக்கியர்களிற் சிலர், நெற்றியில் கண்களை உடையவர்கள். சிலர், அஞ்சத்தக்க பார்வையை உடையவர்கள். சிலர், பற்களுக்கிடையில் சிங்கம், யாளி, பேய் முதலியனவைகள் கிடந்து உறங்கத்தக்க குகைபோன்ற வாயையுடையவர்கள். வேறுசிலர், பத்துக்கைகளையும் ஒரு தலையினையும் கொண்டவர்களாகவும், இருபது கைகளையும் இரண்டு தலைகளையுங் கொண்டவர்களாகவும் விளங்கினர். இன்னுஞ் சிலர், அச்சந்தரும் வடிவத்தை உடையவராகியும், பெரியமலை போன்ற பல கொங்கைகளை உடையவர்களாகவும் விளங்கினர் சிலர், சூலம், வாள், கைவேல், தோமரம் முதலிய படைகளை எறியக்கற்ற கைகளை உடையவர்களாகவும், சிலர், ஆலம், என்னும் நஞ்சே பெண்ணுருக் கொண்டாற் போன்ற கரிய உடம்பை உடையவர்களாகவும், மழுப்படையைத் தாங்கிய சிவபெருமானும் அஞ்சத்தக்க ஆற்றல் படைத்தவர்களாகவும் இருந்தனர்.

இங்ஙனம் பலதிறப்பட்ட வடிவமும் செயலும் உடையவர்களாய் விளங்கிய காவலரக்கியர்களிற் சிலர், தங்கள் மிருகத் தன்மையான குணத்துக்குப் பொருத்தமான யானை, புலி, நாய், நரி முதலிய மிருகங்களின் முகங்களுடன் விளங்கினர். சிலர் முதுகிலே பொருந்திய முகத்தினராயும், மூன்று கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உடையவராயும், கொடுமையே புரிகின்றவராயும், புகை எழுகின்ற வாயை உடையவராயும் விளங்கினர். இத்தகைய பண்புகளை உடையவரும், மனத்தினால் எண்ணமுடியாத வல்லமை வாய்ந்தவரும், கண்ணினால் அளக்கமுடியாத தோற்றப் பொலிவைக் கொண்டவரும், பெண்ணென்னும் பெயரை வைத்துக்கொண்டு திரியும் தன்மை படைத்தவருமாகிய காவலரக்கியர்கள் திடுமென விழித்தெழுந்து சீதாதேவியைச் சுற்றிக் கொண்டார்கள்.

வீரத்தூதன்

54. இவ்விடை யண்ணலவ் விராமன் ஏவிய
வெவ்விடை யனையபோர் வீரத் தூதனும்
அவ்விடை யெய்தின னரிதி னேக்குவான்
நொவ்விடை மடந்ததன் னிருக்கை நோக்கினன்.

கொண்டுகூட்டு : இவ்விடை அண்ணல் அவ் இராமன் ஏவிய வெவ்விடை அனைய போர் வீரத் தூதனும், அரிதின் நோக்குவான் (நோக்கி வருபவனாய்) அவ்விடை எய்தினன், நொவ் இடை மடந்தை தன் இருக்கை நோக்கினான்.

பொருள்

இவ்விடை - மேற்கூறிய வண்ணம் சீதாதேவி எண்ணிக் கொண்டிருந்த தருணத்தில், அண்ணல் - பெருந்தன்மையுடைய வீரனாகிய, அவ்விராமன் ஏவிய - அந்த இராமபிரான் விடுத்த வெவ்விடை அனைய - விரும்பத்தக்க காளை எருத்தைப்போன்ற வனும் (வெவ்விடை அனைய என்பதற்கு பயத்தைத் தரத்தக்க காளை எருதைப் போன்றவன் எனவும் பொருள் கூறலாம்) போர் வீரத் தூதனும் – போர் வீரனாய் விளங்குகின்றவனுமாகிய அனுமான் என்னும் பெயரையுடைய தூதுவனும், அரிதின் நோக்குவான் - அருமையாகக் கூர்ந்து பார்த்து வருகின்றவனாய், அவ்விடை – (சீதாதேவியிருந்த) அசோகவனமாகிய அவ்விடத்தை, எய்தினன் – அடைந்து, நொவ் இடை - துன்பத்தின் இடையே கிடந்து வருந்துகின்ற, மடந்ததன் - இளமை பொருந்திய சீதாதேவியின், இருக்கை - உறைவிடத்தை, நோக்கினன் - பார்த்தான் (கண்டான்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொவ் இடை என்பதற்கு (மிகவும் மெல்லிய தன்மை யுடன் விளங்குவதால்) வருந்துகின்ற இடையையுடைய சீதா தேவி எனப் பொருள் கூறுவாரும் உளர்.

பொழிப்பு

மேற்கூறிய வண்ணம் சீதாதேவி எண்ணிக்கொண்டிருந்த தருணத்தில், பெருந்தன்மை பொருந்திய இராமபிரானால் அனுப்பப் பட்டவனும், அச்சத்தைத் தருகின்ற இளம் காளைபோன்ற ஆற்றல் வாய்ந்தவனும், போர் வீரனுய் விளங்குகின்றவனுமாகிய அனுமான் என்னும் பெயருடைய தூதன் மிகக் கூர்ந்து கூர்ந்து நாலாபக்கமும் பார்க்கின்றவனுய்ச் சீதாதேவி இருந்த அசோக வனமாகிய அவ்விடத்தை அடைந்து, துன்பத்தினிடையேகிடந்து வருந்துகின்றவனும், இளமை பொருந்தியவளுமாகிய சீதாதேவியின் உறைவிடத்தைக் கண்டான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவி சிறை இருக்கின்ற அசோக வனத்தை அனுமான் கண்ட செய்தி கூறப்படுகின்றது.

பெருந்தன்மையும், ஆற்றலும் வாய்ந்த இராமபிரானால் சீதாதேவி இருக்கும் இடத்தைக் கண்டு வரும் வண்ணம் அனுப்பிய அனுமானின் ஆற்றலைக் கம்பர் வியந்து பாராட்டுகின்றார்.

அண்ணல் அவ்இராமன் ஏவிய
வெவ்விடை அனையபோர் வீரத்தூதன்

என்னும் தொடர்களால் அனுமானின் ஆற்றலைச் சொல்லிச் சொல்லி ஆனந்தம் அடைகின்ற கம்பரின் எழுச்சியைக் காண்கின்றோம்.

இத்தொடரில் இராமன் ஏவிய தூதன் எனவும், வெவ்விடை அனையதூதன் எனவும், போர்வீரத்தூதன் எனவும் சொல்லிச் சொல்லி இன்பம் அடையத்தக்கவகையில் சொற்களை அமைத்திருக்கும் கம்பரின் கவித்திறன் போற்றத்தக்கதாகும்.

சீதாதேவியைத் தேடும் வண்ணம் பலதிசைகளுக்கும் தூதுவர்களை அனுப்பின போதிலும், தென் திசைக்கு ஏகுகின்ற அனுமானை இராமபிரான் தேடி அழைத்துத் தன் அன்புத் தலைவியின் உருவ அடையாளங்கள் யாவற்றையும் அறிவுறுத்தி, அத்துடன் அமையாது தான் அணிந்துள்ள மோதிரத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளமாக அளித்து விடுத்த சிறப்புத் தோன்ற 'அண்ணல் அவ் இராமன் ஏவிய தூதன்' எனக் கூறினர்.

வெவ்விடை அனைய தூதன் என்பதில் வெவ்விடை உவமானம். அனுமான் (வீரத்தூதன்) உவமேயம். அஞ்சாமையும் பெருமித நடையும், எடுத்த வினைக்கு என்ன இடையூறு வந்தாலும், அதனைப்போக்கி வெற்றிகொள்ளுதலும் பொதுத்தன்மைகளாகும்.

மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து

எனவரும் திருக்குறளையும் அதற்கு உரை கூறிய பரிமேலழகர் "பகடு மருங்கொற்றியும் (பக்கங்களில் உராய்ந்தும்) மூக்கு கூன்றியும் (நிலத்தில் மூக்கை ஊன்றியும்) தாடவழ்ந்தும் (கால்களை மடக்கி வைத்துத் தவழ்ந்தும்) அரிதின் உய்க்கு மாறு போல (மிக அரிதாக வண்டியை இழுத்துச் செல்லுதல் போல) தன் மெய் வருத்தம் நோக்காது எடுத்த முயற்சியில் வெற்றி பெறுவான் என்பதை உணர்த்த பகடு அன்னான் (எருது போன்றவன்)" என்று கூறப்பட்டதென விளக்கம் தருதலையும் நோக்குக. பகடு - எருது. வெவ்விடை என்பதும் எருத்தையே குறித்தது.

இனி, அனுமான் எடுத்த முயற்சிக்கு ஏற்படும் தடைகளை யெல்லாம் வெல்லும் செயற்றிறனுடன் பகைவர்களை எதிர்த்து வெல்லும் போர்த்திறனும் மிக்கவன் என்பதை உணர்த்த போர் வீரத்தூதன் எனக் கூறினர்.

இங்ஙனம் செயற்றிறனும், போர்த்திறனும் பொருந்திய அனுமான் தூதுரைக்கும் சொல்லாற்றலும், நீதிநூற் பயிற்சியும் மிக்கவன் என்பதை உணர்த்தப் போர் அனுமான் எனக் கூறாது போர்த்தூதன் எனக்கூறினர். அனுமானின் சொல்லாற்றலை இராவணனுக்கு அவன் கூறும் நீதி உரைகளினாலும், சீதாதேவியாருக்கு இராமபிரானின் நிலைமையைக் கூறும் ஆராய்வோடு கலந்த அன்புரைகளினாலும், சீதாதேவியாரைச் சிறைச்சாலையிற் கண்டபின்பு இராமபிரானிடம் சென்று கூறும் அன்பும், அறனும், பெருமிதமும் கலந்த அரிய உரைகளாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொள்ளலாம். இச் சிறப்புக்களைக் கொண்டே அனுமானைச் சொல்லின் செல்வன் எனச் சொல்வார்கள்.

எய்தினன் எய்தி என முற்றெச்சமாக நின்றது.

துயில் நீங்கிய அரக்கியர்

55 அவ்வயி னரக்கிய ரறிவுற் றம்மவோ
செவ்வையி றுயினமைச் செய்த தீதெனு
எவ்வயின் மருங்கினு மெழுந்து வீங்கினர்
வெவ்வயின் மழுவெழுச் சூல வெங்கையா.

கொண்டுகூட்டு : அவ்வயின் (அப்பொழுது) அரக்கியர் அறிவு உற்று, (துயில் நீங்கி) அம்மவோ செவ்வை இல் துயில் நமை, ஈது செய்தது எனு, (என்று கூறி) வெவ் அயில் மழு எழு சூலம் வெங்கையார் (ஆகி) எவ்வயின் மருங்கினும் எழுந்து வீங்கினர்.

பொருள்

அவ்வயின் - (அனுமான் அசோகவனத்தைக் கண்டதாகிய) அப்பொழுது, அரக்கியர் – (சீதாதேவியாருக்குக் காவலாக உள்ள) அரக்கிகள் (இராட்சதிகள்) எல்லோரும், அறிவுஉற்ற-துயிலில் நின்றும் எழுந்து (தூக்கம் நீங்கி) அம்மவோ – (தாங்கள் நீண்ட நேரம் துயில் கொண்டுவிட்டதை நினைந்து) அம்மவோ என ஆச்சரியப்பட்டவர்களாய் (அம்மவோ என்பது ஆச்சரியத்தை உணர்த்தும் ஓர் குறிப்புச் சொல்லாகும். இரக்கக் குறிப்புச்சொல் எனவும் கூறலாம்) செவ்வை இல் துயில் – நல்லதல்லாத உறக்கம், நமை - நம்மையும், ஈது – இந்நிலை (காவல் செய்தலை மறக்கும் நிலை) செய்தது எனு – அடையச்செய்தது என்று சொல்லி, வெவ் அயில் – கொடிய வேற்படையையும், மழு – மழுப்படையையும், எழு – வாளதடியையும், சூலம் – சூலப்படையையும், வெங்கையார் - கொடிய கைகளில் கொண்டவர்களாய் (தாங்கியவர்களாய்) எவ்வயின் மருங்கினும் - (சீதாதேவியைச் சுற்றி) எல்லாப் பக்கங்களிலும், எழுந்து - எழுந்திருந்து, வீங்கினர் – திரண்டார்கள்.

பொழிப்பு

அனுமான் அசோகவனத்தை அடைந்த நேரத்தில் சீதாதேவியாருக்குக் காவலாயுள்ள அரக்கியர் எல்லோரும் உறக்கத்தில் நின்றும் எழுந்து எங்களையும் நல்லதல்லாத உறக்கம் வந்து மயக்கி விட்டதே என எண்ணியவர்களாய், வேல், மழு, சூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய படைகளைக் கையில் தாங்கிய வண்ணம் சீதாதேவியாரைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் திரண்டிருந்தார்கள்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியாரை அச்சுறுத்தி அல்லற் படுத்தும் காவலரக்கியர்கள் துயில் எழுந்து காவல் காக்கின்ற செயல் கூறப்படுகின்றது.

ஆற்றல்மிக்க அனுமான் அசோகவனத்தைக் கண்ட அதே நேரத்தில் துயில்கொண்ட காவல் அரக்கியர்கள் எல்லோரும் எழுந்து கொல்லும் கொடிய படைகளைத் தாங்கிய கைகளுடன் சீதாதேவியாரைச் சுற்றி இருந்தார்கள் என்பதாம். அம்மவோ என்னும் தொடரை இரக்கக் குறிப்பாகக்கொண்டு துயில் எழுந்த அரக்கியர்கள் சீதாதேவியாரை அச்சுறுத்தி அல்லல் புரியப்போகின்றார்களோ என எண்ணிக் கம்பர் இரக்கங் கொண்டார் எனவும் கூறலாம், வீங்குதல் - மிகுதல்.

கொடிய நோக்கினர்

56 வயிற்றிடை வாயினர் வளைந்த நெற்றியிற்
குயிற்றிய விழியினர் கொடிய நோக்கினர்
எயிற்றினுக் கிடையிடை யானை யாளிபேய்
துயிற்கொள்வெம் பிலனெனத் தொட்ட வாயினர்.

கொண்டுகூட்டு : (அவ்வரக்கியர்கள்) வயிற்றிடை, வாயினர், வளைந்த நெற்றியில், குயிற்றிய விழியினர், கொடிய நோக்கினர், எயிற்றினுக்கு இடையிடை யானை, யாளி, பேய் துயில்கொள் வெம்பிலன் என தொட்டவாயினர்.

பொருள்

(அவ்வரக்கியர்களிற் சிலர்) வயிற்றிடை - வயிற்றின்கண், வாயினர் - வாயை உடையவர்கள், வளைந்த - வளைவாக உள்ள, நெற்றியில் - நெற்றியின் நடுவிலே, குயிற்றிய - (இயற்கையாகவே) பதித்து வைக்கப்பட்ட (அமைக்கப்பட்ட) விழியினர் - கண்ணையுடையவர்கள், கொடிய நோக்கினர் - (கண்டோர்) அஞ்சத்தக்க பார்வையுடையவர்கள், எயிற்றினுக்கு இடை இடை - பற்களுக்கு இடை இடையே, (நடுவே நடுவே) யானை - யானைகளும், யாளி - யாளிகளும், பேய் - பேய்களும், துயில் கொள் - உறங்கிக்கிடக்கின்ற (நித்திரை கொள்கின்ற) வெம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய, பிலன் என - (மலையின் கண் உள்ள) குகையைப்போல தொட்ட - அகழ்ந்து ஆக்கப்பட்ட, வாயினர் - வாயை உடைய வர்கள்.

பொழிப்பு

அக்காவலரக்கியர்களிற் சிலர், வயிற்றின்கண் வாயையுடை யவர்கள். வளைந்த நெற்றியில் இயல்பாகவே அமைக்கப்பட்ட கண்களை உடையவர்கள். அஞ்சத்தக்க பார்வையைக் கொண்ட வர்கள். பற்களுக்கு இடையிடையே யானைகளும் யாளிகளும், பேய்களும், உறங்கிக் கிடக்கின்ற பெரிய குகைபோன்ற வாயை உடையவர்கள்.

விளக்கம்

இச்செய்யுளில் சீதாதேவிக்குக் காவலாக இருக்கின்ற காவல் அரக்கியர் சிலரின் அஞ்சத்தக்க உருவங்கள் சொல்லப் படுகின்றன.

சீதாதேவியை அச்சுறுத்தித் தன்னை விரும்பச் செய்யும் வண்ணம் கட்டளையிட்டு, இராவணனால் நிறுத்தப்பட்ட காவல ரக்கியர்கள் உள்ளம்போலவே, உருவத்திலும் கொடியவர்கள் என்பதைக் கம்பர் சொல்லுந்திறன் பாராட்டத்தக்கதாகும்.

இங்ஙனம் அஞ்சத்தக்க விகார உருவம் உடையவர் களாக அரக்கர்களையும், அவுணர்களையும் பேய்களையும் கூறுதல் கவி மரபாகும்.

வெங்கனல் சொரியும் கண்ணர்
விரிகடற் புரைபேழ் வாயார்.

எனக் கந்தபுராணத்தில் அவுணர்களின் உருவத்தையும்,

வன்பிலத்தொடு வாதுசெய் வாயின
வாயினால் நிரம்பாத வயிற்றின.

எனக் கலிங்கத்துப்பரணியில் பேய்களின் உருவத்தையும் கூறி யிருத்தல் காண்க.

துயில் கொள்வாய் எனவும், பிலனெனத் தொட்டவாய் எனவும் கொண்டுகூட்டுக.

துயில்கொள்வாய் என்பது எதுகை நோக்கித் துயிற் கொள்வாய் என விகாரமாயிற்று.

வெருவரும் தோற்றத்தர்

57. ஒருபது கையின ரொற்றைச் சென்னியர்
இருபது தலையின ரிரண்டு கையினர்
வெருவரு தோற்றத்தர் விகட வேடத்தர்
பருவரை யெனமூலை பலவு நாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: ஒருபது (பத்து) கையினர், ஒற்றைச் சென்னியர், இருபது தலையினர், இரண்டு கையினர், வெருவரு (அச்சந்தரும்) தோற்றத்தர், விகட வேடத்தர், பருவரை எனமுலை, பலவும் நாற்றினர்.

பொருள்

(சிலர்) ஒருபது கையினர் – பத்துக்கைகளை உடையவர். ஒற்றைச் சென்னியர் - ஒரு தலையினை உடையவர். (சிலர்) இருபது தலையினர் - இருபது தலைகளை உடையவர், இரண்டு கையினர் – இரண்டு கைகளை உடையவர், வெருவரு தோற்றத்தர் - (கண்டோர்) அச்சங் கொள்ளக்கூடிய வடிவத்தை உடையவர், விகடத்தர் - நகைப்பை உண்டாக்கும் கோலம் உடையவர். (விகட வேடத்தர் என்பதற்கு, காண்பதற்கு வேறுபட்ட (விகாரமான) தோற்றத்தை உடையவர் என்றும் பொருள் கூறலாம்). பருவரை என - பருத்த (பெரிய) மலைகளைப்போன்ற, முலை பலவும் - கொங்கைகள் பல, நாற்றினர்- தொங்கப்பெற்றவர் (தூங்கப்பெற்றவர்).

பொழிப்பு

அக்காவல் அரக்கியர்களிற் சிலர் பத்துக் கைகளையும், ஒரு தலையினையும் உடையவர்களாகவும், சிலர் இருபது தலைகளையும் இரண்டு கைகளையும் உடையவர்களாகவும். காண்பவர்க்கு அச்சத்தைத் தரும் வடிவத்தை உடையவர்களாகவும், நகைப்பை உண்டாக்கும் கோலத்தை உடையவர்களாகவும், பெரிய மலைகளைப் போன்ற கொங்கைகள் பலவற்றைக் கொண்டவர்களாகவும் விளங்கினர் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் காவலரக்கியரின் பலதிறப்பட்ட வடிவ வேறுபாடுகள் கூறப்படுகின்றன. இங்ஙனம் அச்சம் விளைவிக்கக்கூடிய கோர உருவத்தினராகிய அரக்கியர்களின் தோற்றத்தை அப்படியே படம் பிடித்தாற்போலக் கம்பர் எமக்குக் கூறுகின்றார்.

ஆலம்போன்ற மேனியர்

58. சூலம்வாள் சக்கரந் தோட்டி தோமரம்
காலவேல் கப்பணங் கற்ற கையினர்
ஆலமே யுருவுகொண் டனைய மேனியர்
பாலமே தனித்தவன் பெருவும் பான்மையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு : சூலம், வாள், சக்கரம், தோட்டி, தோமரம், காலவேல், கப்பணம் (என்னும் படைக்கலங்களை செலுத்தக்) கற்ற கையினர், ஆலமே உருவு கொண்டு அனைய மேனியர், (ஆகிய அவ் அரக்கியர்கள்) பாலமே தரித்தவன் வெருவும் பான்மையார்.

பொருள்

சூலம் – சூலப்படையும் (முத்தலை வேலும்), வாள் - வாட் படையும், சக்கரம் - சக்கரப் படையும், தோட்டி - தோட்டிப் படையும், தோமரம் – இரும்புலக்கையும், காலவேல் – காலனைப்போன்ற (இயமனைப்போன்ற) கொடிய வேற்படையும், கப்பணம் - கைவேலும், (ஆகிய இப்படைக்கலங்களை எறிதற்குக்) கற்ற - பழகிய (பயிற்றப்பட்ட), கையினர் - கைகளை உடையவர்கள், ஆலமே - நஞ்சுதான் (விடம்தான்), உருவு கொண்டு அனைய - பெண்களின் உருவத்தைக்கொண்டு வந்தாற் போன்ற, மேனியர் - (கருமையான) உடம்பினை உடையவர், பாலமே தரித்தவன் - மழுப்படையை (கையிலே) உடையவனான சிவபெருமானும், வெருவும் - அச்சம் கொள்ளும்படியான, பான்மையார் – வன்மை (தன்மை) படைத்தவர்கள்.

பொழிப்பு

சூலம், வாள், சக்கரம், தோட்டி, தோமரம், காலவேல், கைவேல் ஆகிய படைக்கலங்களைச் செலுத்துதற்குக் கற்ற கைகளை உடையவரும், நஞ்சுதான் பெண்களின் வடியத் தாங்கி வந்தது போன்ற கரிய உடம்பினை உடையவரும், மழுப்படையைத் தாங்கிய சிவபெருமானும் அஞ்சத்தக்க வன்மை படைத்தவர்களுமாய் விளங்கினர் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் காவலரக்கியரின் அஞ்சத்தக்க வடிவ வேறுபாடுகளை மீண்டுந் தொடர்ந்து கூறுகின்ற கம்பனின் குரலைக் கேட்கின்றோம்.

அரக்கியர்களின் உடம்பின் கரிய நிறத்தை உணர்த்த விரும்பிய கம்பர், ஆலகாலவிடம் என்னும் நஞ்சினைத் தேடி எடுத்துக் கொண்டார்.

ஆலமே உருவு கொண்டனைய மேனியர்

எனவருந் தொடரை நோக்குக. ஆலம் என்னும் நஞ்சு, பெண்களின் உருவத்தைத் தாங்கிவந்தாற் போன்ற மேனி என்பது, இல் பொருள் உவமை, ஆலம் பெண்களின் உரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தைத் தாங்கி வருதல் என்றும் நிகழாததொன்றாகும். எனவே ஆலத்தின் உருவமான பெண்கள், உலகில் இல்லாத பொருளாகும் என்பதாம்.

பெண்களின் உருவத்தைக்கொண்ட ஆலம் - உவமானம். அரக்கியரின் மேனி (உடம்பு) - உவமேயம். கரிய நிறமும், அச்சந்தருதலும் - பொதுத்தன்மைகள்.

ஆலகாலவிடத்தை அமுதாக உண்ட சிவபெருமானும் அஞ்சத்தக்க வன்மை படைத்தவர்கள், ஆலமே உருவு கொண்டாற் போன்ற கரிய உடம்பை உடைய அரக்கியர்கள் என்பதே கம்பரின் கருத்தாகும். நிறத்தால் ஆலத்தை (நஞ்சை) ஒத்தவர்களாயினும் குணத்தால் (கொடுமையால்) ஆலத்தினும் மிக்கவர்கள் என்பதாம்.

பாலம் தரித்தவன் என்பதற்குக் கங்காசலத்தைச் சடையில் தரித்தவனென்றும், நெற்றியிலே கண்ணைக்கொண்டவன் என்றும் பொருள் கூறுவாரும் உளர்.

புகையும் வாயினர்

59. கரிபரி வேங்கைமாக் கரடி யாளிபேய்
அரிநரி நாயென வணிமு கத்தினர்
வெரிநுறு முகத்தினர் விழிகண் மூன்றினர்
புரிதரு கொடுமையர் புகையும் வாயினர்.

கொண்டுகூட்டு : (அக்காவல் அரக்கியர்களிற் சிலர்) கரி, பரி, வேங்கைமா, கரடி, யாளி, பேய், அரி, நரி, நாய், என அணிமுகத்தினர், வெரிந் உறு முகத்தினர், விழிகள் மூன்றினர், (என்றும்) புரிதரு கொடுமையர், புகையும் வாயினர்.

பொருள்

கரி – யானையும், பரி - குதிரையும், வேங்கைமா - புலியும், கரடி - கரடியும், யாளி - யாளியும், பேய் - பேயும், அரி – சிங்கமும், நரி – நரியும், நாய் – நாயும், என - என்று கூறப்படும் இவ்விலங்குகளின் முகங்களை, அணி - பொருந்திய, முகத்தினர் - முகத்தினை உடையவர் (முகங்களைக் கொண்டவர்) வெரிந் உறு - முதுகில் பொருந்திய, முகத்தினர் - முகத்தையுடையவர், விழிகண் மூன்றினர் - விழிக்கின்ற கண்கள், மூன்றினை உடையவர் (விழிகள், எனப் பாடங்கொண்டு மூன்று கண்களை உடையவர் என்றும் கூறலாம்) புரிதரு கொடுமையர் - செய்கின்ற கொடுவினைகளையே உடையவர் (கொடுமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களைச் செய்தலையே பண்பாகக் கொண்டவர் என்பதாம்) புகையும் வாயினர் - (சினத்துக்கும் தீமைக்கும் அறிகுறியாக எப்பொழுதும்) புகைந்து கொண்டே இருக்கும் வாயினை உடையவர்கள்.

பொழிப்பு

காவல் அரக்கியர்களிற் சிலர் யானை, குதிரை, புலி, கரடி யாளி, பேய், சிங்கம், நரி, நாய் என்னும் விலங்குகளின் முகங்க களைப் போன்ற முகங்களை உடையவரும், முதுகின்கண் முகத்தினை உடையவர்களும், மூன்று கண்களை உடையவர்களும், என்றும் கொடுமைகளையே செய்கி றவர்களும், புகைகின்ற வாயினை உடையவர்களுமாய் விளங் ர் என்பதாம்,

விளக்கம்

இச்செய்யுளில் காவலரக்கியர்களின் மிருகத் தன்மைக்குப் பொருத்தமாக அவர்களின் முகங்களும் அமைந்துள்ள பொருத் தத்தைக் கம்பர் எடுத்துக்காட்டுகின்றார்.

சிலரின் முகங்கள் முன்பக்கத்தில் அமைந்திருக்கின்றன என்பதையும் கம்பர் கூறுகின்றார்- கோபக் கொதிப்பாலும், தீமைச் செருக்காலும், தோன்றுகின்ற உணர்ச்சிகள் சொற்க ளாய் வெளிப்படும்பொழுது அந்த அரக்கியர்களின் வாய்கள் புகையைக் கக்கிக்கொண்டே இருப்பன என்பதை உணர்த்தப், **புகையும் வாயினர்,** எனக் கூறினர்.

துயில்

60. எண்ணினுக் களவிட லரிய ஈட்டினர்
கண்ணினுக் களவிட லரிய காட்சியர்
பெண்ணெனப் பெயர்கொடு திரியும் பெற்றியர்
துண்ணெனத் துயிலுணர்ந் தெழுந்து சுற்றினர்

கொண்டுகூட்டு : எண்ணினுக்கு (எண்ணினால்) அள விடல் அரிய ஈட்டினர், கண்ணினுக்கு, (கண்களால்) அளவிடல் அரிய காட்சியர், பெண் என, பெயர்கொடு திரியும் பெற்றியர். (ஆகிய அக்காவல் அரக்கியர்கள்) துண் என துயில் உணர்ந்து, எழுந்து சுற்றினர்.

பொருள்

எண்ணினுக்கு - மனத்தினால் (நினைந்து), அளவிடல் அரிய- அளந்து காணமுடியாத, ஈட்டினர் – வலிமைவாய்ந்தவர்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணினுக்கு – கண்களால், அளவிடல் அரிய - (பார்த்து) அள விடமுடியாத (பருமையான) காட்சியர் – தோற்றத்தை உடை யவர்களும், பெண் என – பெண்கள் என்னும், பெயர்கொடு திரியும் – பெயர் வைத்துக்கொண்டு திரிகின்ற (உலவுகின்ற பெற்றியர் - தன்மையுடையவர்களாகிய (காவல்) அரக்கியர்கள் எல்லோரும், துண் என – (மிக விரைந்து) திடுக்கென்று (திடுக் கிட்டு) துயில் உணர்ந்து – உறக்கம் நீங்கி, எழுந்து – (விழித்து) எழுந்து வந்து, சுற்றினர் - (சீதாதேவியைச்) சுற்றிக்கொண் டார்கள்.

பொழிப்பு

மனத்தினுல் நினைந்து (அளந்து) காணமுடியாத வலிமை வாய்ந்தவர்களும், கண்களால் அளந்து காணமுடியாத தோற் றம் உடையவர்களும், பெண் என்னும் பெயரை வைத்துக் கொண்டு திரியும் தன்மை உடையவர்களுமாகிய காவல் அரக் கியர்கள் எல்லோரும் துயில் நீங்கித் திடுமென எழுந்து சீதா தேவியைச் சுற்றிக்கொண்டார்கள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் காவலரக்கியர்கள் விழித்தொழுந்து சீதா தேவியைச் சுற்றியிருந்து காவல்புரியத் தொடங்கிய செயல் சொல்லப்படுகின்றது.

மனத்தினுல் எண்ணியும் அளவிடமுடியாத வலிமைவாய்ந்த வர்கள் எனக், காவலரக்கியரைக் கம்பர் பாராட்டுகின்ருர். எனவே அக்காவல் அரக்கியர்கள் ஒருவராலும் வெல்லமுடி யாத வல்லமை வாய்ந்தவர்கள் என்பது கம்பரின் கருத்தாகும்.

எண்ணினுக்கு, கண்ணினுக்கு என்பன வேற்றுமை மயக்கம். அவை முறையே **எண்ணினுல், கண்ணினுல்** என நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 சிறையிருந்த சீதாதேவியை அனுமன் காணுதல்

[61 — 66 செய்யுள்]

மேற்கூறிய வண்ணம் காவலரக்கியர் விழித்தெழுந்த வுடன் அழகு நிரம்பிய இராமபிரானின் ஆருயிர்த் தலைவியாகிய சீதாதேவி, பேச்சின்றி இருந்தாள், தீயினும் கொடிய காவலரக்கியரின் முகங்களை நோக்கிக் கலங்கினாள். இங்ஙனம் சீதாதேவி கலங்கிய அதே நேரத்தில் சீதாதேவியைத் தேடிய வண்ணமாகவே திரிகின்ற அனுமனும் அசோக வனத்தில் உள்ள உயர்ந்த மரக்கிளையொன்றின் மேல் ஏறியவனாய் மிக விரைந்து வந்து சேர்ந்தான்.

இங்ஙனம் அசோகவனத்தை அடைந்த அனுமான் காவலரக்கியரின் கூட்டத்தைக் கண்டான். கண்டதும், 'எதற்காக இந்த அரக்கியர்கள் கொல்லும் படைகளைத் தாங்கிய கைகளுடன் கூட்டமாக இருக்கின்றார்கள் எனச் சிந்தித்தான். சிந்தித்த அனுமான் அக்காவலரக்கியரின் கூட்டத்தை மிகக் கருத்துடன் கூர்ந்து நோக்கினான்.

அங்ஙனம் கூர்ந்து நோக்கிய அனுமான், குருநிறத்து ஒரு தனிக் கொண்டலாகிய இராமபிரானின் அகன்ற மார்பின் கண்ணே நின்று நிழலாடுகின்ற ஒளியைக் கவர்ந்த வண்ணமாகவே நிற்கும் காந்தமாகிய சீதாதேவியார் விரிந்த மழை முகிற் கூட்டங்களைக் கிழித்து ஒளி வீசுகின்ற மின்னலைப் போலக் கரிய காவலரக்கியரின் நடுவே இருப்பதைக் கண்டான். கண்டதும் களிப்புடன் உற்று நோக்கினான் கடல்போல அகன்று நீண்ட கண்களில் நின்று வழிகின்ற கண்ணீர் வெள்ளமாகிய தடாகத்தின் நடுவே அன்னம் போல இருக்கின்றாள். அழுத வண்ணமாகவே இருக்கின்றாள். அரக்கியர்கள் வலியமதில்போல வளைந்திருந்து காவல் காக்கின்றார்கள். இங்ஙனம் இன்னலின் உருவமாக இருக்கின்ற இவள் இளமை கனிந்த பூங்கொடி போன்ற சீதாதேவியே எனத் தெளிந்தான், தெளிவு கொண்ட அனுமான், மீண்டும் சீதாதேவியை உற்றுப் பார்த்தான். தன்னிடம் அருள் வள்ளலாகிய இராமபிரான் கூறிய (சீதாதேவியின்) உருவ அடையாளங்கள் எல்லாம் அப்படியே அமைந்திருப்பதைக் கண்டான். கண்டதும் கள்ள அரக்கனாகிய இராவணன் கமலக் கண்ணனாகிய இராமபிரானின் உள்ளத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிப் பிரியாதிருக்கும் உயிராகிய சீதாதேவியை, ஒழித்து வைக்க எங்ஙனம் முடியும்? இராமபிரானின் உயிரல்லவா சீதா தேவி என்றெல்லாம் எண்ணியெண்ணி எழுச்சி கொண்டான்.

மூவுலகத்தையும் முறைதிரித்து வருத்துகின்ற கொடிய வனுகிய இராவணன், சீதாதேவியைச் சிறைவைத்த செயல் தனது உயிரைப் போக்கும் பொருட்டுச் செய்ததொன்றேயா கும். அப்படியே இராவணன் இராமபிரானுல் இறந்து படுதல் திண்ணம். ஆதிசேடன் என்னும் பாம்பின்மேற் பள்ளி கொள் ளும் திருமாலே இராமபிரானுகத் தோன்றினுன் என்பதும், அத்திருமாலின் மார்பிலே தங்கியிருக்கும் திருமகளே சீதா தேவியாகத் தோன்றினுன் என்பதும் தெளிந்து கொண்டேன் எனத் தன்னுட் கூறிக் கூறி அனுமான் சிந்தை தளிர்த்தான் என்பதாம்.

நாயகன் தூதன்

61. ஆயிடை யுரையவிந் தழகன் தேவியும்
தியனே யவர்முகம் நோக்கித் தேம்பினுள்
நாயகன் றூதனும் விரைவி னண்ணினுன்
ஒய்வில னுயர்மரப் பணையி னும்பரான்.

கொண்டுகூட்டு : ஆயிடை அழகன் தேவியும் உரை அவிந்து, தியனேயர் முகம் நோக்கித் தேம்பினுள், ஒய் விலன், ஆகிய நாயகன் தூதனும், உயர்மரப் பணையின் உம்பரான் (மேல்) விரைவில் நண்ணினுன்.

பொருள்

ஆயிடை - (சீதாதேவி திரிசடையை உறக்கம் கொள்ளு மாறு வேண்டிய) அப்பொழுது (அந்நேரத்தின்கண்) அழகன் தேவியும் - (அழியாத) அழகு நிரம்பியவனுகிய இராமபிரானின் மனைவியாகிய சீதாதேவியும், உரை அவிந்து – (தான் திரிசடை யுடன் கூறிக்கொண்டிருந்த) பேச்சொழிந்து, தியனேயவர் – நெருப்பைப்போற் கொடியவர்களாகிய காவல் அரக்கியர்களு டைய, முகம் நோக்கி - (கோபமும் வெறுப்பும் பொருந்திய) முகங்களைப் பார்த்து, தேம்பினுள் – வருந்தினுள், ஒய்விலன் ஆகிய – (சீதாதேவியைத் தேடுதலில் சிறிதும்) சோர்வு இல்லா தவனுகிய, நாயகன் தூதனும் - தலைமை மிக்க இராமபிரானின் தூதுவனுமாகிய அனுமான், உயர் மரப்பணையின் – உயர்ந்து வளர்ந்துள்ள ஒரு மரக்கிளையின், உம்பரான் – மேல் ஏறியவ னுகி, விரைவின் - மிக விரைவில் (சிக்கிரத்தில்) நண்ணி –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து (அடுத்த பாட்டில் வரும் நோக்கினன் என்பதனோடு சேர்த்து முடிக்கவும்)

பொழிப்பு

அப்பொழுது, அழகு நிரம்பிய இராமபிரானின் மனைவியாகிய சீதாதேவியாரும், பேச்சொழிந்து, நெருப்பைப்போலக் கொடியவர்களாகிய காவல் அரக்கியரின் முகத்தை நோக்கி வருந்தினள். அதே நேரத்தில் சீதாதேவியைத் தேடித்திரிகின்ற அனுமானும், உயர்ந்து வளர்ந்துள்ள மரக்கிளையொன்றில் ஏறியவனாய், மிக விரைவில் சேர்ந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் விழித்தெழுந்த காவலரக்கியரைக் கண்டு சீதாதேவி வருந்துதலும், அதே நேரத்தில் இராம தூதனாகிய அனுமானும் அசோகவனத்தில் உள்ள மரக்கிளை ஒன்றின்மேல் ஏறிச் சீதாதேவியைத் தேடுதலும் சொல்லப்படுகின்றது.

இராமபிரானின் உள்ளத்திலே அழியாத தெய்வப்பண்பு நிலைபெறுதல் போலவே அவரின் உடல் அழகிலும் தெய்வச் சாயல் நின்று நிழலாடுகின்றது என்பதை விளக்க, அழகன் தேவி எனக் கம்பர் கூறினர்.

மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகுடையான்

என அயோத்தியா காண்டத்திலும் இராமபிரானின் அழகைக் கம்பர் பாராட்டி உரைத்தல் காண்க.

காவலரக்கியரின் முகம் கோபக்கனலை வீசிக்கொண்டே இருத்தலால் **தீயனையவர் முகம்** என்றார். நெருப்புத் தீண்டியதைரையே சுடும். இக் காவலரக்கியர்கள், தம்மைத் தீண்டாதாரையும் தாமே சென்று தீண்டி வருத்துவார்கள் என்னுமோர் குறிப்புப் பொருளுந் தோன்றுதல் காண்க.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்''

என்பது திருக்குறள்.

தி – உவமானம். அரக்கியர் – உவமேயம், வெம்மையும். சுடுதலும், அணுகமுடியாமையும் பொதுத்தன்மைகள். நெருப்புப்போன்ற அரக்கியர்களின் முகத்தை நோக்கின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரத்தில் சீதாதேவி வருந்தினள் என்பதாம். எனவே, சீதாதேவி இளந் தளிர் போன்றவள் என்பது குறிப்பாகும்.

இங்ஙனம் சீதாதேவி வருந்திக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், அனுமானும் அசோகவனத்தின் மரக்கிளையின்மேல் ஏறினன் என்க. சீதாதேவியைத் தேடுதலாகிய செயலையே, அல்லும் பகலும் அலுப்பின்றி ஆற்றித்திரிகின்ற அனுமானின் இராம பக்தியையும், முயற்சியையும் எண்ணிய கம்பர்,

ஓய்விலன் நாயகன் தூதன்

எனப் பாராட்டுகின்றார்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித்
தாழாது உஞற்று பவர்"

என்பது திருக்குறள்.

பொருந்த நோக்கினன்

62. அரக்கிய ரயின்முத லேந்து மங்கையர்
நெருக்கிய குழுவினர் துயிலு நீக்கினர்
இருக்குநர் மற்றிதற் கேது வென்னெனப்
பொருக்கென அவரிடைப் பொருந்த நோக்கினன்.

கொண்டுகூட்டு : அரக்கியர் துயிலும் நீங்கினர். அயில் முதல் ஏந்தும் அங்கையர், நெருக்கிய குழுவினர், இருக்குநர், மற்று இதற்கு ஏது என் என, (என்று எண்ணிப்) பொருக்கென அவர் இடை (அனுமான்) பொருந்த நோக்கினன்.

பொருள்

அரக்கியர் - அரக்கியர்கள் (இராட்சதிகள்), துயிலும் நீங்கினர் – உறக்கத்தில் நின்றும் எழுந்தவர்களாய் (தூக்கம் தெளிந்தவர்களாய்) அயில் முதல் - வேற்படை முதலிய படைக்கலங்களை (ஆயுதங்களை) ஏந்தும் அங்கையர் - தாங்கிய கைகளை உடையவர்களாய், நெருக்கிய குழுவினர் - நெருக்கமான கூட்டத்தினராய், இருக்குநர் - (இவ்விடத்தில்) இருக்கின்றார்கள், மற்று இதற்கு – இங்ஙனம் இவர்கள் இருத்தற்கு, ஏது என் என - காரணம் என்னவாகுமோ என்று எண்ணியவனாகிய அனுமான், பொருக்கென - விரைவாக, அவர் இடைபொருந்த நோக்கினன் - (அவ்வரக்கியர் கூட்டத்தை) உற்றுப்பார்த்தான்.

நீங்கினர், அங்கையர், குழுவினர் என்பவை முற்றெச்சங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

அரக்கியர்கள் உறக்கம் நீங்கி எழுந்து வேல் முதலான படைக் கலங்களை ஏந்திய கையினராய், மிகக் கூட்டமாக நெருங்கி இவ் விடத்தில் இருக்கின்றார்கள். இங்ஙனம் இவர்கள் கூட்டமாக இருத்தற்குரிய காரணம் என்னவாகுமோ என்று எண்ணிய அனு மான் மிக விரைந்து அவ்வரக்கியர் கூட்டத்தை உற்றுப்பார்த் தான் என்பதாம்.

விளக்கம் :

இச்செய்யுளில் அசோக வனத்தில் புகுந்து பெரியதோர் மரக்கிளையின் மேலிருந்து பார்த்த அனுமான், அவ்விடத்தில் துயில் நீக்கிக் கூட்டமாக இருந்த கர்வலரக்கியரைக் கண்ட செய்தி கூறப்படுகின்றது.

அரக்கியர் கூட்டத்தைக் கண்ட அனுமான், ஏன் இவர்கள் படைக்கலங்களைத் தாங்கியவண்ணம் கூட்டமாக இருக்கிறார் களென எண்ணியவனாய் அக்கூட்டத்தை உற்றுப்பார்த்தான் என்க.

ஆராய்ச்சி உள்ளம் படைத்த அனுமான், அரக்கியர் கூட்டத்தைக் கண்டவுடன் ஐயங்கொண்டவனாய் உற்றுப்பார்த் தான் என்பதே கம்பனின் கருத்தாகும்.

இருக்குநர் மற்று இதற்கு, ஏது என் எனப்
பொருக்கென அவரிடைப் பொருந்த நோக்கினன்

எனக் கம்பர், அனுமான் நோக்கிய விரைவினுங் கூடிய விரை வுடன் கூறுகின்ற கவிதைக் குரலை நோக்குங்கள்.

காந்தத்தைக் கண்டனன்

63. விரிமழைக் குலங்கிழித் தொளிரு மின்னெனக்
கருநிறத் தரக்கியர் குழுவிற் கண்டனன்
குருநிறத் தொருதனிக் கொண்ட லூழியான்
இருநிறத் துற்றவெற் கியைந்த காந்தத்தை.

கொண்டுகூட்டு : குரு நிறத்து ஒருதனிக் கொண் டல் (ஆகிய) ஊழியான், இரு நிறத்து உற்ற (எற்கு) இயைந்த காந்தத்தை (காந்தம்போன்ற சீதாதேவி யைக்) கரு நிறத்து அரக்கியர் குழுவில் (கூட்டத்தின் நடுவே) விரிமழைக் குலம் கிழித்து ஒளிரும் மின் என (அனுமான்) கண்டனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

குருநிறத்து – ஒளியும் நிறமும் பொருந்திய, ஒரு தனிக் கொண்டல் - ஒரு தனிப்பட்ட (அபூர்வமான) மழை முகில் போல விளங்குகின்றவனும், ஊழியான் - ஊழி முதல்வன் எனப் போற்றப்படுகின்ற திருமாலின் அவதாரமுமான இராமபிரா னின், இருநிறத்து - பரந்த (அகன்ற) மார்பின்கண், உற்ற - பொருந்திய, எற்கு – ஒளிக்கு, இயைந்த – ஏற்றதான, காந் தத்தை – காந்தமாகிய சீதாதேவியை, கருநிறத்து - கரிய நிறத்தை உடையவரான, அரக்கியர் - அரக்கியர்களின், குழு வில் – கூட்டத்தின் நடுவே, விரிமழைக்குலம் - விரிந்து (பரந்து) கிடக்கும் மேகக்கூட்டங்களை, கிழித்து - கிழித்துக்கொண்டு, (நடுவிற் பிளந்துகொண்டு) ஒளிரும் - ஒளிபரப்பும் (பிரகாசிக்கும்) மின் என – மின்னலைப்போல (மின்னற்கொடியைப் போல) கண்டனன் - (அனுமான்) கண்டான்.

குருநிறத் தொருதனிக் கொண்ட லாமெனுக்
கருநிறத் தழகனுக் கமைந்த காந்தையை

எனவும்,

உருநிறத் தொருதனிக் கொண்டல் ஊழியான்
இருநிறத்து உற்றிடற்கு இயைந்த காந்தத்தை

எனவும், பாடங்கொள்வாரும் உளர்.

பொழிப்பு

ஒளியும் நிறமும் பொருந்திய ஒரு தனிப்பட்ட மழைமுகில் போல விளங்குகின்றவனும், ஊழி முதல்வன் எனப் போற்றப் படுகின்ற திருமாலின் அவதாரமுமான இராமபிரானின் பரந்த மார்பின்கண், பொருந்திய ஒளிக்கு ஏற்றதான காந்தமாக விளங்கும் சீதாதேவியை, விரிந்துகிடக்கும் மேகக்கூட்டங்களைக் கிழித்துக்கொண்டு, ஒளிபரப்பும் மின்னலைப்போல அனுமான் கண்டான் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் இராம தூதனுகிய அனுமான், காவல் அரக்கியர் நடுவே இருந்த சீதாதேவியைக் கண்ட செயல் சொல்லப்படுகின்றது.

இரர்மபிரானின் அகன்ற மார்பின்கண்ணே உள்ள ஒளி யுடன் ஒன்றுபடுதற்காகவே அமைந்த காந்தமாகிய சீதாதேவி எனக் கம்பர், சீதாதேவி இராமபிரானின் மார்பையே பொருந் துதற் குரியவள் என்னும் சிறப்பை நினைவூட்டுகின்றார். சீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியாகிய காந்தம் இராமபிரானின் மார்பிலே விளங்கும் ஒளியைக் கவர்தற்கு அமைந்ததென்பதே கருத்தாகும்.

குருநிறத்து ஒருதனிக் கொண்டல் ஊழியான்
இருநிறத்து உற்றளற்கு இயைந்த காந்தத்தை

எனக் கம்பர் பொருத்திக் கர்ட்டும் கற்பனைத் திறனை நோக்குங்கள். சீதாதேவியைக் காந்தம் எனக் கூறியது உருவக அணியாகும். காந்தமாகிய சீதை என்பதாம். இராமபிரானின் மார்பிலே நிழலாடுகின்ற ஒளியைக் கவர்ந்த வண்ணமாகவே காந்தமாகிய சீதாதேவி சிறைச்சாலையிலும் இருந்தாள் என்பதாம்.

திருமாலின் மார்பின்கண், திருமகள் இருப்பாள் எனக் கூறும் மரபு பற்றி, இராமபிரானின் மார்பைச் சீதாதேவிக்கு இடமாகக் கூறினர்.

இனி, அரக்கியர்களின் நடுவே இருந்த சீதாதேவியை அனுமன் கண்டான் எனக்கூறிய கம்பர்,

விரிமழைக் குலம்கிழித் தொளிரும் மின்எனக்
கருநிறத் தரக்கியர் குழுவிற் கண்டனன்

என உவமானங் காட்டி விளக்குந் திறன் போற்றற்குரியதாகும்.

விரிமழைக்குலம் - உவமானம். கருநிறதது அரக்கியர் குழு - உவமேயம். நிறமும். கூட்டமாக விளங்கலும் - பொதுத்தன்மைகள். விரிமழைக்குலம் கிழித்து ஒளிரும் மின் - உவமானம். கருநிறத்து அரக்கியர் நடுவிலிருக்கும் சீதை - உவமேயம். ஒளியும் மென்மையும் - பொதுத் தன்மைகள்.

சீதாதேவியை மின்னலெனப் பாராட்டுதலை,

'' தன்சேர் கோலத்து இன்எழில் காணச் சதகோடி
மின்சேவிக்க மின்னரசு என்னும்படி நின்றுள்''

எனவரும் மிதிலைக் காட்சிப்படலச் செய்யுளாலும் அறிக.

எற்கு என்பது ஒளிக்கு எனப் பொருள்படும். எல் - ஒளி (எல்+கு) எற்கு என நின்றது.

மடக்கொடி சீதையோ

64. கடக்கரு மரக்கியர் காவற் சுற்றுளாள்
மடக்கொடி சீதையா மாத ரேகொலாம்
கடற்றுணை நெடியதன் கண்ணி னீர்ப்பெருந்
தடத்திடை யிருந்ததோ ரன்னத் தன்மையாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு : கடக்க அரும் அரக்கியர் காவற் சுற்றுளாள், கடல்துணை நெடியதன் கண்ணீன்நீர்ப் பெரும் தடத்திடை இருந்ததோர் அன்னத் தன்மை யாள், (ஆகவே இவள்) மடக்கொடி சீதையாம் மாதரே கொலாம்.

பொருள்

கடக்க அரும் – தப்பிப்போக முடியாத, அரக்கியர் – அரக்கியர்களின், காவல் - காவல் என்று சொல்லப்படுகின்ற, சுற்றுளாள் - மதிலுக்குள் (மதில் அரணுள்) இருக்கின்றவளும், கடல்துணை – கடல் அளவு, நெடியதன் - பெரியனவாய் நீண்ட தன் கண்களிலிருந்து வழிகின்ற, கண்ணின்நீர்ப் பெருகும் தடத் திடை - கண்ணீர் வெள்ளமாகிய பெரிய தடாகத்தின் நடுவே, இருந்த - இருந்ததாகிய ஓர் – ஒரு, அன்னத் தன்மையாள் – அன்னப்பேடு போன்ற தன்மையை உடையவளாகிய இவள், மடக்கொடி - இளமை பொருந்திய பூங்கொடி போன்ற, சீதை யாம் - சீதாதேவி என்னும், மாதரே கொலாம் – பெண்ணே போலும் (என அனுமான் துணிந்தான்)

பொழிப்பு

அரக்கியர்களின் காவல் என்று சொல்லப்படுகின்ற மதிலுக் குள் இருக்கின்றுள் கடலளவு பெரியனவாய் நீண்ட கண்களி லிருந்து வழிகின்ற கண்ணீர் வெள்ளமாகிய பெரிய தடாகத்தின் நடுவே இருந்த அன்னப்பேடு போன்ற தன்மையை உடையவ ளாகிய இவள், இளமை பொருந்திய பூங்கொடி போன்ற சீதா தேவியே என அனுமான் துணிந்தான் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் காவல் அரக்கியர் நடுவே கண்ணீர்விட்டு அழுதவண்ணம் இருக்கின்றவள் சீதாதேவியே ஆகுமெனத் துணிந்த அனுமானின் செயல் கூறப்படுகின்றது.

ஓர் தடாகத்தின் நடுவிலே அன்னப்பறவை, இருத்தல் போல கடலிலும் பெரிய தன் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளம் பெருகித் தடாகம்போல விளங்க அதன் நடுவே மதில்போலச் சுற்றி அரக்கியர்கள் காவல் செய்ய இருக்கும் பெண்ணைக் கண்டவுடன் சிந்தனையாளனாகிய அனுமான் சீதா தேவியெனத் துணிந்தான் என்பதாம்.

சீதாதேவியின் கண்களை "கடற்றுணை நெடியதன் கண்ணினீர்ப் பெரும்" என்னும் தொடரில் கம்பர் கடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலப் பெரியனவென்று கூறுகின்றார். இதில் கடல் - உவமானம். சீதாதேவியின் கண் - உவமேயம். கருமையும், நீளமும், நீர் அருமையும் - பொதுத்தன்மைகள்.

கடலிலும் பெரிய கண்கள் எனப் பிறிதோர் இடத்திலும் கம்பர் சீதாதேவியின் கண்களைப் பாராட்டியுள்ளார். சீதாதேவி அழுத கண்ணீரை "கண்ணினீர்ப் பெரும் தடம்" எனக் கூறிய கம்பர் "கண்ணீர்க் கடலிற் கண்டேன்" எனப் பின் அனுமன் குரலோடு கலந்து கூறுதலையும் நோக்குக.

"கண்ணினீர்ப் பெரும் தடத்திடை இருந்ததோர்
அன்னத் தன்மையாள்"

என்னும் தொடர்களில் வரும் கண்ணீர்ப் பெரும் தடம் என்பது கண்ணீரைத் தடாகமாக உருவகப்படுத்திக் கூறியதாகும். அன்னத் தன்மையாள் என்பதில் அன்னம் – உவமானம். சீதாதேவி - உவமேயம். நீர்த்தடத்தில் இருத்தலும் அழகும் - பொதுத்தன்மைகள். சீதையாகிய அன்னம் இருத்தற்குக் கண்ணீர் ஆகிய தடாகத்தைக் கற்பனை செய்து உரைத்த கம்பரின் புலமைத்திறன் போற்றத்தக்கதாகும்.

உள்ளுறை உயிர்

65. எள்ளரு முருவினல் லிலக்க ணங்களும்
வள்ளறன் னுரையொடு மாறு கொண்டில
கள்ளவா ளரக்கனக் கமலக் கண்ணனூர்
உள்ளுறை யுயிரினை யொளித்து வைத்தவா

கொண்டுகூட்டு : எள் அரும் உருவின் நல் இலக்கணங்களும், வள்ளல் தன் (இராமபிரானின்) உரை ஒடு மாறு கொண்டில (எனவே) கள்ளவாள் அரக்கன் (ஆகிய இராவணன்) அக்கமலக்கண்ணனூர் உள்ளுறை உயிரினை ஒளித்து வைத்தவா.

என் அரும் உருவின் - பழிப்பில்லாத (ஒருவித பழுதும் சொல்ல முடியாத) வடிவத்தின் (உருவத்தின்) நல் இலக்கணங்களும் – நல்ல இலக்கணங்களும் (அமைப்புக்களும்) வள்ளல் தன் - அருள் வள்ளலாகிய இராமபிரான் (சீதாதேவியின் உருவ அடையாளங்களை எனக்கு விளக்கி) உரைஒடு – சொல்லிய மொழிகளோடு, மாறுகொண்டில - (அரக்கியர் நடுவிலிருக்கும் இப்பெண்ணின் உருவத்தோடு) மாறுபாடின்றிப் பொருந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளன, கள்ள – வஞ்சனை பொருந்தியவனும், வாள் அரக்கன் – வாட்படையைத் தாங்கியவனுமாகிய இராவணன், அக் கமலக்கண்ணர் - அந்தச் செந்தாமரை மலர்போலும் கண்ணை உடையவராகிய இராமபிரானின், உள்ளுறை உயிரினை - உள்ளத்தோடு ஒட்டிப் பிரியாதிருக்கும் உயிரை (சிதையை) ஒளித்து வைத்தவா - ஒளித்து வைத்தவகை எங்ஙனம்.

பொழிப்பு

பழிப்பில்லாத வடிவத்தின் நல்ல இலக்கணங்கள் எல்லாம், அருள் வள்ளலாகிய இராமபிரான் சொல்லிய வண்ணமே அரக்கியர் நடுவிலிருக்கும் இப்பெண்ணின் உருவத்திலும் விளங்குகின்றன. வஞ்சனை பொருந்திய இராவணனைவன் செந்தாமரை மலர் போன்ற கண்களை உடையவரான இராமபிரானின் உள்ளத்தோடு ஒட்டிப் பிரியாதிருக்கும் சீதாதேவியை ஒளித்து வைக்க எங்ஙனம் பொருந்தும் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் கரிய நிறங்கொண்ட அரக்கியர்களின் நடுவே மின்னற் கொடிபோல விளங்குகின்றவள் சீதாதேவியே யாகுமெனத் தெளிந்த அனுமான், இராமபிரான் கூறிய உருவ அடையாளங்கள் எல்லாம் மாறுபாடு இல்லாமல் அப்படியே அமைந்திருத்தலைக் கண்டு வியந்து கூறிய செயல் சொல்லப் படுகின்றது.

காவல் அரக்கியர் நடுவில் மின்னலைப்போல இருக்கின்றவள் சீதாதேவியே ஆகும் எனத் தெளிந்த அனுமான், தனக்கு இராமபிரான் கூறிய சீதாதேவியின் உருவ அடையாளங்கள் எல்லாம் அப்படியே ஒன்றும் மாறுமற் பொருந்தி இருப்பதைக் கண்டான். கண்டதும் களிப்புக்கொண்டான்.

"எள் அரும் உருவில்நல் இலக்கணங்களும்
வள்ளல் தன் உரையொடு மாறுகொண்டில"

என வருகின்ற கவிதைத் தொடரில் அனுமானின் ஆர்வத்தோடு கலந்த ஆச்சரியத்தைக் காண்கின்றோம்.

சீதாதேவி இராமபிரானின் உள்ளுறை உயிர் என்னும் உண்மையை நேரிற் கண்ட அனுமான், தான் முன்னெல்லாம் இராமபிரானை வேறுகவும், சீதாதேவியை வேறுகவும் பிரித்துணர்ந்த பிழையையும், இராவணன் சீதாதேவியைக் கவர்ந்து சிறையில் வைத்தானெனினும் சீதாதேவி இராமபிரானைவிட்டு அகலவில்லை என்ற உண்மையையும், உணர்ந்து கொண்டான் என்பதாம். இதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளவாள் அரக்கன் அக்கமலக் கண்ணனூர்
உள்ளுறை உயிரினே ஒளித்து வைத்தவா

எனக் கம்பர் அனுமானுக நின்று எமக்கு அறிவுறுத்துகின்றார்: இராமபிரானின் உயிரை எங்ஙனம் இராவணன் ஒளித்து வைக்க முடியும். (முடியாது என்பதாம்) எனவே இராமபிரானுடைய உள்ளத்தில் சீதாதேவி உயிருக்குயிராய் பதிந்திருக்கின்றாள் என்பதை உணர்ந்து அனுமான் வியப்படைந்தான் என்பதாம்.

தேவனும் கமலச் செல்வியும்

66. மூவகை யுலகையு முறையி னீக்கிய
பாவித னுயிர்கொள்வா னிழைத்த பண்பிதால்
ஆவதே யரவணைத் துயிலி னீங்கிய
தேவனே யவனிவள் கமலச் செல்வியே.

கொண்டுகூட்டு : இது மூவகை உலகையும் முறையின் நீக்கிய, பாவி (ஆகிய இராவணன்) தன் உயிர் கொள்வான் இழைத்த பண்பு, ஆவதே அவன் (இராமபிரான்) அரவணைத் துயிலின் நீங்கிய தேவனே இவள் (சீதாதேவி) கமலச் செல்வியே.

பொருள்

இது - (சீதாதேவியை ஒளித்துவைத்த) இச்செயல், மூவகை உலகையும் – மண், விண், பாதாளம் என்னும் மூன்று உலகங்களையும், முறையின் நீக்கிய – நல் ஒழுக்கத்தில் நின்றும் (செங்கோலாட்சி இல்லாமல்) விலகச்செய்த, பாவி – கொடியவனுகிய இராவணன், தன் உயிர் - தனது உயிரினை, கொள்வான், (இராமபிரான்) வாங்கும்பொருட்டு, இழைத்த – செய்த பண்பு – செயலாகும், ஆவதே - அப்படியே முடியும், அவன்- (சீதாதேவியைப் பிரிந்து வருந்தும்) அந்த இராமபிரான், அரவணைத்துயிலின் – ஆதிசேடன் என்னும் பாம்பின் மேற் பள்ளிகொள்ளுதலை, நீங்கிய – துறந்த, தேவனே – திருமாலே ஆவான், இவள் – (இப்பொழுது சிறைச்சாலையில் அரக்கியர் நடுவிலிருந்து வருந்துகின்றவளாகிய) இச் சீதாதேவியானவள், கமலச் செல்வியே - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளேயாவாள், ஆல் – அசை.

பொழிப்பு

சீதாதேவியை ஒளித்து வைத்த இச்செயல் மூவகை உலகினையும் முறைமையினின்று விலகச்செய்த கொடியவனுகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் தனது உயிரினை இராமபிரான் வாங்கும்பொருட்டுச் செய்த தொழிலாகும். அப்படியே இராவணன் இறந்துபடுவான். சீதாதேவியின் பிரிவுத்துயரால் வருந்துகின்ற இராமபிரான், ஆதிசேடன் என்னும் பாம்பின்மேற் பள்ளிகொள்ளுதலைத் துறந்த திருமால் என்னும் தெய்வமாவான். இப்பொழுது சிறைச்சாலையிலிருந்து வருந்துகின்ற சீதாதேவி, செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளே ஆவாள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் இராமபிரானின் உள்ளுயிராய் விளங்கும் சீதாதேவியைச் சிறையில் வைத்த இராவணன் தன் உயிரை இராமபிரானால் போக்குவித்தற்கு வழி தேடிக்கொண்டான் எனவும், திருமாலும் திருமகளும் முறையே இராமபிரான் என்றும், சீதாதேவி என்றும் தோன்றியுள்ளார் எனவும், செப்புகின்ற அனுமானின் தெளிந்த ஞான உணர்வைக் காண்கின்றோம்.

இராவணன் மூவுலகினர்க்கும் முறைதிரிந்து கொடுமை புரிந்த பாவத்தினால் இராமபிரானின் அம்புக்கு இரையாக வேண்டியவனுவான் எனவும், அங்ஙனம் இரையாகவேண்டிய தீவினையாற்றான் அவன் சீதாதேவியைக் கவர்ந்து சிறையில் வைத்தான் எனவும் அனுமான் எண்ணுகின்றான்.

இங்ஙனம் கொடியோனுகிய இராவணனை அழித்து மூவகை உலகையும் பாதுகாத்தற்காகவே பாம்பணையைத் துறந்து இராமனுகத் திருமால் அவதாரம் செய்தார் என்றும், திருமகள் திருமாலைப் பிரியாதவளாய்ச் சீதாதேவியாக அவதாரம் செய்தாள் என்றும் அனுமான் துணிந்துவிட்டான்.

> " அரவணைத்துயிலின் நீங்கிய தேவனே அவன்
> இவள் கமலச் செல்வியே "

என அனுமானுக நின்று கம்பர் கூறுகின்ற கவிதைத் தொடரில் கலந்து நிழலாடுகின்ற கம்பரின் தெளிவையும் அப்படியே அறிகின்றோம்.

இராமபிரான் திருமாலின் அவதாரம் என்பதையும், சீதாதேவி திருமகளின் அவதாரம் என்பதையும்,

> மருங்கு இலா நங்கையும் வசைஇல் ஐயனும்
> ஒளிங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினுற்
> கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
> பிரிந்தவர் கூடினுல், பேசல் வேண்டுமோ?

என மிதிலைக்காட்சிப் படலத்தில் கம்பர் கூறுவதினுலும் உணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அன்னை சீதாதேவியைக் கண்டு ஆவி தளிர்த்த அனுமான்

[67 — 77 செய்யுள்]

அன்னையாகிய சீதாதேவியை அரக்கியர் கூட்டத்தின் நடுவே கண்ட அனுமான் எல்லையில்லாத இன்பம் அடைந்தான். ஆனந்தத்தேனை அள்ளிப் பருகியவனாய், ஆடினான், பாடினான் அங்குமிங்குமாக ஓடினான். மீண்டும் சீதாதேவியை உற்றுப் பார்த்தான். மாசு படிந்த மாணிக்கம் போலவும், சூரியனுக்கு முன் சந்திரனைப் போலவும் ஒளி மழுங்கியவளாய், அழுக்கேறிய கூந்தலை உடையவளாய் இருக்கும் சீதாதேவியின் துன்பக் கோலத்தைப் பார்த்துச் சிந்தித்தான்.

துன்பமே உருவான சீதாதேவியின் கற்பும் காதலும் களங்கமடையவில்லை என்பதைத் தெளிந்தான். அறத்தினுக்கு அழிவுண்டோவெனக் கூறிக் குதித்தான். இங்ஙனம் சீதாதேவியின் காதலும் கற்பும் களங்கமில்லாமல் விளங்குவதால் வீரக் கழலை அணிந்த இராமபிரானின் வீரத்தோள்களும், பெண் குலத்தின் திலகம் போன்ற சீதாதேவியாரின் தூய சிந்தையும் வண்மையில் மிக்க சனகமகாராசனின் மரபும் புகழைப் பெற்று விட்டன என்று சொல்லிப் போற்றினான்.

வானவர்களும் தெய்வத்தன்மை பொருந்திய அந்தணர் களும் ஓர் குற்றமும் செய்திலர். தருமமும் அழிந்துபோக வில்லை. இராமபிரானுக்குத் தொண்டு பூண்டொழுகும் எனது அடிமை வாழ்வும் மேன்மை அடைந்துவிட்டது எனச்சொல்லி மிகவும் மகிழ்ந்தான்.

ஒப்பில்லாதவளாகிய சீதாதேவியின் கற்புச் சிதைந்தி ருக்குமானால் இராமபிரானின் கோபக்கனலால் உலகமெல்லாம் எரிந்துவிடுமென எண்ணி அஞ்சினேன். சீதாதேவியின் கற்பும் காதலும் களங்கமின்றிச் சிறந்து விளங்குவதால், இந்த உலகம் எல்லையில்லாத காலம் இனிது வாழ்வதாக என வாழ்த்து கின்றேன் என்று சொல்லிச் சொல்லி உள்ளம் தளிர்த்த அனுமான் மீண்டும் உரைக்கின்றான்.

ஐம்புலன்களை அடக்கியும், உணவையும் நீரையும் வெறுத்தும் ஆற்றுகின்ற மாமுனிவர்களின் தவத்திலும், நற்குடியிற் பிறந்து இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகளை உடையவர்களாய் வாழ்கின்ற மங்கையரின் தவமே மேலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் தவத்தால் மேம்பட்ட சீதாதேவி பிறந்ததினால் குடிப்பிறப்பானது தான் எடுத்து வளர்த்தற்கு ஒரு குழந்தை வேண்டுமென்று தவங்கிடந்த பயனைப் பெற்றுவிட்டது. பெண்மையும், தான் உயரவேண்டும் என்று எண்ணித் தவம் கிடந்த பயனை எய்திவிட்டது. அப்பெண்மையைப் போலவே பெண்களுக்கு இயல்பாகவுள்ள நாணம் என்னும் பண்பும், தான் உயரவேண்டுமென எண்ணித் தவங்கிடந்த நன்மையை எய்திவிட்டது. சிறைச்சாலையைத் தவச்சாலையாகக் கொண்டு சீதாதேவியார் ஆற்றுகின்ற தவத்தின் தன்மைகளைக் கமலக்கண்ணனாகிய இராமபிரான் காணத் தவம் செய்திலனே! எனக் கூறிக் கூறி அனுமான் கலங்கினன்.

அரக்கியர்கள் நீதி தவறியவர்களாய்ச் சீறுகின்றார்கள். இவர்களுக்கு நடுவிற் சிறையிருக்கும் சீதாதேவிக்கோ ஓர் துணையுமில்லை. இங்ஙனம் ஓர் துணையுமின்றித் தனித்திருத்தலும், பெண் தன்மையைப் பேணுதலும், தவங்கிடத்தலும் சீதாதேவியின் மேம்பாட்டை விளக்குகின்றன. இங்ஙனம் சீதாதேவியிடம் காணப்படுகின்ற நல்ல தருமத்தின் உயர்ந்த பண்பாடுகள் எல்லாம் பெண்கள் எல்லோருக்கும் உளவாகிப் பொலிக.

சீதாதேவியார் ஆற்றுகின்ற இத்தவம் மிகவும் அருமையானது. இத்தகைய தவத்தை ஆற்றவல்லவர்கள் யார் இருக்கிறார்கள்? இத்தவம் தன்னேரில்லாத் தவமாகும். இத்தவத்தின் தன்மையை எம் போன்றவர்களால் எடுத்துச் சொல்லமுடியாது. தருமம்தான் சீதாதேவியின் கற்பையும் காதலையும் காப்பாற்றியதோ? அல்லது சனகமகாராசன் ஆற்றிய புண்ணியந்தான் காப்பாற்றியதோ? அல்லது சீதாதேவியின் கற்பெனும் கலங்கா நிலைமைதான் காப்பாற்றியதோ? என்னவென்று சொல்லுவேன் என்றெல்லாம் எண்ணியெண்ணி அனுமான் இன்ப வெள்ளத்தில் மூழ்கினன்.

இங்ஙனம் இன்ப வெள்ளத்தில் மூழ்கிய அனுமான், இன்னும் சிந்திக்கின்றான், அமரர்கள் அல்லும் பகலும் அரக்கர்களுக்கு அடிமைவேலை செய்கின்றார்கள். இங்ஙனம் உயர்ந்த வாழ்க்கையில் இருந்து கொண்டும் தீவினைகளைச் செய்தல் இவ்வரக்கர்களின் தகுதிக்கு ஏற்றதல்ல இனிமேல் எனக்கொரு துன்பமும் உண்டாகாது. பாபம் தருமத்தை வெல்லமாட்டாதென்ற உண்மையை உணர்ந்துவிட்டேன் என்றெல்லாம் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் எண்ணி இன்பத்தேன் நுகர்ந்த அனுமான், அழகும் பெருமையும் பொருந்தி வீளங்கும் பொன்னுற் செய்யப்பட்ட நீண்ட மரங்களையுடைய சோலையின்கண் நின்று மீண்டும் இவை போன்ற பலவற்றை எண்ணினான். அப்பொழுது அரக்கரின் தலைவனன இராவணன் அனுமான் நின்ற சோலைவழியாக வந்து நெருங்கிய மலர்களையுடைய அசோகவனத்தை அடைந்தான்.

அனுமானின் ஆனந்தம்

67. வீடின தன்றறன் யானும் வீகலேன்
தேடினன் கண்டனன் றேவி யேயெனு
ஆடினன் பாடின னுண்டு மீண்டும் பாய்ந்து
ஓடினன் உலாவின னுவகைத் தேனுண்டான்

கொண்டுகூட்டு : அறன் வீடினது அன்று யானும் வீகலேன், (ஏனெனில்) தேடினன் (தேடியவனுகிய யான்) கண்டனன் (யான் கண்ட பெண்) தேவியே எனு (என்று) உவகைத் தேன் உண்டான், (உண்டானுகி) ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும் பாய்ந்து ஓடினன் உலாவினன்.

பொருள்

அறன் வீடினது அன்று - (சீதாதேவியைத் தேடிக் கண்டு விட்டேன் ஆதலால்) தருமம் அழிந்து போகவில்லை (அழிந்ததன்று), யானும் - இராமதூதனுகிய யானும், வீகலேன் - (இனி) இறக்கமாட்டேன், (ஏனெனில்) தேடினேன் - (சீதாதேவியைத்) தேடிவந்தவனுகிய யான், கண்டனன் - (இப்பொழுது அத்தேவியாரைக்) கண்டுவிட்டேன், தேவியே - (இச்சிறையில் இருக்கின்ற இவள்) சீதாதேவியே ஆவாள், எனு - என்று தெளிந்து, (அனுமான்) உவகைத்தேன் - ஆனந்தத் தேனை, உண்டான் - (அள்ளிப்) பருகியவனுகி, ஆடினன் - கூத்தாடினன், பாடினன் - பாட்டுப்பாடினன், ஆண்டும்ஈண்டும் - அங்குமிங்குமாக, பாய்ந்து ஓடினன் - (குழந்தை போலக்) குதித்து ஓடி, உலாவினன் - உலாவித் திரிந்தான்.

பொழிப்பு

தருமம் அழிந்து போகவில்லை. யானும் இனி இறக்கமாட்டேன், சீதாதேவியைத் தேடி வந்தவனுகிய யான், இப்பொழுது அத்தேவியாரைக் கண்டு விட்டேன். எனத் தன்னுட் கூறிச் சிறையிலிருக்கின்றவள் சீதாதேவியே ஆவாள் எனத்துணிந்த அனுமான் ஆனந்தத்தேனை அள்ளிப் பருகினவனுய்க் கூத்தாடினன். அங்குமிங்குமாகக் குழந்தைபோலக் குதித்து உலாவித் திரிந்தான் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச்செய்யுளில் சிறையிலிந்த சீதாதேவியைக் கண்ட அனுமானின் மகிழ்ச்சிப் பெருக்குக் கூறப்படுகின்றது.

சீதாதேவி சிறையில் இருப்பதைக் கண்ட அனுமான் அறத்தை மறத்த கொடியோனுகிய இராவணனே அழித்து மீண்டும் அறத்தை இராமபிரான் நிலைநாட்டுவார் என்ற துணிவினுல்,

"வீடினது அன்று அறம்"

எனக் கூறி ஆனந்தம் அடைகின்ருன்.

சீதாதேவியை

"கண்டிலென் என்னில் பின் உரியது ஒன்றில்லை வீடுவேன்"

என முன் வஞ்சினம் கூறிய அனுமான் தான் எண்ணிய வண்ணம் சீதாதேவியைக் கண்டுவிட்டபடியால் "யானும் வீகலேன்" எனக் கூறினுன். இங்ஙனம் தான் எண்ணியபடி சீதாதேவியைக் கண்ட அனுமானின் ஆனந்தக் களிப்பிற் கலந்து ஆனந்தமடைகின்ற கம்பரின் கவிதைக்குரல் எமது உள்ளத்திலும் ஆனந்த வெள்ளத்தைப் பெருக்குகின்றது.

"தேவியே எனு உவகைத் தேனுண்டான்
ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும் பாய்ந்து
ஓடினன் உலாவினன்"

எனவரும் கவிதைத் தொடரில் கரைகடந்து பெருகுகின்ற ஆனந்த வெள்ளத்தை அனுமான் கம்பர் என்னும் இருவருடன் நாங்களும் கலந்து அள்ளிப் பருகுவோம்.

கற்பும் காதலும்

68. மாசுகண்ட மணியனுள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களு மென்னத் தேந்துளாள்
காசுகண்ட கூந்தலாள் கற்புங் காதலும்
ஏசுகண்ட தில்லையா லறத்துக் கீறுண்டோ.

கொண்டுகூட்டு : மாசு உண்ட மணி அனுள், (மணியைப்போன்றவளாகிய சீதாதேவி) வயங்கும் வெங்கதிர் (கதிரினுல்) தேசு உண்ட திங்களும் என்ன தேய்ந்துளாள், (தேய்ந்துள்ள காரணத்தால்) காசு உண்ட கூந்தலாள், (கூந்தலாளின்) கற்பும் காதலும் ஏசு உண்டது (பழிப்புண்டது) இல்லை ஆல் (எனவே) அறத்துக்கு ஈறு உண்டோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

மாசு உண்ட - அழுக்குப்படிந்த, மணி அனுள் - இரத்தினத்தை ஒத்தவளும், வயங்கு - விளங்குகின்ற, வெங்கதிர் - வெம்மையான கிரணங்களையுடைய, சூரியனின் ஒளியால், தேசுஉண்ட - தன் ஒளி குறைந்த (தன் ஒளி மங்கிய) திங்களும் என்ன - சந்திரனைப்போல (சூரியனுக்கு முன்னே நின்ற சந்திரனைப்போல என்பதாம்) தேய்ந்துளாள் - ஒளி (தேசு) மழுங்கியவளும், காசு உண்ட - அழுக்குப்படிந்த, கூந்தலாள்- கூந்தலை உடையவளுமாகிய சீதாதேவியின், கற்பும் - கற்பு நிலையும், (கற்பு என்னும் திண்மையும்) காதலும் - (அவள்) இராமபிரான்மேற் கொண்ட உண்மை அன்பும், ஏசு உண்டது இல்லை - பழிப்புண்டது இல்லை (குற்றம் பொருந்தினது இல்லை) அறத்துக்கு - (ஆதலால்) தருமத்திற்கும், ஈறு உண்டோ - அழிவு உண்டாகுமோ (ஒருபோதும் அழிவு உண்டாகாது என்பதாம்)

பொழிப்பு

அழுக்குப் பொருந்திய இரத்தினத்தை ஒத்தவளும், சூரியனுக்கு முன்னே நின்ற சந்திரனைப் போல ஒளி மழுங்கியவளும், அழுக்குச் சேர்ந்த கூந்தலை உடையவளுமாய் விளங்குகின்ற சீதாதேவியின் கற்பு நிலையும், அதள் இராமபிரான் மேற் கொண்ட உண்மைக் காதலும் மறுவின்றி விளங்குகின்றன. ஆனபடியால், தருமத்திற்கு ஒருகாலும் அழிவு உண்டாகாது என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியின் கற்பும் காதலும் களங்கமின்றிச் சிறந்து விளங்குவதைத் தெளிந்து கூறுகின்ற அனுமானின் எழுச்சி வாய்ந்த ஆனந்தக்குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவி அழுக்குப்படிந்த மாணிக்கத்தைப் போலவும், சூரியனுக்குமுன் நிற்கும் சந்திரனைப்போலவும், ஒளி குறைந்து வாடி இருக்கின்ற நிலையைக்கண்ட அனுமான், அவளின் கற்புக்கும் காதலுக்கும் களங்கம் ஏற்படவில்லை என்பதையும் கண்டுகொண்டான் என்பதே கம்பரின் கருத்தாகும்.

இராவணனின் தீய கருத்திற்கு இடம் கொடுக்காமல் தற்காத்துக் கொண்டிருக்கின்றாள் சீதாதேவி, என்னும் உண்மையை அவளின் ஒளிமழுங்கிய உருவமே அனுமானுக்குக் காட்டிவிட்டது என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

என்பது திருக்குறள்,

மாசுண்ட மணிஅனுள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்.

எனச் சீதாதேவியின் மனநிலையை உணர்த்தும் உடல் நிலையை அப்படியே கம்பர் அனுமானுக நின்று நோக்கிப் படம் பிடித்துக் காட்டுகின்ற அருமையை உணருங்கள்.

மாசுண்டமணி - உவமானம். அழுக்கேறிய சீதாதேவியின் மேனி – உவமேயம், ஒளிமழுங்கித் தோன்றுதல் – பொதுத்தன்மை. மாணிக்கக்கல்லில் மாசுபடிந்தாலும் அதன் மதிப்புக் குறையாதவாறுபோலச் சீதாதேவியை இராவணன் சிறையிலிட்டு வருத்தி அவளின் அக அழகுகளாக விளங்கும், கற்பும், காதலும் தமது தூய நிலையில் குறைந்தில என்பதாம்.

வயங்கு வெங்கதிர் - உவமானம். தேசுண்டதிங்கள்– உவமேயம். ஒளியும், அழகும் குறைந்துபோதல் - பொதுத்தன்மை. சூரியனுக்கு முன் நிற்கும் சந்திரனின் ஒளி குறைந்து குறைந்து மழுங்கிப் போதல்போலச் சீதாதேவியாரின் உடல் அழகும் பிரிவுத்துயராற் குறைந்து குறைந்து நாளொருவண்ணமாய், மழுங்குகின்றது என்பதாம்.

இங்ஙனம் சீதாதேவி உருவ அழகின் குறைவைக் கொண்டு அவளின் உள் அழகுகளாகிய கற்பும் காதலும் களங்கமின்றி விளங்கிய மேன்மையைக் கண்டுணர்ந்த அனுமானின் பேரானந்தத்தைக் கூறுகின்ற கம்பரின் கவிதைக்குரலைக் கேளுங்கள்,

காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும்
ஏசுண்டது இல்லையால் அறத்துக்கு ஈறுண்டோ

சீதாதேவியின் கற்பும் காதலும், ஏசுண்டதில்லை என்பதை உணர்ந்த அனுமானின் உள்ளத்தில் அலைமோதி எழுந்த ஆர்வத்துடன் அறத்தெய்வமும் கலந்து ஆனந்தக்கூத்தாடி ஆர்ப்பரிக்கின்றது போன்ற ஓசை எழுச்சியும், உணர்ச்சித் துடிப்பும் இக்கவிதைத் தொடர்களில் நின்று நிழலாடுவதைக் காணுங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பும் காதலும் ஏசுண்டது இல்லையால்
அறத்துக்கு ஈறுண்டோ.

என அனுமானுக நின்று கம்பன் கேட்கின்ற குரலிலே, அறம் அழியாது, அறத்தெய்வந்தான் சீதாதேவியின் கற்பையும் காதலையும் காப்பாற்றியது, என்ற உண்மை நிலைபெறுதல் காண்க;

காசுண்ட கூந்தலாள் கற்புங் காதலும்
ஏசுண்ட தில்லையால் அறத்துக் கீறுண்டோ.

என, அனுமான் கூறிமுகவரும் இக்கவிதைத் தொடருடன்

ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடைச்
சானகி துயரினந் தவிர்ந்த தில்லையோ.

எனவரும் கும்பகருணன் கூற்றையும் ஒப்பிட்டு நோக்குக;

காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும்
மாசுண்ட தில்லை.

எனும் சிறப்புப் பொருளை அறத்தினுக்கு ஈறுண்டோ என்னும் பொதுப்பொருள் வலியுறுத்தி நிற்பது, வேற்றுப்பொருள் வைப்பு என்னும் அணியாகும்;

சீதாதேவியின் கற்பும் காதலும் ஏசுண்டதில்லை என்பதே புலவன் கூற எடுத்துக்கொண்ட சிறப்புப் பொருளாகும்; அறத்துக்கு ஈறுண்டோ, என்பது அச்சிறப்புப் பொருளை நிலைநாட்ட வந்த பொதுப்பொருளாகும்;

யாதைச்சாற்றுகேன்

69. புனைகழ லிராகவன் பொற்பு யத்தையோ
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வனைகழ லரசரின் வண்மை மிக்கிடும்
சனகர்தங் குலத்தையோ யாதைச் சாற்றுகேன்.

கொண்டுகூட்டு: புனைகழல் இராகவன் (உடைய) பொற்புயத்தையோ, வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ, வனைகழல் அரசரின், வண்மை மிக்கிடும் சனகர் தம் குலத்தையோ, யாதை (யான் புகழ்ந்து) சாற்றுகேன்.

பொருள்

புனைகழல் - அணியப்பட்ட வீரக்கழல்களை உடைய, இராகவன் - இராமபிரானின், பொற்புயத்தையோ - அழகிய (வீரத்) தோள்களையோ, வனிதையர் திலகத்தின்-பெண்களுக்கெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நெற்றியில் அணியும் திலகம் (பொட்டு) அழகுசெய் தல் போலத் தனது கற்பு நெறியால் பெண் குலத்தை அழகு செய்யும் சீதாதேவியினது, மனத்தின் - உள்ளத்தின், மாண் பையோ-பெருமையையோ (பெருங் குணத்தையோ) வீரகழல்-வீரக்கழலை அணிந்த, அரசரின் - மன்னர்களுக்கு அமையவேண் டிய, வண்மை - ஈகைக் குணத்தில், (ஈந்துவக்கும் இயல்பில்) மிக்கிடும் - மேம்பட்டு விளங்குகின்றவனுகிய, சனகர்தம்-சனக மகாராசனது, குலத்தையோ - குலத்தினையோ, யாதை - (மேற் கூறிய மூன்றினும்) எதனை (ச் சீதாதேவியின் கற்பும் காதலும் களங்கப்படாமல் இருந்ததற்குக் காரணமென்று) சாற்றுகேன்- (யான்) புகழ்ந்து சொல்லுவேன்.

பொழிப்பு

வீரக்கழலை அணிந்த இராமபிரானின் அழகிய வீரத் தோள் களையோ, அல்லது பெண்குலத்தின் திலகம்போன்ற சீதாதேவி யாரின் மனத்தின் மாட்சியினையோ, அல்லது வண்மையில் மிக்க சனகன் மரபினையோ இவை மூன்றினும் எதனைச் சீதாதேவியின் கற்புங் காதலும் களங்கமில்லாமல் விளங்கியதற்குக் காரண மாகக்கொண்டு புகழ்ந்துரைப்பேன் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில், சீதாதேவியின் கற்புங் காதலுங் களங்க முறுமல் விளங்கிய சிறப்பைக் கண்ட அனுமானின் ஆர்வ மொழிகளைக் கேட்கின்றோம்.

இரக்கமில்லாத அரக்கனுகிய இராவணனால் எல்லையில்லாத இன்னல்களை அடைந்தபோதிலும் தன் கற்பென்னும் திண்மை குலையாமல் இருந்த சீதாதேவியைத் தழுவும் பெரும்பேற்றை அடைந்த இராமபிரானின் வீரத் தோள்களும், அடுத்தடுத்துப் பல இன்னல்கள் வந்தபோதும் இராமபிரான்மேற் கொண்ட காதலன்பிற் சிறிதுங் குன்றுமல் அவரையே கருதியவண்ணம் சிறைச்சாலையைத் தவச்சாலையாகக் கொண்டு தவங்கிடந்த சீதாதேவியாரின் மாண்புமிக்க மனமும், இங்ஙனம் நற்குண நற்செயல்களால் நிறைந்து பெண்குலத்தின் தெய்வமாக விளங் கும் சீதாதேவியாரைத் தம் மகளாகப் பெறும் பாக்கியத்தாற் சனகமகாராசனின் குலமும், போற்றிப் புகழுதற்குரியவாயின என்பதே அனுமானின் கருத்தாகும்.

மேற்கூறியவற்றுள் இராமபிரானின் வீரத் தோள்களோ, அல்லது சீதாதேவியின், தூய மனமோ, அல்லது சனகனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப் பெருங் குலமோ, சீதாதேவியின் கற்பையும் காதலையும் களங்கமுறுமற் காப்பாற்றியது எனச் சொல்ல முடியாமல் சொல்லின் செல்வனுகிய அனுமான் சிந்திக்கின்றான்:

எனவே, சீதாதேவியார் தன் கற்பின் மேம்பாட்டினால், தான் புகுந்த குலத்தையும், பிறந்த குலத்தையும், தன் மன மாட்சியையும் சிறப்பித்துவிட்டார் என்பதை உணர்கின்றோம்:

என் அடிமை

70. தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்தில ரறமு மீறின்றால்
யாவதிங் கினிச்செய லரிய தெம்பிராற்கு
ஆவவென் னடிமையும் பிழைப்பின் றுமரோ.

கொண்டுகூட்டு: தேவரும் பிழைத்திலர், தெய்வ வேதியர் ஏவரும் பிழைத்திலர், அறமும் ஈறு இன்று (ஆல்) ஆவ! எம்பிராற்கு என் அடிமையும் பிழைப்பு இன்றும், (அரோ) இங்கு இனி (எனக்குச்) செயல் அரியது யாவது.

பொருள்

தேவரும் - வானவர்களும், பிழைத்திலர் - ஒரு பிழையும் செய்திலர், தெய்வவேதியர் ஏவரும்-தெய்வத் தன்மை பொருந்திய (பூதேவர் என்னும்) அந்தணர்கள் எல்லாரும், பிழைத்திலர்-ஒரு தவறும் செய்திலர், அறமும்-தருமமும், ஈறு இன்று-அழிந்து போகவில்லை, ஆவ-என்ன ஆச்சரியம், எம்பிராற்கு-எமது தலைவனுகிய இராமபிரானுக்குப்(ப் பணிசெய்யும்), என் அடிமையும்-எனது அடிமை வாழ்வும், பிழைப்பு இன்றும்-தவறுதல் இல்லை ஆயிற்று, இங்கு-இவ்வுலகத்தின், இனி-இனிமேல், செயல் அரியது-செய்தற்கு அரிய காரியம், யாவது-(இராம தூதனுகிய எனக்கு) யாது உள்ளது:

பொழிப்பு

வானவர்களும் ஒரு பிழையும் செய்திலர்; தெய்வத் தன்மை பொருந்திய அந்தணர்கள் யாவரும் ஒரு தவறும் செய்திலர்; தருமமும் அழிந்துபோகவில்லை என்ன ஆச்சரியம், எமது தலைவனுகிய இராமபிரானுக்குப் பணிசெய்யும் எனது அடிமை வாழ்வும் தவறுதல் இல்லையாயிற்று. இவ்வுலகத்தில் இனிமேல் இராம தூதனுகிய எனக்குச் செய்தற்கரிய காரியம் யாது உள்ளது என்பதாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச்செய்யுளில் சீதாதேவின் கற்பும் காதலும் களங்கமின்றி விளங்கிய அறிபுதத்தை எண்ணியெண்ணி ஆவி தளிர்க்கும் அனுமானின் ஆர்வக்குரலைக் கேட்கின்றோம்:

சீதாதேவி கற்புநெறியில் நின்று தவறுத சிறப்பினால் தேவர்களும் குறைமில்லாதவர்களாய்ப் புதுவாழ்வு பெறுவார்கள் என்பதே அனுமானின் கருத்தாகும். சீதாதேவியின் கற்பின் ஆற்றலே இராம பாணமாக உருத்தாங்கி அரக்கனாகிய இராவணனை அழித்து அமரரை வாழ்விக்கும் என்பதாம்.

தெய்வத்தன்மை பொருந்திய அந்தணர்கள் இராவணனின் அழிவால் வேதநெறியை வளர்த்து மேம்படுவாராதலால்

"தெய்வவேதியர் ஏவரும் பிழைத்திலர்"

எனவும்,

இராவணன் அழிவதால் தருமம் தலைதூக்கி விளங்கும் என்னும் கருத்தால்

"அறமும் ஈறு இன்று"

எனவும் அனுமான் கூறினான் என்க. (ஆல், அரோ, இரண்டும் அசை)

வாழிய உலகு

71. கேழிலா னிறையிறை கீண்ட தாமெனின்
ஆழியான் முனிவெனு மாழி மீக்கொள
ஊழியி னிறுதிவந் துறுமென் றுன்னினேன்
வாழிய வுலகினி வரம்பி னெளெலாம்.

கொண்டுகூட்டு: கேழ் இலாள் (ஆகிய சீதாதேவியின்) நிறை இறை கீண்டதாம் எனின், ஆழியான் முனிவு எனும் ஆழி மீக் கொள, ஊழியின் இறுதி வந்து உறும் என்று (யான்) உன்னினேன், இனி உலகு வரம்பில் நாள் எலாம் வாழிய.

பொருள்

கேழ் இலான்-ஒப்பில்லாதவளாகிய சீதாதேவியின், நிறை-கற்பு நெறியானது, இறை-சிறிதேனும், கீண்டதாம் எனின்-இதைவுற்றிருக்குமானால், ஆழியான்-(ஆணையாகிய) சக்கரத்தையுடைய (ஆஞ்ஞா சக்கரத்தை உடையான் என்பதாம்) இராமபிரானின், முனிவு எனும்-சினமாகிய (கோபம் என்கின்ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழி - கடலானது, மீக்கொள-மேலே பொங்கி ஏழ, ஊழியின் இறுதி - (உலகம் முழுவதும் அழியும்) ஊழிக்காலத்தின் முடிவு, வந்துஉறும் என்று-வந்து பொருந்திவிடுமோ என்று, உன்னினேன்-எண்ணினேன், (சீதாதேவியின் கற்பு சிறிதும் தவருமையால்) இனி - இனிமேல், உலகு - உலகமானது, வரம்பில் நாள் எலாம்-எல்லையில்லாத காலம் முழுதும், வாழிய - வாழ்வதாக.

பொழிப்பு

ஒப்பில்லாதவளாகிய சீதாதேவியின் கற்புச் சிறிதேனும் சிதைவுற்றிருக்குமானால் இராமபிரானின் கோபமென்னும் கடலானது பொங்கி எழுந்து ஊழியின் இறுதிக்காலம்போல உலகம் முழுவதையும் அழித்து விடுமென்று எண்ணினேன். சீதாதேவியின் கற்பு சிறிதும் தவருமையால் இந்த உலகம் எல்லையில்லாத காலம் இனிது வாழ்வதாக என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் கற்பில் தவருத சீதாதேவியின் சிறப்பினால் இந்த உலகம் அழியாது நிலைபெறுவதாயிற்று எனக்கூறும் அனுமானின் ஆர்வக்குரலைக் கேட்கின்றோம்.

அரக்கனால் கவரப்பட்ட சீதாதேவி கற்பு நெறியில் தவறுவாளானால் இந்த உலகம் முழுதும் இராமபிரானின் சினத்திற்கு இரையாகி அழிந்துவிடுமோவென அஞ்சிய அனுமான், கற்பில் தவருத சீதாதேவியின் மாண்பை உணர்ந்தவுடன் உலகம் எல்லையில்லாத காலம் இனிது வாழ்வதாகவென ஏத்துகின்றான் என்பதாம்.

நங்கையர் மனத்தவம்

72. வெங்கனல் முழுகியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ வருந்துவ நீக்கி நோற்பவர்
எங்குளர் குலத்தில்வந் தில்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ.

கொண்டுகூட்டு: குலத்தில் வந்து, இல் இன் மாண்புடை நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ? (இவர்கட்கு முன்) வெங்கனல் முழுகியும், புலன்கள் வீக்கியும் நுங்குவ அருந்துவ நீக்கி நோற்பவர் எங்கு உளர்.

பொருள்

குலத்தில் வந்து - நற்குடியிலே தோன்றி (உயர்ந்த குலத்தில் பிறந்து), இல் இன் மாண்புடை - இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகளையுடைய, நங்கையர் - கற்புடைய பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினது, மனத்தவம்-மனத்திண்மையாகிய (மன உறுதியாகிய) தவத்தின் மேம்பாட்டை, நவிலற்பாலதோ-சொல்லும் தன்மை யுடையதோ (சொல்ல முடியாது என்பதாம். இவர்களுக்கு முன்) வெங்கனல் முழுகியும்-கொடிய தீயிற் குளித்தும், புலன் கள் வீக்கியும்-ஐம்புலன்களை அடக்கியும், நுங்குவ உண்ணு வனவற்றையும், அருந்துவ-பருகுவனவற்றையும் (குடிக்கத்தக்க நீர் முதலியனவற்றையும்) நீக்கி-ஒழித்து (துறந்து) நோற்பவர்-தவஞ்செய்வோர், எங்கு உளர்-எங்கே உள்ளார் (ஓர் இடத்தும் இலர் எனபதாம்) இல்லறத்தைத் துறந்த மாதவர் தவத்திலும் இல்லறத்தைப் போற்றும் மங்கையர் தவம் பெரிதென்பதாம்.

பொழிப்பு

நற்குடியிலே பிறந்து இல்லறத்திற்குரிய நற்குண நற்செய் கைகளையுடைய பெண்களின் மனத்திண்மையாகிய தவத்தின் மேம்பாடு சொல்ல முடியாததொன்றாகும். இப்பெண்கள் ஆற்று கின்ற தவத்திற்கு முன், கொடிய தீயில் குளித்தும், அடக் கியும், உண்ணும் சோறு முதலியவற்றையும் குடிக்கும் நீர் முதலியவற்றையும் வெறுத்தும், தவஞ்செய்வோரின் தவம் ஓர் தவமாகாது என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் இல்லறத்தைத் துறந்து துறவறத்தை மேற் கொண்ட முனிவர் தவத்திலும் இல்லறத்திலிருந்து வாழ்கின்ற கற்புடைப் பெண்களின் மனத்தவம், மாண்பினால் உயர்ந்ததெனக் கூறுகின்ற அனுமானின் ஆனந்தக்குரலைக் கேட்கின்றோம்.

சிறைச்சாலையைத் தவச்சாலையாகக் கொண்டு தன் தலை வனையே எண்ணியவண்ணம் தவம் கிடந்து, தன் இற்பிறப்பை யும் கற்பின் சிறப்பையும் காத்த சீதாதேவியாரின் பண்பை இல்லிருந்து நல்லறமாற்றும் பெண்குலத்தின் பொதுப்பண்பாகப் போற்றி உரைக்கும் கம்பனின் கவிதை உள்ளம் மிகமிக உயர்ந்த தாகும்.

தீயிற்குளித்தும், ஐம்புலனை அடக்கியும், உணவையும் நீரை யும் ஒழித்தும், ஊழிகாலம் வரை இருந்து முனிவர்கள் ஆற்று கின்ற மாதவமும், சிறைச்சாலையிலிருந்து தன் கற்பைக் காத்த சீதாதேவியின் மனத்தவத்திற்கு ஈடாகாது என்பதே கம்பரின் கருத்தாகும்.

தவ முனிவர்கள் தவ ஒழுக்கத்தில் தவறினால் வரும் தீமை, அவர்களை மாத்திரமே தாக்கும். குடும்பப் பெண்கள் கற்பொழுக் கத்தில் தவறினால் அவர்கள் பிறந்த குலத்தையும், புகுந்த குலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ையும், பெண்கள் குலத்தையும் மாசுபடுத்தி உலகம் உள்ளளவும் தீராத வடுவையும் வைத்துவிடும் என்க.

பொற் பிறங்கல் இலங்கை பொருந்தலர்
எற்பு மால்வரை ஆக்கிய தில்லெனின்
இற் பிறப்பும் ஒழுக்கும் இழுக்கமில்
கற்பும் யான் பிறர்க்கு எங்ஙனம் காட்டுவேன்

எனச் சீதாதேவி கூறுவதால் உணர்க.

கமலக்கண்ணன் காணநோற்றிலன்

73. பேணநோற் றதுமீனப் பிறவி பெண்மைபோல்
நாணநோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற் றீண்டிவ ளிருந்த வாறெலாம்
காணநோற் றிலனவன் கமலக் கண்களால்.

கொண்டுகூட்டு: நங்கை தோன்றலால், மீனப்பிறவிபேண நோற்றது (நங்கை தோன்றலால்) பெண்மை நோற்றது, பெண்மை போல் நாணம் நோற்று உயர்ந்தது, ஈண்டு இவள் மாண நோற்று இருந்த ஆறு எலாம் அவன் (இராமபிரான் தன்) கமலக்கண்களால் காண நோற்றிலன்.

பொருள்

நங்கை தோன்றலால் - சீதாதேவி தோன்றியதால், மீனப் பிறவி - குடிப்பிறப்பானது, பேண நோற்றது - எடுத்து வளர்ப் பதற்கு (ஓர் பெண்குழந்தை வேண்டுமெனத்) தவங்கிடந்து (அத னைப் பெற்றுவிட்டது) பெண்மை நோற்றது - பெண் பிறப்பும் தான் செய்த தவத்தின் பேறை அடைந்துவிட்டது, பெண்மை போல் - அப் பெண் பிறப்பைப் போலவே, நாணம் - பெண் களுக்கு இயல்பாகவே உள்ள நாணம் என்னும் பண்பும், நோற்று உயர்ந்தது - தவம் செய்து சிறப்படைந்துவிட்டது, ஈண்டு - இங்கே (இலங்கையில்) இவள் - இச்சீதாதேவி யானவள், மாண - மாட்சிமை பொருந்த (மேன்மைதங்க) நோற்று - (தன் கண வனையே இடைவிடாது நினைத்தலாகிய) தவத்தைச் செய்து, இருந்த ஆறு எலாம் - இருக்கும் தன்மைகளையெல்லாம், அவன்- இராமபிரான், கமலக்கண்களால் - (தனது) செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களால், காண - பார்ப்பதற்கு, நோற்றிலன்- தவஞ்செய்திலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

சீதாதேவி தோன்றியதால் குடிப்பிறப்பானது தான் எடுத்து வளர்ப்பதற்கு ஒரு பெண்குழந்தை வேண்டுமேயெனத் தவங் கிடந்து பயனைப் பெற்றுவிட்டது. பெண் பிறப்பும் தான் உயர வேண்டுமென்று தவங்கிடந்து அப்பேற்றை அடைந்துவிட்டது: அப்பெண்பிறப்பைப்போலவே பெண்களுக்கு இயல்பாக உள்ள நாணம் என்னும் பண்பும் தான் உயரவேண்டும் என்று தவங் கிடந்து அப்பேற்றை அடைந்துவிட்டது. இலங்கையில் சீதாதேவி யானவள் மேன்மைதங்கத் தன் கணவனையே இடைவிடாது நினைத்தலாகிய தவத்தைச் செய்துகொண்டிருக்கும் தன்மைகளை யெல்லாம் தனது செந்தாமரை மலாபோன்ற கண்களால் காணும் தவத்தை இராமபிரான் செய்திலனே என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவி தோன்றியதால் குடிப்பிறப்பும், பெண்மையும், நாணமும் புதுவாழ்வு பெற்று உயர்ந்துவிட்டன எனக் கூறுகின்ற அனுமனின் புலமைக்குரலைக் கேட்கின்றோம்:

குடிப்பிறப்பானது, தனது சிறப்பை உலகம் உள்ளளவும் நிலை நாட்டக்கூடிய ஓர் பெண் குழந்தையைப் பெற்று வளர்க்க வேண்டும் என்ற நீண்டகாலம் தவம் கிடந்ததாம். அத்தவத்தின் பயனைச் சீதாதேவி தோன்றியதால் குடிப்பிறப்புப் பெற்று விட்டதென்க:

பெண்மையென்னும் பிறப்பு தன் பிறப்பின் பெருமை உல கம் உள்ளளவும் விளங்கவேண்டுமெனப் பெருந்தவம் கிடந்த தாம்: அத்தவத்தின் பயனைச் சீதாதேவி தோன்றியதால் பெண்மையும் பெற்றுவிட்டதென்க:

பெண்களுக்கு இயல்பாகவே உள்ள நாணம் என்னும் பண் பும், தான் ஓர் சிறந்த பெண்ணைச் சேர்ந்து பெருஞ்சிறப்புடன் வாழவேண்டுமென்று அருந்தவம் கிடந்ததாம்: அத்தவத்தின் பய னைச் சீதாதேவி தோன்றியதால் நாணமும் பெற்றுவிட்டதென்க:

இங்ஙனம் குடிப்பிறப்பும், பெண்மையும், நாணமும் சிறந்து ஓங்குதற்குக் காரணமாக விளங்கியசீதாதேவி, இலங்கையிலிருந்து இடைவிடாது தன் கணவனையே எண்ணியவண்ணம் தவங்கிடக் கும் தன்மையைக், கமலக்கண்ணனாகிய இராமபிரான் காணத் தவம் செய்திலனே! என அனுமானுடன் சேர்ந்து கம்பரும் கவலைப்படுகின்றார்: தன்னைவிட்டுப் பிரியாது, சீதாதேவி உட னுறைந்த காலத்தில் அவள் தன்மேற் கொண்ட காதல் அன் பைக் கண்டுகளித்த இராமபிரான், அவள், தன்னைப் பிரிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தினுல் அரக்கனின் சிறைச்சாலையிலிருந்து ஆவி துடிக்கின்ற நேரத்திலும் தன்மேற் கொண்ட அக்காதல் அன்பை மறவாமல் கண்ணீர் வெள்ளத்தின் நடுவேயிருந்து ஆற்றுகின்ற கடுந்தவத்தை இராமபிரான் காண்பானுகில் என்ன நிலையை எய்துவான் என்பதை எண்ணிய கம்பர்

"மாணநோற்று ஈண்டு இவள் இருந்த ஆறு எலாம்
காணநோற்றில அவன் கமலக் கண்களால்"

எனக்கூறிக் கவலைப்படுகின்ருர்.

சீதாதேவியின் மணக்கோலத்தைத் தன் கமலக்கண்களால் கண்ட இராமபிரான், அவளின் தவக்கோலத்தையும் காண்பானுகில் அவனின் கமலக்கண்கள் எப்படி இருக்கும் என்பதைச் செப்பவும் முடியாமல் கம்பர் சிந்திக்கின்ருர்.

தனிமையும் பெண்மையும்

74. முனிபவ ராக்கியர் முறையி னீங்கினுர்
இனியவ டானலா தியாரு மில்லையால்
தனிமையும் பெண்மையுந் தவமு மின்னதே
வனிதையர்க் காகநல் லறத்தின் மாண்பெலாம்.

கொண்டுகூட்டு: அரக்கியர் முறையின் நீங்கினுர், முனிபவர் இனி, அவள் தான் அயலாது, யாரும் இல்லை (ஆல்), தனிமையும் இன்னது, பெண்மையும் இன்னது, தவமும் இன்னது, நல்லறத்தின் மாண்பு எலாம் வனிதையர்க்கு ஆக.

பொருள்

அரக்கியர் அரக்கியர்கள், முறையின் நீங்கினுர் - நீதி தவறியவர்களாய், முனிபவர் - கோபிக்கின்றவர்கள், (சீறுகின்றவர்கள்) இனி - (இங்ஙனம் அரக்கியர்கள் சீற்றங்கொள்கின்றதாகிய) இந்நிலை ஏற்பட்ட பின், அவள் தான் அலாது - அச் சீதாதேவியேயன்றி, யாரும் இல்லை - (அவளுக்கு) வேறு எவரும் துணையாக இல்லை, தனிமையும் இன்னது - தனித்திருத்தலும் இத்தகைச் சிறப்புவாய்ந்ததே, பெண்மையும் இன்னது - பெண் தன்மையும் இத்தகைச் சிறப்புவாய்ந்ததே, தவமும் இன்னது - தவ ஒழுக்கமும் இத்தகைச் சிறப்புவாய்ந்ததே, நல்லறத்தின் - (சீதாதேவியாரிடம் காணப்படுகின்ற) நன்மைவாய்ந்த தருமத்தின் (இல்லறத்தின் எனவும் பொருள் கூறலாம்) மாண்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலாம் - உயர்ந்த பண்பாடுகள் எல்லாம், வனிதையர்க்கு ஆக. பெண்குலம் முழுவதுக்கும் (பெண்கள் எல்லோர்க்கும்) உள வாகுக.

பொழிப்பு

அரக்கியர்கள் நீதி தவறியவர்களாய்ச் சிறுகின்றவர்கள்; இங்ஙனம் அரக்கியர்கள் சிற்றங்கொள்ளுதலாகிய இந்நிலை ஏற் பட்டபின் அச் சீதாதேவியே தனக்குத் துணை அன்றி வேறு யாரும் துணையாக இல்லை. தனித்திருத்தலும், பெண்தன்மை யும், தவமும் இத்தகைய சிறப்பு வாய்ந்தனவேயாம். சீதாதேவி யிடம் காணப்படுகின்ற நல்ல தருமத்தின் உயர்ந்த பண்பாடு கள் எல்லாம், பெண்கள் எல்லோர்க்கும் உளவாகுக என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவி கொடிய அரக்கியர்களின் நடுவே தனித்திருந்து ஆற்றுகின்ற தவத்தின் மேம்பாட்டை வாழ்த்தி மகிழ்கின்ற அனுமானின் அன்புக்குரலைக் கேட்கின்றோம்;

கொல்லும் குணம்வாய்ந்த கொடிய அரக்கியரின் நடுவே தனி ஒருத்தியாக இருந்துகொண்டே தவஞ்செய்கின்ற சீதா பிராட்டியை உற்றுநோக்கிய அனுமான் உள்ளமுருகி உருகி உரைக்கின்றான்;

ஒருவரும் துணையில்லாத தனிமையின் தன்மை இத்தகைய சிறப்புடையதா என அனுமான் சிந்திக்கின்றான்; அத்தனிமையி லும் ஓர் இனிமையைக்கண்டு, அத்துடன் பிரிவின்றிக் கலந்து நிற்கின்ற சீதாதேவியின் நிலைமையை அனுமான் அறிந்தறிந்து ஆவி தளிர்க்கின்றான்;

தனிமையாக இருந்தும் எங்ஙனம் பெண்மைப் பண்புகளா கிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பவற்றைச் சீதா தேவி தன்னிடத்திலேயே தவறுமல் தங்தம்வண்ணம் ஏவல்கொள் கின்றாள் என்பதையும், தன்குடிப் பிறப்பையும், ஒழுக்கத்தை யும், கற்பையும் அவள் எங்ஙனம் பாதுகாக்கின்றாள் என்பதை யும் உணர்ந்த அனுமான் உவகை அடைகின்றான்;

இங்ஙனம் தனிமையாக இருந்து பெண்மையைப் பாதுகாக் கின்ற சீதாதேவியின் தவநிலையை அனுமானால் மறக்கமுடிய வில்லை. கொல்லும் படைதாங்கிய அரக்கியரின் நடுவே, சிறைச் சாலையிலே தவஞ் செய்வதானால் அதற்கோர் தனி ஆற்றல் வேண்டும்; அத்தவத்தின் மேம்பாட்டை அனுமானால் மறக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. இத்தவத்தைச் சீதாதேவியின் ஆருயிர்த்தலைவனாகிய இராமபிரான் அல்லவா காணவேண்டும் என்ற எண்ணம் அனுமானை வாட்டுகின்றது.

இனி, இங்ஙனம் சீதாதேவியிடத்தில் சிறந்து விளங்குகின்ற அறப்பண்புகள் யாவும் பெண்கள் எல்லோரிடத்திலும் பொலிந்து, சிறக்கவேண்டும் என்னும் எண்ணம் அனுமான் உள்ளத்தில் எழுந்தது. உடனே அவன்,

தனிமையும் பெண்மையும் தவமும் இன்னதே
வனிதையர்க்காக நல்லறத்தின் மாண்பெலாம்.

என வாழ்த்துகின்றான்:

தனிமையும் இன்னதே பெண்மையும் இன்னதே
தவமும் இன்னதே.

என இன்னதே என்னும் சொல்லைத் தனித்தனி கூட்டிப்பொருள் கொள்ளப்பட்டது.

அருமையே அருமை

75. தருமமே காத்ததோ சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே யருமையே யாரி தாற்றுவார்
ஒருமையே யெம்மனோர்க் குரைக்கற் பாலதோ

கொண்டுகூட்டு: இது அருமையே அருமையே இது ஆற்றுவார் யார், இது ஒருமையே, எம்மனோர்க்கு இது உரைக்கற்பாலதோ, (இங்ஙனம் தவத்தை மேற்கொண்ட சீதாதேவியாரின் கற்புக்கோர் ஏதமும் ஏற்படாவண்ணம்) தருமமே காத்ததோ, சனகன் நல்வினைக் கருமமே காத்ததோ, கற்பின்காவலோ.

பொருள்

இது - (சீதாதேவியார் ஆற்றுகின்ற) இத்தவம், அருமையே அருமையே - அருமையானதே அருமையானதே, இது - இத்தகைய தவத்தை, ஆற்றுவார் - செய்ய வல்லவர்கள், யார் - ஆர் இருக்கின்றார்கள் (பிறரால் செய்யமுடியாது என்பதாம்) இது - (சீதாதேவியார் ஆற்றுகின்ற) இத்தவம் ஒருமையே - ஒப்பற்றதேயாகும், (ஆனபடியால்) எம்மனோர்க்கு - எம்மைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்களுக்கு. இது - இத்தவத்தின் தன்மை, உரைக்கற் பாலதோ - சொல்லத்தக்க எளிமை உடையதாகுமோ (ஆகாது என்பதாம்) (இங்ஙனம் தவமாற்றுகின்ற சீதாதேவியாரின் கற்புக்கோர் ஏதம் ஏற்படாவண்ணம்) தருமமே - அறந்தான், காத்ததோ - காப்பாற்றியதோ, (அல்லது) சனகன் - சனக மகாராசனின், நல்வினைக்கருமமே - புண்ணியச்செயல்கள்தான், காத்ததோ - காப்பாற்றியதோ, (அல்லது) கற்பின் காவலோ - கற்பினுல் காக்குங்காவலோ;

பொழிப்பு

சீதாதேவியார் ஆற்றுகின்ற இத்தவம் மிகவும் அருமை யானதே; இத்தகைய தவத்தை ஆற்றவல்லவர்கள், யார் இருக்கின்றார்கள்: இத்தவம் தன்னேரில்லாத் தவமாகும். எம் மைப் போன்றவர்களால் இத்தவத்தின் தன்மையை எடுத்துச் சொல்ல முடியாது. இங்ஙனம் தவம் புரிகின்ற சீதாதேவியின் கற்புக்கோர் ஏதமும் எய்தாவண்ணம் தருமந்தான் காப்பாற் றியதோ? அல்லது சனகமகாராசன் ஆற்றிய புண்ணியச் செயல் தான் காப்பாற்றியதோ? அல்லது, கற்பினுல் காக்குங் காவலோ அறியேன் என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியின் தவச்சிறப்பை வியந்துரைக் கின்ற அனுமானின் எழிச்சிக்குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவி, சிறைச்சாலையில் இருந்து செய்கின்ற தவத் தினைச் சொல்லிச் சொல்லி வியக்கின்ற அனுமானின் உள்ளக் கிளர்ச்சி கம்பரின் கவிதை ஆற்றலையும் கடந்துவிட்டது.

அருமையே அருமையே ஆர் இது ஆற்றுவார்
ஒருமையே எம்மனோர்க்கு உரைக்கற்பாலதோ.

எனவரும் கவிதைத்தொடர்களையும் படித்துப்பாருங்கள். அனு மானின் உள்ளத்தில் நின்று பெருகும் எண்ணக் குவியல்களுக் கெல்லாம் உருவங்கொடுத்துவிட வேண்டுமென்ற ஆராமை கம்பரின் உள்ளத்தை ஆட்டிவைக்கின்றது. அனுமானாக நின்று கம்பர் கூறுகின்ற ஆர்வமொழிகள் எம்மையும் சிந்திக்கத் தூண்டுகின்றது. சீதாதேவியின் தவத்துக்கொப்பான தவம் வேறில்லை என்பதே கம்பரின் கருத்தாகும். இங்ஙனம் தவம் செய்த சீதாதேவியின் கற்பும் காதலும் பழுதுபடாவண்ணம் துணையாக நின்று காப்பாற்றியன, ஏவை என்பதைக் கற்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலே பதிக்க எண்ணிய கம்பர் அனுமா கூற்றாக அறைகின்றார்.

தருமமே காத்ததோ சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ

எனவரும் கவித்தைத்தொடர்களில் அமைந்துள்ள கருத்துவளம் காலங்கடந்து வாழக்கூடியனவாகும். மக்களினத்தின் உயர்ந்த பண்பாடுகள் எல்லாம் இக் கவித்தைத்தொடரில் அமைந்துள்ளன.

தரும தேவதையும், சீதாதேவியின் தந்தையாராகிய சனகன் ஆற்றிய புண்ணியமும், சீதாதேவியின் கற்பும் ஒன்று கூடித்தான், சீதாதேவியின் கற்பையும் காதலையும் காப்பாற்றியதென்க.

கற்புக் கற்புக்கும் காவல் ஆவதை

சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

எனவருந் திருக்குறளால் அறிக.

இது, அருமையே, இது ஆற்றுவார். இது ஒருமையே, இது உரைக்கற்பாலதோ என இடையில் நின்ற இது முன்னும் பின்னுங் கூட்டப்பட்டது. அருமையே அருமையே என்பது உவகை பற்றிவந்த அடுக்குகள்.

தீவினை வெல்லுமோ அறத்தை

76. செல்வமோ வதுவவர் தீமை யோவிது
அல்லுநன் பகலுநின் றமர ஆட்செய்வார்
ஒல்லுமோ வொருவர்க்கீ துறுகண் யாதினி
வெல்லுமோ தீவினை யறத்தை மெய்ம்மையால்.

கொண்டுகூட்டு: அமரர் (அரக்கருக்கு) அல்லும் நன்பகலும் நின்று ஆட்செய்வார், (அவ்வரக்கர்களின்) அவர் செல்வமோ அது, அவர் தீமையோ இது, ஈது ஒருவர்க்கு ஒல்லுமோ, இனி உறுகண் யாது, தீவினை அறத்தை வெல்லுமோ, மெய்ம்மை. (ஆல்)

பொருள்

அமரர் - தேவர்கள், அல்லும் - இரவிலும், நன்பகலும் - நல்ல பகற் பொழுதிலும், நின்று - காத்து நின்று, ஆட்செய்வார் - அவ்வரக்கர் ஏவிய பணிகளைச் செய்வார்கள், அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமோ - அவ்வரக்கர்களின் செல்வ வாழ்க்கையோ, அது-அத்தகைய சிறப்பு வாய்ந்ததாகும், அவர் தீமையோ - அவ்வரக்கர்களின் தீமையோ (தீச் செயல்களோ) இது - (சீதாதேவியைக் கவர்ந்து சிறை வைத்தது போன்ற) இத்தகைய கொடுமை வாய்ந்ததாகும். ஈது-இங்ஙனம் தமது தகுதியோடு மாறுபட்ட (பொருந்தாத) தீய செயல்கள், ஒருவர்க்கு, ஒல்லுமோ - தகுமோ (தகாது என்பதாம்) இனி-இனிமேல், உறுகண் யாது-(எனக்குத் துன்பம் என்ன உளளது, (துன்பம் இல்லை என்பதாம்) தீவினை - பாவமானது, அறத்தை - தருமத்தை, வெல்லுமோ - வெற்றி கொள்ளுமோ (கொள்ளாது) மெய்ம்மை - சத்தியமாகும் (உண்மையாகும்).

பொழிப்பு

அமரர்கள் அல்லும் பகலும் அரக்கர்களுக்கு அடிமை வேலை செய்கின்றார்கள். அரக்கர்களின் செல்வ வாழ்க்கை இங்ஙனம் உயர்ந்ததாக இருக்கின்றது. அவ்வரக்கர்கள் சீதாதேவியாரைக் கவர்ந்து சிறை வைத்தாற்போன்ற தீய செயல்களையே புரிகின்றார்கள். தமது செல்வ வாழ்வின் தகுதிக்குப் பொருந்தாத தீமைகளைப் புரிதல் அவ்வரக்கர்களுக்குப் பொருத்தமானதல்ல. இனிமேல் எனக்கொரு துன்பமும் உண்டாகாது. பாவம் தருமத்தை வெல்லமாட்டாது. இது உண்மையாகும் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில், அமரரும் ஏவல்செய்ய வீற்றிருக்கும் அரக்கர்களின் செல்வ வாழ்வையும், அச்செல்வ வாழ்வுக்குச் சிறிதும் தகுதியில்லாத தீய செயல்களை ஆற்றுகின்ற அவ்வரக்கர்களின் கொடிய பண்பையும் எண்ணிய அனுமான் சொல்லுகின்ற முடிவைக் காண்கின்றோம்.

அருந்தவப் பயனால் அமரரும் ஏவல்செய்யும் பெருவாழ்வு பெற்ற அரக்கர்கள், சீதாதேவியைக் கவர்ந்து சிறையில் வைத்தல் போன்ற தீய செயல்களையும் புரிகின்றார்களே என்றெண்ணிய அனுமான் அருவருப்படைகின்றான். தங்கள் தகுதியோடு மாறு கொள்ளும் தீவினைகளைப் புரிகின்றவர்கள் தவறாது அழிந்து போவார்கள் என்பதே அனுமானின் கருத்தாகும்.

தீவினை வெல்லுமோ அறத்தை

என அனுமான் கூறுகின்ற குரலிலே அமைந்துள்ள ஓசை எழுச்சி, தீவினை ஒருகாலமும் அறத்தை வெல்லாது, என்னும் உண்மையை வலியுறுத்தல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்கள் ஆட்செய்ய வாழ்ந்தாலும், அறத்தை மறந்து விட்ட இவ்வரக்கர்களால் இனிமேல் அறத்தை மறவாத இராம பிரானுக்கு ஏவல்பூண்ட தனக்குத் தீங்கு செய்ய மூடியாதென்ற உண்மையைத் தெளிந்த அனுமான்,

உறுகண் யாது இனி

என உரைத்து உவகை அடைகின்றான்.

அரக்கன் தோன்றினான்

77. என்றிவை யினையன வெண்ணி வண்ணவான்
பொன்றிணி நெடுமரப் பொதும்பர் புக்கவன்
நின்றன னவ்வழி நிகழ்ந்த தென்னெனில்
துன்றுபூஞ் சோலைவா யரக்கன் தோன்றினான்.

கொண்டுகூட்டு: வண்ணவான் பொன்திணி நெடுமரப் பொதும்பர் புக்கவன் (ஆகிய அனுமான்) என்று இவை இனையன எண்ணி நின்றனன், அவ்வழி நிகழ்ந்தது, என்னெனில் அரக்கன் துன்றுபூஞ் சோலைவாய் தோன்றினான்.

பொருள்

வண்ண - அழகுபொருந்தியதும், வான்- பெருமை வாய்ந்தது ம், பொன்திணி - பொன்னுற் செய்யப்பட்ட அடர்ந்த, நெடு மரப்பொதும்பர் - நீண்டமரங்களை உடைய (அசோகவனச்) சோலையின்கண், புக்கவன் - புகுந்தவனாகிய அனுமான் (முன் 68 - 76 செய்யுட்களில் கூறியவண்ணம் தன்னுள்) என்று - கூறி, இவை இனையன-இவை போன்ற பிறவற்றையும், எண்ணி நின்றனன் - எண்ணிக்கொண்டு அப்பொதும்பரில் நின்றான், (புக்கவன் எண்ணி நின்றான் என்க) அவ்வழி - அச் சோலையின் கண் அனுமான்நின்ற அப்பொழுது, நிகழ்ந்தது - நடந்தது, என்னெனில் - என்னவென்றால், அரக்கன் – அரக்கனாகிய இரா வணன், துன்றுபூஞ் சோலைவாய் - நெருங்கிய மலர்களையுடைய அசோகவனத்தின்கண், தோன்றினான் - வந்தான்.

பொழிப்பு

அழகும் பெருமையும் பொருந்தியதாய் விளங்கும் பொன் னுற் செய்யப்பட்ட நீண்ட மரங்களையுடைய சோலையின்கண் புகுந்தவனாகிய அனுமான், சீதாதேவியின் களங்கமில்லாத கற் பையும், காதலையும் பாராட்டித் தன்னுள் வியந்துரைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இவைபோன்ற பிறவற்றை எண்ணிக்கொண்டும் அச் சோலையின்கண் நின்றான். அப்பொழுது அரக்கரின் தலைவனாகிய இராவணன் அனுமான் நின்ற சோலைவழியாக நெருங்கிய மலர்களையுடைய அசோகவனத்தை அடைந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியாரின் கற்பும், காதலும் களங்கமின்றி விளங்கும் அற்புதத்தை எண்ணியெண்ணிப் பாராட்டிய வண்ணம் அனுமான் அசோகவனச் சோலையில் நிற்கும் பொழுது அரக்கர் தலைவனாகிய இராவணன் அசோகவனத்திற்கு வந்த செயல் கூறப்படுகின்றது.

சீதாதேவியின் தனிமையையும், பெண்மையையும், கற்பின் திண்மையையும் பாராட்டிப் பாராட்டி உவகைகொள்ளும் அனுமான், அத்தேவியாரின் தெய்வப் பண்பையும் கண்டுகளிக்கும் பெருவாழ்வைப் பெறுதற்கான புண்ணியப்பேற்றை, இராவணன் வருகையால் எய்தப்போகின்றான் என்பதை உணர்கின்றோம்.

காட்சிப் படலம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

10 அன்னசீதாதேவி சிறையிருக்கும் அசோகவனத்தை நோக்கி அரக்கர்கோன் வருகை

[78 — 96 செய்யுள்]

அரக்கர் கோனுகிய இராவணன், அன்னை சீதாதேவி சிறையிருக்கும் அசோகவனத்தை நோக்கி அமரர் கோன் பவனி வருதல் போல மிக எழுச்சியுடன் வருகின்ற சிறப்பைப் பெருமிதநடைகொண்ட கவிதைகளால் கட்டி உரைக்கும் கம்பனின் புலமைத்திறனைக் கண்டு களிப்போம்.

வயிர இரத்தினங்கள் இழைத்துச் செய்யப்பட்ட மகரகுண்டலங்கள் தனது இருபது தோள்களிலும் கிடந்து அசையவும், பத்துத் தலைகளிலும் சூடிய திருமுடிகள் அலைகடலின் மேலெழும் இளஞ் சூரியர்களைப் போல விளங்கி, இரவைப் பகலாகச் செய்யவும், உடைவாளை உருப்பசி ஏந்தி வரவும், மேனகை வெற்றிலை மடித்துக் கொடுக்கவும், திலோத்தமை செருப்பைத் தாங்கி வரவும், தான் அணிந்த மலர்மாலைகளிலிருந்து எழும்பிய நறுமணம் திசையெலாம் பரந்து கமழவும், இளம் பெண்கள் எட்டுக் கோணங்களிலும் அகல் விளக்கெடுத்து அணியணியாய் வரவும், அப்பெண்கள் அணிந்த அணிகலன்களிலிருந்து மேலெழுந்து பரவிய பேரொளியானது இருளை அகற்றவும், அவர்களின் கால்களிலே அணியப்பட்ட சிலம்புகள் மேகலையோடு சேர்ந்து மெல்லோசை எழுப்பவும், வெள்ளைநிற அன்னக் கூட்டங்கள் போல மெல்ல மெல்ல இளம் மகளிர் எல்லாம் தன்னுடன் செல்லவும் இராவணன் சீதாதேவி சிறையிருக்கும் திசையை நோக்கியவண்ணம் செல்லா நின்றான்.

இங்ஙனம் இராவணன் தன் அரிய உறக்கத்தினின்று விழித்துக் கொதித்தெழும் கொடும் சினத்துடன் செல்வதைக் கண்ட இந்திரன் முதலிய இமையோர்கள், தங்களுக்கு அந்தரம் வந்து விட்டதோ என்று, எண்ணி அஞ்சினார்கள். இப்பொழுது இராவணனிடத்தில் எழுந்த சினம் முழுமதி போன்ற முகத்தையுடைய வளாகிய சீதாதேவி அளவில் நின்று விடுமோ? அல்லது வேறு எவரைக் கெடுத்துத் தானும் ஒழியுமோ என்றெல்லாம் எண்ணி யெண்ணி சிந்தை நைந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் அமரர்கள் சிந்தை நொந்து அல்லல் உற, இராவணன் நீலமலையிலிருந்து நீளமாகப் பெருகி இறங்குகின்ற வெள்ளைநிற அருவியைப் போலத் தன் கரியமார்பில் பால் நிறம் போன்ற வெண்பட்டு விளங்கவும், மார்பிலே அணிந்துள்ள நூலானது நீலமாமலையின் கண்ணே தங்கிய மழைமுகிலைக் கிழித்துப் பிளந்து அதன் நடுவிலே நின்று அசைகின்ற மின்னலைப் போல விளங்கவும், ஒவ்வொரு தோள்களிலும் தனித்தனி அணிந்துள்ள வாகு வலயம் என்னும் தோள் அணிகளிலிருந்து வீசுகின்ற ஒளியானது, விண்ணகத்திலுள்ள நட்சத்திரங்களையும், கிரகங்களையும் மழுங்கும் வண்ணம் செய்யவும், கால்களில் அணிந்துள்ள வீரக்கழல்களின் ஒளி நிலமெல்லாம் பரவி வீசவும், தன் பக்கத்திற் செல்லும் சுற்றத்தார் ஒவ்வொருவரையும் நோக்கி, அரக்கர்கோன் புரிகின்ற புன்சிரிப்பாகிய வெண்நிலவினால் அவனின் முகங்களாகிய தாமரை மலர்கள் இராப்பொழுதிலும் மலர்ந்து விளங்கவும் செல்லாநின்றன.

இங்ஙனம் செல்லாநின்ற இராவணன் தன் உடலின் கரு நிறத்தோடு மாறுபட்டு விளங்கும் வண்ணம் உடுத்திக்கொண்ட பொன்னிறப் பீதாம்பரமானது, நீலமலையின் இடைப்பகுதியில் பொருந்தி ஒளிவீசும் இளவெயிலை ஒத்து விளங்கவும், விரல்களில் அணிந்துள்ள மோதிரங்களிற் பதித்த இரத்தினக்கற்களிலிருந்து எழுகின்ற ஒளிக்கூட்டம், கற்பகப் பூங்காவைப்போற் கவின் ஆர்ந்து விளங்கவும், அவன் அணிந்துள்ள சன்னவீரம் என்னும் வெற்றிமாலையிற் பதிக்கப்பட்டுள்ள வெண்ணிறமான முத்துக்கள், ஊழிமுடிவில் மேருமலையின்கண் ஒட்டிக் காணப்படும் கிரகங்களையும், நட்சத்திரங்களையும் போல நடுவே நடுவே விளங்கவும், மின்னொளியை வீசி விளங்குகின்ற பத்துத்தலைகளும் ஒனிச் செல்வத்தை உடைய பன்னிரண்டு சூரியர்களுள் இருவர் நீங்க, மற்றப் பதின்மரும் ஒரே காலத்தில் உதித்தல்போல் ஒளியைப் பரப்பவும், திக்குவிசய காலத்தில் இராவணனோடு போர் செய்து தங்கள் தந்தங்கள் முறியுண்ட திக்கு யானைகள், நரசிங்கத்தின் அடிச்சுவட்டைத் தனது துதிக்கையால் தடவிய யானை அஞ்சுதல் போல, இராவணனின் வருகையைக்கண்டு அஞ்சவும், வேய்ங் குழலிலிருந்து எழும்பும் இசையானது ஒரு நிலைப்பட்டுப் பாடும் மகளிர் குரலிசையுடன் இணைந்து யாழ்நரம்புகளில் நின்று எழும் இசையுடனும், சில்லரிப்பண்டில் முழவு என்பவற்றில் நின்றெழும் இசையுடனும் கூடிப்பரந்து நஞ்சைக்கக்கும் பாம்பின் வாயில் இருந்து அமுதும் சொரியும் வண்ணம் செய்து, விண்ணும் மண்ணும் நிறைந்து பரவவும், மழைபோன்ற கருங்கண்ணையும், மின்னிடையையும், செவ்வாயையுமுடைய இளம் மங்கையர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலப் பொருள்களை ஏந்தி மழை முகிலைக்கண்டு மகிழ்ந்து கூத்தாடும் மயில்களைப்போலச் சூழ்ந்து வரவும், அந்தரவானத்து அரம்பையர்கள் இன்னிசைப் பாட்டுக்களைப் பாடியவண்ணம் நடனமாடி வரவும், அந்திக் காலவேளையில் அனங்கவேள் என்னும் மன்மதன் செலுத்திய மலரம்புகள் அறுத்த புண்ணில் வேற்படை ஊடுருவிச் செல்வதுபோல் வெண்ணிலாக் கதிர்கள் வீசவும், மந்தமாருதம் மலர்களில் நுழைந்து வாரிக்கொண்டு வரும் இனிய தேன்துளியும், கடலிலிருந்து காற்றுடன் கலந்து வரும் நீர்த்துளியும், பனிநீர்ச் செம்புகொண்டு தெளிக்கும் வாச நறுநீர்த்துளியும் உருக்கிய செம்புக் குழம்புபோல தன்னை வருத்தச் செல்கின்றவனுகிய இராவணனின் மார்பிலும், தோளிலும், நூல்போன்ற இடையையும் குண்டலம் சேர்ந்த தாமரை மலர்போலும் முகங்களையுமுடைய பெண்களின் குளிர்ச்சி பொருந்திய சிவந்த கடைக்கண்கள் சென்று உராவுகின்றன.

இங்ஙனம் மங்கையர் கூட்டத்தின் நடுவே செல்லும் இராவணனின் பக்கத்திலே, கற்பகத்தருக்களும், சங்கநிதி, பதுமநிதிகளும், சந்தனம், கலவைச்சாந்து, அணிகலன்கள் மணி பொன் முதலியவற்றைத், தாங்கியவண்ணம் தொடர்ந்து செல்லவும் வெண்ணிறமான பாற்கடலின் அலைகள் எழுந்து கரிய மலைமீது பரவினாற்போல, வெஞ்சாமரைகள் வீசிடவும், கருங்கடலினின்றும் மேல் எழுகின்ற கறை இல்லாத முழுமதியைப்போலத் தலையின்மேல் வெண்கொற்றக்குடை விளங்கவும், இராவணன் செல்வானுயினன்.

இங்ஙனம் செல்கின்ற இராவணன் தன் காலை எடுத்து வைக்குந்தோறும் பாரம் தாங்கமுடியாமல் இலங்கை, கீழே இறங்கிச் செல்லவும், இலங்கையைச் சூழ்ந்த கருங்கடலினின்று எழும் அலைகளெல்லாம் எல்லையைக்கடந்து பாய்ந்து எங்கும் பரவவும், நிலத்தைத்தாங்கும் ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடனும் நிலைகுலைந்து அலறவும், நிலமகள் முதுகுநொந்து கதறவும் நடந்து சென்றான். அங்ஙனம் செல்கின்ற இராவணனைச் சூழ்ந்து தாடகையைக் காட்டிலும் இருமடங்கு வலிமை சான்றவர்களும், மலைகளைத் தாங்கக்கூடிய வலிய கைகளையுடையவர்களும், பொங்கும் சினத்தினால், பகைவரைக்கொன்று குவிக்கும் போராற்றல் வாய்ந்தவர்களுமான அரக்கியர்கள் பரிசை, மழு, வேல், வில், குலிசம், வாள் முதலான ஆயுதங்களைத் தங்கள் தலைகளின்மேற் சுமந்துகொண்டு வரவும், செல்கின்ற இராவணன், தளிரும், முகையும், பூவும், கொம்பும், அடியும், வேரும் என்றிவையெல்லாம் அழகிய பொன்னால் ஆக்கியவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் விளங்கும் மரங்கள் வளர்ந்துள்ள அசோகவனத்தைத், தான் விடுகின்ற பெருமூச்சுத் தீ தனக்கு முன்னே சென்று எரிக்கவும், சீதை சிறையிருக்கும் திசையை முன் அறிந்திருந்தும் அறியமுடியாத மயக்கத்தை உடையவனுய்த் தனது உயிரினும் சிறந்த நாகரத்தினம் என்னும் மாணிக்கத்தை இழந்து தேடும் பல தலைகளையுடைய ஓர் நாகபாம்புபோலச் சீதாதேவியைத் தேடித்திரிகின்றவனுய் அசோகவனத்தைச் சென்றடைந்தான் என்பதாம்.

கங்குலும் பகல்பட வந்தான்

78. சிகரவண் குடுமி நெடுவரை யெவையு
மொருவழித் திரண்டன சிவண
மகரிகை வயிர குண்டல மலம்பு
திண்டிறற் றோள்புடை வயங்கச்
சகரநீர் வேலை தழுவிய கதிரிற்
றலைதொறுந் தலைதொறுந் தயங்கும்
வகையபன் மகுட மிளவெயி லெறிப்பக்
கங்குலும் பகல்பட வந்தான்.

கொண்டுகூட்டு: மகரிகை வயிர குண்டலம் அலம்பு திண் திறல் தோள், சிகரவண் குடுமி நெடுவரை எவையும் ஒருவழித் திரண்டன சிவண, புடை வயங்க, தலைதொறும் தலைதொறும் தயங்கும் வகைய பல் மகுடம், சகர வேலை நீர் தழுவிய கதிரில், கங்குலும் பகல்பட இளவெயில் எறிப்ப, (அரக்கன் வந்தான்)

பொருள்

மகரிகை - மகரமீன் உருவாக, வயிரகுண்டலம் - வயிர இரத்தினங்கள் இழைத்துச் செய்யப்பட்ட குண்டலங்கள் (மகரகுண்டலங்கள்) அலம்பு - அசைந்தாடுகின்ற, திண் திறல் தோள் - மிகுந்த வலிமை பொருந்திய இருபது தோள்களும், சிகரவண் குடுமி - சிகரமாகிய வளப்பமுள்ள (குடுமிகளைக்கொண்டு) உச்சிகளைக்கொண்டு, நெடுவரை எவையும் - ஓங்கியமலைகள் பலவும், ஒருவழித் திரண்டன - ஓர் இடத்தில் கூடி விளங்கினாற்போல, சிவண - ஒப்ப (ஒத்து) புடை - இருபக்கங்களிலும், வயங்க - விளங்க, தலைதொறும் தலைதொறும் - ஒவ்வொரு தலைகளிலும் சூடப் பெற்று, தயங்கும் வகைய - விளங்குந் தன்மை பொருந்திய, பல் மகுடம் - பல (பத்து) திருமுடிகள், (கிரீடங்கள்) சகரவேலை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகரனின் புதல்வர்களால் தோண்டப்பட்ட சமுத்திரத்தினது, நீர் தழுவிய - நீரைச்சார்ந்து எழுகின்ற, கதிரில் - இளஞ்சூரியனைப்போல விளங்கி, கங்குலும் - (இருள்நிறைந்த) நடு இராப் பொழுதும், பகல்பட-பகற்பொழுதுபோல விளங்கும் வண்ணம், இளவெயிலெறிப்ப - இளம் வெயிலை வீச (எறிக்க) வந்தான் - (அரக்களுகிய இராவணன்) வந்தான்.

பொழிப்பு

வயிர இரத்தினங்கள் இழைத்துச் செய்யப்பட்ட மகரகுண்டலங்கள் கிடந்து அசைகின்ற வலிமைபொருந்திய இருபது தோள்களும், வளப்பமாகிய உச்சியோடு கூடி ஒங்கிய மலைகளெல்லாம் ஓர் இடத்திற் கூடி விளங்குதலை ஒத்து இருபக்கங்களிலும் விளங்க, ஒவ்வொரு தலைகளிலும் சூடப்பெற்று விளங்குந் தன்மை பொருந்திய பத்துத் திருமுடிகளும், சமுத்திரத்தினது நீரைச்சார்ந்து எழுகின்ற இளஞ்சூரியனைப்போல விளங்கி நடு இராப்பொழுதும் பகற் பொழுதாகும் வண்ணம் இளவெயிலை வீச அரக்களுகிய இராவணன் வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் இராவணனின் வீரத்தோள்களின் தன்மையையும், அவன் அணிந்துள்ள பத்துத் திருமுடிகளின் சிறப்பையும் எடுத்துரைக்கின்ற கம்பரின் கவிதைக்குரலைக் கேட்கின்றோம்.

இராவணனின் வீரத்தோள்கள் இருபதும் பருத்து உயர்ந்த பல மலைகள் ஒன்றுபோய்த் திரண்டு விளங்குவதுபோலக் காட்சியளிக்கின்றன என்பதே கம்பரின் கருத்தாகும்.

ஒருவழித்திரண்ட இகரவண்குடுமி நெடுவரைகள் - உவமானம்; இராவணனின் இருபது தோள்களும் - உவமேயம், பருமையும், உயரமும், ஒன்றுகூடி வரிசையாக இருத்தலும் பொதுத் தன்மைகள்; காதில் அணிந்த மகர குண்டலங்கள் தோளின்மீது அசைந்து ஆடுதல் இயல்பாதலால் "குண்டலம் அலம்பும் திண் திறல் தோள்" எனக் கூறினர்.

இராவணனின் பத்துத் தலைகளிலும் அணிந்துள்ள திருமுடிகள், கடலில் உதித்தெழுந்த இளஞ்சூரியனைப்போல ஒளிவீசி இராப்பொழுதையும் பகற்பொழுதாகச் செய்கின்றன எனக் கம்பர் கூறியிருக்கின்றார்.

கடல்மீதெழுந்த இளஞ்சூரியன் - உவமானம், கரிய நிறமுடைய இராவணனின் தலைகளிலணிந்துள்ள மகுடங்கள் - உவமேயம், இருளை நீக்குதலும், ஒளியை வீசுதலும் - பொதுத்தன்மைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியகடலிலே தோன்றி எழும் இளஞ்சூரியன்போலக் கரிய நிறமுடைய இராவணனின் தலைமேல் மகுடங்கள் விளங்குகின்றன என்பதாம். இராவணனின் பத்துத்தலைகள்மீது விளங்குகின்ற பத்து மகுடங்களுக்கும் கரிய கடலின்மேல் தோன்றி உதிக்கும் பத்து இளஞ்சூரியர்களே உவமானமாகக் கொள்ளக் கிடத்தலால், கரிய கடல்மீது உதித்தெழும் பத்துப் பாலசூரியர்கள்-இல்பொருள் உவமை எனக்கொள்க.

''கங்குலும் பகல்பட'' என்பதால் இராவணன் அணிந்துள்ள மகுடங்களின் ஒளிமிகுதி புலனாகின்றது. இங்ஙனம் ஓர் பொருளின் சிறப்பை மிகுத்துக் கூறுதல் உயர்வு நவிற்சி அணி ஆகும்.

பரிமளகந்தம்

79. உருப்பசி யுடைவா ளேந்தினள் தொடர
மேனகை வெள்ளடை யுதவச்
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல
அரம்பையர் குழாம்புடை சுற்றக்
கருப்புரச் சாந்துங் கலவையு மலருங்
கலந்துமிழ் பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்பேர் மாதிரக் களிற்றின்
வரிக்கைவாய் மூக்கிடை மடுப்ப.

கொண்டுகூட்டு: உடைவாள் ஏந்தினள் உருப்பசி தொடர, வெள்ளடை மேனகை உதவ, திலோத்தமை செருப்பினைத் தாங்கிச் செல்ல, அரம்பையர் குழாம் புடைசுற்ற (சுற்றவும்) கருப்புரச் சாந்தும், கலவையும், மலரும், கலந்து உமிழ் பரிமளகந்தம், மருப்பு உடை பொருப்பு ஏர் மாதிரக் களிற்றின் வரிக்கை வாய் மூக்கிடை மடுப்ப.

பொருள்

உடைவாள் ஏந்தினள் - (இடையில் செருகக்கூடிய) வாட்படையை ஏந்தினவளாய், உருப்பசி தொடர - உருப்பசி என்னும் தெய்வமகளானவள், (தன் பின்னே வரவும்) வெள்ளடை-வெற்றிலையை, மேனகை உதவ - மேனகை என்னும் தெய்வப்பெண்ணானவள் (மடித்துக்) கொடுத்துக்கொண்டே வரவும், திலோத்தமை - திலோத்தமை என்னும் தெய்வப்பெண், செருப்பினை - செருப்பை, தாங்கிச்செல்ல - எடுத்துக்கொண்டு தன்னுடன் வரவும், அரம்பையர் குழாம் - (இவர்களே ஒழிந்த) தேவமாதர் கணங் கூட்டம், புடைசுற்ற - பக்கங்களிலே சூழ்ந்து வரவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்புரச் சாந்தும் - பச்சைக் கருப்பூரம் சேர்ந்த சந்தனமும், கலவையும் - கலவைச் சாந்தும், மலரும் - மலர்மாலையும், கலந்து - ஒன்றுகூடி, உமிழ் - வெளியே வீசுகின்ற, பரிமளகந்தம் - மிக்க நறுமணமானது (திசை எங்கும் பரவி) மருப்பு உடை - தந்தங் களைத் தாங்கிய, பொருப்பு ஏர் - மலையைப்போன்ற, மாதிரக் களிற்றின் - திக்குயானைகளது, வரிக்கை - புள்ளிகள் பொருந்திய துதிக்கையிலுள்ள, வாய் - வாயின்கண்ணும், மூக்கிடை - கூரிய மூக்கின்கண்ணும், மடுப்ப - நிறைந்து உட்செல்லும் வண்ணம் (வந்தான் என முடிக்க);

பொழிப்பு

இடையிற் செருகக்கூடிய வாட்படையை ஏந்தினவளாய் உருப்பசி தன் பின்னே வரவும், மேனகை வெற்றிமாலையை மடித்துக் கொடுத்தவண்ணம் தன் பின்னே வரவும், திலோத்தமை செருப் பைத் தாங்கிக்கொண்டு தன் பின்னே வரவும், மற்றைய தேவ மாதர்களின் கூட்டம் தன்னைச் சூழ்ந்து பக்கங்களிலே வரவும், பச்சைக் கருப்பூரஞ் சேர்ந்த சந்தனமும், கலவைச் சாந்தும், மலர்மாலையும் ஒன்றுகூடி வீசுகின்ற நறுமணமானது, தந்தங் களைத் தாங்கி மலைபோல விளங்கும் திக்குயானைகளின் வாயின் கண்ணும் மூக்கின்கண்ணும் நிறைந்து உட்செல்லும் வண்ணம் வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் தேவமாதர்கள் ஏவல்செய்ய சீதாதேவி இருக்கும் சிறைச்சாலையை நோக்கி வருகின்ற இராவணனின் தன்மை கூறப்படுகின்றது.

இராவணன் சீதாதேவி சிறையிருக்கும் சிறைச்சாலைக்கு வழிக்கொண்டு வரும்பொழுதே ஒரு புண்ணியத் தன்மைவாய்ந்த திருக்கோயிலில் அடிவைத்துப் புகுகின்றவன்போல வருகின்றான் என்பதே கம்பரின் கருத்தாகும். அவன் உடைவாளை எடுத்து இடுப்பில் செருகிக்கொள்ளாமல், செருப்புக்களையும் கழற்றிவிட்டு வருகின்றான். அவனுடைய உடைவாளை ஊர்வசி என்னுந் தெய் வப் பெண் கொண்டுவருகின்றாள். செருப்பைத் திலோத்தமை என்னுந் தெய்வப்பெண் கொண்டுவருகின்றாள்; மேனகை வெற் றிமாலை மடித்துக் கொடுத்துக்கொண்டே வருகின்றாள். இங்ஙனம் அழகே உருவமான தெய்வமாதர்கள் அஞ்சியடங்கிப் பணிசெய்து கொண்டு வரவும் அவர்களைப் பொருட்படுத்தாமற் சீதாதேவியை எண்ணியவண்ணமாய் இராவணன் வருகின்றான் என்பதைக் கம்பர் குறிப்பாகக் காட்டுகின்றார்: இதனால் ஊர்வசி, மேனகை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலோத்தமை முதலான தெய்வப் பெண்களிலும் சிறந்த அழகு வாய்ந்தவள் சீதாதேவி என்பதே கம்பரின் கருத்தாகும்.

இனி, இராவணன் அணிந்துள்ள கலவைச்சாந்து மலர்மாலை என்பவற்றின் நறுமணம் திசைகளெங்கும் பரவித் திசைகளின் முடிவிலே நிற்கும் திக்குயானைகளின் மூக்கிலும் நிறைந்தது எனக் கூறி, அந்நறுமணத்தின் மிகுதிப்பாட்டைக் கம்பர் உணர்த்துகின்றார்.

பால்நிறத்து அன்னக்குழாம்

80. நானநெய் விளக்கு நாலிரு கோடி
நங்கைய ரங்கையா லெடுப்ப
மேனிவந் தெழுந்த மணியுடை யணியின்
விரிகதி ரிருளெலாம் விழுங்கக்
கான்முதற் றொடர்ந்த நூபுரஞ் சிலம்பக்
கிண்கிணி கலையொடுங் கலிப்பப்
பானிறத் தன்னக் குழாம்படர்ந் தென்னப்
பற்பல மங்கையர் படர.

கொண்டுகூட்டு: நான நெய் விளக்கு நாலிரு கோடி, (கோணத்திலுள்) நங்கையர் அங்கையால எடுப்ப, மணி உடை அணியின் மேல் நிவந்து எழுந்த விரிகதிர் இருள் எலாம் விழுங்க, கால்முதல் தொடர்ந்த நூபுரம் சிலம்ப, கிணகிணி கலையொடும் கலிப்ப, பால்நிறத்து அன்னக்குழாம் படர்ந்தென்ன பற்பல மங்கையர் படர.

பொருள்:

நான நெய் விளக்கு - வாசனை ஊட்டப்பட்ட நெய்பெய்து (ஊற்றிய) கொளுத்திய விளக்குகளை, நாலிருகோடி - எட்டுக் கோணங்களிலும், நங்கையர் - (சில) பெண்கள், அங்கையால் - தமது அழகிய கைகளில், எடுப்ப - ஏந்திவரவும், மணிஉடை - (பெண்கள் அணிந்த) மணிகளையுடைய (இரத்தினங்கள் அழுத்திச் செய்யப்பட்ட) அணியின் - அணிகலன்களிலிருந்து, மேல் நிவந்து எழுந்த - மேலே உயர்ந்து எழுந்து, விரிகதிர் - பரவிய ஒளியானது, இருள் எலாம் விழுங்க - (அப்பொழுது அங்கே உள்ள) இருள் முழுவதையும் அகற்றிவிடவும், கால்முதல் - காலினிடத்து, தொடர்ந்த நூபுரம் - பிணைந்து நின்ற (அணியப் பெற்ற) சிலம்புகள், சிலம்ப - ஒலித்தலினாலும், கிண்கிணி - சதங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிகன், கலையொடும் - அரையில் அணிந்துள்ள மேகலையோடு, கலிப்ப - சேர்ந்து ஒலித்தலினாலும், பால்நிறத்து - பால்போலும் வெண்ணிறத்தையுடைய, அன்னக்குழாம் - அன்னப்பேடைகளின் கூட்டம், படர்ந்தென்ன - (இனிய ஓசையை எழுப்பி ஒலித்துக் கொண்டு) செல்வதுபோல, பற்பல மங்கையர் படர - மிக்க பல தொகையான இளம் பெண்கள் உடன் செல்லவந்தான்.

நாலிருகோடி நங்கையர் எனும் தொடரில் வரும் நாலிரு கோடி என்பதனை நங்கையர்க்கு அடையாக்கி எட்டுக்கோடி மகளிர் எனவும், எட்டு வரிசையான மகளிர் எனவும், எட்டு நூதன கன்னியர் எனவும் பொருள் கொள்வாரும், நாலிரு கோடி என்பதனை நாலிருகோடி விளக்கு என விளக்குக்கு அடையாக்கி எட்டுக்கோடி விளக்கு எனவும், எட்டு மூக்குகளையுடைய விளக்கு எனவும் பொருள் கொள்வாரும் உளர்.

நான நெய்விளக்கு என்பதற்கு புனுகு தைலம் விட்டு ஏற்றிய விளக்குகளை என உரை கூறுவாரும் உளர்.

பொழிப்பு

வாசனை ஊட்டப்பட்ட நெய் ஊற்றிக் கொளுத்திய விளக்குகளை எட்டுக்கோணங்களிலும் நின்று பெண்கள் சிலர் தமது அழகிய கைகளில் ஏந்திவரவும், பெண்கள் அணிந்த மணிகள் அழுத்திச் செய்யப்பட்ட அணிகலன்களிலிருந்து மேலே உயர்ந்து எழுந்து பரவிய ஒளியானது இருளை அகற்றவும், காலினிடத்து அணியப்பெற்ற சிலம்புகள் ஒலித்தலினாலும், சதங்கை அணிகள் மேகலையோடு சேர்ந்து ஒலித்தலினாலும், பால்போலும் வெண்ணிறத்தையுடைய அன்னப்பேடைகளின் கூட்டம் இனிய ஓசையை எழுப்பி ஒலித்துக்கொண்டு செல்வதுபோலப் பலவகையான இளம்பெண்கள் தன்னுடன் செல்ல வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் மங்கையர் மங்கல விளக்குகளை ஏந்திவரச் சீதாதேவியிருக்கின்ற சிறைச்சாலையை நோக்கிச் செல்கின்ற இராவணனின் மேம்பாடு சொல்லப்படுகின்றது.

அழகு நிறைந்த இளநங்கையர்கள் தாங்கள் அணிந்துள்ள அணிகலன்களினின்று எழுகின்ற ஒளியானது இருளைப் போக்கக் கூடியதாக இருக்கவும், அவற்றுடன் மங்கலமாகக் கைகளில் வாசநெய் ஊற்றி ஏற்றிய விளக்குக்களை ஏந்திக்கொண்டு இன்னிலைகளைச் செய்தவண்ணம் வெள்ளைநிற அன்னப்பேடுகள் கூடிச் செல்வதுபோலத் தமது கால்களில் அணிந்துள்ள சிலம்பும், கிண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணியும், இடையிலணிந்துள்ள மேகலையும், இனிய ஒலிகளை எழுப்பும் வண்ணம் அரக்கர் தலைவனுகிய இராவணனைச் சூழ்ந்து நடந்தனர் என்பதாம்.

இங்ஙனம் பற்பல ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் தன்னைச் சூழ்ந்துவரச் செல்கின்ற இராவணனின் உள்ளம் அவர்கள் எல்லாரினும் மிகமிகச் சிறந்த மேலான அற்புத அழகுவாய்ந்த சீதாதேவியின்மேற் கொண்ட காம உணர்ச்சியி னுல் அள்ளுப்பட்டுச் செல்கின்றுன் என்பதே கம்பர் கருத்தாகும்.

''பால்நிறத்து அன்னக்குழாம் படர்ந்தென்னப்
பற்பல மங்கையர் படர''

என்பதில் பால் நிறத்து அன்னக்குழாம் - உவமானம். (பால் போலும் நிறம்கொண்ட பட்டாடைகளை அணிந்த) பற்பல மங் கையரின் கூட்டம் - உவமேயம். அன்னக்குழாம் எழுப்புகின்ற இன் னுேசை - உவமானம். பெண்கள் அணிந்துள்ள சதங்கை, சிலம்பு, மேகலை என்பவைகளின் இன்னுேசை-உவமேயம். பால்நிற அன்னக் குழாத்திற்கும் பற்பல மங்கையர் கூட்டத்திற்முள்ள பொதுத் தன்மைகள், கூட்டமாகச் செல்லுதலும் அழகும் என்க.

அன்னங்கள் எழுப்பும் இன்னுேசைக்கும், அரிவையர் அணிந் துள்ள அணிகலன்களிலிருந்து எழும்பும் இன்னுேசைக்கும் இனி மையும் ஒலிவகையும் பொதுத்தன்மைகளாகும்.

இந்திரன் முதலிய தேவர்

81. அந்தரம் புகுந்த துண்டென முனிவுற்
றருந்துயி னீங்கிஞ ணுண்டைச்
சந்திர வதனத் தருந்ததி யிருந்த
தண்ணறுஞ் சோலையின் றனேயோ
வந்ததிங் கியாதோ யாரொடும் போமோ
வென்றுதம் மனமறு குதலால்
இந்திரன் முதலோ ரிமைப்பிலா நாட்டத்
தெனேவரு முயிர்ப்பவிந் திருப்ப

கொண்டுகூட்டு: இமைப்பு இலா (இல்லா) நாட்டத்து இந் திரன் முதலோர் எனேவரும், (இராவணன்) அருந்துயில் நீங்கி முனி வுற்றுன், (ஆனபடியால்) அந்தரம் (எமக்குப்) புகுந்ததுண்டு, என, இங்குவந்தது யாதோ, (இவன் முனிவு) ஆண்டைத் தண்ணறுஞ் சோலையின் இருந்த சந்திரவதனத்து, அருந்ததிதனேயோ, (அன்றி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரொடும் போமோ என்று, தம் மனம் மறுகுதலால் உயிர்ப்பு அவிந்து இருப்ப.

பொருள்

இமைப்பிலா நாட்டத்து - இமையாத கண்களை உடைய, இந்திரன் முதலோர் எனவரும் - இந்திரன் முதலிய தேவர் எல்லோரும், அருந்துயில் நீங்கி - (இராவணன்) அருமையான தூக்கத்தில் நின்று விழித்தவனுய், முனிவுற்றான் - சினங்கொண்டான். (ஆனபடியால்) அந்தரம் புகுந்ததுண்டு - (எமக்கு) இடையூறு (தீங்கு) நேர இருக்கின்றது, என - என்று, எண்ணியவர்களாய், இங்கு - இப்பொழுது, வந்தது - (இராவணன் துயில் நீங்கும் வண்ணம்) நிகழ்ந்தது, யார்தோ - என்ன காரியமோ (இவனின் சீற்றம்) ஆண்டை - அங்கு (அவ்விடத்து) தண்ணறுஞ் சோலையின் - குளிர்ந்த வாசனை பொருந்திய பூஞ்சோலையின்கண், இருந்த - (சிறை) இருக்கின்ற, சந்திரவதனத்து - நிறைந்த சந்திரனை (முழுமதியை)ப் போன்ற முகத்தினை உடையவளாய், அருந்ததிதனையோ - கற்பில் அருந்ததியைப்போல் விளங்குகின்ற சீதாதேவியளவில் தானே (அன்றி), யாரொடும் போமோ - வேறு யாரைச் கெடுத்துத், தானும் ஒழியுமோ, என்று - என்று எண்ணி, தம்மனம் - தங்களுடைய உள்ளமானது, மறுகுதலால் - கலக்கம் அடைதலால், உயிர்ப்பு அவிந்து இருப்ப - (அத்தேவர்கள்) மூச்சொடுங்கி (மூச்சுவிட முடியாமல்) இருக்க (வந்தான் என்க).

பொழிப்பு

இமையாத கண்களையுடைய இந்திரன் முதலிய தேவர்களும் மற்றையோரும் இராவணன் அரிய உறக்கத்தினின்றும் விழித்துக் கொடுஞ்சினம் கொண்டுவிட்டான். ஆதலால் எமக்கெல்லாம் இடையூறு நேர்ந்திருக்கின்றது என்று எண்ணியவர்களாய், இப்பொழுது இராவணனுக்குத் துயில் நீங்கும்வண்ணம் ஏற்பட்ட தீமை என்னவாகுமோ? அவ்விடத்தில் குளிர்ந்த வாசனையுள்ள சோலையின்கண் சிறையிருக்கின்றவளும், நிறைந்த சந்திரனைப் போன்ற முகத்தையுடையவளுமாகிய சீதாதேவியளவில் இராவணனின் கோபம் நின்றுவிடுமா? அல்லது வேறு எவரைக் கெடுத்துத் தானும் ஒழியுமோ? என்று எண்ணித் தமது உள்ளம் கலங்கி மூச்சுக்காற்றும் அடங்கியவர்களாய் (தேவர்கள்) இருக்க வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் காம மயக்கத்தால் தாக்குண்டதினுல் இடையில் உறக்கம் நீங்கிய இராவணன் மிக்க இனம் கொண்டவனுய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாதேவி சிறை இருக்கும் அசோகவனத்தை நோக்கி வரும் பொழுது அஞ்சிய இந்திரன் முதலிய அமரர்களின் நிலை சொல்லப்படுகின்றது.

சீதாதேவி தன் கருத்தை ஒப்புக்கொள்ளாமைபற்றி ஏற்பட்ட காம உணர்ச்சியினால் உறக்கமொழிந்து சினத்துடன் சீதாதேவி யிருக்கின்ற சிறைச்சாலையை நோக்கிச் செல்வதைக் கண்ட தேவர்கள், இராவணன் கொண்ட இக்கோபம் சீதாதேவி சிறையிருக்கும் பூஞ்சோலை அளவில் நின்றுவிடுமோ இன்னும் யார்மீது செல்லுமோ என்றெல்லாம் எண்ணி ஏங்கிய அச்சமிகுதியால் அயர்ந்து மூச்சு ஒடுங்கி விட்டார்கள் எனக் கம்பர் கூறுகின்றார்.

இதனால் இராவணனின் சினத்தைக்கண்டு அச்சத்தினால் மூச்சொடுங்கியிருந்த அமரர்களின் ஆண்மைக்குறைவை அறிகின்றோம். இதனை,

தெண்டிரை உலகந்தன்னில் செறுநர்மாட்
டேவல்செய்து,
பெண்டிரின் வாழ்வர் அன்றே, இதுவன்றே
தேவர் பெற்றி.

எனச் சடாயு இராமபிரானிடம் கூறுவதாலும் அறிக.

நீலநிறக் குன்று

82. நீனிறக் குன்றி னெடிதுறத் தாழ்ந்த
நீத்தவெள் ளருவியி னிமிர்ந்த
பானிறப் பட்டின் மாலையுத் தரியம்
பண்புறப் பசும்பொனு ரத்தின்
மானிற மணிக ளிடையுறப் பிறழ்ந்து
வருகதி ரிளவெயில் பொருவச்
சூனிறக் கொண்மூக் கிழித்திடை துடிக்கு
மின்னென மார்பினூ றுளங்க.

கொண்டுகூட்டு: நீல் நிற மார்பின், நிமிர்ந்த பால்நிறப் பட்டின் மாலை, உத்தரியம் நீல்நிறக் குன்றின், நெடிதுறத் தாழ்ந்த, நீத்த வெள்ளருவியின் பண்புறத் துளங்க(வும்) பசும் பொன் ஆரத்தின், மால் நிற மணிகளிடை, உறப்பிறழ்ந்து வரு கதிர், நீல்நிறக் குன்றினிடையுறப் பிறழ்ந்து வரு கதிர் இளவெயில் பொருவத், துளங்க(வும்) மார்பின் நூல், நீல்நிறக் குன்றினிடை, சூல் நிறக் கொண்மூக் கிழித்து இடை துடிக்கும், மின்னெனத் துளங்க(வும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

நீல்நிற மார்பின் - கருநீல நிறம் பொருந்திய மார்பின் கண், நிமிர்ந்த - சிறந்த, பால்நிறப் பட்டின்மாலை - பால்போன்ற வெண்மை நிறமுடைய பட்டினையே (பட்டாகிய) மாலையாக அணியப்பட்ட, உத்தரியம் - மேலாடை (வெண்பட்டு உத்தரியம்,) நீல்நிறக் குன்றின் - நீலநிறமான மலையிலிருந்து, நெடிதுறத் தாழ்ந்த - நீளமாகப் பொருந்தி இறங்கி வருகின்ற, நீத்த வெள்ளருவியின் - பெருக்காகிய வெண்ணிறமுள்ள அருவியைப் போன்ற, பண்புறத் - தன்மையுடையதாய், துளங்க - விளங்கவும், பசும் பொன் ஆரத்தின் - (தன் கழுத்தில் அணிந்த) பசிய பொன்னால் செய்யப்பட்ட ஆரத்திலே, மால்நிற மணிகளிடை - சிறந்த இயல்பையுடைய இரத்தினங்களில் நின்று, உறப் பிறழ்ந்து - மிக விளக்கத்தைச் செய்து, வருகதிர் - வருகின்ற ஒளியானது, நீல்நிறக் குன்றினிடை - நீலநிறம் பொருந்திய மலையின் கண்ணே, உறப்பிறழ்ந்து வரும் - பொருந்தி ஒளி வீசி வருகின்ற, கதிர் - சூரியனைப்போல, இளவெயில் பொருவத்துளங்கவும் - இளவெயிலைப் போன்று விளங்கவும், மார்பின் நூல் - (இராவணனின்) மார்பிலே அணிந்துள்ள பூணூலானது, நீல் நிறக் குன்றினிடை - நீலநிறமான மலையின் கண்ணே தங்கிய, கூல்நிறக் கொண்மூ - மழைக்கருக்கொண்டு கருமையாய் விளங்குகின்ற மழை முகிலை, கிழித்து - கிழித்துப் பிளந்து கொண்டு, இடை துடிக்கும் - அதன் நடுவிலேநின்று அசைந்து தோன்றுகின்ற, மின்னென - மின்னலைப்போல, துளங்கவும் - விளங்கவும்.

பொழிப்பு

கருநீலநிறம் பொருந்திய மார்பின்கண் சிறந்த பால் போன்ற வெண்நிறமுள்ள பட்டுமாலையாக அணியப்பட்ட வெண்ணிற உத்தரியமானது, நீலநிறமான மலையிலிருந்து நீள மாகப் பொருந்தி இறங்குகின்ற வெள்ளை நிறமுள்ள அருவியைப் போன்று விளங்கவும், பசிய பொன்னால் செய்யப்பட்ட ஆரத் திலே பதித்த சிறந்த இயல்பையுடைய இரத்தினக் கற்களில் நின்று மிக விளக்கத்தைச் செய்துவருகின்ற ஒளியானது நீல நிறம் பொருந்திய மலையின் கண்ணே பொருந்தி ஒளிவீசி வருகின்ற சூரியனின் இளவெயிலைப் போன்று விளங்கவும், மார்பிலே அணிந்துள்ள பூணூலானது நீலநிறமான மலையின் கண்ணே தங்கிய மழைக்கருக் கொண்டு கருமையாய் விளங்குகின்ற மழை முகிலைக் கிழித்துப் பிளந்துகொண்டு அதன் நடுவிலே நின்று அசைந்து தோன்றுகின்ற மின்னலைப்போல விளங்கவும் (வந்தான் என்பதாம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச்செய்யுளில் அரக்கர் வேந்தனாகிய இராவணன் அணிந்துள்ள ஆடைகளின் சிறப்பையும், அணிகலன்களின் சிறப்பையும் மிகப் பெருமிதத்துடன் கூறுகின்ற கம்பனின் கவிதைக்குரலைக் கேட்கின்றோம்.

இக்கவிதையில் இராவணனுடைய கரிய பெரிய மார்புக்கு நீலமலையையும், அம்மார்பில் நீண்டு தாழ்ந்து கிடக்கும் வெண் பட்டு உத்தரியத்திற்குக் கரியபெரிய மலையில் நின்று பெருக்கெடுத்து இறங்கிவரும் வெள்ளிய அருவியையும், இராவணன் அணிந்த ஆரத்தில் பதித்துள்ள மணிகளின் ஒளிவீசிப் பரவுகின்ற மார்புக்குக் கதிரவனின் ஒளி வீசிப்பரவும் நீலமலையையும், இராவணனின் கரியபெரிய மார்பில் கிடந்து அசையும் வெண்ணிறப் பூணூலுக்கு மேகத்தைக் கிழித்து எழுந்து அசைகின்ற மின்னற் கொடியையும் உவமைகளாக எடுத்துக் கூறிய கம்பனின் கற்பனைத் திறன் மிகமிக அற்புதமானதாகும்.

(கரிய பெரிய) நீலமலை - உவமானம். இராவணனின் கரிய பெரிய மார்பு - உவமேயம். நிறமும் அகலமும் வலிமையும் நிலையில் திரியாமையும் - பொதுத்தன்மைகள்.

கரிய பெரிய மலையிலிருந்து பெருகி இறங்கும் வெள்ளை நிறமான அருவி - உவமானம். இராவணனுடைய கரிய பெரிய மார்பில் நீண்டு தாழ்ந்து கிடக்கும் வெண்பட்டுத்தரியம் - உவமேயம். நீளமும் நிறமும் - பொதுத் தன்மைகள்.

கதிரவனின் ஒளி பரவிய நீலமலை - உவமானம். இராவணன் அணிந்த ஆரத்தின்கண்ணே பதிந்துள்ள மணிகளின் ஒளிபரவிய அவனின் மார்பு - உவமேயம். ஒளியும் கருமையில் பதிந்து கிடத்தலும் - பொதுத்தன்மைகளாகும்.

சூல் கொண்ட கருமேகத்தைக் கிழித்து எழும் மின்னல் - உவமானம். கரியபெரிய மார்பின்கண்ணே கிடந்து அசைகின்ற வெண்ணிறப் பூணூல் - உவமேயம். நீளமும், அசைவும், கருநிறத்திற்கிடையே விளங்கலும் - பொதுத் தன்மைகள்.

கேள்தொறும் தொடர்ந்த முறுவல்

83. தோடொறும் தொடர்ந்த மகரிகை வயிரக்
கிம்புரி வலயமாச் சுடர்கள்
நாடொறுந் தொடருங் கலிகெழு வீசும்பி
னுளொடு கோளிலை நக்கத்
தாடொறுந் தொடர்ந்த தழங்குபொற் கழலின்
றகையொளி நெடுநிலந் தடவக்
கேடொறுந் தொடர்ந்த முறுவல்வெண் ணிலவின்
முகமல ரிரவினுங் கிளர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: தோள் தொறும், தொடர்ந்த மகரிகை, வயிரக் கிம்புரி, வலயமாச் சுடர்கள், கலிகெழு விசும்பில், நாள் தொறும், தொடரும், நாளொடு கோளினை நக்க, தாள் தொறும் தொடர்ந்த தழங்குபொற் கழலின், தகை ஒளி, நெடு நிலந் தடவ, கேள் தொறும் தொடர்ந்த முறுவல் வெண்ணிலவின், முகமலர் இரவினும் கிளர.

பொருள்

தோள்தொறும் தொடர்ந்த - ஒவ்வொரு தோள்களிலும் அணியப்பட்டுள்ள, மகரிகை - சுருமீனின் வடிவமாகச் செய்யப் பட்டனவும், வயிரம் - வயிர மணிகள் அழுத்தியதுமாகிய, கிம்புரி வலயம் - தோளணியாகிய வளையங்களினது, மாச்சுடர் கள் - மிக்க ஒளிகள், கலிகெழுவிசும்பில் - ஓசை தோன்றக் காரணமான வானத்தின்கண், நாள்தொறும் தொடரும் - ஒவ் வொரு நாளும் இடையறுது வருகின்றனவாகிய, நாளொடு - நட்சத்திரங்களையும், கோளினை - கிரகங்களையும், நக்க - தனது ஒளியினால் தாழ்த்தவும், தாள் தொறும் - இரண்டு கால்களிலும், தொடர்ந்த - அணிந்த, தழங்குபொற் கழலின் - ஒலிக்கின்ற பொன்னாலாகிய வீரக்கழல்களின், தகை ஒளி - சிறந்த ஒளி யானது, நெடுநிலந் தடவ - நீண்ட நிலவுலகத்தைப் பொருந்திச் (பரவிச்) செல்லவும், கேள்தொறும் தொடர்ந்த - சுற்றத்தார் ஒவ்வொருவரிடத்திலும் சென்ற, முறுவல் வெண்ணிலவின் - சிரிப்பாகிய வெண் நிலவினால், முகமலர் - (இராவணனுடைய) முகமாகிய தாமரை மலர், இரவினும் கிளர - இராப்பொழுதி லும் மலர்ந்து விளங்க (வந்தான்).

பொழிப்பு

ஒவ்வொரு தோள்களிலும் அணியப்பட்டுள்ளனவும், சுருமீன் வடிவமாகச் செய்யப்பட்டனவும், வயிரமணிகள் அழுத்தியது மாகிய தோளணிகள் என்னும் வளையங்களிலிருந்து வீசுகின்ற ஒளியானது, வானத்தின் கண் நாள்தோறும் வருகின்றனவாகிய நட்சத்திரங்களையும், கிரகங்களையும் தனது ஒளியினால் தாழ்த்த வும், இரண்டு கால்களிலும் அணிந்த பொன்னாலாகிய வீரக் கழல்களின் சிறந்த ஒளியானது நிலம் முழுவதும் பொருந்திப் பரவிச் செல்லவும், சுற்றத்தார் ஒவ்வொருவரிடத்திலும் சென்ற சிரிப்பாகிய வெண்நிலவினால், தனது முகமாகிய தாமரை மலர் இராப்பொழுதிலும் மலர்ந்து விளங்க இராவணன் வந்தான் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியிருக்கும் சிறைச்சாலையை நோக்கிச் செல்கின்ற இராவணனின் தோளணிகளின் சிறப்பையும், வீரக்கழல்களின் சிறப்பையும், நகை அரும்பிய முகங்களின் பொலிவையும் கூறுகின்ற கம்பரின் கவிதைக் குரலைக் கேட்கின்றோம்:

இராவணன் நடந்து செல்லும்போது பருத்துயர்ந்த தோள்களில் அவன் அணிந்திருக்கும் வயிரத் தோள் வலயங்கள் வீசுகின்ற ஒளி வானவெளியிலுள்ள நட்சத்திரங்களின் ஒளியையும், கிரகங்களின் ஒளியையும் மழுங்கச்செய்து விட்டது என்றும், இராவணன் கால்களில் அணிந்துள்ள வீரக்கழலின்ஒளி அவன் நடந்து செல்லும் நிலம் முழுவதையும் ஒளிமயமாக்கி விட்டது என்றும் கம்பர் கூறுகின்றார்:

இங்ஙனம் வான வெளியிலும் நிலவுலகிலும் முறையே தான் அணிந்துள்ள தோளணிகளின் ஒளியும், காலணிகளின் ஒளியும் பரவி விளங்கும் வண்ணம் சென்ற இராவணன், பக்கத்திலே வரும் தன் மதிப்பிற்குரிய சுற்றத்தவரைக் காணும்போதெல்லாம் புன்முறுவல் புரிகின்றான். அங்ஙனம் புன்முறுவல் புரியும் பொழுது, அவனுடைய முகங்கள் இராக்காலத்தில் மலர்ந்த தாமரை மலர்கள்போல் விளங்குகின்றன எனக் கம்பர் பாரட்டுகின்றார்:

இராவணனுடைய வயிரவாகு வலயங்களில் நின்று எழுந்த ஒளியானது இருளைப் போக்குவதால் வானத்தில் இடையறாது செல்லும் நட்சத்திரம், கிரகம் ஆகியவற்றின் ஒளியை தாழச் செய்தது என்பதாம்:

இராவணன் உறவினரை நோக்கி முறுவல் செய்யும் பொழுது அவனுடைய முகங்கள் இரவில் மலர்ந்த தாமரை மலர்போல் விளங்கியன என்று கம்பர் கற்பனை செய்து கூறுகின்றார்.

கேள்தொறும் தொடர்ந்த முறுவல் வெண் நிலவின்
முகமலர் இரவிலும் கிளர

எனவரும் கவிதைத் தொடரை நோக்குக. இதில் முகமலர் என்பது உருவகம். முகமாகிய மலர் என விரியும்.

முகமலர் இரவிலும் கிளர என்பதில் முகமாகிய தாமரை இராக்காலத்திலும் மலர்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவில் மலரும் தாமரை உலகில் இல்லாதது ஒன்றுதலால் இரவிலும் மலரும் முகமலர் என்பதை இல்பொருள் உவமையோடு கலந்து வந்த உருவக அணியாகக் கொள்க.

கற்பக முழுவனம்

84. தன்னிறத் தோடு மாறுகொண் டிமைக்கும்
நீவியந் தழைபட வுடுத்த
பொன்னிறத் தூசு கருவரை மருங்கிற்
றழுவிய புதுவெயில் பொருவ
மின்னிறக் கதிரிற் செற்றிய பசும்பொன்
விரற்றலை யவிரொளிக் காசின்
கன்னிறக் கற்றை நெடுநிழல் பூத்த
கற்பக முழுவனங் கவின.

கொண்டுகூட்டு: தன் நிறத்தோடு மாறு கொண்டு இமைக்கும் நீவி அம் தழைபட உடுத்த பொன்னிறத் தூசு கருவரை மருங்கில் தழுவிய புது வெயில் பொருவ, தன் விரல்தலை பசும் பொன் மின்னிறக் கதிரில் செற்றிய அவிர் ஒளிக் காசின் கல் நிறக் கற்றை (ஒளித்தொகுதி) நெடு நிழல் பூத்த கற்பக முழுவனம் கவின (வந்தான்).

பொருள்

தன் நிறத்தோடு - (இராவணன்) தன் உடம்பின் கரிய நிறத்தோடு, மாறுகொண்டு இமைக்கும் - மாறுபட்டு விளங்குகின்ற (விளங்கும்வண்ணம்) நீவி - மடித்துத் (விரல்களால் அழுத்தி) தடவி, அம் தழைபட உடுத்த - அழகு மிகத் தங்கும் படியாக உடுத்துள்ள (அணிந்துள்ள), பொன்னிறத் தூசு - பொன்னின் நிறத்தையுடைய ஆடை (பீதாம்பரம்) கருவரை மருங்கில் - கரிய மலையின் பக்கத்தில் (தாழ்வரையில்) தழுவிய - இசைந்த (பொருந்திய) புது வெயில் பொருவ - இளவெயிலை ஒப்ப (இராவணன் தன் கரிய பெரிய இடுப்பில் உடுத்துள்ள பீதாம்பரம் நீலமலையின் அடிவாரத்திலே பரவி வீசும் இளவெயிலை ஒத்து விளங்கியது என்பதாம்) தன் விரல் தலை - தனது விரல்களில் (அணியப்பட்ட) பசும் பொன் - பசிய பொன்னாலாகிய அணியில் (மோதிரத்தில்) மின்னிறக்கதிரில் - மின்னலின் ஒளியையுடைய கிரணங்கள், செற்றிய - உள்ளனவாகப் பதிக்கப்பட்ட, அவிர் ஒளி - மிக்க ஒளியையுடைய, காசின் கல்நிறக் கற்றை - விளக்கமுடைய இரத்தினக் கற்களின் ஒளித்தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது, நெடு நிழல் பூத்த - பேரொளியோடு மலர்ந்துள்ள, கற்பக முழுவனம் (முழுக்கற்பகவனம்) - நிரம்பிய கற்பகச் சோலை போல, கவின - விளங்க (வந்தான்)

பொழிப்பு

தன் உடம்பின் கரிய நிறத்தோடு மாறுபட்டு விளங்கும் வண்ணம் மடித்து விரல்களால் அழுத்தித் தடவி அழகு தங்கும் படியாக உடுத்துள்ள பொன்னிறத்தையுடைய பீதாம்பர ஆடையானது, கரிய மலையின் பக்கத்தில் பொருந்திய புது வெயிலை ஒத்து விளங்கவும், தனது விரல்களில் அணியப்பட்ட பசிய பொன்னாலாகிய அணியில் (மோதிரத்தில்) மின்னலின் ஒளியையுடைய கிரணங்கள் உளவாக மிக ஒளியை வீசும் விளக்கமுடையவிரத்தினக் கற்களின் ஒளித்தொகுதியானது, பேரொளியோடு மலர்ந்து நிரம்பிய கற்பகச் சோலைபோல விளங்க வந்தான் என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் இராவணன் தனது இடையில் அணிந்துள்ள பட்டாடையின் சிறப்பையும், விரல்களில் அணிந்துள்ள மோதிரங்களின் சிறப்பையும் கூறுகின்ற கம்பரின் பெருமிதக் குரலைக் கேட்கின்றோம்;

இராவணன் கரிய பெரிய தன் இடையில் உடுத்துள்ள பீதாம்பரம் என்னும் பட்டாடையானது, நீலமலையின் தாழ் வரையிலே பரவிய இளவெயிலை (காலைக் கதிரொளியை) ஒத்திருக்கின்றது எனவும், இராவணன் தனது கைவிரல்களில் அணிந்துள்ள மோதிரங்களில் பதித்திருக்கும் இரத்தினக் கற்களின் ஒளித்தொகுதி மிக்க ஒளியோடு பூத்துப் பொலியும் முழுக் கற்பகவனம்போலக் காட்சியளிக்கின்றது எனவும் கம்பர் கூறுகின்றார்:

> தன்நிறத்தோடு மாறுகொண்டு இமைக்கும்
> பொன்னிறத் தூசு கருவரை மருங்கிற் தழுவிய
> புது வெயில் பொருவ

என இராவணன் தனது இடையில் அணிந்துள்ள ஆடையைக் கம்பர் உவமானம் காட்டி விளக்குகின்றார்.

இதில், கரியவரை (மலை) - உவமானம்; இராவணனின் கரிய பெரிய உடம்பு - உவமேயம்; கருமையும் பருமையும் - பொதுத்தன்மைகள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிய மலையில் வீசும் புது வெயில் - உவமானம்: இராவணனின் கரிய பெரிய இடையில் உடுத்துள்ள பொன்னிறத் தூசு (பீதாம்பரம்)- உவமேயம். அழகும் நிறமும் கரிய நிறத்தோடு பொருந்திக் கிடத்தலும் - பொதுத்தன்மைகள்:

மின்னிறக் கதிரிற் செற்றிய பசும்பொன்
விரல்தலை அவிர் ஒளிக்காசின்
கல்நிறக்கற்றை நெடுநிழல் பூத்த
கற்பக முழுவனம் கவின.

என இராவணனின் விரல்களிலே அணிந்துள்ள மோதிரங்களின் ஒளி வீசிப்பரவுதலை விளக்கிக் கம்பர் கூறுகின்றார். இதில் நெடு நிழல் பூத்த முழுக் கற்பகவனம் – உவமானம்: இராவணனின் விரல்களின்கண்ணே கிடந்து ஒளி வீசுகின்ற இரத்தினக்கற்களின் ஒளிக்கூட்டம் – உவமேயம். ஒளி மிகுதி - பொதுத்தன்மை:

அழகாக அணிந்துள்ள பொன்னாலாகிய அணிகலன்களும், பொன்னுடை முதலியனவும் பரப்புகின்ற ஒளியோடு கலந்துள்ள இராவணனின் மேனி பொன்மயமாக விளங்கும் ஒரு கற்பகச் சோலையாகவும், அவனுடைய தோள்கள் கற்பகத்தின் பெரும் கிளைகளாகவும், அவன் கைவிரல்கள் அப்பெரும் கிளைகளில் நின்றும் தோன்றிய சிறு கிளைகளாகவும், அக்கைவிரல்களில் அணிந்த அணிகலன்களாகிய மோதிரங்களிற் பதித்த இரத்தினக் கற்களின் ஒளித் தொகுதி அக்கிளைகளிற் பூத்த பூக்களாகவும் கொள்ளக்கிடத்தல் காண்க:

பத்துச் செங்கதிர்கள்

85. சன்னவீ ரத்த கோவைவெண் டரள
மூழியி னிறுதியிற் றனித்த
பொன்னெடு வரையிற் றொற்றிய கோளு
நாளுமொத் திடையிடை பொலிய
மின்னெளிர் மௌலி யுதயமால் வரையின்
மீப்படர் வெங்கதிர்ச் செல்வர்
பன்னிரு வரினு மிருவருந் தவிர
வுதித்ததோர் படியொளி பரப்ப.

கொண்டுகூட்டு: ஊழியின் இறுதியில், தனித்த பொன்னெடு வரையில் (மகாமேருமலையில்) தொத்திய கோளும், நாளும் ஒத்து, (இராவணன் மார்பில் அணிந்துள்ள) சன்ன வீரத்த கோவை, (கோவை) வெண்தரளம், இடை இடை பொலிய(வும்) உதயமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையின் மீப்படர், வெங்கதிர்ச் செல்வர், பன்னிருவரினும் இருவரும் தவிர, (பத்துச் செங்கதிர்கள்) உதித்தது ஓர்படி, (இராவணன் தன் பத்துத் தலைகளிலும் தனித்தனி அணிந்துள்ள) மின் ஒளிர் மௌலி (கள்) ஒளி பரப்ப(வும்) (வந்தான்).

பொருள்

ஊழியின் இறுதியில் - ஊழிகால முடிவில் (யுகாந்த காலத்தில்), தனித்த - (மற்றைய பொருள்களெல்லாம் அழிந்து போகத்) தான் மட்டும் அழியாது நிலைபெற்ற, பொன்நெடும் வரையில் - நீண்ட பொன்மலையாகிய மகாமேருவின்கண், தொத்திய - ஒட்டிக்கொண்டிருந்த, கோளும் - கிரகங்களும், நாளும் - நட்சத்திரங்களும் (நாண் மீன்களும்), ஒத்து - போன்று, சன்ன வீரத்த கோவை - (இராவணன் தன் மார்பில் அணிந்துள்ள) சன்னவீரம் என்னும் வெற்றிமாலையில் பதிக்கப்பட்ட மணிகளும், கோவை வெண்தரளம் - ஆரங்களிலுள்ள வெண்மையான முத்துக்களும், இடைஇடை - நடுவே நடுவே, பொலிய(வும்) - விளங்கவும், உதயமால்வரையின் - (மால் உதயவரையில் - பெரிய உதயமலை (உதயகிரி)யின், மீப்படர் - மேலே பரவித்தோன்றுகின்ற, வெங்கதிர்ச் செல்வர் - வெம்மையான கிரணங்களைச் செல்வமாகக் கொண்ட (வெவ்விய கிரணங்களாகிய செல்வத்தையுடைய, எனவும் பொருள் கூறலாம்) பன்னிருவரினும் - சூரியர்கள் (ஆதித்தர்) பன்னிருவருள்ளும், இருவரும் தவிர - இருவர் நீங்க (மற்றைப் பத்துச் சூரியர்களும்) உதித்தது - ஒருசேரத் தோன்றி விளங்குவதாகிய, ஓர்படி - ஒரு தன்மைப் போல, (இராவணன் தனது பத்துத் தலைகளிலும் தனித்தனி அணிந்துள்ள) மின் ஒளிர் - மின்னலைப் போல் ஒளியையுடைய, மௌலி(கள்)-பத்துக்கிரீடங்கள் (திருமுடிகள்), ஒளிபரப்ப(வும்)-ஒளியை வீசவும், (வந்தான்).

பொழிப்பு

ஊழிகால முடிவில், மற்றைய பொருள்கள் எல்லாம் அழிந்தொழியத், தான் மாத்திரம் அழியாமல் நிற்கின்ற மகாமேருமலையின் கண் ஒட்டிக்கொண்டிருந்த கிரகங்களும், நட்சத்திரங்களும் போன்று (இராவணன் தன் மார்பில் அணிந்துள்ள) சன்னவீரம் என்னும் வெற்றிமாலையில் உள்ள மணிகளும், ஆரங்களில் உள்ள வெண்மையான முத்துக்களும் இடையிடையே விளங்கவும், பெரிய உதயகிரியின் மேலே பரவித் தோன்றுகின்ற சூரியர்கள் பன்னிருவருள்ளும், இருவர் நீங்க மற்றைய பத்துச் சூரியர்களும் ஒன்றுக உதித்து விளங்குகின்ற தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் பேர்ல (இராவணன் தன் பத்துத் தலைகளிலும் தனித் தனியாக அணிந்துள்ள (பத்துத் திரு முடிகளும்) ஒளியை வீசவும் (வந்தான்.)

விளக்கம்

இச் செய்யுளில் இராவணனின் மார்பின்கண் விளங்கும் ஆரங்களின் மாண்பையும், அவன் சூடியுள்ள பத்து முடிகளின் மாண்பையும் பாராட்டிக் கூறுகின்ற கம்பரின் புலமைத்திறனைக் காண்கின்றோம்.

அணிகலன்களின் பொன்னொளி வீசிப் பரவநின்ற இராவணனின் மார்புக்குப் பொன்மலையையும், அம்மார்பில் அணிந்த சன்னவீரம் என்னும் வெற்றிமாலையின்கண் உள்ள மணிகளுக்கு, ஊழியிறுதியில் பொன்மலையின்கண் தொத்திநின்ற கோள்களையும் முத்துமாலையின்கண் உள்ள முத்துக்களுக்கு, ஊழியிறுதியில், பொன்மலையின்கண் தொத்திநின்ற நட்சத்திரங்களையும், கம்பர் உவமையாகக் காட்டியுள்ளார்.

சன்ன வீரத்த கோவை வெண்தரளம்
ஊழியின் இறுதியில், தனித்த
பொன்னெடு வரையில் தொத்திய கோளும்
நாளும் ஒத்து இடையிடை பொலிய.

எனக் கம்பர் உவமான உவமேயங்களைப் பொருத்திக் காட்டுந் திறன் போற்றத்தக்கதாகும்.

இதில், பொன்னெடும்வரை - உவமானம். அணிகலன்களின் பொன்னொளி பரவும் இராவணனின் மார்பு - உவமேயம். அகலமும், நிறமும் பொதுத்தன்மைகளாகும். பொன்னெடுவரையில் தொத்திய கோள்களும் (கிரகங்கள்) நாள்களும் (நட்சத்திரங்கள்) உவமானம். இராவணனின் மார்பின்கண் விளங்கும், சன்ன வீரத்த கோவை, வெண்தரளம் (முத்துமாலை) உவமேயம். ஒளியும் பன்மையும் பொதுத்தன்மைகளாகும்.

இனி, இராவணனின் தலைகளுக்குத் தனித்தனியாக விளங்கும் உதயகிரியையும், அத்தலைகளில் அணிந்துள்ள பத்து முடிகளுக்கு, உதயகிரியில் தோன்றும் சூரியர் பதின்மரையும் (பத்துப்பேர்களையும்) கம்பர் உவமையாகக் காட்டியுள்ளார்.

மின்ஒளிர் மௌலி உதயமால் வரையின்
மீப்படர் வெங்கதிர்ச் செல்வர்
பன்னிரு வரினும் இருவரும் தவிர
உதித்தது ஓர்படி ஒளி பரப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கம்பர் உவமான உவமேயங்களைப் பொருத்திக் காட்டியுள்ளார்.

இதில், உதயகிரி – (கள் பத்து) உவமானம்; இராவணனின் பத்துத்தலைகள் - உவமேயம், உயரமும், வன்மையும் - பொதுத் தன்மைகளாகும்.

உதயகிரிகளில் தோன்றிய பத்துச் சூரியர்கள் - உவமானம்; இராவணனின் தலைகளின்கண் விளங்கும் பத்துக் கிரீடங்கள் (திரு முடிகள்) உவமேயம்; உயரத்திற் தோன்றுதலும், அழகும் பன்மையும் பொதுத்தன்மைகளாகும்.

உலகில் ஒரேயொரு உதயகிரியே இருக்கவும் கம்பர் இராவணனின் பத்துத்தலைகளையும் தனித்தனி ஒவ்வோர் உதயகிரியாகக் கற்பனை செய்து உவமானம் காட்டியுள்ளார் என்பதையும், இராவணனின் பத்துத்தலைகளிலும் உள்ள பத்துத் திருமுடிகளுக்கும், உவமானங் காட்டுதற்காகப் பன்னிரண்டு சூரியர்களில் இருவரை நீக்கிப் பத்துச் சூரியர்களை எடுத்துக் கொண்டார் என்பதையும் அறிகின்றோம்.

பன்னிரண்டு மாதங்களுக்கும் பன்னிரு சூரியர் உளரென்பது சோதிடநூற் கொள்கை.

அயில் எயிற்று அரி

86. பயிலெயிற் றிரட்டைப் பணைமருப் பொடியப்
படியினிற் பரிபவஞ் சுமந்த
மயிலடித் தொழுக்கி னனையமா மதத்த
மாதிரக் காவன்மால் யானை
கயிலெயிற் றிரண்ட முரண்டொடர் தடந்தோட்
கனகன துயர்வரங் கடந்த
அயிலெயிற் றரியின் சுவடுதன் கரத்தா
லளைந்தமாக் கரியினின் றஞ்ச.

கொண்டுகூட்டு: மயில் அடித்து, ஒழுக்கின் அனையமா மதத்த, மாதிரக் காவல் மால் யானை, (யானைகள்) பயில் எயிற்று, இரட்டைப் பணை மருப்பு ஒடிய (இராவணனால் முன் ஒடிக்கப்பட்டு) படியினில் பரிபவம் (அவமானம்) சுமந்த, கயிலையில் திரண்ட (தோள்) முரண்தொடர் (தோள்) தடந்தோள் கனகனது, உயர்வரம், கடந்த, அயில் எயிற்று, அரியின், சுவடு (சுவட்டை) தன்கரத்தால், அளைந்த மாகரியின் நின்று, அஞ்ச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

மயில் அடித்து - மயிலின் காலில் உள்ள விரல்கள், ஒழுக்கின்- (மூன்றுகப் பிரிந்துசெல்லும்) செலவைப்போல, அனையமாமதத்த- மூன்றுகப் பிரிந்து பாயும் பெரிய மதப்பெருக்கினை உடையனவும், மாதிரக்காவல் - திசைகாவலை மேற்கொண்டனவுமாகிய, மால் யானை - பெரிய யானைகள் (திசைக்களிறுகள்), பயில் எயிற்று - பொருந்திய பற்களாகிய, இரட்டைப்பணை - இரட்டையாக அமைந்த பெரிய, மருப்பு-தந்தங்கள், (முன்னர் இராவணனுடன் போர் செய்தபோது) ஒடிய - ஒடிதலால், படியினில் - நிலவுல கத்தில், பரிபவம் - அவமானத்தை, சுமந்த - தாங்கியவைகளாய், (இப்பொழுது இராவணன் வருகையைக் கண்டு) கயிலையில் - கைலாச மலையைப் போலத், திரண்ட - திரட்சி கொண்டதும், முரண்தொடர் - வலிமை பொருந்தியதுமான, தடந்தோள் - அகன்ற (பெரிய) தோள்களையுடைய, கனகனது - இரணியனு டைய, உயர்வரம் - சிறந்த வரபலன்களை யெல்லாம், கடந்த - வென்ற (பயனில்லாதனவாய்ச் செய்த), அயில் எயிற்று - கூர்மைகொண்ட பற்களை உடைய, அரியின் - நரசிங்கத்தினது, (நரசிங்கப் பெருமானின்) சுவடு - அடிச்சுவட்டை (கால் அடை யாளம் பதிந்த இடத்தை), தன் கரத்தால் - தன் தும்பிக்கை யினால், அளந்த - தடவிய, மாகரியின் - பெரிய யானையைப் போல, நின்று அஞ்ச - நின்று (திக்குயானைகள்) அச்சங்கொள்ள, (வந்தான்)

பொழிப்பு

மயிலின் கால் விரல்கள் மூன்றுகப் பிரிந்து செல்லும் செல வைப் போல, மூன்றுகப் பிரிந்து பாயும் மதப்பெருக்கை உடைய திசை யானைகள், இரட்டையாகப் பொருந்திய பெரிய தமது கொம்புகள் இராவணனுடன் போர்செய்து ஒடிந்துபோதலால் உலகில் மிகுந்த அவமானத்தைத் தாங்கியவைகளாய், மீண்டும் இராவணன் வருகையைக் கண்டு, கயிலைமலையைப் போலத் திரண்ட வலிமையான பெருந்தோள்களை உடைய இரணியனது, வரபலன்களை யெல்லாம் அழித்து வென்ற நரசிங்கத்தின் காற் சுவட்டைத் தன் தும்பிக்கையால் தடவிய பெரிய யானையைப் போல அச்சங்கொள்ள (இராவணன் வந்தான்) என்பதாம்.

கயிலையில் திரண்ட தோள், முரண்தொடர் தோள், தடந்தோள், எனக் கூட்டுக. கனகன் - இரணியன், நரசிங்கம், இரணியனைக் கொல்லுதற்காகத் திருமால் எடுத்த அவதாரமாகும். இரட்டைப் பணை மருப்பு என்றது திக்குயானைகளுக்கு ஒவ்வொரு பக்கத்திலும் இரட்டையாக அமைந்துள்ள நான்கு தந்தங்கள் உள்ளன என் பதை விளக்குதற்கேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச்செய்யுளில், இராவணன் வருகையைக் கண்டு திக்கு யானைகள் அஞ்சிய செயல் சொல்லப்படுகின்றது.

இராவணன் திக்குவிசயம் செய்த காலத்தில் திக்குயானைகளை எதிர்த்துப் போர் புரிந்தான். திக்குயானைகள் சினங்கொண்டு இராவணனின் மார்பைப் பிளக்க எண்ணித் தந்தங்களால் இடித்தன. இடித்த யானைகளின் தந்தங்கள், இராவணனின் வலிய மார்பை ஊடுருவிச் செல்ல வலியற்றனவாய், ஒடிந்துவிட்டன. அங்ஙனம் தங்கள் தந்தங்களை இழந்த திக்கு யானைகள் உலகினரால் இகழப்பட்டு வருந்தின. இப்பொழுது அத்திக்குயானைகள் இராவணனின் வருகையைக் கண்டவுடன் மிகவும் அச்சங்கொள்கின்றன என்பதே கம்பரின் கருத்தாகும்.

இராவணனால் மருப்பு ஒடிக்கப்பட்ட வசையினைத் திக்கு யானைகள் என்றும் தாங்கிக்கொண்டு திரிகின்றன என்பதை உணர்த்த

பணமருப்பு ஒடிய படியினில் பரிபவம் சுமந்த
மாதிரக் காவல் மால்யானை

எனக் கம்பர் கூறினர்.

''திகிகின்மா எலாம் தொலைத்து''

எனவும்,

''நிறைந்த மதத் திசையானை மருப்பு ஒடியப்
பொருப்பு இடியத் தோள் நிமிர்ந்த வலியோனே''

எனவும்,

''திசையானை விசைகலங்கச் செருச்செய்து
மருப்பொடித்த
இசையாலே நிறைந்தபுயத்து இராவணனோ
இராவணனோ''

எனவும் வரும் கவிதைத் தொடர்களில் இராவணன் திக்குயானைகளை வென்ற வெற்றிச்செயல் பாராட்டப்பட்டிருத்தல் காண்க.

திக்குயானைகள் இராவணன் வருகையைக் கண்டு அஞ்சியது என்னும் செய்தியைக் கூறிய கம்பர் அதற்கு உவமானமாக நரசிங்கத்தின் அடிச்சுவட்டைத் தன் துதிக்கையால் தடவியதற்காக நெஞ்சம் அஞ்சிய மால்யானையைக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலையில் திரண்ட முரண்தொடர் தடந்தோள்
கனகனது உயர்வரம் கடந்த
அயில் எயிற்று அரியின் சுவடு தன்கரத்தால்
அளைந்த மாக்கரியின் நின்று அஞ்ச

எனக் கம்பர் உவமான உவமேயங்களைப் பொருத்திக் காட்டுந் திறனை நோக்குக.

இதில் கனகனது உயர் வரங் கடந்த அயில் எயிற்று அரி (நரசிங்கம்) யின் கால் அடியைத் தன் துதிக்கையால் தடவியதற்கு அஞ்சும் மால் யானை - உவமானம்.

இராவணனின் வருகைகண்டு அஞ்சுகின்ற திக்குயானைகள் - உவமேயம்: அச்ச மிகுதியும் நீங்காத மனத்துயரும் - பொதுத் தன்மைகளாகும்.

இராவணனின் திக்குவிசய காலத்தில் அவனை எதிர்த்துத் தமது மருப்பொடிந்த திக்குயானைகள் மீண்டும் இராவணன் வருகையைக் கண்டவுடன் அவன் தம்மைத் தாக்க வருகின்றானே என எண்ணி மிகமிக அச்சங்கொண்டுவிட்டன என்பதை உணர்த்த எண்ணிய கம்பர், நரசிங்கத்தின் அடிச்சுவட்டைத் தனது தும்பிக் கையாற் தடவியதற்காக அஞ்சி ஆவி துடிக்கின்ற ஓர் பெரிய யானையைத் தமது புலமை ஆற்றலால் படைத்து உவமானம் காட்டியுள்ளார் என்பதை அறிகின்றோம். நரசிங்கத்தின் அடிச் சுவட்டைத் தனது துதிக்கையால் தடவி அஞ்சும் யானை உலகத் தில் இல்லாதது ஒன்றுதலால் அதனை இல் பொருள் உவமை என்றும் கூறலாம்.

கனகன் (இரணியன்) இவன் பொன்னிறம் பொருந்தியவனாய் இருந்ததினால் கனகன் என்னும் பெயரைப் பெற்றான்; கயிலைமலைபோலத் திரண்ட வலிய பெரிய தோள்களை உடையவன்; வானவர், மக்கள் என்பவராலும்; விலங்கு, பறவை, படைக்கலங்கள் என்பவற்றாலும், தனக்கழிவில் லாத அரிய வரத்தைப் பெற்றவன். அத்துடன் பகல், இரவு, வானம், மண்ணுலகம், வீட்டின் உட்புறம், வெளிப்புறம் என்னும் இடங்களிலும் வைத்துக் கொல்ல முடியாத வரத் தையும் பெற்றவன். இவன், மக்கள் உடலும், சிங்க முக முங் கொண்ட நரசிங்கமாக உருத்தாங்கிய திருமாலால், விண்ணுக்கும், மண்ணுக்கும், நடுவே வைத்து நகத்தினாற் கிழித்துக் கொல்லப்பட்டான் என்பதே வரலாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மால்வரை தழுவிய மயிலின் கூட்டம்

87. அங்கயற் சுருங்க ணியக்கியர் துயக்கி
லரம்பையர் விஞ்சையர்க் கமைந்த
நங்கையர் நாக மடந்தையர் சித்த
நாரியர் அரக்கியர் முதலாங்
குங்குமக் கொம்மைக் குவிமுலைக் கனிவாய்க்
கோகிலந் துயர்ந்தமென் குதலை
மங்கைய ரீட்ட மால்வரை தழீ இய
மஞ்ஞையங் குழுவென வயங்க

கொண்டுகூட்டு: அம் கயல் கருங்கண் இயக்கியர், துயக்கு இல் அரம்பையர், விஞ்சையற்கு அமைந்த நங்கையர், நாகமடந் தையர், (நாககன்னிகள்) சித்தநாரியர், அரக்கியர் முதலாம், முதலிய) குங்குமக் கொம்மை குவிமுலை, கனிவாய், கோகிலம் துயர்ந்த (வருந்திய) மென்குதலை(யையுமுடைய) மங்கையர் கூட்டம் மால்வரை தழீஇய (தழுவிய) மஞ்ஞை அம் குழுவென வயங்க.

பொருள்

அம் கயல்-அழகிய சேல் மீன்போன்ற, கருங்கண் - கருமை யான கண்களையுடைய, இயக்கியர் - இயக்கர்குலப் பெண்களும் (யக்ஷஸ்திரீகளும்), துயக்கு இல் - குற்றமில்லாத, அரம்பையர்- அரம்பை முதலிய தேவமாதர்களும், விஞ்சையற்கு - வித்தியா தரற்கு, அமைந்த - பொருந்திய (உரிமையாகிய), நங்கையர்- இளமை நலம் கனிந்த வித்தியாதரப் பெண்களும், நாகமடந் தையர் - நாகர் என்னும் இனத்திலுள்ள இளம் பெண்களும் (நாகாஸ்திரீகளும்), சித்தநாரியர் - சித்தர்குலப் பெண்களும் (சித்தஸ்திரீகளும்), அரக்கியர் - அரக்கர்குலப் பெண்களும் (இராக்ஷசஸ்திரீகளும்), முதலாம் - முதலாகவுள்ள, குங்குமம் - குங்குமம் அணிந்த, கொம்மை - பருத்த, குவிமுலை - குவிந்த (திரண்ட) கொங்கைகளையும், கனிவாய் - கொவ்வைக் கனி போலச் சிவந்த வாயையும், கோகிலம் - குயில்களும், துயர்ந்த- வருந்துதற்குக் காரணமான, மென்குதலை - இனிமை மிக்கக் குதலை மொழிகளையும் உடைய, மங்கையர் - இளம் பெண்களின், ஈட்டம் - கூட்டமானது, மால்வரை - பெரிய மலை ஒன்றினை, தழீஇய - சூழ்ந்துள்ள (மஞ்ஞை அம் குழுவினை), அம் மஞ்ஞைக் குழுவென - அழகிய மயில்களின் கூட்டம்போல, வயங்க - விளங்கவும் (வந்தான்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

அழகிய சேல்மீன்போற் கண்களை உடைய இயக்கர்குலப் பெண்களும், குற்றம் இல்லாத தேவமாதர்களும், இளமை நலம் கனிந்த வித்தியாதரப் பெண்களும், நாகநாட்டு மங்கை யரும், சித்தர்குலப் பெண்களும், அரக்கியர்களும் பெரியதோர் மலையைச் சூழ்ந்து வரும் அழகிய மயிற்கூட்டங்களைப் போல தன்னைச் சூழ்ந்துவர இராவணன் வந்தான் என்பதாம்;

விளக்கம்

இச்செய்யுளில் இராவணனின் அடிமை மகளிராக உள்ள இயக்கியர் முதலான பல சாதியினராய் விளங்கும் இளம் பெண் கள் அவனைச் சூழ்ந்துவரும் காட்சி சொல்லப்படுகின்றது.

அழகும் இளமையும் நிரம்பிய தேவமாதர்களும், வித்தி யாதர மாதர்களும், நாககன்னியர்களும், இயக்க மாதர்களும் தனக்கு ஏவல் செய்தவண்ணம் சூழ்ந்து வரவும், அவர்களை ஓர் பொருட்படுத்தாமல் சீதாதேவியின்மேற் கொண்ட ஆசை மிகுதியால் அள்ளுப்பட்டவனாய், இராவணன் செல்லுகின்றான் என்பதைக் கம்பர் குறிப்பாகக் கூறுகின்றார்;

கலையுள்ளம் படைத்த இராவணன், அழகு உணர்ச்சி மிக்க வன் ஆதலால் தன்னைச் சூழ்ந்து ஏவல் செய்தவண்ணமாக வரு கின்ற மங்கையர்கள் ஒருவரினும் இல்லாத ஓர் உயர்ந்த அற் புதமான அழகு சீதாதேவியிடம் அமைந்துள்ளது என்பதை உணர்ந்து விட்டான் என்பதையும் கம்பர் இச்செய்யுளில் குறிப்புப் பொருளாக அமைத்துள்ளார்;

இங்ஙனம் மங்கையர்கள் இராவணனைச் சூழ்ந்து செல்லுங் காட்சியைக் கூறிய கம்பர்

"மால்வரை தழீஇய மஞ்ஞையின் குழு" என,
மங்கையர் ஈட்டம் வயங்க

என உவமானம் காட்டியிருக்கின்றார்;

இதில் மால்வரை - உவமானம். இராவணன் - உவமேயம்; உருவப் பொலிவும் நிலை கலங்காமையும் - பொதுத்தன்மைக ளாகும்;

மால்வரை தழுவிய மயிற்கூட்டம் - உவமானம்; இராவணனைச் சூழ்ந்துள்ள மங்கையர் கூட்டம் - உவமேயம்; அழகும் பன்மையும் ஒன்றினைச் சூழ்ந்து நிற்றலும் - பொதுத்தன்மைகளாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைமுகில் படிந்துள்ள மால்வரையைக் கண்டு மயிற்கூட்டம் சூழ்ந்து நிற்றல்போல, இராவணனிடத்தில் அமைந்துள்ள ஆண்மை, வரவலிமை முதலியவற்றால் கவரப்பட்ட மங்கையர்கள் அவனைச் சூழ்ந்து சென்றார்கள் என்பதாம்.

அரவின்வாய் அமுது சொரிதல்

88. தொளையுறு புழைவேய் தூங்கிசைக் கானந்
துயலுரு தொருநிலை தொடர
இளையவர் மிடறு மின்னிலை யியக்கக்
கின்னர முறைநிறுத் தெடுத்த
கிளையுறு பாடல் சில்லரிப் பாண்டில்
தழுவிய முழவொடுங் கெழுமி
அளையுறை யரவு மமுதுவா யுகுப்ப
வண்டமும் வையமு மளப்ப

கொண்டுகூட்டு: புழை வேய்த் தொளையுறு தூங்கிசை (இசையானது) கானம் துயல் உறுது ஒருநிலை தொடர, இளையவர் (இளம் பெண்கள்) மிடறும் இன்னிலை இயக்க, கின்னரம் (யாழ்) முறை நிறுத்து எடுத்த கிளை உறுபாடல், சில்லரிப் பாண்டில் தழுவிய முழவொடும் கெழுமி, அளையுறை அரவும் அமுதுவாய் உகுப்ப, அண்டமும் வையமும் அளப்ப (வந்தெய்தினன்).

பொருள்

புழைவேய் - உள்ளீடற்ற (குழலாய் இருக்கின்ற) மூங்கிலின் கண், தொளையுறு - இடப்பட்ட (துளைக்கப்பட்ட) தொளையில் நின்று, தூங்கு இசை - மெத்தென (மென்மையாக) எழும் இசையானது, கானம்துயல் உறுது - இசைப்பாட்டுக்குரிய தன்மையில் மாறுமல் (பிறளாமல்), ஒருநிலை தொடர - ஒரே வகையாய்த் தொடர்ந்து எழ, இளையவர் மிடறும் - இளம் மகளிருடைய (இனிய) குரலும், (மிடற்றொலியும்) இன்னிலை இயக்க - இனிய நிலையில் நின்று (குழலிசைக்குப் பொருந்த) ஒலி எழுப்ப, கின்னரம் - யாழின்கண், முறைநிறுத்து - (யாழுக்கு அமைய வேண்டிய) இலக்கணங்களை ஆராய்ந்து (முறை - இலக்கணம், நிறுத்து - ஆராய்ந்து) எடுத்த - எழுப்பிய, கிளையுறு பாடல் - ஏழுவகை நரம்பினின்றும் எழுவகை ஒலியோடு கூடிய பாட்டு (கிளை - யாழ்நரம்பு), சில்லரிப்பாண்டில் - சில்லரிப்பாண்டில் என்னும் தாளக்கருவியோடு, தழுவிய - கூடிய, முழவொடும் கெழுமி - முழலினோடு இசைந்து (முழவு - மத்தளம்). அளையுறை - (நஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடைமையால் வெளியில் வர அஞ்சி) புற்றில் வாழ்கின்ற, அரவும் - (நஞ்சையுடைய) பாம்பும், அமுதுவாய் உகுப்ப - (வாய் அமுது உகுப்ப) நஞ்சைக் கக்கும் தன் வாய்வழியாக அமுதைக்கக்கவும், அண்டமும் - வானுலகத்தையும், வையமும் - மண்ணுலகத்தையும், (கில்லரிப்பரிண்டில் முழவு, கின்னரம் என்பவற்றிலிருந்து எழுந்த இசை ஒலியானது) அளப்ப - நிறைத்துப் பரவும் வண்ணம் (வந்தான்).

பொழிப்பு

உள்ளீடற்ற மூங்கிலின்கண் இடப்பட்ட தொளையில் நின்று மென்மையாக எழும் இசையானது, இசைப்பாட்டிற்குரிய தன்மையில் மாறுமல் ஒரே வகையாகத் தொடர்ந்து எழ, இளம் மகளிருடைய இனிய குரலும் நல்ல நிலையில் நின்று ஒலி எழுப்ப, யாழின் இலக்கணங்களை ஆராய்ந்து எழுப்பிய எழுவகை நரம்பினின்றும் எழுவகை ஒலியோடு கூடிய பாட்டு சில்லரிப் பாண்டில் என்னும் தாளக்கருவியோடு கூடிய முழவினோடு இசைந்து, அவையின்கண் உள்ள கொடிய பாம்பும் நஞ்சைக் கக்கும் தனது வாயால் அமுதைக் கக்கும் வண்ணம், வானுலகமும் மண்ணுலகமும் (இசை ஒலியானது) பரவும் வண்ணம் இராவணன் வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இசைப்புலமையில் மிக்கவனும் இசைக் கருவியாகிய வீணையைத் தன் வெற்றிக் கொடியாக உயர்த்திய இராவணனைச் சூழ்ந்து இசைப் புலமை வாய்ந்தோர் இசை பாடிச் செல்லும் எழுச்சி கூறப்படுகின்றது.

இசைப்புலமையில் தலைமைப்பாடுமிக்கோனுகிய இராவணனின் உள்ளம் ஈடுபட்டு மகிழத்தக்கவகையில், அவனைச் சூழ்ந்து செல்கின்ற இசைப்புலமையாளர்கள் மிகமிக விழிப்போடும், ஆராய்மையோடும் அள்ளிச் சொரிகின்ற இசையமுதப் பெருக்கை, இராவணன் நுகர்ந்து மகிழ்வதிலும் பார்க்க ஆயிரம் மடங்கு கூடிய அவாவுடன் கம்பன் நுகர்வது போன்ற எழுச்சி இக் கவிதையில் காணப்படுகின்றது.

அவை உறை அரவும் அமுதுவாய் உகுப்ப
அண்டமும் வையமும் அளப்ப

எனக் கம்பன் கூறுகின்ற கவிதைக் குரலிலே கலந்து எழுகின்ற ஓசைப் பெருக்கு, அவனின் இசை ஆர்வத்தை அப்படியே எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சையுடைய கொடிய பாம்புகள் வெளியில் வர அஞ்சி அலையில் அடங்கிக் கிடத்தல் இயல்பாகும்; அத்தகைய கொடிய பாம்புகளும், இராவணனோடு சென்ற இசைவல்லோர்கள் கண்டத்தினாலும், கருவியினாலும் எழுப்பிப்பாடிய இசை இனிமையை நுகர்ந்ததினால் நஞ்சையே வாயாற் கக்கும் தமது இயல்பு மாறி, அமுதை வாயாற் கக்கும் இயல்பை அடைந்து விட்டன என்று கம்பர் கூறுகின்றார்:

அங்ஙனம் நஞ்சைக் கக்கும் பாம்புகளின் வாயில் நின்று அமுதம் சொரியச் செய்த அவ்விசை வெள்ளத்தை, வானகமும், மண்ணகமும் நிறைந்து விளங்குக எனக் கம்பர் வாழ்த்துகின்றார்.

எனவே, கொடிய குணமுடையவனாய் அயலான் மனையாளைக் கவர்ந்து அல்லல் செய்யும் வல்லமையாளனாகிய இராவணனிடத்தில், கல்லையும் உருக்கும் இனசயை நயந்து நுகரும், நல்ல புலமைத் திறனும் அமைந்துள்ளது என்பதைச் சொல்லி மகிழ்வதில் நல்லிசைப் புலவனாகிய கம்பனின் உள்ளம் ஈடுபட்டுள்ள எழுச்சியை உணர்கின்றோம்.

நாடகமயில் போல் நடந்தார்

89. அன்னபூஞ் சதுக்கஞ் சாமரை யுக்க
மாதியாம் வரிசையி னமைந்த
உன்னரும் பொன்னின் மணியினிற் புனைந்த
விழைக்குல மழைக்கருங் கடைக்கண்
மின்னிடைச் செவ்வாய்க் குவிமுலைப் பணைத்தோள்
வீங்குதே ரல்குலார் தாங்கி
நன்னிறக் காரின் வரவுகண் டுவக்கு
நாடக மயிலென நடப்ப

கொண்டுகூட்டு: உன்னரும் பொன்னின், மணியினில் புனைந்த இழைக்குலம், (குலங்களையும்) மழைக்கரும் கடைக்கண், மின்னிடை, செவ்வாய், குவிமுலை, பணைத்தோள் வீங்கு தேர் அல்குலார், அன்ன பூம் சதுக்கம், சாமரை உக்கம் ஆதியாம் வரிசையின் அமைந்த, தாங்கி, நல்நிறக் காரின் வரவு கண்டு உவக்கும், நாடக மயில் என நடப்ப.

பொருள்

உன்னரும் - (பார்த்துப் பார்த்து) நினைக்கத் தக்க அருமையான, பொன்னில் - (மாற்றுயர்ந்த) பொன்னிலும், மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

யினில் - மணிகளாலும் (இரத்தினங்களினாலும்), புனைந்த - அழகாகச் செய்யப்பட்ட, இழைக்குலம் - அணிகலன்களின் தொகுதிகளை (பல வகையான ஆபரணங்களை) அணிந்தவர் களும், மழைக்கரும் கடைக்கண் - மேகம் போன்ற கரிய கடைக் கண்களையும் (மழை என்பதைக் குளிர்ச்சி எனக்கொண்டு, குளிர்ந்த கரிய கடைக்கண்களை எனவும் பொருள் கொள்ளலாம்); மின்னிடை - மின்னல் போன்ற இடையினையும் (மின்னல் போல துவளுகின்ற இடையினையும் எனவும் பொருள் கொள்ளலாம்) செவ்வாய் - சிவந்த வாயினையும், குவிமுலை - குவிந்த (திரண்ட) கொங்கைகளையும், பணைத்தோள் - பருத்த மூங்கில் போன்ற தோள்களையும், வீங்குதேர் - தேர்போன்ற தேர்த்தட்டுப் போன்ற எனவும் பொருள் கொள்ளலாம்); அல்குலார் - அல் குலையுடைய மகளிர், அன்ன பூமி சதுக்கம் - (பூ(ம்) அன்ன சதுக்கம்) - பூவைப்போன்ற (பூவேலைப்பாடுகள் அமைந்த) சதுர மான பலகையும் (மணைப்பலகை எனவும் கொள்ளலாம்); சாமரை-வெண்சாமரையும், உசிகம்-ஆலவட்டமும், ஆதியாம்- முதலான, வரிசையின் அமைந்த - உபசாரப் பொருள்களாக அமைந்தவற்றை (உபசாரத்திற்கு ஏற்றவைகளை). தாங்கி - ஏந்திக்கொண்டு, நல்நிறக்காரின் - மிக்க கருமையான நிறத்தை யுடைய கார்கால மேகத்தின் (கார் முகிலின்), வரவுகண்டு - வருகையைக் கண்டு, உவக்கும் - மகிழ்ச்சி அடைகின்ற, நாடக மயில் என - கூத்தாடுதலையுடைய (கூத்தாடுகின்ற) மயிலைப் போல, நடப்ப - நடந்து வரவும் (இராவணன் வந்தான்);

பொழிப்பு

நினைக்கத்தக்க அருமையான பொன்னினாலும், மணிகளா லும் அழகாகச் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தவர் களும், மேகம் போன்ற கரிய கடைக்கண்களையும், மின்னல் போன்ற இடையினையும், சிவந்த வாயினையும், குவிந்த கொங் கைகளையும், பருத்த தோள்களையும் தேர் போன்ற அல்குலையு முடைய மகளிர், பூ வேலைப்பாடமைந்த சதுரமான பலகை, வெண்சாமரை, ஆலவட்டம் முதலிய உபசாரப் பொருள்களை ஏந்திக்கொண்டு, மிக்க கருமையான நிறத்தையுடைய கார்கால மேகத்தின் வருகையைக்கண்டு மகிழ்ச்சி அடைந்து கூத்தாடு தலை உடைய மயிலைப்போல நடந்து வரவும் (வந்தான் என் பதாம்;)

விளக்கம்

இச்செய்யுளில் அழகுக்கு அழகு செய்வதுபோல் அணிகலன் களை அணிந்த அழகிய இளம் மகளிர், ஆலவட்டம் வெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமரை முதலான உபசாரப் பொருள்களை ஏந்திய வண்ணம் இராவணனைச் சூழ்ந்து வருகின்ற காட்சி சொல்லப்படுகின்றது.

கற்பனைப் புலவனாகிய கம்பன் இராவணனை ஓர் புது மண மகன் போல வைத்து இச்செய்யுளைப் புனைந்துள்ளான். புது மண மகன் மங்கலப் பொருள்களுடன் ஊர்வலமாக மணமகளின் இல்லம் நோக்கிச் செல்வது போன்ற மன எழுச்சியுடனும், ஆசையுடனும் இராவணன் செல்கின்றான் என்பதைக் கூறுமற் கூறிக் கம்பர் நகை புரிகின்றார் என உணர்கின்றோம்.

பெருஞ் செல்வம் படைத்த சடையப்ப வள்ளலாருடனும், சோழப்பேரரசனாகிய மூன்றாம் குலோத்துங்கனிடமும் சேர்ந்து வாழ்ந்து செல்வப் பொலிவையும் நுகர்வையும், வகைவகையான ஆடை அணிகளின் அழகையும், அமைப்பையும் நன்குணர்ந்த கம்பர், இராவணனுடன் மங்கலப் பொருள்களை ஏந்திச் செல்லும் இளம் பெண்கள் அணிந்துள்ள அணிகலன்களின் வகைகளை மிகமிக நுட்பமாகக் கூறியுள்ளார் என்க.

அங்ஙனம் மங்கலப் பொருள்களை ஏந்திச் சென்ற இளம் மகளிர் இராவணனைச் சூழ்ந்து செல்கின்ற காட்சியை

நன்னிறக்காரின் வரவு கண்டு உவக்கும்
நாடகமயில் என நடப்ப

எனக் கம்பர் கூறி மகிழ்கின்றார். இதில் நன்னிறக்கார் (மழை முகில்) - உவமானம். கருமைநிறங் கொண்ட இராவணன் - உவமேயம். நிறம் - பொதுத்தன்மையாகும்.

மழை முகிலைக்கண்டு கூத்தாடும் மயில்கள் - உவமானம். இராவணனுடன் செல்வதால் மகிழ்ச்சி கொள்ளும் இளம் மகளிர் - உவமேயம். சாயலும், நடையும் பொதுத்தன்மைகளாகும்.

அந்தரவானத்து அரம்பையர்

90. தந்திரி நெறியிற் முக்குறு கருவி
தூக்கின ரெழுவிய சதியின்
முந்துறு குணிலோ டியைவுறு குறட்டிற்
சில்லரிப் பாண்டிலின் முறையின்
மந்தர கீதத் திசைப்பதம் தொடர்ந்த
வகையுறு கட்டளை வழாமல்
அந்தர வானத் தரம்பையர் கரும்பின்
பாடலா ரருகுவந் தகவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: தந்திரி நெறியின் தாக்குறு கருவி (கருவியின்கண்) தூக்கினர் எழுவிய சதியின் வழாமல்(உம்) முந்துறு குணிலோடு இயைவுறு குறட்டில், சில்லரிப்பாண்டிலின், முறையின் வழாமல்(உம்) மந்தர கீதத்து இசைப் பதம் தொடர்ந்த, வகை உறு கட்டளை வழாமல்(உம்) அந்தர வானத்து அரம்பையர், கரும்பின் பாடலார் அருகுவந்து அகவ(வும்) (வந்தான்).

பொருள்

தந்திரி நெறியில் - நரம்பின் முறையால், தாக்குறு கருவி - (விரலினுல்) தெறித்தல் பொருந்திய யாழின்கண் (அல்லது வீணையில்), தூக்கினர் - (இசைவல்லார்) ஆராய்ந்து, எழுவிய - எழுப்பி, சதியின் வழாமல் - தாளவொத்தின் நின்றும் தவறுமலும், முந்துறு குணிலோடு - முதன்மை வாய்ந்த குறுந்தடியோடு, இயைவுறு - கூடிய (பொருந்திய), குறட்டில் - குறடு என்னும் மத்தளத்தின் முறையினும், சில்லரிப்பாண்டிலின் முறையின் - சில்லரிப்பாண்டில் என்னும் கஞ்சதாளக்கருவி முறையினும், வழாமல் - குற்றப்படாமலும், மந்தர - படுத்தலோசையோடு கூடிய, கீதத்து - இசைப் பாடலோடு சேர்ந்த, இசைப் பதந் தொடர்ந்த - இசைப்பாடலோடு சேர்ந்த, வகை உறு - பாகுபாடுகளோடு கூடிய, கட்டளை வழாமல் - சீர் தவறுமலும் அந்தர வானத்து - சுவர்க்க லோகத்தவரான (வானுலகத்தவரான), அரம்பையர் - அரம்பை முதலிய தெய்வ மகளிர், கரும்பின் பாடலார் - கரும்புபோல் இனிய வாய்ப்பாடலை உடையவருமாய், அருகுவந்து - (தனது) பக்கத்தில் வந்து, அகவ - ஆடவும் (நர்த்தனம் செய்யவும் வந்தான்).

பொழிப்பு

நரம்பின் முறையால் தெறித்தல் பொருந்திய யாழின்கண் ஆராய்ந்து எழுப்பிய தாள ஒத்தின்நின்றும் தவறுமலும், முதன்மை வாய்ந்த குறுந்தடியோடு கூடிய குறடு என்னும் மத்தளத்தின் முறையினும், சில்லரிப்பாண்டில் என்னும் கஞ்சதாளக் கருவி முறையினும், குற்றப்படாமலும், படுத்தல் ஓசையோடு கூடிய இசைப்பாடலோடு சேர்ந்த பாகுபாடுகளோடு கூடிய சீர் தவறுமலும், வானுலகத்தவரான அரம்பை முதலிய தெய்வ மகளிர் கரும்புபோல் இனிய வாய்ப் பாட்டைப் பாடிய வராய்த் தன் பக்கத்தில் வந்து ஆடவும் வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணனின் பக்கத்தில் நின்று அரம்பை முதலான தேவ மாதர்கள் தாளத்தோடு பொருந்த ஆடிச் செல்லும் செயல் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலப் பொருள்கள் ஏந்தியவண்ணம் இளம் மங்கையர்கள் தன்னைச் சூழ்ந்து வரவும், அரம்பை முதலான தேவ மாதர்கள் தாளத்திற்கேற்பப் பாடிய வண்ணம் தன்பக்கத்தில் நின்று ஆடி வரவும் இராவணன் செல்கின்ற காட்சியைக் கம்பரால் மறக்க முடியவில்லை.

இங்ஙனம் இந்திரப் பெரும்பேறு பெற்றவனுய் ஆடும் மகளிரும், பாடும் மகளிரும், அட்ட மங்கலம் ஏந்தும் மகளிரும், ஆயிரக் கணக்கினராய்த் தன்னைச் சூழச் சீதாதேவியை எண்ணிய வண்ணம் செல்கின்ற இராவணன் மிக விரைவில் இச்சிறப்புக் களை யெல்லாம் இழந்து விடுவான் என்பதைக் குறிப்பாக உணர்கின்றோம்.

புண்ணில் நுழைந்த வேல்

91. அந்தியி னனங்க னழல்படத் துரந்த
வலர்மலர்ப் பகழிவா யறுத்த
வெந்துறு புண்ணின் வேனுழைந் தென்ன
வெண்மதிப் பசுங்கதிர் விரவ
மந்தமா ருதம்போய் மலர்தொறும் வாரி
வயங்குநீர் மாரியின் வருதேன்
சிந்துநுண் டுளிகள் சீகரத் திவலை
யுருக்கிய செம்பெனத் தெறிப்ப.

கொண்டுகூட்டு: அந்தியின், அனங்கன், (மன்மதன்), அழல்பட, துரந்த, அலர் மலர் பகழி வாய் அறுத்த, வெந்துறு புண்ணின், வேல் நுழைந்து என்ன வெண்மதி, பசுங்கதிர் விரவ, வயங்கு நீர் மாரியின், மந்தமாருதம் மலர்தொறும் போய் வாரி, வருதேன் சிந்து நுண்துளிகள், சீகரத் திவலை, உருக்கிய செம்பெனத் தெறிப்ப.

பொருள்

அந்தியின் - மாலைக்காலத்தில், அனங்கன் - உருவமற்றவனுன மன்மதன் (உருவிலியாகிய மன்மதன்), அழல்பட - நெருப்பின் வெப்பம் உண்டாகும்படி, துரந்த - ஏவிய, அலர் மலர் - விரிந்த பூக்களாகிய, பகழிவாய் - அம்புகளின் வாயினுல், அறுத்த - அறுக்கப்பட்ட (அறும்படி செய்து உண்டாக்கிய), வெந்துறு புண்ணின் - வெந்திருக்கின்ற புண்ணிலே, வேல் நுழைந்து என்ன - வேற்படை ஊடுருவிச் சென்ற தன்மையைப் போல, வெண்மதி பசுங்கதிர் - வெண்மையான சந்திரனது குளிர்ந்த கதிர் (கிரணம்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவ - பொருந்தவும் (பரவவும்), வயங்கு நீர் - விளங்குகின்ற கடலின்கண், மாரியின் - (நீரை அள்ளும்) மேகத்தைப்போல, மந்தமாருதம் - இளந்தென்றல் காற்றுணது, மலர்தொறும் போய் - மலர்கள்தோறும் சென்று, வாரி - வாரிக்கொண்டு (அள்ளிக்கொண்டு), வருதேன் - வருகிறதேன்துளிகளும், சிந்து - (கடலிலிருந்து காற்றோடு கலந்து) வருகின்ற (வந்து சிதறுகின்ற), நுண்துளிகள் - நுண்ணிய நீர்த்துளிகளும், சீகரத்திவலை - பனி நீர்ச் செம்பில் நின்று தூவும் நீர்த்துளிகளும், உருக்கிய உருக்கப் பட்ட, செம்பு என - செம்புக் குழம்புபோல, தெறிப்ப - மேலே சிதறவும், (வந்தான்)

பொழிப்பு

மாலைக்காலத்தில் உருவிலியாகிய மன்மதன் நெருப்பின் வெப்பம் உண்டாகும்படி ஏவிய பூக்களாகிய அம்புகளின் வாயிலால் அறும்படி செய்து உண்டாக்கி, வெந்திருக்கின்ற புண்ணிலே வேற்படை ஊடுருவிச் சென்ற தன்மையைப் போலச் சந்திரனது குளிர்ந்த கதிர் சென்று பொருந்தவும், கடலின்கண் வீழ்ந்து நீரை வாரி அள்ளும் மேகத்தைப் போல இளந்தென்றற் காற்றுணது மலர்களிலெல்லாம் சென்று வாரிக் கொண்டு வருகிற தேன்துளிகளும், கடலிலிருந்து காற்றோடு கலந்து வருகின்ற நுண்ணிய நீர்த்துளிகளும், பனிநீர்ச் செம்பில் நின்று தூவும் நீர்த்துளிகளும் உருக்கப்பட்ட செம்புக் குழம்புபோல மேலே சிதற (வந்தான் என்பதாம்).

விளக்கம்

இச்செய்யுளில் மன்மதனுடைய மலர் அம்புகள் இராவணன் உடலைப் பிளந்து ஆக்கிய புண்ணிலே, தென்றல் தரும் தேன் துளியும், காற்றில் கலந்து வரும் நீர்த்துளியும், பனிநீர்த் துளியும் சென்று தாக்கும் வகை சொல்லப்படுகின்றது.

மாலைக்காலத்தில் காம உணர்ச்சி பெருகித் தோன்றுமாதலால்

அந்தியின் அனங்கன் அழல்படத் துரந்த
அலர் மலர் பகழிவாய் அறுத்த
வெந்துறு புண்ணின்

எனக் கம்பர் காட்டும் விளக்கம் போற்றத்தக்கதாகும்.

அந்திப் பொழுதில்தான் மன்மதன் தன் கரும்பு வில்லை வளைத்து, கரும்பு நாண் தொடுத்து, அரும்பும் மலர்க்கணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனைச் சொரிந்து காம வேட்கையை உண்டாக்குவான் எனக் கூறுதல் கவி மரபாகும். இதனை,

காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய்

என வள்ளுவரும்,

மல்லிகையே வெண்சங்காய் வண்டோத வான்கருப்பு
வில்லி கணைதொடுத்து மெய்காப்ப — முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன் மாலை அந்திப் பொழுது.

எனப் புகழேந்திப்புலவரும் கூறுவதால் உணர்க.

சீதாதேவியின்மேற் கொண்ட காமவேட்கையால் அள்ளுப் பட்டுச் செல்கின்ற இராவணன்மேல், அந்திப் பொழுதில் மன்மதன் அரர் அம்புகளைத் தொடுத்து அவன் உடலைக் கிழித்துப் புண் செய்துவிட்டான் எனக் கூறிய கம்பர், அப்புண்ணில் வெண்மதி வீசும் தண்ணொளிக் கதிர்கள் நுழைந்து மேலும் மேலும் அவனின் காம உணர்ச்சியைக் கூட்டி வருத்துகின்ற செயலை

''வெந்துறு புண்ணின் வேல் நுழைந்து என்ன
வெண்மதி பசும் கதிர் விரவ''

என உவமானம் காட்டிக் கூறுகின்றார். எனவே, மன்மதன் இராவணன்மேற் செலுத்திய மலர் அம்புகளால் அவன் உடம்பில் ஏற்பட்ட காமவேதனையை வெந்த புண்ணாகவும், அங்ஙனம் காமவேதனையாற் கலங்குகின்ற இராவணன்மேல் வெண்மதியின் ஒளி தீண்டுவதால் காமவேட்கை பெருகி அவனை வருத்துவதை, வெந்த புண்ணில் வேல் நுழைந்து வருத்துவதாகவும் கம்பர் காட்டிய உவமானத் திறன் போற்றத்தக்கதாகும்.

வெந்தபுண் - உவமானம். முன்னமே மன்மத பாணத்தால் தாக்குண்ட இராவணனின் காமவேதனை - உவமேயம். துன்பம் பெருகல் - பொதுத்தன்மையாகும். காமபாணத்தால் பிளவுண்ட புண்ணில் நிலாக்கதிர் நுழைதல் - உவமானம். வெந்த புண்ணில் வேல்நுழைதல் - உவமேயம். மேலும் மேலும் துன்பம் மிகுதல் - பொதுத்தன்மையாகும்.

இங்ஙனம் மன்மதனின் மலர்க்கணைகள் அறுத்த புண்ணில் சந்திரனின் ஒளி பரவியதுடன் அமையாது, மந்தமாருதம் என்னும் தென்றற் காற்று மலர்களில் படிந்து வாரிக்கொண்டுவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்துளியும், கடலில் இருந்து காற்றிற் கலந்துவரும் நீர்த் துளியும், பனிநீர்ச் செம்பு கொண்டு தெளிக்கும் வாசநறு நீர்த் துளியும், உருக்கிய செம்புக் குழம்புபோல இராவணனின் உட லிலே தெறித்து வருத்தின எனவுங் கம்பர் கூறுகின்றார்:

மந்தமாருதம்போய் மலர்தொறும் வாரி
வயங்குநீர் மாரியின் வருதேன்
சிந்துநுண் துளிகள் சீகரத்திவலை
உருக்கிய செம்பெனத் தெறிப்ப.

எனவருந் தொடர்களைப் படித்துப் பாருங்கள். உருக்கிய செம்பு தெறித்தல் - உவமானம். தேன்துளி, நீர்த்துளி, பனிநீர்த்துளி என்பன - உவமேயம். வருத்துதல் பொதுத்தன்மையாகும்.

மன்மதன் (அனங்கன்): திருமாலின் மைந்தன். இவனின் வில் கரும்பு, நாண் சுரும்பு (வண்டுகள்), பாணம் மலர்கள் (முல்லை அசோகு, நீலம், மா, தாமரை) கரும்பு வில்லை வளைத் துச் சுரும்பு நாணை ஏற்றி மலர்ப்பாணங்களை எய்து எல்லா உயிர்களுக்கும் காம உணர்ச்சி ஊட்டுவதில் வல்லவன்; இவன் ஒருநாள், வானவரின் ஏவலாற் சிவபெருமான்மேற் பூப்பாணங் களைப் பொழிந்தான். உடனே சிவபெருமான் சினங்கொண்டு தமது நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்து நீறாக்கினார். இந் நனம் தன் கணவனாகிய மன்மதன் சிவபெருமானால் எரியுண்ட செய்தியை அறிந்த இரதிதேவி சிவபெருமானை வணங்கித் தன் கணவனை எழுப்பி அருளும்வண்ணம் இரந்தாள்; இரதியின் வேண்டுகோளுக்கிரங்கிய சிவபெருமான் அவளை நோக்கி உன் கணவனாகிய மன்மதனின் உருவம் உனக்கு மாத்திரம்தான் தோன்றும்; மற்றொருவருக்கும் அவனின் உருவம் தோன்றாது எனக்கூறி மன்மதனை எழுப்பியருளினார். உருவம் இல்லாதவனை படியால் மன்மதனை, அனங்கன் என்றும், உருவிலி என்றும் கூறுவார்கள். (அனங்கன் - அங்கம் இல்லாதவன் எனப் பொருள் படும்)

தோற்பித்தீர் மதிக்கு மேனி சுடுவித்தீர் தென்றல்
தூற்ற
வேர்ப்பித்தீர் வயிரத் தோளை மெலிவித்தீர்
வேனில் வேளை
ஆர்ப்பித்தீர் எனினை இன்னல் அறிவித்தீர்
அமரரீ அச்சம்
தீர்ப்பித்தீர் இன்னம் என்னென் செய்வித்துத்
தீர்த்தீர் அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இராவணன் சீதாதேவியிடம் மதி, தென்றல் முதலிய வற்றுல் தான் அடையும் இன்னல்களைச் சொல்லியதாக வரும் மயாசனகப் படலச் செய்யுளையும் நோக்குக.

குமுதவாய் மகளிர்

92. இழைபுரை மருங்கு லிறுமிறு மெனவு
மிறுகலா வனமுலை யிரட்டை
யுழைபுகு செப்பி னெளிதர மறைத்த
வுத்தரீ யத்தின ரொல்கிக்
குழைபுகு கமலங் கோட்டினர் நோக்குங்
குறுநகைக் குமுதவாய் மகளிர்
மழைபுரை யொண்கட் செங்கடை யீட்டம்
மார்பினுந் தோளினும் வயங்க.

கொண்டுகூட்டு: இழை புரை மருங்குல், இறும் இறும் எனவும், இறுகலா வனம் முலை இரட்டை உழைபுகு செப்பின் ஒளிதர மறைத்த, உத்தரீயத்தினர் ஒல்கி, குழைபுக கமலம் கோட்டினர் நோக்கும் குறுநகைக் குமுதவாய் மகளிர், மழைபுரை ஒண் கண் செங்கடை ஈட்டம் (தன்) மார்பினும் தோளினும் வயங்க (வந்தான்).

பொருள்

இழைபுரை - நூலை ஒத்த (நூல் இழையை ஒத்த நுண்ணிய) மருங்குல் - (தமது) இடையானது (இடைகள்) இறும் இறும் எனவும் - (தம்மேல் உள்ள கொங்கைகளின்) பாரத்தால் முரிந்துபோய்விடும் முரிந்துபோய்விடும் என்று கண்டோர் சொல்லவும், இறுகலா - (தமது வளர்ச்சியில்) சுருங்காத, வனம் முலை இரட்டை - அழகிய இரண்டு கொங்கைகளும், உழைபுகு செப்பின் - உள்ளே புகுந்துள்ள (இரண்டு) செப்புக்கள்போல (செப்பினையே போல) ஒளிதர மறைத்த - மறையும்படி மறைத்து அணிந்து (மூடி அணிந்த) உத்தரீயத்தினர் - மேலாடையை உடையராய், ஒல்கி - எதிர்கொண்டு, குழைபுக - (காதுகளில் அணிந்த) குண்டலம் சேர்ந்த, கமலம் கோட்டினர் நோக்கும் - தாமரைமலர்போலும் முகத்தை (நாளுக்குநாள்) வளர்த்துப் பார்க்கின்ற (சாய்ந்து நோக்குகின்ற) குறுநகைக் குமுதவாய் - புன்சிரிப்போடு கூடிய செவ்வாம்பல் மலர்போன்ற வாயை யுடைய, மகளிர் - இனம் பெண்களின், மழைபுரை - மழையைப் போலக் குளிர்ச்சி பொருந்திய, ஒண்கண் செங்கடை ஈட்டம் - இவ்விய கிவந்த கடைக்கண்களின் கூட்டம், மார்பினும் - (தனது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பிலும், தோளினும் - தோள்களிலும், வயங்க - விளங்க (விளங்கவும் வந்தான்).

பொழிப்பு

நூலை ஒத்த நுண்ணிய இடைகளானவை, தம்மேல் உள்ள கொங்கைகளின் பாரத்தால் முரிந்துபோய்விடும் முரிந்துபோய் விடும் என்று கண்டோர் சொல்லவும், தமது வளர்ச்சியிற் குறை யாத அழகிய இரண்டு கொங்கைகளும் உள்ளே புகுந்துள்ள இரண்டு செப்புக்கள்போல மறையும்படி மூடியணிந்த மேலா டையை உடையவர்களாய் எதிர்கொண்டு காதுகளிலணிந்த குண்டலம் சேர்ந்த செந்தாமரை மலர்போலும் முகத்தை நாணத்தினுல் சாய்த்து நோக்குகின்ற புன்சிரிப்பையும், செவ் வாம்பல் மலர்போன்ற சிவந்த வாயையுமுடைய இளம் பெண் களின், மழையைப் போலக் குளிர்ச்சி பொருந்திய ஒள்ளிய சிவந்த கடைக்கண்களின் கூட்டம் தனது மார்பிலும் தோள் களிலும் விளங்கவும் வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இளம்மகளிர் காதற் குறிப்பைக் காட்டும் தமது கடைக்கண்களால் இராவணனின் மார்பையும் தோள்களை யும் நோக்கியவண்ணம் செல்கின்ற நிலைமை சொல்லப்படுகின் றது.

அப்பெண்கள் நூலினும் நுண்ணிய இடைகளை உடையவர் களாயும், பருத்த கொங்கைகளை உடையவர்களாயும், புன்சிரிப் போடு பொருந்திய செவ்வாம்பல் மலர்போன்ற வாயினை உடையவர்களாயும், காதணியோடு விளங்கும் செந்தாமரை மலர்போன்ற முகங்களை வளைத்து வளைத்து இராவணனின் மார்பையும் தோள்களையும் காதலோடு நோக்குகின்ற கண்களை உடையவர்களாயும் செல்கின்றார்களெனக் கம்பர் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றார்.

இங்ஙனம் இளமகளிர் தங்கள் காதல் உணர்ச்சியைப் புன் சிரிப்பினுலும், கண்களினுலும் வெளிப்படுத்திக்காட்டவும், அவர் களின்மேல் விருப்பம் கொள்ளாமல் சீதாதேவியின்மேற் கொண்ட தீராத காமவேட்கையுடன் இராவணன் செல்கின்றான் என்ப தாம். இங்ஙனம் மகளிர் தமது காதல் வேட்கையை புன் சிரிப்பினுலும், கண்களினுலும் தாமாகவே புலப்படுத்திக் காட்ட வும், அவர்களின் மேல் சிறிதேனும் விருப்பம் கொள்ளாதவனுய்ச் செல்கின்ற இராவணனின் உள்ளத்தில் சீதைமேற் கொண்ட காதல் வேட்கையும் இல்லாதொழிந்தால் அவன் முக்குற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் நீங்கிய முனிவரைப்போல விளங்குவான் என்பதையும் கம்பர் குறிப்பாகக் காட்டுகின்றார்.

இராவணன்மேல் காதல் உணர்ச்சியைக் காட்டிச் செல்கின்ற மகளிரின் அழகைக் கம்பரால் மறக்கமுடியவில்லை.

குறுநகைக் குமுதவாய் மகளிர் மழைபுரை
ஒண்கண்
செங்கடை ஈட்டம் மார்பினும் தோளினும் வயங்க.

எனக் கம்பர் கூறும் கவிதைத் தொடர்களில் எழுகின்ற ஓசைப் பெருக்கு இத்துணை அழகுவாய்ந்த இளம்பெண்கள் விரும்பவும அவர்களிடத்தில் தன் மனத்தைப் பறிகொடாமல் இராவணன் எப்படிப் பாதுகாத்துச் செல்கின்றான் என்னும் வியப்புணர்ச்சி கலந்து நிழலாடுவதைக் காண்கின்றோம்.

கொங்கைகளின் பாரத்தைத் தாங்காமல் இடைமுரியு மெனக் கூறுதல் கவிமரபாகும். இதனை,

மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு — நாட்டேன்
அலம்புவார் கோதை அடியிணையில் வீழ்ந்து
புலம்புமாம் நூபுரங்கள் பூண்டு.

என நளவெண்பாவில் புகழேந்திப்புலவர் கூறுவதாலும் உணர்க.

இச் செய்யுளில் இறுகலா வனமுலை என்னுந் தொடரில் வரும் இறுகலா என்னுஞ் சொல் சுருங்காத என்னும் பொருள் தந்து நிற்கின்றது. இறுகல் - சுருங்குதல்.

உத்தரீயத்தினர் ஒல்கி என்பதில் வருகின்ற ஒல்குதல் என்னும் சொல் எதிர் கொள்ளுதல் என்னும் பொருளைத் தருகின்றது. இதனை,

இட்ட உத்தரியம் மெல்லென்று இடைசுவல்
வருத்த ஒல்கி
அட்ட மங்களம் ஏந்தி ஆயிரத்தி எண்மர் ஈண்டி
பட்டமும் குழையும் மின்னப் பல்கலன் ஒலிப்பச்
சூழ்ந்து
மட்டவிழ் கோதைமாதர் மைந்தனைக் கொண்டு
புக்கார்.

எனவரும் சிந்தாமணிச் செய்யுளிலுள்ள "உத்தரியம் இடை சுவல் வருத்த ஒல்கி" என்னும் தொடருக்கு நச்சினார்க்கினியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உத்தரியம் இடையையும் சுவலையும் வருத்த எதிர்கொண்டு'' எனப் பொருள் கூறுதல் காண்க.

கருமலைமேல் பாற்கடல்

93. மாலையுஞ் சாந்துங் கலவையும் பூணும்
வயங்குநுண் தூசொடு காசும்
சோலையின் றொழுதிக் கற்பகத் தருவு
நிதிகளுங் கொண்டுபின் றொடரப்
பாலின்வெண் பரவைத் திரைகருங் கிரிமேற்
பரந்தெனச் சாமரை பதைப்ப
வேலைநின் றுயரு முயலில்வெண் மதியின்
வெண்குடை மீதுற விளங்க.

கொண்டுகூட்டு: சோலையின் தொழுதிக் கற்பகத் தருவும், நிதிகளும் மாலையும், சாந்தும், கலவையும், பூணும், வயங்கு நுண் தூசொடு காசும் கொண்டு, பின்தொடர(வும்), வெண்பாலின் பரவைத் திரை, கருங்கிரிமேல் பரந்து என சாமரை பதைப்ப(வும்) வேலை நினறு உயரும் முயல் இல வெண்மதியின், வெண்குடை மீதுற விளங்கவும் (வந்தான்).

பொருள்

சோலையின் தொழுதி - சோலையின் கூட்டமாகிய, கற்பகத் தருவும் - கற்பக விருட்சமும், நிதிகளும் - (சங்கநிதி பதுமநிதி முதலிய நவ) நிதிகளும், மாலையும் - மலர்மாலை, சாந்தும் - சந்தனம், கலவையும் - கலவைச் சந்தனமும், பூணும் - அணி கலன்களும், வயங்கு நுண் தூசொடு - ஒளி வீசுகின்ற நுட்ப மான ஆடைகளோடு, காசும் - நவமணிகளும் (நவரத்தினங் களும்), கொண்டு - தாங்கிக்கொண்டு, பின்தொடர - பின்னே தொடர்ந்து வரவும், வெண்பாலின் பரவைத் திரை - வெண் நிறங்கொண்ட (திருப்) பாற்கடலின் அலைகள், கருங்கிரிமேல் - கருநிறமுள்ள மலையின்மீது, பரந்து என - பரவினாற்போல, சாமரை-வெண்சாமரைகள், பதைப்ப-அசைந்து வீசவும், வேலை நின்று - கடலின்கண் நின்று, உயரும் - மேல் எழுந்து வெளித் தோன்றுகின்ற, முயல் இல் - (முயலென்று கூறப்படும்) முயற் கறை இல்லாத, வெண்மதியின் - வெண்மையான (வெள்ளிய) முழுமதியைப்போன்ற, (பூரண சந்திரனைப்போன்ற), வெண் குடை - வெள்ளைக் குடையானது, மீதுற விளங்கவும் - (இரா வணனின்) தலையின்மேல் நின்று விளங்கவும் வந்தான்.

— கு. கச. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

சோலையின் கூட்டமாகிய கற்பக விருட்சமும், சங்கநிதி பதுமநிதி முதலிய நவநிதிகளும், மலர்மாலை, சந்தனக்கலவை, அணிகலன்கள், ஒளிவீசுகின்ற நுட்பமான ஆடைகள், நவமணிகள் என்பவற்றைத் தாங்கிக்கொண்டு பின்னே தொடர்ந்து வரவும், வெண்ணிறம்கொண்ட திருப்பாற்கடலின் அலைகள் கரிய நிற மலையின்மீது பரவிஞற்போல வெண்சாமரைகள் அசைந்து வீசவும், கடலின்மேல் எழுந்து தோன்றுகின்ற மறுவில்லாத முழுமதியைப் போன்ற வெண்கொற்றக்குடை தலையின்மேல் நின்று விளங்கவும் வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணனின் தவச் சிறப்பினால் அவனை அடைந்து அவன் நினைத்தவற்றையெல்லாம் வழங்கும் கற்பகதரு சங்கநிதி, பதுமநிதி என்பன, பூமாலை, சந்தனம், அணிகலன் முதலியவற்றை ஏந்தியனவாய் இராவணனுடன் சென்ற செயலைக் கம்பர் கூறிக் களிக்கின்றார்.

இராவணன் திக்குவிசயம் செய்தகாலத்தில் தேவலோகத்தை வென்று திறையாகப் பெற்ற கற்பகதரு சங்கநிதி பதுமநிதி என்பன தெய்வத்தன்மை உடையவை ஆதலால் இராவணனை அடைந்து அவனுக்கு வேண்டிய பொருள்களை உதவுவதற்காக அவனுடன் உலாவித்திரிகின்றன என்பதே கம்பரின் கருத்தாகும். கற்பகதரு முதலியன இயங்காத அஃறிணைப் பொருள்களாயினும், தெய்வத்தன்மை உடையனவாய் விளங்குதலால் இயங்குதிணைப் பொருள்களாகக் கம்பர் கூறியுள்ளார் என்பதை உணர்கின்றோம்.

இங்ஙனம் கற்பகதரு சங்கநிதி பதுமநிதி என்பன மாலை சாந்தம் முதலிய பொருள்களை ஏந்தி இராவணன் விரும்பிய நேரத்தில் அவன் குறிப்பை அறிந்து கொடுத்தற்காக அவனுடன் சென்று திரிவன என்னும் உண்மையை

இழையு மாலையும் மாடையும் சாந்தமு மேந்தி
உழைய ரென்னநின் றுதவுவ நிதியங்க ளொருவர்
விழையும் போகமே யிங்கிது வாய்கொடு விளம்பிற்
குழையு நெஞ்சினுல் நினையினு மாசென்று
கொள்ளும்.

என வரும் தேடு படலத்தில் வரும் செய்யுளையும் நோக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் அறத்தை மறந்து அன்னை சீதாதேவிக்கு அல்லல் தருகின்றவனுயினும், இல்லையென்று வந்து இரந்தோர்க்கு ஈந்துவக்கும் இன்பத்தை இயல்பாகவே என்றும் உடையவன் என்பதை உணர்த்த விரும்பிய கம்பர், அவனுடன் கற்பகதரு முதலியன வேண்டிய செல்வங்களையெல்லாம் ஏந்தியவண்ணம் செல்கின்றனவென்று கூறியுள்ளார் என்பதை உணர்கின்றோம். சீதாதேவியை நோக்கிக் காமவேட்கையுடன் செல்லும் இராவணனிடம் இரவலர் சென்று இல்லையென்று இரப்பார்களானால் அவன் எள்ளளவும் சினம்கொள்ளாமல் ஈந்துவப்பான் என்பதே கம்பரின் கருத்தாகும்.

இராவணன் எந்நிலையிலும் தானம் புரிந்து மகிழும் தகைமையாளன் என்பதை

ஈசனை இமையா முக்கண் இறைவனை இருமைக்கு ஏற்ற
பூசனை முறையின் செய்து திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி மற்றும் வேட்டன வேட்டோர்க்கு எல்லாம்
ஆசு அறநல்கி ஒல்காப் போர்த் தொழிற்கு அமைவது ஆனன்

இறுதியாக இராமபிரானுடன் போர் செய்யப் போகும்பொழுது அவன் ஈசனை வழிபாடு செய்து அருமறை புகன்ற தானம் யாவர்க்கும் அளித்துச் சென்றான் எனவரும் இச்செய்யுளால் அறிக.

சங்கநிதி பதுமநிதி என்பன அளவில்லாத செல்வங்களை வழங்கும் தெய்வத்தன்மை வாய்ந்தவை. கற்பகதரு என்பது வேண்டியவற்றை யெல்லாம் வழங்கும் தெய்வத்தன்மை வாய்ந்தது.

இராவணனுடைய கரிய உடம்பில் வெண்சாமரைகள் வீசப்படும்பொழுது தோன்றும் காட்சியையும், அவனின் தலைகளின் மேல் வெண்கொற்றக்குடை நின்று நிழலைச் செய்கின்ற காட்சியையும், கம்பர் சிறந்த உவமானங்கள் காட்டி விளக்குகின்றார்; இதனை,

பாலின்வெண் பரவைத் திரைகரும் கிரிமேல்
பரந்தெனச் சாமரை பதைப்ப
வேலை நின்றுயரும் முயலில்வெண் மதியின்
வெண்குடை மீதுற விளங்க.

எனவரும் கவிதைத் தொடர்களால் அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில், பாலின்வெண் பரவைத் (திருப்பாற்கடல்) திரை - உவமானம்; வெண்சாமரைகள் - உவமேயம். நிறமும் பன்மையும், அசைவும் பொதுத்தன்மைகளாகும்.

பாற்கடலின் அலைகள் எழுந்தும் வீழ்ந்தும் வெண்நுரைகளைச் சுமந்தவண்ணம் அசைதல்போல, வெண்சாமரைகளும் உயர்ந்தும், தாழ்ந்தும், அசைகின்றன என்பதாம்.

கருங்கிரி (கரியமலை) - உவமானம்; இராவணனின், கரியபெரிய உடல் - உவமேயம். நிறமும், உருவப் பொலிவும், கலங்காமையும் பொதுத்தன்மைகளாகும்.

இராவணனின் கரிய பெரிய உடலைச் சார்ந்து வீசப்படுகின்ற வெண்சாமரைகள், கரிய மலையில் வெண்மையான பாற்கடலின் அலைகள் பொருந்தி அசைவனபோலக் காட்சி அளிக்கின்றன என்பதாம்.

கறையில்லாத முழுமதி - உவமானம்; இராவணனின் முடிமேல் நின்று நிழலைப் பரப்பும் வெண்கொற்றக்குடை - உவமேயம்; நிறமும் மறுவில்லாமையும் - பொதுத்தன்மைகளாகும்.

கறையில்லாத முழுமதி உலகில் இல்லாத பொருளாகும்; இங்ஙனம் உலகில் இல்லாத பொருளைப் புலவன் தானேகவே படைத்துக் காட்டுகின்ற உவமை இல் பொருள் உவமை அணி எனப்படும்.

இருநில மடந்தை

94. ஆர்கலி யகழி யருவரை யிலங்கை
யடிபெயர்த் திடுதொறு மழுந்த
நேர்பொரும் பரவைப் பிறழ்திரை தவழ்ந்து
நெடுந்தடந் திசைதொறு நிமிரச்
சார்வருங் கடுவி னெயிறுடைப் பகுவா
யனந்தனுந் தலைதடு மாற
மூரிநீ ராடை யிருநில மடந்தை
முதுகுளுக் குற்றனண் முரல.

கொண்டுகூட்டு: அடி பெயர்த்திடு தொறும் ஆர்கலி அகழி, அருவரை இலங்கை அழுந்த, நேர்பொரும் பரவைப் பிறழ்திரை தவழ்ந்து, நெடுந்தடம் திசைதொறும் நிமிர, சார்வு அரும் கடுவின் எயிறு உடைப் பகுவாய், அனந்தனும், தலைதடுமாற, மூரிநீர் ஆடை இருநில மடந்தை முதுகு உளுக்குற்றனள் முரல (வந்தான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

அடி பெயர்த்து இடுதொறும் - இராவணன் தனது கால்களை மாறிமாறி எடுத்து வைக்கும்போதெல்லாம், ஆர்கலி அகழி - ஒலிக்கும் கடலாகிய அகழியையுடைய, அருவரை - அரிய திரி கூட மலையில் அமைந்துள்ளதாகிய, இலங்கை - இலங்கையானது, அழுந்த - பாரத்தைத் தாங்காமற் குழியை அடைந்திடவும், நேர்போரும் - எதிர்த்துத் தாக்குகின்ற, பரவைப் பிறழ்திரை - கடலின்கண் எழுந்து முரிந்து (மடங்கி அடிக்கின்ற) வருகின்ற அலைகள், தவழ்ந்து - பாய்ந்து, நெடுந்தடம் - நீண்ட பெரிய, திசைதொறும் - திசைகளிலெல்லாம், நிமிர - எல்லை கடந்து (பரவி) எழவும், சார்வு அரும் - அடைதற்கரிய (கிட்டமுடியாத), கடுவின் எயிறு உடை - நஞ்சுப் பற்களோடு கூடிய, பகுவாய் அனந்தனும் - பிளந்த வாயையுடைய ஆதிசேடனும், தலை தடுமாற - பாரம் பொறுக்கமாட்டாமல் தலை நிலைமாறி வருந்தவும், மூரி நீர் ஆடை - வலிய நீரையுடைய கடலை ஆடையாக உடுத்த, இருநில மடந்தை - பெரிய நிலமகளாகிய பெண் (பூமிதேவி) முதுகு உளுக்குற்றனள் - முதுகு சுளுக்குற்றவளாய், முரல - வாய்விட்டலறவும் (வந்தான்).

பொழிப்பு

இராவணன் தனது கால்களை மாறிமாறி எடுத்து வைக்கும் போதெல்லாம், ஒலிக்கும் கடலாகிய அகழியையுடையதும், திரிகூடமலையில் அமைந்துள்ளதுமாகிய இலங்கை அப்பாரத்தைத் தாங்கமுடியாமல் குழியை அடைந்திடவும், எதிர்த்துத் தாக்குகின்ற கடலின்கண் மடங்கி எழுந்து அடித்து வருகின்ற அலை பாய்ந்து திசைகளிலெல்லாம் எல்லைகடந்து பரவவும், அடைதற்கரிய நஞ்சுப்பற்களையும், பிளந்தவாயையுமுடைய ஆதிசேடன் என்னும் பாம்பும் பாரம் பொறுக்கமாட்டாமல் தலை நிலைமாறி வருந்தவும், பெரிய கடலை ஆடையாக உடுத்த பெரிய நிலமகளாகிய பெண் முதுகு சுளுக்குற்றவளாய் வாய் விட்டுக் கதறவும் வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணன் காலை மாறிமாறி வைத்து நடக்கும்பொழுது நிகழ்ந்த செயல் கூறப்படுகின்றது.

இராவணன் கால்களை மாறிமாறி வைத்து நடக்க அப்பாரத்தைத் தாங்கமாட்டாமல் இலங்கை பள்ளமாகிறதென்றும், இலங்கையைச் சூழ்ந்திருக்கின்ற கருங்கடலின் நீர், இராவணன் மாறிமாறிக் கால்களை எடுத்துவைக்கும் அதிர்ச்சியால் நாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுள்ளே புகுகின்றது என்றும், நிலவுலகைத்தாங்கி நிற்கும் ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடனும் இராவணன் அடியெடுத்து வைத்துச் செல்வதனால் ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல் வருந்துகின்றான் என்றும் கம்பர் வியந்து கூறுகின்றார்.

இங்ஙனம் உடற்பாரம் மிக்க இராவணனின் வலிமையும் வீரமும் அளவிடற்கரியன, என்பதே கம்பரின் கருத்தாகும்; இதனை,

தோடுஉழுத தார் வண்டும் திசையானை
மதம் துதைந்த வண்டும் சுற்றி
மாடுஉழுத நறும் கலவை வயக்களிற்றின்
சிந்தூரத்தை மாறு கொள்ளக்
கோடுஉழுத மார்பேபோல் கொலை உழுத
வடிவேலின் கொற்றம் அஞ்சித்
தாள்தொழுத பகை வேந்தர் முடிஉழுது
தழும்பு இருந்த சரணத்தானை.

எனவரும் செய்யுளில், கம்பர் இராவணனின் உடல் வலிமையையும், பகைவரை வென்று மேம்படும் வீரத்திறனையும். அனுமான் குரலோடுகலந்து பாரார்ட்டி உரைத்தலையும் காண்க, திசையானைகளின் ''கோடுஉழுதமார்பு'' என்பதனால் உடல் வலிமையையும், ''பகைவேந்தர் முடிஉழுது தழும்பிருந்த சரணத்தான்'' என்பதனால் பகைவரைவென்று மேம்பட்டு விளங்கும் ஆண்மையையும் அறிகின்றோம்.

தாடகையினும் வலிய தகையார்

95. கேடகத் தோடு மழுஎழுச் சூல
மங்குசங் கப்பணங் கிடுகோடு
ஆடகச் சுடர்வா ளயில்சிலை குலிச
முதலிய வாயுத மனைத்தும்
தாடகைக் கிரட்டி யெறுழ்வலி தழைத்த
தகைமையர் தடவரை பொறுக்குஞ்
சூடகத் தடக்கைச் சுடுசினத் தடுபோ
ரரக்கியர் தலைதொறுஞ் சுமப்ப.

கொண்டுகூட்டு: தாடகைக்கு இரட்டி எறுழ்வலி தழைத்த தகைமையர், (ஆகிய) தடவரை பொறுக்கும் சூடகத்தடக்கை சுடுசினத்து அடுபோர், அரக்கியர் கேடகத்தோடு மழு, எழு, சூலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குசம், கப்பணம், கிடுகோடு, ஆடகச் சுடர்வாள், அயில், சிலை, குலிசம், முதலிய ஆயுதம் அனைத்தும் தலைதொறும் சுமப்ப.

பொருள்

தாடகைக்கு இரட்டி - தாடகை என்னும் வலிமைமிக்க அரக்கியைக் காட்டிலும் இருமடங்கு மிக்க, எறுழ்வலி தழைத்த - பெரும் வலிமைபடைத்த (பொருந்திய) தகைமையர் - பெருமையை யுடையவர்களும், தடவரை பொறுக்கும் - பெரிய மலைகளையும் தாங்கவல்ல, சூடகத்தடக்கை - வளையல்கள் அணிந்த பெரிய (நீண்ட) கைகளையுடையவர்களும், சுடுசினத்து - நெருப்பைப்போல ஓங்கி எரியும் கொடிய கோபத்தினால், அடுபோர் - (பகைவரை) கொல்லும் கொடிய போரைச் செய்கின்றவர்களும் ஆகிய, அரக்கியர் - அரக்கிமார்கள், கேடகத்தோடு - பரிசை யென்னும் படையுடன், மழு - மழு என்னும் விடையையும், எழு - இருப்புலக்கைகளையும், சூலம் - மூன்று தலைகளைக்கொண்ட சூலப் படைகளையும், அங்குசம் - மரவெட்டிகள், கப்பணம் - இருப்பினால் ஆக்கப்பட்ட இரும்பு நெருஞ்சிமுள் என்னும் படைகள், கிடுகோடு - கிடுகு என்னும் படைகள், ஆடகச்சுடர்வாள் - பொன்னைப் போன்ற ஒளி வீசுகின்ற வாட்படைகள், அயில் - வேற்படைகளையும், சிலை - விற்படைகள், குலிசம் - வச்சிரப் படைகள், ஆயுதம் அனைத்தும் - முதலிய போர்ப்படைக்கலங்கள் யாவற்றையும், தலைதொறும் - தமது தலைகளிலெல்லாம், சுமப்பதானிகிவரவும் (வந்தான்).

பொழிப்பு

தாடகை என்னும் வலிமைமிக்க அரக்கியைக்காட்டிலும், இருமடங்கு மிக்க வலிமையுடையவர்களும், பெரிய மலைகளையும் தாங்கவல்ல கைகளை உடையவர்களும், சினந்தெழுந்து பகைவரைக் கொல்லும் கொடிய போரைச்செய்யும் வல்லவர்களாகிய அரக்கியர்கள் கேடயம், மழு, எழு, சூலம், அங்குசம், கிடுகு, வாள், வேல், வில், வச்சிரம் முதலிய போர்ப்படைக் கலங்கள் யாவற்றையும் தமது தலைகளில் தாங்கிவரவும் வந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் அரக்கர்கோனாகிய இராவணனுக்கு அவன் விரும்பும் படைகளை விரைந்து கொடுத்தற்காகச் சுமந்துகொண்டு அவனைச் சூழ்ந்து வருகின்ற அரக்கியர்களின் ஆண்மை சொல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாதேவிமேற் கொண்ட காமவேட்கையால் அசோக வனத்தை நோக்கிச் செல்கின்ற இராவணன் தான் ஓர் படைக் கலத்தையும் தாங்கிக்கொள்ளாமல் சென்றுளையினும் எண்ணுத வகையில் போராற்றவேண்டிய நெருக்கடி ஏற்படவும் கூடும் என்ற எண்ணத்தினுல் ஆண்மைமிக்க அரக்கியர் தலையில் போர்ப் படைக் கலங்களைத் தாங்கி வரும் வண்ணம் ஆணையிட்டுள்ளான் என்பதே கம்பரின் கருத்தாகும்.

சீதாதேவியிருக்கும் சிறைச்சாலைக்குச் செல்வதினுல் அரக்க வீரர்களை அழைத்துவராமல் ஆண்மைமிக்க அரக்கியர்களை இரா வணன் அழைத்துவந்தான் என்பதை உணர்கின்றோம்.

அங்ஙனம் இராவணனைச் சூழ்ந்து போர்ப்படைக் கலங்களைச் சுமந்துவரும் அரக்கியர்களின் ஆண்மையை

தாடகைக்கு இரட்டி எறுழ்வலி தழைத்த
தகைமையர்,

எனவும்,

தடவரை பொறுக்கும் கூடகத் தடக்கைச்
சுடுசினத்து அடுபோர் அரக்கியர்.

எனவும் கம்பர் பாராட்டி உரைக்கின்றார்.

தாடகை என்பவள் இராவணனின் பாட்டியாவள். இராம பிரான் விசுவாமித்திரரின் வேண்டுகோளின்படி தாடகையைக் கொன்று அவர் ஆற்றிய வேள்வியைக் காத்த வரலாறு பால காண்டத்திலுள்ளது. அத்தாடகையின் வலிமையை விசுவா மித்திரரின் குரலோடு கலந்து கம்பன் கூறுகின்ற கவிதையிற் காணுங்கள்

மண் உருத்து எடுப்பினும் கடலை வாரினும்
விண் உருத்து இடிப்பினும் வேண்டில் செய்கிற்பாள்
என்உருத் தெரிவு அரும் பாவம் ஈண்டி ஓர்
பெண் உருக் கொண்டெனத் திரியும் பெற்றியாள்.

என்பதே அக்கவிதையாகும்.

இத்துணை ஆற்றல்வாய்ந்த தாடகையிலும் இருமடங்கு ஆற்றல் வாய்ந்தவர்கள் இராவணனுடன் செல்லும் அரக்கியர் என்பதை உணரவே நெஞ்சம் நடுங்குகின்றது. இன்னும் இவர் களின் வலிமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழங்கும் பந்துங் குன்று கொடாடுங் கரமோச்சித்
தழங்குஞ் செந்தீச் சிந்த வடித்தா டகைவில்லாள்.

எனவரும் ஊர்தேடு படலச் செய்யுளாலும் அறிக.

ஒருமணி நேடும் பலதலை அரவம்

96. விரிதளிர் முகைபூக் கொம்படை முதல்வேர்
பழமிவை மணிபொனுல் வேய்ந்த
தருவுயர் சோலை திசைதொறுங் கரிய
தழலுமி முயிர்ப்புமுன் றவழத்
திருமக ளிருந்த திசையறிந் திருந்துந்
திகைப்புறு சிந்தையாற் கெடுத்த
ஒருமணி நேடும் பஃறலை யரவி
னுழைதொறு முழைதொறு முலாவி.

கொண்டுகூட்டு: தழல் உமிழ் உயிர்ப்பு முன் தவழ (முன் தவழ்ந்து செல்லுவதால்), விரிதளிர், முகை, பூ, கொம்பு, அடை, முதல், வேர், பழம் இவை, மணி பொனுல் வேய்ந்த தருவுயர் சோலை, திசைதொறும் கரிய, திருமகள் இருந்த திசை அறிந்திருந்தும், திகைப்புறு சிந்தையால் கெடுத்தது, ஒரு மணி(யை) நேடும், பஃறலை அரவின், உழைதொறும், உழை தொறும் உலாவி (வந்தான்).

பொருள்

தழல் உமிழ் - (சீதாதேவியின் மேற்கொண்ட விரக வேதனை என்னும் காமமிகுதியால்) வெம்மையைக் கக்குகின்ற (நெருப்புச் சுவாலையை வீசுகின்ற), உயிர்ப்பு - பெருமூச்சானது, முன்தவழ - (இராவணன் சோலையை அடைதற்கு) முன்னதாகவே செல்ல, விரிதளிர் - புதிது புதிதாகத் தோன்றி விரிகின்ற தளிர்களும், முகை - அரும்புகளும், பூ - மலர்களும், கொம்பு - கிளைகளும், அடை - இலைகளும், முதல் - அடிமரமும், வேர் - வேர்களும், பழம் - பழங்களும், இவை - என்னும் இவைகளையெல்லாம், மணி - இரத்தினங்களினுலும், பொனுல் - பொன்னினுலும், வேய்ந்த - செய்து அமைத்துள்ள, தருவுயர்சோலை - மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள அசோக வனம் என்னும் சோலையானது, திசைதொறும் - (இராவணன்) நோக்குகின்ற திசைதோறும், கரிய - தீய்ந்து போகவும், திருமகள் இருந்த - திருமகளின் (இலக்குமியின்) அவதாரமாகிய சீதாதேவி இருந்த (சிறை இருந்த), திசை அறிந்திருந்தும் - இடத்தை நன்முகத் தெரிந்திருந்தும், திகைப்புறு சிந்தையால் - (காமமயக்க மிகுதியால்) அறிய முடியாமல் மயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் அடைகின்ற மனத்தை உடையவனுய் (மயங்கிய மனத்தினுல்), கெடுத்தது ஒருமணி - தன்னுல் தவற விடப்பட்ட ஒப்பற்ற மாணிக்கத்தை (நாகரத்தினத்தை), நேடும் - தேடித்திரிகின்ற, பஃறலை அரவின் - பலதலைகளைக்கொண்ட ஓர் (நாக) பாம்பினைப் போல, உழைதொறும் - ஒவ்வோரிடத்தும், உழைதொறும் - ஒவ்வோரிடத்துப், உலாவி - சென்று சென்று தேடுகின்றவனுய் (வந்தான்).

பொழிப்பு

விரகவேதனை என்னும் காம மிகுதியால் இராவணன் விடுகின்ற நெருப்புச்சுவாலை போன்ற பெருமூச்சானது, அவன் சோலையை அடைதற்கு முன்னதாகவே சென்று சேர்தலால், புதிது புதிதாக விரிகின்ற தளிர்களும், அரும்புகளும், மலர்களும், கிளைகளும், இலைகளும், அடிமரமும், வேர்களும், பழங்களும் என்னும் இவைகளையெல்லாம் பொன்னினுலும், மணிகளினுலும் செய்தமைத்துள்ள அசோகவனம் என்னும் சோலையானது பார்த்த திசைகளெல்லாம் தீய்ந்து போகவும், சீதாதேவி சிறையிருந்த இடத்தை நன்கு தெரிந்திருந்தும் மனமயக்கத்தால் மறந்து அசோகவனத்தில், ஒவ்வோர் இடமும் சென்று சென்று ஒப்பற்ற தன் நாகரத்தினத்தை இழந்து தேடித்திரிகின்ற பல தலைகளையுடைய ஓர் நாகபாம்பைப் போலச் சீதாதேவி இருக்கும் இடத்தை ஒவ்வோர் இடத்திலும் சென்று சென்று தேடுகின்றவனுய் இராவணன் வந்தான என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் சீதாதேவியின்மேல் இராவணன் கொண்ட காமவேட்கை என்னும் விரக வேதனையால் அவன் விடுகின்ற பெருமூச்சின் தன்மையும், மனமயக்கமும் சொல்லப்படுகின்றன.

சீதாதேவியைச் சிறைவைத்திருக்கும் அசோக வனம் பொன்னுலும், மணியினுலும் செய்யப்பட்ட தளிர், முகை, பூ, கிளை, முதல், வேர், பழம் என்பவற்றை உடையதாய்ப் பொலிகின்றது என்பதை, கம்பர் மிக ஆராய்மையோடு அறிவிக்கின்ருர்.

விரிதளிர் முகை பூ கொம்பு அடை முதல் வேர்
பழம் இவை மணி பொனுல் வேய்ந்த
தருவுயர் சோலை

எனக் கம்பர் அப்படியே சோலையை எமது கண்முன் கொண்டு வந்து காட்டுகின்ருர்.

இங்ஙனம் சோலைகளிலுள்ள தளிர், பூ, மரம், கிளை முதலியவற்றையெல்லாம் பொன்னினுலும், மணியினுலும் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமைத்து, அவற்றின்கண் இயல்பான மரங்களைப்போலவே தேன், மணம் முதலியனவும் தங்கும்படி செய்யும் திறமைப்பாடு உண்டென்பதை

வானும் நிலனும் பெறுமாறினி மற்றுமுண்டோ
கானும் பொழிலு மிவைசெங்கன கத்திலுலும்
ஏனும் மணியாலு மியற்றிய வேனும்யாவும்
தேனும் மலருங் கனியுந்தரச் செய்த செய்கை

எனவரும் ஊர்தேடு படலச் செய்யுளால் உணர்க:

இத்துணைச் சிறப்புவாய்ந்த அச்சோலை தீய்ந்து போகும் வண்ணம், இராவணனுடைய பெருமூச்சின்கண் நின்றெழும் நெருப்புச் சுடுகின்றதென்பதைக் கம்பர் மிகக் கவலையுடன் கூறுகின்றார்:

தருவுயர் சோலை திசைதொறும் கரியத்
தழல்உமிழ் உயிர்ப்புமுன் தவழ

என்பதே கம்பரின் கவிதைக்குரல்:

இங்ஙனம் இராவணன் சீதாதேவியின் மேற்கொண்ட விரக வேதனையால் எழுந்த பெருமூச்சுத் தீயினால், அசோகவனத்தை அடுத்துள்ள சோலை கரிந்துபோதலே அன்றி, இராவணனின் தவமும், ஆண்மையும், இந்திரப் பெரும்பதமும், குலமும் சீதா தேவியின் கற்பினால் கரிந்து போகுங்காலம் கிட்டிவிட்டதென் பதே கம்பரின் கருத்தாகும்: பின்னர் அனுமானால் இலங்கை எரியூட்டப்படுகின்ற செயலையும் கம்பர் குறிப்பாக நினைவூட்டு கின்றார்:

கோனகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி எனும்பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்தது, அல்லதோர்
வானரம் சுட்டது என்றுணர்தல் வாய்மையோ

என மந்திரப்படலத்தில் வீடணன் விளம்பியதையும் நோக்குக.

இவ்வகை முறையற்ற காமவேட்கையாற் தாக்குண்டு செல் லும் இராவணன், சீதாதேவி சிறையிருக்கும் இடத்தை முன் னறிந்திருந்தும் அறியாதான்போல், மனமயக்கத்தால் மறந்து தேடுகின்ற செயலைக் கம்பர் சிறந்த உவமானங்காட்டி விளக்கு கின்றார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் இருந்த திசையறிந் திருந்தும்
திகைப்புறு சிந்தையாற் கெடுத்த
ஒருமணி நேடும் பல்தலை அரவின்
உழைதொறும் உழைதொறும் உலாவி.

எனவரும் கவிதைப்பகுதியை நோக்குக.

இதில், பல்தலை அரவம்-உவமானம். (பத்துத்தலைகளையுடைய) இராவணன் - உவமேயம்; பல தலைகளை உடைமையும், கொடுமையும், கண்டோர்க்கு அச்சம் விளைத்தலும் தேடித்திரிதலும் - பொதுத் தன்மைகளாகும்;

ஒருமணி (ஒப்பற்ற நாகரத்தினம்) உவமானம். சீதாதேவி - உவமேயம். அழகும், அடைதற்கருமையும் - பொதுத்தன்மைகளாகும்;

பல தலைகளை உடைய பாம்பொன்று, தான் இழந்த மணியைத் தேடுவதுபோல, இராவணன் சீதாதேவியைத் தேடினான் என்பதாம்; மணியை இழந்த பாம்பு மணியைப் பெறுதுவிட்டால் இறந்து படுதல்போலச் சீதாதேவியை அடையப் பெறுதவனும், இராவணனும் இறந்துபடுவான் என்பதாம்.

பல்+தலை பஃறலை எனப் புணர்ந்தது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 அன்னை சீதாதேவி இருக்கும் இடத்தை அடைந்த அரக்கர்கோனை அஞ்சனை சிறுவன் காணல்

[97 — 100 செய்யுள்]

சீதாதேவியைக் கண்டுவிட்டேன் என்னும் உணர்ச்சியால் உவகைத்தேன் உண்டுகொண்டிருக்கும் ஒப்பில்லாத தன்மை வாய்ந்தவனும், அஞ்சனையின் மைந்தனுமாகிய அனுமான் அசோகவனத்தின் அண்மையில் வந்த, அரக்கர்கோனைக் கண்டான். கண்ட அனுமான், அவனின் செயலையும், அச்செயலை முற்றுவிக்க அவன் மேற்கொள்ளும் சூழ்ச்சிகளையும், அச்சூழ்ச்சிகளால் விளையும் பயனையும், அறிதற்கு நல்ல அமையம் இதுதான் என்று, எண்ணினான். இங்ஙனம் எண்ணிய அனுமான் முன்னையிலும் நெருங்கிவந்து இராமபிரானுடைய திருநாமத்தைச் சொல்லித் துதித்தவண்ணம், மரக்கிளைகளுள் மறைந்திருந்தான்.

அப்பொழுது அரக்கர்கோனுகிய இராவணனுடன் வந்த தேவமாதர்களும், மற்றைய மாதர்களும் அவனைவிட்டு நீங்கி அப்பால் அகன்று சென்றுவிட்டார்கள். அவன், பெண்களின் விளக்குப் போன்ற சீதாதேவியார் இருந்த இடத்தைச் சேர்ந்தான். அவனைக் கண்ட சீதாதேவி அஞ்சி உயிர்போனவளைப் போல நடுநடுங்கினாள். ஆவிபதறினாள். கொல்லும் கொடியபுலி தன்னைத் தின்ன வருதலைக்கண்டு, கலையை நீங்கிய இளம் பெண்மான் கலங்குவதைப் போலக் கலங்கினாள்.

இங்ஙனம் தன் கற்பிற்கு, ஏதும் ஏதம் இழைப்பானை, என்ற எண்ணந்தினால், அச்சத்திற்குள்ளாகி, உயிர் குலைகின்ற சீதாதேவியையும், சீதாதேவிமேற் கொண்ட காமவேட்கையால், உயிர்க்குப் பற்றுக்கோடாயுள்ள உடல் மெலிந்து, வருந்துகின்ற வலிய இராவணனையும், குற்றமில்லாத தனது கண்களாற் கண்ட அனுமான் தடுமாற்றம் நீங்கி உள்ளந் தழைத்தான்.

அன்னை சீதாதேவி வாழ்வாளாக! அருள்வள்ளலாகிய இராமபிரான் வாழ்வானாக! மறைகள் நான்கும் வாழ்வதாக! மறைவல்ல அந்தணர்கள் வாழ்வாராக! நல்லறங்கள் வாழ்வனவாக! என்றெல்லாம் வாழ்த்தி வாழ்த்தி மகிழ்ந்தான், மகிழ்ந்த அனுமானுடன் கலந்து மகிழ்ந்த கம்பர் ஊழிதோறும் உயர்வுறுஞ் சீர்த்தியான் என, அனுமானை வாழ்த்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சனை சிறுவன்

97. இனையதோர் தன்மை யெறுழ்வலி யரக்க
ரேந்தல்வந் தெய்து கின்றனை
அனையதோர் தன்மை யஞ்சனை சிறுவன்
கண்டன னமைவுற நோக்கி
வினையமுஞ் செயலு மேல்விளை பொருளு
மிவ்வழி விளங்குமென் றெண்ணி
வனைகழ லிராமன் பெரும்பெய ரோதி
யிருந்தனன் வந்தயன் மறைந்தே

கொண்டுகூட்டு: அனையது ஓர்தன்மை, அஞ்சனை சிறுவன் (ஆகிய அனுமான்) வந்து எய்துகின்றனை இனையது ஓர் தன்மை, (தன்மை பொருந்திய) எறுழ்வலி அரக்கர் ஏந்தல், கண்டனன் (கண்டு) அமைவுற நோக்கி, (அவ்விராவணனின்) செயலும், வினையமும், மேல்விளை பொருளும், இவ்வழி விளங்கும், என்று எண்ணி, அயல் வந்து, வனைகழல் இராமன் பெரும்பெயர் ஓதி மறைந்து இருந்தனன்

பொருள்

அனையது ஓர் தன்மை - (சீதாதேவியைத் தேடிக் கண்டுவிட்ட மகிழ்ச்சியோடு இருக்கின்ற) அப்படிப் பட்ட ஒப்பற்ற இயல்பினை உடையவனுகிய, அஞ்சனை சிறுவன் - அஞ்சனைதேவியின் மைந்தனுகிய அனுமான், வந்து எய்துகின்றனை - சீதாதேவி இருக்கும் இடத்தைத் தேடி (அசோகவனத்தின் அண்மையில்) அடைகின்ற வனை, இனையதோர் தன்மை - (சீதாதேவியின் மேற்கொண்ட காம வேட்கையால் வருகின்ற) இப்படிப்பட்ட ஒப்பற்ற இயல்பை உடையவனும், எறுழ்வலி - மிகுந்த வல்லமையை உடையவனுமாகிய, அரக்கர் ஏந்தல்-அரக்கர்களின் அரசனுகிய இராவணனை, கண்டனன்-கண்டு, அமைவுற நோக்கி-பொருத்தமாக ஆராய்ந்து பார்த்து, செயலும் - (இராவணனுடைய) செயலும், வினையமும் - (செயலை முற்றுவிக்க) அவன் மேற்கொள்ளும் உபாயமும், மேல் விளைபொருளும் - (அந்த உபாயத்தினுல் அவனுக்கு) மேல் விளையும் (உண்டாகும்) பயனும், இவ்வழி - இவ்விடத்து (இப் பொழுது) விளங்கும் - தெரியவரும், என்று எண்ணி - என்று நினைந்து, அயல் வந்து - (தான் முன் இருந்த இடத்தில் நின்று சிறிது அப்பால்) நெருங்கி வந்து, (கிட்ட வந்து), வனைகழல் - அழகாகச் செய்யப்பட்ட வீரக்கழலை அணிந்துள்ள, இராமன் - இராமபிரானுடைய, பெரும் பெயர் - எழுத்தளவாற் சிறிய தாயினும் ஓதுவார்க்குப் பயனளித்தலிற் பெரியதாகிய அத் திருநாமத்தை, ஓதி - சொல்லித் துதித்துக் கொண்டு, மறைந்து-ஒருவரும் தான் இருப்பதை அறியாத வண்ணம் ஒளித்து, இருந்தனன் - இருந்தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

அப்படிப்பட்ட ஒப்பில்லாத தன்மையைப் பொருந்தியவனும் அஞ்சனையின் மைந்தனுமாகிய அனுமான், அசோகவனத்தின் அண்மையில் அடைகின்றவனும், மிகுந்த வலிமையையுடைய வனுமாகிய இராவணனைக் கண்டு, அவனுடைய செயலும், அதனை முற்றுவிக்க அவன் மேற்கொள்ளும் உபாயமும், அதனால் மேல்விளையும் பயனும் இப்பொழுது தெரியவரும் என்று நினைந்து, முன்னையிலும் நெருங்கிவந்து இராமபிரானுடைய பெயரைச் சொல்லித் துதித்துக்கொண்டு தன்னை ஒருவரும் காணுதவண்ணம் ஒளித்திருந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியைத் தேடியவண்ணம் மனமயக்கம் கொண்டவனுய் அசோகவனத்தின் அண்மையில் வந்த இராவணனை அனுமான் கண்ட நிகழ்ச்சி கூறப்படுகின்றது.

அஞ்சனைதேவியின் மைந்தனுகிய அனுமான், அரக்கர்கோன் அசோகவனத்தை அடைவதைக் கண்டதும் மிகச் சிந்தனைக்குள் ளானுன்.

> வினையமும் செயலும் மேல்விளை பொருளும்
> இவ்வழி விளங்கும்.

என அனுமானின் சிந்தனையைக் கம்பர் அப்படியே எமது சிந் தனைக்குத் தருகின்றூர். இராவணனின் செயல்களையும், அவன் அச்செயல்களை முற்றுவிக்க எடுத்துக்கொள்ளும் சூழ்ச்சிகளையும், அவற்றினுல் அவன் அடையப்போகும் பயனையும் இப்பொழுது இருந்து காண்பதே ஏற்ற செயலாகுமென அனுமான் எண்ணி விட்டான். அங்ஙனம் எண்ணிய அனுமான் தன்னுடைய எண்ணம் இடையூறின்றி இனிது நிறைவேறும் பொருட்டு இராமபிரானின் திருநாமத்தைச் சொல்லித் துதிக்கின்றுன்.

> வினைகழல் இராமன் பெரும் பெயர் ஒதி இருந்தனன்
> வந்து அயல் மறைந்தே.

என அனுமானுடன் கலந்த கம்பரும் இராமபிரானின் திரு நாமத்தைச் சொல்லித் துதிக்கின்றூர்.

தன்னை அடைந்தாரைப் பாதுகாத்து அருள் செய்தலையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்கு ஏற்படும் தடைகளை ஒழித் துச் செயலாற்றும் உறுதியோடு அதற்கு அடையாளமாக வீரக் கழலை அணிந்துள்ள இராமபிரானின் திருநாமத்தை ஓதிய வண்ணம் இருக்கும் அனுமான், அசோகவனத்தில் புகுகின்ற இராவணனை நோக்கியவண்ணம் இருந்தான் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாமம் எழுத்து வடிவிற் சிறியதாயினும் அன்போடு ஓதுகின்றவர்க்கு பெரும்பேறுகளை அளித்தருளலால் பெரும் பெயர் எனக் கூறினர்.

அரும்பெறன் மரபில் பெரும் பெயர் முருக.

எனத் திருமுருகாற்றுப்படையில் வருதலையும் நோக்குக.

செயலும் வினையமும் மேல்விளை பொருளும்.

என்னும் தொடருக்கு அனுமான் தான் மேற்கொள்ளவேண்டிய செயலும், அதை முற்றுவிக்கும் உபாயமும், அதனால் பின் விளையும் பயனும் எனவும்,

அச்சொற்றொடரை வினையமும் செயலும் மேல்விளை பொருளும் என நின்றபடியே வைத்துச் சீதாதேவியின் அடக்கமும், ஒழுக்கமும் அவற்றால் பின் விளையும் பயனும் எனவும் உரை கூறுவாரும் உளர்.

சினப்புலியும் கலைப்பிணையும்

98. ஆயிடை யரக்க னரம்பையர் குழுவு
மல்லவும் வேறய லகல
மேயினன் பெண்ணின் விளக்கெனுந் தகையா
ளிருந்துழி யாண்டவள் வெருவிப்
போயின வுயிர ளாமென நடுங்கிப்
பொறிவரி யெறுழ்வலிப் புகைக்கண்
காய்சின வுழுவை தின்னிய வந்த
கலையிளம் பிணையெனக் கரைந்தாள்.

கொண்டுகூட்டு: அரக்கன் ஆயிடை அரம்பையர் குழுவும், அல்லவும் வேறு அயல் அகல, அரக்கன் பெண்ணின் விளக்கெனும் தகையாள் இருந்துழி மேயினன், அவள் ஆண்டு வெருவி போயின உயிரளாம் என நடுங்கி பொறிவரி எறுழ்வலி, புகைக்கண் காய்சின உழுவை தின்னிய வந்த (காண்ட) கலை இளம் பிணை எனக் கரைந்தாள்.

பொருள்:

ஆயிடை - அப்பொழுது, அரம்பையர் குழுவும் - தேவமாதர்களின் கூட்டமும், அல்லவும் - அவர்களல்லாத மற்றப் பெண்களும், வேறு அயல் அகல - வேறுக அப்பால் விலகிச் சென்று விட, அரக்கன் - அரக்கர்கோனாகிய இராவணன், பெண்ணின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கெனும் - பெண்களுக்குள் விளக்குப் போன்றவளென்று சொல்லத்தகும், தகையாள் - பெருமையை உடையவளாகிய சீதாதேவி, இருந்துழி - இருந்த இடத்தினை (சிறைச்சாலையை) மேயினன் - சென்றடைந்தான், அவள் - அச்சீதாதேவியானவள், ஆண்டு - அப்பொழுது (அவனைக் கண்டு) வெருவி - அஞ்சி, போயின உயிரளாம் என - உயிர் நீங்கினவளைப்போல, நடுங்கி - நடுக்கம் கொண்டு, பொறிவரி - புள்ளியுள்ள கோடுகளையும், எறுழ்வலி - மிக்க வலியினையும், புகைக்கண் - புகைதோன்றும் கண்களையும், காய்சின - வருத்துகின்ற கொடுஞ்சினத்தையும் (கோபத்தையும்) உடைய, உழுவை - புலி, தினவிய - தின்னும் பொருட்டு, வந்த - வரப்பெற்ற, கலையிளம் - ஆண் மானைவிட்டுப் பிரிந்த இளமையான, பிணைஎன - பெண் மானினைப்போல, கரைந்தான் - உடல் உருகினாள்.

பொழிப்பு

அப்பொழுது தேவமாதர்களின் கூட்டமும், மற்றைய மாதர்களும் வேறுக அப்பால் விலகிச் சென்றுவிட, அரக்கர் கோனுகிய இராவணன், பெண்களுக்குள் விளக்குப் போன்ற வளும், பெருமையுடையவளுமாகிய சீதாதேவி இருந்த இடத்தினை அடைந்தான். அவனைக்கண்ட சீதாதேவியானவள் அஞ்சி உயிர் போனவளைப் போல நடுநடுங்கி மிக்க வலியினையும் சினத்தையுமுடைய புலியானது தன்னைத் தின்ன வருதலைக்கண்ட ஆண்மானை விட்டுப்பிரிந்த இளம் பெண்மானைப் போல உடல் உருகினாள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் அரக்கர்கோனுகிய இராவணன் தான் இருந்த இடத்தை அடைந்து நிற்பதைக்கண்ட சீதாதேவியின் அல்லலைச் சொல்லுகின்ற கம்பரின் குரலைக் கேட்கின்றோம்.

கலைமானைப் பிரிந்து அதனையே எண்ணி யெண்ணி வருந்து கின்ற இளம் பெண்மானின் முன், கொல்லும் கொடியபுலி வந்து நின்றால் அப்பெண்மான் என்னென்ன வகையில் அஞ்சி நடுங்கி ஆவிபதறி அல்லலுறுமோ அத்தகைய அல்லல் நிலையை இராவணனைக் கண்ட சீதாதேவியும் எய்தி வருந்துகின்றாளைச் சொல்லி வருந்துகின்ற கம்பரின் புலமை போற்றத்தக்கதாகும்.

ஆண்டு அவள் வெருவி போயின உயிரளாம் என நடுங்கி

என்ற தொடரில் அச்சங் கொள்கின்ற சீதையின் நிலையை அப்படியே கம்பர் படம்பிடித்துக் காட்டுகின்றார். இங்ஙனம் அஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்கி இருக்கின்ற நிலையில் சீதையை எமக்குக் காட்டிய கம்பர் நெஞ்சம் அழிந்த நிலையில் நின்று

பொறிவரி எறுழ்வலி புகைக்கண்
காய்சின உழுவை தின்னிய வந்த
கலைஇளம் பிணையெனக் கரைந்தாள்

எனக் கொல்லும் கொடிய புலியைப் படைத்து அதற்குத் இன்னும் இரையாக கலை இளம் பிணையையும் படைத்துக் கொடுக்கின்றார். இதில் புலியின் தோற்றத்தைப் பற்றிக் கம்பர் கூறியுள்ள கவிதைத் தொடரைப் படிக்கும் பொழுதே நெஞ்சம் அஞ்சுகின்றது. பொறிவரி உழுவை எறுழ்வலி உழுவை புகைக்கண் உழுவை காய்சின உழுவை என்றெல்லாம் (புலியை) உழுவையை ஒலி வடிவில் புனைந்து காட்டியுள்ளார்.

இத்தகைய கொடும்புலிக்கு முன், தன்னைப்பிரிந்த அன்புக் கலையை எண்ணிய வண்ணம் ஆவி துடிக்கின்ற இளம் பிணைமான் நிலையை எண்ண எண்ண எங்கள் உள்ளம் உருகுகின்றது.

காய்சின உழுவை (புலி) - உவமானம். இராவணன் - உவமேயம். அஞ்சத்தக்க உருவமும், வலிமையும், கொல்லும் கொடிய குணமும் - பொதுத் தன்மைகளாகும்.

கலையைப் பிரிந்த பெண் இளம்மான் - உவமானம். இராமபிரானைப் பிரிந்த சீதாதேவி - உவமேயம். அழகும், மென்மையும், அஞ்சி நடுங்கலும் - பொதுத் தன்மைகளாகும்.

எனவே, கொல்லும் கொடிய குணமுடைய புலிக்கு முன் அகப்பட்டு நிற்கின்ற இளம் பெண்மானைப் போலக் கொடிய பகுகிய இராவணனைக் கண்ட சீதாதேவி அஞ்சி நடுங்கினாள் என்பதாம்.

சீதாதேவியின் கற்பு மேம்பாட்டால் பெண்குலம் உயர்ந்து விட்டது என்பதை உணர்த்த விரும்பிய கம்பர்,

பெண்ணின் விளக்கெனும் தகையாள்

எனச் சீதாதேவியைப் போற்றுகின்றார். இதனை,

சோகத்தாள் ஆயநங்கை கற்பினால் தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவிமாரும் வான் சிறப்பு உற்றார்

எனவரும் திருவடி தொழுத படலச் செய்யுளுடன் ஒப்பிட்டு நோக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையைப் பிரிந்த மான் இளம்பிணை அக்கலையையே எண்ணி யெண்ணி வருந்துவதுபோலச் சீதாதேவி, என்றும் இராமபிரானையே எண்ணிய வண்ணமாகவே இருந்தாள் என்பதாம். இதனை,

கண்ணினும் உளநீ தையல் கருத்தினும் உளநீ

என அனுமான் இராமபிரானிடம் கூறுகின்றமையால் உணர்க.

கண்டனன்

99. கூசி யாவி குலைவுறு வாளையும்
ஆசை யாலுயி ராசழி வானையும்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்
ஊச லாட லொழிந்த உளத்தினன்

கொண்டுகூட்டு: கூசி ஆவி குலைவுறு வாளையும், ஆசையால் உயிர் ஆசு அழிவானையும், காசில் கண் இணை சான்று எனக் கண்டனன், (கண்டவனுகிய அனுமான்) ஊசலாடல் ஒழிந்த உளத்தினன்.

பொருள்

கூசி - (தன் கற்புக்கு ஏதும் ஏதம் இழைப்பானே என்ற எண்ணத்தினால்) அச்சத்திற்குள்ளாகி, ஆவி குலைவுறு வாளையும்- உயிர் குலைகின்ற நிலையிலிருக்கும் சீதாதேவியையும், ஆசையால்- சீதாதேவியின்மேற் கொண்ட காமவேட்கையால், உயிர் ஆசு அழிவானையும் - உயிருக்குப் பற்றுக்கோடாய் விளங்கும் உடல் மெலிகின்றவனுகிய இராவணனையும், காசில் கண்இணை - குற்றமில்லாத தனது கண்களே (இரண்டு கண்களுமே) சான்றெனசாட்சியாகும்படி, கண்டனன் - கண்டவனுகிய அனுமான், ஊசலாடல் ஒழிந்த தடுமாற்றம் நீங்கிய, உளத்தினன் - உள்ளத்தை உடையவனுய் (அடுத்த செய்யுளில் வரும் வாழ்த்தினன் என்பதோடு சேர்த்து முடித்துக்கொள்க).

பொழிப்பு

தன் கற்பிற்கு ஏதும் ஏதம் இழைப்பானே? என்ற எண்ணத்தினால் அச்சத்திற்குள்ளாகி உயிர் குலைகின்ற சீதாதேவியையும், சீதாதேவியின் மேற்கொண்ட காதல் வேட்கையால், உயிருக்குரிய பற்றுக்கோடாய் விளங்கும் உடல் மெலிகின்றவனுகிய இராவணனையும், குற்றமில்லாத தனது கண்களால் கண்டவனுகிய அனுமான் தடுமாற்றம் நீங்கிய உள்ளத்தை உடையவனுனன் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச்செய்யுளில் கம்பர் தனது காவிய உலகத்தில் இடம் பெற்றுள்ள மூன்று பாத்திரங்களின் உள்ளத்துடிப்பையும், ஒரே நேரத்தில் எடுத்துரைக்கின்ற எழுச்சிக்குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவி அச்சத்தினால் அஞ்சி நடுங்கி ஆவி குலைகின்ற நிலையிலும், இராவணன் நெஞ்சில் நிறைந்த ஆசையால் அலைக்கப்பட்டு உடல்வாடிய நிலையிலும், அனுமான் ஐயம் நீங்கித் தெளிந்த நிலையிலும் எமக்குக் காட்சியளிக்கிறார்கள்.

இக்காட்சியை எமது நெஞ்சத்திரையில் நிழற்படம்போல கம்பர் பதிய வைக்கின்றார்.

கூசி ஆவி குலைவுறு வாளையும்
ஆசையால் உயிர் ஆசழி வாளையும்
காசில் கண்இணைச் சான்றெனக் கண்டனன்.

எனவரும் இக்கவிதைத் தொடர்களில் அனுமானைச் சான்றாக வைத்து அன்னை சீதாதேவியின் அரிய கற்பொழுக்கத்தின் மாண்பைக் கம்பர் எமக்குக் கூறுகின்றார். முன்னர்,

"காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும்
ஏசுண்டது இல்லை"

எனத்துணிந்த அனுமான், இராவணன் வருதலைக் கண்டவுடன் சீதாதேவியாரைக் கொன்றுவிடுவானே என்று எண்ணினான். அந்நினைவே அவனின் உள்ளம் ஊசலாடத் தொடங்கியது. சீதாதேவியை இராவணன் கொல்லாத வண்ணம், என்ன செய்யலாம் என்றெல்லாம் வருந்திய அனுமான், அச்சத்தினால் ஆவிகுலைந்து நடுங்குகின்ற சீதாதேவியையும், ஆசையினால் உடல்நலம் அழிந்து வருந்துகின்ற இராவணனையும் கண்டவுடன் மனம் ஒரு நிலைப்பட்டுவிட்டான். சீதாதேவி இராவணனைக்கண்டு அஞ்சினாலும் இராவணன் சீதாதேவியை அடையவேண்டுமென்ற ஆசையால் உடல் வாடி உலைகின்ற நிலையில் இருப்பதால் அவன் அன்னை சீதாதேவியை ஒருபோதும் கொல்லமாட்டான் என்ற உண்மையை அனுமான் உணர்ந்து விட்டான். இதனைக் கம்பர்,

ஊசல் ஆடல் ஒழிந்த உளத்தினன்.

என்னுந் தொடரால் உறுதிப்படுத்தி உரைத்தல் காண்க.

கண்டான் உளத்தினன் என்பன முற்றெச்சங்கள்; ஊசல் - கூடுமாற்றம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி சானகி

100. வாழி சானகி வாழியி ராகவன்
வாழி நான்மறை வாழிய ரந்தணர்
வாழி நல்லற மென்றென்று வாழ்த்தினன்
ஊழி தோறு முயர்வுறுங் கீர்த்தியான்.

கொண்டுகூட்டு: சானகி வாழி! இராகவன் வாழி! நான்மறை வாழி! அந்தணர் வாழியர்! நல்லறம் வாழி! என்று என்று ஊழி தோறும் உயர்வுறும் கீர்த்தியான் வாழ்த்தினன்.

பொருள்

சானகி வாழி-சீதாதேவி வாழ்வாளாக, இராகவன் வாழி-இராமபிரான் வாழ்வானாக, நான்மறை வாழி-(இராமபிரானால் நிலை நிறுத்தப்பெறும்) நான்கு வேதங்களும் வாழ்வனவாக, அந்தணர் வாழியர்-(வேதநெறியைப் போற்றி உலகில் நிலை பெறச் செய்கின்ற) அந்தணர்கள் (பிராமணர்கள்) வாழ்வாராக, நல்லறம் வாழி-வேதங்களால் போற்றி உரைக்கப்படும் நல்ல தருமங்கள் வாழ்வனவாக, என்று என்று-என்றெல்லாம் சொல்லிச் சொல்லி, ஊழி தோறும்-ஒவ்வொரு ஊழிகளிலும், (யுகங்களிலும்) உயர்வுறும்-மேலும் மேலும் சிறந்து விளங்குகின்ற, கீர்த்தியான்-புகழைப் படைத்தவனான அனுமான், வாழ்த்தினன்-நிறைந்த பெரு மகிழ்ச்சியுடன் வாழ்த்தினான்.

பொழிப்பு

சீதாதேவி வாழ்வாளாக. இராமபிரான் வாழ்வானாக: நான்கு வேதங்களும் வாழ்வனவாக. அந்தணர்கள் வாழ்வார்களாக. நல்ல தருமங்கள் வாழ்வனவாக என்று சொல்லிச் சொல்லி ஒவ்வொரு ஊழியிலும் புதிது புதிதாகச் சிறந்து ஓங்கும் புகழைப் படைத்தவனாகிய அனுமான் நிறைந்த பெரு மகிழ்ச்சியுடன் வாழ்த்தினன் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில், அன்னை சீதாதேவியின் ஆவியைப் போக்கும் உள்ளம் இராவணனுக்கில்லை யென்பதை உணர்ந்த அனுமான் எல்லையில்லாத உவகைப்பெருக்கினால் வாழ்த்துகின்ற குரலைக் கேட்கின்றோம்.

இராம நாமத்திற்கே முதலிடம் கொடுத்து வாழ்த்தி மகிழ்கின்ற அனுமான், இப்பொழுது சீதாதேவி என்னும் திருநாமத்திற்கே முதலிடம் கொடுக்கத் தொடங்கிவிட்டான்; சீதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் வாழ்வே இராமபிரானின் வாழ்வு என்பதைத் தெளிந்து விட்டான். எனவே, சீதாதேவியின் வாழ்வு இராமபிரானின் வாழ்வு. இராமபிரானின் வாழ்வு உலகத்தின் வாழ்வு. உலகம் வாழவே வேதங்களும், வேதநெறியைப் போற்றிப் புரக்கும் அந்தணர்களும் சிறந்து வாழ்வார்கள் என்பது அனுமானின் கருத்தாகும்.

இங்ஙனம் அன்னை சீதாதேவியையும் அருள் வள்ளலாகிய இராமபிரானையும், அருமறைகளையும், அந்தணர்களையும், அறத்தையும் வாழ்த்திய அனுமானை

ஊழிதோறும் உயர்வுறும் கீர்த்தியான்

எனக் கம்பர் வாழ்த்துகின்றார்.

அனுமானின் வாழ்த்தினால் உலகமெல்லாம் வழிவழியாக நிலைபெற்று வாழும். அங்ஙனம் உலகம் நிலைபெற்று வாழவே அனுமானின் புகழும் அவ்வுலகம் நிலைபெறுகின்ற ஊழிகள் தோறும் நின்று வாழும் என்பது கம்பர் கருத்தாகும்.

அறம் அழிவில்லாமல் என்றும் வாழவேண்டுமென்பதே அனுமானின் பெரு வேட்கையாகும். அறம் வாழுமளவும் அறத்தின் தலைவனாகிய இராமபிரானின், அன்பிற்குரிய அனுமானின் புகழும் வாழும் என்பதாம். என்றென்று வாழ்த்தினான் எனவரும் அடுக்கு, அனுமானின் ஆர்வத்தைக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இலங்கை வேந்தனாகிய இராவணன் சீதாதேவியை இரந்து வேண்டல்

[101 — 114 செய்யுள்]

இலங்கை வேந்தனாகிய இராவணன் சீதாதேவி இருக்கும் இடத்தை எய்தினான். கொல்லுங் கொடிய நஞ்சை அமுத மென்று எண்ணிக் குடிக்க முயல்கின்றவர் போலச் சீதாதேவியை விரும்புகின்ற இராவணன், அவளை நோக்கிக் குயிலே! என்னைக் கொல்லாமற் கொல்லுகின்ற கொடிய காமத்துன்பம் நீங்கும் வண்ணம் உன் இன்னருளை எனக்களிப்பது எந்நாளோ? என்று இரந்து கேட்டான்.

தான் வழிபடுகின்ற தன் குலதெய்வமாகிய சிவபெருமானுக் காயினும் தன்பெருமிதத்தில் குறையாத உளச்செருக்குப் படைத்த இராவணன், காமவேட்கையும், நாணமும் மாறி மாறி எழுந்து தன்னை வருத்துதலினாற் கூசிக் கூசிச் சீதாதேவியிடம் பின்வருமாறு கூறுகின்றான்.

குழை அணிந்த காதனவும் நீண்டு என்மேற் பதிந்து சென்று கொலைத் தொழிலைப் புரிகின்ற கண்களையுடையாய்! இன்று எனக்கு நீ அருள் புரிவாய் என்றென்றெண்ணி இன்று என்று சொல்லப்படும் பலநாட்கள் பயனில்லாமற் கழிந்துவிட்டன. நாளை நீ எனக்கருள் புரிவாய், புரிவாய் என்று நான் எண்ணி யெண்ணி நாளையென்று சொல்லப்படும் பல நாட்கள் பயனின்றிக் கழிந்து விட்டன. நீ எனக்குன்னருளைத் தரும்வகை இப்படித் தான் இருக்கின்றது. இவ்வாறெல்லாம் என்னை வருத்தி நான் இறந்து பட்டபின் என்னைச் சேர இருக்கின்றாயோ, உலகம் மூன்றையும் ஒரு குடைக்கீழ் ஆள்கின்ற என் அரசியல் ஆணையில் காதற் கடவுளாகிய மன்மதன் ஒருவன் தான், உனது தொடர்பு காரணமாக என்னை எதிர்த்துப் போர் புரிகின்றான். அவனுக்குத் தோற்று யான் இழிவடைந்து போகாமல் என்னை நீதான் காப்பாற்றியருள வேண்டும். உனது தண்ணருள் எனக்குக் கிடைக்குமாகில், மன்மதனை வென்று விடுவேன். பூக்கள் அணியத் தக்க நீண்ட கூந்தலையுடைய பொற்கொழுந்தே! மிக்க புகழ் நிரம்பி விளங்குகின்ற என் பெருஞ் செல்வ வாழ்வை விரும்பாமல், இகழ்ந்துவிட்டாய். உன்னுருயிர்த் தலைவனாகிய இராமபிரான் காடுறை நாட்களைக் கழித்து, அயோத்தி நகரஞ் சென்று அங்கு வாழ்கின்ற அற்ப மானுடவாழ்வைப் பெரிதென்று மதிக்கின் றாயா? கச்சணிந்த கொங்கையாய்! அருந்தவ முனிவர்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நுண்ணுணர்வால் இறைவனை நோக்கி உணர்கின்ற ஞானிகளும், அடையும் பேற்றை ஆராய்ந்து பார்ப்பாயானால், என் ஆணைக்கடங்கி நடக்கின்ற அமரர்களுடன் கூடிவாழ்கின்ற இன்பமேயாகும் என்பதை உணர்ந்து கொள்வாய். யாழும், பூவையும் நாணும் வண்ணம், நாளும் குதலை மொழிகளைப் பேசுகின்ற நங்கையே! பெண்ணுக்குரிய எல்லாப் பண்புகளையும் உன்னிடத்திலேயே படைத்து வைத்த நான்முகன், உன் உள்ளத்தில் இரக்கத்தையும், உடலில் இடையையும் படையாமல் விட்டுவிட்டானே? நிரம்பிய வாழ்நாளும், இன்ப நுகர்ச்சிக்குரிய இளமைப் பருவமும் மீண்டு வருவனவுமல்ல. நாள்தோறும் கழிந்து கழிந்து கொண்டே போகும் தன்மையை உடையன. குழையணிந்த முகத்தை உடைய நீ அருள்வழங்கி என்னை ஆதரிக்காவிட்டால், என் ஆவி அகலவுங் கூடும். அங்ஙனம் ஆவி அகன்றாலும் அகலட்டும். ஆனால் உன்னுடைய நற்பண்புகளுக்கும், அழகுக்கும் இன்ப நுகர்ச்சிக்கும் என்னையொழிய பிறரெவரும் உனக்கு ஏற்றவர்கள் இல்லையே. உன்னிடத்தில் பெண்மைப் பண்பும், அதற்குப் பொருத்தமான அழகும், எத்தனைய இன்னல்கள் வந்தாலும் கலங்காத மனத்திண்மையும், முதலிய யாவும் நல்லவாய் அமைந்திருக்கவும், கண்ணோட்டமும், அத்துடன் இணைந்து நிற்கும் கருணையும், அக்கருணையோடு கலந்து எழுகின்ற வண்மை என்னும் பண்பும், சனகன் மகளாகிய உனக்கும் இல்லாமற் போனவிதம் என்னவோ?

கிளியைப் போன்றவளே! யான் இராமனைக் கொன்ற பொழுது அவன், 'ஏ, சீதா! ஏ, இலக்குமணு!' என்று சதறிய உண்மைக்குரலை அப்படியே நீ கேட்டபின்பும் அந்த இராமனைக் காணலாம் என்று, இருக்கின்றாயா? நீண்டகாலம் தொடர்ந்து நுகரக்கூடிய புண்ணியத்தின் பயனை நுகரும்வண்ணம் விதி கூட்டிவைக்கவும், அதனை வேண்டாம் என்று வெறுப்பது உனக்குத்தகுமா? என்மீது நீ கருணைகொள்ளாதுவிடின் நான் இறந்துபடுதல் திண்ணம். அங்ஙனம் நான் இறந்துபடுதல் தகாதாலல், என் பெருஞ்செல்வமும் தடையின்றி என்னுடன் அழிந்துவிடும். ஒப்பில்லாத நீ வந்து சேர்ந்ததினால், என் செல்வம் வளர்ந்ததென்றும் புகழைக் கொடுத்தலைவிட்டு, அதற்கு மாறாக அச்செல்வம் அழிந்தது என்னும் பெரும்பழியை நீ ஏற்றுக்கொள்வாயோ?

ஒளிவிடும் அணிகலன்களை அணிந்தவளே! அமரரும் அவர்களின் அருமை மனைவிமார்களான அமரவனிதையரும், உன்னுடைய சிவந்த மலரடிகளைக் கைகூப்பித்தொழ வாழ்கின்ற மூவுலக முதன்மையும் உனக்குத் தானாகவேவந்து சேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது, அதனை வேண்டாம் என்று நீ விலக்குகின்றாய் என்றால், உன்னிலும் அறிவிலிகள் உலகிற் பிறர் இல்லை என்றே சொல்லலாம் என்று பல காரணங்களை இராவணன் சீதாதேவியாருக்கு, எடுத்தெடுத்துச் சொன்னான்.

இங்ஙனம் எல்லாம் அறத்தை மறந்து அயலான் மனையாளுடன் நெறிகடந்து பேசுவதினால் அழியாத பழிவந்து தன்னை அடையுமென்பதை அறியாத இராவணன், மூவுலகில் உள்ளோர் யாவரும் அடிமை செய்ய வெற்றியோடு வீற்றிருக்கும் என் அடிமைப் பணியை ஏற்றுக்கொள்வாயாக. ஏற்று எனக் கருளைப் புரிவாயாக என்று கூறித் தலைமீது குவித்த கையை உடையவனாய், நிலத்தில் விழுந்து (சீதாதேவியைக்) கும்பிட்டான் என்பதாம்.

இன்னருள் எனக்கு என்றே

101. அவ்வி டத்தரு கெய்திய ரக்கன்றான்
எவ்வி டத்தெனக் கின்னரு ளீவது
நொவ்வி டக்குயி லேநுவல் கென்றனன்
வெவ்வி டத்தை யமுதென வேண்டுவான்.

கொண்டுகூட்டு: வெவ்விடத்தை, அமுதென வேண்டுவான் (ஆன்) அரக்கன், அவ்விடத்து, அருகு, எய்தி, குயிலே, எனக்கு, நொ, விட, இன்னருள், ஈவது, எ(வ்)விடத்து நுவல்க, என்றனன்.

பொருள்

வெவ்விடத்தை - (உயிரைக் கொல்லும்) கொடிய நஞ்சினை, அமுதென - அமுதென்று, வேண்டுவான் - விரும்புகின்ற, அரக்கன் - அரக்கர் குலத்தலைவனாகிய (அரக்கனாகிய) இராவணன், அவ்விடத்து - சீதாதேவி சிறையிருந்த அந்த இடத்தின், அருகெய்தி - பக்கத்தில் சென்று, குயிலே - குயில் போன்ற இனிய மொழியைப் பேசுகின்றவளே, எனக்கு நொ விட - (உன்னை அடையப் பெறாமையால்) என்னை வருத்துகின்ற துன்பம் என்னை விட்டு நீங்க, இன்னருள் ஈவது - (உனது) இனிய கருணையைப் புரிவது, எவ்விடத்து - எப்பொழுது, நுவல்க - சொல்வாயாக, என்றனன் - என்று கேட்டனன்.

தான் - அசை, நொ - துன்பம் என்னும் பொருளைக்கொண்ட ஓரெழுத்தொருமொழி. நொ + விட - நொவ்விட எனப் புணர்ந்தது. நுவல்கென்றான் என்பது தொகுத்தல் விகாரம். நுவல்க என்றான் என விரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

கொல்லும் கொடிய நஞ்சினை அமுதமென்று விரும்புகின்ற வஞ்சகிய இராவணன், குயிலே! உன்னை அடையப்பெறுமையால், என்னை வருத்துகின்ற துன்பம் என்னை விட்டு நீங்கும் வண்ணம் உனது இனிய கருணையைப் புரிவது, எப்பொழுது சொல்வாயாக என்று (சீதாதேவியைக்) கேட்டான் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் அரக்கர் கோனாகிய இராவணன், அன்னை சீதாதேவியை நோக்கி உன் இன்னருளை எனக்கு எந்நாளில் நல்குவாய் எனக் கெஞ்சும் குரலால் கேட்கின்ற கீழ்மைக் குணத்தைக் காண்கின்றோம்.

மூவரையும் தேவரையும் வென்று மூவுலகையும் ஏவல்கொள்ளும் வெற்றி வீரனாகிய இராவணன், இன்னொருவன் மானிவியாகிய சீதாதேவியை நோக்கி,

எவ்விடத்து எனக்கு இன்னருள் ஈவது
நொவ்விடக் குயிலே!

என இரந்து கேட்கின்ற அளவுக்குத் தன்னிலையில் தாழ்ந்து விட்டான் என்பதைக் கம்பர் காட்டுகின்றார். குயிலே நொவ்விட எனக்கு இன்னருள் ஈவது எவ்விடத்து, என்னுந் தொடர்களைப் படிக்கும் பொழுது எழுகின்ற ஓசையில் நின்று நிழலாடுகின்ற இரக்க உணர்ச்சி எம்மையும் இரங்க வைக்கின்றது.

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னுள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடு முலகினைத்தும் செருக்கடந்த
புயவலியும்

கொண்ட இராவணன், எவ்விடத்து எனக்கு இன்னருள் ஈவது, எனக் கெஞ்சிக் கேட்கும் நிலைக்கும் வந்துவிட்டானே, என்பதை எண்ணியெண்ணிக் கம்பரும் இரங்குகின்றார் என்றே கொள்ள வேண்டும்.

இனி, இங்ஙனம் சீதாதேவியைக் கொஞ்சும் குரலாற் கெஞ்சிக் கேட்கின்ற இராவணனின் நிலைமையை,

வெவ்விடத்தை அமுதென வேண்டுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கம்பர் நெஞ்சம் அஞ்சி அஞ்சிக் கூறுகின்றார். இராம பிரானுக்கு அமுதாக விளங்கும் சீதாதேவி, இராவணனுக்குத் தீண்டாமற் கொல்லும் நஞ்சாக விளங்குகின்றாள் என்பதே கம்பரின் கருத்தாகும்.

இராவணன், தன் காம வேட்கையை நீக்கி, இன்பமூட்டும் அமுதமென்றே சீதாதேவியை எண்ணுகின்றான் என்றும், அச் சீதாதேவி தன் கற்பின் திறத்தினால் இராவணனின் உயிரைப் போக்கும் நஞ்சாகக் காட்சியளிக்கின்றாள் என்றும், நமக்குக் கம்பர் கூறுகின்றார்:

திட்டியின் விடம்அன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ இது விதியின் வண்ணமே

எனக் கும்பகருணன் கூறியதாக வரும் கவிதைத் தொடரிலும் சீதாதேவியின் கற்பைத் திட்டி விடத்துடன் ஒப்பிட்டிருத்தலைக் காண்க.

கண்ணிலே நஞ்சை உடைய ஒருவகை நாகத்தின் பெயர் திட்டிவிடம். இந்த நாகம் ஒருவரைச் சினந்து கண்ணால் நோக்கினால் உடனே அவர் இறந்துவிடுவார் என்பதாம். சீதாதேவியாரின் கற்பென்னும் விடமும் தீண்டாமலே இராவணனைக் கொன்றுவிடும் என்பதாம்.

வஞ்சனேன் எனக்கு நானே மாதரார் வடிவு கொண்ட
நஞ்சுதோய் அமுதம் உண்பான் நச்சினேன் நாளுந் தேய்ந்து
நெஞ்சு நேரான துன்னை நினைப்பு விட்டு ஆவி நீங்க
அஞ்சினேன் அடியேன்உம் அடைக்கலம் அமுதின் வந்தீர்

எனப் பின்னரும் இராவணன் சீதாதேவியை நஞ்சுதோய் அமுதம் என்று சுட்டிக் கூறுதலையும் நோக்குக.

''இவ்விடத்து எனக்கு இன்னருள் ஈவது'' எனவரும் இராவணன் குரலுடன், ''உன்னை நினைப்பு விட்டு ஆவி நீங்க அஞ்சினேன் அடியேன்உம் அடைக்கலம் அமுதின் வந்தீர்'' என மீண்டும் வரும் அவனின் குரலையும் ஒப்பிட்டு நோக்குக.

ஆற்றல் படைத்த இராவணன், அறத்தை மறந்து இன்னொருவன் தேவியின் மேற்கொண்ட காமவேட்கையால், கருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழிந்து, நிலைகெட்டுக் கைகூப்பி இரக்கின்ற அளவுக்குத் தன்னைத்தானே கீழ்ப்படுத்தி விட்டான் என்பதை உணர்கின்றோம்.

நன்னிலைக் கண்தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக் கிக்கீழ் இடுவானும் நிலையினும்
மென்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்

என்பது நாலடியார்.

சீதாதேவியை இரந்து இன்னருள் வேண்டுகின்றவனை, வெவ்விடத்தை அமுதென வேண்டுவானைக் கூறியது, காட்சியணியாகும். தன்மேல் விருப்பங்கொண்டு இனிமையாகப் பேசுகின்ற சீதாதேவியின் கருணை மொழிகளைக் கேட்கும் பெருவேட்கை கொண்ட இராவணன், குயிலே, எனக் கூவி அழைத்தான் என்க.

நொவ்விட என்பதை நொவ்விடை எனப் பாடங்கொண்டு, "வருந்துகின்ற இடையை உடைய" எனப் பொருள் கூறுவாரு முளர்.

ஈசற்கு ஈடழியாதான்

102 ஈசற் காயினு மீடழி வுற்றிறை
வாசிப் பாடழி யாத மனத்தினன்
ஆசைப் பாடுமந் நாணு மடர்த்திடக்
கூசிக் கூசி யினையன கூறினன்.

கொண்டுகூட்டு: ஈசற்கு ஆயினும், ஈடு அழிவு உற்று இறை வாசிப்பாடு அழியாத மனத்தினன் (ஆன இராவணன்) ஆசைப் பாடும், அந்நாணும், அடர்த்திட, கூசி, கூசி, இனையன, கூறினன்.

பொருள்

ஈசற்கு ஆயினும் - தான் வழிபடும் தன் குலதெய்வமாகிய சிவபெருமானிடத்திலும், ஈடு அழிவுற்று - தனது வலிமை குறைந்து நின்று (வலிதொலைந்து) இறை - சிறிதும், வாசிப்பாடு - தனது பெருமிதத்தில், அழியாத - குறைவுறுத, மனத்தினன் - மனத்தை உடையவனாகிய இராவணன், ஆசைப்பாடும் - (சீதாதேவியின் மேற்கொண்ட) பெருங் காதலாகிய காமவேட்கையும், அந்நாணும் - (ஈசனையும் வழிபட இணங்காத தனது பெருமிதத்திற் குறைந்து நின்று சீதாதேவியை இரக்கின்ற) தனது நாணமும், அடர்த்திட - வருத்த, கூசிக் கூசி - மனத்தில் கூச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கொண்டு, (மனக் கூச்சத்துடன்) இனைய - இத் தன்மையுடைய (இப்படிப்பட்ட) வணக்கமொழிகளை, கூறினன்- (சீதையின் முன்னிலையில்) சொல்வானையினன்.

பொழிப்பு

தான் வழிபடும் தன் குலதெய்வமாகிய, சிவபெருமானிடத் திலும், தனது வலிமை குறைந்து நின்று, சிறிதாயினும் தன் பெரு மிதத்தில் அழியாத உளச் செருக்குப் படைத்த இராவணன், சீதாதேவியின் மேற் கொண்ட பெருங்காதல் என்னும் காமவேட் கையும், அக்காம வேட்கையை நீக்கும் வண்ணம் சீதாதேவியை இரந்து கேட்கவேண்டிய தாயிற்றே என எழுகின்ற நாணமும் வருத்தக், கூச்சங் கொண்டவனாய், இத்தன்மை பொருந்திய வணக்க மொழிகளைச் சீதையின் முன்னிலையிற் சொல்வானை யினன் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில், ஈசனை வணங்குதலும் தன் பெருமிதத்துக் குக் குறைபாடாகும் என எண்ணும் உளச் செருக்குப் படைத் தவனாகிய இராவணன், சீதாதேவியின் அன்பைப் பெறுதற்காகக் கூசிக் கூசி அவளை இரந்து வேண்டுகின்ற நிலைமைக்கு வந்துவிட் டான் என்பதைக் கூறும் கம்பனின் குரலைக்கேட்கின்றோம்.

இராவணன் இமையாமுக்கண் ஈசனையே தனது குலதெய்வ மாகக் கொண்டு வழிபடும் கொள்கையுடையவன். அங்ஙனம் வழி படும் பொழுதும், பரமேசுவரனுக்கு இராவணேசுவரன் எவ்வகை யின் குறைந்தவனாவான் என்னும் பெருமித எழுச்சியோடு பொருந்திய உளச் செருக்குப் படைத்தவன்.

ஈசற்காயினும், ஈடுஅழிவுற்று இறை
வாசிப்பாடழியாத மனத்தினன்

எனக் கம்பர் இராவணனிடத்தில் இயற்கையாகவே அமைந்த பெருமிதத்தைச் சொல்லிச் சொல்லிப் பெருமிதம் கொள்கின்றார்.

இராவணன் ஈசனையே தான் வழிபடும் குலதெய்வமாகக் கொண்டுள்ளான் என்பதை அவன் இராமபிரானுடன் இறுதிப் போராற்றச் செல்லும்போது

ஈசனை இமையா முக்கண்
இறைவனை இருமைக் கேற்ற
பூசனை முறையிற் செய்து

சென்றான் எனக்கம்பர் மிக ஆர்வமுடன் கூறும் வாய்மை மொழிகளாலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் ஈசனையே குலதெய்வமாகக் கொண்டு வழிபடும் கொள்கை கொண்டவனுகிய இராவணன், அவ்விசனையும் வழிபடல் தனக்குக் குறைவென்று நினைக்கின்ற பெருமிதமும் மனச் செருக்கும் உடையவன் என்பதை

> எள்ளில் ஐம்பெரும் பூதமும் யாவையும் உடைய
> புள்ளிமானுரி ஆடையன், உமையொடும்
> பொருந்தும்
> வெள்ளியம் பெருங்கிரியினை வேரொடும் வாங்கி
> அள்ளிவிண்தொட எடுத்தனன் உலகெலாம்
> அனுங்க

என வீடணன் இராமபிரானிடம் கூறும் வாய்மை மொழிகளாலும் அறிக.

இராவணன் வான் வழியாக வான ஊர்தியில் சென்றான். இராவணன் ஏறிச் சென்ற வான ஊர்தியை ஈசன் எழுந்தருளி இருக்கும் வெள்ளிமால்வரை தடுத்தது. உடனே இராவணன் சினம் கொண்டான்; தான் வழிபடும் ஈசன் எழுந்தருளும் மலை என்பதையும் எண்ணுமல் தன்மானத்தருக்குடன் தடந்தோள் கொண்டு அம்மலையைப் பெயர்த்தெடுத்தான் என்பதே வரலாறு. இதனால் ஈசற்காயினும் ஈடழிவுற்றிடா இராவணனின் வாசிப்பாடு புலனுதல் காண்க.

இனி, இங்ஙனம் ஈசனை வழிபடலும் தன் தகுதிக்கு ஏற்றதல்ல எனக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்த இராவணன், தன்னுற் சிறையில் வைக்கப்பட்டிருக்கின்ற சீதாதேவியாரின் முன் தன் வணங்காமுடியைத் தாழ்த்திப் பேச எண்ணினான் எண்ணியதும்; நானு என் வணங்காமுடியைத் தாழ்த்தி இவளை வேண்டுவது, என்ற நாணம் தோன்றி அவனை வருத்துகின்றது. நாணத்தின் ஆற்றலும் மேலான ஆற்றலுடன் சீதாதேவிமேற் கொண்ட காமவேட்கை என்னும் ஆசை அலை அலையாக எழுந்து அவனைக் கொல்லுகின்றது; இவ்வகை ஆசையாலும் நாணத்தாலும் அலைக்கப்பட்டு, இராவணன் அடைகின்ற அல்லலை எண்ணியவுடன் கம்பரும் கலங்கிவிட்டார்.

> ஆசைப்பாடும் நாணும் அடர்த்திடக்
> கூசிக் கூசி இனையன கூறினன்.

எனவரும் கவிதைத் தொடரிலே, இராவணனின் நிலையை நினைந்து நினைந்து கலக்கமடைகின்ற கம்பரின் குரலைக் கேட்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகிகயம் ஒளிப்ப நிலேதேவர் கெடவானம்
புக்கவர் இருக்கை புகைவித்து உலகம் யாவும்
சக்கரம், நடத்தும்

வீரனுகிய இராவணன், இங்ஙனம் ஓர் பெண்ணின் பொருட்டுத் தன் உள்ளந்தளர்ந்து, தலே சாய்ந்து வணக்க மொழிகள் கூறத் தொடங்குகின்றுன், எனச் சொல்லவந்த கம்பரின் உள்ளத் துடிப்பை எண்ண, எண்ண, எமக்கும் கலக்கம் உண்டாகின்றது; அறத்தை மறந்து அயலான் மனேவியை விரும்பிய அன்றே இராவணனின் மானமும், வீரமும் மறைந்துவிட்டதென்பது கம்பரின் கருத்தாகும். பிறன்மனே நோக்காத பேராண்மை இராவணனிடம் இல்லாமையால், அவனின் தோளாண்மையும், வாளாண்மையும், வரபலமும் குறைந்துவிட்டன என்பதாம்.

பிறன்மனே நோக்காத பேராண்மை சான்ருேர்க்கு
அறன் ஒன்ருே ஆன்ற ஒழுக்கு

என்பது திருக்குறள்.

ஒன்று ஒருவன் இல்லுறை தவத்தியை இரங்காய்
வன்தொழிலினுய் மறைதுறந்து சிறைவைத்தாய்
அன்று ஒழிவதாயின அரக்கர்புகழ்

எனக் கும்பகருணன் இராவணனிடம் கூறுவதாக வரும் இச் செய்யுட் பகுதியையும் நோக்குக.

கொன்று இறந்தபின் கூடுதியோ

103. இன்றி றந்தன நாளேயி றந்தன
என்றி றந்தருந் தன்மையி தாலெனேக்
கொன்றி றந்தபின் கூடுதி யோகுழை
சென்றி றங்கி மறந்தரு செங்கணுய்.

கொண்டுகூட்டு: குழை சென்று இறங்கி மறந்தரும், செங் கணுய், இன்று இறந்தன, நாளே இறந்தன, என் திறம் தரும் தன்மை இது, (ஆல்) எனேக் கொன்று இறந்த பின், கூடுதியோ.

பொருள்

குழை சென்று - குழையை அணிந்த காதளவும் நீண்டு, இறங்கி - என்மேற் பதிந்து, மறந்தரும் - (இரக்கமில்லாமல்) கொலேத் தொழிலேச் செய்கின்ற (கொடுமை செய்கின்ற) செங் கணுய் - சிவந்த கண்களே உடையவளே, இன்று - இன்று என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படும் நாட்கள், (இன்றைக்கு என்மேல் அருள் புரிவாய் என நான், இன்று இன்று என்றே எண்ணிய நாட்கள்) இறந்தன - பயனின்றிக்) கழிந்தன, நாளை - நாளை என்று சொல்லப்படும் வழி நாட்களும் (நாளைக்காதல் என்மேல் நீ அருள் புரிவாய் என நான் நினைந்து நாளை நாளை என்று எண்ணிய நாட்களும்) இறந்தன - (பயனின்றிக்) கழிந்தன, என் திறம் தரும்- நீ என்பால் (எனக்கு) அருள் செய்யும் வகை, தன்மை இது - இவ்வாறுக (இத் தன்மையாக) இருக்கின்றது. எனைக் கொன்று- (இங்ஙனமெல்லாம்) என்னை வருத்தி, இறந்தபின் - யான் இறந்தொழிந்த பின், கூடுதியோ-சேர இருக்கின்றீயோ என்பதாம்; இனி,

இன்று இறந்தன நாளை இறந்தன
என் திறந்தரும் தன்மை யீதால்

என்னும் அடிகளுக்கு "இன்றைக்கு இசைவாய் இன்றைக்கு இசைவாய், என்று நான், எண்ணப் பல இந்றைத் தினங்கள் (என் எண்ணம் முற்றுப பெருமலே) கழிந்தன, அங்ஙனே, நாளைத்தினம் இணங்குவாய் நாளைத்தினம் இணங்குவாய் என்று நான் எதிர் பார்த்த, பல நாளைத்தினங்களும் பயன் தராமல் ஒழிந்தன, எனப் பொருள் கூறுவாரும் உளர்.

பொழிப்பு

குழையை அணிந்துள்ள காதளவும் நீண்டு, கொலைத் தொழிலைப் புரிகின்ற சிவந்த கண்களையுடையாய்! இன்று என்று சொல்லப்படும் நாட்கள் பல பயனின்றிக் கழிந்தன: நாளை என்று சொல்லப்படும் நாட்கள் பலவும் பயனின்றிக் கழிந்தன; நீ என்மேல் (இரங்கி) அருள் செய்யும் தன்மை இவ்வாறுக இருக்கின்றது. இங்ஙனமெல்லாம் என்னை வருத்தி, யான் இறந்த பின்புதான் என்னைச்சேர இருக்கின்றீயோ? என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியை நோக்கி, உன்னருளே எனக்கு, என்று தருவாயோ என இரக்கின்ற இராவணனின் இரக்கக் குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவியின் கண்களைப் பார்த்தவுடன் இராவணன் அஞ்சி விட்டான். காதளவு நீண்ட அழகான கண்களால் தன்மேல் அருள் நோக்கம் புரியாமற், கொல்லுகின்ற சீதாதேவியின் கொடுமையை அவனால் மறக்க முடியவில்லை. சீதாதேவியின் அருள் நோக்கத்தைப் பெறுதற்காகத் தவங்கிடக்கின்ற இரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணன், இறைவனின் திருவருளைப் பெறவேண்டுமென்னும் ஆராமையினால், நெக்கு நெக்குருகியுருகி இரந்து கேட்கின்ற அன்பனைப் போல நின்று சீதாதேவியாரை இரந்து வேண்டுகின்றான்.

குழை சென்று இறங்கி மறந்தரும் செங்கணாய்
இன்று இறந்தன நாளை இறந்தன
என்திறம் தரும் தன்மை இதால்

என இராவணன் சீதாதேவியாரை இரந்து வேண்டுகின்ற குரலிலே எவ்வளவு குழைவும், ஏக்கமும், கனிவும், ஆற்றுமையும் கலந்துள்ளன என்பதைக் காணக்காண, இராவணனோடு கூடி நாமும் இரங்கவேண்டியவர்களாகின்றோம்.

தன் ஆருயிர்த் தலைவனாகிய இராமபிரானையே எண்ணிய வண்ணமாய் உள்ளம் உருகி உருகித் தவங்கிடக்கின்ற கற்பின் செல்வியாகிய சீதாதேவி, உள்ளம் மாறித் தன்னை விரும்பி அருள் செய்வாள் என எண்ணுகின்ற இராவணனின் அறியாமையை எண்ணுந்தோறும் எவர்தான் இரக்கங்கொள்ளமாட்டார். சீதாதேவியின் மன உறுதியை,

ஊண்இலா யாக்கை பேணி உயர்புகழ் சூடாது
உன்முன்
நாண்இலாது இருந்தேன் அல்லேன்
நவையறுக்குணங்கள் என்னும்
பூண்எலாம் பொறுத்தமேனிப் புண்ணிய மூர்த்தி
தன்னைக்
கானலாம் இன்னும் என்னும் காதலால்
இருந்தேன் கண்டாய்

என (மாயாசனகப் படலத்தில்) சீதாதேவி இராவணனிடம் கூறியதாக வரும் இச் செய்யுளாலும் அறிக.

''என்னைக் கொன்று இறந்தபின் கூடுதியோ''

என இராவணன் கூறுகின்ற குரலிலே தன்னை அறியாமலே இப் பிறப்பில் தான் சீதாதேவியை அடைய முடியாதென்பதையும், தான் இறந்து படுதல் திண்ணம் என்பதையும் கூறியுள்ளான். இங்ஙனம் இராவணன் சீதாதேவியின் மேற்கொண்ட முறை தவறிய காமவேட்கையால் தன் நினைவிழந்து, நிலை குலைந்து நாளும் பொழுதும் நலிந்து நலிந்து, ஆண்மையும் மானத் துடிப்பும் அழிகின்றானென்பதை அறிகின்றோம். இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனே முதலா மற்றை மானிடர் இறுதி யாகக்
கூச மூன்று உலகும் காக்குங் கொற்றத்தேன்
வீரம் கோட்டி
பேசுவார் ஒருவற்கு ஆவிதோற்றிலேன்
பெண்பால் வைத்த
ஆசை நோய் கொன்றது என்றுல் ஆண்மைதான்
மாசுணுதோ

என மீண்டும் இராவணன் (மாயாசனகப் படலத்தில்) சீதாதேவியிடம் கூறியிருப்பதாலும் உணர்க. ஆவி தோற்றிலேன் ஆசை நோய் கொன்றது ஆண்மைதான் மாசுணுதோ எனவரும் இத் தொடர்களில் இராவணன் த அழிவைத் தானே ஒப்புக் கொண்டுரைத்திருப்பதை நோக்குக.

ஆல் - அசை. கொன்றிறந்தபின் கூடுதியோ என்பதில், முதற் கண் உள்ள, கொன்று என்பது வருத்தி, எனப் பொருள்படும்.

அனங்கன் தருங்கலகம்

104. உலக மூன்று மொருங்குட னேம்புமென்
அலகில் செல்வத் தரசிய லாணையில்
திலக மேயுன் றிறத்தனங் கன்றரு
கலக மல்ல தெளிமையுங் காண்டியோ.

கொண்டுகூட்டு: திலகமே, உலகம் மூன்றும் ஒருங்குடன் ஓம்பும், என் அலகில் செல்வத்து, அரசியல் ஆணையில், உன் திறத்து (உன் திறத்தினுல்) அனங்கன் தருகலகம் அல்லது (என்) எளிமையும் காண்டியோ?

பொருள்

திலகமே - (பெண்களுள்) திலகம் போன்றவளே, (திலகம் - நெற்றிப் பொட்டு) உலகம் மூன்றும் - மண்ணுலகம் விண்ணுலகம், பாதல உலகம் என்னும் மூன்று உலகங்களையும், ஒருங்குடன் ஓம்பும் - ஒன்று சேர அரசாளும் (ஆட்சிபுரிந்து பாதுகாக்கும்), என் - என்னுடைய, அலகில் செல்வத்து - எல்லையில்லாத செல்வப் பெருக்கையுடைய, அரசியல்-அரசாட்சியில் செலுத்துகின்ற, ஆணையில் - கட்டளையில், உன்திறத்து - உனது தொடர்பு காரணமாக (நான் உன்மேல் காதல்கொண்ட தொடர்பினுல்) அனங்கன் - உடம்பு இல்லாதவனுகிய (உருவிலியாகிய) மன்மதன், தருகலகம் அல்லது - (என்னுடன்) செய்கின்ற போர் ஒன்றே அல்லாமல், எளிமையும் - (எனக்கு) இழிவைத் தரக் கூடிய செயலை, காண்டியோ - நீ பார்க்கப் போகின்றுயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

பெண்களுட் திலகம் போன்றவளே! மூன்று உலகங்களையும் ஒருசேர ஆட்சி புரிகின்ற அளவில்லாத செல்வப் பெருக்கை யுடைய என் அரசியல் ஆணையில், உனது தொடர்பினாலே மன்மதன் என்னுடன் ஆற்றுகின்ற போரே அல்லாமல், நான் அப்போரில் மன்மதனுக்குத் தோற்று இழிவடையும் செயலையும் பார்க்கப் போகின்றாயோ? (என்னை அப்போரில் தோற்காமற் பாதுகாப்பாயாக என்பதாம்)

விளக்கம்

இச் செய்யுளில் மன்மதன் தன்னைப் போரில் வெல்லாத வண்ணம் காப்பாற்றியருளவேண்டுமென்று இராவணன் சீதா தேவியாரிடம் இரந்து வேண்டுகின்ற குரலைக் கேட்கின்றோம்.

மூவுலகையும் ஆளுகின்ற தனது அரசாட்சியில், மன்மதன் ஒருவனே தன்னை எதிர்த்துப் போர்புரிந்து வெல்லப் பார்க்கின்றான் என்னும் எண்ணத்திலால், இராவணன் துடிக்கின்றான்; சீதாதேவி தன்மேல் அருள் சுரந்தால் மன்மதன் தோற்று விடுவான் என்பதையும் இராவணன எண்ணுகின்றான். சீதாதேவி தன்மேல் அருள் புரியாத நிலையில் மன்மதன் தன்னைப் போரில் வென்றுவிடுவான் என்பதைச் சீதாதேவியிடம் கூறி இராவணன் இரக்கின்றான்:

> ''திலகமே உன்திறத்து அனங்கன் தரு
> கலகம் அல்லது எளிமையும் காண்டியே''

என அவன் சீதாதேவியாரை வேண்டுகின்ற குரலில் என்னை நீதான் காப்பாற்றியருளவேண்டும்; எனக்கு வேறோர் துணையு மில்லை என்றெல்லாம் சொல்லிச் சொல்லி இரக்கின்ற இரக்க உணர்ச்சி பெருகி ஓடுவதைக் காண்கின்றோம்.

உலகம் மூன்றையும் அடக்கி அரசாள்கின்ற யான், உனது அருளைத் துணையாகக் கொண்டு மன்மதனைப் போரில் வெல்ல வேண்டிய நிலைக்கு வந்துவிட்டேன் என்றும், இராவணன் சீதா தேவியிடம் கூறுகின்றான்:

> உலகம் மூன்றும் ஒருங்குடன் ஓம்பும் என்
> அலகில் செல்வத்து அரசியல் ஆணையில்

என இராவணன் கூறுகின்ற குரலில் தான் மூவுலகங்களையும் ஆளுகின்ற முதன்மைவாய்ந்தவன் என்பதையும், சீதாதேவிக்கு நினைவூட்டுகின்றான்; இராவணன் உள்ளத்தில் தான் மூவுலகை யும் ஆளுகின்ற முதன்மையாளன் என்னுந் தற்பெருமை நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. இத் தற்பெருமையினால் அறத்தை மறந்து தான் புரிகின்ற தீமைகளையும் அவன் மறந்து விடுகின்றான்.

ஈசனே முதலா மற்றை மானிடர் இறுதி ஆகக்
கூச மூன்று உலகும் காக்கும் கொற்றத்தேன்

என மீண்டும் அவன் சீதாதேவியிடம் தான் மூவுலகங்களையும் ஆளும் முதன்மையாளன் என்பதை எடுத்தெடுத்துக் கூறுவதையும் நோக்குக. இங்ஙனம் இராவணன் கொண்ட செருக்கே அவன் அழிவுக்குக் காரணமாகும்.

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து

என்பது திருக்குறள்.

இச் செய்யுளுக்கு இல் திலகமே - வீட்டிற்குத் திலகம் போன்றவளே, அரசியல் ஆணை - எனது அரசாட்சியின் மேல் ஆணை, உன் திறத்து அனங்கன் தரும் கலகம் அல்லது - (இராமபிரானைப் பிரிந்திருத்தலால்) உனக்கு மன்மதன் உண்டாக்குகின்ற இக்கலக்கம் விரைவில் இல்லாமற் போய்விட, எளிமையும் காண்டியோ - எளிதாக (இராமபிரானை அடைவதையும்) பெறுவாய் போலும் என வேறொரு பொருள் கூறுவாரும் உளர்.

மானிடர் வாழ்வு

105. பூந்தண் வார்குழற் பொற்கொழுந் தேபுகழ்
ஏந்து செல்வ மிகழ்ந்தனை யின்னுயிர்க்
காந்தன் மாண்டிலன் காடுக டந்துபோய்
வாய்ந்து வாழ்வது மானிடர் வாழ்வன்றே

கொண்டுகூட்டு: பூந்தண் வார் குழல் பொற் கொழுந்தே, புகழ்ஏந்து செல்வம் இகழ்ந்தனை, இன் உயிர்க் காந்தன் மாண்டிலன் (மாண்டிலனுய்) காடுகடந்துபோய் வாய்ந்து வாழ்வது மானுடர் வாழ்வன்றே.

பொருள்

பூந்தண் வார்குழல் - பூவை அணிதற்குரிய குளிர்ந்த நீண்ட கூந்தலையுடைய, பொற்கொழுந்தே - அழகிய மருக்கொழுந்து போன்றவளே (பொன்மயமாகிய கொழுந்து போன்றவளே எனவும் பொருள் கூறலாம்) புகழேந்து செல்வம் - பெரும் புகழைத் தாங்கிய அளவில்லாத என் பெருஞ் செல்வத்தை, இகழ்ந்தனை - (ஓர் பொருட்படுத்தாமல்) மிகச் சிறிதாக எண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகழ்ந்துவிட்டாய், இன்னுயிர்க்காந்தன் - உனது இனிய உயிர்த் துணைவனுடை (பிராணநாயகனை) இராமன், மாண்டிலன் - (வன வாசத்தில்) இறவாதவனுய், காடு கடந்துபோய்-வனவாசத்தை முடித்துப் பின் இடையிலுள்ள பல காடுகளையும் கடந்து அயோத்தியைச் சென்றடைந்து, வாய்ந்து - (அவ்வயோத்தியில்) எல்லாவளமும் நிரம்பப்பெற்று, வாழ்வது - வாழ்வதாகிய அவ் வாழ்வு, மானுடர் வாழ்வு அன்றே - (அற்பமான) மனிதரின் வாழ்க்கைதானே (மானுடவாழ்வினும் சிறந்த என் இந்திரப் பெருவாழ்வை ஏன் இகழ்கின்றுய் என்பதாம்)

பொழிப்பு

பூவை அணிதற்குரிய குளிர்ந்த நீண்ட கூந்தலையுடைய மருக்கொழுந்து போன்றவளே! பெரிய புகழைத்தாங்கிய என் பெருஞ் செல்வத்தை ஒரு பொருளாக மதியாமல் இகழ்ந்த நீ, உன் ஆருயிர்த் தலைவனுகிய இராமன் இறவாதவனுய் வனவாச காலத்தைக் கழித்து அயோத்தி நகரை அடைந்து எல்லா வள மும் நிரம்பப் பெற்று வாழ்வதாகிய அவ்வாழ்வும் அற்ப மனிதர் வாழ்வுதானே. அதனை நீ ஏன் விரும்புகின்றுய் என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் மூவுலகுக்கும் அரசனுக வாழும் தன் பெருஞ் செல்வத்திலும், அற்ப மனிதவாழ்வை வாழ்கின்ற இராமபிரா னின் செல்வம் மிகக் குறைந்ததாகும் எனச் சீதாதேவியிடம் இராவணன் கூறுகின்ற குரலைக் கேட்கின்றேம்;

சீதாதேவியின் அருளைப் பெறவிரும்பிய இராவணன் அத் தேவியாரைப்

பூந்தண் வார்குழல் பொற் கொழுந்தே

எனப்பாராட்டி உரைக்கின்றுன். சீதாதேவியாரின் நீண்ட கூந்தல் பூச்சூடப் பெறுமல் சடை உருவமாகத் திரிபட்டுக் கிடக்கவும் இராவணன் ''பூந்தண் வார்குழல்'' எனப் புகழ்ந்து கூறுவதினுல் நீ என் அன்பிற்குரியவளாகி பூக்கள் அணிந்த கூந்தலை உடையவளாய்ச் சிறந்து வாழ்வதை விரைந்து மேற் கொள்வாயாகவெனக் குறிப்பாக வேண்டுகின்றுன் என்பதையும் உணர்கின்றேம்.

மாசுண்ட மணிபோல தன் திருமேனியின் அழகு குறைந்து துன்பமே உருவமாக இருக்கின்ற சீதாதேவியைப் ''பொற் கொழுந்தே'' என இராவணன் புகழ்ந்து கூறுகின்றுன். பொற் கொழுந்துபோலச் சிறந்து விளங்கவேண்டிய நீ பொலிவிழந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றாய்; என்மேல் அருள்சுரந்து என்னை ஏற்றுக்கொள் வாயானால் பொற்கொழுந்து போலப் பொலிந்து விளங்குவாய் என இராவணன் சீதாதேவியார்க்குக் குறிப்பாகக் கூறுகின்றான் என்பதையும் உணர்கின்றோம்.

"பூந்தண் வார்குழல் பொற்கொழுந்தே"

என இராவணன் அழைக்கின்ற குரலிலே அவன் உள்ளத்தில் கரந்து எழுகின்ற ஆசை வெள்ளம் அப்படியே நின்று அலையெறி வதைக் காண்கின்றோம்.

சீதாதேவி, மூவரையும் தேவரையும் ஏவல் கொண்டு மூவுல கையும் தனியாட்சி புரிகின்ற தன் பெருஞ் செல்வவாழ்வைப் பெரிதாக மதித்துத் தன்னை ஏற்றுக் கொள்வாள் என இரா வணன் எண்ணினான். சீதாதேவி தன் பெரும் செல்வத்தை ஓர் பொருளாக நினையாமல் இகழ்கின்றாள் என்பதை உணர்ந்தவுடன் அவன் ஏங்கிவிட்டான்.

பூந்தண் வார்குழல் பொற்கொழுந்தே புகழ்
ஏந்து செல்வம் இகழ்ந்தனை

என இராவணன் கூறுகின்ற குரலிலே கலந்துள்ள ஏக்கத்தை யும் வியப்பையும் உணருங்கள்.

தன் இந்திரப் பெருஞ் செல்வத்தைக் கண்டவுடன் சீதா தேவி தன் கருத்துக்கு இணங்கிவிடுவாளென எண்ணிய இரா வணன் இராமபிரான் காட்டில் இறக்காமல் அயோத்திநாட் டிற்குச் சென்று பெறுகின்ற செல்வம் அற்ப மானுட வாழ்விற் குரிய செல்வந்தானே எனச் சீதாதேவியிடம் சொல்லுகின்றான்.

இன்உயிர்க் காந்தன் மாண்டிலன் காடு
கடந்துபோய்
வாய்ந்து வாழ்வது மானுடர் வாழ்வன்றே

என இராவணன் கூறுகின்ற குரலிலே அமைந்துள்ள இகழ்ச்சிக் குறிப்பை நோக்குக. இராவணன் உள்ளத்தில் மானுடர் வலி யற்றவர்; பெருஞ் செல்வவாழ்வைப் பெறுதவர் என இடம் பெற்ற "இகழ்ச்சி மனப்பான்மைதான்" அவன் தோல்விக்குக் காரணமாகும். இதனை,

ஊனவில் இறுத்து ஓட்டைமா மரத்துள் அம்பு
ஓட்டி
கூனி சூழ்ச்சியால் அரசு இழந்து உயர் வனம்
குறுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான் இழைத்திட இல் இழந்து உயிர் சுமந்து இருந்த
மானுடன் வலி நீ அலாது யார் உளர் மதித்தார்.

எனவும்,

கொச்சை மானுடர் வெல்குவர் என்றனை

எனவும்,

ஈங்கு மானுடப் புழுக்களுக்கு இலைவரம்

எனவும் (மந்திரப் படலத்தில்) இராவணன் விபீடணனுக்குக் கூறுவதால் உணர்க.

நோற்கின்றார் பெறும் பயன்

106. நோற்கின் றூர்களு நுண்பொரு ளுண்ணிதிற்
பார்க்கின் றூர்களும் பெறும்பயன் பார்த்தியேல்
வார்க்குன் றுமுலை யென்சொன் மவுலியால்
ஏற்கின் றுரொ டுடனுறை யின்பமால்.

கொண்டுகூட்டு: வார்க்குன்றும் முலை, நோற்கின்றூர்களும், நுண்பெருள், நுண்ணிதில், பார்க்கின்றூர்களும், பெறும்பயன், பார்த்தியேல், என்சொல், மவுலியால், ஏற்கின்றுரொடு, உடனுறை இன்பம் (ஆல்).

பொருள்

வார்க்குன்றும்முலை - கச்சணிந்த மலைபோன்ற கொங்கைகளை உடையாய், நோற்கின்றூர்களும் - பெருந்தவத்தைச் செய்கின்ற மூனிவர்களும், நுண்பொருள் - (அறிதற்கரிய) நுண்ணிய பொருளான இறைவனை, நுண்ணிதின் - (நுட்பமான) கூரிய மெய்யுணர்வினால், பார்க்கின்றூர்களும் - ஆராய்ந்து பார்க்கின்ற ஞானிகளும் (மகான்களும்) பெறும்பயன் - அடைகின்ற பயனாகிய பெரும் பேற்றினை, பார்த்தியேல் - (நீ சிறிது உனது புத்தியால்) ஆராய்ந்து பார்ப்பாயானால், என்சொல் - நான் இட்ட கட்டளையை, மவுலியால் - தமது தலைகளால் தாழ்ந்து வணங்கி, ஏற்கின்றுரொடு - ஏற்றுக் கொள்கின்றவர்களாகிய தேவர்களோடு, உடனுறை - கூடிவாழ்கின்ற, இன்பம் - இன்பத்தைப் பெறுதலேயாம்.

பொழிப்பு

கச்சணிந்த பெருங் கொங்கைகளையுடையாய்! பெருந்தவத்தைச் செய்கின்ற முனிவர்களும், நுண்ணிய பொருளான இறைவனை மெய்யுணர்வினால் காண்கின்ற ஞானிகளும், பெறுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறு எதுவாகும் என்று நீ உன்னுடைய அறிவினால் சிறிது ஆராய்ந்து பார்ப்பாயானால், நான் இட்ட கட்டளையைத் தமது தலைகளால் தாழ்ந்து வணங்கி, ஏற்றுக் கொள்கின்ற தேவர்களுடன் கூடி வாழ்கின்ற இன்பமேயாகும் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தவத்தால் மேம்பட்ட முனிவர்களும், மெய்யுணர்ச்சி வாய்ந்த ஞானிகளும், தான் இட்ட கட்டளைகளைத் தலைவணங்கி ஏற்றுச், செய்கின்ற தேவர்களுடன் கூடிவாழும் இன்பத்தைத்தான் பெரிதாக மதித்துப் பெறுகின்றார்கள் எனக் கூறுகின்ற இராவணனின் பெருமிதக்குரலைக் கேட்கின்றோம்.

தவ முனிவர்களும், ஞானிகளும் தனக்கேவல் செய்கின்ற பிரமா முதலிய தேவர்களுடன் இருந்து வாழ்கின்ற வாழ்வையே வேண்டுகின்றார்கள். அத்தேவர்களையும் ஏவல் கொள்ளும் தன் வாழ்வும், ஆண்மையும் எத்துணை உயர்ந்தன வென்பதைச் சீதா தேவி உணரவேண்டும் என்பதே இராவணனின் கருத்தாகும்.

தான், மூவரை வென்று தேவரை ஏவல்கொண்ட வெற்றியை அடிக்கடி மிகத் தற்பெருமையுடன் கூறிக் கூறிக் காட்டுகின்ற குணம் இராவணனுக்கியல்பாகும். இதனை,

மூவரும் தேவர் தாமும் முரணுக முற்றும்
கொற்றம்
பாவைநின் பொருட்டி னுலோர் பழிபெறப்
பயின்றீர்

என இராவணன் மீண்டும் சீதாதேவியிடங் கூறுவதால் உணர்க.

இங்ஙனம் மூவரைவென்று தேவரை ஏவல் கொள்ளும் தன் பெருவாழ்வை அறிந்ததும், நாட்டைத் துறந்து காட்டில் தவ வேடங் கொண்டு திரியும் இராமபிரானின் வாழ்வைச் சீதாதேவி வெறுத்துத் தன்னை ஏற்றுக் கொள்வாள் என்பதே இராவணனின் எண்ணமாகும். சீதாதேவியார் இங்ஙனம் இராவணன் கூறும் பெருவாழ்வை எள்ளளவும் பொருட்படுத்தாமல் தன் ஆருயிர்த் தலைவனுகிய இராமபிரானையே எண்ணித் தவங்கிடக்கின்றாள் என்பதைக் காமவேட்கையால் அள்ளுண்டு அறத்தை மறந்த இராவணனால் எங்ஙனம் உணர முடியும். இதனை,

வயிரத்தின் தோள், ஆயிரம் நாமத்து
ஆழி அரியினுக்கு அடிமை செய்வேன்
நாயினை நோக்குவேனை நான்துறந்து ஆவி நச்சி

எனச் சீதாதேவி கூறுவதாலும் உணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளும் மருங்கும்

107. பொருளும் யாழும் விளரியும் பூவையும்
மருளு நாளும் மழலை வழங்குவாய்
தெருளு நான்முகன் செய்ததுன் சிந்தையின்
அருளு மின்மருங் கும்மரி தாக்கியோ.

கொண்டுகூட்டு: பொருளும், யாழும், விளரியும், பூவையும், மருளும் (மருள) நாளும் மழலை வழங்குவாய், தெருளும், நான்முகன் உன் சிந்தையில் அருளும், (நின் உடலில்) மின் மருங்கும், அரி தாக்கியோ, நின்னைச் செய்தது.

பொருள்

பொருளும் - (உலகில் பெறும் பேறுகளில் மிகச் சிறந்த தாகிய) மக்களும் (மக்களின் மழலைச் சொல்லும்) யாழும் - வீணையின் கண் நின்றெழும் இன்னிசையும், விளரியும் - விளரி யென்னும் பண்ணின் இனிமையும், பூவையும் - நாகணவாய்ப் பறவை பேசுகின்ற மொழியும், மருளும் - ஒப்பாகாமல் மயங் கும் வண்ணம், நாளும் - நாள்தோறும், (எப்பொழுதும்) மழலை வழங்குவாய் - குதலை மொழிகளைக் கூறுகின்றவளே, (பேசுகின்ற வளே) தெருளும்-யாவற்றையும் தெளிவாக உணர்ந்த, (படைப் புத் தொழிலைத் தெளிவாக உணர்ந்த என்பதாம்) நான்முகன்- நான்கு முகங்களை உடைய பிரம தேவனனவன், உன் சிந்தை யில் - உனது மனத்தின்கண், அருளும்-இரக்கத்தையும் (கருணை யையும்) மின் மருங்கும் - (நின் உடலில்) மின்னலைப் போன்ற (மின்னற் கொடிபோன்ற) இடையினையும், அரிதாக்கியோ - இல்லை ஆக்கியோ (இல்லாமல்விட்டுத் தானே) செய்தது - உன்னைப் படைத்தது;

பொழிப்பு

மக்களின் மழலையும், யாழின் இசையும், விளரிப் பண்ணும், பூவையின் மொழியும், ஒப்பாகாமல் மயங்கும் வண்ணம், எப் பொழுதும் குதலை மொழிகளைக் கூறுகின்றவளே! யாவற்றையும் தெளிவாகத் தெரிந்த, நான்முகனனவன், உனது மனத்தில் கருணையையும், உன்னுடலில் மின்னல் போன்ற இடையினையும் இல்லாமல் விட்டுத் தானே உன்னைப் படைத்து, (படைத்தான்) என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியின் உள்ளத்தில் அருளும், உட லில் இடையும் இல்லையெனக் கூறுகின்ற இராவணனின் புனைமைக் குரலைக் கேட்கின்றோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் சீதாதேவியின் மொழியைப் பாராட்டி உரைக்கின்றான்:

பொருளும் யாழும் விளரியும் பூவையும்
மருளும் நாளும் மழலை வழங்குவாய்

என இராவணன் கூறுகின்ற குரலிலே ஆர்வமும் வியப்பும் கலந்து நிற்றலைக் காண்கின்றோம். சீதாதேவி, இராவணனுடன் அன்பு கலந்த இனிய மொழிகளாற் பேசியேயிராள். அங்ஙனமாகவும் அவன், 'நாளும் மழலை வழங்குவாய்' எனப் பாராட்டுகின்றான். சீதாதேவி இராவணனை வெறுத்துச் சினந்து வைகின்றவன் சொற்கள் எல்லாம் காமவேட்கைகொண்ட இராவணனுக்கு மிக இனிமை பயக்கும் இன் சொற்களாகவே இருக்கின்றன.

இங்ஙனம் சீதாதேவியின் கோப மொழிகளிலும் இனிமையுண்டென்பதைக் கம்பரே கூறிக்களிக்கின்றார். இதனை,

கோகிலம் செற்றது அன்ன குதலையள்
கூறுவாள்

என அயோத்தியா காண்டத்தில் கம்பர் கூறுவதால் உணர்க.

வீணையும் சூழலும் பாலும்
அமுதமும் கரும்பும் தேனும்
பாணியாழ் கனியும் வென்ற
பைங்கிளி மழலைத் தீஞ்சொல்

எனச் சிந்தாமணியில் வரும் செய்யுட் பகுதியுடன்

பொருளும் யாழும் விளரியும் பூவையும்
மருளும் நாளும் மழலை வழங்குவாய்

எனவரும் இச் செய்யுட் பகுதியையும் ஒப்பிட்டு நோக்குக.

இங்ஙனம் சீதாதேவியின் மொழியைப் பாராட்டி யுரைத்த இராவணனை சீதாதேவி தனது பாராட்டுரைகளைப் பொருட்படுத்தாமல் தன்மேல் வெறுப்புக்கொண்ட நிலையை எண்ணியெண்ணி உள்ளம் உடைகின்றான். எவ்விடத்து, எனக்கு இன்னருள் சுவது என்று முன் இரந்து நின்றவனாகிய இராவணன்,

தெருளும் நான்முகன் செய்ததுன் சிந்தையில்
அருளும் மின்மருங்கும் அரிதாக்கியோ

எனச் சீதாதேவியைக் கேட்கின்றான். தன் படைப்புத் திறமையெல்லாம் காட்டிச் சீதாதேவியைப் படைத்த நான்முகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உள்ளத்தில், அருளையும், உடலில் இடையையும் வைக்காமல் படைத்துவிட்டானே, எனப் புலமை நயத்துடன் இராவணன் புகல்கின்றான். தன்மீது சீதாதேவி இரக்கம் கொள்ளாதிருக்கின்ற மனத் திண்மையைத்தான் இராவணன் அருள் இல்லாததாக எண்ணி அல்லற் படுகின்றான்:

அறந்தரும் செல்வம் அன்னீர் அமுதினும்
இனியீர் என்னைப்
பிறந்திலன் ஆக்க வந்தீர் பேரருழில் மானம்
கொல்ல
மறந்தன பெரிய போனவரும் எனும்
ஆசைதன்னால்
இறந்து இறந்து உய்கின்றேன் யான் யார்
இதுதெரியும் ஈட்டார்

எனவரும் இச்செய்யுளில் இராவணன் சீதாதேவியைத் தன் தீய நிலைமை ஏற்றுக்கொள்ளுமாறு இரத்தலை நோக்குக.

''பொருளும் யாழும்'' என்பதில் வரும் பொருள் என்பது, மக்களைக் குறிக்கின்றது:

''தம்பொருள் என்ப தம்மக்கள்'' என்பது திருக்குறள்: மக்கள் என்பது மக்கள் பேசும் மழலைச் சொல்லைக் குறிக்கின்றது: மக்களின் மழலைச் சொல் மிக இனியதாகும் என்பதைக்

குழல் இனிது யாழ் இனிது என்ப தம்மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்

எனவரும் திருக்குறளால் உணர்க.

இனி, சீதாதேவியின் உள்ளத்திலே அருளின்மையைக் கூறிய இராவணன் அவளுடலிலே இடையின்மையையும் உடன் கூறினான்.

மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்

எனப் பால காண்டத்தில் வருதலையும் நோக்குக. சீதாதேவியின் இடை மிகச் சிறியதென்பதை உணர்த்த மருங்குல் இல்லையெனக் கூறப்பட்டது.

நாளும் இளமையும்

108. ஈண்டு நாளு மிளமையு மென்றிவை
மாண்டு மாண்டு பிறிதுறு மாலைய
வேண்டு நாள்வெறி தேவிளிந் தாலினி
யாண்டு வாழ்வ திடருழந் தாழ்தியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: ஈண்டு நாளும், இளமையும், என்றிவை, (நிலையில்லாமல்) மாண்டு, மாண்டு, பிறிது உறும் மாலைய, வேண்டும், நாள் வெறிதே விளிந்தால் இனி, வாழ்வது யாண்டு, இடர் உழந்து, ஆழ்தியோ,

பொருள்

ஈண்டு நாளும் - நிரம்பிய வாழ்நாளும், இளமையும் - இன்ப நுகர்ச்சிக்குரிய இளமைப் பருவமும், என்றிவை - என்று சொல்லப்படுகின்ற இவைகள், மாண்டு மாண்டு - செத்துச் செத்து, பிறிதுறும் - வேறுபாட்டையும், மாலைய - தன்மையை உடையன, வேண்டும் நாள் - விரும்பி (இன்பம் நுகர்தற்குரிய) இளமைப் பருவம் (விரும்பத்தக்க வாழ்நாள் எனவும் உரை கூறலாம்), வெறிதே - பயன் இன்றி (இன்ப நுகர்வை அடையாமல்), விளிந்தால் - கழிந்து ஒழியுமாலல், இனி - இனிமேல், வாழ்வது - இன்பத்தை நுகர்ந்து வாழ்வது, யாண்டு - எப்பொழுது, இடர் உழந்து - துன்பக் கடலுட் கிடந்து வருந்தி, ஆழ்தியோ - அழுந்துவாயோ,

பொழிப்பு

நிரம்பிய வாழ்நாளும், இன்ப நுகர்ச்சிக்குரிய இளமைப் பருவமும் என்று சொல்லப்படுகின்ற இவைகள் செத்துச் செத்து வேறுபாடடையும் தன்மையையுடையன: விரும்பி இன்பம் நுகர்தற்குரிய இளமைப் பருவம் பயனின்றிக் கழிந்தொழியுமாலல் இனிமேல் இன்பத்தை நுகர்வது எப்பொழுது, நீ துன்பக் கடலுட் கிடந்து வருந்தி அழுந்துவாயோ:

விளக்கம்

இச் செய்யுளில் வாழ்நாளும் இளமையும் பயனின்றிக் கழிந்து போகத் துன்பக்கடலில் கிடந்து ஏன் வருந்துகின்றாய் என இராவணன் சீதாதேவியை வினவும் ஆர்வத்தோடு கலந்த சோகக் குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவியாரின் வாழ்நாட்களும், இன்பம் நுகர்தற்குரிய இளமைப்பருவமும் பயனின்றிக் கழிவதாகக் கூறி இராவணன் இரங்குகின்றான்:

ஈண்டு நாளும் இளமையும் என்றிவை
மாண்டு மாண்டு பிறிதுறு மாலைய

என இராவணன் கூறுகின்ற குரலிலே சீதாதேவியின் வாழ்நாள் கழிந்து இளமைச் செல்வம் குலையாத நுகர்ச்சிப் பருவத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைத் தான் பெற்று நுகர முடியாமல் இருக்கின்றதே என்ற ஏக்கம் நிழலாடுவதைக் காண்கின்றோம்.

சீதாதேவியின் மேற்கொண்ட காமவேட்கையால் அலைக்கப் பட்டுத் தன் நிலைதளர்ந்து வருந்துகின்ற இராவணன் இளமை நலம் கனியக்கனிய தன்முன் இருக்கின்ற சீதாதேவியை, அவளின் உடன்பாடில்லாமல் தீண்டி நுகரமுடியாத நிலைமையை எண்ணி யெண்ணி இன்னல் அடைகின்றான் என்பதை உணர்கின்றோம். இதனை,

மேவு சிந்தையில் மாதரை மெய்தொடில்
தேவு பொன்தலை சிந்துக நீயெனப்
பூவின் வந்த புராதனனே புகல்
சாவம் உண்டு எனதாருயிர் தந்ததால்

எனச் சீதாதேவி அனுமானிடம் கூறுவதால் அறிக.

ஈண்டு நாளும் இளமையும் என்றிவை
மாண்டு மாண்டு பிறிதுறு மாலைய

என்னும் இக்கவிதைத் தொடருடன்

இளமையும் காமமும் நின்பாணி நில்லா
கடைநாள் இதுவென்று அறிந்தாரும் இல்லை

எனவரும் பாலைக் கலிப்பாட்டுத் தொடரையும் ஒப்பிட்டு நோக்குக.

இங்ஙனம் நிலையாமை உணர்ச்சிமிக்க துறவியைப் போலச் சீதாதேவியின் வாழ்நாளும், இளமையும் பயனின்றி வறிதே கழிகின்றதெனத் தன்மனம் உருகி வருந்துகின்ற இராவணன்

வேண்டுநாள் வெறிதே விளிந்தால் இனி
யாண்டு வாழ்வது இடர்உழந்து ஆழ்தியோ

எனச் சீதாதேவியைக் கேட்கின்றான். இன்ப நுகர்ச்சிக்குரிய இளமைப் பருவத்தில், இன்ப நுகர்வைப் பெறுது துன்பக் கடலில் மூழ்கி இன்னலுறுகின்ற சீதாதேவியின் நிலையை எண்ணிய இராவணன் மிக இரக்கங் கொண்டு கூறுவது போன்ற உணர்ச் சியை இக்கவிதைத் தொடர்களில் காண்கின்றோம். இனி, ''யாண்டு வாழ்வது இடர் உழந்து ஆழ்தியோ'' என்னும் தொடர் களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை இராவணனின் இரக்க உள்ளத்தை அப்படியே எடுத்துக்காட்டுகின்றது. இராவணன் சீதாதேவியின் கற்பை மாசுறுத்த முயல்கின்ற தீயோனையினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாதேவி துன்பமே உருவமாக இருந்து வாடுகின்ற நிலையையும் சிந்தித்து வருந்துகின்றான் என்பதையும் உணர்கின்றோம். இடர் உழந்து ஆழ்ந்தியோ என்ற தொடரில் இராவணனின் இரக்க உணர்ச்சி அலைமோதுகின்றது:

அழகினுக்கு இனியாருளர்

109. இழவெ னக்குயிர்க் கெய்தினு மெய்துக
குழைமு கத்துநின் சிந்தனை கோடிலால்
பழகி நிற்புறு பண்பியை காமத்தோ
டழகி னுக்கினி யாருள ராவரோ

கொண்டுகூட்டு: குழை முகத்து நின் சிந்தனை கோடிலால், எனக்கு உயிர் இழவு (எய்தும்) எய்தினும் எய்துக, பழகி நிற்புறு பண்பு இயை காமத்தோடு, அழகினுக்கு இனி யாருளர் ஆவர்(தோ)

பொருள்

குழை முகத்து - குண்டலம் அணிந்த முகத்தையுடைய, நின் சிந்தனை-உனது எண்ணம், கோடிலால்-(என்னை விரும்பி எனக்கு அருள் செய்யாமல்) மாறுபட்டால், எனக்கு - என்னுடைய, உயிர்-உயிர்க்கு, இழவு - அழிதலாகிய சாவு, எய்தினும் - நேர்ந்தாலும், எய்துக - நேரட்டும் (அதுபற்றி யான் கவலைப் படேன்) பழகி - கலந்து, நிற்புறு - நிலையாக உள்ள, பண்பு இயை காமத்தோடு - நல்லியல்புடைய காமத்தோடு, அழகினுக்கு-அழகினுக்கும், இனியார் உளராவர்-இனி என்னையன்றி (உனக்கு ஏற்றவர்) பிறர்யார் இருக்கின்றார்கள், (ஒருவரும் இல்லையே) என்பதாம்.

பொழிப்பு

குண்டலம் அணிந்த முகத்தையுடைய உனது எண்ணம் எனக்கு அருள் செய்யாது மாறுபட்டால், என்னுடைய உயிர்க்கு அழிதலாகிய சாவு நேர்ந்தாலும் நேரட்டும். அதுபற்றி யான் கவலைகொள்ளேன். உன்னோடு கலந்து நிலையாக உள்ள நல்லியல்புடைய காமத்தோடு அழகினுக்கும் இனி என்னையன்றி உனக்கு ஏற்றவர் யார் இருக்கின்றார்கள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் காமவேட்கையால் அறிவு மயங்கிய இராவணன், தானே சீதாதேவியின் அழகிற்கும், பண்பிற்கும் தக்கவனென நாணமில்லாது சீதாதேவியை நோக்கிக் கூறுகின்ற குரலைக் கேட்கின்றோம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் எந்த வகையினும் சீதாதேவி தன்னை மனமு வந்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாகச் செய்யவேண்டுமென்ற பெரு வேட்கையுடையவனாய் உலகின்றான் என்பதை உணர்கின்றோம்; அவன் தன் விருப்பத்தைச் சீதாதேவியாரிடம் அறிவிக்கும் போதெல்லாம் அவளை அறியாமலே அவன் வாயில் அழிவு குறித்து வரும் அமங்கலச் சொற்கள் இடம்பெற்று விடுகின்றன:

குழை முகத்து நின் சிந்தனை கோடிலை
இழவு எனக்கு உயிர் எய்தினும் எய்துக.

என்னுந் தொடரில் இராவணன் தன் அழிவை அப்படியே ஒப்புக்கொண்டு உரைக்கின்ற தன்மையைக் காண்கின்றோம்; இதனை,

பெண்பால் வைத்த ஆசைநோய் கொன்றது
என்றால்
ஆண்மைதான் மாசுணுதோ

என இராவணன் சீதாதேவியிடம் கூறுவதால் உணர்க; இங்ஙனம் இயம்பிய இராவணன் சிறிதும் நாணமில்லாமல் தானே சீதாதேவிக்குத் தக்க தலைவன் எனக்கூறித் தன் மிக்க காமவேட்கையை வெளிப்படுத்துகின்றான்.

பழகி நிற்புறு பண்பு இலை காமத்தோடு
அழகினுக்கு இனி யார் உளர் ஆவரோ

என இராவணன் கூறுகின்ற குரலிலே தன்னை யொழியச் சீதா தேவியின் அழகிற்கும், பண்பிற்கும் ஏற்ற தலைவன் யாரும் உலகில் இல்லையென மிக இறுமாப்போடு கூறுகின்ற அறியா மைத் தருக்கைக் காண்கின்றோம்.

இங்ஙனம் கற்புச் செல்வியாகிய சீதாதேவிக்கு முன்னின்று நாணமும், மானமும் இல்லாமல் இராவணன் கூறுகின்ற புல்லிய உரைகள் சீதாதேவியின் உள்ளத்தை மிக மிகப் புண்படுத்தி மீண்டும் மீண்டும் அவன்மேல் வெறுப்பையும் சீற்றத்தையும் விளைத்தன என்பதை உணர்கின்றோம்.

பழிஇது பாவம் என்று பார்க்கிலை பகரத்தக்க
மொழி இவை அல்ல என்பது உணர்கிலை
முறைமை நோக்காய்
கிழிகிலை நெஞ்சம் வஞ்சக் கிளையொடும்
இன்றுகாறும்
அழிகிலை என்றபோது என் கற்பு என்னாம்
அறம்தான் என் ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சீதாதேவி இராவணனின் புன்மொழிகளைக் கட்டு அவனை இகழ்ந்துரைத்த இம் மொழிகளையும் நோக்குக:

சனகன் மடந்தை

110. பெண்மை யும்மழ கும்பிற ழாமனத்
திண்மை யும்முதல் யாவையுஞ் செய்யவாய்க்
கண்மை யும்பொருந் திக்கரு ணைப்படா
வண்மை யென்கொல் சனகன் மடந்தையே.

கொண்டுகூட்டு: சனகன் மடந்தையே (உன்) பெண்மை யும், அழகும், பிறழா மனத்திண்மையும், முதல் யாவையும், செய்ய வாய் கண்மையும் பொருந்தி கருணைப்படாவண்மை என்கொல்.

பொருள்

சனகன் மடந்தையே - சனக மகாராசனின் புதல்வியே, பெண்மையும் - (உன்னிடத்தில்) பெண்தன்மையும், அழகும் - பெண்தன்மைக்குப் பொருத்தமான பேரெழிலும் (சிறந்த அழ கும்) பிறழா-(எத்தகைய இன்னல்கள் வந்தாலும்) வேறுபடாத (மாறுபடுதல் இல்லாத) மனத்திண்மையும் - மனவலிமையும், முதல் யாவையும் - முதலிய எல்லாவற்றையும், செய்யவாய் - நல்லனவாகி அமைந்திருந்தும், கண்மையும் - கண்ணோட்டமும், பொருந்தி - அமைந்து, கருணைப்படா-கருணையிற் பொருந்தாத, வண்மை என் கொல்-இயல்பு எதனால் விளைந்தது (உண்டானது).

பொழிப்பு

சனகராசன் புதல்வியே! உன்னிடத்தில் பெண்தன்மைக்குப் பொருத்தமான பேரெழில் மாறுபடுதலில்லாத மனவலிமை முதலிய யாவும் நல்லனவாகி அமைந்திருக்கவும், கண்ணோட்டம் அமைந்து கருணையிற் பொருந்தாத இயல்பு எதனால் விளைந்தது என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியிடம் கண்ணோட்டத்தோடு கலந்த கருணை இயல்பு இல்லையென்று சொல்லும் இராவணனின் குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவியிடத்தில் பெண் தன்மையும், அழகும், கலங்காத மனவலிமையும் ஒரு சேரக் கலந்திருப்பதைக் கண்ட இராவணன் மிகமிக வியக்கின்றான்; சீதாதேவியின் பெண்மையையும் அழகை யும் தன் காமவேட்கைக்கு இரையாக்க நினைத்த இராவணனின் எண்ணத்தைச் சிதறடித்த சீதாதேவியின் மனவலிமையை இரா வணனால் மறக்கமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மையும் அழகும் பிறழா மனத்
திண்மையும் முதல் யாவையும் செய்யவாய்

என இராவணன் கூறுகின்ற வாய்மை உரைகள் வழி வழி நின்று வாழத்தக்கதாகும். கலையுள்ளம் படைத்த இராவணன் சீதாதேவியின் பெண்தன்மையையும், பேரழகையும் கண்டு உள்ளம் செழித்தது போலவே, அவளின் கலங்காத மனத்திண்மையையும் கண்டு வியக்கின்றான் என்பதைக் காணக் காண எமது உள்ளமும் வியப்படைகின்றது.

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்

எனவரும் வள்ளுவர் மொழிக்கிணங்க இராவணன் சீதாதேவியின் பெண்தன்மையையும் பேரழகையும் மனத்திண்மையையும் மிகச் சிறந்ததெனப் பாராட்டி உரைக்கின்றான்:

பொன்னின் ஒளி பூவின் வெறி சாந்து பொதி சீதம்
மின்னின் எழில் அன்னவள்தன் மேனியது மான
அன்னமும் அரம்பையரும் ஆர் அமிழ்தும் நாண
மன் அவை இருந்த மணி மண்டபம் அடைந்தாள்

எனச் சீதையின் அழகையும் பெண்மையையும் கம்பர் பாராட்டி உரைத்தலையும்

''கண்டனன் கற்பினுக்கு அணியைக்
கண்களால்''

என, சீதையின் கற்பென்னும் கலங்கா நிலைமையை அனுமானும் பாராட்டி உரைத்தல் காண்க.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்

என்பது திருக்குறள்.

இங்ஙனம் சீதையின் பண்புகளைப் பாராட்டி உரைத்த இராவணன் அவளிடம் கண்ணோட்டத்தோடு கலந்த கருணைப் பண்பு இல்லாத குறையைச் சொல்லிச் சொல்லிக் கவலைப்படுகின்றான்; தன் காமவேட்கை யென்னும் பொல்லாத நினைவை ஏற்காது இருக்கின்ற சீதாதேவியாரைக் கண்ணோட்டமும் கருணையும் இல்லாதவளெனக் கூறிக் கவலை அடைகின்ற இராவணனின் மனநிலையை எண்ண எண்ண இரக்கம் உண்டாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இச் செய்யுளின் ஈற்றடியை "வண்மை என்கொல் சனகன் மாண்டவா" எனப் பாடங்கொண்டு சனகமகாராசனது வமிசத்தில் அருள் பொருந்துவதினால் உண்டாகின்ற ஈகைக் குணமும் ஒழிந்துபோன வகை யாது காரணமோ எனப் பொருள் கூறுவாரும் உளர்.

இச் செய்யுளின் மூன்றும் அடியை கண்மையும் பொருந்திக் கருணைபடர் எனப்பாடம் கொள்வாரும் உளர். வண்மை - என் பதற்கு இயல்பு எனப் பொருள் கொள்ளப்பட்டது.

அலறிய மெய்க்குரல்

111. வீட்டுங் காலத் தலறிய மெய்க்குரல்
கேட்டுங் காண்டற் கிருத்திகொல் கிள்ளாநீ
நாட்டுங் காலனெடு நல்லறத் தின்பயன்
ஊட்டுங் காலத் திகழ்வ துறுங்கொலோ.

கொண்டுகூட்டு: கிள்ளை, (யான் இராமனை) வீட்டுங்காலத்து அலறிய மெய்க்குரல் (குரலை) நீ கேட்டும், காண்டற்கு இருத்தி கொல், நாட்டுங்கால், நெடுநல் அறத்தின் பயன, ஊட்டுங் காலத்து, இகழ்வது உறுங்கொலோ.

பொருள்

கிள்ளை - கிளியைப்போல் இனிய மொழியைப் பேசுகின்ற வளே (கிளிபோன்றவளே) வீட்டுங்காலத்து - (யான் இராமனைக்) கொன்றபொழுது, அலறிய - அவன் ஏ, சீதா! ஏ, இலக்குமணு! என்று கதறிய, மெய்க்குரல் - உண்மையான குரலை (அவனின் சொந்தக் குரலை) நீ கேட்டும் - நீ உன்னுடைய காதுகளால் (அன்று) கேட்டிருந்தும், (இராமன் இன்னும் உயிருடன் இருக் கின்றான் என்ற எண்ணத்துடன்) காண்டற்கு - அந்த இராமனைக் காணுதற்காக (காணலாம் என்ற நம்பிக்கையுடன்) இருத்தி கொல் - (நீ) இருக்கின்றாயோ, நாட்டுங்கால் - நிலையாக உறுதிப் படுத்திச் சொல்லுமிடத்து, நெடு நல்லறத்தின் பயன் - (அழி வில்லாமல்) நீண்டகாலம் நிலைபெறுகின்ற சிறந்த புண்ணியத்தின் பயனை (தருமத்தின் பயனை) ஊட்டுங்காலத்து - நீ நுகரும் வண் ணம் (அநுபவிக்கும்படி) விதி கூட்டிவைத்தபோது, இகழ்வது - (அங்ஙனம் விதி கூட்டிவைத்த அப்புண்ணியப் பேற்றை) வேண்டா மென்று இகழ்வது (அவமதிப்பது) உறுங்கொலோ - தக்க தாகுமோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

கிளிபோல்றவளே! யான் இராமனைக் கொன்றபொழுது அவன் ஏ சீதா! ஏ இலக்குமணு! என்று கதறிய உண்மையான குரலை நீ உன்னுடைய காதுகளால் கேட்டிருந்தும், இராமன் இன்னும் உயிருடன் இருக்கின்றான் என்ற எண்ணத்துடன் அவனைக் காணலாமென்று இருக்கின்றாயோ? நிலையாக உறுதிப் படுத்திச் சொல்லுமிடத்து அழிவில்லாமல் நீண்டகாலம் நிலை பெறுகின்ற சிறந்த புண்ணியத்தின் பயனை நீ நுகரும்வண்ணம் விதி கூட்டிவைத்தபோது அப்புண்ணியப்பேற்றை வேண்டா மென்று வெறுப்பது தக்கதாகுமா என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராமபிரான் இறந்துவிட்டான் எனச் சீதா தேவியிடம் பொய்மொழி புகன்று அவளின் உள்ளத்தை மாற்ற முனைகின்ற இராவணனின் ஆற்றல் அழிந்த குரலைக் கேட் கின்றோம்.

மாயமானுக வந்த மாரீசனை உண்மை மானென நினைந்து பிடித்தற்காகத் துரத்திச் சென்ற இராமபிரான் அது பொய் மானெனத் தெளிந்தவுடன் தன் பாணத்திற்கு இரையாக்கினார். அங்ஙனம் இராமபிரானின் பாணத்திற்கு இரையாகி ஆவி விடு கின்றபொழுது மாயமானுகச் சென்ற அம்மாரீசன் தன் குரலை மாற்றி இராமபிரான் அவலப்பட்டுக் கூவி அழைப்பதுபோல ஏ சீதா! ஏ இலக்குமணு! என அலறினான். அலறிய அவனின் குரலைத் தன் ஆருயிர்த் தலைவனுகிய இராமபிரானின் குரல் என்றே எண்ணிய சீதாதேவியானவள், இலக்குமணனை இராம பிரானைத் தேடிச் செல்லும் வண்ணம் கொடிய மொழிகளால் வைது போக்கினாள் என்பது ஆரணியகாண்டத்தில் காணும் வரலாறுகும்.

இச்செயல்களைச் சீதாதேவி நேரிற் கண்டு உணர்ந்திலள் என்பதை எண்ணிய இராவணன் தானே இராமபிரானைக் கொன்றதாகவும், அவன் ஆவி விடும்பொழுது ஏ சீதா! ஏ இலக்குமணு! என அலறியதாகவும் பொய் புனைந்து சீதா தேவிக்குக் கூறுகின்றான் என்பதை உணர்கின்றோம். இராம பிரான் இறந்துவிட்டான் என்பதைச் சீதாதேவி நம்பிவிட்டால் தன்னை விரும்பி ஏற்றுக்கொள்வாள் என்பதே இராவணனின் எண்ணமாகும்.

வீட்டும் காலத்து அலறிய மெய்க்குரல்
கேட்டும் காண்டற்கு இருத்தி கொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இராவணன் சீதாதேவியைக் கேட்கின்ற குரலிலே இராம பிரான் இறந்துவிட்டான் என்ற துணிவைத் தோற்றுவித்து நிற்றலைக் காண்க.

சீதாதேவிக்கு இப்பொழுது நல்வினைப்பயன் நிரம்பிய காலமென்றும் இராவணன் கூறுகின்றான்; தன் தீய எண்ணத்தைச் சீதாதேவி ஏற்றுக்கொள்ளாமல் வெறுக்கின்ற செயல், நல்வினைப் பயனை விதி கூட்டி வைக்கும்பொழுது அதனை நுகராது வெறுக்கின்ற செயலை ஒக்குமென்பதே இராவணன் கருத்தாகும்.

நாட்டுங்கால் நெடு நல்லறத்தின் பயன்
ஊட்டுங் காலத்து இகழ்வது உறுங்கொலோ.

எனச் சீதாதேவியை இராவணன் கேட்கின்ற குரலிலே கலந்துள்ள ஏக்கத்தையும், வியப்பையும் உணருங்கள். சீதாதேவி தன் அன்பிற்குரியவளாய்த் தன்னை ஏற்றுக்கொண்டால் அவள் அடையப்போகும் இன்பப் பேறுகளையெல்லாம் எண்ணிய இராவணன், இங்ஙனமோர் பெருஞ்செல்வ வாழ்வில் வீற்றிருந்து இன்பம் நுகரும் பெரும்பேற்றை விதி கூட்டிவைக்கவும், சீதாதேவி அதனை வெறுத்து இகழ்கின்றாளே என்பதை எண்ணி யெண்ணி வியப்படைகின்றான்:

குலவுறல் அன்னம் முன்னம் யாரையும்
கும்பிடா என்
தலைமிசை மகுடம் என்ன தனித்தனி இனிது
தாங்கி
அலகு இல் பூண் அரம்பை மாதர் அடிமுறை
ஏவல் செய்ய
உலகம் ஈர் ஏழும் ஆளும் செல்வத்துள் உறைதி
என்றான்.

என முன்னர் சீதாதேவியைக் கவர்ந்து வரும்பொழுது இராவணன் தன்னை ஏற்றுக்கொண்டால் அவள் அடையப்போகும் பெருவாழ்வை எடுத்துக் கூறியிருத்தலைக் காண்க. எனவே சீதாதேவி தன் பெருவாழ்வை மதித்துத் தன்னை ஏற்றுக்கொள்வாளென இராவணன் எண்ணியெண்ணி ஏமாற்றம் அடைந்து விட்டான் என்பதை உணர்கின்றோம்.

பழி கொள்வாயோ

112. தக்க தென்னுயிர் வீடுறத் தாழ்கிலாத்
தொக்க செல்வம் தொலையு மொருத்திநீ
புக்கு யர்ந்த தெனும்புகழ் போக்கிவே
றுக்க தென்னு முறுபழி கோடியோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: என் உயிர் வீடு உற, தக்கது எனில், தாழ்கிலா, தொக்க செல்வம் தொலையும் ஒருத்தி நீ, புக்கு உயர்ந்தது எனும் புகழ் போக்கி வேறு, உக்கது என்னும் உறுபழி கோடியோ (கொள்வாயோ).

பொருள்

என் உயிர் வீடு உற - (என்மேல் நீ அருள்சுரந்து ஆதரியாமையினால்) என் உயிர் அழிய, (நாசமடைய) தக்கது எனில் - தகுதி உடையதாகும் என்றால், தாழ்கிலா - தாழ்வடையாத (மிக மிக உயர்ந்த) தொக்க செல்வம் - திரண்ட செல்வம் எல்லாம், தொலையும் - என்னுடன் அழிந்துபோகும், ஒருத்தி நீ - ஒப்பற்றவளாகிய நீ, புக்கு - என் இல்லத்தில் புகுதலால் (அடைதலால்) உயர்ந்தது எனும் - என் செல்வம் உயர்வடைந்தது என்று கூறப்படும், புகழ் போக்கி - புகழை அகற்றி (புகழைப் பெறுமல்) வேறு - அதற்கு மாறாக, உக்கது என்னும் - (என் செல்வம்) அழிந்ததென்று சொல்லப்படும், உறுபழி - மிக்க பழியை, கோடியோ - (நீ) கொள்வாயோ.

பொழிப்பு

என்மேல் நீ அருள்சொரிந்து ஆதரியாமையினால் என் உயிர் அழியத் தகுதியுடையதாகுமானால், தாழ்வடையாத எனது திரண்ட செல்வமெல்லாம் என்னுடன் அழிந்துபோகும். ஒப்பற்ற வளாகிய நீ என் இல்லத்தை அடைதலால் என் செல்வம் உயர்வடைந்தது எனக் கூறப்படும் புகழைப்பெறுமல் அதற்கு மாறாக என் செல்வம் அழிந்ததென்று சொல்லப்படும், மிக்க பழியை நீ! ஏற்றுக்கொள்வாயோ என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணன் தன் செல்வமும் தானும் அழிந்து போதற்கான பெரும் பழியைச் சீதாதேவி கொள்ளப் போகின்றாள் எனச் சொல்லுகின்ற குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவியின் அருள் தனக்குக் கிடைத்தால்தான் தன்னால் உயிர்வாழ முடியும் எனவும், அருள் கிடைக்காவிட்டால் தான் இறந்துபடுதல் திண்ணமெனவும், அங்ஙனம் தான் இறந்து படவே தன்பெரும் செல்வமும் அழிந்து படுமென்றும் இராவணன் முடிந்த முடிவாகக் கூறுகின்றான் என்பதைத் தெளிந்து கொண்டோம். தனக்குவரும் அழிவைப் பார்க்கினும் தன்னையும் தன் செல்வத்தையும் அழித்தாள் என்னும் பழி சீதாதேவியை அடையப் போகின்றதேயென எண்ணிக் கவலைப்படுகின்ற நிலையில் இராவணன் காணப்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தி நீ புக்கு உயர்ந்தது எனும் புகழ்போக்கி
வேறு உக்கது என்னும் உறுபழி கோடியேரி.

என இராவணன் சீதாதேவியைக் கேட்கின்ற குரலில் கலந்து எழுகின்ற ஆற்றுமை, நீ பழிபூணத்தக்கள் அல்ல எனச் சொல்லிக் கவல்கின்ற இராவணனின் உள்ளநிலையை எடுத்துக் காட்டுகின்றது.

இராவணன் தனக்கு அழிவு வந்ததென்பதை உணர்ந்து கூறுவதுபோலத் தான் உரைக்கும் மொழிகளில் அடிக்கடி தன் அழிவைக் குறிப்பிடுகின்றான்.

தக்கது என்னுயிர் வீடுற

என அவன் கூறுவதை நோக்குக.

மூவுலகின் தனிநாயகர்

113. தேவர் தேவியர் சேவடி கைதொழும்
தாவின் மூவுல கின்றனி நாயகம்
மேவு கின்றது நுன்கண் விலக்கினை
ஏவ ரேழையர் நின்னி னிலங்கிழாய்

கொண்டுகூட்டு: இலங்கு இழாய், தேவர் தேவியர் சேவடி கைதொழும், தாவில் மூவுலகின் தனி நாயகம், நுன்கண் மேவுகின்றது. விலக்கினை, நின்னின் ஏழையர் ஏவர்.

பொருள்

இலங்கு இழாய் - ஒளிவீசி விளங்குகின்ற அணிகலன்களை அணிந்தவளே, தேவர் - தேவர்களும், தேவியர் - அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியர்களான தேவமாதர்களும், சேவடி கை தொழும் - உன் செம்மை நிறம் வாய்ந்த திருவடிகளைக் கைகூப்பி வணங்கும்படியான, தாவில் - குற்றமில்லாத (அழிவில்லாத), மூவுலகின் - மூன்று உலகங்களிலும் ஆணை செலுத்தக்கூடிய, தனிநாயகம் - ஒப்பும் உயர்வும் இல்லாத தனிப்பெரும் தலைமைப் பேறு, நுன்கண் மேவுகின்றது - உன்னிடத்துத் தாமேவே வந்து சேருகின்றது, விலக்கினை - நீ அத்துணைச் சிறந்த பெரும்பேற்றை வேண்டாமென்று விலக்குகின்றாய், நின்னின் - உன்னைப்போல் (உன்னைக் காட்டிலும்), ஏழையர் ஏவர் - அறிவில்லாதவர் யாருளர் (ஒருவரும் இல்லையென்பதாம்).

பொழிப்பு

ஒளிவீசி விளங்குகின்ற அணிகலன்களை அணிந்தவளே! தேவர்களும் அவர்களுடைய தேவிமார்களும் செம்மை நிறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த உன் திருவடிகளைக் கைகூப்பி வணங்கும்படியானதும், அழிவில்லாததுமாகிய மூன்று உலகங்களிலும் ஆணை செலுத்தக் கூடிய தனிப்பெருந் தலைமைப்பேறு தானாகவே வந்து உன்னிடத்தில் சேருகின்றது. அங்ஙனம் சேருகின்ற அப் பெரும்பேற்றை வேண்டாமென்று விலக்குகின்றாய். உன்னைப்போல் அறிவில்லாதவர் யார் இருக்கின்றார்கள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் மூன்றுலகத்திலும் ஆணை செலுத்தி வாழ்கின்ற பெரும் தலைமைப் பேற்றை வெறுத்துத் தள்ளுகின்ற சீதாதேவியின் நிலைமையை எண்ணி வருந்துகின்ற இராவணனின் வியப்புக்குரலைக் கேட்கின்றோம்.

மூவுலகத்தையும் ஆளுகின்ற தன் பெருவாழ்வைக் கண்டதும், சீதாதேவி தன்னை ஏற்றுக்கொள்வாள் என்று எண்ணிய இராவணன், அவளின் மனத்திண்மையையும், பெருஞ் செல்வ வாழ்வைப் பொருட்படுத்தாத பெருந் தன்மையையும் கண்ட இராவணன், கலங்கிவிட்டான். தான் பெருந்தவம் கிடந்து பெற்ற மூவுலகின் ஆட்சிப்பேற்றை ஒரு துரும்பளவும் மதியாத சீதாதேவியின் பெரும் பண்பை அவளின் அறியாமைப் பண்பென்றே இராவணன் கருதி விட்டான்.

தேவர் தேவியர் சேவடி கைதொழும்
தாவின் மூவுலகின் தனிநாயகம்

என இராவணன் மூவுலகையும் ஆளுகின்ற அரசப் பெருவாழ்வைச் சீதாதேவிக்குச் சொல்லும் பொழுதே தன்னை மறந்து விடுகின்றான்.

ஏவர் ஏழையர் நின்னில் எனச் சீதாதேவியின் அறியாமைக்கும் இரங்குகின்றான்.

குப்பைக்கீரை உப்பின்றி வெந்ததை
ஒன்றைவிட்டு ஒருநாள் தின்றுகிடப்பினும்
என் கணவன் வாழ்க்கை நனி சிறந்ததுவே

எனும் கற்பு நலம் கனிந்த சீதாதேவியானவள், மூவுலகினை ஆளுகின்ற பெருஞ்செல்வ வாழ்வைப் பெரிதாக மதித்துத் தன் ஆருயிர்த் தலைவனாகிய இராமபிரானையும் மறந்து கற்பையும், காதலையும் களங்கமுறுத்துவாள் என எண்ணுகின்ற இராவணனின் அறியாமையை நினைந்து இரங்கவேண்டியவர்களாகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அடிமை கொள்வாய்

114. குடிமை மூன்றுல குஞ்செய் யுங் கொற்றத்தென்
அடிமை கோடி யருளுதி யாலெனு
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்விழுந் தான்பழி பார்க்கலான்.

கொண்டுகூட்டு: பழி பார்க்கலான், மூன்றுலகும் குடிமை செய்யும், கொற்றத்து என் அடிமை கோடி அருளுதி (ஆல்) எனு, முடியின் மீது முகிழ்த்து உயர் கையினன், படியின்மேல் விழுந்தான்.

பொருள்

பழி பார்க்கலான் - (அறத்தை மறந்து அயலான் மனையாளை அடைதலால் அழியாத) பழிவரும் என்பதை எண்ணுதவனான இராவணன், மூன்றுலகும் - மூன்று உலகத்திலுள்ள உயிர்களெல்லாம், குடிமை செய்யும் - அடிமை செய்யும்படியான, கொற்றத்து - வெற்றியையுடைய, என் அடிமைகோடி - என் அடிமைப்பணியை ஏற்றுக் கொள்வாயாக, அருளுதி - எனக்குக் கருணை புரிவாயாக, எனு - என்று சொல்லி, முடியின்மீது - தலையின்மேலே, முகிழ்த்து - குவித்து, உயர்கையினன் - உயர்த்திய கைகளை உடையவனாய், படியின் மேல் விழுந்தான் - நிலத்தில் வீழ்ந்து வணங்கினான்;

பொழிப்பு

அறத்தை மறந்து அயலான் மனையாளை அடைதலால் அழியாத பழிவரும் என்பதை எண்ணுத இராவணன், மூன்று உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் அடிமை செய்யும்படியான வெற்றியையுடைய என் அடிமைப் பணியை ஏற்றுக்கொள்வாயாக. எனக்குக் கருணை புரிவாயாக என்று சொல்லி, தலையின்மேலே உயர்த்திக் கும்பிட்ட கைகளை உடையவனாய் நிலத்தில் வீழ்ந்து சீதாதேவியை வணங்கினான் என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் மூவுலகிற்கும் முதல்வனாய் விளங்கும் மூடி மன்னனாகிய இராவணன், படிமிசை தன் முடிதோயும் வண்ணம் வீழ்ந்து சீதாதேவியை வணங்கிய செயலைக் கூறும் கம்பனின் வியப்புக் குரலைக் கேட்கின்றோம்;

சீதாதேவியை நிலத்தில் வீழ்ந்து வணங்கிய இராவணனின் நிலைமையை எண்ணியெண்ணி நிறைகண்ணீர் வடிக்கின்ற கலக்கத்தை இச் செய்யுளின் ஓசை எமக்குக் காட்டுகின்றது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமை மூன்று உலகும் செய்யும் கொற்றத்து என்
அடிமை கோடி.

என இராவணன் சீதாதேவியைக் கெஞ்சுகின்ற குரலைக் கேட்கக் கேட்க எமது நெஞ்சமும் நிலை தளருகின்றது.

சினத்தொடும் கொற்றம் முற்றி இந்திரன்
செல்வம் மேவி
நினைத்தது முடித்து நின்றேன்

என்றெல்லாம் மொழிந்து செருக்கடைகின்ற இராவணன்

குடிமை மூன்றுலகும் செய்யும் கொற்றத்து என்
அடிமை கோடி

எனச் சீதாதேவியை இரந்துகேட்கும் அளவிற்குத் தன் ஆண்மையையும், மானத்தையும் இழந்துவிட்டான் என்பதை எண்ணும் பொழுது உள்ளம் பொருமுகின்றது.

முடியின் மீது முகிழ்த்து உயர் கையினன்
படியின் மேல் விழுந்தான்

என இராவணன் படியில் வீழ்ந்து சீதாதேவியைப் பணிகின்ற மானங்கெட்ட செயலைச் சொல்லிய கம்பர் அப்படியே மனஞ் சோர்ந்துவிடுகின்றார். ஆண்குலத்திற்கே இராவணனின் இச் செயல் அழியாத அவமானத்தைக் கொடுத்துவிட்டதாகக் கம்பர் கொள்ளுகின்றார். பழிபார்க்கலான் என இராவணனைக் கம்பர் இழிமொழிகளால் வைகின்றார். அறத்தை மறந்து அயலான் மனையாளை அடைய முயலுகின்ற இராவணன் அடையும் பழி ஒருபுறமிருக்க, ஆண்மையும், தவ வலிமையும், அமரரை ஏவல் கொள்ளும் ஆற்றலும் வாய்ந்த ஆண் சிங்கமாகிய இராவணன், அயலான் மனையாளாகிய ஓர் பெண்ணை அடிபணிந்து வீழ்ந்து வணங்கினன் என்னுஞ் சொல் ஆண்குலத்திற்கே என்றும் ஆறாப் பழியாய் அமைந்துவிட்டதென்பதையும் அறிகின்றோம்.

பழி பார்க்கலான் படியின்மேல் விழுந்தான்
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின்மேல் விழுந்தான்
அடிமைகோடி அருளுதியாய் எனை படியின்மேல்
விழுந்தான்

எனப் பாட்டின் தொடர்களைக் கொண்டு கூட்டிக் கூட்டிப் பொருள் கொள்ளுமாறு பாட்டை ஆக்கிய கம்பன், இராவண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் ஆண்மையற்ற பண்பையும் எமக்கு எடுத்துக் காட்டிக் காட்டிக் கவலேப்படுகின்றுன் என்பதைக் காண்கின்றேம்; பழி பார்க்கலான் எனவரும் கம்பரின் மொழியுடன்

எளிது என இல் இறப்பான் எய்தும்-எஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி

எனவரும் வள்ளுவர் குறளையும்,

அறம்புகழ் கேண்மை பெருமை இந்நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா – பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம்என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்.

எனவரும் நாலடியார் செய்யுளையும் ஒப்பிட்டு நோக்குக;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 வஞ்சகனின் நஞ்சனைய உரைகளைக்கேட்ட சீதாதேவியின் வெஞ்சின மொழிகள்

[115 — 124 செய்யுள்]

அறத்தை மறந்து, அயலான் மனையாளை அடைய முயலுதல் பழிதருமெ கொடுவினையென்பதை எண்ணிப் பாராத இராவணன், தன் தீய நினைவை ஏற்றுத் தன்னை ஆட்கொண்டருள வேண்டுமென்று சீதாதேவியை வேண்டினான்: தன் மணிமுடிகள் மண்ணில் தோயும் வண்ணம் வீழ்ந்து வணங்கினான்.

இங்ஙனம் தன் முன்னிலையில் நின்று, இராவணன் கூறுகின்ற அருவருக்கத்தக்க மொழிகளையும், வீழ்ந்து தன்னை வணங்குகின்ற வேண்டாத புன்செயலையும் பொறுக்கமுடியாத சீதாதேவி பெருஞ் சினங்கொண்டாள். இராவணனின் தீய உரைகள் நெருப்பில் வைத்துப் பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சலாகை போலச் சீதாதேவியின் செவிகளைத் தீய்த்தன. அவளுடைய மனம், அமைதிகுலைந்து மாறுபட்டது: கண்களிலிருந்து செந்நிற மான குருதி வடிந்தது. அவள் தன் உயிருக்குத் தீங்குவரும் என்ற சிந்தனையே இல்லாதவளாய்ச் சினத்துடன் இராவணனை வெறுத்துக் கூறுவாளாயினள்:

துரும்பே! நீ கூறிய கொடுஞ் சொற்கள் குடிப்பிறப்பினை உடைய மகளிராற் கேட்கக்கூடியனவல்ல. என் ஆருயிர்த் தலைவனைப் பிரிந்தும் நைந்து நைந்து வாடி ஒழிந்து போகாமல் இருக்கின்ற கொடியவளாகிய யான், கற்பினும் உயர்ந்த பொருள் ஒன்றைக் கண்டறியேன், யான் கூறுகின்ற மொழிகளை மிகவிழிப்புடன் கேட்பாயாக.

அறிவில்லாதவனே! எல்லாராலும் வணங்கத்தக்க பெருமை பொருந்திய இராமபிரானின் வில்லிலே நின்று புறப்படும் அம்புகள், மகாமேரு மலையை ஊடுருவிச் செல்லவும், விண்ணினைப் பிளந்து அப்பாற் செல்லவும், பதினான்கு உலகங்களையும் ஒருங்கே பாழாக்கவும் வல்லன. அந்த இராமபாணங்களின் ஆற்றலையெல்லாம் அறிந்துள்ள நீயும் பண்பில்லாத மொழிகளைப் பகர்ந்து, பத்துத்தலைகளும் சிதறி வீழத்தக்க நிலையை வரவேற்கின்றாயா? என் தலைவனை நேரில் எதிர்த்துப் போராற்றி வெல்லும் நெஞ்சத் துணிவும், வல்லமையும் உனக்கும் உண்டா? வஞ்சனை மானொன்றை ஏவி, என்தலைவனைப் பிரித்துத் தனியே இருந்த என்னைத்தானே, நீ கவர்ந்து வந்தாய், உன் குலத்தினராகிய அரக்கர்களையெல்லாம் அழிக்கும் நஞ்சைப்போல விளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். நம்பியாய இராமபிரானை நேரில் எதிர்த்து நிற்கத்தக்க தகுதிப்பாடும் உன்னிடம் தங்கியுள்ளதா? நீ உயிருடன் வாழ விரும்பினால் என்னைச் சிறையில் இன்றும் விடுதலை செய்து இராமபிரானிடம் சேர்ப்பாயாக. கழுகின் வேந்தனாகிய சடாயு வினால் அடியுண்டு தரையில் வீழ்ந்தவனே! உன் பத்துத் தலை களும் இருபது தோள்களும் வில்லாற்றல் படைத்த இராம பிரானுக்கு, அம்புகளை இலக்கின்கண் சென்று அடையும் வண்ணம் செலுத்தி விளையாடும் நல்ல இலக்குக் குறிகளாகும். இவ் வாறன்றி நீ இராமபிரானுடன் போராற்றத் தக்க வல்லமை வாய்ந்தவனாகமாட்டாய்.

நீ சடாயுவுடன் ஆற்றிய போரில் சங்கரன் உன் தவத்துக் கிரங்கித் தந்தருளிய வாட்படையில்லாவிட்டால் கட்டாயம் தோற்றிருப்பாய்; நீ ஆற்றிய தவத்தினால் பெற்ற, அழியாத வாளும், ஒடியாத வாட்படையும், மூவரைவென்று தேவரை ஏவல் கொள்ளும் முதன்மை முதலிய யாவும், கூற்றுவனால் உனக்கோர் இன்னலும் எய்தாமற் காக்கத் தக்கனவாய் விளங்க லாம். இராமபிரான் விடுகின்ற அம்புகளின் முன், எதிர்த்து நின்று உன்னைக் காப்பாற்றத் தக்கனவாகா.

நீ இமையா முக்கண் ஈசனிடம் பெற்றுள்ள, வரபலங்களும், நான்முகனிடம் பெற்றுள்ள வல்லமைகளும், இராமபிரான், வில்லில் தொடுத்து விடுகின்ற அம்புகளால் அழிந்து போக, நீயும் ஈற்றில் இறந்துபடவாய் என்பது திண்ணம். விளக்கின் முன் இருள் என்றும் நிற்றதில்லை.

ஈசன் எழுந்தருளும் வெள்ளிமால் வரையை அள்ளி வேரொ டும் நீ எடுத்தகாலத்தில், அவர் தன் பெருவிரல் நுனியினால் அழுத்தி உன்னை மலையின் கீழ் வீழ்த்தி வெற்றிகொண்டார். அங்ஙனம் உன்னையும் மிக எளிதாக வென்ற ஈசன், முப்புரங் களை எரித்த பொழுது, கைக்கொண்ட மேருமலையாகிய வில், என் உயிர்த் தலைவனாகிய இராமபிரானின் ஆற்றலைத் தாங்க மாட்டாமல், என் சுயம்வர நாளன்று முரிந்து வீழ்ந்த பொழுது, எழுந்தபேரொலியை நீ கேட்டிலையோ? வெள்ளிமால்வரையை வேரொடும் தூக்கி எடுத்தேன் என்றும், திசையானைகளை நிலை கலங்கி ஓடச் செய்தேன் என்றும், எந்நாளும் சொல்லிச் சொல்லி உன்னை வியக்கின்ற நீ, வில்லை ஏந்திய கையோடும், இலக்கு மனன் என்னைக் காத்து நிற்கும்பொழுது, தலை நிமிர்ந்து வரா மல், நீ இன்னமும் பெண்களின் காலிலே வீழ்ந்து வணங்கு கின்றாயா? அறிவில்லாதவனே! நீ ஒளித்துறையும் இடம் இது காண் என்று என்தலைவனாகிய இராமபிரான் அறியவந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது, ஆழிசூழ் இலங்கையும் அதனைச் சூழ்ந்துள்ள கடலும், தான் அழியுமோ, அவ்வளவில் இராமபிரானின் சினம் தணிந்து விடுமோ. அரக்கர் தலைவனுடைய உன் உயிரைக் கவர்ந்த பிற கேனும் அவரின் சினந்தணியுமோ தணியாது. இவ்வுலகமும் ஊழிகாலமும் அவரின் சினத்தினுல் நிலைமாறிவிடும் என்பதை உணர்வாயாக, (என்று சீதாதேவி இராவணனுக்குக் கூறினுள்) என்பதாம்.

தீய்ந்தன செவிகள்

115. காய்ந்தன சலாகை யன்ன வுரைவந்து
கதுவா முன்னம்
தீய்ந்தன செவிக ளுள்ளந் திரிந்தது சிவந்த
சோரி
பாய்ந்தன கண்க ளொன்றும் பரிந்தில
ளுயிர்க்கும் பெண்மைக்கு
ஏய்ந்தன வல்ல வெய்ய மாற்றங்க ளினைய
சொன்னுள்.

கொண்டுகூட்டு: காய்ந்தன சலாகை அன்ன, உரை வந்து, கதுவா முன்னம், செவிகள் தீய்ந்தன, உள்ளம் திரிந்தது, கண்கள், சிவந்த சோரி பாய்ந்தன, உயிர்க்கும் ஒன்றும் பரிந்திலள், பெண்மைக்கு ஏய்ந்தனவல்ல, வெய்ய இனைய மாற்றங்கள் சொன்னுள்.

பொருள்

காய்ந்தன சலாகை அன்ன - (இராவணன் கூறிய) நெருப்பிலே பழுக்கக் காய்ந்தனவாகிய நாராசங்களைப்போன்ற, உரை வந்து - சொற்கள் வந்து, கதுவா முன்னம் - புகுதற்கு முன்னமே (காதுகளுள் நுழைதற்கு முன்னமே) செவிகள் தீய்ந்தன - (சீதாதேவியின்) காதுகள் இராவணன் கூறிய கொடுஞ் சொற்களைத் தாங்கமாட்டாமல் எரிந்துபோயின, உள்ளம் திரிந்தது - மனம் அமைதி குலைந்து மாறுபட்டது (கொடிதாய் வேறுபட்டுவிட்டது) கண்கள் - கண்களினின்றும், சிவந்த சோரிபாய்ந்தன - செந்நிறமான குருதி (இரத்தம்) ஒழுகின, (இங்ஙனம் இராவணன் கூறிய நாணமற்ற கொடுங்கோம மொழிகளைக் கேட்டு வேறு பாடடைந்த சீதாதேவியானவள்) உயிர்க்கும் - (இராவணனை வெறுத்து வைவதால்) தன் உயிர்க்கு நேரும் தீங்கு குறித்தும், ஒன்றும் பரிந்திலள் - ஒரு சிறிதளவும் வருத்தம் கொள்ளாதவளாய், பெண்மைக்கு - பெண்ணின் தற்காப்புத்தன்மைக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏய்ந்தன - இசைந்தனவும், வல்ல-ஆற்றலுடையனவும், வெய்ய-சொல்லாற் கொடியதாயினும் நற்பயன் விளைத்தலின் விரும்பத் தக்கதுமாய் விளங்கும், இனைய மாற்றங்கள் - (பின்வருகின்ற) இத்தகைய மறுமொழிகளை, சொன்னாள் - (இராவணனை நோக்கிச்) சீதாதேவி கூறினாள்:

பொழிப்பு

இராவணன் கூறிய நெருப்பிலே பழுக்கக் காய்ந்தனவாகிய நாராசங்களைப் போன்ற சொற்கள் வந்து காதுகளில் நுழைவதற்கு முன்னமே சீதாதேவியின் காதுகள் எரிந்துவிட்டன; மனம் அமைதி குலைந்து மாறுபட்டது. கண்களிலிருந்தும் செந்நிறமான குருதி ஒடின; தன் உயிர்க்கு நேரிடும் தீங்கைக் குறித்து ஒரு சிறிதளவும் வருந்தாதவளாய் பெண்மைக்கு இசைந்தனவும், ஆற்றலுடையனவும், சொல்லால் கொடியதும் நற்பயன் விளைத்தலில் விரும்பத்தக்கதாய் விளங்கும் இத்தகைய மறுமொழிகளை அவள் கூறினாள்.

விளக்கம்

இச் செய்யுளிலே இராவணன் கூறிய அருவருக்கத்தக்க கொடிய காம உணர்ச்சி மொழிகளைக் கேட்டவுடன் சீதாதேவியின் உள்ளத்தில் மூண்ட சினத்தின் தன்மையையும், அவளின் வீரப் பண்பையும் கம்பர் பாராட்டி உரைக்கின்றார்:

நாணமும், மானமும், அறநெறியும் இல்லாத இராவணன் சீதாதேவியின் முன்னின்று தன் காமவேட்கையைப் புலப்படுத்தும் அருவருக்கத்தக்க மொழிகளைக் கூறுகின்ற நிலையை எண்ணி யெண்ணிக் கம்பர் மிக வருந்துகின்றார். இங்ஙனம் இராவணன் தன் காமவேட்கையைப் புலப்படுத்தி மொழிகின்ற தீய சொற்கள் சீதாதேவியின் செவிகளில் நுழைவதற்கு முன்னமே செவிகள் தீய்ந்துவிட்டன எனக் கம்பரும் மிக அருவருப்போடு மொழிகின்றார்,

காய்ந்தன சலாகைஅன்ன உரைவந்து
கதுவாமுன்னம்
தீய்ந்தன செவிகள்

என வரும் தொடர்களில் அருவருப்போடு கலந்த கம்பரின் சினக்குறிப்பையும் நாம் காண்கின்றோம். தன் கணவனையே கருதி வாழும் கற்புநிறைந்த குலப் பெண்முன் நின்று பிறிதோர் ஆடவன் தன் காமவேட்கையைப் புலப்படுத்தும் தீய அருவருக்கத்தக்க சிறு மொழிகளைக் கூறும்பொழுது, அச் சொற்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு அஞ்சி அருவருக்கும் அக் குலப் பெண்ணின் நிலைமையைக் கம்பர் கூசிக் கூசி எமக்குக் கூறுகின்றார்: நெருப்பிலே நன்றாகப் பழுக்கக் காய்ச்சிய இரும்புச்சலாகை எவ்வளவு கொடுமையுடையதாயிருக்குமோ அவ்வளவு கொடுமையுடையனவாய் இராவணன் கூறிய சிறு மொழிகள், சீதாதேவியின் செவிகளைத் தீய்த்துவிட்டன என்பதே கம்பரின் கருத்தாகும்: அத்தீய கொடிய சொற்களைக் கேட்கமுடியாத நிலையில் சீதாதேவி இருந்து துடிதுடித்த அச் செயலைக் கம்பர் அப்படியே எமக்குக் காட்ட முயல்கின்றார்.

காய்ந்தன சலாகை (நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய நாராசம்) உவமானம்; இராவணன் தன் காமவேட்கையைப் புலப்படுத்திக் கூறிய எழிய கொடிய மொழிகள் - உவமேயம். தாங்கமுடியாத வெப்பமும், கொடுமையும் - பொதுத் தன்மைகளாகும்;

இராவணம் அம்மொழிகளைக்கேட்ட சீதாதேவி எனம் மிக்க வளாய்த் தன் உயிருக்கு ஏதும் இன்னல் வருமோ என்று எண்ணுதவளுமாய்த், தன் பெண்மைக்கும் ஆற்றலுக்கும் பொருத்தமான வெய்ய கொடிய மாற்றங்களை விளம்பினள் என்பதைக் கம்பர் மிக இறுமாப்புடன் எமக்கு எடுத்துரைக்கின்றார்;

> உயிர்க்கும் ஒன்றும் பரிந்திலள்
> பெண்மைக்கு ஏய்ந்தனவல்ல வெய்ய மாற்றங்கள்
> இனைய சொன்னாள்

என்பதே கம்பரின் பெருமிதக் குரலாகும்; இராவணன் கூறுகின்ற காமவேட்கையைப் புலப்படுத்தும் புன் சொற்களைக் கேட்டுக் கொண்டிருக்கப் பெறுதவளாய்த் தன் பெண்மைப் பண்பாகிய கற்பென்னும் பேராற்றல் மிக்க சீதாதேவி, இராவணனை எதிர்த்து வெஞ்சின மொழிகள் பல விளம்பினள் என்பதாம்;

பெண்மைப் பண்பாகிய கற்பு பேராற்றல் வாய்ந்த தென்பதைப்

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மை உண்டாகப் பெறின்

எனவரும் வள்ளுவர் மொழியால் அறிக; கற்பென்னும் கலங்கா நிலைமையினால்தான், ஒரு பெண் தன்னைத் தற்காத்துக்கொள்ள முடியும் என்பதும், தம் கற்பிற்கோர் மறுவரத்தக்க இன்னல்கள் தம்மை நோக்கி வருமானால் மிக்க பேராற்றல் வாய்ந்தவர்களாய் வீறுகொண்டு எழுந்து தம் கற்பைக் காப்பாற்றுகின்ற அற்புதத் தெய்வப்பண்பு வாய்ந்தவர்களே நற்குடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களாவார்கள் என்பதும், பற்பல ஊழிகளாக நிலவிவரும் பரம்பரைக் கொள்கைகளாகும். இக் கொள்கைகளையெல்லாம் சீதாதேவியைப் பாத்திரமாகக் கொண்டு கம்பர் உலகில் நிலை பெறச் செய்கின்றார் என்பதை உணர்கின்றோம்.

சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

எனவும்,

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்
தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

எனவும் வரும் குறள்களில் வள்ளுவர் மேற்கூறிய கற்புடைப் பெண்மைப் பண்புகளையெல்லாம் மிகச் சிறப்பாகக் கூறியிருத்தலையும் தெளிக.

சீதாதேவி கற்பென்னும் திண்மை மிக்கவளாய்த் (தன்னைத்) தற்காத்துக் கொண்ட தனியாற்றல் வாய்ந்தவள் என்பதை

பொற் பிறங்கல் இலங்கை பொருந்தலர்
எற்பு மால் வரை ஆகிலதே எனின்
இற்பிறப்பும் ஒழுக்கும் இழுக்கம் இல்
கற்பும் யான் பிறர்க்கு எங்ஙனம் காட்டுகேன்?

எனச் சீதாதேவி அனுமானிடம் கூறும் ஆண்மைமிக்க மொழிகளால் உணர்க.

வெய்ய மாற்றங்கள் எனக்கொண்டு கூட்டிக் கேட்கும் பொழுது, கொடியனவாயிருந்தாலும், அறத்தைவிட்டு நீங்காத அரிய உண்மைகளை நிலைநாட்டி உரைக்கும் பயனை நோக்கும் பொழுது, இனிதாகத் தோன்றும் சொற்களைச் சீதாதேவி கூறினள் எனப் பொருள் கொள்ளலாம். வெய்ய - விரும்பத் தக்கதெனப் பொருள்படும். வெம்மை - வேண்டல் (தொல் - உரி) பழுக்கக்காய்ச்சிய இரும்புச் சலாகையை நாராசம் எனக் கூறுவதும் வழக்காகும்.

வல்லமாற்றங்கள் எனக் கொண்டுகூட்டி, கற்பென்னும் கலங்கா நிலைமை பெற்ற சீதாதேவியின் மிக்க பேராற்றலை வெளிப்படுத்தும் சொற்கள் எனப் பொருள் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பின் மாண்பு

116. மல்லொடு திரடோள் வஞ்சன் மனம்பிறி
தாகும் வண்ணம்
கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேற்
கண்ட துண்டோ
இல்லொடுந் தொடர்ந்த மாதர்க் கேய்வன
வல்ல வெய்ய
சொல்லிது தெரியக் கேட்டி துரும்பெனக்
கனன்று சொன்னாள்.

கொண்டுகூட்டு: துருபு (நீ கூறிய) வெய்யசொல், இல்லொடும் தொடர்ந்த மாதர்க்கு ஏய்வன அல்ல, கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம் கற்பின்மேற் கண்டதுண்டோ, இது தெரியக் கேட்டி என, மல்லொடு திரள்தோள், வஞ்சன் மனம் பிறிதாகும் வண்ணம், கனன்று சொன்னாள்.

பொருள்

துரும்பு - துரும்பே, (நீ கூறிய) வெய்யசொல் - கொடுஞ் சொற்கள், இல்லொடும் தொடர்ந்த - குடிப்பிறப்பினை உடைய, மாதர்க்கு-மகளிர்க்கு, ஏய்வன அல்ல-(கேட்பதற்கு) பொருத்த மானவைகள் அல்ல, கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம்-(இராம பிரானைப் பிரிந்த துயரால் நைந்துருகி யொழியாது) கல்லின் தன்மையாகிய திண்மையோடு பொருந்திய என்மனமானது (அல்லது உன் நிய உரைகளைக்கேட்டு அஞ்சி அயர்ந்து நைந்து நைந்து ஒழியாது கல்லின் தன்மை யாகிய திண்மையோடு கூடிய என்மன மானது என்றுப் உரை கூறலாம்) கற்பின்மேல் - கற்பினும் உயர்ந்ததொரு பொருளினை, கண்டதுண்டோ - கண்டதில்லை, இது - நான் கூறும் இச்சொல்லை (உறுதிமொழியை) தெரியக் கேட்டி - நன்றாக ஆராய்ந்து விளங்கிக் கேட்பாயாக, என - என்று, மல்லொடு திரள்தோள் - வலிமையோடு திரட்சியும் பொருந்திய தோளையுடைய, வஞ்சன் - வஞ்சகனாகிய இராவண னின், மனம் பிறிதாகும் வண்ணம் - மனமானது (தன்மேற் கொண்ட தீய எண்ணத்திலிருந்து) வேறுபடும்வண்ணம் (மாறும் படி) கனன்று - கடுஞ் சினங்கொண்டு, சொன்னாள்-கூறுவாளா யினாள்.

பொழிப்பு

துரும்பே! நீ கூறிய கொடுஞ்சொற்கள் குடிப்பிறப்பினை யுடைய மகளிர் கேட்பதற்குப் பொருத்தமானவைகள் அல்ல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆருயிர்த் தலைவனைப் (இராமபிரானை) பிரிந்த துயரால் நைந்து நைந்து ஒழியாது கல்லைப்போல திண்மை பெற்றிருக்கும் என் மனமானது (அல்லது உன் தீய உரைகளைக் கேட்டு அஞ்சி அயர்ந்து நைந்து நைந்து அழிந்தொழியாது கல்லைப் போல் கடினமடைந்திருக்கும் என் மனமானது) கற்பினும் உயர்ந்ததொரு பொருளைக் கண்டதில்லை. நான் கூறுகின்ற உறுதிமொழிகளை நன்முக விளங்கிக் கேட்பாயாக என்று வலிமையோடு திரட்சி பொருந்திய தோள்களையுடையவனும், வஞ்சனையில் வல்லவனுகிய இராவணனின் மனம் தன்கற்பை மாசுறுத்தும் எண்ணத்திலிருந்து நீங்கும் வண்ணம் கடுஞ் சினத்தோடு (பின் வரும் உறுதி உரைகளைச்) சீதாதேவி சொல்லத் தொடங்கினுள் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் வஞ்சனையும் காமவேட்கையும் கொண்ட இராவணனை நோக்கிக் கற்பே உருவமாகிய சீதாதேவி அஞ்சிடாது வெஞ்சினத்தோடு கூறுகின்ற அறிவுரைகளைக் கேட்கின்றோம்.

குலமகளிர் தம் கணவனையொழிந்த பிற ஆடவருடன் உரையாடவேண்டிய நிலைமை ஏற்பட்டால், அவர்களின் முன்னின்று முகம் நோக்கி உரையாடாமல் இடையில் ஓர் குழந்தையையோ அல்லது வயது முதிர்ந்த வேறொரு பெண்ணினையோ நோக்கியவண்ணம் தம் எண்ணத்தைக் கூறுவது பரம்பரைப் பண்பாக நிலவிவருவதைக் காண்கின்றோம். இப்பண்பாட்டை வாழையடி வாழையாகக் குலமகளிர் மேற்கொண்டொழுக வேண்டுமென எண்ணிய கம்பர் சீதாதேவியைத் துணையாகக் கொண்டு எமக்கு நினைவூட்டுகின்றார்.

சீதாதேவி இராவணனின் முகத்தை நோக்கிக் கூறமல் தனக்கும் அவனுக்கு மிடையில் கிடந்த ஓர் துரும்பை நோக்கிய வண்ணம் இருந்துகொண்டே தனது எண்ணத்தை இயம்புகின்றாள் எனக் கம்பர் வியந்து கூறுகின்றார்.

துரும்பு (உன்) வெய்யசொல் இல்லொடும்
தொடர்ந்த
மாதர்க்கு ஏய்வன அல்ல

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே அல்லல் கோடி அடுத்தடுத்து வந்தாலும், தம் நிலையில் திரியாது விளங்கும் இற்பிறந்தாரின் (குடிப் பிறந்தாரின்) இயல்பு அப்படியே உயிர் பெற்று உலாவுகின்றது. இச் செய்யுளில் இல என்பது குடிப் பிறப்பையே குறிக்கும். இதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற் பிறந்தார்கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு

எனுந் திருக்குறளில் வரும் இற் பிறந்தார்கண் என்னுந் தொடருக்குக் குடிப்பிறந்தார் மாட்டு எனப் பரிமேலழகர் கூறிய உரையினால் உணர்க.

சீதாதேவி தன் குடிப்பிறப்பின் தனிச்சிறப்பை இராவணனுக்கு எடுத்துரைக்குந் திறன் பாராட்டிற்குரியதாகும். நற்குடியிற் தோன்றிய கற்புடை மகளிர்க்கு நீ கூறுகின்ற தீய உரைகள் பொருந்துவனவாகா என்பதைத் தெரிந்துகொள் எனச் சொல்லுகின்ற சீதாதேவியின் பெருமிதம் பெண்குலத்திற்கே என்றும் அழியாத பேரொளியை நிலைநாட்டிவிட்டது.

இற் பிறப்பு என்பது ஒன்றும் இரும்பொறை
என்பது ஒன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம்
புரியக் கண்டேன்

எனச் சிறையிருந்த சீதாதேவியாரிடத்தில் தான் கண்ட அரிய பண்புகளை இராமபிரானிடம் கூறிய அனுமான் முதற்கண் இற் பிறப்பையே எடுத்துக் கூறுதலையும் நோக்குக. குடிப்பிறப்பும் பொறுமையும் கற்புந்தான் சீதாதேவியாரின் நற்பண்புகளாகுமென அனுமானுக நின்று இராமபிரானிடம் கூறிய கம்பர், இம் மூப் பண்புகளும் பெண்குலத்தார்க்குரிய பெருஞ் செல்வங்களாகும் என்பதையும் நிலைநாட்டிவிட்டார்.

கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம் கற்பின்மேற்
கண்டதுண்டோ

எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறுகின்ற குரலிலே கற்பென்னும் கலங்கா நிலைமையின் ஆற்றல் அற்புதக் கோலந் தாங்கி அலைமோதுவதைக் காண்கின்றோம். இராமபிரானைப் பிரிந்த பிரிவுத் துயரால் நைந்து நைந்து ஒழிந்துபோகாமல் தன் மனத்தைக் கல்லாகக் கடுமைப் படுத்திக்கொண்டு கடுந் தவம் கிடந்த சீதாதேவி தன் கற்பை மாசுபடுத்த எண்ணி அவள் முன்னின்று இரக்கின்ற இராவணனுக்கு

கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம்
கற்பின்மேற் கண்டதுண்டோ

எனத் தன் உண்மை நிலையை எடுத்துரைத்து அவன் உள்ளத்தை மாற்ற முயல்கின்ற தாய்மைப்பண்பு மிக மிக உயர்ந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பின் சிறப்பை உணராத இராவணனின் மனத்தில் கற்பின் சிறப்பைப் பதியச் செய்தால் அவன் தன்னை விடுதலை செய்து தன் தலைவனாகிய இராமபிரானின் அம்புக்கு இரையாகாமல் உய்ந்துவிடுவான் என எண்ணுகின்ற சீதாதேவியாரின் கருணை யுள்ளம் மிகமிக உயர்ந்ததாகும்.

மல்லொடு திரள்தோள் வஞ்சன் மனம் பிறிதாகும்
வண்ணம்
சொல்லிது தெரியக்கேட்டி துரும்பெனச்
கனன்று சொன்னாள்

எனக் கம்பர் சீதாதேவியின் கருணை உள்ளத்தை இக் கவிதைத் தொடர்களில் கூறிப் பெருமை அடைகின்றார். மல்லொடு திரள் தோள் கொண்ட இராவணன் பிறர்மனை நோக்காத பேராண்மை யுடையவனாய் மாறி வாழ வேண்டுமெனச் சீதாதேவியின் குர லோடு கலந்து கூறுகின்ற கம்பரின ஆர்வத்தைக் காண்கின் றோம். எனவே இராவணனின் மனத்தை மாற்றி வாழ்விக்க வேண்டுமென்ற கருணை உள்ளம் கொண்ட சீதாதேவியாரின் தெய்வப்பண்பை கம்பர் எமக்குக் குறிப்பாகக் காட்டுகின்றார் என்பதை உணர்கின்றோம்.

கற்பின்மேல் கண்டதுண்டோ

எனவரும் சீதாதேவியின் குரலுடன்

கற்புக் கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்

எனவரும் சிலப்பதிகாரத் தொடரையும் ஒப்பிட்டு நோக்குக.

தலைபத்தும் சிந்துவாயோ

117. மேருவை யுருவ வேண்டின் விண்பிளந் தேக
வேண்டின்
ஈரெழு புவனம் யாவு முற்றுவித் திடுதல்
வேண்டின்
ஆரியன் பகழி வல்ல தறிந்திருந் தறிவி
லாதாய்
சீரிய வல்ல சொல்லித் தலைபத்துஞ் சிந்து
வாயோ.

கொண்டுகூட்டு: அறிவிலாதாய்! ஆரியன் பகழி மேருவை உருவ வேண்டின், வல்லது விண் பிளந்து ஏகவேண்டின், வல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரெழு புவனம் யாவும், முற்றுவித்திடுதல் வேண்டின், வல்லது (நீ இவற்றை) அறிந்திருந்தும், சீரிய அல்ல சொல்லி, தலைபத்தும் சிந்துவாயோ?

பொருள்

அறிவிலாதாய் - அறிவற்றவனே, ஆரியன் பகழி - எல்லோராலும் வணங்கத்தக்கவனுன (பூசிக்கத்தக்கவனுன) இராமபிரானின் அம்புகள், மேருவை உருவவேண்டின் - மகாமேருமலையை ஊடுருவிச் செல்லவேண்டுமாயினும், வல்லது - அதனைச் செய்யும் வல்லமையுடையது, விண்பிளந்து - வானத்தைக் கிழித்துக் கொண்டு, ஏகவேண்டின்-அதற்கப்பால் செல்லவேண்டுமாயினும், வல்லது - அதனைச் செய்யும் வல்லமையுடையது, ஈரெழு புவனம் யாவும் - பதினுன்கு உலகங்கள் முழுவதையும், முற்றுவித்திடுதல் வேண்டின் - அழித்திடல் வேண்டுமாயினும், வல்லது - அதனைச் செய்யும் வல்லமையுடையது, அறிந்திருந்தும் - (தாடகை, மாரீசன், கரன், வாலி முதலியோரைக் கொன்ற செயலால்) என் தலைவனுகிய இராமபிரானுடைய அம்பின் ஆற்றலை நீ நன்கு தெரிந்திருந்தும், சீரிய அல்ல சொல்லி - சிறப்பில்லாத புன்மொழிகளைக் கூறி, தலைபத்தும்-உன்னுடைய பத்துத்தலைகளையும், சிந்துவாயோ - அறுபட்டு நிலத்தில் வீழ்ந்து சிதறும்வண்ணம் விடுவாயோ?

பொழிப்பு

அறிவில்லாதவனே! எல்லோராலும் வணங்கத்தக்க பெருமையையுடையவனுன இராமபிரானின் அம்புகள், மகாமேருமலையை ஊடுருவிச் செல்லவேண்டுமாயினும், வானத்தைக் கிழித்து அதற்கப்பால் செல்லவேண்டுமாயினும், பதினுன்கு உலகங்களையும் அழித்திடல் வேண்டுமாயினும் அவற்றைச் செய்யும் வல்லமை வாய்ந்தவை. இங்ஙனம் இராமபிரானின் அம்புகளின் ஆற்றலையெல்லாம் நீ அறிந்திருந்தும் சிறப்பில்லாத மொழிகளைக் கூறி உன் பத்துத்தலைகளும் அறுபட்டு நிலத்தில் சிதறிவிழவிடப் போகின்றுயோ என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் தன் ஆருயிர்த் தலைவனுய் விளங்கும் இராமபிரானின் அம்புகளின் ஆற்றலை இராவணனுக்கு எடுத்துரைக்கின்ற சீதாதேவியின் ஆண்மையோடு கலந்த பெருமிதக் குரலைக் கேட்கின்றேம்.

தனித்து வனத்திலிருந்த தன்னை இராவணன் கவர்ந்து செல்ல வந்தபொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேருவைப் பறிக்கவேண்டின் விண்ணினை இடிக்க
வேண்டின்
நீரினைக் கலக்கவேண்டின் நெருப்பினை அவிக்க
வேண்டின்
பாரினை எடுக்கவேண்டின் பலவினை சிலசொல்
எழாய்
யார்எனக் கருதிச்சொன்னாய் இராவணற்கு
அரிது என்என்றாள்.

எனத் தன் வீரத்தைப் பாராட்டிக் கூறிய நினைவு சீதாதேவியார் உள்ளத்தில் தோன்றியது. அங்ஙனம் தன் வீரத்தை எடுத்துக் கூறிய இராவணனுக்கு விளங்கும் வண்ணம் அவன் கூறிய மொழிகளினூலேயே சீதாதேவி இராமபிரானின் ஆற்றலையும் எடுத்துக் கூறியிருக்குந் திறன் பாராட்டுதற்குரியதாகும்.

தன் தலைவனாகிய இராமபிரானின் வில்லாற்றலையும், அவன் தொடுத்துவிடும் அம்புகளின் தனிப்பெரும் வல்லமைப்பாட்டையும் தாடகை, மாரீசன், கரன், வாலி முதலியோரை இராமபிரான் கொன்ற செய்தியால் இராவணன் அறிந்திருப்பான் என எண்ணிய சீதாதேவி

அறிந்திருந்து அறிவிலாதாய் சீரிய அல்ல சொல்லித்
தலை பத்தும் சிந்துவாயோ.

எனக் கேட்கின்றாள்: உன்னுல் ஆண்மையுடையாரென மதிக்கப் பட்டவர்களையும், உன்னை வென்ற வாலியையும் இராமபிரான் கொன்ற செய்தியை நீ தெரிந்திருந்தும் என்னைச் சிறைப்படுத்தி இன்னலுக்குள்ளாக்கி, இராமபிரானின் அம்புகளுக்கு உன் பத்துத் தலைகளையும் இரையாக்க ஏன் முன் வருகின்றாய் எனச் சீதாதேவி இராவணனிடம் கூறுகின்ற உரைகளிலே அவன் மனத்தை மாற்றி வாழ்விக்க வேண்டுமென்னும் கருணைச்சாயல் கலந்து நிற்றலை நோக்குக:

உரம் ஒருங்கியது நீர்கடையும் வாலியது
மார்பு உலகைமூடும்
மரம் ஒருங்கிய கராதியர் விராதனது
மால்வரைகள் மானும்
சிரம் ஒருங்கிய இனிச்செரு ஒருங்கியதுஎனின்
தேவர் என்பார்
பரம் ஒருங்குவது அலால்பிறிது ஒருங்காதது
ஓர்பகையும் உண்டோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மந்திரப்படலத்தில் விபீடணன் இராவணனுக்கு இராம பிரானுடைய அம்பினால் கொலையுண்ட வாலி முதலியோரை எடுத்துக் கூறி விளக்குதல் காண்க. இதனால் சீதாதேவி என்ணிய வண்ணம் இராவணன் முன்னரே இராமபாணத்தின் ஆற்றலை அறிந்துள்ளான் என்பது புலனுதல் காண்க.

வஞ்சனைமான்

118. அஞ்சினை யாத லாலன் முண்டகை யற்ற நோக்கி
வஞ்சனை மானென் றேவி மாயையான்
மறைத்து வைத்தாய்
உஞ்சனை போதி யாயின் விடுதியுன் குலத்துக் கெல்லாம்
நஞ்சினை யெதிர்ந்த போது நோக்குமோ
நினது நாட்டம்.

கொண்டுகூட்டு: அஞ்சினை, ஆதலால், அன்று மாயை ஆல், வஞ்சனை மான் ஒன்று ஏவி, ஆண்டகை அற்றம் நோக்கி (என்னைக் கவர்ந்து வந்து) மறைத்து வைத்தாய், உன்குலத்துக் கெல்லாம், நஞ்சினை எதிர்ந்தபோது நினது நாட்டம் நோக்குமோ, உஞ்சனை போதி ஆயின் (என்னை) விடுதி.

பொருள்

அஞ்சினை ஆதலால் - (என் தலைவனுகிய இராமபிரானை நேரே நின்று எதிர்த்தற்கு) நீ அச்சம் கொண்டாயாதலால், அன்று - (நான் தனியாக வனத்திலிருந்த) அந்நாளில், மாயையால் - வஞ்சனைக் குணத்தினால், வஞ்சனை மான் ஒன்று - பொய்மையான ஒரு மானை, ஏவி - (சூழ்ச்சியாக) ஏவிவிட்டு, ஆண்டகை - ஆடவருள் மிக மேம்பட்டவனுன இராமபிரான், அற்றம் நோக்கி - (என்னுடன்) இல்லாத சமயம் பார்த்து, மறைத்து வைத்தாய் - (என்னைக் கவர்ந்து வந்து) இங்கே ஒளித்து வைத்தாய், உன் குலத்துக்கு எல்லாம் - உன் குலத்திற்பிறந்த அரக்கர்களுக்கெல்லாம், நஞ்சினை - நஞ்சு போன்றவனுகிய இராமபிரானை, எதிர்ந்தபோது - போர் செய்தற்காகச் சென்று நீ எதிர் நிற்கும்பொழுது (அங்ஙனம் நீ அவருடன் எதிர்த்துப் போர்செய்வது இருக்க) நினது நாட்டம் - உன் கண்கள், நோக்குமோ - இராமபிரானின் எதிரே நின்று அவரைத்தான் காணமுடியுமோ (முடியாது என்பதாம்.) (இராமபிரானுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்புரிய இராவணன் எதிர்த்து நிற்பது மட்டுமல்ல அவனைக் கண்ணால நோக்கத் தானும் இராவணன் தகுதியற்றவன் என்பதே சீதாதேவியின் கருத்தாகும்) உஞ்சனை போதியாயின் - நீ பிழைத்துப் போகும் நினைவை உடையை ஆனால், விடுதி - (என்னை) அவ்விராமபிரானிடம் கொண்டுபோய் விடுவாயாக.

பொழிப்பு

அறிவில்லாதவனே! என் தலைவனாகிய இராமபிரானை நேரே நின்று எதிர்ப்பதற்கு அச்சங் கொண்டபடியால்தான் வஞ்சனைக் குணத்தினால் பொய்மையான ஒரு மானை ஏவிவிட்டு, ஆடவருள் மிக மேம்பட்டவனாகிய இராமபிரான் என்னுடன் இல்லாத சமயம் பார்த்து என்னைக் கவர்ந்து இங்கே ஒளித்து வைத்தாய். உன குலத்திற் பிறந்த அரக்கர்களுக்கெல்லாம் நஞ்சுபோன்றவனாகிய இராமபிரானுடன் போர் செய்வதற்காக நீ எதிர்த்து நிற்கும் பொழுது அவரைக் கண்ணால் நோக்கத்தானும் தகுதியற்றவனாவாய், நீ பிழைத்து உயிர் வாழும் நினைவு இருந்தால் என்னை இராமபிரானிடம் கொண்டுபோய் விடுவாயாக என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளிலே வஞ்சனை மானொன்று ஏவித் தன்னைக் கவர்ந்து வந்த இராவணனின் ஆண்மையற்ற செயலை இகழ்ந்து இடித்துரைக்கின்ற சீதாதேவியின் எழுச்சியான குரலைக் கேட்கின்றோம்.

நீ ஆண்மைமிக்க வீரனாயிருந்தால் என் ஆருயிர்த் தலைவராகிய இராமபிரான் என்னுடன் இல்லாத நேரத்தில் வந்து என்னைக் கவர்ந்திருக்கமாட்டாய். அவருடன் நேருக்குநேர் போர் புரிந்து அவரை வென்று என்னைக் கொண்டு வந்திருப்பாய். அங்ஙனம் அவரை வெல்லும் ஆற்றல் உன்னிடம் இல்லாமையால் தான் அவரை எதிர்க்க அஞ்சிய நீ பொய்யான மானை ஏவி வஞ்சகச் செயலால் என்னைக் கவர்ந்து வந்தாய் என அஞ்சிடாது இராவணனை நோக்கிக் கூறுகின்ற சீதாதேவியின் ஆண்மைக் குரல் பெண் குலத்தினர்க்குப் பெருவிருந்தாகும்.

அஞ்சினை ஆதலால் அன்று ஆண்தகை அற்றம் நோக்கி
வஞ்சனை மான் ஒன்று ஏவி மாயையால் மறைத்து வைத்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சீதாதேவி இராவணனை நோக்கிக் கூறுகின்ற குரலிலே அலையெறிகின்ற உணர்ச்சித் துடிப்பு, இராவணனை நிலை கலக்கியிருக்கவேண்டு மென்பதில் ஐயமில்லை. வஞ்சனை மானொன்று ஏவி என்னைக் கவர்ந்து வந்த நீயும் ஒரு வீரனு எனச் சீதாதேவி கேட்கின்ற சொற்கள் இராவணனின் நெஞ்சில் ஈட்டிபோலப் பாய்ந்து ஏங்கவைத்திருக்கும் என்பதில் ஐயமே இல்லை.

புறத்து இனி உரைப்பது என்னை புரவலன்
தேவி தன்னைத்
திறத்துழி அன்றி வஞ்சித்து எய்துதல்
சிறுமைத்து ஆகும்
அறத்து உளது ஒக்கும் அன்றே அமர்த்தலை
வென்று கொண்டுஉன்
மறத்துறை வளர்த்தி மன்ன!

என மாரீசன் இராவணனுக்குக் கூறும் அறிவுரையையும் நோக்குக. இதன் கண்

புரவலன் தேவிதன்னைத் திறத்துழி அன்றி
வஞ்சித்து எய்துதல் சிறுமைத்து ஆகும்

என வரும் தொடர்களுடன்

அஞ்சினை ஆதலால் அன்று ஆண்தகை அற்றம்
நோக்கி
வஞ்சனை மான் ஒன்று ஏவி மாயையால் மறைத்து
வைத்தாய்

எனும் இத் தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக. வஞ்சனை மிக்க கொடியோனாகிய இராவணனையும் உயிருடன் வாழும் வண்ணம் சீதாதேவி எடுத்துரைக்கும் அறிவுரைகள் அவள் உள்ளத்தில் நின்று சுரக்கின்ற அருள் வெள்ளத்தின் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

உஞ்சனை போதி ஆயின் விடுதி உன் குலத்துக்
கெல்லாம்
நஞ்சினை எதிர்ந்தபோது நோக்குமோ நினது
நாட்டம்

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே இராவணன் உய்ந்து வாழுதற்கும் வழி கூறியுள்ள அருள் நிலை எமது உள்ளத்தையும் தொடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் மட்டுமல்ல அவன் குலம் முழுவதையும் அழிக்கக்கூடிய கொடும் நஞ்சாகிய இராமபிரானுடன் தன் அறியாமையினுற் பகைகொண்டு அழிய நிற்கும் இராவணன், சீதாதேவியை விடுவானுயின், இராமபிரானின் அருளாகிய அமுதத்தைப் பெற்று பெருவாழ்வில் வீற்றிருப்பான் என்பதே கம்பரின் கருத்தாகும்.

உன் குலத்துக் கெல்லாம் நஞ்சினை எதிர்ந்த போது

என வரும் சீதாதேவியின் குரலுடன்

நிலம் செய்து விசும்பும் செய்த நெடிய வன்படை நிள்ருனை
வலம் செய்து போயிற்று என்ருல் மற்று இனி வலியது உண்டோ
குலம் செய்த பாவத்தாலே கொடும் பழி தேடிக் கொண்டோம்

என இந்திரசித்தன் இராவணனிடம் கூறுகின்ற குரலையும் ஒப்பிட்டு நோக்குக. இராவணன் மட்டுமல்ல அரக்கர் குலம் முழுவதும் இராவணன் செய்த தீமையால் அழிந்துபடும் எனச் சீதாதேவி கூறிய அறிவுரையினையே இந்திரசித்தனும் இராவணனுக்குக் கூறுகின்றன் என்பதை உணர்கின்றோம்.

வித்தக வில்லினுர்க்குத் திருவினையாடல்

119. பத்துள தலையுந் தோளும் பலவுள பகழி தூவும்
வித்தக வில்லி னுற்குத் திருவினை யாடற் கேற்ற
சித்திர விலக்க மாகு மல்லது செருவி லேற்கும்
சக்தியை போலும் மேனுட் சடாயுவாற்
றரையின் வீழ்ந்தாய்.

கொண்டுகூட்டு: மேல்நாள் சடாயுவால் தரையில் வீழ்ந்தாய், (உன) பத்துள தலையும் பலவுள தோளும், பலபகழி தூவும், வித்தக வில்லினுற்கு, திருவினையாடற்கு ஏற்ற சித்திர இலக்கமாகும், அல்லது (ந்) செருவிலேற்கும் சக்தியை போலும்.

பொருள்

மேல்நாள் - முன் (நீ என்னைக் கவர்ந்து வந்த) அக்காலத்தில், சடாயுவால் - (என்னை மீட்பதற்காக உன்னை எதிர்த்துப் போர் புரிந்த) கழுகின் வேந்தனுகிய சடாயுவினுல், தரையில் வீழ்ந்தாய் - (அடிக்கப்பட்டு மூர்ச்சை அடைந்த நிலையில்) நிலத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் மயங்கி வீழ்ந்தவனே, பத்துள தலையும் - (உனது) பதிதாக உள்ள தலைகளும், பல உள தோளும் - பலவாக உள்ள உன் இருபது தோள்களும், பல பகழிதூவும் - பல தொகையான அம்புகளை (ஒரே தொடையில்) விடுகின்ற, வித்தக வில்லினுற்கு- ஆற்றல் வாய்ந்த வில்வீரனுகிய இராமபிரானுக்கு, திருவிளை யாடற்கு - திருவிளையாடல் செய்தற்கு, ஏற்ற - தகுந்த, சித்திர இலக்கமாகும் - அதிசயமான இலக்கமாகும் (அம்பு எய்யும் குறி களாகும்) அல்லது - அல்லாமல், செருவிலேற்கும் - இராமபிரா னுடன் நேரில் நின்று எதிர்த்துப் போர்புரியக் கூடிய, சக்தியை போலும் - ஆற்றலை உடையை போலும் (ஆற்றல் உடையை அல்லை என்பதாம்)

பொழிப்பு

முன் என்னைக் கவர்ந்துவந்த அக்காலத்தில் என்னை மீட் பதற்காக உன்னை எதிர்த்துப் போர்புரிந்த கழுகின் வேந்தனு கிய சடாயுவினை அடிபட்டு நிலத்தில் வீழ்ந்தவனே! உனது பத்தாக உள்ள தலைகளும், இருபது தோள்களும் இராமபிரான் திருவிளையாடல் செய்தற்குத் தகுந்த அம்பெய்யும் குறிகளாகு மல்லாமல் நீ இராமபிரானுடன் நேர்நின்று எதிர்த்துப் போர் புரியக்கூடிய ஆற்றலுடையவனல்ல என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளிலே இராமபிரானை நேர்நின்று எதிர்த்துப் போர் புரியக்கூடிய ஆற்றல் இராவணனிடம் இல்லையெனச் சீதாதேவி சொல்லுகின்ற குரலைக் கேட்கின்றோம்.

பத்துத் தலைகளையும், இருபது தோள்களையும் கொண்ட வனுய் எட்டுத்திக்கு யானைகளையும் வென்று, இசை திசை போக்கிய இராவணனின் வீரத்தை, எட்டுணையும் மதியாமல் இகழ்ந்து சொல்லுகின்ற சீதாதேவியின் எழுச்சிக் குரலிலே, இராமபாணத்தின் ஆற்றலை உள்ளவாறறிந்த உணர்ச்சித் துடிப் பும் கலந்து அலைமோதுகின்றது.

> பத்துளதலையுந் தோளும் பலவுள பகழிதூவும்
> வித்தக வில்லினுற்கு திருவிளை யாடற்கேற்ற
> சித்திர இலக்கமாகும்

எனச் சீதாதேவி சொல்லுகின்ற குரலிலே, தன்தலைவனுகிய இராமபிரானின் வீரத்தை எண்ணியெண்ணி இறுமாப்படை கின்ற இன்பவெறியைக் காண்கின்றோம். இராவணனின் பத்துத் தலைகளும் இருபது தோள்களும், வில்லில் அம்பைத் தொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதற்குப் பழகுகின்ற இளம் வீரர்கள் பொழுதுபோக்காகச் செய்யும் வில் விளையாட்டில் அம்பெய்து பழகும் அடையாளக் குறிகள்போலக் கொண்டு, இராமபிரான் விளையாடி அருளுதற்கு ஏற்ற இடமாகுமென்பதே கம்பரின் கருத்தாகும். எனவே, பத்துத் தலைகளும் இருபது தோள்களும் கொண்ட பெருவீரனாக விளங்குகின்ற இராவணன் இராமபாணத்திற்கு முன் சிறிய விளையாட்டுப் பொருளைப் போல விரைந்து அழிந்துபடுவான் என்பதை உணர்கின்றோம்.

எறித்த போர் அரக்கர் ஆவிஎண் இலா
வெள்ளம் எஞ்சப்
பறித்தபோது என்னை அந்தப் பரிபவம் முதுகில்
பற்றப்
பொறித்தபோது அன்னான் அந்தக் கூனிகூன்
போகஉண்டை
தெறித்த போது ஒத்தது அன்றி சினம் உண்மை
தெரிந்தது இல்லை

என முதல்நாட் போரில் இராமபிரானிற்குத் தோல்வியுற்ற இராவணன் மாலியவானிடம் கூறும் இம்மாற்றங்களுடன்

பத்துள தலையும் தோளும் பலவுள பகழி தூவும்
வித்தக வில்லினுற்கு திருவிளையாடற்கு ஏற்ற
சித்திர இலக்கமாகும்

எனவரும் இச்செய்யுட் பகுதியையும் ஒப்பிட்டு நோக்குக.

இங்ஙனம் இராமபிரானின் வில் ஆற்றலைப் பாராட்டி உரைத்த சீதாதேவி

செருவிலேற்கும் சக்தியை போலும்
மேல்நாள் சடாயுவால் தரையில் வீழ்ந்தாய்

என இராவணனை இகழ்ந்து கூறும் குரலிலே இரக்கத்தோடு கலந்த பெருமிதம் நின்று நிழலாடுவதை நோக்குக இராம பிரானை எதிர்த்துப் போர்புரிந்து வெல்லக்கூடிய வல்லமைப் பாடு உன்னிடத்தில் இல்லையென இராவணனை இகழ்ந்து இடித் துரைக்கின்ற சீதாதேவியின் வீரப் பண்பு போற்றற்குரியதாகும்.

... ... மாயையால் வஞ்சமான் ஒன்று
ஆக்கினாய் ஆக்கி உன்னை ஆர்உயிர் உண்ணும்
கூற்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கினுய் புகுந்து கொண்டு போகின்றுய்
பொருது நின்னைக்
காக்குமா காண்டி ஆயின் கடவுல் உன்தேரை
என்றுள்.

எனச் சீதாதேவி தன்னைக் கவர்ந்து செல்லும் அக்காலத்தில் இராவணனுக்குக் கூறிய மாற்றங்களையும் நோக்குக. சடாயு என்னும் கழுகின் வேந்தனுல் அடியுண்டு நிலத்தில் வீழ்ந்த ஆண்மைக் குறைவை நேரிற் கண்ட சீதாதேவி இராவணனுல் இராமபிரானை வெல்லவே முடியாது என்ற உண்மையைத் தெளிந்துவிட்டாள்:

மேல்நாள் சடாயுவால் தரையில் வீழ்ந்தாய்

எனக் காரணம் காட்டி இராவணனின் ஆண்மைக் குறைவை அவன் உணரும்படி இதருட்டி உரைக்கும் சீதாதேவியின் கருணைச் செயல் கருதற்குரியதாகும்.

வித்தகம் - ஆற்றல், சித்திரம் - அதிசயம்.

இராமபாணங்கள்

120. தோற்றனை பறவைக் கன்று துள்ளுநீர்
வெள்ளஞ் செனனி
ஏற்றவன் வாளால் வென்று யின்றெனி
னிறத்தி யன்றே
நோற்றநோன் புடைய வாணுள் வரமிவை
நுனித்த வெல்லாம்
கூற்றினுக் கன்றே வீரன் சரத்திற்குங்
குறித்த துண்டோ.

கொண்டுகூட்டு: அன்று பறவைக்குத் தோற்றனை, துள்ளு நீர் வெளளம் சென்னி ஏற்றவன் வாளால் வென்றுய், இன்று எனில் அன்றே இறத்தி (நீ), நோற்ற நோன்பு உடைய வாணாள், வரம் இவை நுனித்த எல்லாம், கூற்றினுக்கு அன்றே குறித்தது, வீரன் சரத்திற்கும் குறித்ததுண்டோ.

பொருள்

அன்று - என்னை வனத்திலே வந்து நீ கவர்ந்த அந்நாளில், பறவைக்குத் தோற்றனை - சடாயு என்னும் பறவைக்குத் தோற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுப் போனும், துள்ளுநீர் வெள்ளம் - உலகை அழிப்பேன் என்னும் செருக்கினுல் பொங்கி எழுந்து வந்த கங்கை நீர்ப் பெருக்கினை, சென்னி ஏற்றவன் - தன் சடைமுடியின்கண் தாங்கிக் கொண்டவனை சிவபெருமான், வாளால் - (உன் தவத்திற்காக்கக் கொடுத்தருளிய) சந்திரகாசம் என்ற வாட் படையினுல், வென்றாய் - வெற்றி பெற்றாய். இன்று எனில் - (அன்று நீ சடாயுவுடன் போர் செய்யும்பொழுது சிவபெருமான் அளித்த அவ்வாட்படை உன்னிடம்) இல்லாமலிருந்தால், அன்றே இறத்தி - அன்றைக்கு சடாயுவினுல் நீ இறந்திருப்பாய், நோற்ற நோன்பு - நீ செய்த பெருந்தவத்தின் பயனுக, உடைய - உனக்குக் கிடைத்துள்ள, வாள் - சிவபெருமான் அளித்த ஒடியாத வாட்படைவும், நாள்-முக்கோடி வாழ்நாளும், வரம் இவை - படைக்கலபலம் வர பலம் முதலியவையும், நுனித்த எல்லாம் - பின்னும் உனக்குப் பக்கபலமாக நீ ஆராய்ந்து கொண்டன எல்லாம், கூற்றினுக்கு அன்றே - கூற்றுவன் என்னும் இயமன் உன்னை அணுகாதிருத்தற் பொருட்டு, குறித்தது - பயன்படுவன, வீரன் சரத்திற்கும் - இராமபிரானின் அம்புகளால் உனக்குத் தீங்கு நேராது இருத்தற்கும், குறித்ததுண்டோ - வரையறுத்ததுண்டோ (இல்லை எனபதாம்).

பொழிப்பு

என்னை வனத்திலே வந்து நீ கவர்ந்த அந்நாளில் உன்னை எதிர்த்துப் போராடிய சடாயு என்னும் பறவைக்குத் தோல்வி அடைந்துவிட்டாய்; உலகை அழிப்பேன் என்னும் செருக்கினுல் பெருகிவந்த கங்கை நீரைத் தன் சடைமுடியின்கண் தாங்கிக் கொண்டவனுன சிவபெருமான் உனக்கு அளித்தருளிய சந்திர காசம் என்னும் வாட்படையினுல் சடாயுவை வென்றாய். அந்த வாட்படை உன்னிடம் இல்லாதிருந்தால் அன்றைக்குச் சடாயுவினுல் நீ இறந்திருப்பாய். நீ செய்த பெரும் தவத்தின் பயனுக, உனக்குக் கிடைத்துள்ள வாளும் நாளும் வர பலங்கள் முதலியனவும் கூற்றுவன் உன்னை அணுகாமல் இருத்தற்குத் துணையாகுமேயன்றி, இராமபிரானின் அம்புகளால் உனக்கு ஏற்படும் தீங்கு களைத் தடுத்தற்குத் துணையாகாது என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளிலே இராவணன் தவத்தினுற் பெற்றுக்கொண்ட வாளும் நாளும் மற்றைய வல்லமைப்பாடுகளும் இராமபாணத்தால் அழிந்துபடும் எனக் கூறுகின்ற சீதாதேவியின் ஆண்மைக் குரலைக் கேட்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் ஈந்தருளிய சந்திரகாசம் என்னும் வாட்படை இராவணனிடம் இல்லாவிட்டால், கழுகின் வேந்தனுகிய சடாயு அவனைக் கட்டாயம் கொன்றிருப்பான் என்னும் உண்மையை நேரிற் கண்டு தெளிந்த சீதாதேவி நீசனுகிய இராவணனுக்கு அச்செயலை நினைவூட்டிய திறன் மிகப் போற்றற்குரியதாகும். கழுகின் வேந்தனையே உன் வல்லமையால் வெல்ல முடியாத நீ, எல்லையில்லாத ஆற்றல் கொண்ட வில்வீரனுகிய இராமபிரானை எங்ஙனம் வெல்லப் போகின்றுய் என இராவணனுக்குச் சொல்லி அவனின் தீய எண்ணத்தை மாற்றி உய்யவழி காட்டுகின்ற சீதாதேவியின் தாய்மைப் பண்பு தனிச் சிறப்புடையதாகும்.

தோற்றனை பறவைக்கு அன்று துள்ளுநீர்
வெள்ளம் சென்னி
ஏற்றவன் வாளால் வென்றுய் இன்றெனில்
இறத்தி அன்றே

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே அருளோடு கலந்த ஆண்மைப் பண்பு அலைமோதுகின்றது. அன்றே சடாயுவினுல் இறந்து போகவேண்டிய நீ இன்றளவும் உயிர் வாழ்ந்திருக்கின்ற பேற்றை ஈசன் அளித்த வாட்படையினுல் எய்தியுள்ளாய் என்பதை எண்ணிப்பார் எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறுகின்ற மெய்யுரைகள் அவன் உள்ளத்தில் எல்லையில்லாத வியப்பையும் அதிர்ச்சியையும் ஈந்திருக்கும் என்பதை உணர்கின்றேம்.

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்

என்பது திருக்குறள். தன் நெஞ்சறிந்த உண்மையைச் சீதாதேவி கூறும்பொழுது, அஞ்சாமை மிக்க இராவணனும் தன் ஆண்மைக் குறைவை எண்ணி அஞ்சியிருப்பான் என்பதற்கோர் ஐயமில்லை.

இங்ஙனம் கழுகின் வேந்தனுகிய சடாயுவை வெல்லமுடியாத நீ முன்னுள் வரத்தினுல் பெற்றுள்ள ஒடியாத வாளையும், முடியாத முக்கோடி வாழ்நாளையும் மற்றைய வரபலன்களையும் உனக்குத் துணையாக எண்ணி இறுமாப்படைகின்றுய். அவைகளெல்லாம் உன்னைக் கொல்லவரும் இராமபரணத்தைத் தடுத்து உன்னைக் காக்கும் வல்லமை வாய்ந்தவைகளல்ல என்பதையும் சீதாதேவி இராவணனுக்குச் சொல்லித் தெருட்டுகின்றுள்.

நோற்ற நோன்பு உடைய வாள்நாள் வரம்இவை
நுனித்தனல்லாம்
கூற்றினுக்கு அன்றே வீரன் சரத்திற்கும்
குறித்ததுண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறுகின்ற குரலிலே இராம பாணத்தின் ஆற்றலைப் பற்றிய உணர்ச்சி அப்படியே நின்று இராவணன் உள்ளத்தையும் தொட்டசைக்கின்றது. அறத்தை மறந்த இராவணனின் வாளும், நாளும், வரபலன்களும் அறத்தைத் தழுவி உலகை வாழ்விக்கும் ஆண்மையாளனாகிய இராம பிரான் செலுத்தும் பாணங்களின் முன் நில்லாதனவாகும் என்பதைச் சீதாதேவி நிலைநாட்டி உரைக்கின்றாள்:

அறத்தினுல் அன்றி அமரர்க்கும் அருஞ்சமம்
கடத்தல்
மறத்தினுல் அரிது என்பது மனத்திடை வலித்தி

என முதல்நாட் போரில் வில்லும் முடியும் இழந்தவனுய்த் தன் முன் நாணித் தலைகுனிந்து நின்ற இராவணனை நோக்கி இராம பிரான் கூறிய அறிவுரைகளையும் காண்க:

விளக்கின்முன் இருள்

121. பெற்றுடை வாளு நாளும் பிறந்துடை யுரனும் பின்னும்
மற்றுடை யெவையுந் தந்த மலரவன் முதலோர் வார்த்தை
விற்றொடை யிராமன் கோத்து விடுதலும் விலக்குண் டெல்லாம்
இற்றுடைந் திறுதன் மெய்யே விளக்கின்முன் னிருளுண்டாமோ

கொண்டுகூட்டு: (நீ) பிறந்துடை(ய) உரனும் பின்னும், பெற்றுடை(ய) வாளும் நாளும் மற்று(ம்) உடை(ய) எவையும் தந்த மலரவன் முதலோர் வார்த்தை(யும்) (ஆகிய எல்லாம்) இராமன் வில் தொடை கோத்து விடுதலும் விலக்குண்டு இற்று உடைந்து இறுதல் மெய்யே! விளக்கின் முன் இருள் உண்டாமோ.

பொருள்

பிறந்துடை உரனும் - நீ அரக்கர் குலத்தில் தோன்றினமையால் உன்பால் இயல்பாகவே அமைந்துள்ள வலிமையும், பின்னும் பெற்றுடை வாளும் - மேலும் நீ தவங்கிடந்து பெற்றுள்ள வாட்படையும், நாளும் - (நீ தவத்தினுற் பெற்றுள்ள) முக்கோடி வாழ்நாளும், மற்றுடை எவையும் - மேலும் நீ அடைந்துள்ள எல்லாவற்றையும், தந்த - உனக்கு ஈந்தருளிய, மலரவன் முதலோர் - செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன் முதலியோர், வார்த்தை - உனக்கு நல்கிய வரங்களு மாகிய யாவற்றையும், இராமன் - இராமபிரான், வில் தொடை கோத்து - வில்லில் அம்பை ஏற்றி (தொடுத்து) விடுதலும் - விட்ட அளவில், விலக்குண்டு - நீங்கி, இற்று - ஒடிந்து, உடைந்து - துண்டாகி, இறுதல் - (நீயும்) இறந்துபடுதல், மெய்யே - உண்மையே யாகும் (சத்தியமே யாகும்) விளக்கின் முன் - ஒளிவீசி எரிகின்ற விளக்கின்முன், இருள் உண்டாமோ - இருள் தோன்றுவது முண்டோ (இல்லை என்பதாம்).

பொழிப்பு

நீ அரக்கர் குலத்தில் தோன்றினமையால் உன்பால் இயல்பாகவே அமைந்துள்ள வலிமையும், நீ தவங்கிடந்து பெற்றுள்ள வாட்படையும், முக்கோடி வாழ் நாளும், மற்றும் நீ அடைந்துள்ள ஏனைய சிறப்புக்கள் எல்லாவற்றையும், உனக்குத் தந்தருளிய பிரமன் முதலியோர் மீண்டும் உனக்கு நல்கிய வரங்கள் முதலியவைகளும், இராமபிரான் வில்லில் அம்பை ஏற்றி விட்ட அளவில் நீங்கி ஒடிந்து உடைந்து நீயும் இறந்துபடுதல் உண்மையாகவே நிகழக்கூடியனவாகும். ஒளிவீசி எரிகின்ற விளக்கின்முன் இருள் தோன்றுவதும் உண்டோ என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளிலே இராவணனிடத்தில் இயல்பாகவே அமைந்துள்ள வலிமையுடன், அவன் வரத்தினாற் பெற்ற வாள், நாள் முதலியவைகளும் இராம பாணத்தினால் அழிந்தொழியுமென அறிதியிட்டுக் கூறுகின்ற சீதாதேவியின் ஆண்மைக் குரலைக் கேட்கின்றோம்.

அரக்கர் குலத்தினரிடத்தில் இயல்பாகவே வலிமை அமைந்திருக்கும் என்பது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட தொன்றாகும். அத்துடனே அழியாத படைக்கலங்களையும், நீண்ட வாழ் நாளையும், இன்னும் பிற வரங்களையும் தன் முயற்சியால் பெற்ற இராவணனின் எல்லையில்லாத ஆற்றல், அறத்தை மறந்து அயலான் மனையாளை அல்லல் புரியும் பொல்லாத செயலினால் அழிந்து போகும் என்னும் உண்மையைச் சீதாதேவியின் குரலோடு கலந்து கம்பர் எமக்குக் காட்டுகின்றார்.

பெற்றுடை வாளும் நாளும் பிறந்துடை
உரனும் பின்னும்
மற்றுடை எவையும் என

உ: காண்ட 85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் பெற்றுள்ள வல்லமைப் பாடுகளையெல்லாம் சொல்லிச் சொல்லிக் கம்பர் வியக்கின்றார். இங்ஙனம் எல்லா வல்லமைப் பாடுகளும் நிரம்பப் பெற்ற ஓர் சிறந்த வீரனைக் காண முடியாது என்பதே கம்பரின் கருத்தாகும்.

இராவணன் பெற்றுள்ள எல்லாச் சிறப்புக்களும் இராம பாணத்திற்கு முன் நில்லாது ஒழிந்துபோகும் நிலைமையைச் சீதாதேவி சொல்லாக வைத்துக் கம்பர் கூறும் குரலைக் கேளுங்கள்.

விற்றொழை இராமன் கோத்து விடுதலும்
விலக்குண்டு எல்லாம்
இற்று உடைந்து இறுதல் மெய்யே விளக்கின்
முன் இருள் உண்டாமோ

என வரும் கவிதைத் தொடர்களைப் படிக்கும் பொழுது எழுகின்ற ஓசைப் பெருக்க இராமபாணத்தின் ஆற்றலை அப்படியே எடுத்துக் காட்டுகின்றது. ''எல்லாம் இற்று உடைந்து இறுதல் மெய்யே'' என்னுந் தொடரில் இராமபாணங்கள் எமது கண்முன் நின்று இராவணனின் ஆற்றல்களை யெல்லாம் அழித் தொழிப்பது போன்ற ஓசைத் துடிப்பைக் காண்கின்றோம்.

விளக்கின்முன் இருள் உண்டாமோ என்னும் தொடரில் வரும் விளக்கு - இராமபிரானையும், இருள் - இராவணனையும் குறிக்கின்றது. விளக்கின்முன் இருள் நில்லாத தன்மையைப்போல இராமபிரான் செலுத்தும் அம்புகளின்முன் இராவணனின் வாள் வலிமை, நாள் வலிமை, வரவலிமை, குல வலிமை முதலியன வெல்லாம் நில்லாது அழிந்துவிடும் எனக் கம்பர் எடுத்துக் காட்டியுள்ளார். இங்ஙனம் எடுத்துக் காட்டாக அமைந்துள்ள விளக்கின் முன் இருள் உண்டாமோ என்னுந் தொடர் எடுத்துக் காட்டு உவமை அணியாகும் எடுத்துக் காட்டணி என்பது உவமான உவமேயங்களைத் தனித்தனித் தொடர்களாக நிறுத்தி இடையில் அதுபோல எனும் உவமை உருபு கொடாமல் கூறப்படுவதாகும். இதனை,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என வரும் திருக்குறளால் உணர்க. இதில் எழுத்தெல்லாம் அகரமாகிய முதலை உடையது. அதுபோல உலகம் ஆதிபகவனுகிய முதலை உடையது எனப் பொருள்படும். அதுபோல எனும் உவமை உருபு தொக்கு நின்றது; விளக்கின்முன் இருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாமைபோல இராமபாணத்தின் முன் இராவணனின் ஆற்றல்கள் எல்லாம் நில்லாதனவாய் அழிந்துபோகும் எனப் பொருள்தந்து எடுத்துக் காட்டு உவமையாக நின்றதென்பதாம்.

இராமபாணத்திற்குமுன் இராவணனின் வரபலம் முதலியன நில்லாது என்பதை

புரம்பற்றிய போர் விடையோ னருளால்
வரம்பெற்ற வுமற்றுளவிஞ் சைகளும்
உரம்பெற் றனவா வனவுண் மையினேன்
சரம்பற் றியசா பம் விடுந் தனையே

எனச் சடாயு கூறிய மொழிகளாலும் அறிக.

மேருவில் முரிந்த ஓசை

122. குன்றுநீ யெடுத்த நாட்டன் சேவடிக்
கொழுந்தா லுன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரந்
துரந்த மேரு
என்றுணைக் கணவ னுற்றற் குரனிலா திற்று
வீழ்ந்த
அன்றெழுந் துயர்ந்த வோசை கேட்டிலை
போலு மம்மா

கொண்டுகூட்டு: நீ, குன்று எடுத்த நாள், தன் சேவடிக் கொழுந்தால், உன்னை வென்றவன் புரங்கள் வேவ, தனிச்சரம் துரந்த, மேரு, என்துணைக் கணவன (கணவனின்) ஆற்றற்கு, உரன் இலாது இற்று வீழ்ந்த அன்று எழுந்து உயர்ந்த ஓசை, கேட்டிலை போலும் (அம்மா - அசை)

பொருள்

நீ குன்றெடுத்த நாள்-நீ திருக்கயிலை மலையை (வேரோடும் பறித்து) எடுத்த அக்காலத்தில், தன் சேவடிக் கொழுந்தால்-தன் சிவந்த திருவடியின், கொழுந்தாகிய ஒருவிரலால் அழுத்தி, உன்னை வென்றவன் - உன்னை வெற்றி கொண்டவராகிய சிவ பெருமான், புரங்கள் - திரிபுரங்களும், வேவ - வெந்து நீறுகும் வண்ணம் (வேகும்படி) தனிச்சரம் - ஒப்பற்ற அம்பினை, துரந்த-(தொடுத்து) எய்த, மேரு - மேருமலை யாகியவில், (சிவதனுசு) என்துணைக் கணவன்-என்னுயிர்க்கு என்றும் துணையாய் விளங்கு கின்றவனும் என் தலைவனுமாகிய இராமபிரானின், ஆற்றற்கு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையைத் தாங்குதற்கு ஏற்ற, உரன் இலாது - வலிமை யில்லாமல், இற்றுவீழ்ந்த - ஒடிந்து வீழ்ந்த, அன்று - அக்காலத் தில், எழுந்துயர்ந்த ஓசை - தோன்றி எங்கும் பரந்த பேரோ சையை (உண்டான பேரோசையை) கேட்டிலை (போலும்) - நீ கேட்டிலையோ (போலும் - அசை)

பொழிப்பு

நீ திருக்கயிலை மலையை வேரொடும் பறித்தெடுத்தபொழுது தன் சிவந்த திருவடியின் கொழுந்தாகிய ஒரு விரலால் அழுத்தி உன்னை வெற்றிகொண்ட சிவபெருமான், திரிபுரங்களும் வெந்து நீறுகும் வண்ணம் ஒப்பற்ற அப்பினைத் தொடுத்து எய்த மேரு மலை ஆகிய வில், என்னுயிர்க்கு என்றும் துணையாய் விளங்கு கின்றவனும், என் தலைவனுமாகிய இராமபிரான் வலிமையைத் தாங்குதற்கு ஏற்ற வலிமையில்லாமல் ஒடிந்து வீழ்ந்த அக்காலத் தில் தோன்றி எங்கும் பரந்த பேரோசையை நீ கேட்டிலையோ? என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளிலே தன்னை மணம் செய்வதற்காகச் சிவபெரு மான் திரிபுரத்தை எரித்தற்குக் கொண்ட வில்லாகிய மேரு மலையை இராமபிரான் வளைத்து ஒடித்த வரலாற்றைக் கூறு கின்ற சீதாதேவியின் பெருமிதக் குரலைக் கேட்கின்றோம்.

திரிபுரத்தை எரித்தபோது சிவபெருமான் கைக்கொண்ட வில்லாகிய மேருமலையை, தன் திருமணக்காலத்தில் இராம பிரான் வளைத்து ஒடித்தாரென எடுத்துக்கூறி இராவணனைத் திருத்தி வாழ்விக்க எண்ணுகின்ற சீதாதேவியின் தூய தாய்மை யுள்ளத்தைக் காண்கின்றோம்.

குன்று நீ எடுத்தநாள் தன் சேவடிக்
கொழுந்தால் உன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரம்
துரந்தமேரு

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஓசை இராவண னின் ஆண்மைக் குறைவை அவன் உள்ளத்தில் பதிக்கத்தக்க ஆற்றலுடன் பொலிகின்றது. கயிலைமலையை இராவணன் தூக்கிய பொழுது அம் மலையின்மேல் எழுந்தருளியிருந்த சிவபெருமான் தமது ஒரு விரல் நுனியால் அம்மலையை அழுத்தியவுடன் இராவணன் அதன்கீழ் அகப்பட்டுத் தன் ஆற்றல் அழிந்த நிலையைச் சீதாதேவி எடுத்துச் சொல்லுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவடிக் கொழுந்தால் உன்னை வென்றவன்

எனச் சிவபெருமானின் பேராற்றலையும், இராவணனின் ஆண்மைக் குறைவையும் அழுத்தந் திருத்தமாகச் சீதாதேவி எடுத்துக் கூறுந் திறன் பாராட்டிற்குரியதாகும்:

இத்துணைப்பெரும் ஆற்றல் வாய்ந்த சிவபெருமான் திரிபுரத்தை எரித்தற்காகக் கைக்கொண்ட வில்லாகிய மகாமேருவைத் தன் சுயம்வர காலத்தில் இராமபிரான் வளைத்து ஒடித்த பேராண்மைச் செயலை நேரிற்கண்ட சீதாதேவி மிகமிக எழுச்சியுடன் எடுத்துரைக்கின்றாள்:

மேரு என்துணைக் கணவன் ஆற்றற்கு
உரன் இலாது இற்று வீழ்ந்த
அன்று எழுந்து உயர்ந்த ஓசை
கேட்டிலை போலும்

எனச் சீதாதேவி இராவணனைக் கேட்கின்ற குரலிலே எழுந்து அலைமோதுகின்ற பெருமிதம் இராவணன் உள்ளத்தை நடுங்கச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இராமபிரான் சிவதனுவாகிய மகாமேருவை ஒடித்த பொழுது எழுந்த ஓசை உலகமெங்கும் கேட்டதென்பதை,

கற்றை வார்சடைக் கணிச்சி வானவன்
முற்ற ஏழுலகையும் வென்ற மூரிவில்
இற்ற பேரொலி கொள் அன்று இடித்தது
ஈங்கென்றாள்

எனவும்,

சிலையை நீ இறுத்த ஓசை செவியுறச் சிறிவந்தேன்

எனவும் வரும் மொழிகளை நோக்கி உணர்க.

இங்ஙனம் சிவனுடைய வில் ஒடிந்த பேரோலியை நீ கேட்டிருந்தால் உன்னையே பெரு வீரனென வியந்து கூறிக்கொண்டு என்னைச் சிறையில் வைத்து இன்னல் புரியமாட்டாய் எனச் சீதாதேவி குறிப்பாக இராவணனுக்குக் கூறுகின்றாள் என்பதை உணர்கின்றோம். தன்னை ஒருவிரலின் நுனியால் வென்ற முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் முப்புரத்தை எரித்தபொழுது கைக்கொண்ட வில்லாகிய மேருமலையை ஓர் கண்இமைப்பொழுதில் வளைத்து ஒடித்த இராமபிரானுடைய ஆற்றலை இராவணன் எண்ணுவானானால் தன்னைச் சிறையிலிருந்து விடுதலைசெய்து இராமபிரானின் அருளைப்பெற முயலுவான் என்பதே சீதாதேவியின் கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமபிரான் சிவதனுவாகிய மகா மேருமலையினை மிக எளிதில் வளைத்து ஒடித்த செயலை

தடுத்து இமையாமல் இருந்தவர் தாளில்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்

எனக் கம்பர் கூறுவதால் உணர்க.

இளையவன் நிற்க ஏன் வந்திலை

123. மலையெடுத் தெண்டிசை காக்கு மாக்களை
நிலைகெடுத் தேனெனு மாற்ற நேருநீ
சிலையெடுத் திளையவ னிற்கச் சேர்ந்திலை
தலையெடுத் தின்னமு மகளிர்த் தாழ்த்தியோ

கொண்டுகூட்டு: மலை எடுத்து எண்திசை காக்கும் மாக்களை, (யான்) நிலை கெடுத்தேன் எனும் மாற்றம் நேரும் நீ, சிலை எடுத்து இளையவன் நிற்க சேர்ந்திலை, தலை எடுத்து இன்னும் மகளிர்த் தாழ்த்தியோ.

பொருள்

மலை எடுத்து - கயிலைமலையை வேரொடும் தூக்கி எடுத்து, எண்திசை காக்கும் - எட்டுத் திக்குகளையும் காவல் புரிகின்ற, மாக்களை - திசையானைகளை, நிலை கெடுத்தேன் - நிலைகலங்கச் செய்து வென்றேன், எனும் மாற்றம் - என்னும் வீரமொழிகளை, நேரும் நீ - (மிகப் பெருமிதத்தோடு) சொல்லிக் கொண்டு திரிகின்ற நீ, சிலை எடுத்து - வில்லைத் தாங்கியவனுய், இளையவன் நிற்க - இளைய பெருமாளாகிய இலக்குமணன் என்னைக் காத்து நின்ற போது, சேர்ந்திலை-நீ என்னைக் கவர்ந்து செல்ல வந்திலை (இலக்குமணன் என்னை விட்டுப் பிரிந்து சென்றபின் வந்தாய் என்பதாம்) தலை எடுத்து - (இப்பொழுது) தலைதூக்கி (நாணமின்றி) இன்னமும் - இனியும், மகளிர்த் தாழ்த்தியோ - பெண்களை வணங்குவாயோ.

பொழிப்பு

கயிலைமலையை வேரொடும் தூக்கியெடுத்தேனென்றும், எட்டுத் திக்கு யானைகளையும் நிலை கலங்கச் செய்து வென்றேனென்றும், வீரமொழிகளைக் கூறித்திரிகின்ற நீ, வில்லைத் தாங்கியவனுய் இலக்குமணன் என்னைக் காத்து நின்ற பொழுது வாராமல் அவன் என்னைப் பிரிந்து சென்றபின் வந்தாய். இப்பொழுது நாணமில்லாமல் தலைதூக்கிப் பெண்களை வணங்குவாயோ என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச் செய்யுளில் வில்லேந்தியவனுய் இலக்குமணன் தன்னைக் காத்து நின்றபொழுது வாராமல் அவன் சென்றபின்பு வந்து தன்னைக் கவர்ந்த இராவணனின் ஆண்மையற்ற பேடிச் செயலை எடுத்துக் கூறும் சீதாதேவியின் எழுச்சிக்குரலைக் கேட்கின்றோம்.

இலக்குமணன் வில்லேந்திய கையுடன் தன்னைக் காவல் புரிந்து நின்ற பொழுது இராவணன் வந்து இலக்குமணனோடு போர்புரிந்திருப்பானுனுல் இராவணன் வென்றிருக்கமாட்டான் என்னும் உண்மையை நன்கு தெரிந்த சீதாதேவி, இராவணனை நோக்கிக் கூறுகின்ற உரைகள் அவனை நாணமடையச் செய்திருக்கும் என்பதை உணர்கின்றோம்.

மலையெடுத்து எண்திசை காக்கும் மாக்களை
நிலைகெடுத்தேன் எனும் மாற்றம் நேரும்நீ

எனச் சீதாதேவி இராவணனை இகழ்ந்துரைக்கின்றுள். இராவணன் அடிக்கடி தான் வெள்ளிமால்வரையைத் தூக்கியெடுத்த வீரச் செயலையும், திசையானைகளை நிலைகலங்கச் செய்து வென்ற வீரச் செயலையும் எடுத்தெடுத்துக் கூறித் தற்பெருமை கொள்ளும் இயற்கை வாய்ந்தவன் என்பதை,

ஈசன் ஆண்டு இருந்தபோர் இலங்கு மால்வரை
ஊசி வேரொடும் பறித்து எடுக்கும் ஊற்றத்தான்
ஆசைகள் சுமந்த பேர் அமரி யானைகள்
பூசல்செய் மருப்பினைப் பொடிசெய் தோளினுன்

எனச் சீதாதேவியிடம் அவன் தன்னைப் புகழ்ந்து முன் கூறுவதாலும் உணர்க.

இங்ஙனமெல்லாம் வீரமொழி கூறுகின்ற நீ, வில்லேந்திய கையுடன் இலக்குமணன் என்னைக் காத்து நின்றபொழுது வந்திருப்பாயானுல் அன்றே உன் ஆற்றலெல்லாம் அழிந்து ஆவி விடுத்திருப்பாய் எனக் கூறுமாற் கூறுகின்ற சீதாதேவியின் வீர மொழிகளைக் கேட்கின்றோம்.

சிலை எடுத்து இளையவன் நிற்கச் சேர்ந்திலை
தலை எடுத்து இன்னமும் பகளிர்த் தாழ்தியோ

எனச் சீதாதேவி இராவணனைக் கேட்கின்ற குரலிலே அவனின் ஆண்மைக் குறைவையும், மானமும் நாணமுமில்லாது மகளிரை வணங்குகின்ற காமவேட்கை மிகுந்த பேடித்தன்மையையும் எடுத்துக் காட்டி இடித்துரைக்கும் ஏற்றத்தை உணர்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானின் அன்று இகல்கரன் படைபடுத்த
அக்கரியோன்
தானும் இந்திரன் தன்னை ஓர் தனுவலம் தன்னுல்
வானில் வென்ற என்மதலையும் வரிசிலை பிடித்த
யானும் அல்லவர் யார்உனக்கு எதிர்என்றும்
இசைத்தான்

என இராவணன் முதற்போரில் இலக்குமணனின் வீரத்தைப் பாராட்டி உரைத்தலையும் நோக்குக. எனவே சீதாதேவி கூறிய வண்ணம் சிலையெடுத்து இலக்குமணன் சீதாதேவிக்குக் காவலாய் நிற்கும்பொழுது இராவணன் வந்திருப்பானுனல் இலக்குமணனை வென்றிருக்க மாட்டான் எனும் உண்மை இதனுல் வலியுறுதல் காண்க. இனி, எண்டிசை காக்கும் மாக்களை நிலை கெடுத்தேன் எனுந் தொடருக்கு எட்டுத்திசைகளையும் காக்கின்றவர்களையும் நிலைகெடச் செய்து வென்றேன் எனவும் பொருள் கூறலாம்.

ஆழியெம் கோமகன்

124. ஏழைநின் னொளித்துறை யின்ன தாமென
ஆழியெங் கோமக னறிய வந்தநாள்
ஆழியு மிலங்கையு மழியத் தாழுமோ
ஊழியுந் திரியுமுன் னுயிரொ டோயுமோ

கொண்டுகூட்டு: ஏழை நின் ஒளித்து உறை இன்னது (ஆம்) என, ஆழி எம் கோமகன், அறியவந்த நாள், ஆழியும் இலங்கையும் அழிய தாழுமோ? உன் உயிரொடு ஓயுமோ? ஊழியும் திரியும்.

பொருள்

ஏழை - அறிவிலியே, (அறிவில்லாதவனே) நின் ஒளித்து உறை - நீ மறைந்து இருக்கும் இடம், இன்னது (ஆம்) என - இதுவென்று, ஆழி எம் கோமகன் - ஆணையாகிய சக்கரத்தை யுடைய எங்கள் சக்கரவர்த்தித் திருமகனுகிய இராமபிரான் (எமது தலைவனுகிய இராமபிரான் என்றும் உரை கூறலாம்) அறிய வந்த நாள் - அறிந்து கொள்ள நேர்ந்தபோது (அறிந்து இங்கு வரும் நாளில்), ஆழியும் இலங்கையும் - இலங்கையைச் சூழ்ந் துள்ள கருங்கடலும் இலங்கையும், அழிய - அழிந்துபட, தாழுமோ - (எம் கோமகனுகிய இராமபிரான்) சினந்தணி வானே (தணியான்), உன் உயிரொடு - (அல்லது) உன் உயிரை உண்டு அதனேடு, ஓயுமோ - எம் கோமகனின் சினம் ஓடுங் குமோ (ஓடுங்காது), ஊழியும் திரியும் - (அவன் சினத்தினுல்) ஊழிகாலமும் வேறுபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

அறிவில்லாதவனே நீ மறைந்திருக்கும் இடம் இதுவென்று ஆணையாகிய சக்கரத்தையுடைய எங்கள் சக்கரவர்த்தித் திருமகனென்னும் இராமபிரான் அறிந்துகொள்ள நேர்ந்தபோது, இலங்கையைச் சூழ்ந்துள்ள கருங்கடலும், இலங்கையும் அழிந்துபட்டாலும் இராமபிரான் சினம் தணிவானே? அல்லது உன் உயிரை உண்டு தன் சினம் தணிவானே? அவன் சினத்தினுல் ஊழிகாலமும் வேறுபடும் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் நீ ஒளித்துறையும் இடத்தை என் தலைவனுகிய இராமபிரான் அறிய நேரிடும்பொழுது நீ அழிவது திண்ணமென இராவணனுக்குக் கூறுகின்ற சீதாதேவியின் ஆண்மைக்குரலைக் கேட்கின்றோம்.

தன்னை இராவணன் சிறை வைத்திருக்கும் இடம் இது வென்பதைத் தன் தலைவனுகிய இராமபிரான் அறிவானுனுல் ஓர் கண் இமைப்பொழுதில் இராவணனைக் கொன்று தன்னை மீட்டருளுவான் என்பதே சீதாதேவியின் எண்ணமாகும். இராமபிரானின் சினத்தினுல் இராவணனும் இலங்கையும் அழிதலே அன்றி, ஏனைய உலகங்களும் அழிந்தொழியும் எனச் சீதாதேவி அஞ்சுகின்றுள்.

ஏழைநின் ஒளித்துறை இன்னதாம் என
எங் கோமகன் அறிய வந்தநாள்
ஆழியும் இலங்கையும் அழியத் தாழுமோ
ஊழியும் திரியும் உன் உயிரொடு ஓயுமோ.

எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறுகின்ற குரலில்லே அச்சத்தோடு கலந்த இரக்க உணர்ச்சி அலையெறிதலைக் காண்கின்றோம்; இராவணன் தன்னைச் சிறையினின்றும் விடுதலை செய்து இராமபிரானின் அருளைப்பெறத் தவறுவானுயின் இலங்கையோடு அவன் அழிந்துபடுதலேயன்றி, ஏனைய உலகங்களும் அழிய நேரிடுமே என்ற அச்சத்தினுல் தாய்மை உள்ளம் படைத்த சீதாதேவி மிக வருந்துகின்றுள் என்பதை அறிகின்றோம்.

பெண்தனி ஒருத்திதன்னை பேதைவாள்
அரக்கன் பற்றிக்
கொண்டனன் ஏகநீ இக்கோளுற குலுங்கல்
செல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்திசை இறுதி ஆன உலகங்கள் இவற்றை
இன்னே
கண்ட வானவர்களோடும் கூளியுமாறு
இன்று காண்டி.

எனச் சடாயுவிடம் இராமபிரான் கூறுகின்ற வெஞ்சின உரை களை நோக்குக. இவ் வெஞ்சின உரைகளால் சீதாதேவி இராம பிரானின் சினத்தால் உலகம் அழிந்துவிடுமோ என அஞ்சி ஏங்குகின்ற செயல் வலியுறுதல் காண்க.

இனி, ஆழி எம்கோமகன் என்பதை, வாழி எம் கோமகன் எனப் பாடம் கொள்வாரும் உளர். இன்னதாம் என்பதில் வரும் ஆம்-அசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. நஞ்சனைய இராவணனுக்குச் சீதாதேவி நயமொழிகளால் நவிலும் அறநெறிகள்

[125 — 136 செய்யுள்]

நஞ்சனைய இராவணனை வெஞ்சின மொழிகளால் வெறுத்துரைத்த சீதாதேவி, நயமொழிகளால் அவனுக்கு, நவிலும் அறநெறிகளை இப்பகுதியில் காண்கின்றோம்.

வஞ்சனை வல்ல இராவணனின் நெஞ்சில் அறநெறியைப் பதியவைத்து அவனை உய்விக்கக் கருதிய சீதாதேவி கூறுகின்ற உறுதியுரைகள் மிகமிக உயர்ந்தனவாகும்:

அறிவில்லாதவனே! நீ வஞ்சனை செய்தமையால் உன்னுடன் உன் குலத்தினர்களாகிய அரக்கர்களும் அழியப்போகின்றார்கள்; இவ்வளவில் இராமபிரானின் சினந்தணியாது. எல்லா உலகங்களும் அவனின் சினத்தால் அழியப்போகின்றதே என எண்ணி யெண்ணி அஞ்சுகின்றேன். நிலவுலகத்தின்கண் வாழும் மக்களும், வானுலகத்தின்கண் வாழும் வானவர்களும் அஞ்சும்வண்ணம் வாழும் அரக்கனே, அறிவில்லாதவனே, உன் புன்தொழிலைப் போக்காமல் இருக்கின்றாய். திருமால், நான்முகன், சிவன் என்னும் மூவரைப் போலவே எங்கள் முதல்வனாகிய இராமபிரானையும் நீ நினைத்து விட்டாய். இதுமட்டோ? நீ இராம இலக்குமணர்களைப் புல்லிய மனிதர்கள்தானே என்றெண்ணிப் பொருட்படுத்தாமல் இருக்கின்றாய். இங்ஙனம் நீ எண்ணிக்கொண்டிருத்தல் பொருந்தாது. மலையைப்போன்ற கார்த்தவீரியார்ச்சுனனும் ஒரு மனிதன்தானே. நீ அக் கார்த்தவீரியனால் தோல்வி அடையவில்லையா? நீ இராம இலக்குமணர்களைத் தவ வேடத்தினர் வலியிலர் என இகழ்கின்றாய். தவசியாகிய சிவபெருமானின் கால்விரல் ஒன்றினால் நீ ஆற்றல் தொலைந்து அல்லற்பட வில்லையா. இவற்றையெல்லாம் சிந்தித்துத் தெளிவாயாக.

ஒப்பில்லாத உயர்ந்த பெருஞ் செல்வத்தையும், உயிரையும் விட மூன்வந்துள்ள அறிவிலியே! அரக்கர்களாகிய நாம் அனைவிறந்தவர்கள், இராம இலக்குமணர்கள் இருவர்தானே என்று இகழ்ந்து எண்ணுகின்றாயா. ஊழிகாலத்தில் உலகங்களை எல்லாம் அழித்து ஊழிகாலத் தலைவனைத் தான்மட்டும் நிற்கும் தனிப் பெரும் பரம்பொருளே இராமபிரானாக விளங்குகின்றார் என்பது, போர்புரியுங் காலத்துத்தான் உனக்குப் புலனாகும்.

முற்காலத்தில் அரக்கர் குலத்திலே தோன்றி ஆண்மை மிக்கவர்களாய் அறத்தை மறந்து வாழ்ந்த, இரணியன், இரணியாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன், முதலிய பெரும் வீரர்களும் இருந்தார்கள். அங்ஙனம் வீற்றிருந்த அரக்கர்குல வீரர்கள் அறநெறி தவறியவர்களாயினும், உன்னைப்போலப் பிறன்மனை விழைதலாகிய பெருங்குற்றத்தைப் புரிந்திருந்தவர்கள் யாருளர்? ஒருவரும் இல்லையென்றே கூறலாம். ஐம்பொறிகள் சென்ற வழிகளில் அள்ளுப்பட்டுத் தாமும் செல்லாது, ஐம்பொறிகளை அடக்கி நன்னெறிப்படுத்தியவர், நான்முகன் முதலான அமரர்களோ, அல்லது அரக்கர்களோ என்பதை ஆராய்ந்து காண்பாயாக. அமரர்களே புலன்களை அடக்கியவர்கள். நல்வினைகளை ஆற்றியவர்கள். அழியாமல் நிலைத்து வாழ்கின்றவர்கள் என்பதையும், அரக்கர்கள்தான் புலனை அடக்காமல் தீய நெறிகளிற் சென்று, நிலைத்து வாழாமல் நிலைகெட்டழிந்தார்கள் என்பதையும் அறியலாம். மூவகை உலகங்களும் உன் ஆணையுள் அடங்கும் முதன்மைவாய்ந்த பெருவாழ்வு உனக்கமைந்துள்ளதானால், அவ்வாழ்வு, உன் பாவத்தின் பயனாக வந்ததோ? நீ முன் செய்த புண்ணியத்தின் பயனாக வந்ததோ என்பதை ஆராய்ந்து தெளிவாயாக.

இத்துணைப் பெருஞ் செல்வத்தை, நீ எப்பொழுதும் தவநெறியில் தப்பாது நின்று நுகரவேண்டும் என்னும் தண்ணருளாலல்லவா, முழுமுதலிறைவனாகிய சிவபெருமான், உனக்கருளினானென்பதை நீ மறந்துவிட்டாய். அறிவில்லாதவனே, உன் பெருஞ் செல்வ வாழ்வும் உறவினரும் அழிந்துபோகும் வண்ணம் நினைந்து அறநெறியில் தவறிவிட்டாய்; நீ அறத்தின் மேம்பாட்டை யறிந்து உய்வடைய மாட்டாயா? வழுவாத வீரமும், எவரிடத்திலும் தோல்வி யடையாத பேராற்றலும் படைத்தவர்களானாலும், அறத்தை மறந்தவர்களும், அருளை நீங்கினவர்களும், இழிந்தவர்களேயாவர்; காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று பகைகளையும் வென்று, பிறவிப் பிணியில் நின்றும் நீங்கியவர்களே உயர்ந்தவர்களாவர் என்பதையும் உணர்வாயாக.

என் தலைவனாகிய இராமபிரான் வனத்தின்கண் வந்து புகுந்தவுடன், இனிய தமிழை உணர்ந்த அகத்தியர் முதலான முனிவர்கள், யாவரும் அவரைக் கண்டு வணங்கி, அரக்கர்களை அழித்து, எங்கள் தவவாழ்வைக் காத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அம்முனிவர்களின் வேண்டுதலை இராமபிரான் நிறைவேற்றியருளுதற்கான கொடுஞ்செயல்களையே நீயும் மேற்கொண்டுள்ளாய். இங்ஙனம் உன் வலிமையையும், உன் படைப் பெருக்கையும் அம்முனிவர்கள் மொழியக் கேட்ட பின்புதான், உன் தங்கையின் உறுப்புக்களை வெட்டியும், உன் தம்பியாகிய கரனைக் கொன்றும், இராமபிரான் ஆற்றிய வீரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களைச் சிந்தித்துப் பார்ப்பாயாக. உன்னுடைய இருபது கைகளையும் பிடித்துக் கொண்டு, உன் வாயில் நின்றும் குருதி வழியும் வண்ணம், உன்னைக் குத்திச் சிறையில் வைத்த, வீரனாகிய கார்த்தவீரியார்ச்சுனனின் ஆயிரந்தோள்களையும் வெட்டி வீழ்த்தி வென்றவனாகிய பரசுராமன், இராமபிரானால் தன் ஆண்மை அழிந்த செயலையும் நீ அழிந்திலையோ? கடிதீதுத் தன் கொடிய நஞ்சினால் உயிர்களைக் கொல்லும் கொடிய பாம்பும், மந்திரத்திற்குக் கட்டுப்பட்டு நிற்கும். உன்மனம் போனபோக்கிற் சென்று அறத்தை மறந்து, அல்லல் தரும் தீமைகளை ஆற்றிக் களித்துத் திரிகின்ற உன்னை, அடுத்து இது தக்கது, இது தகாதது, என இடித்துரைத்து அறநெறியில் ஆற்றுப்படுத்தக்கூடியவர்கள் இல்லை. நீ எண்ணுகின்ற தீய செயலை ஆற்றும் வண்ணம் ஊக்கந் தருகின்றவர்கள் தான் உனக்குத் துணையாக இருக்கின்றார்கள். அழிவில்லாமல் ஆக்கம் உனக்கு, எங்ஙனம் உண்டாகும்?

அஞ்சுகின்றேன்

125. வெஞ்சின வரக்கரை விளித்து வீயுமோ
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தான்
எஞ்சலி லுலகெலா மெஞ்சு மெஞ்சுமென்
றஞ்சுகின் றேனிதற் கறமுஞ் சான்றரோ.

கொண்டுகூட்டு: நீ வஞ்சனை செய (செயலால் எழுந்த) வள்ளல் சீற்றம் வெஞ்சின அரக்கரை விளித்து (அவ்வளவில்) வீயுமோ? (அல்லது) எஞ்சலில் உலகு எலாம் எஞ்சும் எஞ்சும் என்று அஞ்சுகின்றேன் இதற்கு அறமும் சான்று அரோ, அத்து, ஆன் மூன்றும் அசை)

பொருள்

நீ-கொடியவனாகிய நீ, வஞ்சனைசெய-வஞ்சனையாக என்னைக் கவர்ந்து வருதலாகிய செயலைச் செய்ததால் எழுந்த, வள்ளல்-அருள் வள்ளலாகிய இராமபிரான் உள்ளத்தில் மூண்டெழுந்த, சீற்றம்-கோபம் (கொடுஞ்சினம்), வெஞ்சின-கொடிய கோபத்தினையுடைய, அரக்கரை-அரக்கர்களை, விளித்து-அழித்து, வீயுமோ-தணியுமோ (அடங்குமோ) எஞ்சலில்-கெடாத, உலகெலாம்-உலகமெல்லாம், எஞ்சும் எஞ்சும் என்று-அழிந்துவிடுமோ அழிந்துவிடுமோ என்று, அஞ்சுகின்றேன்-அச்சமுறுகின்றேன், இதற்கு-(நற்குணங்களால் நிறைந்த பெரியோர்களின் சினம் குற்றவாளியையும் அவன் இனத்தையும் அழிக்கும்) என்பதற்கு, அறமும் சான்று-அறநூலும் சாட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

கொடியவனுகிய நீ வஞ்சனையாக என்னைக் கவர்ந்து வருதலாகிய செயலை ஆற்றியதால், அருள் வள்ளலாகிய இராமபிரான் உள்ளத்தில் நின்றும் மூண்டெழுந்த கொடும்சினம் அரக்கர்களை அழித்தளவில் தணியுமோ? உலகமெல்லாவற்றையும் அழித்துவிடுமோ என்றெண்ணி அச்சமுறுகின்றேன். இதற்கு அறநூலும் சாட்சியாகும் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் அரக்கர்கோனுகிய இராவணன் இயற்றிய வஞ்சனையால் இராமபிரான் உள்ளத்தில் மூண்டெழுந்த கொடும்சினம் இராவணனைக் குலத்தோடு அழித்தலேயன்றி உலகமெல்லாவற்றையும் அழித்துவிடுமோ என எண்ணி அல்லலுறுகின்ற சீதா தேவியின் தாய்மைக் குரலைக் கேட்கின்றோம்:

அருள்நலம் கனிந்த பெரியோர்கள் உள்ளத்தில் மூண்டெழுந்த சினம் அவர்க்குத் தீங்கு செய்தவனை மட்டுமன்றி அவன் குலத்தினரையும் அழித்துவிடும் என்பது அறநூல் முடிபாகும்; இராவணன் செய்த தீமையால் அவனும் அவன் குலத்தினரும் அழிவதேயன்றி உலகமெல்லாம் அழியப்போகின்றதே எனச் சீதாதேவியின் உள்ளம் உருகுகின்றது.

வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தான்
வெஞ்சின அரக்கரை விளித்து வீயுமோ

எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறுகின்ற குரலிலே வஞ்சனையாளனுகிய நீயேயன்றி உன் குலமும் இராமபாணத்தால் அழியப் போகின்றது எனும் உண்மையை இராவணன் உள்ளத்தில் பதியச் செய்தற்காக உள்ளம் துடிக்கின்ற சீதாதேவியின் உணர்ச்சியைக் காண்கின்றோம்.

கொடுத்தனை இந்திரர்க்கு உலகும் கொற்றமும்
கெடுத்தனை நின்பெரும் கிளையும் நின்னையும்

எனக் கும்பகருணனும்

குலம்செய்த பாவத்தாலே கொடும்பகை
தேடிக்கொண்டோம்

என இந்திரசித்தனும் இராவணனிடம் கூறிய உரைகளால் இராவணன் செய்த தீமையினுலே அவன் குலமும் அழியுமெனச் சீதாதேவி கூறும் உண்மை வலியுறுதல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சலில் உலகெலாம் எஞ்சும் எஞ்சுமென்று
அஞ்சுகின்றேன் இதற்கு அறமும் சான்று

எனச் சீதாதேவி மீண்டும் மீண்டும் இராவணனுக்குக் கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஓசை அவளின் அச்சத்தையும் ஆண்மையையும் அப்படியே எடுத்துக் காட்டுகின்றது.

இச்செய்யுளில் அறம் என்றது—அறநூலைக் குறிக்கின்றது.

செய்த தீவினை செய்தவர்க்கு எய்திடும்
ஐயமில்லை அறம் கரி ஆதலால்

எனவும்,

செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே

எனவும் வரும் இச்செய்யுட் பகுதிகளில் உள்ள அறம் என்னும் சொல் அறநூலை உணர்த்தி நிற்றல் காண்க. எனவே அருள் நலம் கனிந்த பெரியோர்க்குத் தவறு செய்தோர் தம் கிளையொடும் தம்மைச் சார்ந்தாரோடும் கெடுவர் என்பது அறநூற் கொள்கையாகுமென அறிகின்றோம், இதனை,

குன்று அன்னர் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்று அன்னர் மாய்வர் நிலத்து.

எனவரும் திருக்குறளால் உணர்க;

எங்கள் நாயகன்

126. அங்கண்மா ஞாலமும் விசும்பு மஞ்சவாழ்
வெங்கணைய் புன்றொழில் விலக்க மேற்கொளாய்
செங்கண்மா னான்முகன் சிவனென் றேகொலோ
எங்களை யகனையு நினைந்த தேழைநீ

கொண்டுகூட்டு: அங்கண் மாஞாலமும், விசும்பும், அஞ்சவாழ் வெங்கணையை, ஏழை புன்தொழில் விலக்க மேற்கொளாய், செங்கண் மால் நான்முகன் சிவன் என்றே கொலோ எங்கள் நாயகனையும் நீ நினைந்தது.

பொருள்

அங்கண் - அழகிய இடத்தையுடைய, மாஞாலமும்-பெரிய நிலவுலகத்திலுள்ளவர்களும், விசும்பும் - வானுலகத்திலுள்ளவர்களும், அஞ்ச - உன்னைக்கண்டு அச்சங் கொள்ளும்படியாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ் - வாழ்கின்ற, வெங்கணுய் - கொடுமையை உடையவனே, ஏழை - அறிவில்லாதவனே, புன்தொழில் - உன் இழி தொழிலை, விலக்க மேற்கொளாய் - விடுதற்கு முயல்கின்றுயில்லை, செங்கண் மால் - செந்தாமரை மலர்போன்ற சிவந்த கண்களையுடைய திருமாலும், நான்முகன் - நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், சிவன் - சிவபெருமானும், என்றே கொலோ - என்பவர்களைப் போலத்தானே, எங்கள் நாயகனையும் - எங்கள் தலைவனாகிய இராமபிரானையும், நீ நினைந்தது - நீ எண்ணியிருப்பது (இருக்கின்றுய்).

பொழிப்பு

அழகிய இடத்தையுடைய பெரிய நிலவுலகத்திலுள்ளவர்களும், உன்னைக்கண்டு அச்சம் கொள்ளும்படியாக வாழ்கின்ற கொடுமையை உடையவனே! அறிவில்லாதவனே! இன்னும் உன் இழிதொழிலை விடுதற்கு முயல்கின்றுயில்லை, திருமாலும், நான்முகனும், சிவபெருமானும் போன்றவரென்று எங்கள் தலைவனாகிய இராமபிரானையும் நீ நினைத்தது (நினைத்திருக்கின்றுய்) என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராமபிரான் மூவரிலும் மேம்பட்ட ஆற்றல் வாய்ந்தவனென்று இராவணனுக்குக் கூறுகின்ற சீதையின் குரலைக் கேட்கின்றோம்.

இராவணன் திருமால், நான்முகன், சிவன் என்னும் மூவரையும் அவர்கள் தனக்களித்த வரபலத்தினால் வெற்றிகொண்ட செயலை மிகப் பெருமிதத்துடன் சொல்லும் இயல்பையுடையவன் என்பதை உணர்ந்த சீதாதேவி அவனால் வெல்லப்பட்ட மூவரிலும் இராமபிரான் முதன்மை வாய்ந்தவன் என்பதை எடுத்துக் காட்டிய திறன் பாராட்டற்குரியதாகும்.

மூவற்கும் தலைவனை மூர்த்தியார் அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து நின்றூர் காகுத்த வேடம் காட்டி

எனவரும் செய்யுளால் இராமபிரான் மூவரினும் முதன்மை வாய்ந்தவர் என்பதை உணர்க.

மாநிலத்தைப் காவல்புரிகின்ற மன்னன் தீய செயல்களைப் போக்கி மக்கள் உள்ளத்தில் அச்சம் ஏற்படாவண்ணம் செங்கோலரசு செலுத்துதல் வேண்டும். இராவணன் தானே பிறருக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமை புரிந்து துன்புறுத்துகின்ற செயலை மேற்கொண்டு வாழ்கின்றான் என்பதை அறிவுறுத்த எண்ணிய சீதாதேவி "புன் தொழில் விலக்க மேற்கொளாய்" என இராவணனை நோக்கிக் கூறினாள் என்பதை உணர்கின்றோம்.

மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக்
குங்காலத்
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ

எனச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கூறும் செங்கோல் அரசனின் சிறப்பியல்புகளை நோக்குக. இராவணன், வேலி பயிரை மேய்தல் போல அரசனுய் வீற்றிருக்கும் தானே அறத்தை மறந்து அயலான் மனையாளை அல்லலுறுத்தும் பொல்லாத செயலை ஆற்றுகின்றான் என்பதாம்.

வான்நோக்கி வாழும் உலகு எல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

என்பது திருக்குறள்.

இராவணன் மூவரை வென்ற முதன்மையை உடையேன் எனத் தன்னைத் தானே பாராட்டி உரைக்கும் பண்பு வாய்ந்தவன் என்பதை

தேவரின் பெற்ற வரத்தினது என்பெருஞ்
செருக்கேல்
மூவரில் பெற்றம் உடையவன் தன்னையும் முழுதும்
காவலின் பெற்ற திகிரியான் தன்னெடும் கடந்தது
ஏவரின் பெற்ற வரத்தினுல் இயம்புதி இளையோய்

என இராவணன் வீடணனிடம் கூறுவதாலும் உணர்க

நான்முகன், திருமால், சிவன் என்னும் மூவர்களும், இராவணன் ஆற்றுகின்ற கொடுமைகளைக் கண்டும் அவன் கொடுந் தன்மைக்கு அஞ்சி அவனை அழிக்காமல் இருப்பதுபோல தன் தலைவனுகிய இராமபிரான் அங்ஙனம் இராவணனின் ஆற்றலைக் கண்டு அஞ்சாது அவனை எதிர்த்து வென்று அறநெறியை உலகில் நிலை நாட்டுவார் என்பதே சீதையின் கருத்தாகும்.

செங்கண்மால் நான்முகன் சிவன் என்றே கொலோ
எங்கள் நாயகனையும் நினைந்தது ஏழைநீ

அ: கா: 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே அலையெறிகின்ற பெருமி தம் இராமபிரானின் ஆற்றலை இராவணன் உள்ளத்தில் அப்ப டியே பதித்துவிடக் கூடிய பண்புடன் பொலிவதைக் காண்கின் றோம்.

இங்ஙனம் இராவணனுக்குப் பல அறநெறிகளையும் காட்டி இடித்துரைப்பதினால் அவனின் தீய பண்பை மாற்றி வாழ்விக்க லாம் என எண்ணுகின்ற சீதாதேவியின் அருள் உள்ளத்தை எண்ணியெண்ணி ஆனந்தமடைய வேண்டியவர்களாகின்றோம்.

கார்த்தவீரியன்

127. மானுய ரிவரென மனங்கொண் டாயெனின்
கானுயர் வரைநிகர் கார்த்த வீரியன்
தானெரு மனிதனுற் றவத்து ளாரெனில்
தேனுயர் கொன்றையான் றன்மை தேர்தியால்

கொண்டு கூட்டு: இவர் மானுயர் என மனங் கொண்டாய் எனின், கான் உயர் வரைநிகர் கார்த்தவீரியன், ஒரு மனிதனால் தவத்துளார் (மானுயர்) எனில் தேனுயர் கொன்றையான், தன்மை தேர்தியால்.

பொருள்

இவர்-இராம இலக்குமணர்களாகிய இவர்கள், மானுயர்-மனிதர்கள்தானே, என-என்று, மனங் கொண்டாய் எனின்-மனத்தின் கண்ணே மானுடர் வலியற்றவர் பெருந்தேவரையெல் லாம் வென்ற என்னை இவர்கள் என்செய்ய வல்லர் என எண்ணு வாயானால், கான் உயர்வரை நிகர்-காடுகள் வளர்ந்தோங்கிய மலையை ஒத்த, கார்த்த வீரியன்-கார்த்தவீரியார்ச்சுனனும், ஒரு மனிதனால்-ஒரு மனிதனே, (மனிதனாகிய கார்த்த வீரியனிடத்தில் நீ தோற்றிலையோ என்பது குறிப்பாகும்) மானுயர் தவத்துளார்-மானிடர்களாகிய இராம இலக்குமணரிருவரும் தவநிலை மேற் கொண்டவர். எனில்-சருகும் இலையும் தின்றும் தண்ணீர் பருகி யும் வாழ்கின்றவர்களாகிய இவர்கள் என்னை என்ன செய்ய வல்லவர்கள் என்று நீ எண்ணுவாயானால், தேனுயர்-தேன் நிறைந்த, கொன்றையான்-கொன்றைமாலையணிந்த சிவபெரு மானின், தன்மை தேர்தி-ஆற்றலை அறிவாயாக (சிவபெருமா னும் ஓர் தவசிதானே, அவர் கால்விரல் ஒன்றினால் கயிலைமலை யின் கீழ் அகப்பட்டு நீ கிடந்து வருந்தவில்லையா என்பது குறிப் பாகும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

இராம இலக்குமணர்களாகிய இவர்கள் மனிதர்கள்தானே மானுடர் வலியற்றவர், பெருந் தேவரையெல்லாம் வென்ற என்னை இவர்களால் என்ன செய்ய முடியும் என எண்ணுவாயானால், உன்னைவென்று சிறையில் வைத்த கார்த்தவீரியார்ச்சுனனும் ஒரு மனிதன்தானே என்பதை யுணர்வாயாக. இனி இராம இலக்குமணர்கள் தவவேடம் தாங்கியவர்கள்: சருகும் இலையும் தின்றும் தண்ணீர் பருகியும் வாழ்கின்ற இவர்களால் என்னை எங்ஙனம் வெல்ல முடியும் என்று எண்ணுவாயானால், தேன் நிறைந்த கொன்றை மாலையையணிந்த சிவபெருமானும் ஓர் தவசிதானே. அச் சிவபெருமானின் கால்விரல் ஒன்றினால் கயிலை மலையின்கீழ் அகப்பட்டுக் கிடந்து நீ வருந்தியதை மறந்தாயோ என்பதாம்:

விளக்கம்

இச் செய்யுளில் இராம இலக்குமணர்கள் மானுடர்தானே யென இகழ்ந்து கூறுகின்ற இராவணனின் தற்பெருமையைப் போக்குவதற்காகச் சீதாதேவி கூறும் காரணங்களைக் கேட்கின்றோம்:

இராம இலக்குமணர்களை மானுடர் என நீ இகழ்ந்து மதித்தாயானால் உன்னை வென்று சிறையில் அடைத்த கார்த்த வீரியார்ச்சுனனும் ஓர் மானுடன்தானே யென்பதை நீ மறந்தனையோ என இராவணனைச் சீதாதேவி கேட்கின்றாள்:

மானுயர் இவர்என மனங்கொண்டாய் எனின்
கானுயர் வரைநிகர் கார்த்த வீரியன்
தானெரு மனிதன்

எனச் சீதாதேவி கூறும் குரலிலே கார்த்தவீரியார்ச்சுனனென்னும் மனிதனிடம் நீ தோல்வியடையவில்லையா எனக் குறிப்பாகக் கூறி இராவணனை எள்ளி நகையாடுகின்ற எழுச்சியைக் காண்கின்றோம். கார்த்தவீரியன் தான் ஒரு மனிதன் எனக் கூறியவுடன் இராவணன் உள்ளத்தில் தான் கார்த்தவீரியனிடம் தோல்வியடைந்த ஆண்மைக் குறைவைப்பற்றிய எண்ணம் தோன்றும். அங்ஙனம் தோன்றிய எண்ணத்தினால் இராம இலக்குமணர்கள் மானுடர்கள்தானே அவர்களால் என்னை வெல்ல எங்ஙனம் முடியும் என இகழ்ந்து மதிக்கின்ற தன் அறியாமையினின்றும் நீங்கி, இராமபிரானால் தான் தோல்வி அடையவும் நேரும் என்ற அச்சத்தினால் இராவணனின் மனம் மாறக்கூடும் என்பதே சீதாதேவியின் எண்ணமாகும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் தடக்கையால் நின் ஐநான்கு கரமுப் பற்றி
வாய்வழி குருதிசோர குத்திவான் சிறையில்வைத்த
தூயவன்

எனச் சீதாதேவி கார்த்தவீரியனிடம் இராவணன் சிறைப்பட்ட செய்தியைக் கூறி இகழ்தலையும் நோக்குக.

இங்ஙனம் இராம இலக்குமணர்களை மானுடர்கள் என இகழ்ந்த மதிக்கும் இராவணனின் உள்ளச் செருக்கு ஒழியும் வண்ணம் காரணம் காட்டிய சீதாதேவி இராம இலக்குமணர்கள் தவம் செய்கின்றவர்கள், சருகும் இலையும் தின்றும் தண்ணீர் பருகியும் வாழ்கின்ற அவர்களால் என்னை எங்ஙனம் வெல்ல முடியும் என இகழ்ந்துரைக்கின்ற இராவணனின் தருக்கை நீக்கு தற்குத் தக்க காரணம் ஒன்றைக் காட்டுகின்றாள்.

தவத்துளார் எனில் தேனுயர் கொன்றையான்
தன்மை தோர்தியால்

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே சிவபெருமானும் ஓர் தவசி தானே. அவரின் பெருவிரல் ஒன்றினால் உனது ஆற்றல் அழிந்து தோற்றுயல்லவா என இராவணனைக் கேட்டு அவன் தற்பெருமையை ஒழிக்கின்ற எழுச்சியைக் காண்கின்றோம். தவசியாகிய சிவபெருமானால் நீ தோற்கடிக்கப்பட்டது போல தவவேடந் தாங்கிய இராம இலக்குமணர்களால் நீ தோல்வி அடைவாய் என இராவணனுக்குச் சீதாதேவி குறிப்பாகக் கூறுகின்றாள் என்பதை உணர்கின்றோம்.

நீர்அற அறியாக் கரகத்துத் தாழ்சடைப் பொலிந்த
அருந் தவத்தோற்கே

எனப் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாட்டில் சிவபெருமானைத் தவசியாகக் கூறியிருத்தலைக் காண்க. இதனால் இராம இலக்குமணர்களை மானிடர் எனவும், தவவேடத்தினர் எனவும் இகழ்ந்து மதித்த இராவணனின் உள்ளத் தருக்கைத் தக்க காரணங்கள் காட்டித் தகர்த்தெறியும் சீதாதேவியின் ஆற்றல் புலனாகின்றது.

கார்த்தவீரியனின் உருவத்தை கானுயர்வரை நிகர் கார்த்த வீரியன் எனச் சீதாதேவியின் குரலோடு கலந்து கம்பர் எமக்குக் காட்டுகின்றார்: இதில் கார்த்தவீரியனின் உடலுக்கு மலையையும் (வரையையும்) அவன் கைகளுக்கு அம்மலையின்கண் வளர்ந்த காடும் உவமானமாகக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை - உவமானம்; கார்த்தவீரியனின் உடல் - உவமேயம்; உருவப்பொலிவும், வலிமையும், நிலைகலங்காமையும் பொதுத் தன்மைகளாகும்.

வரையைச் சூழ்ந்துள்ள காடு - உவமானம். கார்த்தவீரியனின் உடம்பின்கண் விளங்கும் கைகள் - உவமேயம். பருமையும் நீளமும் பன்மையும் - பொதுத்தன்மைகளாதும் (காடு என்பது காட்டிலே யுள்ள மரங்களைக் குறிப்பாக உணர்த்துகின்றது. காடு - இட ஆகுபெயர். ஆல் - அசை.)

இனி, கார்த்தவீரியன் தான் ஒரு மனிதனால் தளர்ந்துளான் எனில் எனப் பாடங்கொண்டு கார்த்த வீரியனைப் பரசுராமன் கொன்ற செயலை எடுத்துக் காட்டுவாருமுளர். நிந்தனைப்படலம் 58-ம் செய்யுளில் கார்த்தவீரியனைப் பரசுராமன் கொன்றசெயல் எடுத்துக் காட்டப்படுதலால் இப்பாடம் பொருந்தாமை உணர்க.

இனி, தேனுயர் கொன்றையான் எள்பதை தேனுயர் தெரிய லான் எனப் பாடங்கொண்டு இராமபிரானைக் குறித்ததாக உரை கூறுவாருமுளர். இராம இலக்குமணர்களைத் தவவேடத்தினரென இராவணன் இகழ்ந்துரைத்தமைக்கு ஏற்ற காரணம் காட்டியதா கப் பொருள்படும் பாடமே சிறப்புடையதாதல் காண்க.

கார்த்தவீரியார்ச்சுனனுக்கு இராவணன் தோற்ற வரலாறு

இராவணன் திக்குவிசயம் செய்த காலத்தில் கார்த்தவீரியன் இருந்து ஆட்சி செய்யும் மாகிஷ்மதி நகரத்திற்கு வந்தான். வந்த இராவணன் கார்த்த வீரியனைப் போர்க்கறை கூவி அழைத் தான். அப்பொழுது அங்கிருந்த கார்த்தவீரியனின் ஏவலாளர் கார்த்தவீரியன் தன் காதல் மகளிரொடு நர்மதை ஆற்றிற்கு நீர் விளையாடல் குறித்துச் சென்று விட்டான் எனச் செப்பினர் கள். இராவணன் நர்மதை ஆற்றில் சென்று நீராடி அதன் கரையிலிருந்து சிவலிங்க வழிபாடு புரிந்தான். அப்பொழுது கார்த்தவீரியன் நீராடும் நர்மதை ஆற்றிலிருந்து அவன் விளை யாட்டு மிகுதியால் வெள்ளம் கரைபுரண்டு பெருகிவந்து இரா வணன் வணங்கும் சிவலிங்கத்தைத் தாக்கிபது. அதனால் வெஞ் சினம் கொண்ட இராவணன் அரக்கர் சேனையுடன் சென்று கார்த்தவீரியனுடன் கடும்போர் புரிந்தான். கார்த்தவீரியன் தன் ஆயிரம் கைகளில் இருபது கைகளினால் இராவணனின் இருபது கைகளையும் பிடித்துக் கொண்ட வண்ணம் மற்றைய கைகளால் அவனைக் குத்திச் சிறையிலடைத்தான். பின் இராவணனின் பாட்டனாராகிய புலத்தியர் கார்த்தவீரியனிடம் சென்று வேண்டி இராவணனைச் சிறைமீட்டார் என்பது வரலாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகழிக்கும் ஊழியான்

128. இருவரென் றிகழ்ந்தனை யென்னின்-
யாண்டெல்லை
ஒருவனன் றேயுல கழிக்கு மூழியான்
செருவருங் காலவர் மேன்மை தேர்தியால்
பொருவருந் திருவிழந் தாயுள் பொன்றுவாய்

கொண்டுகூட்டு: பொரு அரும் திரு இழந்து, ஆயுள் பொன்றுவாய், அவர் இருவர் என்று இகழ்ந்தனை, என்னின் ஆண்டு எல்லை உலகு அழிக்கும் ஊழியான் ஒருவன் அன்றே, அவர் மேன்மை செருவரும்கால் தேர்தி.

பொருள்

பொரு அரும்-ஒப்புச் சொல்ல முடியாத (ஒப்பில்லாத) திரு இழந்து - பெருஞ் செல்வத்தையும் இழந்து (அழியவிட்டு) ஆயுள் பொன்றுவாய் - நீண்டவாழ்நாளும் (முக்கோடி வாழ் நாளும்) அழிய நிற்பவனே, அவர் இருவர் என்று - அவ்விராம இலக்கு மணரோ இருவர் (நாங்களோ கணக்கற்றவராயுள்ளோம் அவர் களால் எங்களை என்னதான் செய்ய இயலும்) என்று. இகழ்ந் தனை என்னில்-என்று இகழ்ந்து நினைப்பாயானால், ஆண்டு எல்லை-ஆண்டுகளின் முடிவில், உலகு அழிக்கும் - உலகங்களையெல்லாம் அழிக்கின்ற, ஊழியான் - ஊழிகாலத்தலைவனுய்த் தான் மட்டும் தனித்து நிற்கும் முழுமுதற் கடவுள், ஒருவன் அன்றே-ஒருவன் அல்லனே, (இராமபிரானுக அவதரித்துள்ள) அவர் மேன்மை - இங்ஙனம் தெய்வத் தன்மை வாய்ந்த இராம இலக்குமணர்க ளின் பெருமையையும் (உன் சிறுமையையும்) செருவரும் கால்-போர் நிகழும் பொழுது, தேர்தி- தெளிந்து கொள்வாயாக, (தேர்தியால் என்பதிலுள்ள ஆல் - அசை)

பொழிப்பு

ஒப்புச் சொல்ல முடியாத பெருப் செல்வத்தையும் இழந்து, நீண்ட வாழ்நாளும் அழிய நிற்பவனே! அவ்விராம இலக்குமணர் களோ இருவர். நாங்களோ கணக்கற்றவர்களாயுள்ளோம். அவர்களால் எங்களை என்னதான் செய்ய இயலும் என்று இகழ்ந்து நினைப்பாயானால் உலகங்களையெல்லாம் அழிக்கின்ற ஊழிகா லத் தலைவனுய்த் தான் மட்டும் தனித்து நிற்கும் ஒருவன் அல்லனே, இராமபிரானுக அவதரித்துள்ளான். இங்ஙனம் தெய்வத்தன்மை வாய்ந்த இராம இலக்குமணர்களின் பெருமையையும், உன் சிறுமையையும் போர் நிகழும் பொழுது தெளிந்து கொள்வா யாக என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச் செய்யுளில் இராம இலக்குமணர்கள் இருவர்தானே என்று இகழ்ந்து எண்ணுகின்ற இராவணனின் தற்பெருமையைத் தக்க காரணம் காட்டி வீழ்த்துகின்ற சீதாதேவியின் சிந்தனைக்குரலைக் கேட்கின்றோம்.

இராம இலக்குமணர்கள் இருவர்தானே! யாலே எண்ணில்லாத அரக்கர்களின் துணை உடையவனுய் விளங்குகின்றேன். என்னை அவர்கள் எங்ஙனம் வெல்வார்கள் என்றெல்லாம் இகழ்ந்துரைத்து இறுமாப்படைகின்ற இராவணனின் தற்பெருமையைப் போக்கி அவன் உள்ளத்தில் இராமபிரானின் தனிப்பெரும் ஆற்றலைப் பதிக்க நினைக்கின்ற சீதாதேவியின் கருணை உள்ளம் மிக வியப்பிற்குரியதாகும்.

இருவர் என்று இகழ்ந்தனை என்னில் யாண்டு எல்லை
ஒருவன் அன்றே உலகு அழிக்கும் ஊழியான்

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஓசைப் பெருக்கும், உணர்ச்சித் துடிப்பும் உலகமெல்லாம் அழிந்தபின்பும் தான் அழியாது நிற்கும் ஊழி முதல்வனே இராமபிரான் எனும் உண்மையை எடுத்துக் காட்டுகின்றது. ஊழிமுதல்வனுகிய முழுமுதற் கடவுள் உலகிலே அறத்தை நிலைநாட்டி உய்யக் கொள்ளுதற்காகவே இராமபிரானுகத் திருவவதாரம் செய்துள்ளார் என்னும் உண்மையைச் சீதாதேவி இராவணனுக்கு எடுத்து உரைக்கின்றுள்.

அனையவன் சிறுவர் எம்பெருமை உன் பகைஞரால் அவரை அம்மா
இனையர் என்று உணர்தியேல் இருவரும் ஒருவரும் எதிர் இலாதார்
முனைவரும் அமரரும் முழுது உணர்ந்தவர்களும் முற்றும் மற்றும்
நினைவு அருந்தகையர் நம் வினையினுல் மனிதர் ஆய் எளிது நின்றூர்.

என விபீடணன் இராவணனிடம் ஊழி முதல்வனுகிய முழுமுதற் கடவுள்தான் இராமபிரானுகத் தோன்றியுள்ளார் என்னும் கருத்தமையக் கூறுதலையும் நோக்குக. இதனுல் ஊழி முதல்வனே இராமபிரானுக உதித்துள்ளார் எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறிய உண்மை வலியுறுதல் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருவரும் கால் அவர் மேன்மை தேர்தியால்
பொருவரும் திரு இழந்து ஆயுள் பொன்றுவாய்

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே நீ, ஊழி முதல்வனே இராமபிரான் என்பதை உணராமல் இருவர் மானுடர்தானே என்ற எண்ணத்தினால் அவர்களை இகழ்ந்து மதித்து என்னையும் சிறையிலிருந்து விடாமல் இன்னல் செய்வதால் உன் பெருஞ் செல்வமும் நீண்ட வாழ்நாளும் நீங்கி அழியப்போகின்றாய் என்னும் உண்மை நிலைபெறுதல் காண்க.

யான் கூறுகின்ற இவ்வுண்மைகளை நீ இப்பொழுது ஒப்புக் கொள்ளாவிட்டாலும் இராம இலக்குமணர்களை எதிர்த்துப் போர் புரியும் பொழுது, நன்கு தெளிந்து கொள்வாயெனச் சீதாதேவி மொழிந்து இராவணனைத் தெருட்ட முயல்கின்ற அருமைப்பாட்டை உணர்கின்றோம். இதனால் எந்தவகையினும் இராவணனின் உள்ளத்தை மாற்றி அவனுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்னும் கருணை உள்ளங்கொண்ட சீதாதேவியின் அருமைப்பண்பை அறிகின்றோம்.

வாசவன் மாயன் மற்றை மலருளோன்
மழுவாள் அங்கை
ஈசன் என்றினைய தன்மை இளிவரும் இவரால்
அன்றி
நாசம் வந்துற்ற போதும் நல்லதோர்
பகையைப் பெற்றேன்

என இராவணன் முதற்போரில் தான் இராமபிரானுக்குத் தோற்றபோது அவனைப் பாராட்டுதலையும் நோக்குக. இதனால் சீதாதேவி கூறியவண்ணம் போராற்றிய பொழுது இராமபிரானின் முழுமுதல் ஆற்றலை இராவணன் உணர்ந்து கொண்டானென்பதை உணர்கின்றோம்.

பிறன்மனை நயந்திலர்

129. பொற்கணன் றம்பியென் றினைய
போர்த்தொழில்
விற்கணெண் பொருததோ ளவுணர் வேறுளார்
நற்கணர் நல்லறந் துறந்த நாளினும்
இற்கணை ரிறந்திலை ரிறந்து நீங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: பொற்கணன் என்று, (பொற்கணன்) தம்பி என்று, இனைய போர்த்தொழில், விற்கண் ஞாண் பொருத தோள் அவுணர், இறந்து நீங்கினர். நற்க(ண்)ணர் நல்லறம் துறந்த நாளி னும், வேறுளார் இல் க(ண்)ணர் இறந்திலர்.

பொருள்

பொற்கணன் - பொன் மயமான உடம்பினை உடைய இரணி யாட்சனும், பொற்கணன் தம்பி - அந்த இரணியாட்சனின் தம்பியாகிய இரணியாக்கனும், என்றினைய - என்று கூறப்படும் இப்படிப்பட்ட (ஆகிய இத்தன்மையான) போர்த்தொழில் - போர்த்தொழிலில் வல்லவரும், விற்கண் – வில்லின்கண் உள்ள, நாண் பொருத - நாண் உராய்ந்து தழும்புப் பட்ட, தோள் அவுணர்-தோள்களை உடைய அசுரரும், இறந்து நீங்கினர்-(தமது ஆண்மை நீங்கி) இறந்தொழிந்தார்கள். (அங்ஙனம் இறந்தொ ழிந்த அசுரரும்) நற்க(ண்)ணர்-நல்ல அறிவினையுடையோர் மேற்கொள்ளும், நல்லறம் - இறைவனை அடைதலாகிய நல்ல அறச் செயலை, துறந்த நாளினும்-கைவிட்டகாலத்தும் (தவறின காலத்தும்) (நல்லறம் துறத்தலாவது, இறைவன் ஆண்டானும் தாம் அடிமைகளுமாகிய ஆண்டான் அடிமை நிலையில் நின்று மாறித் தாங்களே இறைவராய் நிற்றலாகும்) வேறுளார்இல்-பிறர் மனை வியரை, க(ண்)ணர் - (விரும்பி) நினைத்திலர், இறந்திலர்-(பிறர் மனைவியர் இடத்து உன்னைப் போல) நெறிகடந்து செல்லுத லும் செய்திலர்.

பொழிப்பு

பொன்மயமான உடம்பினை உடைய இரணியனும், அவன் தம்பியாகிய இரணியாக்கனும், என்று கூறப்படும் போர்த் தொ ழிலில் வல்லவரும், வில்லில் உள்ள நாண் உராய்ந்து தழும்பு பொருந்திய தோள்களை உடையவருமாகிய அசுரர்களும், இறந்து பட்டார்கள். அங்ஙனம் இறந்தொழிந்த அவர்களும் இறைவனை அடைதலாகிய நல்லறச் செயலைக் கைவிட்டகாலத்தும், உன்னைப் போல பிறர் மனைவியரை நினைந்து, நெறிகடந்து சென்றிலர் என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் அறன் கடை நின்ற இரணியன் முதலிய அசு ரர்களும் உன்னைப்போலப் பிறன் மனையாளை விழைந்திலர் என இராவணனுக்குச் சொல்கின்ற சீதாதேவியின் திறன் கனிந்த குரலைக் கேட்கின்றோம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணியன், இரணியாக்கன் என்னும் அசுரர்கள் எல்லையில் லாத வல்லமை படைத்தவர்கள், அவர்கள் அறத்தை மறந்து பல அல்லல்கள் செய்தமையால் தமது தவ ஆற்றல் எல்லாம் நீங்கி இறந்து பட்டார்கள். அங்ஙனம் அறத்தை மறந்து அழிந்த அவர்கள் கூடப் பிறன் மனைவியரை விழைந்து உன்னைப்போல் நெறிதவறிச் சென்றிலர் என்னும் உண்மையை இராவணனுக்கு நினைவூட்டும் சீதாதேவியின் செயல் போற்றற்குரியதாகும்.

பொற்கணின் தம்பியென்று இனைய
போர்த்தொழில்
விற்கண் நாண் பொருத தோள் அவுணர்
இறந்து நீங்கினர்

எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறுகின்ற குரலிலே இரணியனும் அவன் தம்பியும், உன்னினும் மிக்க வரபலமும் வில்லாற்றலும் பொருந்தியவர்களாக விளங்கியும், அறத்தை மறந்தமையால் திருமாலினால் அழிந்துபட்டார்கள்; நீயும் அறத்தை மறந்து அல்லல் புரிகின்றபடியால் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானால் அழிந்துபடுவாய் என்னும் குறிப்புப் பொருள் தோன்றுதல் காண்க.

இனி, இரணியனும் அவன் தம்பியாகிய இரணியாக்கனும் அறத்தை மறந்தாராயினும் உன்னைப்போல், அயலான் மனையாளை விரும்பி அடைதலாகிய கொடுஞ் செயலைப் புரிந்திலர் எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறுகின்ற குரலிலே, எழுகின்ற ஓசைப் பெருக்குப், பிறன் மனை விழையும் இராவணனின் புல்லிய பண்பை எள்ளி நகையாடி இடித்துரைக்கின்ற ஏற்றத்துடன் பொலிகின்றது.

விற்கண் நாண்பொருத தோள் அவுணர்
நற்கணர் நல்லறந் துறந்த நாளினும்
வேறுளார் இற்கணர் இறந்திலர்

என்னும் இக்கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசையில் அறத்தை மறந்தாலும் அயலான் மனையாளை எண்ணாத ஆண்மை மிக மேலானது என்னும் கொள்கை அலையெறிதலைக் காண்கின்றோம்.

நற்கணர் நல்லறந் துறந்த நாளினும்
வேறு உளார் இற்கணர் இறந்திலர்

எனவரும் சீதாதேவியின் குரலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறன்கடை நின்றருள் எல்லாம் பிறன்கடை
நின்றரின் பேதையார் இல்

எனவரும் திருக்குறளையும் ஒப்பிட்டு நோக்குக.

அறன்கடை நின்றவர்களாகிய இரணியனும், இரணியாக்கனும் செய்யாத பிறன்கடை நிற்றலாகிய தீய செயலை ஆற்றுகின்ற நீ எம்மினம் அழியாமல் வாழப்போகின்றாய் எனச் சீதாதேவி இராவணனுக்குக் குறிப்பாகக் கூறுகின்றாள் என்பதை உணர்கின்றோம்.

நாரங்கொண்டார் நாடுகவர்ந்தார் நடை யல்ல
வாரங்கொண்டார் மற்றொருவன் தன்மனை
வாழும்
தாரங்கொண்டார் என்றிவர் தம்மைத்
தருமந்தான்
ஈரும்கண்டாய் கண்டகர் உய்ந்தார் எவர்ஐயா.

என மாரீசன் இராவணனுக்குக் கூறும் பொருள் உரைகளையும் காண்க. மற்றொருவன் தாரங் கொண்டானைத் தருமம் ஈரும் (கொல்லும்) என்பதே அறநூற் கொள்கையுமாகும்.

மற்றொரு குலத்தான் தேவியை நயந்து
சிறை வைத்த செயல் நன்றே

எனக் கும்பகருணன் இராவணனைக் கேட்கின்ற குரலையும் இவற்றுடன் ஒப்பிட்டு நோக்குங்கள். இதனால், வேறுளார் இற்கணர் இறத்தல் ஆகிய செயலை ஆற்றுகின்ற இராவணன் அழிந்து படுவான் எனக் கூறும் சீதாதேவியின் கொள்கை வலியுறுதல் காண்க. பொற்கணன், என்பதில் வரும் 'கண்' என்பது உடம்பைக் குறிக்கின்றது. இதனை, ''பொன்கட்பச்சை (பரிபாடல் 8 82) எனவரும் பரிபாடற் பகுதிக்குச்'' சிவந்த உடம்பினை உடைய காமன் எனப் பரிமேலழகர் கூறும் உரையால் அறிக. ''நற்கணர் என்பதில் வரும்'' கண் என்பது அறிவு எனப் பொருள்படும். இதனை,

உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்

எனும் திருக்குறளில் வரும் கண்சாய்பவர் எனும் தொடருக்கு அறிவுமயங்குபவர், எனப் பரிமேலழகர் கூறும் உரையால் உணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணியன் இவன் வரபலம் மிக்கவன். தான் பெற்ற வர பலத்தினால் தருக்கித் தானே தெய்வமெனக்கூறி உலகினரைத் துன்புறுத்தினான். இவனின் கொடுமையைப்போக்கி உலகை உய்விக்கத் திருவுளங்கொண்ட திருமால் நரசிங்கமாகத் தோன்றி (அவதாரஞ் செய்து) இவனைக் கொன்றார் என்ப.

இரணியாக்கதன் இவன் இரணியனின் தம்பி. இவன் பூமியை (நில உலகைப்) பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு, கடலில் பெருங் கடலில் புக்கொளித்தான் என்றும், திருமால் வராக அவதாரமெடுத்து (பன்றி உருக்கொண்டு) இவனைக் கொன்றார் என்ப.

மூவுலகின் செல்வம்

130. பூவிலோ னுதி யாகப் புலன்கள்போ
நெறியிற் போகாத்
தேவரோ வவுணர் தாமோ நிலைநின்று
வினையிற் றீர்ந்தார்
ஏவர்மூ வுலகின் செல்வ மெய்தின ரிசையி
னேழாய்
பாவமோ முன்னீ செய்த தருமமோ தெரியப்
பாராய்.

கொண்டுகூட்டு: ஏழாய் (நின்) வினையில் தீர்ந்து தம் நிலை நின்றார், பூஇல்லோன் ஆதியாக புலன்கள் போம் நெறியில் போகா, தேவரோ அவுணர்தாமோ ஏவர் மூவுலகின் செல்வமும் எய்தினர், தேவரோ அவுணரோ ஏவர் இவை நிற்கு இசையின் (அதற்குக் காரணம்) நீ முன் செய்த பாவமோ தருமமோ தெரியப்பாராய்.

பொருள்

ஏழாய் - அறிவில்லாதவனே, (நின்) வினையில் தீர்ந்து - உனக்குப் பணி செய்யுந் தொழிலில் நீங்கி, தம் நிலை நின்றார் - தம் பதவியில் நிலைத்து நின்றவர், பூ இல்லோன் ஆதியாக - தாமரைப்பூவை வாழுமிடமாக உடைய பிரமன் முதலாக உள்ள, புலன்கள்போம் நெறியில் போகா - பொறிகள் சென்றவழியே செல்லாமல் மனத்தை அடக்கியொழுகிய, தேவரோ - தேவர் களோ, அவுணர் தாமோ - அசுரர்களோ, (தாம் - அசை) ஏவர் - (இவனும் உனக்குப் பணி செய்யுந் தொழிலில் நீங்கித் தம் பதவியில் நிற்கின்றவர்கள்) எவர் இருக்கின்றார்கள் (ஒருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்பதாம்) மூவுலகின் செல்வமும் - மூன்று உலகின் செல்வங்களையும், எய்தினர் - ஒருசேரப் பெற்றவர், தேவரோ - தேவர்களோ, அவுணரோ - அசுரர்களோ, ஏவர் - எவர் இருக்கின்றார்கள் (ஒருவரும் இல்லை என்பதாம்) இவை - (இங்ஙனம் தேவரும் அவுணரும் அடிமை செய்ய அவர்க்குத் தலைவனாக வாழும் நிலையும் மூன்றுலகச் செல்வமும் ஆகிய) இவைகள், நிற்கு இசையின் - (ஒருங்கு) நின்பால் வந்து பொருந்தியதென்றால் (இசைந்ததென்றால் அதற்குக் காரணம்) நீ முன் செய்த - நீ முற்பிறப்பிலாற்றிய, பாவமோ - தீவினையின் பயனே (அல்லது) நீ முன் செய்த - நீ முற்பிறப்பில் ஆற்றிய, தருமமோ - (தவம் முதலிய) நல்வினையின் பயனே, தெரியப்பாராய் - ஆராய்ந்து தெளிவாயாக. (எனவே தவம் முதலிய நல்வினை செய்து உயர் நிலையும், பெருஞ் செல்வமும் எய்திய நீ, பிறர்மனை நயத்தலாகிய தீவினையால் அவற்றை இழக்கலாமோ என்பதாம்).

பொழிப்பு

அறிவில்லாதவனே! உனக்குப் பணி செய்யும் தொழிலில் நீங்கித் தம் பதவியில் நிலைத்து நின்றவர் நான்முகன் முதலிய தேவர்களோ அல்லது அரக்கர்களோ ஒருவருமில்லை. எல்லோரும் உன் ஏவலைச் செய்கின்றார்கள்: மூன்றுலகச் செல்வங்களையும் ஒருசேரப் பெற்றவர்களும் யார் இருக்கின்றார்கள்? இங்ஙனம் தேவரும் அவுணரும் உனக்கு அடிமைசெய்ய அவர்க்குத் தலைவனாக வாழும் நிலையும் மூன்றுலகச் செல்வமுமாகிய இவைகளெல்லாம் உன்னிடம் வந்து பொருந்தியதென்றால் அதற்குக் காரணம் நீ முற்பிறப்பிற் செய்த பாவமோ அல்லது புண்ணியமோ என்பதை ஆராய்ந்து காண்பாயாக என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் அமரரும், அரக்கரும் ஏவல்செய்ய மூவுலகுக்கும் தலைவனாக விளங்கும் பெருவாழ்வை நீ ஆற்றிய தவத்தினாலோ அல்லது பாவத்தினாலோ பெற்றுக் கொண்டாயென, அறத்தை மறந்த இராவணனை நோக்கிச் சீதாதேவி கேட்கின்ற பொருளுரைகளைக் காண்கின்றோம்.

அமரரும் அரக்கரும் ஏவல் செய்ய மூவுலகச் செல்வங்களையும் அறத்தின் பயனால் அடைந்த நீ, இப்பொழுது, அறத்தை மறந்து அயலான் மனையாளை அடைதற்கு முயலும் தீவினையில் ஏன் ஈடுபட்டாய் எனச் சீதாதேவி இராவணனைக் கேட்கின்ற குரலிலே அறத்தின் மேம்பாட்டை அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவிலோன் ஆதியாகப் புலன்கள்போம் நெறியில் போகாத்
தேவரோ அவுணர்தாமோ நிலைநின்று வினையில் தீர்ந்தார்

எனும் செய்யுட் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை, அமரரும் அரக்கரும் ஏவல் செய்ய அரசு வீற்றிருக்கும் இராவணனின் அளவிறந்த தவ ஆற்றலை நேரிற் காண்பது போன்ற நினைவை எமதுள்ளத்தில் எழுப்புகின்றது. இங்ஙனம் யாவரும் அடைய முடியாத பெரும்பேற்றை அடைந்த இராவணன் அறத்தை மறந்து (அயலான் மனைவியாகிய) தன்னை நயந்து சிறையில் வைத்து வருத்துகின்ற தீவினையால் அழிந்து படப் போகின்றோமே என்னும் இரக்கத்தினால் சீதாதேவியின் உள்ளம் வருந்துகின்றதென்பதையும் அறிகின்றோம்.

இங்ஙனம் இராவணனின் அறியாமைக்கிரங்கி வருந்திய சீதாதேவி

ஏழாய் ஏவர் மூவுலகின் செல்வம் எய்தினர்
பாவமோ முன் நீ செய்த தருமமோ தெரியப்.
பாராய்.

என இராவணனுக்குக் கூறுகின்ற குரலில் அறத்தினாற் பெரும் பேறுகளை அடைந்து அமரரும் அசுரரும் ஏவல் செய்ய அரசு வீற்றிருக்கின்ற நீ, அறத்தை மறந்து தீவினைகளை ஆற்றுகின்ற படியால் விரைவில் அழிந்துபடுவாயென்றும், அறத்தின் சிறப்பை இனியாகிலும் ஆராய்ந்து தெளிந்து நீ புரிந்த தீவினைகளை விடுத்து வாழ்வாயாகவென்றும் இராவணனைத் தெருட்டி நல்வழிப்படுத்துகின்ற பெருங்கருணைப் பண்பு நின்று நிழலாடுவதைக் காண்க.

திறத்திறனுலோ செய்தவம் முற்றித் திரு உற்றாய்
மறத்திறனுலோ சொல்லுதி சொல் ஆய்மறை வல்லோய்
அறத்திறனுலோ எய்தினை அன்றே அது நீயும்
புறத்திற னுலோ பின்னும் இழக்கப் புகுவாயோ.

என மாரீசன் இராவணனுக்குக் கூறும் பொருள் உரைகளுடன்

ஏழாய் ஏவர் மூவுலகின் செல்வம் எய்தினர்
பாவமோ முன் நீ செய்த தருமமோ தெரியப்
பாராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சீதாதேவி கூறும் இப்பொருள் உரைகளையும் ஒப்பிட்டு நோக்குக:

வினையில் தீர்ந்து நிலைநின்றூா ஏவர் எனவும், ஏவர் மூவுல கின் செல்வம் எய்தினரெனவும், இடைநிலை விளக்காய் நின்ற ஏவர் என்னும் சொல்லை முன்னும் பின்னும் கூட்டி உரை சொல் லப்பட்டது: அவுணர்தாமோ என்பதில் தாம்-அசை. ஓ - வினு விடைச் சொல்: மெய் வாய் கண் மூக்குச் செவியெனப் புலன் கள் ஐந்தாகும்: அமரர்கள் ஐம்புலன்களையும் தீயவழியிற் செல் லாமல் அடக்கும் பெருவாழ்வுடையுவர் என்பதை விளக்கப் புலன் கள்போம் நெறியிற் போகாத் தேவர் எனச் சிறப்படைமொழி கொடுக்கப்பட்டது.

தருமத்தைக் காமியாயோ

131 இப்பெருஞ் செல்வ நின்க ணீந்ததோ ரீசன் யாண்டும்
அப்பெருஞ் செல்வந் துய்ப்பா னின்றுமா தவத்தி னன்றே
ஒப்பருந் திருவு நீங்கி யுறவொடு மூலக்க வுன்னித்
தப்புதி அறத்தை யேழாய் தருமத்தைக் காமி யாயோ.

கொண்டுகூட்டு: ஏழாய் ஓர் ஈசன் இப்பெரும் செல்வம் நின் கண் ஈந்தது (நீ) யாண்டும் மாதவத்தின் நின்று அப்பெரும் செல்வம் துய்ப்பான் அன்றே (நீ) ஒப்பரும் திருவும் நீங்கி உறவொ டும் உலக்க, அறத்தைத் தப்புதி, தருமத்தை உன்னிக் காமியாயோ

பொருள்

ஏழாய்-அறிவில்லாதவனே, ஓர் ஈசன் - ஒப்பற்ற முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், இப்பெரும் செல்வம்-இப்பொழுது நீ அடைந்து அனுபவிக்கின்ற ஈடு இணையற்ற இப்பெரும் செல் வத்தை (மூவுலகும் ஏவல் செய்ய அரசு வீற்றிருக்கும் இப் பெரு வாழ்வை). நின் கண் ஈந்தது - (நீ ஆற்றிய தவத்திற்கிரங்கி) உனக்கு அளித்தருளியது, (நீ) யாண்டும் - நீ எப்பொழுதும் (எக் காலமும்) மாதவத்தினின்று - பெரியதவநெறியில் தவறாமல் நின்று, அப்பெரும் செல்வம் - (தான் அளித்தருளிய) அந்தப் பெரிய செல்வத்தை, துய்ப்பான் அன்றே - அனுபவிக்க வேண்டு மென்ற அருளால் அல்லவா, ஒப்பரும் - ஒப்பில்லாத, திருவும் நீங்கி - செல்வமும் தொலைந்து, உறவொடும் - சுற்றத்தோடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்க-அழியும்படி, அறத்தை - அறநெறி தவறாது வாழும் ஒழுக்கத்தை, தப்புதி-(உன் அறியாமையால்) விடுகின்றாய், தருமத்தை-(இத்துணைப் பெருமையையும் செல்வத்தையும் உனக்குக் கொடுத்தருளிய தவமாகிய) அறத்தை, உன்னிக்காமியாயோ - எண்ணி அதனை விரும்பாயோ (விரும்புவாயாக என்பதாம்)

பொழிப்பு

அறிவில்லாதவனே! ஒப்பற்ற முழுமுதற் கடவுளாகிய சிவ பெருமான் இப்பொழுது நீ அடைந்து அனுபவிக்கின்ற ஒப்புயர் வில்லா இப்பெரும் செல்வத்தை நீ ஆற்றிய தவத்திற்கிரங்கி உனக்கு அளித்தருளியது, நீ எப்பொழுதும் தவநெறியில் தவறாமல் பெற்ற பெரும் செல்வத்தை அனுபவிக்க வேண்டுமென்ற அருளினாலல்லவா, நீ ஒப்பில்லாத செல்வமும் தொலைந்து சுற்றத்தோடு அழியும்படியான தீவினைகளைச் செய்து அறநெறியில் தவறி விட்டாய். இத்துணைப் பெரும் செல்வ வாழ்வை உனக்குக் கொடுத்தருளிய தவமாகிய அறத்தை இனியாகிலும் எண்ணி விரும்பாயோ என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் மூவரும் தேவரும் ஏவல்செய்ய மூவுலகச் செல்வத்தையும் தவங்கிடந்து ஈசனருளால் அடைந்தேன் என்பதை மறந்து, தவத்திற்கு மாறான அவச் செயல்களை ஆற்றி அழிவைத் தேடிக் கொள்கின்றாயென இராவணனை நோக்கிச் சீதாதேவி கூறுகின்ற அறிவுரைகளைக் கேட்கின்றோம்.

ஈசனை எண்ணித் தவங்கிடந்து அவனருளால் பெற்ற பெரும் செல்வ வாழ்வை, அறத்தை மறந்து தான் ஆற்றிய தீவினைகளால் அழித்துத் தன் குலத்துடன் முடியப்போகின்ற இராவணனின் நிலைக்கு இரங்கி அவன் உள்ளத்தில் அறத்தின் மேம்பாட்டைப் பதித்து உய்விக்கக் கருதிய சீதாதேவியின் உருக்கமான பொருளுரைகள் உலகம் உள்ளளவும் நின்று வாழக்கூடிய உயர்வுடையனவாகும்.

இப்பெரும் செல்வம் நின்கண் ஈந்தஓர் ஈசன்
யாண்டும்
அப்பெரும் செல்வம் துய்ப்பான் நின்று
மாதவத்தின் அன்றே

எனச் சீதாதேவி இராவணனை நோக்கிக் கூறுகின்ற குரலிலே உன் தவத்திற்கிரங்கிப் பெரும் செல்வத்தை உனக்கு வழங்கியருளிய முழுமுதலாகிய ஈசனின் திருவுள்ளம், அறநெறியில் தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருது வழிவழியாக நீ அச்செல்வத்தை அனுபவித்து வாழவேண்டுமென்பதேயாகும். அங்ஙனம் உனக்குச் செல்வத்தை அருளிய ஈசனின் திருவுள்ளக் கிடக்கைக்கு மாறுக நீ அறத்தை மறந்து அழியமுற்பட்டு நிற்கும் நிலைமை ஏதிகுமாவெனக் கேட்கின்ற இரக்க உணர்ச்சியின் பெருக்கைக் காண்கின்றேம்:

ஒப்பு அரும் திருவும் நீங்கி உறவொடு உலக்க உன்னித்
தப்புதி அறத்தை ஏழாய் தருமத்தைக் காமியாயோ

எனச் சீதாதேவி இராவணனைக் கேட்கின்ற குரலிலே எழுந்து அலைமோதுகின்ற இரக்கமும், தாய்மைப் பண்பும், உருக்கமும் எம் உள்ளத்தையும் தொட்டு எழுச்சி தருகின்றன. இராவணன் அறத்தை மறந்த கொடியவனுயினும், அவன் அழிந்தொழிவதைத் தடுத்து அவனை வாழ்விக்கக் கருதுகின்ற சீதாதேவியின் அருள் உள்ளத்தின் அகலத்தைக் கம்பர் இக் கவிதைத் தொடர்களில் அமைத்துக் காட்டியுள்ள அருமை பாராட்டுக்குரியதாகும்:

அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு

எனவரும் திருக்குறளுடன்

தப்புதி அறத்தை ஏழாய் தருமத்தைக் காமியாயோ

எனவரும் சீதையின் குரலை ஒப்பிட்டு நோக்குக:

அறம்துறந்து அமரரை வென்ற ஆண்தொழில்
திறம் தெரிந்திடின் அதுதானும் செய்தவம்
நிறம் திறம்பாவகை இயற்றும் நீதியால்
மறம்துறந்து அவர்தரும் வரத்தின் வன்மையால்

என விபீடணன் இந்திரசித்தனுக்குக் கூறும் அறிவுரைகளையும் நோக்குக:

அறமும் அருளும்

132. மறந்திறம் பாத தோலா வலியின ரெனினு மாண்டார்
அறந்திறம் பினரு மக்கட் கருடிறம் பினரு மன்றே
பிறந்திறந் துழலும் பாசப் பிணக்குடைப் பிணியிற் றீர்ந்தார்
துறந்தரும் பகைகண் மூன்றுந் துடைத்தவர் பிறர்யார் சொல்லாய்

சு: கா: 39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: மறம் திறம்பாத தோலா வலியினர் எனினும், அறந்திறம்பினரும், மக்கட்கு அருள் திறம்பினரும் மாண்டார் அன்றே. துறந்து அரும்பெரும் பகைகள் மூன்றும் துடைத்தவர் பிறந்திறந்து உழலும் பாசப் பிணக்கு உடை பிணியில் தீர்ந்தார் பிறர் யார்? சொல்லாய்.

பொருள்

மறந்திறம்பாத - வீரத்தில் நின்றும் வழுவாத, தோலா - தோல்வி அடையாத, வலியினர் எனினும் - ஆற்றலையுடையவராயினும், அறந்திறம்பினரும் - அறநெறியில் நின்று தவறிபவர்களும் (தருமவழியில் நின்று மாறுபட்டவரும்), மக்கட்கு - மக்களின் மேல், அருள் திறம்பினரும் - இரக்கமில்லாதவர்களும் (மக்களிடத்துக் காட்டும் அநுஞணர்ச்சி இல்லாதவர் என்றும் பொருள் கூறலாம்), மாண்டார் அன்றே - இறந்தொழிந்தவர்கள் அல்லவோ (இறந்தார் அல்லவா என்பதாம்), துறந்து - (யான் எனது என்னும்) பற்றுக்களை விட்டு, அரும் பெரும் - வெல்லுதற்கரிய பெரிய, பகைகள் மூன்றும் - காமம் வெகுளி, மயக்கம் என்னும் உட்பகைகள் மூன்றினையும், துடைத்தவர் - போக்கியவர்கள், பிறந்திறந்துழலும் - பிறந்தும் (தோன்றியும்) செத்தும் அலைகின்ற (திரிகின்ற), பாசப்பிணக்த உடை - பாசமாகிய பந்தத்தையுடைய (பாசபந்தங்களையுடைய) பிணியில் - (சமுசார பந்தமென்னும்) நோயில் நின்று, தீர்ந்தார் - நீங்கிபவராவர், பிறர் - காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களினின்றும் நீங்காதவர் (மறந்திறம்பாத தோலாவலியினர் எனினும்), யார் - எவர்கள், சொல்லாய் - (பிணியில் தீர்ந்தவராவர்) சொல்வாயாக.

பொழிப்பு

வீரத்தினின்றும் வழுவித் தோல்வியடையாத ஆற்றலுடையவராயினும், அறநெறியினின்று தவறியவர்களும், மக்களின் மேல் இரக்கமில்லாதவர்களும் இறந்தொழிந்தவர்களல்லவா. யான் எனது என்னும் பற்றுக்களை விட்டு காமம், வெகுளி, மயக்கம் என்னும் உட்பகைகள் மூன்றையும் போக்கியவர்கள் பிறந்தும் செத்தும் அலைகின்ற பாசபந்தங்களையுடைய நோயில் நின்று நீங்கியவராவர்; அங்ஙனம் முக்குற்றங்களினின்றும் நீங்காதவர், பிணியில் தீர்ந்தவராகார் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் அறத்தையும் அருளையும் மறந்தவர்கள் எத்துணைப் பெரும் ஆற்றலுடையவர்களாயினும் இறந்தொழிந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே ஆவர் என இராவணனுக்குக் கூறும் சீதாதேவியின் பொருளுரைகளைக் கேட்கின்றோம்.

நீ, மூவரை வென்று தேவரை ஏவல் கொண்டு மூவுலகையும் ஆள்கின்ற பெருஞ் செல்வ வாழ்வைப் பெற்றிருந்தும், அறத்தையும், அருளையும் மறந்து பிறர்க்கு அல்லல் புரிவதால் விரைவில் அழியப் போகின்றாய் எனச் சீதாதேவி இராவணனுக்கு எடுத்துக் கூறுகின்றாள்:

மறந்திறம்பாத தோலா வலியினர் எனினும்
அறந்திறம்பினரும் மக்கட்கு அருள் திறம்பினரும்
மாண்டார் அன்றே

எனச் சீதாதேவி இராவணனை நோக்கிக் கூறுகின்ற குரலிலே, நீ அறத்தையும் அருளையும் மறந்து உன் தவப்பெரும் வாழ்வையும், ஆண்மையையும் இழந்து அழியப்போகின்றாய் என்னும் அருள் உணர்ச்சி அலையெறிதலைக் காண்க:

நிறப் பெரும் படைக்கலம் நிறத்தின் நேர்உற
மறப்பயன் விளைத்திடல் வன்மை அன்று அரோ
இறப்பினும் திருஎலாம் இழப்ப எய்தினும்
துறப்பிலர் அறம் எனல் சூரர் ஆவதே

என இராமபிரான் அறத்தின் மேம்பாட்டை விளக்கிக் கூறிய பொருள்மொழிகளையும் நோக்குக. அடுத்தடுத்துப் பல அல்லல்கள் வந்தாலும், அறத்தை மறவாத பேராண்மை, தோளாண்மையிலும் மிக்கது என்பதை இச் செய்யுள் விளக்குகின்றது. இதனால் அறந்திறம்பினரும் மக்கட்கு அருள் திறம்பினரும் மறந்திறம்பாத தோலா வலியினர் எனினும் மாண்டார் அன்றே எனச் சீதாதேவி கூறிய பொருளுரைகளின் சிறப்பை உணர்கின்றோம்.

இங்ஙனம் அறத்தின் மேம்பாட்டையும், அருளின் மேம்பாட்டையும் இராவணனுக்கு விளக்கிக் கூறிய சீதாதேவி, பிறப் பிறப்புக்களால் ஏற்படும் துன்பத்தினின்றும் விடுதலையடைந்தோர் காமம், வெகுளி, மயக்கம் என்னும் உட்பகைகள் மூன்றினின்றும் நீங்கியவர்களேயாவர் என்னும் உண்மையை எடுத்துக் காட்டி இராவணனைத் தெருட்ட முயல்கின்றாள். எத்துணைப் பெரும் ஆண்மை படைத்தவர்களும் உட்பகையாகிய காமம், வெகுளி, மயக்கம் என்பவற்றில் நின்றும் நீங்காராயின் அவர்கள் அழிவது திண்ணமென்பதே சீதாதேவியின் கருத்தாகும். இராவணன் புறப்பகைகளையெல்லாம் வென்ற பெருவீரனாய் விளங்கினும் உட்பகைகளாகிய காமம், வெகுளி, மயக்கம் என்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிறை வெல்ல முடியாதவனுய் அல்லலுறப் போகின்றுன் என்பதை எண்ணி இரங்கிய சீதாதேவி அவனே வாழ்விக்கக் கருதிக் கூறுகின்ற பொருளுரைகள் எம் உள்ளத்தையும் தொட்டு உணர்ச்சி ஊட்டுகின்றன:

பிறந்திறந்து உழலும் பாசப் பிணக்குடைப்
பிணியில் தீர்ந்தார்
துறந்தரும் பகைகள் மூன்றும் துடைத்தவர்

எனச் சீதாதேவி கூறுகின்ற பொருள் உரைகளுடன்

வெள்ள நீர் உலகினில் விண்ணில் நாகரில்
தள்ள அரும் பகை எலாம் தவிர்த்து நின்றயான்
கள்ளரின் கரந்து உறை காமம் ஆதிஆம்
உள்உறை பகைஞருக்கு ஒதுங்கி வாழ்வெனே

எனத் தசரதன் கூறும் பொருளுரையையும் ஒப்பிட்டு நோக்குக

தமிழ் முனிவர்

133. தென்றமி ழுரைத்தோன் முன்னுத் தீதுதீர்
முனிவர் யாரும்
புன்றொழி லரக்கர்க் காற்றே நோற்கிலம்
புகுந்த போதே
கொன்றரு ளுன்னு லன்னுர் குறைவது
சரதங் கோவே
என்றனர் யானே கேட்டே னியதற் கியைவ
செய்தாய்.

கொண்டுகூட்டு: தென் தமிழுரைத்தோன் முன்னுத்தீது தீர் முனிவர் யாரும், புகுந்தபோதே, கோவே நோற்கிலம், புன்தொழில் அரக்கர்க்கு ஆற்றேம், அன்னுர் உன்னுல் குறைவது சரதம், கொன்று அருள் என்றனர் யானே கேட்டேன்; நீ அதற்கு இயைவ செய்தாய்.

பொருள்

தென் தமிழ் உரைத்தோன் முன்னுத் - இனிய தமிழ் இலக்கண நூலை உரைத்தருளிய அகத்தியர் முதலான, தீதுதீர் முனிவர் யாரும் - குற்றமற்ற முனிவர்கள் யாவரும் (எல்லோரும்) புகுந்த போதே - (என் தலைவனுகிய) இராமபிரான் வனத்தின்கண் புகுந்த அக்காலத்திலேயே, கோவே - எங்கள் தலைவனே நோற்கிலம் - தவம் செய்ய இயலாதவராயினேம், (ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்தொழில் அரக்கர்க்கு - இழிதொழிலையுடைய அரக்கர்களால், ஆற்றேம் - வலியழிந்தோம் (அவர்கள் தவத்திற்ற இடையூறுக இயற்றும் கொடுமைகளைத் தாங்க முடியாதவர்களாகிறோம் என் பதாம்) அன்னர் - அவ்வரக்கர்கள், உன்னல் குறைவது சரதம்- உன்னல் வலிகுன்றி அழிவது சத்தியமாதம், கொன்று - அந்த அரக்கரை அழித்து, அருள் - எங்களுக்குக் கருணை புரிவாயாக, என்றனர் - என்று கூறினர், யானே கேட்டேன் - (அங்ஙனம் முனிவர்கள் இராமபிரானிடம் வேண்டிக் கொண்டதை) நானே நேரில் கேட்டுக்கொண்டிருந்தேன், நீ - அரக்கனாகிய நீயும், அதற்கு-அங்ஙனம் அவர்கள் கூறிய முறைப்பாட்டிற்கு, இயைவ செய்தாய் - பொருத்தமான தீய காரியங்களையே புரிந்துள்ளாய்.

பொழிப்பு

இனிய தமிழ் இலக்கண நூலை உரைத்தருளிய அகத்தியர் முதலான முனிவர்கள் எல்லோரும் இராமபிரான் வனம் புகுந்த அக்காலத்தில் அவரை வந்து கண்டு எங்கள் தலைவனே! இழி தொழிலையுடைய அரக்கர்கள் செய்யும் இடையூற்றினால் நாங்கள் தவம் செய்ய இயலாதவர்களாயினேம். அவ் வரக்கர்கள் உம் மால் அழிவது தவறாத உண்மையாகும். அந்த அரக்கர்களைக் கொன்று எங்களைக் காப்பாற்றியருள வேண்டுமெனச் செய்த முறைப்பாட்டை யான் கேட்டுக் கொண்டிருந்தேன். நீயும் அதற்கேற்பத் தீய காரியங்களையே புரிகின்றாய் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் அகத்தியர் முதலிய முனிவர்கள் அரக்கர் களை அழிக்க வேண்டுமென இராமபிரானை வேண்டிக்கொண்ட செய்தியை இராவணனுக்குக் கூறும் சீதாதேவியின் கருணை உள்ளத்தைக் காண்கின்றோம்.

அகத்தியர் முதலிய அருந்தவ முனிவர்கள் அரக்கரின் கொடுமையை இராமபிரானிடம் கூறி அவர்களை அழித்துத் தாங்கள் மேற்கொண்ட தவ ஒழுக்கத்தைத் தவறாது நடாத்து தற்கு வழிபுரிய வேண்டுமெனக் கேட்டதுடன் அமையாது, அரக் கர்கள் உன்னால் அழிவது தவறாத உண்மையாகுமெனத் தங்கள் ஞான உணர்ச்சியினால் உணர்ந்து கூறிய உறுதி உரைகளையும் அப்படியே சீதாதேவி இராவணனுக்கு விளம்புகின்றாள்.

தென்தமிழ் உரைத்தோன் முன்னைத் தீதுதீர்
முனிவர் யாரும்
புன்தொழில் அரக்கர்க்கு ஆற்றேம் நோற்கிலம்
புகுந்தபோதே
கொன்றருள் உன்னல் அன்னர் குறைவது சரதம்
என்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சீதாதேவி இராவணனுக்குக் கூறுகின்ற குரலிலே அவள் உள்ளத்தினின்று சுரக்கின்ற கருணைப் பண்பின் அருமைப்பாட்டை உணர்கின்றோம். தன் ஆருயிர்த் தலைவரிடம் அருந்தவ முனிவர்கள் அரக்கர்களை அழிக்க வேண்டுமென இரந்து வேண்டிய செய்தியை, அறத்தை மறந்து தன்னைச் சிறையில் அடைத்து வைத்திருக்கும் இராவணனுக்கு எடுத்துக்கூறி அவனைத் திருத்த முயல்கின்ற சீதாதேவியின் திருவுள்ளச் சிறப்பை எண்ண எண்ண எமதுள்ளத்தில் என்றுமில்லா வியப்புணர்ச்சி எழுகின்றது: எந்த வகையிலும் இராவணனின் தீய செயலைப் போக்கித் திருத்த வேண்டுமெனச் சீதாதேவி முயல்கின்றாளென்பதை இதனால் உணர்கின்றோம்:

யானே கேட்டேன் நீ அதற்கு இயைவ செய்தாய்

என மீண்டும் மீண்டும் கூறி, இராவணனைத் தெருட்ட முயல்கின்றாள். அருந்தவ முனிவர்கள் இராமபிரானிடம் அறைந்த முறைப் பாட்டிற்குப் பொருத்தமாகும் வண்ணம் நீயும் தீய செயல்களை இயற்றுகின்றாய் என இராவணனுக்கு எடுத்துக் கூறுகின்ற கருணை மொழிகள் எமதுள்ளத்தையும் உருக்குகின்றது. தன்னைச் சிறையிலடைத்து இன்னற் படுத்தும் கொடியோனாகிய இராவணனைத் திருத்த முயல்கின்ற சீதாதேவியின் பெருந்தன்மை,

இன்ன செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

என்னுந் திருக்குறளுக்கோர் இலக்கியமாய் விளங்குதல் காண்க:

தங்கை மூக்கும் தம்பியர் தோளும்

134. உன்னையுங் கேட்டு மற்றுன் னூற்றமு
முடைய நாளும்
பின்னையிவ் வரக்கர் சேனைப் பெருமையு
முனிவர் பேணிச்
சொன்னபி னுங்கை மூக்கு மும்பியர் தோளுந்
தாளும்
சின்னபின் னங்கள் செய்த வதனைநீ சிந்தி
யாயோ.

கொண்டுகூட்டு: உன்னையும் கேட்டு, மற்று, உன் னூற்றமும், உடைய நாளும், பின்னை இவ், அரக்கர், சேனை(யின்) பெருமையும், முனிவர் பேணிச் சொனனபின், உங்கை முக்கும், உம்பியர் தோளும் தாளும், சின்ன பின்னங்கள், செய்த அதனை நீ, சிந்தியாயோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

உன்னையும் கேட்டு - உன்னைப்பற்றி முனிவர் முதலியோர் சொல்ல அறிந்தும், மற்று - அதன் மேலும், உன் ஊற்றமும் - உன்னுடைய வலிமையும், உடையநாளும் - (நீ) பெற்றுள்ள முக்கோடி வாழ்நாட்களையும், பின்னை - பின்னையும் (அதன் பின்பும்) இவ் அரக்கர் சேனைப் பெருமையும் - இந்த இராக்கதர்களுடைய சேனையின் பெருக்கத்தையும் (மிகுதியையும்) முனிவர்-வனத்தின்கண் வாழும் முனிவர்கள், பேணிச் சொன்ன பின் - விரும்பிச் கூறிய பின்பும் (தம்மைப் பாதுகாத்துக் கூறிய பின் எனவும் பொருள் கூறலாம்) உன்கை - உன் தங்கையாகிய சூர்ப்பணகையின், மூக்கும் - மூக்கு முதலிய உறுப்புக்களையும், உம்பியர் - உன் தம்பிமார்க்களாகிய, கரன், தூடணன், திரு சிரா முதலானவர்களின், தோளும் - தோள்களையும், தாளும் - கால்களையும், சின்னபின்னங்கள் செய்த - துண்டந் துண்டங்களாக வெட்டிய, அதனை - அச் செய்தியை, நீ சிந்தியாயோ - (இராம இலக்குமணர்களை மனிதர் என்று இகழ்கின்ற) நீ எண்ணிப்பாராயோ.

பொழிப்பு

உன்னைப்பற்றி முனிவர் முதலியோர் சொல்ல அறிந்தும், அதன் மேலும், உன்னுடைய வலிமையையும், நீ பெற்றுள்ள முக்கோடி வாழ்நாட்களையும், உனக்குத் துணையாக உள்ள இந்த அரக்கர்களின் சேனைப் பெருக்கையும் வனத்தின்கண் வாழும் முனிவர்கள் கூறிய பின்பும், உன் தங்கையாகிய சூர்ப்பணகையின் மூக்கு முதலிய உறுப்புக்களையும், உன் தம்பியர்களாகிய கரன் முதலியோரின் தோள்களையும், கால்களையும், துண்டந் துண்டமாக (இராம இலக்குமணர்கள்) வெட்டி வீழ்த்திய செய்தியை நீ எண்ணிப் பார்ப்பாயாக என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில், இராம இலக்குமணர்கள், கரன் முதலியோரை வென்ற வீரச் செயல்களை இராவணனிடங் கூறுகின்ற சீதாதேவியின் பெருமிதக் குரலைக் கேட்கின்றோம்.

உன் வீரம் வாழ்நாள், முதலியவற்றையும், உனக்குத் துணையாக உள்ள அரக்கர் சேனைப் பெருக்கையும், முனிவர்களால் அறிந்த பின்பும் உன்னையொரு பொருளாக மதியாது உன் தங்கையின் மூக்கை வெட்டியும், உன் தம்பியராகிய கரன் முதலியோரைக் கொன்றும் இராம இலக்குமணர்கள் வெற்றியீட்டிய செய்தியை எண்ணிப் பார்ப்பாயாக எனச் சீதாதேவி இராவணனுக்குச் சொல்லுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கை மூக்கும் உம்பியர் தோளும் தாளும்
சின்ன பின்னங்கள் செய்த அதனை நீ சிந்தியாயோ

எனச் சீதாதேவி இராவணனைக் கேட்கின்ற குரலிலே கலந்துளள ஆரவமும், எழுச்சியும் இராவணன் சிந்தனையைத் தூண்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இராவணன் தான் முன்பெற்ற வெற்றிகளை அடுக்கடுக்காக எடுத்துச் சொல்லிச் சொல்லித் தன்னையே தான் புகழ்ந்து கொள்வதேயன்றி தன் பகைவரின் ஆற்றலை அளந்துகாணும் ஆற்றலில்லாத ஒன்றே அவன் தோல்விக்குக் காரணமாகும். இங்ஙனம் இராவணனிடத்தில் அமைந்துள்ள இக் குறைபாட்டை நன்குணர்ந்த சீதாதேவி அதனை நீ சிந்தியாயோ என இராவணனைத் தெருட்டிச் சிந்திக்குமாறு தூண்டுகின்ற செயல் போற்றத்தக்கதாகும்.

மரன் படர் வனத்து ஒருவனே சிலை வலத்தால்
கரன் படைபடுத்து அவனைவென்று களைகட்டான்

எனக் கரனைப் படையுடன் அழித்த இராமபிரானின் ஆற்றலை விபீடணன் இராவணனுக்கு எடுத்துக் கூறுவதையும் நோக்குக.

இராவணன் சீதாதேவிமேற் கொண்ட அறந் தவறிய காம வேட்கையால் தன் சிந்தனையை மறந்து பகைவனின் ஆற்றலை ஆராய்ந்து பாராது அழிவடைய முனைந்து நிற்கின்றான் என்பதை அறிகின்றோம். இதனை,

கரனையும் மறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான் உற்ற பழியையும் மறந்தான் வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான் கேட்ட மங்கையை மறந்திலாதான்

எனக் கம்பர் காமத்தினால் இராவணன் சிந்தனையின்றிச் செயலாற்றுகின்றான் என்பதை விளக்கிக் கூறியிருத்தலால் உணர்க.

ஆயிரந் தடக்கையான்

135. ஆயிரந் தடக்கை யானின் னைந்நான்கு கரமும் பற்றி
வாய்வழி குருதி சோரக் குத்திவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத் தோள்க டுணித்தவன் இருலைந்த மாற்றம்
நீயறிந் திலையோ நீதி நிலையறிந் திலாத நீசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: நீதி நிலை அறிந்திலாத நீசா, நின் ஐந் நான்கு கரமும் பற்றி, வாய் வழி குருதிசோர, குத்தி வான் சிறை யில் வைத்த தூயவன் ஆயிரம் தடக்கையான் வயிரத் தோள்கள் துணித்தவன் (துணித்தவனுகிய பரசுராமன் இராமபிரானுக்கு) தொலைந்த மாற்றம் நீ அறிந்திலையோ.

பொருள்

நீதி நிலை அறிந்திலாத - நீதியின் தன்மையைச் செம்மை யாக அறியாதிருக்கின்ற, நீசா - இழிதணமுடையவனே, நின் - உனுடைய, ஐந்நான்கு கரமும்பற்றி - இருபது கைகளையும் (தனது) இருபது கைகளால் பிடித்துக்கொண்டு, வாய் வழி குருதிசோர - உனது வாயின் வழியாக இரத்தம் சொரியும்படி, குத்தி-மற்றைய தன் கைகளால் உன்னைக் குத்தி, வான்சிறையில் வைத்த - பெருஞ்சிறையில் உன்னை வைத்த, தூயவன் - அறத்தை மறவாத பரிசுத்தமானவனும், ஆயிரம் தடக்கையான் - பெரிய ஆயிரம் கைகளையுடையவனுமாகிய கார்த்தவீரியனின், வயிரத் தோள்கள்-பெருவலிமை பொருந்திய தோள்களை, துணித்தவன்- வெட்டி வீழ்த்தியவனுகிய பரசுராமன், தொலைந்த - (எனது தலை வனுகிய இராமபிரானிடத்தில்) தன் ஆற்றலெல்லாம் அழிந்து தோற்றுச் சென்ற, மாற்றம் - செய்தியை, நீ அறிந்திலையோ - நீ அறியவில்லையோ.

பொழிப்பு

நீதியின் தன்மையை ஆராய்ந்து தெளியாத சிறியோனே! உன்னுடைய இருபது கைகளையும், தனது இருபது கைகளாலும் பிடித்துக்கொண்டு உனது வாயின்கண்நின்று குருதி வழியும் வண் ணம் தனது மற்றைய கைகளால் உன்னைக் குத்திச் சிறையில் வைத்த கார்த்தவீரியனை வெட்டி வீழ்த்திய பரசுராமன், இராம பிரானை எதிர்த்துத் தன் ஆற்றலெல்லாம் தொலைந்து தோற்றுப் போன வரலாற்றை நீ இன்னும் அறிந்திலையோ என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் கார்த்தவீரியனின் மலைபோன்ற தோள் களை வெட்டிவீழ்த்திய மகா வீரனுகிய பரசுராமன் இராமபிரானை எதிர்த்துத் தன் ஆற்றல் அழிந்த வரலாற்றை இராவணனுக்கு மிக இறுமாப்புடன் கூறுகின்ற சீதாதேவியின் பெருமிதக் குர லைக் கேட்கின்றோம்.

கார்த்தவீரியன் இராவணனை மிக எளிதாக வென்று சிறை வைத்த வரலாற்றை எடுத்துச் சொல்லுகின்ற சீதாதேவியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலிலே நிழலாடுகின்ற எழுச்சியைக் கேட்டதும், இராவணன் மிக நாணமும் ஏக்கமும் கொண்டிருப்பான் என்பதில் ஐயமில்லை. மூவரையும், தேவரையும் வென்று மூவுலகையும் ஏவல் கொள்கின்ற வல்லமையாளனெனத் தன்னைத்தானே புகழ்ந்து தற் பெருமையுடன் சீதாதேவிக்குக் கூறுகின்ற இராவணன், தனது தோல்வியைச் சீதாதேவி எடுத்துக் கூறுவதைக் கேட்டவுடன் என்ன நிலைமை அடைந்திருப்பான் என்று சொல்லவே முடியாது.

..... நின்
ஐந்நான்கு கரமும் பற்றி
வாய்வழி குருதிசோர
குத்திவான் சிறையில்
வைத்த தூயவன்

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலைக் கேட்டவுடன் இராவணனின் உள்ளம், என்றும் அவன் உணர்ந்திராத பெருந்துன்பத்தை அடைந்திருக்கும் என்க,

தூயவன் வயிரத் தோள்கள் துணித்தவன்
தொலைந்த
மாற்றம் நீ அறிந்திலையோ

எனச் சீதாதேவி இராவணனைக் கேட்கின்ற குரலிலே எழுகின்ற பெருமிதம், எமது உள்ளத்தையும் தொற்றுகின்றது. கார்த்த வீரியன் பேராற்றல் வாய்ந்தவன் என்பதும், அவன் இராவணனை மிக எளிதாக வென்றவன் என்பதும், அங்ஙனம் இராவணனையும் மிகஎளிதாக வென்ற கார்த்தவீரியனின் ஆயிரந்தோள்களையும் தன் மழுவினால் வெட்டி வீழ்த்திய மகாவீரன் பரசுராமன் என்பதும், அப் பரசுராமன் ஆற்றல் அழிந்து செல்லும் வண்ணம் அவன் கொடுத்த வில்லை வளைத்து வெற்றி கொண்டவன் இராமபிரான் என்பதும் மூவுலகும் அறிந்த உண்மைகளாகும். இவ்வுண்மைச் செய்தியை இராவணன் அறிந்தவுடன் ஆராய்ந்து தெளிவானால் தன்னால் இராமபிரானை வெல்ல முடியாது என்பதை ஒப்புக்கொண்டிருப்பான் எனச் சீதாதேவி கருதுகின்றாள். இராவணன் இராமபிரானின் வெற்றிச் செயல்களை அறிந்த பின்பும், அவன் ஒரு மனிதன் தானே, அவனால் என்னை எங்ஙனம் வெல்ல முடியுமென இகழ்ந்து மதித்து இராமபிரானின் ஆற்றலை ஒப்புக்கொள்ளாமல் இருந்ததொன்றே அவன் அழிவிற்குக் காரணமாகும். இதனை

இச்சை அல்லன உறுதிகள் இசைக்குவென் என்றுய்
பிச்சர் சொல்லுவ சொல்லினை என்பெரு விறலைக்
கொச்சை மானுடர் வெல்குவர் என்றனை

என விபீடணனிடம் இராவணன் கூறுவதாலும் அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் இங்ஙனம் தன் வலியை மட்டும் மிகுத்துக் கூறுவதேயன்றி மாற்றுனின் வலியை மதித்து அளக்கும் மதி நுட்பம் இல்லாமையினுலேயே, தன் எல்லா வலிகளும் அழிந்து இராமபிரானிடம் தோற்க வேண்டிய நிலையை எய்தினன் என் பதை உணர்கின்றேம்.

வினைவலியும் தன்வலியும் மாற்றுன் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்

என்பது திருக்குறள்

இடிக்குநர் இல்லான்

136. கடிக்கும் வல்லரவுங் கேட்கு மந்திரங் களிக்கின் றேயை
அடுக்குமீ தடாதென் றுன்ற வேதுவோ டறிவு காட்டி
இடிக்குந ரில்லை யுள்ளா ரெண்ணிய தெண்ணி யுன்னை
முடிக்குந ரென்ற போது முடிவன்றி முடிவ துண்டோ.

தொண்டு கூட்டு: கடிக்கும் வல் அரவும், மந்திரம் கேட்கும், களிக்கின்றேயை ஈது அடுக்கும், ஈது அடாது ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டி இடிக்குநர் இல்லை (நீ) எண்ணியது எண்ணி உன்னை முடிக்குநர் உள்ளார் என்றபோது முடிவது முடிவன்றி உண்டோ.

பொருள்

கடிக்கும் வல் அரவும் - கடித்துக் கொல்லும் கொடிய பாம் பும், மந்திரம் கேட்கும் - மந்திரம் கேட்டு (மந்திரவாதி கூறும் மந்திரத்தைக் கேட்டவுடன்) அதற்கு அடங்கி நடக்கும், (ஆனல்) களிக்கின்றேயை - செருக்கடைந்து திரிகின்ற உன்னை, ஈது அடுக் கும்-இது பொருந்தும் (நீ செய்யத் துணிந்த இக்காரியம் நீதி யோடு பொருந்திய தென்றும்). ஈது அடாது - இது பொருந்தாது (நீ செய்யத் தொடங்கிய இக்காரியம் நீதியோடு பொருந்தாத தாகும் என்றும்). ஆன்ற - மிகச்சிறந்த (மாட்சிமைப்பட்ட), ஏதுவோடு - காரணங்களோடு, அறிவு காட்டி - அறிவு தோன்றும் வண்ணம் எடுத்துக்கூறி (அறிவு கொளுத்தி), இடிக்குநர் இல்லை- நீ தியநெறியை ஆற்றச் செல்லும் பொழுது இடித்து (கண்டித்து) உன்னைத் தடுக்கக் கூடியவர்கள் (உன் அமைச்சர்களில் ஒருவரும்) இல்லை, (நீ) எண்ணியது எண்ணி - நீ நினைத்ததனை அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமும் நினைத்து, உன்னை முடிக்குநர்-உன்னைக் கெடுப்பவர்கள், (உனது அமைச்சர் சபையில்) உள்ளார் உள்ளார்கள், என்ற போது - என்றால், முடிவது - நிறைவேறுவது. முடிவன்றி - உன் அழிவே அல்லாமல், உண்டோ - வேறு நிகழ்வது உண்டோ (இல்லை என்பதாம்)

பொழிப்பு

கடித்துக் கொல்லும் கொடிய பாம்பும் மந்திரத்தைக் கேட்ட வுடன் அதற்கு அடங்கி நடக்கும். செருக்கடைந்து திரிகின்ற உன்னை நீ செய்யும் இக்காரியம் பொருத்தமானதென்றும், இக் காரியம் பொருந்தாதென்றும், மிகச்சிறந்த காரணங்களோடு அறிவு தோன்றும் வண்ணம் எடுத்துக் கூறி, நீ செய்யும் தீய காரியங்களைக் கண்டித்து உன்னைத் தடுக்கக் கூடியவர்கள் உனது அமைச்சர்களில் ஒருவரும் இலர். இருக்கின்றவர்கள் நீ நினைத் தனை அப்படியே தாமும் நினைந்து உன்னைக் கெடுக்கின்றவர்க ளாவர் என்றபோது உனக்கு அழிவே அல்லாமல் வேறு நிகழ் வதுண்டோ என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் அறநெறி காட்டி நீ செய்யும் தீய காரியங் களைக் கண்டித்து உன்னைத் தடுத்து நன்னெறிப்படுத்தக் கூடிய அமைச்சர்கள் உனது அமைச்சியல் அவையில் ஒருவரும் இலர் எனக்கூறி இராவணனைத் தெருட்டுகின்ற சீதாதேவியின் சிந்த னைக் குரலைக் கேட்கின்றோம்;

செங்கோல் அரசனுகிய சனகன் மகளாகப் பிறந்து செங்கோல் அரசனுகிய தசரதனின் மருமகளாய் விளங்கும் சீதாதேவியின் குரலிலே அரசன் அறநெறியை விட்டுத்தவறினால் அவனை இடித்து நன்னெ றிப்படுத்தும் நல்லமைச்சர்களின் இயல்பை உணர்ந்த வல்லமைப் பாட்டின் எழுச்சியைக் காண்கின்றோம்.

களிக்கின்றோயை அடுக்கும் ஈது அடாது என்று
ஆன்ற ஏதுவோடு அறிவுகாட்டி
இடிக்குநர் இல்லை

எனச் சீதாதேவி கூறுகின்ற குரலிலே நல்லமைச்சர் இல்லாமை யினால் வரபலமும், வாளாண்மையும், தோளாண்மையும் படைத்த நீ அறத்தை மறந்து அழியப் போகின்றாய் என இராவணனைத் தெருட்டுகின்ற இரக்க உணர்ச்சியைக் காண்கின்றோம். நல்ல மைச்சர் இல்லாமையினால்தான் இராவணன் பிறன் இல்லாளை விழைந்து தீயநெறியில் ஈடுபடுகின்றான் என்பதே சீதாதேவியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தாகும். நல்லமைச்சர்கள் உண்மையாக இராவணன் அவை யின்கண் இருப்பார்களானால் ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்த வனுகிய இராவணன் அறத்தை மறந்து அயலான் மனையாளைக் கவர்ந்து சிறையிலேவைக்கும் பெரும் கொடுஞ்செயலைப் புரிந்தி ரான் என்பதாம்.

தம்முயிர்க் குறுதி யெண்ணூர் தலைமகன்
வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்
றுரைக்கும் வீரர்
செம்மையில் திறம்பல் செல்லாத் தேற்றத்தார்
தெரியுங்காலம்
மும்மையு முணர வல்லா ரொருமையே
மொழியும் நீரார்

எனக் கம்பர் நல்லமைச்சர்களின் இயல்பைக் கூறுதல் காண்க.

இராவணன் அவையிலுள்ள மகோதரன் முதலிய மந்திரி மார்கள் இராவணன் கூறுகின்ற தீய செயல்களையெல்லாம் அப் படியே ஒப்புக்கொண்டு அவனை ஊக்கி விடுகின்றவர்களே ஆவர்.

முன் உனக்கு இறைவர் ஆனமூவரும் தோற்றூர்
தேவர்
பின் உனக்கு ஏவல்செய்ய உலகு ஒரு மூன்றும்
பெற்றாய்
புல்நுனைப் பனிநீர் அன்ன மனிசரைப் பொருள்
என்று உன்னி

என முதல் அமைச்சனுகிய மகோதரன் இராவணனை நோக்கிக் கூறுவதால் உணர்க.

இங்ஙனம் இராவணனின் அமைச்சர்கள் எல்லோரும் அவன் கூறும் தீய நெறிகளை ஆதரித்து அவனை அழிக்க முயன்றார்களே அன்றி அவன் தீய நெறிகளிற் செல்லும்பொழுது இடித்துரைத்து அவனை ஆக்கிவைக்கும் எண்ணம் இலர் எனச் சீதாதேவி இரா வணனுக்குக் கூறுகின்றாள்.

உள்ளார் எண்ணியது எண்ணி உன்னை முடிக்குநர்
என்றபோது
முடிவன்றி முடிவதுண்டோ

எனவரும் இச்செய்யுட் பகுதியைப் படிக்கும்போது எழுகின்ற ஓசை இடிக்குநர் இல்லாத இராவணன் தவறுது அழிந்துபடுவான் என்பதை எமது உள்ளத்தில் பதிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவன்றி முடிவதுண்டோ எனச் சீதாதேவி கேட்கின்ற குரலுடன்

வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றும் காலமே

எனவரும் கும்பகருணன் குரலையும் ஒப்பிட்டு நோக்குக:

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பான் இல்லானும் கெடும்

எனவும்,

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழை யிருந்தான் கூறல் கடன்

எனவும் வள்ளுவர் கூறும் அமைச்சரின் பண்புகளையும் நோக்குக.

பரசுராமன்
கார்த்தவீரியனை வெற்றிகொண்ட வரலாறு

கார்த்தவீரியன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். வேட்டையாடல் முடித்தபின் பரசுராமனின் தந்தையாராகிய சமதக்கினி முனிவரின் தவச்சாலைக்கு வந்தான். வந்த கார்த்தவீரியனை வரவேற்று மகிழ்ந்த சமதக்கினி முனிவர் அவனுக்கும் அவன் படை வீரருக்கும் பெருவிருந்தளித்தார். விருந்துண்ட கார்த்தவீரியன் மிக மகிழ்ந்தான். பின் சமதக்கினி முனிவரிடம் விடைபெற்றுப் புறப்பட்ட கார்த்தவீரியன் அவரின் சம்மதமின்றி அவருக்கே உரிமையாகவுள்ள காமதேனுவைக் கவர்ந்து சென்றான். காமதேனுவைக் கவர்ந்த கார்த்தவீரியனின் செயலை அறிந்த சமதக்கினி முனிவரின் மைந்தனாகிய பரசுராமன் பெருஞ் சினங்கொண்டு கார்த்தவீரியனை எதிர்த்துக் கடும்போர் புரிந்தார். அப்போரில் கார்த்தவீரியனின் சேனைத்திரளைப் புறங்கொடுத்தோடச்செய்து அவனின் ஆயிரம் வீரத்தோள்களையும் தலைகளையும் தன் கோடரிப் படையினால் வெட்டி வீழ்த்தி வெற்றிகொண்டார் என்பது வரலாறாகும்.

இராமபிரான்
பரசுராமனை வென்ற வரலாறு

சீதையின் திருமணம் நிகழ்ந்தபின் இராமபிரான் சீதாதேவியையும் அழைத்துக்கொண்டு தன் தந்தையாரும் தம்பிமாரும் நாற்பெரும் படைகளும் சூழ அயோத்தியை நோக்கி வழிக்கொண்டான். அப்பொழுது இடைவழியில் பரசுராமன் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றினான்; தோன்றிய பரசுராமன் இராமபிரானை நோக்கி இதோ நான் தருகின்ற வில்லை வளைத்து உன் வல்லமையைக் காட்டுவாயாக என்று கூறி ஓர் வில்லை இராமபிரானிடம் கொடுத்தான்; கொடுத்த வில்லை இராமபிரான் வளைத்து அம்பு தொடுத்தவண்ணம் பரசுராமனை நோக்கி நீர் தவவேடந் தாங்கியிருப்பதால் உம்மைக் கொல்லுதல் நல்லதல்ல; இவ்வில்லில் தொடுத்த பாணத்திற்கு இலக்காக என்ன தரப்போகின்றாய் எனக் கேட்டார். இராமபிரானின் ஆற்றலையும் அறநெறியில் தவறுத அருங் குணத்தையும் கண்டு வியந்த பரசுராமன் நான் இத்துணைக்காலமும் ஆற்றிய தவப்பயனை உன் அம்புகளுக்கு இலக்காக ஏற்றுக்கொள்வாய் எனக்கூறி தன் பெருமிதம் அடங்கி மிக நாணத்துடன் இராமபிரானிடம் விடைபெற்றுச் சென்றான் என்பது வரலாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சினமும் காதலும் எதிர் எதிர் தாக்க நின்ற தீயவல் அரக்கன்

[137 — 140 செய்யுள்]

சீதாதேவியார் எடுத்து மொழிந்த அறநெறிகளைக் கேட்ட இராவணன் உள்ளத்தில் சீற்றம் எழுந்தது. அவனின் இருபது கண்களும் தீப்பொறிகளைச் சிதறின. கோரப்பற்களின் ஒளி புறத்தே தோன்றி வீசும்வண்ணம் பிளந்த பத்து வாய்களும், மலைகளும் நிலைகலங்கிக் குலையும்படி அதட்டிச் சீதாதேவியை அச்சுறுத்தின. இங்ஙனம் இராவணன் உள்ளத்தில் எழுந்த கோபத்தின் மிகுதி, முன்னர், அவன் உள்ளத்தில் இடம் பெற்றிருந்த காமவேட்கையையும் கடந்துவிட்டது. அளவுகடந்த சீற்றம் கொண்டவனுகிய அவன் நிலத்தை உதைத்ததினுல் நீண்ட கால்களை உடையவனும், நெருப்பைக் கக்குகின்ற கண்களை உடையவனும், உருத்தெழுந்து இவளைப் பிளந்து தின்பேன் எனச் சினந்து நின்ருன். இவ்வாறு இராவணன் உள்ளத்தில் ஓங்கி எழுந்த கொடுங்கோபத்துடன் காமமும் ஒன்றுபட்டு எழுந்தது. கோபம் காமத்தாலும், காமம் கோபத்தாலும் பற்றப்பட்டு ஒன்றையொன்று விஞ்சிடாமல் இராவணன் உள்ளத்தில் நின்று பெரும்போர் புரிந்தன. சீதாதேவியைக் கொன்று தின்ன வேண்டுமெனக் கொதித்தெழுந்த இராவணன், காமத்தின் தாக்குதலால் தணிந்து அடிபெயர்த்து அசையமுடியாமல் அப்படியே நின்று விட்டான்.

இங்ஙனம் இராவணன் கோபத்தினுலும், காமத்தினுலும் கவரப்பட்ட உள்ளத்துடன் சீதாதேவியை நோக்கியவண்ணம் நிலைபெயராது நின்றபொழுது, அசோகவனத்தில் மறைந்திருந்த அஞ்சனை மைந்தனுகிய அனுமான், வெஞ்சினம் மிக்கவனுய்ச் சிந்திக்கின்ருன். அருந்ததி போன்ற பெரும் கற்பை உடையவளும், என்னை அடிமையாக ஆண்டருளிய இராமபிரானின் ஆருயிர்த் தலைவியாய் விளங்குகின்றவளுமான சீதாதேவியின் முன்னின்று அருவருக்கத்தக்க கொடும் மொழிகளைக் கூறிய இக்கீழ் மகனுகிய இராவணன், தன் கைகளால் சீதாதேவியைத் தீண்டுவதற்கு முன்னமே அவனை என் கால்களால் மிதித்துப் பின் ஆவன செய்வேன் என எண்ணினன். துணையின்றித் தனி ஒருவனுக நிற்கின்ற தான், சீதை முன் நின்கின்ற தீயோனுகிய இராவணனின் பத்துத் தலைகளையுந் தாக்கி நிலத்தில் சிதறும் வண்ணம் வீழ்த்தி இலங்கை மாநகரையும் கருங்கடலில் அமிழ்த்தி, தூய தவம் செய்யும் சீதாதேவியை என் தோளிற் சுமந்து செல்வேனெனச் சிந்தனை கொண்டவனுகிய அனுமான் தன் கைகளைப் பிசைந்தவண்ணம் இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கனின் சிற்றம்

137. என்ற றத்துரை கேட்டலு மிருபது நயனம்
மின்றி றப்பன வொத்தன வெயில்விடு பகுவாய்
குன்றி றத்தெழித் துரப்பின குறிப்பதென் காமத்
தின்றி றத்தையுங் கடந்தது சீற்றத்தின் தகைமை

கொண்டுகூட்டு: என்ற அறத்து உரை கேட்டலும், (இராவணனின்) இருபது நயனம் மின்திறப்பன ஒத்தன, வெயில் விடு பகுவாய் குன்று இறதெழித்து உரப்பின, குறிப்பது என்? சீற்றத்தின் தகைமை காமத்தின திறத்தையும் கடந்தது.

பொருள்

என்ற அறத்து உரை - என்று சீதாதேவியார் மொழிந்த அறநெறிபற்றிய (வாய்மை) மொழிகளை, கேட்டலும் - கேட்டவுடனே (இராவணனின்) இருபது நயனம் - இருபது கண்களும் (நெருப்புப் பொறிகள் பறப்பதால்) மின் திறப்பன - மின்னல், மேகத்தைக் கிழித்துக் கொண்டு வெளிப்படுவதை, ஒத்தன - போன்றன (இருபது கண்களிலும் நெருப்புப் பொறிகள் பறந்தன என்பதாம்) வெயில் விடு - கோரப்பற்களின் ஒளியை வீசும், பகுவாய் - பிளந்த பத்து வாய்கள், குன்று இற - மலைகளும் குலையும்படி, தெழித்து உரப்பின - அதட்டி அச்சுறுத்தின, குறிப்பது என் - சொல்வதற்கு யாது உள்ளது. சீற்றத்தின் தகைமை - கொடுஞ் சினத்தின் தன்மை (கோபத்தின் தன்மை) காமத்தின் திறத்தையும் - காமவேட்கையின் மிகுதிப்பாட்டையும், கடந்தது - மீறிவிட்டது (வென்று விட்டது என்பதாம்.)

பொழிப்பு

என்று சீதாதேவியார் மொழிந்த அறநெறிபற்றிய மொழிகளைக் கேட்டவுடன், இராவணனின் இருபது கண்களினின்றும் நெருப்புப் பொறிகள் பறந்தன, கோரப்பற்களின் ஒளி வீசுகின்ற பிளந்த பத்து வாய்கள், மலைகளும் குலையும்படி அதட்டி அச்சுறுத்தின; சொல்வதற்கு யாது உள்ளது. அவன் கொண்ட கோபத்தின் மிகுதி அவன் உள்ளத்தில் இடம்பெற்றிருந்த காமவேட்கையையும் வென்று விட்டது;

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவி கூறிய அறநெறிகளைக் கேட்டவுடன் இராவணன் உள்ளத்தில் மூண்டெழுந்த சினத்தின் மிகுதி சொல்லப்படுகின்றது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கோல் அரசன் கைக்கொள்ள வேண்டிய அறநெறிகளை ஆர்வத்துடனும், இரக்கத்துடனும் ஆராய்ந்து கூறி, இராவணனை வாழ்விக்கக் கருதிய சீதாதேவியின் எண்ணம் சிதறிக் குலையும் வண்ணம் இராவணன் கொண்ட சினத்தின் மிகுதியைக் கம்பர் அஞ்சி அஞ்சிக் கூறுகின்ற குரலைக் கேளுங்கள்.

இருபது நயனம் மின் திறப்பன ஒத்தன
வெயில் விடு பகுவாய் குன்று இறத்தெழித்து
உரப்பின

என வரும் கவிதைத் தொடர்களைப் படிக்கும் பொழுதே இராவணனின் கோபக்கனல் எம்மையும் சுட்டுவிடுமோ என்று எண்ணத் தக்க உணர்ச்சி உண்டாகின்றது;

சீதாதேவிமேற் கொண்ட காமவேட்கை மிகுதியால் அவளை நிலத்தில் வீழ்ந்து இரந்து இரங்கி நின்ற இராவணனின் மன நிலையை அவன் மனத்திலே மூண்டெழுந்த கோபக்கனல் மாற்றி அமைத்து விட்டதெனக் கம்பர் மிகவியப்புடன் கூறுகின்றார்.

காமத்தின் திறத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை

என வரும் தொடரில் இராவணன் உள்ளத்தில் நிலைத்த காம உணர்ச்சி மாறிக் கோப உணர்ச்சி மிக்குத் தோன்றிய செயலை அப்படியே கம்பர் எடுத்துக் காட்டுகின்றார்.

இங்ஙனம் இராவணன் உள்ளத்தில் தோன்றிய கோப உணர்ச்சி, பின் காம உணர்ச்சியினால் விழுங்கப்படாமல் ஒரே நிலையில் நிற்குமானால் அவனின் மான உணர்ச்சி வளர்ந்து பெரும் வீரச் செயல்களை ஆற்றுவான் என்பதில் ஐயமில்லை என்பதையும் கம்பர் சொல்லாமற் சொல்லுகின்றார்;

மீது எழும் மெனக்குள் அன்ன யாக்கையை
விடுவது அல்லரல்
சீதையை விடுவது உண்டோ இருபது திரள்
தோள் உண்டால்

எனக் கும்பகருணன் இறந்தபின்பு காமத்தால் விழுங்கப்படாமல் இராவணனிடத்தில் நிலைத்து நின்ற வீர உணர்ச்சி சீதையைச் சிறைவைத்து அவளைத் தன் கெட்ட கருத்திற்கு உடன் படுத்தும் வண்ணம் காமவேட்கையால் கைதொழுது வேண்டும் காலத்திலும் நிலைத்திருக்குமானால் இராவணனின் வீரம் மிக்கோங்கி விளங்கி இராமாயண வரலாற்றையும் மாற்றியிருக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமும் காமமும்

138. வளர்ந்த தாளினன் மாதிர மனைத்தையு
மறைவித்
தளந்த தோளின னனல்சொரி கண்ணின
னிவளைப்
பிளந்து தின்பனென் றுடன்றுநின் றனனடி
பெயரான்
கிளர்ந்த சீற்றமுங் காதலு மெதிரெதிர்
கிடைப்ப.

கொண்டுகூட்டு: வளர்ந்த தாளினன், மாதிரம் அனைத்தையும் மறைவித்து அளந்த தோளினன, அனல் சொரி கண்ணினன் (ஆகிய இராவணன்) இவளைப் பிளந்து தின்பென் என்று உடன்று நின்றனன். கிளர்ந்த சீற்றமும் காதலும் எதிர் எதிர் கிடைப்ப அடிபெயரான் நின்றனன்.

பொருள்

வளர்ந்த தாளினன் - சீற்றத்தால் (கோபம் மிகுதியால் நிலத்தை உதைத்து) நீண்ட கால்களையுடையவனும், மாதிரம் அனைத்தையும் - திசைகளையெல்லாம், மறைவித்து-மறையும்படி செய்து, அளந்த தோளினன்-அளவிடுகின்ற தோள்களையுடைய வனும், அனல் சொரி - நெருப்பைக் கக்குகின்ற, கண்ணினன் - கண்களையுடையவனும், (ஆகிய இராவணன் சினம் மிகுதியால்) இவளை, பிளந்து தின்பென் என்று கிழித்து உண்ணுவேன், என்று உடன்று - சினந்து, நின்றனன் - நின்றான், கிளர்ந்த - ஓங்கி எழுந்த, சீற்றமும்-கோபத்துடன், காதலும் - காமமும், எதிர் எதிர் - ஒன்றின் எதிர் ஒன்று குறையாது (தாழாது) கிடைப்ப-பொருந்தி நிற்றலால் (இசைதலால்) அடிபெயரான் - (சீதாதேவியைத் துன்புறுத்த எண்ணியவன்) அடி எடுத்து வைக்க முடியாமல், அப்படியே நிலைத்து நின்று விட்டான்.

பொழிப்பு

சீற்றத்தால் நிலத்தை உதைத்து நீண்ட கால்களை உடையவனும் திசைகளையெல்லாம் மறையும்படி செய்து அளவிடுகின்ற தோள்களையுடையவனும், நெருப்பைக் கக்குகின்ற கண்களை உடையவனும், இவளைப் பிளந்து தின்பேன் என்று சினந்து நின்றான், ஓங்கி எழுந்த கோபத்துடன் காமமும் ஒன்றின் ஒன்று குறையாமல் பொருந்தி நிற்றலால் சீதாதேவியாரைத் துன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்த எண்ணியவன் அடியெடுத்து வைத்துச் செல்லாது நின்றான் என்பதாம். (அப்படியே நிலைத்து நின்று விட்டான் என்க)

விளக்கம்

இச் செய்யுளில் சினங்கொண்டு சீதாதேவியைக் கிழித்துத் தின்பேன் என்றெழுந்த இராவணன் அடுத்த கண்ணிமைப் பொழுதில் சீதாதேவியின் மேற் கொண்ட காமவேட்கை எழுதலால் சினம் அடங்கிச் செயலற்று நின்ற நிலைமை சொல்லப்படுகின்றது.

சீதாதேவியைப் பிளந்து தின்பேன் என்று சீறியெழுந்த இராவணன் உள்ளத்தில் உடனே சீதாதேவியின் மேற் கொண்ட காதல் தோன்றி விட்டது. சினமும் காதலும் ஒன்றுக்கொன்று குறையாமல் இராவணன் உள்ளத்தில் நின்று போராடத் தொடங்கின தென்பதே கம்பரின் கருத்தாகும்.

இங்ஙனம் சினத்தினால் சிறிய இராவணன் உள்ளத்தில் தோன்றிய காதல் சீதாதேவிக்குத் தீங்கு செய்யாவண்ணம், அவனைத் தடுத்து விட்டது.

இவளைப் பிளந்து தின்பேன் என்று உடன்று
நின்றனன்
அடிபெயரான் கிளர்ந்த சீற்றமும் காதலும்
எதிர் எதிர் கிடைப்ப.

எனக் கம்பர் இராவணனின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றார். இராவணனின் கோபக் கோலத்தைக் கம்பர் கூறிய கவிதைத் தொடர்களில் காணும் பொழுதே உள்ளம் கலங்குகின்றது.

வளர்ந்த தாளினன் மாதிரம் அனைத்தையும்
மறைவித்து
அளந்த தோளினன் அனல்சொரி கண்ணினன்

எனக் கம்பர் கூறும் கவிதைத் தொடர்களைப் படிக்கும்பொழுது எழுகின்ற ஓசை, இராவணனின் கோபக்கோலத்தை எம் நெஞ்சத் திரையிலும் பதித்து விடுகின்றது. சீதையைக் கொன்று தின்பேன் எனக் கோபத்தினால் கொதித்தெழுந்த இராவணன், அவளை என்று கூடுவேன் என எழுகின்ற இழிந்த காமவேட்கையால் தணிந்து விட்டதென்பதாம்.

இங்ஙனம் சினத்தினாலும் காமத்தினாலும் மாறிமாறி அலைக்கப்படுகின்ற இராவணன் சீதாதேவியை ஒருபோதும் கொல்லத் துணியான் என்பதைக் கம்பர் குறிப்பாகக் காட்டுகின்றார். இதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் கொல்லாய் இன்னே இவளையும்
கொல்லாய் இன்னும்
உன்னையும் கொல்லாய் மற்று இவ்வுலகையும்
கொல்லாய் யானே
இன்னலும் நீங்கி என்றும் கெடாப் புகழ்
எய்துகின்றேன்
பின்னையும் எம்கோன் அம்பின் கிளையொடும்
பிழையாய் என்றாள்.

எனச் சீதாதேவி இராவணனிடம் கூறுவதாக வரும் இச்செய்யுளையும் நோக்குக.

தாளினன், தோளினன், கண்ணினன் என்பவை முறிறெச்சம்.

அனுமானின் எண்ணம்

139. அன்ன காலையி லனுமனு மருந்ததிக் கற்பின்
என்னை யாளுடை நாயகன் றேவியை
யென்முன்
சொன்ன நீசன்கை தொடுவதன் முன்றுகைத்
துழக்கிப்
பின்னை நின்றது செய்குவெ னென்பது
பிடித்தான்.

கொண்டுகூட்டு: அனுமனும் அன்னகாலையில் அருந்ததி கற்பின் (கற்பினையுடையவளும்) என்னை ஆளுடை நாயகன் தேவியை (தேவியாய் விளங்கும் சீதையை) என்முன் சொன்ன நீசன், கை தொடுவதன் முன், (அவனை) துகைத்து, உழக்கி, பின்னை நின்றது செய்குவென் என்பது பிடித்தான்.

பொருள்

அனுமனும் - அசோகவனத்தில் மறைந்து அங்கு நிகழும் நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அனுமானும், அன்னகாலையில் - அப்பொழுது (இராவணன் சினங்கொண்ட அந்நேரத்தில்) அருந்ததி கற்பின் - அருந்ததியைப் போன்ற பெரும் கற்பை உடையவளும், என்னை - (சிறியேனுடைய) என்னை, ஆளுடை நாயகன் - அடிமையாக ஏற்று ஆட்கொண்ட தலைவனான இராமபிரானுடைய, தேவியை - மனைவியுமான சீதாதேவியாரை, என்முன் - என் கண்காணத் தக்கதாக (எனது முன்னிலையில் என்பதாம்) சொன்ன நீசன் - காம வேட்கை மிக்க கீழ்த்தரமான மொழிகளைக் கூறிய கீழ்மகனான இராவணன், கைதொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதன் முன் - தன் கைகளால் தீண்டுவதற்கு முன்னமே, துகைத்து - (அவனை) என் கால்களினால் உதைத்து, உழக்கி - வருந்தும் வண்ணம் செய்து (கலக்கி), பின்னை - அதன் பிறகு, நின்றது செய்குவென் - எஞ்சியுள்ள காரியங்களை இயற்றுவேன், என்பது - என, பிடித்தான் - உறுதியாக எண்ணினான்.

பொழிப்பு

அசோக வனத்தில் மறைந்து அங்கு நிகழும் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த அனுமான், இராவணன் சினம் கொண்டெழுந்த அந்நேரத்தில் அருந்ததியை ஒத்த கற்பை உடையவளும், என் தலைவனான இராமபிரானின் மனைவியாயுமுள்ள சீதாதேவியாரை எனது முன்னிலையில், காமவேட்கை மிக்க கீழ்த்தரமான மொழிகளைக் கூறி வருத்திய கீழ்மகனை இராவணன் தன் கைகளால் தீண்டுவதற்கு முன்னரே அவனை உதைத்து வருத்தி அதன்பின் எஞ்சிய காரியங்களை இயக்குவேன் என உறுதி பூண்டான் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் வெஞ்சினம் கொண்டெழுந்த இராவணன், சீதாதேவியைக் கொன்று தின்று விடுவானே என்று எண்ணி அஞ்சிய அனுமானின் மனநிலை சொல்லப்படுகின்றது.

சீதாதேவி இராவணனை மதியாமல் துரும்பே எனை அவனை விளித்தும் ஏழாய் என்றும், நீசா என்றும், இகழ்ந்தும் வைது ரைத்த வசை மொழிகளால் வெஞ்சினம் கொண்ட இராவணன், சீதாதேவியைத் தீண்டிக் கொன்று விடுவானே என்ற எண்ணம் அஞ்சனை மைந்தனாகிய அனுமானின் உள்ளத்தில் இடம் பெற்று விட்டது.

அங்ஙனம் அஞ்சிய அனுமான் வெஞ்சினம் கொண்ட கொடி யோனாகிய இராவணன் சீதாதேவியைத் தீண்டுவதன்முன் அவனைத் தன் கால்களினால் உதைத்து வருத்த எண்ணினான்.

> என்னை ஆளுடை நாயகன் தேவியை என்முன்
> சொன்ன நீசன்கை தொடுவதன் முன்
> துகைத்து உழக்கி பின்னைநின்றது செய்குவென்
> என்பது பிடித்தான்

என அனுமான் எண்ணிய எண்ணத்தை அப்படியே கம்பர் படம் பிடித்துக் காட்டுகின்றார். கோப வெறியால் இராவணன் சீதாதேவியைக் கொல்வதன் முன் அவனை உதைத்து வருத்தித் தடுக்க வேண்டுமென உள்ளம் துடிக்கின்ற அனுமானுடன் கம்பரும் சேர்ந்து கலங்குவது போன்ற உணர்ச்சியை இச்செய்யுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கள் காட்டுகின்றன: இராவணன் மனத்தில் எழுந்த வெஞ்சினத்தை அடுத்த கணத்தில் அவன் மனத்தில் நின்றெழும் காம உணர்ச்சி தடுத்துவிடும் என்பதை அறியாத அனுமன், நெஞ்சம் துடிக்கின்றான் என்பதை உணர்கின்றோம்.

என்னை ஆளுடை நாயகன் தேவி என்றும், அருந்ததிக் கற்பினள் என்றும் அனுமான் இராமபிரானையும சீதாதேவியையும் பாராட்டி உரைக்கின்ற மொழிகளிலிருந்து அவன் இராம பிரானிடத்திலும் சீதாதேவியாரிடத்திலும் கொண்ட பேரன்பையும் பெருமதிப்பையும் உணர்கின்றோம்.

ஊசலாடும் அனுமனின் உள்ளம்

140. தனியனின்றனன் றலைபத்துங் கடிதுகத் தாக்கிப்
பனியின் வேலையி லிலங்கையைக் கீழுறப்
பாய்ச்சிப்
புனித மாதவத் தணங்கினைச் சுமந்தனன்
போவென்
இனிது னென்பது நினைந்துதன் கரம்பிசைந்
திருந்தான்.

கொண்டுகூட்டு: தனியன், நின்றனன் தலை பத்தும் கடிது உகத்தாக்கி, இலங்கையை பனியின் வேலையின் கீழ் உறப்பாய்ச்சி; புனித மாதவத்து அணங்கினைச் சுமந்தனன் இனிது போவென் என்பது நினைந்து தன்கரம் பிசைந்து இருந்தான்.

பொருள்

தனியன் - துணையற்றுத் தனியாக நிற்கும் நானொருவனே, நின்றனன் - சீதாதேவியின் முன் சினத்தோடு நிற்கின்றவனான இராவணனுடைய, தலைபத்தும் - பத்துத் தலைகளையும், கடிது உக - விரைந்து சிந்துப்படி (சிதறும்படி) தாக்கி - அடித்து, இலங்கையை - இலங்கை மாநகரினை, பனியின் வேலையின்கீழ் - குளிர்ச்சி பொருந்திய கடலின் அடியிலே, உறப்பாய்ச்சி - அழுந்தும்படி செலுத்தி (வீழ்த்தி) புனிதமாதவத்து - தூய்மைபொருந்திய பெருந் தவத்தையுடைய, அணங்கினை - தெய்வப் பெண் போன்றவளான சீதாதேவியை, சுமந்தனன் - என் தோள்மேல் தாங்கிக்கொண்டு, இனிது போவென் - ஓர் இடையூறுமின்றிச் செல்வேன், என்பது நினைந்து - என்பதை (என்னும் இவற்றை) எண்ணியவனாய், தன் கரம் பிசைந்து இருந்தான் - தன் கைகளைப் பிசைந்து கொண்டு இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

துணையற்றுத் தனியாக நிற்கும் நாளொருவனே சீதாதேவியின் முன், சினத்தோடு நிற்கின்ற இராவணனின் பத்துத்தலைகளும் சிதறி விழும்படி அடித்து, இந்த இலங்கை மாநகரையும் ஆழ்கடலில் அமிழ்த்தி, தூய்மை பொருந்திய பெருந்தவத்தையுடைய தெய்வப் பெண்போன்ற சீதாதேவியை என் தோளின் மேல் தாங்கிக்கொண்டு ஓர் இடையூறுமின்றி ஏகுவேன் என எண்ணிய அனுமான் தன் கைகளைப் பிசைந்துகொண்டிருந்தான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணனின் பத்துத் தலைகளும் நிலத்தில் சிதறி விழும்வண்ணம் அடித்து இலங்கை மாநகரையும் கடலின் கண் வீழ்த்திச் சீதாதேவியைத் தன் தோளின்மேல் எடுத்துச் செல்ல எண்ணுகின்ற அனுமானின் உள்ளத் துடிப்புச் சொல்லப் படுகின்றது.

அனுமான் இராவணனைக் கொன்று இலங்கையையும் கடலில் வீழ்த்திச் சீதாதேவியைத் தன் தோள்களில் சுமந்து இராம பிரானிடம் செல்லலாமோவெனச் சிந்திக்கின்றான்; இங்ஙனம் சிந்தித்த அனுமான் இராமபிரான் தான் இராவணனை அழித்து அறநெறியை நிலைநாட்டுவதாக அருந்தவ முனிவர்களிடம் அருளிய மொழிகளை நினைத்தான். நினைத்த அனுமான் தான் இராவணனைக் கொன்று இலங்கையையும் அழித்துச் சீதாதேவியை மீட்டுச் செல்லுதல் இராமபிரானின் பெருமைக்குக் குறைவாகுமோ என அஞ்சினான். இங்ஙனம் ஒரு நிலைப்படாது ஊசலாடும் உள்ளத்துடன் இருந்த அனுமானின் நிலையை

நினைந்து தன் கரம் பிசைந்திருந்தான்

எனக் கம்பர் எடுத்துக் காட்டுகின்றார்.

முன் செய்யுளில் சீதாதேவியை நீசனுகிய இராவணன் தொடுவதன் முன் அவனை உதைத்து வருத்திப் பின் ஆகவேண்டியவற்றைச் செய்வேனென்று அனுமான் நினைந்த செயலைக் கூறிய கம்பர் இச் செய்யுளில் தனியனை தாள் ஒருவனே சீதாதேவியின் முன்னர் சினத்துடன் நிற்கும் இராவணனுடைய தலைகள் பத்தும் சிதறி விழும்வண்ணம் தாக்கி இலங்கையையும் கடலில் அழுத்திச் சீதாதேவியையும் சுமந்து இனிது செல்வேன் என அனுமான் எண்ணிய எண்ணத்தையும் கூறுகின்றார் என்பதை உணர்ந்தோம். இதனால், தான் இராவணனைக் கொல்லலாமோ வென்றும், அங்ஙனம் தான் கொல்லுதல் இராமபிரானின் பெருமைக்குக் குறைவாகுமோவென்றும் எண்ணி யெண்ணி ஊசலாடும் உள்ளத்துடன் கையைப் பிசைந்தவண்ணமாயிருக்கின்ற அனுமானின் உளநிலையை அப்படியே எம் உள்ளத்தில் பதிக்கின்ற கம்பரின் புலமை ஆற்றலைக் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 சினந்தணிந்த இராவணன் சீதாதேவிக்குச் செப்புகின்ற சிந்தனையுரைகள்

[141 – 150 செய்யுள்]

சீதாதேவி வைதுரைத்த வசைமொழிகளைக் கேட்டு, வெஞ் சினங் கொண்ட இராவணன், அடுத்த கணப் பொழுதில் காம உணர்ச்சியினால கவரப்பட்டான். ஊழித்தீயைப்போல இராவ ணன் உள்ளத்தில் மூண்ட கோபக்கனல், அவன் சீதாதேவியின் மேற் கொண்ட காமவேட்கை யென்னும் பெருவெள்ளத்தினால் அவிந்து விட்டது. சீதாதேவியைப் பிளந்து தின்பேனெனச் சீறிய இராவணன் அவளைத் தன் காமவேட்கைக்குப் பலியாக்க வேண் டுமென்ற எண்ணத்தினால் ஆறிவிட்டான். ஆறிய இராவணன் சீதாதேவியை நோக்கிப் பின்வருமாறு அறைகின்றான்.

பெண்ணே! உன்னைக் கொல்வதாகக் கோபித்தெழுந்தே னென்றாலும், இப்பொழுது உன்னைக் கொல்லமாட்டேன். நான் முன்னர் உன்னிடங் குறித்துக் கூறிய கால எல்லை இன்னும் கடந்துவிடவில்லை. நீ என் மீது ஏற்றிக்கூறிய குறைகளுக்கெல் லாம் தக்க காரணங்கள் கூறி விளக்கப் போகின்றேன். தக்க காரணங்களைக் காட்டினால்தான் என்னுடைய பெருமையை உணர்ந்து திருந்துவாய். இவ்வுலகில் எனக்குச் செய்யமுடியாத செயல் என்றும் செய்யக் கூடிய செயல் என்றும் ஒன்றில்லை; முன்னாளில் யான் வாலியினாலும் கார்த்தவீரியனாலும் வெல்லப் பட்ட செயல்கள் எல்லாம் விளையாட்டாக நிகழ்ந்தனவாகும்.

உன்னருயிர்க் கணவனாகிய இராமனைக் கொன்று உன்னைக் கவர்ந்து வருதலாகிய செயலை ஆற்றினால் நீ ஆவிவிடுத்திருப் பாய். நீ ஆவிவிட்டவுடன் என்னருயிரும் அகன்றிருக்கும். இவற் றையெல்லாம் எண்ணித்தான் வஞ்சனை வழியாக உன்னைக் கவர்ந்து வந்தேன் என்பதை உணர்வாயாக. போரில் என்னை வெல்ல ஆரிருக்கிறார்கள். தேன்மொழியாய்! நான் விடுத்த மாரீ சனாகிய மாயமானை உண்மை மானென நம்பி உன்னை விட்டுச் சென்ற அறிவிலிகளாகிய இராம இலக்குமணர்கள், மானை விட்டுத் திரும்பி வந்து, சீதையைக் கவர்ந்து சென்றவன் இராவ ணனாகிய நான் என்பதைத் தெரிந்தால், என்னுடன் போர் புரிந்து உன்னை மீட்க வரமாட்டார்கள். மனிதர்களிலும் இறந்த வானவர்களும் சீதையைக் கவர்ந்தவன் எம் தலைவனாகிய இரா வணன் என்றறிந்தால் வந்துனக்குதவமாட்டார்கள். என்னு டன் மாறுபட்டு உன்னை மீட்க மற்றெவர் வரப்போகின்றார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்மையான தோள்களை உடையவளே! என்னை வென்ற வர்களாகிய வாலியும், கார்த்தவீரியனும் வாழ்ந்து கொண்டிருக் கவும், யாவர்க்கும் மேலானவர்களாயும் அழிவற்றவர்களாயும் இருக்கின்ற அமரர்கள் இருக்கவும், அமரர்க்கரசனாகிய இந்திரன் எனக்கடங்கி ஏவல் செய்ய மூவுலகையும் ஒருசேர ஆட்சி புரியும் முதன்மையாளன் நான் ஒருவனே என்றால், வேறு என்ன காரணங்கள் கூறவேண்டும். குற்றமில்லாதவளே! அற்பத்தன்மையும், அற்பவலிமையும் அற்பச்செயல்களையும் உடைய மனிதர் களின்மேல் குற்றமற்ற வீரத்தோடு பொருந்திய கோப உணர்ச்சி எனக்குத் தோன்றுதென்றாலும் இப்பொழுதே இராம இலக்குமணர்கள் இருக்கும் இடத்திற்கு ஏகி, அவர்களிருவரையும் ஒரு கையினால் பிடித்துக் கொண்டு வரும் என் வீரப்பண்பை உணர் வாயாக.

பைந்தொடி! புல்லின் தன்மை பொருந்திய அற்பமனிதர் களே இராம இலக்குமணர்கள். ஆனாலும், உன்னைக் கொண்டு வந்து, எனக்குக் கொடுத்த பேருதவியை எண்ணிப் பார்த்தால் அவர்கள் என்னாற் கொல்லக்கூடியவர்களல்லர் என்பதை உணர் வாயாக. அந்த அற்ப இராம இலக்குமணர்கள் அழியவேண்டு மென நீ விரும்புவாயானால் அதனை ஆராய்ந்து அச்செயல் உனக்காக்கம் தருமெனக் கண்டதும் அவர்களைக் கொல்கின்றேன். இங்ஙனம் இராம இலக்குமணர்களைக் கொல்வதுடன் நில்லாது, அயோத்தி நகரை அடைந்து, அங்குள்ள பரதன் முதலானோ ரையும் கொன்று, பின் வெள்ளமான நீரையுடைய மிதிலைமா நகரஞ் சென்று, அங்குள்ளோரை வேருடன் அழித்துப் பின் இங்கு வந்து உன்னையும் உயிர் போக்குவேன் என்பதை நீ இன் னும் உணர்ந்திலையோ? என்றெல்லாம் சீதாதேவியை அச்சுறுத் திய இராவணன் மீண்டும் சினத்துடன் தன் கையில் விளங்கும் வாளைப் பார்த்த வண்ணம், நீ என் எண்ணத்துக்கு இணங்கா விட்டால், உன்னைக் கொல்லக் குறித்த நாட்களும் இரண்டுமாத காலத்துள் மெல்லத் தேய்ந்தொழிந்துவிடும். அதன்பின் உனக் குறுவதை நீயே உணர்ந்து கொள்வாயாக எனப் பலவாறு கூறிச் சீதாதேவியை அதட்டி உரைத்துக் கொண்டும். தன் மனத்தில் சீதாதேவியை நினைத்த வண்ணமாகவே (நீசனாகிய இராவணன்) சென்றான்:

கோபத்தை வென்ற காமம்

141. ஆண்ட வாளரக் கன்னகத் தண்டத்தை
யழிப்பான்
மூண்ட காலவெந் தியென முற்றிய சீற்றம்
நீண்ட காமநீர் நீத்ததத்தி னவிவுறு நிலையின்
மீண்டு நின்றிருரு தன்மையா னிலையிலை
விளம்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: ஆண்டு அவ் வாள் அரக்கன் அகத்து அண்டத்தை அழிப்பான் மூண்ட காலவெம் தீ என முற்றிய சீற்றம், நீண்ட காமநீர் நீத்தத்தின் (நீற்றத்தினல்) அவி உறு நிலையில் மீண்டு நின்று ஒரு தன்மையால் இவை இவை விளம்பும்.

பொருள்

ஆண்டு - (இராவணன் உள்ளத்தில் மேற் கூறியவண்ணம் காமமும் கோபமும் முற்றி நின்ற) அப்பொழுது, **அவ்வாள் அரக்கன்** - அந்த வாளைப்போன்ற கொடிய, அரக்கனுகிய இராவணனுடைய, **அகத்து** - மனத்தின்கண், **அண்டத்தை அழிப்பான்**-உலகத்தை அழிக்கும் பொருட்டு, **மூண்ட**-கிளர்ந்தெழுந்த, **காலவெம் தீ என** - கொடிய பிரளயகாலத் தீயைப்போல, (காலாக்கினி போல) **முற்றிய சீற்றம்** - முதிர்ந்தெழுந்த சினமென்னும் நெருப்பானது, **நீண்டகாமநீர் நீத்தத்தின்** - பெரிய காமமாகிய நீர்ப்பெருக்கினல், **அவி உறு நிலையில்** - அணைந்து அழிந்துபோன நிலையினல், **மீண்டு நின்று**-திரும்பவும் தன் காம உணர்ச்சியைப் பெற்று நின்றமையால் ஏற்பட்ட, **ஒரு தன்மையால்** - கோபம் நீங்கிக் காமம் மிகுந்த ஒரு நிலையினல் (ஒரு வழியாக மாற்றமின்றி நிலைபெற்ற காமத்தால் என்பதாம்) **இவை இவை விளம்பும்** - பின் வருகின்றனவாகிய இவற்றைக் கூறுவானுயினன்;

பொழிப்பு

இராவணன் உள்ளத்தில் மேற்கூறிய வண்ணம் காமமும் கோபமும் முற்றி நின்ற அப்பொழுது அக்கொடிய அரக்கனுகிய இராவணனுடைய மனத்தின்கண் பிரளயகாலத் தீயைப்போல மூண்டெழுந்த சினமென்னும் நெருப்பானது அவன் உள்ளத்தில் நிலைபெற்ற பெரிய காமமாகிய நீர்ப்பெருக்கினல் அணைந்து அழிந்துபோக, மீண்டும் காம உணர்ச்சியைப் பெற்று நின்றமையால் ஏற்பட்ட நிலையினல் கவரப்பட்டவனுய் நின்று பின் வருமாறு கூறினன் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணன் மனத்தின்கண் மூண்டெழுந்த கோபத் தீயானது அடுத்த கணப்பொழுதில் அவன் உள்ளத்தில் பெருகியெழுந்த காமநீர் என்னும் வெள்ளத்தினல் அவிந்தடங்கிய நிலைமை சொல்லப்படுகின்றது.

இராவணன், தன்னைச் சீதாதேவி வைதுரைத்த வசை மொழிகளைக் கேட்டவுடன் அவள் மேற் கொண்ட காமத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் மறந்து கோபம் மிக்கவனுய்க் கொதித்தெழுந்தான் என அஞ்சி அஞ்சிக் கூறிய கம்பர், அதே கணப்பொழுதில் அவன் உள்ளத்தில் மீண்டும் எழுந்த காம உணர்ச்சியானது அக்கோப உணர்ச்சியை அடக்கி அடிமைப் படுத்திவிட்டது என்னும் உண்மையை மிக ஆர்வத்துடன் கூறுகின்ருர்.

மூண்ட காலவெம் தீயென முற்றிய சீற்றம்
நீண்ட காமநீர் நீத்தத்தின் அவிவுறு நிலையின்
மீண்டு நின்று ஒரு தன்மையால் இவை இவை
விளம்பும்

எனக் கம்பர் கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஆர்வத்தோடு கலந்த பெருமிதத்துடிப்புச் சீதாதேவி, சினம் கொண்டெழுந்த இராவணனல் கொல்லப்படாமல் தப்பிவிட்டாள் எனச் சொல்லிச் சொல்லி எப்மை மகிழ்விக்கின்ற உள்ளச் செழிப்பைக் காட்டுகின்றது.

எனவே, இராவணனின் உள்ளம் சீதாதேவியின் மேற் கொண்ட காமவேட்கையால் அள்ளுப்பட்டு வீர உணர்ச்சி கோப உணர்ச்சி என்பவைகள் மிக்கெழுந்து நீண்டநேரம் நிலைபெறுத நிலைமை அடைந்து விட்டதென்பதை அறிகின்ருேம். இச் செய்யுளில்

காலவெம் தீயென முற்றிய சீற்றம்

என ஊழிகாலத் தீயை இராவணனின் கோபத்திற்கு உவமானமாகக் கம்பர் காட்டியுள்ளார்.

ஊழித்தி – உவமானம்; இராவணன் உள்ளத்தில் எழுந்த சீற்றம் – உவமேயம்; அழித்தலும், கொடுமை மிகுதியும் ஆருமையும் – பொதுத்தன்மைகளாகும்.

நீண்ட காமநீர் நீத்தத்தின் என்பதில் இராவணன் உள்ளத்தில் எழுந்த காமத்தை காமமாகிய நீர்ப் பெருக்கென உருவகம் செய்து கம்பர் உரைக்கின்ருர். ஊழிகாலத்தீயும் அவியும் வண்ணம் பெருகி வருகின்ற பெரு வெள்ளமாகிய காமமென்பது பொருளாகும்; எனவே இராவணன் உள்ளத்தில் எழுந்த கோப உணர்ச்சியினும் அவன் உள்ளத்தில் எழுந்த காம உணர்ச்சி ஆற்றல் கூடியதென்பதைக் காட்ட விரும்பிய கம்பர் ஊழிகாலத் தீயைப்போன்ற கோபமெனக் கோபத்தை உவமையாக்கியும், காமமாகிய நீர்ப் பெருக்கென காமத்தை உருவகமாக்கியும் கூறியுள்ளார் என்பதை உணர்கின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைக் கொல்கிலேன்

142. கொல்வனென் றுடன்றே னுன்னைக்
கொல்கிலேன் குறித்துச் சொன்ன
சொல்லள வவற்றுக் கெல்லாங்
காரணந் தெரியச் சொல்லின்
ஒல்வதீ தொல்லா தீதென்
றெனக்குமொன் றுலகத் துண்டோ
வெல்வதுந் தோற்ற றானும்
விளையாட்டின் விளைந்த மேனாள்

கொண்டுகூட்டு: உன்னைக் கொல்வென் என்று உடன்றேன், குறித்துச் சொன்ன சொல் அளவும் (உன்னைக்) கொல்கிலன், அவற்றுக்கு எல்லாம காரணம் தெரியச் சொல்லின் எனக்கும் உலகத்து ஈது ஒன்று ஒல்வது ஈது ஒன்று ஒல்லாது என்று உண்டோ? வெல்வதும் தோற்றல்தானும் மேல் நாள் விளையாட்டின் விளைந்த.

பொருள்:

உன்னை - (என் கருத்திற்கு உடன்படாத) உன்னை, **கொல்வென் என்று உடன்றேன்**-உன்னைக் கொன்றிடுவேனென்று சினம் கொண்டேன், **குறித்துச் சொன்ன**-(நீ என் கருத்தை ஏற்று உடன்படுதற்கு) வரையறுத்துச் சொல்லிய, **சொல் அளவும்**-சொல்லாற் குறித்தகாலம் வருமளவும், **(உன்னைக்) கொல்கிலன்** - உன்னைக் கொல்லமாட்டேன், **அவற்றுக்கு எல்லாம்**-நீ கூறிய என் தோல்வி முதலியவற்றுக்கெல்லாம் (வாலி, கார்த்தவீரியன் என்பவருக்கு யான் தோற்றதன் காரணங்களையெல்லாம்) **காரணம்** - காரணத்தை, **தெரியச் சொல்லின்** - விளங்கும்படி சொல்வதானால், **எனக்கும்**-இராவணனுகிய எனக்கும், **உலகத்து**-இவ்வுலகத்தில், **ஈது ஒன்று ஒல்வது**-இத்தொழில்தான் எளிதில் செய்தற்குரியது, **ஈது ஒன்று**-இத்தொழில்தான், **ஒல்லாது**-செய்ய முடியாதது, **என்று**-என்று சொல்லக்கூடியவை, **உண்டோ**-உள்ளதோ, **வெல்வதும்**-நான் வெற்றியடைந்ததும், **தோற்றல்தானும்**-நான் தோல்வியடைந்ததும், **மேல்நாள்**-அக்காலத்தில், **விளையாட்டின் விளைந்த**-விளையாட்டாகவே நேர்ந்தன.

பொழிப்பு

என் கருத்திற்கு உடன்படாத உன்னைக் கொன்றிடுவேன் என்று சீற்றம் கொண்டேன். நீ என் கருத்தை ஏற்று உடன்படுதற்காக யான் முன்னர் வரையறுத்துச் சொல்லிய காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமளவும் உன்னைக் கொல்லமாட்டேன். நீ என்மேல் ஏற்றிக் கூறிய தோல்வி முதலியவற்றிற் கெல்லாம் உள்ள காரணங்களை யெல்லாம் எடுத்து விளக்கிச் சொன்னால் இவ்வுலகத்தில் எனக்கும் செய்ய எளிதாவது இது செய்ய முடியாதது இது என்று ஒன்று உள்ளதோ, முன்னாளில் நான் வெற்றியடைந்ததும் தோல்வியடைந்ததும் விளையாட்டாகவே நேர்ந்தன என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியைக் கொல்லத் துணிந்த இராவணன் தான் கொல்லாது விடுதற்குரிய காரணத்தையும், சீதாதேவி தன்மேல் ஏற்றிக் கூறிய தோல்விகளுக் கெல்லாம் ஏற்ற காரணங்களையும் எடுத்துச் சொல்லுகின்ற குரலைக் கேட்கின்றோம்.

சீதாதேவியைக் கொல்லும் வண்ணம் சீறியெழுந்த இராவணன் அவள்மேல் கொண்ட காம வேட்கையால் தன் சினந்தணிந்து கொல்லாமல் விட்டதை மறைத்து இன்னுமோர் காரணம் அவளுக்குக் கூறுகின்றான்: சீதாதேவியை இராவணன் கவர்ந்து சிறைவைத்த பொழுது, ஓர் ஆண்டுக்குள் அவள் தன் கருத்தை ஏற்றுத் தன்னுடன் வாழவேண்டுமென்றும், அங்ஙனம் வாழத்தவறினால் ஓராண்டு முடிந்தவுடன் அவளைக் கொல்வதாகவும் கூறினான் என் வால்மீக இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளது. (இதனை வான்மீக இராமாயணத்தில், சுந்தரகாண்டம் 22-ம் சருக்கத்திலுள்ள 8-ம் சுலோகத்தில் காண்க)

உன்னைக் கொல்கிலென் குறித்துச் சொன்ன சொல் அளவு

என இராவணன் சீதாதேவியிடம் கூறுகின்ற உரைகள் மேற் கூறிய கருத்தை நிலைநாட்டுதல் காண்க.

இங்ஙனம் சீதாதேவியைக் கொல்லாது விட்டதற்குக் காரணம் சொல்லிய இராவணன் அவள் தன்மேல் ஏற்றிக் கூறிய தோல்விகளுக்கெல்லாம் தக்க சான்றுடன் காரணம் கூறப்போவதாகச் சொல்லுகின்றான்.

அவற்றுக் கெல்லாம் காரணம் தெரியச்
சொல்லின்
ஒல்வது ஈது ஒல்லாது ஈது என்று
எனக்கும் ஒன்று உலகத்து உண்டோ

என இராவணன் கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஓசைப் பெருக்கு, சீதாதேவி தன்மேல் ஏற்றிக்கூறிய தோல்விகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெல்லாம் தக்க காரணம் காட்டப் போகின்றான் என்னும் உணர்ச்சியை எமக்கும், உண்டாக்குகின்றது. நேரில் வந்து இராம இலக்குமணருடன் போர் செய்தற்கஞ்சியே வஞ்சன மான் ஒன்று ஏவி அவர்களைப் பிரியும் வண்ணம் சூழ்ச்சி செய்து என்னைக் கவர்ந்து வந்தாய் என்றும், கழுகின் வேந்தனாகிய சடாயுவினால் அடியுண்டு தரையில் வீழ்ந்தாயென்றும், கார்த்த வீரியனுக்குத் தோற்றுச் சிறையில் அடைபட்டாயென்றும் சீதா தேவி சொன்னவற்றுக்கெல்லாம் தக்க காரணங்கள் காட்டித் தன் மேம்பாட்டை நிலைநிறுத்த இராவணன் கருதுகின்றான் என்பதை இதனால் உணர்கின்றோம்.

வெல்வதும் தோற்றல் தானும்
வினையாட்டின் வினைந்த மேல் நாள்

என இராவணன் கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஓசை அவன் உள்ளத்தில் நிலவுகின்ற தற்பெருமையைக் காட்டுகின்றது: கார்த்தவீரியனுக்கும் வாலிக்கும் தான் தோற்ற செயல்களெல்லாம் விளையாட்டாக நிகழ்ந்தன என விளம்பிச் சீதாதேவியின் மனத்தை மயக்க இராவணன் முயலுகின்றான் என்பதை உணர்க;

வஞ்சனை செய்ததன் காரணம்

143. ஒன்றுகே ளுரைக்க நிற்கோ ருயிரென
வுரியோன் றன்னைக்
கொன்றுகோ ளிழைத்தா னீநின் னுயிர்விடிற்
குற்றங் கூடும்
என்றனை ருயிரு நீங்கு மென்பதை யியைய
வெண்ணி
அன்றுநான் வஞ்சஞ் செய்த தாரெனக்
கமரி னேர்வார்

கொண்டுகூட்டு: ஒன்று உரைக்கக் கேள்: நிற்கு ஓர் உயிரென உரியோன் தன்னை, கொன்று கோள் இழைத்தால் நின் உயிர் நீ விடின் குற்றம் கூடும், என் தன்) ஆருயிரும் நீங்கும் என்பதை (நான்) இயைய எண்ணி, அன்று நான் வஞ்சம் செய்தது; அமரில் எனக்கு நேர்வார் யார்.

பொருள்

ஒன்று உரைக்கக்கேள் - நான் ஒரு செய்தி சொல்கின்றேன் கேட்பாயாக, நிற்கு - உனக்கு, ஓர் உயிரென - ஒப்பற்ற உயிரென்று சொல்லத்தக்க தலைவனும், உரியோன் தன்னை - உரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனை இராமபிரானை, கொன்று - கொலைசெய்து, கோள் இழைத்தால் - (நான் உன்னை) கவர்ந்து கொண்டுவந்தால் (கவர் தலைச் செய்தேனையின்), நின் உயிர் நீ விடின்-(அத்துன்பத்தைத் தாங்கமாட்டாமல்) உன் உயிரை நீ விட்டுவிடுவாய், குற்றம் கூடும் - (அங்ஙனம் நீ உயிரை விடுவதினால்) பிழை மிகுந்துவிடும், என் ஆருயிரும் - எனது பெறுதற்கரிய உயிரும், (நீ உயிர்விட்ட அப்பிழையினைத் தாங்கமாட்டாமல்) நீங்கும் - நீங்கிவிடும், என் பதை-என்ற காரணங்களை, (நான்) இயைய எண்ணி-பொருந்த ஆராய்ந்து (ஆராய்ந்தேதான்), அன்று - அக்காலத்தில் (நீ இராமலக்குமணருடன் வனத்தில் இருந்த அக்காலத்தில் அவர் கள் உன்னை விட்டுப்பிரிந்து செல்லும் வண்ணம்) நான் வஞ்சம் செய்தது - நான் உன்னை வஞ்சனையாகக் கவர்ந்து வந்ததாகும், அமரில் - போரில், எனக்கு நேர்வார் - என்னுடன் எதிர் நிற்க வல்லவர், யார் - யார் இருக்கின்றார்கள்;

பொழிப்பு

நான் ஒரு செய்தி சொல்லுகின்றேன் கேட்பாயாக, உனக்கு ஒப்பற்ற உயிரென்று சொல்லத்தக்க இராமனைக் கொலை செய்து யான் உன்னைக் கவர்ந்து கொண்டுவந்தால் உன் தலைவனை இழந்த துன்ப மிகுதியால் நீ உன் உயிரை விட்டுவிடுவாய்: அங்ஙனம் உயிரை நீ விடுவதினால் பிழை மிகுந்துவிடும்; நீ உயிர் விடுவதைத் தாங்கமுடியாத யான் என் உயிரையும் விட்டுவிடுவேன் என்பதைப் பொருந்த ஆராய்ந்துதான் உன்னை வஞ்சனையாகக் கவர்ந்து வந்தேன் என்பதை உணர்வாயாக: என்னை எதிர்த்துப் போர் புரியக்கூடியவர்கள் யார் இருக்கின் றார்கள் என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் இராம இலக்குமணரைப் எதிர்த்துப் போர் செய்ய அஞ்சித்தானே நீ என்னை வஞ்சனையாகக் கவர்ந்து வந்தாயென்று சீதாதேவி, தன்னை இகழ்ந்து கூறியதை மறுத்து ஏற்றவிடை கூறுகின்ற இராவணனின் எழுச்சிச் குரலைக் கேட் கின்றோம்.

இராம இலக்குமணர்கள் என்னை வென்றுவிடுவார்கள் என்று அஞ்சித்தான் வஞ்சனைமான் ஒன்று ஏவி அவர்களைப் பிரித்து உன்னைக் கவர்ந்து வந்தேனென நீ வழுத்திய மாற்றங்கள் மிகப் பொருத்தமற்றவையாகும்: உன் ஆருயிர்த் தலைவனுகிய இரா மனை உன் கண்களாணக் கொன்று உன்னை நான் கவர்ந்து வரு வேனுனல் துன்ப மிகுதியால் நீ உன் உயிரைத் துறந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய். நீ உயிர் துறந்தபின் உன்மீது தீராத காதல்கொண்ட நான் என் உயிரையும் துறந்துவிடுவேன் என்பதை எண்ணித் தான் உன்னை வஞ்சனையாகக் கவர்ந்து வந்தேனெனக் கூறுகின்ற இராவணனின் வல்லமைப்பாடான மாற்றங்களைக் கேட்கும் பொழுதே உண்மைதானேவென எமது உள்ளமும் எண்ணுகின்றது.

நிற்கு ஓர் உயிரென உரியோன் தன்னை
கொன்று கோள் இழைத்தால் நீ நின் உயிர்
விடின் குற்றம் கூடும்
என்றன் ஆருயிரும் நீங்கும்

என இராவணன் கூறுகின்ற வல்லமைப்பாடான உரையை மனத்தில் எண்ண எண்ண சொல்லமுடியாத வியப்புத் தோன்றுகின்றது.

என்பதை இயைய எண்ணி
அன்று நான் வஞ்சம் செய்தது
ஆர் எனக்கு அமரில் னேர்வார்

என இராவணன் தன்னை வியந்து கூறுகின்ற மாற்றங்களை நோக்கும்பொழுது உண்மையில் இராமபிரானைக் கொன்றால் சீதாதேவியும் இறந்துவிடுவாள் என எண்ணித்தான் வஞ்சனையாக அவளைக் கவர்ந்து வந்தானே என்றெண்ணத்தக்கதாக இருக்கின்றது.

என்னெடு இங்கு ஒரு வயிற்று உதித்து உனக்கு
மானுடர் வலியராம் தகைமையும் உளதோ

என இராவணன் வாலியையும், கரன் முதலியோரையும் இராமபிரான் கொன்ற செய்திகளைத் தான் அறிந்தபின்பும், வியப்புடனுடன் இகழ்ந்து கூறும் இம்மாற்றங்கள் இதனை வலியுறுத்துதல் காண்க.

இங்ஙனம் இராவணன் கூறிய காரணங்களை இராமபிரானின் வில்லாற்றலையும், ஆண்மையையும் நேரிற்கண்ட சீதாதேவி எட்டுணையும் ஒப்புக்கொள்ளாளென்பது திண்ணமாகும்.

நான் என்பது அறிந்தால் வாரார்

144. மானென்ப தறிந்துபோன மானிட ராவார்
மீண்டு
யானென்ப தறிந்தால் வாரா ரேழைமை
யெண்ணிநோக்கல்
தேனென்ப தறிந்த சொல்லாய் தேவர்தாம்
யாவரேயெங்
கோனென்ப தறிந்து பின்னைத் திறம்புவார்
குறையி னல்லால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: தேன் என்பது அறிந்த சொல்லாய், மான் என்பது அறிந்து போன மானிடர் ஆவார் மீண்டு யான் என்பது அறிந்தால் வாரார், தேவர் தாம் எம் கோன் என்பது அறிந்து குறையின் அல்லால் பின்னைத் திறம்புவார் யாவர்? ஏழைமை எண்ணி நோக்கல்.

பொருள்

தேன் என்பது-தேனைப்போல் இனிமை, அறிந்த சொல்லாய்-பயின்ற சொல்லையுடையாய், மான் என்பது - மாரீசன் மாய மானுனுன் என்று அறியாது, அறிந்து போன - உண்மையான மானென்றே கருதி அதனைத் தொடர்ந்து சென்ற அறிவிற் குறைந்தவர்களாகிய, மானிடர் ஆவார் - மனிதராகிய இராம இலக்குமணர்கள், மீண்டு - (மாரீசனுற்றிய மாயத்தினின்றும் விடுபட்டுத்) திரும்பி நீயிருந்த இடத்திற்கு வந்து, யான் என்பது அறிந்தால் - (உன்னைக் கவர்ந்து சென்றவன்) இராவணனுகிய நான் என்பதைத் தெரிந்து கொண்டால், வாரார் - (உன்னை மீட்கும் பொருட்டு என்னுடன் போர் செய்ய) வரமாட்டார்கள் (அந்த இராம இலக்குமணர்களேயன்றி) தேவர் தாம் - அவர்களிற் சிறந்த தேவர்களும், எம்கோன் என்பது - (சீதையைக் கவர்ந்து சென்றவன்) எங்கள் தலைவனுகிய இராவணன் என்பதை, அறிந்து-அறிந்தார்களானுல், குறையின் அல்லால் - (மனத்துள் எண்ணி யெண்ணித்) தம் ஆற்றல் அழிவதன்றி, பின்னை - அதன் மேல், திறம்புவார் - என்னுடு மாறுபட்டுப் போருக்கு எழுபவர், யாவர் - அத்தேவர்களில் யார் இருக்கின்றூர்கள், (ஒருவரும் இல்லை என்பதாம்) எண்ணி நோக்கல் - இராம இலக்குமணர்கள் உன்னை மீட்க வருவார்களென நினைத்து நீ எதிர்பார்த்திருத்தல், ஏழைமை-அறியாமையாகும்.

பொழிப்பு

தேன் போல் இனிமை பயின்ற சொல்லையுடையாய்! மாரீசன் மாயமானுக வந்தான் என்பதை அறியாது அதனை உண்மை மானென்றே தொடர்ந்து சென்ற அறிவிற் குறைந்த மானுடர்களாகிய இராம இலக்குமணர்கள் மாரீசன் ஆற்றிய மாயையில் விடுபட்டுத் திரும்பி நீ இருந்த இடத்திற்கு வந்து உன்னைக் கவர்ந்து சென்றவன் நான் என்பதை அறிந்தார்களானுல், உன்னை மீட்கும் வண்ணம் என்னுடன் போர் செய்ய வரமாட்டார்கள். இந்த இராம இலக்குமணர்களேயன்றி அவர்களிலும் சிறந்த தேவர்களும் சீதையைக் கவர்ந்தவன் தங்கள் தலைவனுகிய இராவணன் என்பதை அறிந்தார்களானுல் மனம் அழிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்துவதல்லாமல் என்னுடன் மாறுபட்டுப் போர் செய்ய அத் தேவர்களுள் யார் இருக்கின்றார்கள். எனவே உன்னை இராம இலக்குமணர்கள் மீட்கவருவார்களென நீ எண்ணி எதிர் பார்த் துக்கொண்டிருத்தல் அறியாமையாகும் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் உன்னைக் கவர்ந்து வந்தவன் நான் என்பதை இராம இலக்குமணர்கள் அறிந்தால் என்னை வென்று உன்னை மீட்கும் வண்ணம் ஒருபோதும் இங்கு வரமாட்டார்கள் எனவும், அந்த இராம இலக்குமணர்களிலும் சிறந்த அமரர்களும் என்னை எதிர்த்து வெல்லமாட்டார்கள் எனவும் சீதாதேவியிடம் செப் புகின்ற இராவணனின் பெருமிதக் குரலைக் கேட்கின்றோம்.

தன் ஆருயிர்த் தலைவனாகிய இராமபிரான், இராவணனை வென்று தன்னை மீட்டுச் செல்வானென எண்ணியிருக்கின்ற சீதாதேவியின் மனத் திண்மையைக் குலைத்து, இராம இலக்கும ணர்சன் தன்னை எதிர்த்து வென்று உன்னை மீட்க வரமாட்டார் கள் எனச் சொல்லுகின்ற இராவணனின் வல்லமைப்பாடான மாற்றங்களை எண்ண எண்ண எமது உள்ளம் அஞ்சுகின்றது.

மான் என்பது அறிந்துபோன மானுடர் ஆவார்,
மீண்டு
யான் என்பது அறிந்தால் வாரார்

என இராவணன் கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஓசை, மானு டர்கள் மிக அற்பமானவர்கள். மூவரையும் தேவரையும் வென்று மூவுலகையும் ஒரு சேர ஆளுகின்ற முதன்மையாளனாகிய என் பெயரைக் கேட்டவுடன் மானுடர்களாகிய இராம இலக்குமணர் கள் அஞ்சிவிடுவார்கள் என இராவணன் எண்ணுகின்ற நெஞ் சுத்துணிவை அப்படியே எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் மாரீசனே மாயமானாக வந்தான் என்பதைக் கூடச் சிந்தித் துணர முடியாத சிற்றறிவு பொருந்திய இராம இலக்குமணர் கள் என்னை எங்ஙனம் வெல்வார்களெனச் சொல்லாமல் சொல்லி இராவணன் இகழ்கின்றான் என்பதையும் தெளிகின் றோம்.

செங்கண்மால் நான்முகன் சிவன் என்றே கொலோ
எங்கள் நாயகனையும் நினைந்தது ஏழை நீ

எனச் சீதாதேவி மூவரிலும் மிக்கவன் இராமபிரான் என மொழிந்த மாற்றத்தை நினைந்த இராவணன் அங்ஙனம் மூவரி லும் மிக்கவன் என நீ கூறிய இராமன், மாரீசன்தான் மாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுக வந்தான் என்பதைக் கூட அறிய முடியாதவனுய் அல்லற்பட்ட அற்ப மானுடன்தானே எனச் சீதாதேவிக்குச் சொல்லி நகையாடுகின்றன் என்பதைத் தெளிகின்றோம்.

மான் என்பது அறிந்துபோன மானுடர்

என இராவணன் இகழ்ந்து கூறுகின்ற குரலிலே கலந்துள்ள இகழ்ச்சியை நோக்குக;

இங்ஙனம் அற்ப மானுடர்களாகிய இராம இலக்குமணர்கள் தன்பேரைக் கேட்டவுடன் அஞ்சி உன்னை மீட்க வரமாட்டார்கள் எனக் கூறிய இராவணன் அந்த இராம இலக்குமணர்களிலும் சிறந்த தேவர்கள் கூட என்னுடன் போர்செய்து உன்னை மீட்க வரமாட்டார்கள் எனச் சீதாதேவிக்குச் சொல்லுகின்றன்.

தேன் என்பது அறிந்த சொல்லாய் தேவர் தாம்
யாவரே எம்
கோன் என்பது அறிந்துபின்னை திறம்புவார்
குறையின் அல்லால்

என இராவணன் கூறுகின்ற குரல் அமரர்கள் தம் அரசனுகிய என் பெயரைக் கேட்டவுடன் அஞ்சி ஒடுங்கி நெஞ்சம் அழிந்து விடுவார்கள் என்பதை அப்படியே சீதாதேவியின் நெஞ்சத்தில் அழுத்தக்கூடிய ஆற்றலுடன் பொலிகின்றது.

தேவர்கள் இராவணனுக்கு அஞ்சி அடங்கியுள்ளார்கள் என்பதை;

தேவரும் அடங்கினர் இயக்கர் சிந்தினர்
நாவரும் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்
யாவரும் இறைவர் என்று இறைஞ்சும்
மேன்மையர்
மூவரும் ஒடுங்கினர் உனக்கு

என மகோதரன் இராவணனை நோக்கிக் கூறுவதாலும் உணர்க. இதனுல் இராம இலக்குமணர்களும் என்னை வென்று உன்னை மீட்க வரமாட்டார்கள். அந்த இராம இலக்குமணர்களிலும் சிறந்த தேவர்களும் என்னை எதிர்க்கமாட்டார்கள். நீ, இராம இலக்குமணர்கள் உன்னை வந்து மீட்பார்கள் என எண்ணியிருத்தல் மிக அறியாமையாகும். என்னை நீ ஏற்று வாழ்வதே தக்கது எனச் சீதாதேவியிடம் இராவணன் குறிப்பாகக் கூறுகின்றன் எனபதை உணர்க;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை ஏழையென்றும், நீசன் என்றும் வசைகூறி வஞ்சின மொழிகளால் வைத சீதாதேவியை தேன் என்பது அறிந்த சொல்லாய் என்று இராவணன் அழைக்கின்ற செயல் சிந்திக்கத் தக்கதாகும். இங்ஙனம் சீதாதேவியை மருட்டிக் கூறித் தன்வழிக்குத் திருப்பலாமென எண்ணுகின்ற இராவணனின் நிலை இரங்கத்தக்கதாகும்.

இனி, தேன் என்பது அறிந்த சொல்லாய் என்பதில் வரும் அறிதல் என்னும் சொல் பயிலுதல் எனப் பொருள் தந்து நிற்கின்றது; இதனை

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு

என வரும் திருக்குறளில் அளவறிந்தார் நெஞ்சம் என்பதற்கு அவ்வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து எனப் பரிமேலழகர் கூறும் உரையால் உணர்க.

உலகம் மூன்றும் ஆளும் ஒருவன்

145. வென்றேரு மிருப்ப யார்க்கு மேலவர் விளிவி
லாதோர்
என்றேரு மிருப்ப வன்றே யிந்திர னேவல்
செய்ய
ஒன்றேவிவ் வுலக மூன்று மாள்கின்ற
வொருவன் யானே
மென்றோளா யிதற்கு வேறோர் காரணம்
விரிப்ப துண்டோ.

கொண்டுகூட்டு: மென்தோளாய் யான், வென்றேரும் இருப்ப, யார்க்கும் மேலவர் விளிவு இலாதோர்-என்றேரும் இருப்ப, இந்திரன் ஏவல் செய்ய, ஒன்றே! இவ் உலகு மூன்றும் ஆள்கின்ற ஒருவன் யானே இதற்கு வேறோர் காரணம் விரிப்பது உண்டோ.

பொருள்

மென்தோளாய்-மெல்லிய தோள்களையுடையவளே, வென்றேரும்-என்னை வென்றவர் (என்று உன்னால் சொல்லப்பட்டவர்) களாகிய வாலி கார்த்தவீரியன் முதலியோர், இருப்ப-உயிருடன் வாழ்ந்திருக்கவும், யார்க்கும் மேலவர்-எல்லோர்க்கும் மேலானவரென்று சொல்லப்படுகின்றவர்களும், விளிவிலாதோர்-சாவு அற்றவர்கள், என்றேரும்-என்று சொல்லப்படுகின்றவர்களாகிய தேவர்களும், இருப்ப-இருக்கவும், இந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்களுக்கரசனுகிய இந்திரன், ஏவல் செய்ய - நான் ஏவிய பணிகளைச் செய்யவும், ஒன்றே - ஓர் உலகத்தையன்றி, இவ் உலகு மூன்றும் - இந்த மூன்று உலகங்களையும், ஆள்கின்ற - ஆட்சிபுரிகின்ற, ஒருவன் யானே - ஒப்பற்ற தலைவன் (அரசன்) யானே ஆவன், இதற்கு-இத்தகைய என் மேம்பாடுகளுக்கெல் லாம், வேறோர் காரணம் - வேறு ஒரு காரணத்தை, விரிப்பது, உண்டோ - விரித்துரைக்க வேண்டுவதுண்டோ.

பொழிப்பு

மெல்லிய தோள்களை உடையவளே! என்னை வென்றவர்கள் என்று உன்னுற் சொல்லப்பட்டவர்களாகிய வாலி கார்த்தவீரி யன் முதலியோர் உயிருடன் வாழ்ந்திருக்கவும் எல்லோர்க்கும், மேலானவர் என்று சொல்லப்படுகின்றவர்களும், அழிவில்லாத வர்களுமாகிய அமரர்கள் இருக்கவும், அமரர்க்கரசனுகிய இந் திரன் நான் ஏவிய பணிகளைச் செய்ய ஓர் உலகத்தை யன்றி இந்த மூன்று உலகத்தையும் ஆட்சி புரிகின்ற ஒப்பற்ற தலைவன் யானே ஆவன். இத்தகைய மேம்பாடுகளுக்கெல்லாம் வேறொரு காரணத்தை விரித்துரைக்க வேண்டுவதுண்டோ என்பதாம்.

விளக்கம்:

இச் செய்யுளில் தன்னை வாலி கார்த்தவீரியன் முதலியோர் வென்ற செயல்களை விளையாட்டாவைகளென்று சீதாதேவிக்கு விளக்கிக் கூறும் இராவணனின் வீரமொழிகளைக் கேட்கின்றோம்:

வாலி, கார்த்தவீரியன் முதலியோர் என்னை வென்ற செயல் கள் விளையாட்டாகவேயன்றி உண்மையாகவே நிகழ்ந்தவைகளா னால் அவர்கள் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கவும், எல்லோர்க் கும் மேலானவர்களும், என்றும் அழிவில்லாதவர்களுமாகிய தேவர்களும் வாழ்ந்து கொண்டிருக்கவும், அத்தேவர்களுக்கரச னுகிய இந்திரன் நான் ஏவிய பணிகளைச் செய்து நிற்கவும் இம் மூவுலகையும் ஆட்சி புரியும் முதன்மையாளனுக நான் வீற்றிருக் கும் காரணங்களை ஆராய்ந்து தெளிவாயாகவென சீதாதேவிக்கு இராவணன் சொல்லுகின்றன்.

எனவே, வாலியும் கார்த்தவீரியனும் என்னை வென்றது உண் மையாயின் யான் அவர்களின் கீழ் அடங்கி அடிமைப் பட்டிருக்காமல் அவர்கள் உயிர் வாழ்ந்திருக்கும் நிலையிலும், அழிவற்றவர்களும் யாவரிலும் மேம்பட்டவர்களாகிய அமரர்கள் வாழ்ந்திருக்கும் நிலையி லும், யான் அவர்களுக்கு மேம்பட்டவனுய் வீற்றிருந்து மூன்று உல கையும் ஆளும்நிலை எய்தியதற்குத் தனது ஆற்றலே காரணமாகும் என மொழிகின்ற இராவணனின் முதன்மைப் பாட்டைக் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றேரும் இருப்ப யார்க்கும் மேலவர்
விளிவிலாதோர்
என்றேரும் இருப்ப அன்றே இந்திரன் ஏவல்
செய்ய
ஒன்றே இவ் உலகம்மூன்றும் ஆள்கின்ற ஒருவன்
யானே

என இராவணன் சீதாதேவிக்குக் கூறுகின்ற குரலிலே தன்நம்பிக்கையோடு கலந்த அவனின் தற்பெருமை உணர்ச்சியைக் காண்கின்றோம்.

வாலியும், கார்த்தவீரியனும் தன்னை வெற்றி கொண்ட செயல்கள் விளையாட்டுப் போன்றவைகளே அன்றி உண்மையான வைகள் அல்ல என்பதை அவன் மிக வல்லமைப்பாடாகச் சீதாதேவிக்குச் சொல்லி விளக்குகின்றான். உண்மையாக என்னை வாலியும் கார்த்தவீரியனும் வென்றார்களானால் நான் அவர்களுக்கு அடிமைப்படாமல், எங்ஙனம் இந்திரன் ஏவல் செய்ய இவ்வுலகம் மூன்றையும் ஆளமுடியும் என இராவணன் விளக்கிக் கூறுகின்ற காரணம் மிகப்பொருத்தமானது என்றே கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது.

அரங்கில் ஆடுவோர்க்கு அன்புபூண்டுடை வரம்
அறியேன்
இரங்கியான் நிற்ப என்வலி அவன் வயின் எய்த
வரங்கொள் வாலிபால் தோற்றனன்

எனத் தான் வாலியினால் வெல்லப்பட்டதன் காரணத்தை விபீடணனிடம் விளக்கிக் கூறும் இராவணனின் மொழிகளையும் நோக்குக:

மனிதர் தம்மை அடுகிலேன்

146. மூவருந் தேவர் தாமும் முரணுக முற்றுங்
கொற்றம்
பாவைநின் பொருட்டி னாலோர் பழிபெறப்
பயன்றீர் நோன்பின்
ஆவியன் மனிதர் தம்மை யடுகிலே னவரை
யீண்டக்
கூவிநின் றேவல் கொள்வேன் காணுதி குதலைச்
சொல்லாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: பாவை, நின் பொருட்டினுல் மூவரும் தேவர் தாமும் முரண்உக முற்றும் என் கொற்றம் ஓர் பழி பெற பயன் தீர் நோன்பின் ஆ இயல் மனிதர் தம்மை அடுகிலேன், குதலைச் சொல் லாய், அவரை ஈண்டக் கூவி நின்று ஏவல் கொள்வேன் காணுதி.

பொருள்

பாவை - பாவை போன்றவளே, நின்பொருட்டினுல் - உன் காரணத்தால் (உன்பொருட்டால்) மூவரும் - நான்முகன், திரு மால், உருத்திரன் என்னும் மூன்று முதற்கடவுளரும், தேவர் தாமும் - இவர்களே யொழிந்த இந்திரன் முதலிய தேவர்களும், முரண்உக - (தங்கள்) வல்லமை அழியும்படி, முற்றும் என் கொற்றம் - வளைத்த என் முதன்மை வாய்ந்த வெற்றியெல்லாம், ஓர்பழிபெற - மிக்க வசையை (அபகீர்த்தியை) அடையும்படி, (பழியாவது வல்லமையற்றார் மேல் சென்று அவரைக் கொன்றமை யால் வரும் வசையாகும்) பயன்தீர் - பயன் அற்ற, நோன்பின்- விரதங்களையுடைய (தவத்தினையுடைய), ஆ இயல் - பசுவின் தன்மை வாய்ந்தவர்களான, மனிதர் தம்மை - மனிதர்களை (மனிதர்களாகிய இராம இலக்குமணரை), அடுகிலேன் கொல்ல மாட்டேன், குதலைச் சொல்லாய்- மழலைச் சொற்களையுடையவ ளே, அவரை - அம் மனிதர்களாகிய இராம இலக்குமணர்களை, ஈண்டக்கூவி - விரைவாக (இங்கு வரும்வண்ணம்) அழைத்து, நின்று - (அவர்கள் இங்கேயே) நிலைத்திருந்து, ஏவல்கொள்வேன்- அவர்கள் ஆற்றுகின்ற பணிவிடைகளை ஏற்றுக்கொள்வேன், காணுதி - காண்பாயாக;

பொழிப்பு

பாவைபோன்றவளே! உன்பொருட்டால் மூவரும் தேவரும் தம்வலிமை அழியும்படி அவர்களையெல்லாம் வளைத்து வெற்றி கொண்ட முதன்மையோடு பொருந்திய என் வெற்றியெல்லாம் மிக்க வசையைப் பெறும்படி பயனற்ற விரதங்களை ஆற்றுகின் றவர்களும், பசுவின் தன்மை வாய்ந்தவர்களுமாய் விளங்கும் மனிதர்களாகிய இராம இலக்குமணரைக் கொல்லமாட்டேன்; மழலைமொழிகளையுடையாய்! அம் மனிதர்களை விரைவாக இங்கு வரும் வண்ணம் அழைத்து இங்கேயே நிலைத்து நின்று அவர்கள் ஆற்றுகின்ற பணிகளை ஏற்றுக் கொள்வேன் காண்பாயாக என் பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் மூவரையும், தேவரையும் வென்ற முதன் மையோடு விளங்கும் வெற்றி வீரனுகிய யான் கொல்லக்கூடாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவினைப்போல் மிகமென்மைவாய்ந்த மனிதர்களாகிய இராம இலக்குமணரைக் கொல்லமாட்டேன். அவர்களைக் கூவி உன் கண்காண இங்கு ஏவல் கொள்வேனெனச் சீதாதேவியிடம் கூறுகின்ற இராவணனின் இறுமாப்பான குரலைக் கேட்கின்றோம்:

இராம இலக்குமணரை எதிர்த்துப் போர்செய்து கொல்லாமல் சீதாதேவியை வஞ்சனையாகக் கவர்ந்து வந்த தன் செயல் தன் தகுதிக்குத் தக்கதேயாகுமென மிகுத்தருக்குடன் இராவணன் கற்பனை செய்து காரணம் காட்டுகின்றனை என்பதைக் காண்கின்றோம்.

பாவை நின்பொருட்டால் முவரும் தேவர்தாமும்
முரண்உக முற்றும் கொற்றம் ஓர்பழிபெற
ஆவியல் மனிதர் தம்மை அடுகிலேன்

என இராவணன் கூறுகின்ற குரலிலே பெருமிதமும் இளிவாலும் கலந்து அலைமோதுவதைக் காண்கின்றோம்; மூவரையும் தேவரையும் தான் வென்றவன் என்பதைப் பலமுறை எடுத்தெடுத்துச் சீதாதேவியிடம் பகருகின்ற இராவணனின் தற்பெருமைப் பண்பு மிகமிக அருவருக்கத்தக்கதாகும்:

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

என்பது திருக்குறள்:

இங்ஙனம் மூவரையும் தேவரையும் வென்ற தன் முதன்மையை எடுத்து மொழிந்த இராவணன் இராம இலக்குமணரின் ஆண்மைக் குறைவையும் அவர்களைத் தான் எதிர்த்துக் கொல்லுதல் தன் பெருமைக்கு ஏற்ற செயல் அல்லவென்பதையும் சீதாதேவிக்குக் கூறுகின்றனன்:

ஆவியல் மனிதர் தம்மை அடுகிலேன் அவரை
ஈண்டைக் கூவி நின்று ஏவல் கொள்வேன்

எனக் கூறுகின்ற இராவணனின் குரலில் கலந்துள்ள தற்பெருமையைக் காண்கின்றோம். இராம இலக்குமணர்கள் தன்னால் தீங்கு செய்யத் தகாத அற்பமனிதர்கள் என்பதை ஆவியல் மனிதர் எனும் சொற்களால் இராவணன் குறிப்பிடுகின்றனன்:

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்

என புறநானூற்றில் ஆவின் தன்மை வாய்ந்த பார்ப்பார் கொல்லத் தகாதவர்களெனக் கூறுதலையும் நோக்குக:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இராவணன் பயனில்லாத நோன்புகளை மேற் கொண்டு வாழுகின்றவர்களும், பசுவைப்போல் மிக மென்மை யை உடையவர்களுமான இராம இலக்குமணர்களைக் கொல்லு தல், தன் பேராண்மைக்குத் தகுதியல்லவென்று சீதாதேவியிடம் சொல்லி அவளை மயக்க முயல்கின்றான் என்பதை உணர்கின்றோம்.

இழிதருமனிதரோடே நான்செரு இழைப்பே
னென்றால்
.....வெள்ளிவெற்பு எடுத்த தோட்குப்
பழிதரும்
அதனில் சாலப் பயன்தரும் வஞ்சம்

என இராவணன் சீதாதேவியைக் கவர்ந்து வந்தபொழுது இராம இலக்குமணரை மானுடர் என இகழ்ந்து கூறிய இம்மொழிகளை யும் நோக்குக.

சீதாதேவியை இராவணன் பாவையென்றும், குதலைச்சொல் லாயென்றும் பாராட்டி உரைத்து அவளின் அன்பைப்பெற எண் ணுகின்றான் என்பதையும் கம்பர் குறிப்பாகக் காட்டுகின்றார். இங்ஙனமெல்லாம் இராவணன் சீதாதேவியைப் பாராட்டி உரைப் பதாலும் இராம இலக்குமணர்களைப் பழித்துரைப்பதாலும் சீதா தேவியை மயக்கித் தன் கருத்தை நிறைவேற்ற ஒல்லும் வகை யால் முயல்கின்றானென்பதை எண்ணி எண்ணி நகைக்க வேண் டியவர்களாகின்றோம்.

இவ்வரையும் பற்றிவருவேன்

147. சிற்றியற் சிறுமை யாற்றற் சிறுதொழின் மனித
ரோடே
முற்றிய தாய வீர முனிவென்கண் முளையா
தேனும்
இற்றையிப் பகலி னெய்தி னிருவரை யொருகை
யாலே
பற்றினென் கொணருந் தன்மை காணுதி
பழிப்பி லாதாய்

கொண்டுகூட்டு: பழிப்பிலாதாய், சிற்றியல் சிறுமை ஆற்றல் சிறுதொழில் மனிதரோடே முற்றியதாய வீர முனிவு என்கண் முளை யாதேனும், இற்றை இப்பகலில் இருவரை நொய்தின் ஒரு கையாலே பற்றினன் கொணரும் தன்மை காணுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

பழிப்பிலாதாய் - குற்றமற்றவனே, சிற்றியல் - அற்பத் தன்மையும், சிறுமை ஆற்றல் - புல்லிய வீரமும், சிறுதொழில் புன் தொழிலும் உடைய, மனிதரோடே - மனிதர்களாகிய இராம இலக்குமணர்களின்மேல், முற்றியதாய - மூதிர்ந்ததாகிய, வீர முனிவு - வீரத்தோடு பெர்ருந்திய கோபம், என்கண் - என்னிடத்தில், முளையாதேனும்-உண்டாகாதென்ருலும், (நீ, அவர்கள் என்னிலும் வலியவர்கள் என்று கருதி என்னை இகழ்ந்து சொல்வதால்) இற்றை - இன்றைய, இப்பகலில் - இப்பகற்பொழுதிலேயே, இருவரை - இராம இலக்குமணர் என்னும் அவ்விருவரையும், நொய்தின் - மிக எளிதாக, ஒரு கையாலே - (எனது இருபது கைகளுள்ளும்) ஒரு கையினுலேயே, பற்றினன் - பிடித்துக் கொண்டவனுய், கொணரும் - (நான்) கொண்டுவருகின்ற, தன்மை காணுதி - தன்மையை நீ காண்பாயாக.

பொழிப்பு

குற்றமற்றவளே! அற்பத்தன்மையும் புல்லிய வீரமும் புன் தொழிலும் பொருந்திய மனிதர்களாகிய இராம இலக்குமணர்கள்மேல் மூதிர்ந்த என் வீரத்தோடு பொருந்திய என் கோபம் உண்டாகாதென்ருலும் நீ அவர்களை என்னுல் வெல்ல முடியாதெனச் சொல்லி இகழ்வதால் இப்பொழுதே சென்று அவ்விருவரையும் ஒரு கையினுல் பிடித்து இங்கே கொண்டு வருகின்ற என் தன்மையைக் காண்பாயாக என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் இராம இலக்குமணர்களை மிகமிக இகழ்ந்து கூறுகின்ற இராவணனின் எழுச்சிக்குரலைக் கேட்கின்றேம்.

சிற்றியல் சிறுமை ஆற்றல் சிறுதொழில் மனிதர்

என இராவணன் இராம இலக்குமணர்களை இகழ்ந்து கூறும் மொழிகளைக் கம்பர் மிகமிக வருத்தத்தோடு எமக்கெடுத்துரைக்கின்ருர். சிற்றியல் மனிதர், சிறுமை ஆற்றல் மனிதர், சிறுதொழில் மனிதர் என மிகமிக இகழ்ந்துரைக்கின்ற இராவணனின் அறியாமையை எண்ண எண்ண எம்உள்ளத்தில் இரக்கந்தான் எழுகின்றது. மனிதர்களை இராவணனைப்போல் இவ்வளவு இகழ்ந்து மதித்தவர்கள், வேருருவரும் இவ்வுலகிலும், இலக்கிய உலகிலும் இல்லையென்றே கூறலாம்.

சீதாதேவி இராவணனை நோக்கி உன்னை வென்ற கார்த்த வீரியனும் ஒரு மனிதன்தானே; அக்கார்த்த வீரியனை வென்ற பரசுராமனும் ஓர் மனிதன்தானே. அப்பரசுராமன் என் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனுகிய இராமபிரானுக்குத் தோற்று விட்டான் என்று கூறிய மாற்றங்களை யெல்லாம் மனதில் எண்ணி யெண்ணி ஏக்கம் கொண்ட இராவணன் சீதாதேவியின் உள்ளத்தில் மீண்டும் மனிதர்கள் மிக அற்பமானவர்கள்தான் என்பதை வற்புறுத்திப் பதித்தற்காக இங்ஙனம் மனிதரை இகழ்ந்துரைக்கின்றான் என்பதை உணர்கின்றோம்:

மான் என்பது அறிந்துபோன மானிடர்
யான் என்பது அறிந்தால் வாரார்

என இராவணன் சீதாதேவியிடம் முன் கூறிய மொழிகளையும் இவற்றுடன் ஒப்பிட்டு நோக்குக.

இங்ஙனம் இராம இலக்குமணர்கள் தன்னை எதிர்த்துக் கொல்லக்கூடிய அளவுக்கு வல்லமைப்பாடு இல்லாதவர்களெனச் சீதாதேவியிடம் சொல்லிய இராவணன் அவ்விராம இலக்குமணரை இப்பொழுதே என் ஒரு கையால் பிடித்து உன் முன் கொண்டு வருவேன் எனக் கூறுகின்ற வஞ்சனை மொழிகள் மிக நகைக்கத் தக்கனவாகும்.

இற்றை இப்பகலின் நொய்தின் இருவரை ஒரு கையாலே
பற்றினென் கொணரும் தன்மை காணுதி

என இராவணன் சீதாதேவியிடம் கூறும் குரலைக் கேட்கும் பொழுதே இராம இலக்குமணர்களை அவன் ஒரு கையால் பற்றிக் கொண்டு வந்து விடுவானே என்று உள்ளம் அஞ்சுகின்றது. இற்றை இப் பகலில் இருவரை நொய்தின் ஒரு கையாலே பற்றினன் என இராவணன் எவ்வளவுக் கெவ்வளவு மிக எளிமையாக இராம இலக்குமணர்களை எண்ணினானோ அவ்வளவுக் கவ்வளவு பொருத்தமான சொற்களைப் பொருத்தி உரைத்துள்ள கம்பரின் புலமைத்திறன் மிக மிக வியப்புக்குரியதாகும்.

இங்ஙனம் இராவணன் கூறிய மொழிகளைக் கேட்ட சீதாதேவியானவள் கரன் முதலியோரைக் கொன்ற இராமபிரானின் பேராண்மையையும், கழுகின் வேந்தனால் அடியுண்டு தரையில் வீழ்ந்த இராவணனின் ஆண்மைக் குறைவையும் நேரில் கண்டிராவிட்டால் உள்ளம் கலங்கியிருப்பாள் என்பதற்கோர் ஐயமே இல்லை. சீதாதேவியின் உள்ளம் இராமபிரானின் ஆண்மையிலும் அறத்தை விட்டு விலகாத அவளின் கருணை உள்ளத்திலும் கலந்து வீறிக்கனிந்த சிறப்புடையதென்பதைக் காமவேட்கையால் அறிவிழந்த இராவணன் எங்ஙனம் காணக் கூடியவனுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு உயிர் பிறிதும் ஒன்று உண்டு எனிறு இரேல்
தனக்கு உயிர்வேறு இன்றுகி தாமரைக் கண்ணது
ஆகி
கனக்கரு மேகம் ஒன்று கார்முகம் தாங்கி

எனச் சீதாதேவி தனக்கு உயிர் இராமபிரானே என இராவணனி டம் கூறியதாக வரும் இப்பொருள் உரைகளையும் நோக்குக.

இராவணன் சீதாதேவியைப் பழிப்பிலாதாய் எனப்பாராட்டி உரைத்த மொழிகள் அவனே அறியாமலே அவன் உள்ளத்திலும் சீதாதேவியாரின் கற்பின் ஒளி வீசுகின்ற தென்பதை உணர்கின் றோம். இராவணன் கூறிய பழிப்பிலாதாய் என்னும் மொழிகளால் சீதாதேவியின் கற்பும் காதலும் களங்கமடையவில்லை யென்னும் அற்புதமான உண்மை புலனாகி நிற்றலைக் காண்க. தன் ஆருயிர்த் தலைவனாகிய இராமபிரானையே எண்ணிய வண்ணம் சிறையிலேயி ருந்து தவம் செய்கின்ற சீதாதேவியாரின் கற்பெனும் கலங்கா நிலைமை, தீய நினைவுடன் சீதாதேவியின் கற்பைக் களங்கமடை யச் செய்தற்குக் கருதுகின்ற இராவணன் உள்ளத்தையும் மாற்ற முயல்கின்ற தென்பதைக் கம்பா எமக்குக் குறிப்பாகக் காட்டுந் திறனைக் காண்கின்றோம்.

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுது
எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை

எனக் கற்பின் ஆற்றலைப் பாராட்டி உரைக்கும் வள்ளுவர் மொழி களையும் நோக்குக.

உயிர்க்கொலைக் குரியரல்லர்

118. பதவியன் மனித ரேனும் பைந்தொடி நின்னைத்
தந்த
உதவியை உணர நோக்கி னுயிர்க்கொலைக்
குரிய ரல்லர்
சிதைவுற லவர்க்கு வேண்டிச் செய்திநீ தேர்ந்த
தின்றி
இதமுனக் கீதேயாகி லியற்றுவல் காண்டி
யின்னும்

கொண்டுகூட்டு: பைந்தொடி, (அவர்) பதவு இயல் மனித ரேனும் நின்னைத்தந்த உதவியை உணர நோக்கின் உயிர்க் கொலைக்கு உரியர் அல்லர், நீ தேர்ந்தது இன்றி அவர்க்குச் சிதைவுறல் வேண் டிச் செய்தி; ஈதே உனக்கு இதம் ஆகில் இயற்றுவல் காண்டி இன்னும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

பைந்தொடி - பசுமையான வளையல்களை அணிந்தவளே, பதவு இயல்-(அந்த இராம இலச்குமணர்) புல்லின் தன்மையுள்ள, மனிதரேனும் - (புல்லிய மென்மையான) மனிதர்களாக இருந்தாலும், நின்னை-(அடைதற்கரிய பொருளாக விளங்கும்) உன்னை, தந்த உதவியை - எனக்குக் கொடுத்த உதவியை, உணர நோக்கின்-நன்றாக ஆராய்ந்து பார்த்தால், உயிர்க் கொலைக்கு - உயிரைக் கொல்லுதற்கு (கொல்லப்படுதற்கு) உரியர் அல்லர்-ஏற்றவராகார், நீ தேர்ந்தது இன்றி - நீ சிறிதேனும் தெளிந்த அறிவில்லாமல், அவர்க்கு - அந்த இராம இலக்குமணர்க்கு (நீ என் கருத்தை ஏற்று என்னுடன் வாழ மறுத்தலால்) சிதைவுறல்-கேடுவரும் செயலை, வேண்டிச் செய்தி - விரும்பிச் செய்கின்றாய், ஈதே-(இங்ஙனம் அந்த இராம இலக்குமணர்க்கு) கேடு உறுதலே, உனக்கு இதமாகில் - உனக்கு நன்மை தரும் செயலாக இருந்தால், இயற்றுவல் -நான் அந்த இராம இலக்குமணர்களை கொல்கின்றேன். காண்டி - காண்பாயாக, இன்னும் - இதற்கு மேலும் (இன்னும் என்னும் - சொல் அடுத்த செய்யுளில் வரும் செயல்களை அவாவி நிற்கின்றது)

பொழிப்பு

பசுமையான வளையல்களை அணிந்தவளே! அந்த இராம இலக்குமணர் புல்லின் தன்மையுள்ள மனிதர்களாக இருந்தாலும் உன்னை எனக்குக் கொடுத்த அவர்களின் உதவியை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் என்னால் கொல்லப்படுதற்கு உரியவரல்லர்: நீ சிறிதேனும் தெளிந்த அறிவில்லாமல் என் கருத்தை மறுத்து அந்த இராம இலக்குமணர்க்குக் கேடுவரும் செயலை விரும்பிச் செய்கின்றாய்; அங்ஙனம் அந்த இராம இலக்குமணர்கள் கேடு உறுதல் உனக்கு நன்மை தரும் செயலாக இருந்தால் அவர்களைக் கொல்லுகின்றேன் காண்பாயாக. (அவர்களைக் கொன்ற பின்னும் இன்னும் நான் செய்யப்போகும் காரியங்களையும் காண்பாயாக என்பதாம்)

விளக்கம்

இச் செய்யுளில் இராம இலக்குமணர்களை யான் இத்துணைக் காலமும் கொல்லாது விடுத்தது உன்னை எனக்குத் தந்துதவியதால் அவர்களின்மேல் நான் கொண்ட நன்றியுணர்ச்சியேயாகும் என்றும், நீ விரும்பினால் நான் இப்பொழுதே அவர்களைக் கொல்கின்றேன் என்றும் சீதாதேவிக்குக் கூறுகின்ற இராவணனின் புல்லிய மொழிகளைக் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம இலக்குமணர்களைத் தான் கொல்லாமல் விட்டதற்கு இன்னுமோர் புதிய காரணத்தைப் புனைந்து இராவணன் சீதா தேவிக்குப் புகல்கின்றான். நாட்டை விட்டுக் காட்டில் புகுந்த அந்த மனிதர்களாகிய இராம இலக்குமணர்கள் உன்னை எனக்கு உதவிய நன்றியை எண்ணித்தான் நான் அவர்களைக் கொல்லாமல் விட்டேன் என இராவணன் கூறுகின்ற பொல்லாத மொழிகள் சீதாதேவியைக் கொல்லாமற் கொன்றிருக்கும் என்பதற்கோர் ஐயமில்லை.

பதவு இயல் மனிதரேனும் பைந்தொடி நின்னைத் தந்த
உதவியை உணர நோக்கின் உயிர்க் கொலைக்கு உரியர் அல்லர்

என இராவணன் செய் நன்றி மறவாத செம்மையாளன் போலச் சீதாதேவியிடம் கூறுகின்ற மொழிகள் அவனின் புலமைத் திறத்தையும். நாவன்மையையும் எமக்குப் புலனுக்குகின்றது. நாட்டிலிருந்த உன்னைக் காட்டிற்கு அழைத்து வந்து நான் கவர்ந்து கொள்ளுதற்கேற்ற வாய்ப்பை எனக்கு வழங்கிய அம் மனிதர்களாகிய இராம இலக்குமணரை நான் கொல்லுதல் செய்நன்றி மறந்த செயலாகுமல்லவா என இராவணன் சீதாதேவிக்குச் சொல்லாமற் சொல்லுகின்றான்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என வரும் திருக்குறளுக்கு இலக்கியமாக இராவணன் தன்னைச் சீதாதேவி எண்ணும்படி செய்ய முயல்கின்ற வல்லமைப் பாட்டையும் கம்பர் எமக்குக் குறிப்பாகக் காட்டுகின்றார்.

உதவியை உணர நோக்கின் உயிர்க் கொலைக்கு உரியர் அல்லர்

என இராவணன் கூறுகின்ற மொழிகளை படிக்கின்ற எங்களின் உள்ளத்தில் அவன் பெரிய நன்றி உணர்ச்சியுள்ள நல்லவன் போலத் தோன்றும் வண்ணம் சொல் நயம்பட உரைத்த கம்பரின் புலமை ஆற்றல் போற்றத்தக்கதாகும்.

இனி, இங்ஙனம் இராம இலக்குமணரை நன்றி உணர்ச்சியினால் கொல்லாமல் விட்ட நல்லவன் போலச் சீதாதேவிக்குச் சொல்லிய வல்லமையாளனாகிய இராவணன் மீண்டும் சீதாதேவியை நோக்கிக் கூறுகின்ற மொழிகள் மிகமிக வியப்பிற்குரியனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் தந்த உதவியை நினைந்து இராம இலக்குமணரைக் கொல்லாமல் இருக்கின்ற நல்லவனுகிய என் எண்ணத்தை ஏற்று எனது காமவேட்கையைத் தணிக்க உடன்படாமல் நீ மறுக்கின்ற செயல்தான் அவர்களைக் கொல்லும் வண்ணம் என்னைத் தூண்டுகின்றது. அங்ஙனம் அவர்களைக் கொல்லுதல் உனக்கு நன்மையாக இருந்தால் நான் இப்பொழுதே அச்செயலை ஆற்றிவிடுகின்றேன்; என இராவணன் சீதாதேவியைக் கேட்கின்றான்.

நீ தேர்ந்தது இன்றி அவர்க்குச் சிதைவுறல்
வேண்டிச் செய்தி
ஈதே இதம் உனக்காகில் இயற்றுவல் காண்டி

என இராவணன் சீதாதேவியைக் கேட்கின்ற குரலிலே சீதாதேவிதான், இராம இலக்குமணரைக் கொல்லத் தூண்டுகின்றான் என இராவணன் சொல்லாமல் சொல்லுகின்ற வல்லமைப் பாட்டைக் காண்கின்றோம்.

இதம் உனக்கு ஈதே ஆகில் இயற்றுவல்

என இராவணன் கூறிய மொழிகளைக் கேட்டவுடன் சீதாதேவியின் உள்ளம் சிதறிச் செயலற்றிருக்குமென்றே சொல்ல வேண்டும். இராம இலக்குமணர்களைக் கொல்லுதல் உனக்கு நன்மை தரக்கூடியதாக நீ கருதினால் அச்செயலை நான் இப்பொழுதே ஆற்றுகின்றேன். அவர்களைக் கொல்லுதல் உனக்கு உடன்பாடாகாதென்றல்லவோ நான் நினைத்து விட்டேன் என்னும் கருத்தமைய இராவணன் பொருத்தி உரைக்கும் பொய்யுரைகள் மிகப் பொல்லாதனவாய் சீதாதேவியைக் கொல்லாமல் கொன்றிருக்கும் என்க.

உனக்குரியோன் தன்னை கொன்று கோள்
இழைத்தால்
நீ நின் உயிர் விடின் குற்றம் கூடும்

என இராவணன் சீதாதேவிக்குக் கூறியதாகவரும் மொழிகளையும் நோக்குக.

இராவணன், ஓர் அணிகலனும் இல்லாமல் துன்பமே உருவமாக இருக்கின்ற சீதாதேவியைப் பைந்தொடி எனப் பாராட்டி அழைத்து மருட்டப்பார்க்கின்றான் என்பதையும் கம்பர் குறிப்பாகக் காட்டுகின்றார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அறிந்திலை

149. பள்ளநீ ரயோத்தி நண்ணிப் பரதனே முதலி
னோராண்
டுள்ளவர் தம்மை யெல்லா முயிர்குடித் தூழித்
தீயின்
வெள்ளநீர் மிதிலை யோரை வேரறுத் தெளிதி
னெய்திக்
கொள்வெனின் னுயிரு மென்னை யறிந்திலை
குறைந்த நாளோய்.

கொண்டுகூட்டு: குறைந்த நாளோய், நீ என்னை அறிந்திலை, (யான்) ஊழித்தீபின், பள்ளநீர் அயோத்தி நண்ணி பரதனே முதலினோர், ஆண்டு உள்ளவர் தம்மை எல்லாம் உயிர் குடித்து, வெள்ள நீர் மிதிலை யோரை (சனகனே முதலினோர், ஆண்டு உள்ள வரை எலலாம்) வேர் அறுத்து, எளிதின் (இலங்கை) எய்தி நின் உயிரும் கொள்வென்.

பொருள்

குறைந்த நாளோய் - வாழ்நாள் குறைந்தவளே, நீ - நீ, என்னை - (இன்னும்) என்னுடைய பேராண்மையை (எப்படிப் பட்டதென்று) அறிந்திலை - அறிந்துகொள்ளவில்லை, ஊழித்தீயின் - (உலகம் முடிவடையும்) ஊழிகாலத்தில் எழுகின்ற பெரு நெருப்பைப்போல யான், பள்ள நீர் - ஆழமான நீரையுடைய அகழியால் சூழப்பட்ட, அயோத்தி - அயோத்தி நகரை, நண்ணி - அடைந்து, பரதனே முதலினோர் - பரதன் முதலான, ஆண்டு உள்ளவர் தம்மை எல்லாம் - அந்த அயோத்திமா நகரத்தின் கண் உள்ளவர் எல்லோரையும், உயிர் குடித்து - உயிரைக் கொன்று (அதன் பின் ஊழிகாலத் தீயைப்போல) வெள்ள நீர் - பெருகி வெள்ளமாகப் பரக்கின்ற நீர் வளத்தைக் கொண்ட, மிதிலையோரை - மிதிலைமாநகரின்கண்வாழும், உன் தந்தையா கிய சனகர் முதலியோரை, வேர் அறுத்து - அடியோடு (முழு வதும்) ஒழித்து, எளிதின் - (அதன் பின்) (மேற் கூறியவற்றை எல்லாம்) மிக எளிதாக, எய்தி - இங்கு வந்து (இலங்கையை அடைந்து) நின் உயிரும் - (என்னுடன் ஒற்றுமையாக இருக்க மறுக்கும்) உன்னுடைய உயிரையும்; கொள்வென் - வாங்கி விடுவேன் (கொல்வேன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

வாழ் நாள் குறைந்தவளே, நீ இன்னும் என்னுடைய பேராண்மை எப்படிப்பட்டதென்று அறிந்துகொள்ளவில்லை; ஊழிக்காலத்தில் எழுகின்ற நெருப்பைப்போல் யான் ஆழமான நீரையுடைய அகழியாற் சூழப்பட்ட, அயோத்தி நகரை அடைந்து, பரதன் முதலாக அந்த அயோத்தி நகரில் உள்ளவர் எல்லோரையும் கொன்று அதன் பின்னும் ஊழித்தீயைப்போல வெள்ளநீர்ப் பெருக்கையுடைய மிதிலைமா நகரத்தின் கண் சென்று உன் தந்தையாகிய சனகன் முதலியோரையெல்லாம் அழித்து, மீண்டு மிக எளிதாக இலங்கையை அடைந்து உன் உயிரையும் போக்குவேன் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராம இலக்குமணரைக் கொன்றவுடன், அவ்வளவில் அமையாது, அயோத்தியை அடைந்து, பரதன் முதலியோரையும், மிதிலையை அடைந்து, சனகன் முதலியோரையும் கொன்றொழித்து, ஈற்றில் உன் உயிரையும் ஒழிப்பேனெனச் சீதாதேவியிடம் கூறுகின்ற இராவணனின் கொடுங் குரலைக் கேட்கின்றோம்;

இங்ஙனம், இராம இலக்குமணரையும், அயோத்தியில் வாழும் பரதன் முதலியோரையும், மிதிலையில் வாழும் சனகன் முதலியோரையும் கொல்வேன் எனத் தான் கூறியதைக் கேட்டவுடன் சீதாதேவி கலங்கித் தன் தீய கருத்தை ஏற்றுக்கொள்வாளென, இராவணன் எண்ணுகின்றான்;

பள்ளநீர் அயோத்தி நண்ணி
பரதனே முதலினோர் ஆண்டு
உள்ளவர் தம்மை எல்லாம்
உயிர் குடித்து

என இராவணன் கூறும் மொழிகளைக் கேட்டவுடனேயே சீதாதேவி திடுக்கிட்டிருப்பாள். இத்திடுக்காட்டம் முடியமுன்னமே அடுத்து

வெள்ள நீர் மிதிலையோரை
வேர் அறுத்து.

என்ற மொழிகளைக் கேட்டதும் சீதாதேவி அப்படியே அயர்ந்திருப்பாள். பின் இராவணன் கூறுகின்ற கொள்வென் நின்னுயிர் என்ற குரலைப்பற்றிச் சீதாதேவி சிந்தித்தே இருக்கமாட்டாள்; தன் உயிர் போவதைப்பற்றிச் சீதாதேவிக்குக் கவலையே இல்லை;

Digitized By Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுல், தான் புகுந்த குலமும் பிறந்த குலமும் அழியப் போகின்றதே என்னும் கவலைதான் சீதாதேவியின் உள்ளத்தைக் கரைக்கின்றது;

இங்ஙனமெல்லாம் இராவணன் கூறுகின்ற கொடிய மொழிகளைக் கேட்டுத் தன் உள்ளங் கலங்கினலும் இராவணனின் தீய நினைவுக்கு, ஆளாகித் தன் கற்பைக் களங்கமுறுத்த எண்ணுத மனத்திண்மையுடன் சீதாதேவி இருக்கின்ருளென்பதை நாம் உணரவேண்டும்;

நீயும் நின் கிளையும் மற்று இந்நெடு
நிலவரைப்பும் நேரே
மாயினும் முறைமை குன்ற வாழ்வெனே
வயிரத்தின் தோள்
ஆயிர நாமத்து ஆழி அரியினுக்கு
அடிமைசெய்வேன்
நாயினை நோக்குவேனே நான் துறந்து ஆவிநச்சி

என மாயா சனகனைத் தன் தந்தையே எனக்கருதிய சீதாதேவி இராவணனுடன் சேர்ந்து வாழும் வண்ணம் அவன் கூறிய கொடிய மொழிகளைக் கேட்டதும், உள்ளம் கொதித்துக் கூறியதாக வரும் இப் பொருளுரைகளையும் நோக்குக. இதனல் சீதாதேவி என்னதான் துன்பங்கள் தனக்கும் தன் கிளைஞர்க்கும் எய்த நேர்ந்தாலும் தன் கற்பென்னும் கலங்கா நிலைமையில் நின்று விலகாள் என்னும் உண்மை வலியுறுதல் காண்க;

அகத்து வைத்து அகன்ருன்

150. ஈதுரைத் தழன்று பொங்கி யெரிகதிர்
வாளை நோக்கித்
தீதுயிர்க் கிழைக்கு நாளுந் திங்களோ
ரிரண்டிற் றேய்ந்த
தாதலிற் பின்னை நீயே யறிந்தவா றறிதி
யென்னுப்
போதரிக் கண்ணினுளை யகத்துவைத் துரப்பிப்
போனன்.

கொண்டுகூட்டு: ஈது உரைத்து அழன்று பொங்கி; எரிகதிர் வாளைநோக்கி உயிர்க்குத் தீது இழைக்கும் நாளும், ஓர் இரண்டு திங்களில் தேய்ந்தது; ஆதலின், பின்னை நீயே அறிந்தவாறு அறிதி என்னு போது அரிக்கண்ணினுளை (தன்) அகத்து வைத்து உரப்பிப் போனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

ஈது உரைத்து-இவ்வாறுன மொழிகளைச் சொல்லி, அழன்று பொங்கி-சினந்தெழுந்து, எரிகதிர் வாளைநோக்கி - ஒளிவிளங்கு கின்ற தன் வாட்படையைப் பார்த்து (பெருங் கோபமுடைய வனுய்ச் சிறியெழுந்து என்பதாம்) உயிர்க்குத் தீது இழைக்கும்-(நான் முன் கூறியவண்ணம் நீ இணங்காவிடில்) உன் உயிர்க் குத் தீங்கு செய்யவேண்டிய (உன்னைக் கொல்லவேண்டிய) நாளும்-தவணை நாளும், ஓர் இரண்டு திங்களில் - இரண்டு மாதகால அளவில், தேய்ந்தது - குறுகிவந்துவிட்டது (உன்னைக் கொல்வ தாக நான் கூறிய தவணைக்கு இன்னும் இரண்டு மாதகாலந் தான் இருக்கின்றதென்பதாம்) ஆதலின்-ஆனபடியால், பின்னை-இனிமேல் நடக்கப்போகும் செயல்களை, நீயே அறிந்தவாறு அறிந்து - நீ உனக்குத் தெரிந்த முறையால் ஆராய்ந்து அறி வாயாக, என்னை - என்று கூறி, போது-தாமரை மலர் போன்ற, அரிக்கண்ணினுளை - செவ்வரி கருவரி படர்ந்த கண்களையுடைய சீதாதேவியை, அகத்து வைத்து-தன் மனத்தில் இருத்தி (உள்ளே காதல் கொண்டு) உரப்பி-வெளியே சுடுமொழிகளால் (கொடிய சொற்களால்) அதட்டிவிட்டு, போனன் - சென்றான்.

பொழிப்பு

இவ்வாறுன மொழிகளைச் சொல்லி சினந்தெழுந்து நான் கூறிய வண்ணம் நீ இணங்காவிடில் உன்னைக் கொல்லவேண்டிய கால எல்லைக்கு இன்னும் இரண்டு மாதங்கள் தான் இருக்கின் றன; ஆனபடியால் இனிமேல் நடக்கப்போகும் செயல்களை நீ உனக்குத் தெரிந்த முறையால் ஆராய்ந்து அறிவாயாக என்று கூறித் தாமரை மலர் போன்ற செவ்வரி கருவரி படர்ந்த கண்களையுடைய சீதாதேவியைத் தன் மனத்திலிருத்தி வெளியே கொடும் சொற்களால் அதட்டிக் கூறியவனுய் இராவணன் சென்றான் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் சீதாதேவியை அச்சுறுத்தி அதட்டிய இரா வணன், அவளின் உயிரைப் போக்குதற்கு இரண்டு மாதங்கள் தான் இருக்கின்றன எனக் கூறும் கொடிய மொழிகளைக் கேட் கின்றோம். இராம இலக்குமணரைக் கொன்று அதன் பின் அயோத்தியை அடைந்து பரதன் முதலியோரையும், மிதிலையை அடைந்து சனகன் முதலானுேரையும் கொல்லப் போவதாகச் சீதாதேவிக்குச் சொல்லி அச்சுறுத்திய இராவணன், உன்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்ல இன்னும் இரண்டு மாதங்கள் தான் இருக்கின்றன என்று மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லிச் சீதாதேவியை அச்சுறுத்துகின்றனென்பதைக் கம்பர் எடுத்துக் காட்டுகின்றார்:

ஈது உரைத்து அழன்று பொங்கி எரிகதிர்வாளை நோக்கி
தீது உயிர்க்கு இழைக்கும் நாளும் திங்கள் ஓர் இரண்டில் தேய்ந்தது

என இராவணன் கூறுகின்ற குரலிலே எழுகின்ற ஓசை, இரண்டு மாத எல்லைக்குள் சீதாதேவி தன் கருத்தை ஏற்காவிட்டால் அவளைக் கொன்றே விடுவான் என்று நாம் எண்ணத்தக்கதான உணர்ச்சியைத் தருகின்றது. சினந்தெழுந்த இராவணன் சீதா தேவி காணத்தக்கதாகத் தன் வாளை நோக்கிய வண்ணம் இம் மாற்றங்களைக் கூறுகின்றனென் என்பதையும் கம்பர் எமக்கு நினை வூட்டுகின்றார்:

இங்ஙனம் வாளை நோக்கியவண்ணம் இராவணன் சீதா தேவியை நோக்கிக் கூறிய நோக்கம், என் கருத்தை ஏற்கத் தவறினால் தவறாது இந்த வாளால் உன் உயிரைப் போக்குவேன் என்னும் கொள்கையைக் காட்டுதற்காகவே என்க.

புலிப்பொறிப் போர்வை நீக்கிப் பொன்னணிந் திலங்குகின்ற
வொலிக்கழன் மன்னருட்கு முருச்சுடர் வாளை நோக்கிக்
கலிக்கிறையாய நெஞ்சிற் கட்டியங் காரணம் மேல்
வலித்தது காண்டுமென்று வாளெயிறி லங்கநக்கான்

என வரும் சீவக சிந்தாமணிச் செய்யுளிலும் வாளைநோக்கிச் சிறி யெழுதல் கொல்வேன் என்பதற்கு அறிகுறியாக நிற்றலை நோக்குக.

இங்ஙனம் சீதாதேவியை அச்சுறுத்திய இராவணன் மீண்டும் அவளை நோக்கி

நீயே அறிந்தவாறு அறிதி என்னை

எனக் கூறுகின்ற மொழிகளில் இரண்டுமாத எல்லை வருவதற்கு முன் எனது கருத்தை நீ ஏற்று உயிர் வாழ்தல் சிறந்ததா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்காமல் உயிர் விடுதல் சிறந்ததா என்பதைச் சிந்திப்பாயாக எனும் பொருள் தோன்றுதல் காண்க. இவ்வகை, மீண்டும் மீண்டும் சீதாதேவியை அச்சுறுத்திச் சொல்கின்ற இராவணன் சீதாதேவி, தன் தீய கருத்தை இரண்டுமாத எல்லைக்குள் ஒப்புக் கொண்டு தன்னை ஏற்காவிட்டாலும் கொல்லமாட்டான் என்ற உண்மையைக் கம்பர் எமக்குச் சொல்லுகின்றார். இதனை

போதரிக் கண்ணினுளை அகத்து வைத்து
உரப்பிப்போனுன்

எனக் கம்பர் கூறுகின்ற கவிதைத் தொடரினால் அறிகின்றோம். சீதாதேவியின் போதரிக் கண்களைப் பார்த்தவண்ணம் அவள் மேல் கொண்ட காதலால் தன் உள்ளத்தில் அவளையே குடியேற்றி வைத்தவனாய் இராவணன் செல்கின்றனென்பதைக் கூறிய கம்பர் அத்துடன் அவன் சீதாதேவிமேற் கொண்ட காதலைத் தன் உயிரை விட்டாலும் விடான் என்னும் உண்மையையும் நிலை நாட்டி உரைக்குந் திறன் பாராட்டற்குரியதாகும். இதனை,

கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக்கருதி உடல் புகுந்து
தடவினவோ ஒருவன் வாளி

என இராவணன் இறந்தபின் அவன் மனைவியாகிய மண்டோதரி சொல்லிப் புலம்புவதாலும் உணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தீயவல் அரக்கியர்கள் சீதாதேவியை அச்சங்காட்டி அதட்டுதலும் திரிசடையின் அன்புரையும்

[151—159 செய்யுள்]

சீதாதேவியை அச்சுறுத்தி அகன்ற இராவணன் காவல் அரக்கியரை நோக்கிப் பின்வருமாறு கட்டளையிடுகின்றான்:

வஞ்சிக்கொடிபோல் அழகுடைய மங்கை நல்லாள் சீதையை அஞ்சுவித்தாதல் அல்லது அறிவுரைத்தாதல் என்மேல் விருப்பங் கொள்ளும் வண்ணம் அவளை வசப்படுத்தி, என்னிடம் வந்து சொல்வீர்களாக. அவளை வசப்படுத்தி, என்னை அவள் விரும்பும் படி செய்யாது விடுவீர்களானால், உங்களுக்குயான், கொல்லும் நஞ்சைப் போலக் கொடியவனுவேன் என்று கூறினான்.

இங்ஙனம் இராவணன் கூறிய மாற்றங்களைக் கேட்ட அக்காவல் அரக்கியர்கள் மிக மிகக் கொடியவர்கள். சிரிப்பில்லாத கடிய முகத்தையும், பிளவுபட்ட வாயையும் கொடுஞ்சினத்தையும் இயல்பாகவே கொண்டவர்கள்.

இராவணன் அசோகவனத்தை விட்டுத் தன் அரண்மனைக்குச் சென்றபின், கொடிய குணத்தையும், வலிமையையும் உடைய அரக்கியர்கள், இராகுவென்னும் பாம்பினால் விழுங்கி விடப்பட்ட முழு மதியினைப் போல, இராவணனின் கொடுஞ் சினத்திற்கு இலக்காகி உய்ந்திருக்கும் சீதாதேவியை நெருங்கிச் சூழ்ந்தார்கள். அங்ஙனம் சூழ்ந்த அரக்கியர்கள், வருத்தியும் இகழ்ந்தும், அதட்டியும் சீதாதேவியை அச்சுறுத்தத் தொடங்கினர்கள்.

சில அரக்கியர்கள், ஒருவரின் ஒருவர் முந்தி முந்திச் சீதாதேவியைக் கடிதற்காக விரைந்தார்கள். கண்களில் நெருப்புக் கனல் பறக்க மின்னுகின்ற வாள், சூலம் என்பவற்றை உயர்த்திக்கொண்டு, இவளைக் கொல்லுங்கள், கொல்லுங்கள், கொன்று துண்டம் துண்டமாக வெட்டி உங்கள் வயிராரத் தின்னுங்கள், தின்னுங்கள், என்றெல்லாம் அதட்டி அச்சுறுத்தினர்கள்.

சில அரக்கியர்கள் சீதாதேவியை நோக்கி, நான்முகனின் புதல்வனுகிய புலத்தியனின் புதல்வன், விசித்திரவசு, விசித்திரவசுவின் புதல்வன் இராவணன். இராவணன் அழகிற்சிறந்தவன். ஆயிரம் சாயைகளைக்கொண்ட சாமவேதப் புலமையில், தலைசிறந்தவன், பேரறிஞன், தவச்சிறப்புடையவன், தூயஅன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளவன், அவன் உன் மேல் தூயகாதல் கொண்டுள்ளானே அல்லாமல் வேறென்ன தீமைகளைப் புரிந்தான்; புகல்வாயாக எனக் கேட்டார்கள்;

சில அரக்கியர்கள் சீதாதேவியை நோக்கிப் பெண்களிற் கொடியவளே! வெந்தபுண்ணில் அம்பைச் செலுத்தி விட்டாற் போன்ற கொடிய மொழிகளை இராவணன் முன்னிலையில் மொழிந்து, மண்ணுலகில் உள்ளவர்களில் தெய்வ மனிதர்களாகிய இராம இலக்குமணர், தம் குலத்தோடு அழிந்தொழியவும், உன் குலமாகிய சனகர் பரம்பரையும் அழிந்தொழியவும் தக்க கொடுஞ் செயலைப் புரிந்துவிட்டாய். நடுவு நிலைமை தவறாமல் நின்று உண்மையை ஆராய்ந்துணர்கின்றாய் இல்லை எனக் கூறினார்கள்;

இன்னும் சில அரக்கியர்கள் சீதாதேவியை நோக்கி, அறிவில்லாதவளே! நீ புகுந்த தசரதன் குலத்திற்கும், நீ பிறந்த சனகன் குலத்திற்கும், நெருப்பை மூட்டிவிட்டாய். ஓர் கணப் பொழுதில் அந்த இரு குலத்தினர்களும் மாய்ந்தொழிவார்கள்; நீயும் இனி உயிருடன் வாழமாட்டாய். யாவற்றையும் உன் மனத்திற் பதியும் வண்ணம் ஆராய்ந்து கூறிவிட்டோம் என்று அதட்டி அச்சுறுத்தினார்கள்;

இங்ஙனம் காவல் அரக்கியர்கள் தன்னைக் கொல்லத் தொடங்கிய கொடுமையைக் கண்டும் சிறிதும் கலங்காத சீதாதேவியானவள், எம் மன்னனாகிய இராவணன் எவற்றிலும் என்றும் வெற்றியையே ஈட்டும் விறல் படைத்தவன். ஆதலால் இவளைத் தின்னுங்கள் வாருங்கள், என்று கூவும் அரக்கியர்களின் உடம்பிலே உண்டான பரபரப்பையும், கொடிய வலிமை கொண்டவனாகிய இராவணன், அரக்கியர்களுக்குக்கூறிய கட்டளையையும், மனத்தில் எண்ணிப்பார்த்து, கண்களில் நீரைப் பெருக்கியவண்ணம் தன் நிலைமையை நினைந்து நகைத்தாள்;

இங்ஙனம் சீதாதேவி இருந்த நேரத்தில் திரிசடை அவளை நோக்கி, அம்மா, நான் கண்டகனவின் நல்ல பயனைச் சொல்லியிருக்கவும் இன்னும் கலங்குதல் நல்லதல்ல என்றாள். சீதாதேவியும் நல்லதென்று உள்ளம் நிறைந்தாள். சீதாதேவியை வருத்திய காவல் அரக்கியர்களும் திரிசடை கூறிய கனவின் செய்தி கேட்டு அவளின் கருத்தை ஆதரித்தவர்களாய் அடங்கி இருந்தார்கள்; தங்கள் அரசனாகிய இராவணனுக்குப் பயந்து, அவனின் ஆணையை அல்லாமல் வேறொன்றையும் அறியாதவர்களாய் சீதாதேவியைச் சுற்றிவளைத்திருந்த காவல் அரக்கியர்கள், முழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணர்ந்த முனிவர்களைப்போன்ற திரிசடை சொல்லிய களைப் பயனை ஏற்றுச் சீதாதேவியை அச்சுறுத்தும் செயலை விட்டு அமைதியாக இருந்தார்கள். சுருண்ட கூந்தலையுடைய சீதாதேவியும் சிறிது அன்பை நீங்கி உயிர் நிலைத்திருந்தாள்.

வசித்தென்பால் வருவீர்

151. அஞ்சுவித் தானு மொன்ரு லறிவுறத் தேற்றியானும்
வஞ்சியிற் செவ்வியாளை வசித் தென்பால்
வருவீ ரன்றேல்
நஞ்சுமக் காவெ னென்னு நகையிலா
முகத்துப் பேழ்வாய்
வெஞ்சினத் தரக்கி மார்க்கு வேறுவே
றுரைத்துப் போனான்.

கொண்டுகூட்டு: வஞ்சியில் செவ்வியாளை ஒன்ரூல் அஞ்சுவித்தானும் ஒன்ரூல் அறிவுஉற தேற்றியானும் வசித்து என்பால் வருவீர், அன்றேல உமக்கு நஞ்சு ஆவென என்னு நகை இலா முகத்துப் பேழ்வாய் வெம் சினத்து அரக்கிமார்க்கு வேறு வேறு உரைத்து (இராவணன்) போனான்.

பொருள்

வஞ்சியில் - வஞ்சிக்கொடியிலும், செவ்வியாளை - மிகுந்த அழகையுடையவளாகிய சீதையை, ஒன்ரூல் - யாதேனும் ஓர் உபாயத்தால், அஞ்சுவித்தானும்-பயப்படுத்தியாவது, (அல்லது) ஒன்ரூல்-யாதாயினும் ஒரு உபாயத்தால் (சூழ்ச்சியால்), அறிவு உற - (என் கருத்தை ஏற்று என்னுடன் சேர்ந்து வாழ்தலே தனக்கு நலனென்று எண்ணும்படி) அறிவிற்குப் பொருந்த, தேற்றியானும் - தெளியப்படுத்தியாவது, வசித்து - (அவள்) என்னை விரும்பும்வண்ணம் வசப்படுத்தி, என்பால் - (அங்ஙனம் அவள் உங்கள் சூழ்ச்சியினல் என்னை விரும்பி வசப்பட்டாளானல்) என்னிடத்தில், வருவீர் - (அந்தச்செய்தியைத் தெரிவிக்க என்னிடம்) வருவீராக, அன்றேல்-அங்ஙனம் உங்களால் அவள் என்னை விரும்புவண்ணம் வசப்படுத்த முடியாவிட்டால், உமக்கு நஞ்சு ஆவென்-உங்களுக்கு நான் நஞ்சுபோலக் கொடிய வனவேன் (நஞ்சுபோலக் கொடியவனய் உங்களுக்குத் துன்பம் செய்வேன் என்பதாம்). என்னு - என்று கூறி, நகைஇலா - இரிப்பில்லாத, (என்றும் கடுமையாயிருக்கும்) முகத்து - முகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும், பேழ்வாய் - பிளவுபட்ட வாயையும், வெம்சினத்து - கொடிய கோபத்தையுமுடைய, அரக்கிமார்க்கு - அரக்கிகளுக்கு (அரக்க மாதருக்கு), வேறுவேறு - தனித்தனியாக, உரைத்து - கூறி, போனான் - அவ்விடத்தைவிட்டு (இராவணன்) சென்றான்.

பொழிப்பு

வஞ்சிக்கொடியிலும் மிகுந்த அழகை உடையவளாகிய சீதையை யாதானும் ஓர் சூழ்ச்சியால் பயப்படுத்தியாவது அல்லது அறிவிற்குப் பொருந்தத் தெளியப்படுத்தியாவது என்னை அவள் விரும்பும்வண்ணம் வசப்படுத்தி அங்ஙனம் அவள் என்னை விரும்பிய நற்செய்தியைக் கூறுவதற்காக என்னிடம் வருவீர்; அங்ஙனம் உங்களால் வசப்படுத்த முடியாவிட்டால் உங்களுக்கு நான் நஞ்சுபோலக் கொடியவனாவேன் என்று சிரிப்பில்லாத முகத்தையும், பிளவுபட்ட வாயையும், கொடிய கோபத்தையுமுடைய அரக்கிமார்க்குத் தனித்தனியாகக் கூறி அவ்விடத்தை விட்டு இராவணன் சென்றான் என்பதாம்.

விளக்கம்

இச்செய்யுளில் காவலரக்கியரை நோக்கிச் சீதாதேவியை அச்சுறுத்தும்வண்ணம் கட்டளையிடுகின்ற இராவணனின் அதிகாரக் குரலைக் கேட்கின்றோம்:

சீதாதேவியைத் தன் தீய எண்ணத்திற்கு இசையவைத்தற்காக அவளைக் கெஞ்சி இரந்தும், வஞ்சின மொழிகளால் அச்சுறுத்தியும் பலகால் முயன்று வெற்றிகாணாத இராவணன், கண்டோர் அஞ்சத்தக்க கோர வடிவத்தையுடைய காவலரக்கியரால் சீதாதேவியை அச்சுறுவித்துத் தன்வசப்படுத்த முயல்கின்றான்:

அஞ்சுவித்தானும் ஒன்றால் அறிவுறத்
தேற்றியானும்
வஞ்சியிற் செவ்வியாளை வசித்து என்பால்
வருவீர்

என இராவணன் கூறுகின்ற மொழிகளில் ஆற்றுமையோடு கலந்த காமவேட்கை நின்று நிழலாடுவதைக் காண்கின்றோம்: அச்சம் காட்டியாதல் அறிவு காட்டியாதல் ஒல்லும் வகையால் முயன்று அவள் எனக்கு வசியப்பட்டுவிட்டான் என்னும் நல்ல செய்தியை வந்தெனக்குச் சொல்லுங்கள் எனக் காவலரக்கியருக்குக் கட்டளையிடுதல்போல இராவணன் கூறுகின்ற மொழிகளிலே அவன் சீதாதேவியின்மேற் கொண்ட காதல் உணர்ச்சி கரைகடந்துவிட்ட தென்பதை உணர்கின்றோம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சியிற் செவ்வியாஸ வசித்து என்பால்
வருவீர்

என்னுந் தொடரைப் படிக்கும்பொழுது இராவணன் சீதாதேவியின் மேற் கொண்ட காதலின் தன்மை எமக்கும் புலனாகின்றது. வெஞ்சின மிகுதியால் சீதாதேவியைக் கொன்று தின்பேனெனக் கொதித்தெழுந்த இராவணனின் நெஞ்சிலே வஞ்சியிலும் அழகிய சீதாதேவியின் எண்ணமே மலர்ந்திருந்தது என்பதை அறிகின்றோம்.

இங்ஙனம் சீதாதேவியை அச்சுறுத்தித் தன்னை விரும்பும் வண்ணம் வசப்படுத்தற்காக இராவணனால் ஏவப்படுகின்ற காவலரக்கியரின் தோற்றத்தைக் கம்பர் அஞ்சி அஞ்சி எமக்குச் சொல்லுகின்றார்.

நகை இலா முகத்துப் பேழ்வாய்
வெஞ் சினத்து அரக்கிமார்

என்னும் தொடர்களைப் படிக்கும்பொழுது உண்மையாகவே எவர்க்கும் அச்சம் தோன்றும் என்க.

இங்ஙனம் கோர உருவம் கொண்ட காவலரக்கியரைத் தேடி எடுத்துச் சீதாதேவியை அச்சுறுத்தும் வண்ணம் விடுத்த இராவணனின் சிந்தனைத்திறன் வியப்பிற்குரியதாகும்.

தீயவல்லரக்கிமார்கள்

152. போயின னரக்கன் பின்னைப் பொங்கரா
நுங்கிக் கான்ற
தூயவெண் மதிய மொத்த தோகையைத்
தொடர்ந்து சுற்றித்
தீயவல் லரக்கி மார்க டெழித்திழித் துரப்பிச்
சிந்தை
மேயின வண்ண மெல்லாம் விளம்புவா
னுடன்று மிக்கார்.

கொண்டுகூட்டு: அரக்கன் போயினன். பின்னை, தீயவல் அரக்கிமார்கள் பொங்கரா நுங்கிக் கான்ற தூய வெண்மதியம் ஒத்த தோகையைத் தொடர்ந்து சுற்றித் தெழித்து இழித்து உரப்பி சிந்தை மேயின வண்ணமெல்லாம் விளம்புவான் உடன்று மிக்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

அரக்கன்-(மேற்கூறியவாறு காவலரக்கியர்களுக்குக் கட்டளை யிட்டவனுகிய) இராவணன், போயினன் - அசோகவனத்தை விட்டு நீங்கித் தன் அரண்மனைக்குச்) சென்றான், பின்னை - அதன்பின்பு, தீய - கொடிய குணத்தையும், வல்-வலிமையையு முடைய, அரக்கிமார்கள் - அரக்கியர்கள், பொங்கரா - சினம் மிகுந்த (மிகுந்த சினத்தையுடைய) இராகுவென்னும் பாம்பி னால், நுங்கிக்கான்ற - விழுங்கி உமிழப்பட்ட (விடப்பட்ட), தூய - தூய்மை பொருந்திய (பரிசுத்தம் வாய்ந்த) வெண் மதியம் ஒத்த-வெண்மையான முழுமதியைப் (பூரண சந்திரனை) போன்ற, தோகையை-(சாயலால் மயிலை ஒத்த) பெண்ணுகிய சீதாதேவியை, தொடர்ந்து சுற்றி - நெருங்கிச் சூழ்ந்து, தெழித்து - வருத்தி, இழித்து - அவமதித்து, உரப்பி - அதட்டி (அச்சுறுத்தி), நின்தை மேயின வண்ணமெல்லாம் - தமது மனம் விரும்பினபடி யெல்லாம், விளம்புவான்-சொல்லுதற்கு, உடன்று மிக்கார் - கோபம் கொண்டு எழுந்தார்.

பொழிப்பு

இராவணன் அசோகவனத்தை விட்டுச் சென்றபின், கொடிய குணத்தையும் வலிமையையும் உடைய அரக்கியர்கள், சினம் மிகுந்த இராகு என்னும் பாம்பினால் விழுங்கிவிடப்பட்ட தூய்மை பொருந்திய வெண்மையான முழுமதியைப் போன்ற பெண்ணுகிய சீதாதேவியை நெருங்கிச் சூழ்ந்து வருத்தியும், அவமதித்தும் அதட்டியும் தமது மனம் விரும்பினபடியெல்லாம் சொல்லுதற்குக் கோபம்கொண்டு எழுந்தார்கள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் காவலரக்கியர்கள் சீதாதேவியைச் சூழ்ந்து துன்புறுத்தத் தொடங்குகின்ற செயல் சொல்லப்படுகின்றது.

இராவணனால் அச்சுறுத்தப்பட்டுக் கலங்கிய சீதாதேவி அவன் போனபின்பு விளங்கிய தன்மையைக் கம்பர் சிறந்த தோர் உவமானம் காட்டி எமக்கு விளக்குகின்றார்.

பொங்கரா நுங்கிக்கான்ற தூயவெண் மதியம்
ஒத்த தோகை

என்பதே கம்பர் காட்டும் உவமானமாகும். இதில் இராவண னுக்குக் கோபம் கொண்டெழுந்த இராகுவென்னும் பாம்பும், இராவணனின் கோபத்திற்காளாகி உய்ந்த சீதாதேவிக்கு இராகு என்னும் கோபம் மிக்க பாம்பினால் விழுங்கி உமிழப்பட்ட முழு மதியும் உவமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம் கொண்டெழுந்த இராகு என்னும் பாம்பு உவமானம்; கோபம் கொண்டெழுந்த இராவணன் - உவமேயம், கொடுமையும் இனமும் - பொதுத்தன்மைகளாகும்.

இராகு என்னும் பாம்பினுல் விழுங்கி உமிழப்பட்ட முழுமதி (பூரணசந்திரன்) - உவமானம்.

இராவணனின் சினத்திற்கு, இலக்காகி உய்ந்த சீதாதேவியார்- உவமேயம். விடுபடுதலும் ஒளிகுறையாது விளங்குதலும் - பொதுத் தன்மைகளாகும்.

முழுமதிபோலக் கற்பினுலும் பொறுமையினுலும் குடிப் பிறப்பினுலும் பேரொளி வீசி விளங்குகின்ற சீதாதேவியானவள், கொடிய இராகு என்னும் பாம்பு போன்ற இராவணனின் சினத்திற்கிலக்காகியும், தன் பெண்தன்மையிற் குறையாது விளங்கிப், பேரொளி வீசுகின்றுள் என்பதே கம்பரின் கருத்தாகும்.

இராகுவினுல் விழுங்கப்படுகின்ற முழுமதி, இராகு தன்னை ஒரு பக்கத்தால் விழுங்க மறுபக்கத்தால் உலகிற்கு ஒளியை உதவுதல் போல, இராவணனின் சினத்திற்கிலக்காகிச் சிறையிலிருந்து வருந்துகின்ற சீதாதேவியும், தன் உடலழகு சிதைந்தாலும் உள்ளழகாகிய கற்பினுல் தான் பிறந்த குலத்தையும் புகுந்த குலத்தையும் ஒளி விளங்க வைத்தான் என்னும் வேறோர் குறிப்புப் பொருள் தோன்றுவதையும் காண்க. இதனை

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண் மாஞாலம் விளக்குறூஉம் திங்கள்போல்
செல்லாமை செல்வன் நேர்நிற்பினும்
ஒப்புரவிற்கு
ஒல்கார் குடிப்பிறந்தார்.

எனவரும் நாலடியார்ச் செய்யுளை நோக்கி உணர்க

எனவே தூய வெண்மதியம் எனச் சிறப்பிக்கப்பட்ட பூரண சந்திரனைச் சீதாதேவிக்குக் கம்பர் உவமையாகக் கூறியுள்ளார் என்பதை உணர்கின்றோம். திருப்பாற்கடலில் திருமகளோடு மதியும் ஒன்றுய்த் தோன்றியது என்னும் வரலாற்றையும் நோக்குக.

இங்ஙனம் இராவணனின் சினத்திற்கு இலக்காகி உய்ந்த சீதாதேவியை அவனுல் ஏவப்பட்ட காவலரக்கியர்கள் சூழ்ந்து வருத்தத் தொடங்கிய செயலைக் கம்பர் ஆழ்ந்த வருத்தத்துடன் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவல் அரக்கிமார்கள் தெழித்து
இழித்து உரப்பிச் சிந்தை
மேயின வண்ண மெல்லாம்
விளம்புவான் உடன்று மிக்கார்

என்னும் தொடர்களைப் படிக்கும் பொழுது காவல் அரக்கிமார் கள் ஆற்றுகின்ற கொடுமைகள் அப்படியே எமது உள்ளத்தில் தோன்றுகின்றன. அவர்கள் தங்கள் மனம் போனபடியெல்லாம் சீதாதேவியை வருத்தியும். வைதும் அவமதித்தும், அதட்டி அச்சுறுத்தியும் சொல்லமுடியாத அல்லல்களைச் செய்ய முனைகின் றார்கள் என்பதாம்.

தின்மின் தின்மின்

153. முன்முன் னின்றூர் கண்கனல் சிந்த முடுகுற்றூர்
மின்மின் னென்னுஞ் சூலமும் வாளும்
மிசையோச்சிக்
கொன்மின் கொன்மின் கொன்று குறைத்துக்
குடராரத்
தின்மின் தின்மின் னென்று தெழித்தார்
சிலரெல்லாம்.

கொண்டுகூட்டு: சிலர் எல்லாம் முன் முன் நின்றூர் கண் கனல் சிந்த முடுகுற்றூர், மின் மின் என்னும் சூலமும் வாளும் இவை ஓச்சி கொன்மின் கொன்மின் கொன்று குறைத்து குடர் ஆர தின்மின் தின்மின் என்று தெழித்தார்.

பொருள்

சிலர் எல்லாம் - (அக்காவலராக்கியர் கூட்டத்தில் உள்ள) அரக்கிமார்களில் சிலபேர்கள், முன் முன்நின்றூர் - (சீதாதேவி யைக் கடிவதற்காக) ஒருத்தியைவிட மற்றொருத்தி முற்பட்டு நின்றவராய், கண்கனல் சிந்த - கண்களில் நெருப்புப் பொறி சிதற, முடுகுற்றூர் - விரைந்தவர்களாய், மின் மின் என்னும் - மின்னலைப்போல் பளிச்சுப் பளிச்சென்று ஒளிவிடுகின்ற, சூலமும் - சூலப்படைகளும், வாளும் - வாட்படைகளும், இவை - என்று சொல்லப்படுகின்ற இவைகளை, ஓச்சி - உயரத் தூக்கி (மேல்-உயர்த்தி) கொன்மின் கொன்மின் - கொல்லுங்கள் கொல்லுங் கள், கொன்று குறைத்து - அங்ஙனம் கொன்று துண்டு துண் டாக்கி, குடர்ஆர - வயிறு நிறையும் வண்ணம், தின்மின் தின் மின் - தின்னுங்கள் தின்னுங்கள், என்று-என்றும் கூறி, தெழித் தார் - அதட்டி அச்சுறுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு

அரக்கிமார்களில் சிலபேர் சீதாதேவியைக் கடிதற்காக ஒருத்தியைவிட மற்றொருத்தி மூற்பட்டு நின்ற வரராய் கண்களில் நெருப்புப் பொறி சிதற விரைந்தவர்களாய் மின்னலைப்போல் பளிச்சுப் பளிச்சென்று ஒளி வீசுகின்ற சூலப்படைகள் வாட்படைகள் என்னும் இவைகளை உயரத்தூக்கி (இவளை) கொல்லுங்கள் கொல்லுங்கள் அங்ஙனம் கொன்று துண்டாக்கிய உடலை உங்கள் வயிறு நிறையும் வண்ணம் தின்னுங்கள் தின்னுங்கள் என்று கூறி (சீதாதேவியை) அதட்டி அச்சுறுத்தினர்கள் என்பதாம்;

விளக்கம்

இச் செய்யுளில் காவலரக்கியரின் கொடுஞ் செயல்களையும் கொடிய மொழிகளையும் கம்பர் எடுத்துக் காட்டுகின்றார்.

சீதாதேவியைச் சூழ்ந்து வைதும், வருத்தியும் இன்னல் புரிகின்ற காவல் அரக்கியர்களின் வாய்களில், தீய சொற்களேயன்றி தூய சொற்கள் ஒன்றும் இடம் பெறுதென்பதை இதனால் அறிகின்றோம்; இப்பண்புகள் காவல் அரக்கியர்க்கு என்றென்றும் இயல்பானவையாகும்;

வெல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர்
கூட்டந் தோறும்
கொல்லெறி குத்தென் றூர்த்துக் குழுமிய
வோசை யன்றிச்
சில்லரித் துடியுங் கொம்புஞ் சிறுகணை குளியுங் கூடிக்
கல்லெனு மொலியின் மேலுங் கறங்கிசை
யருவியெங்கும்;

என சேக்கிழார் பெருமான் கண்ணப்பர் புராணத்தில் வேடுவர்களின் இயல்பான பண்பைக் கூறும் இச் செய்யுளையும் நோக்குக;

வேதம் ஆயிரம் வல்லான்

154. வையந் தந்த நான்முகன் மைந்தன் மகன்
மைந்தன்
ஐயன் வேத மாயிரம் வல்லா னறிவாளன்
மெய்யன் புன்பால் வைத்துள தல்லால்
வினவென் றேனே
செய்யும் புன்மை யாதுகொ லென்றார்
சிலரெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: சிலர் எல்லாம் (சீதாதேவியை நோக்கி) வையம் தந்த, நான்முகன் மைந்தன், மகன் மைந்தன் ஐயன்; ஆயிரம் வேதம் வல்லான், அறிவாளன், வினை வென்றோன், உன் பால் மெய்யன்பு வைத்துளது அல்லால், செய்யும் புன்மை யாது (கொல்) என்றார்.

பொருள்

சிலர் எல்லாம் - அரக்கியர்களில் சிலர் (சீதாதேவியை நோக்கி) வையம் தந்த - உலகத்தைப் படைத்த, நான் முகன் மைந்தன் - நான்கு முகங்களையுடைய படைப்புக் கடவுளாகிய பிரம்மாவின் புதல்வனை புலத்தியனுக்கு, மகன் மைந்தன் - மகனாகிய விச்சிரவசுவின் புதல்வன் இராவணன், ஐயன் - (அந்த இராவணன்) அழகுடையவன், ஆயிரம் வேதம் வல்லான் - ஆயிரம் சாகைகளைக் கொண்டு விளங்கும் சாமவேதத்தில் மிக்க புலமைபடைத்தவன்; (சாமவேதப் புலமையில் மிக வல்லவன் என்பதாம்) அறிவாளன் - நுண்ணறிவும் உடையவன், வினைவென்றோன்-(தவம் செய்து) தீவினையை ஒழித்தவனுமான இராவணன், உன்பால் - உன்னிடத்தில், மெய்யன்பு - உண்மையான காதலை, வைத்துளது - வைத்திருப்பது, அல்லால் - அல்லாமல், செய்யும் (அவன்) செய்துள்ள, புன்மை யாது - இழிந்த செயல் (இழி தொழில்) யாதுளது, என்றார் - என்று கேட்டார். கொல்-அசை.

பொழிப்பு

அரக்கியரிற் சிலர் சீதாதேவியை நோக்கி உலகத்தைப் படைத்த பிரமாவின் புதல்வனாகிய புலத்தியனின் புதல்வன் விசிரவசு. இந்த விச்சிரவசுவின் புதல்வனே இராவணனாவான்; அவன் அழகுடையவன்; ஆயிரம் சாகைகளைக் கொண்ட சாம வேதப் புலமையில் தலை சிறந்தவன். நுண்ணறிவு உடையவன். தவம் செய்து தீவினையை ஒழித்தவன். இச்சிறப்புக்களை உடையவனாகிய இவன் (இராவணன்) உன்னிடத்தில் உண்மையான காதலை வைத்திருப்பது அல்லாமல் அவன் செய்துள்ள இழி செயல் யாதுளது எனக் கேட்டார்கள் என்பதாம்.

விளக்கம்

இச் செய்யுளில் இராவணனின் உயர் குடிப் பிறப்பு, அழகு, கல்வி, அறிவு, அன்பு என்பவற்றைப் பாராட்டிக் கூறுகின்ற காவலரக்கியரின் பெருமிதக் குரலைக் கேட்கின்றோம்.

இராவணன் காமவேட்கை மிக்க தீயவனாக விளங்கினாலும் அவனிடத்தில் எவருக்குமில்லாத சிறந்த பண்புகளெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளன என்பதைக் காவலரக்கியரின் வாயிலாகக் கம்பர் எமக்குக் காட்டுகின்றார்.

வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன்
மைந்தன்
ஐயன் வேதம் ஆயிரம் வல்லான் அறிவாளன்

என்னும் கவிதைத் தொடர்களைப் படிக்கும் பொழுதே இராவணனின் கிறந்த இயல்புகள் எல்லாம் எம் உள்ளத்தில் பதிந்து விடுகின்றன.

வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன்
மைந்தன்

என்பதனால் இராவணனின் உயர் குடிப்பிறப்பும், ஐயன் என்பதனால் கண்டோர் வியக்கத்தக்க அவனின் பேரழகும், ஆயிரம் வேதம் வல்லான் என்பதனால் அவனின் கல்விப்பரப்பும், அறிவாளன் என்பதனால் அவனின் நுண்ணறிவும், வினைவென்றோன் என்பதனால் அவனின் தவச் சிறப்பும், மெய்யன்பு உன்பால் வைத்துளன் என்பதனால் அவனின் அன்பும் புலனாதல் காண்க.

படைப்புக் கடவுளாகிய நான்முகனின் புதல்வன் புலத்தியனென்றும், புலத்தியனின் புதல்வன் விச்சிரவசுவென்றும், விச்சிரவசுவின் புதல்வன் இராவணனென்றும் வருகின்றது பரம்பரை வரலாறு என்பதாம். இதனை.

நீ அயன் முதல் குலம் இதற்கு ஒருவன் நின்றாய்
ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து அறிவு
அமைந்தாய்
தீயினை நயப்புறுதல் செய்வினை தெரிந்தாய்
ஏயின உறத்தகைய இத்துணையவே யோ

எனவும்

புலத்தியன் வழிமுதல் வந்த பொய் அறு
குலத்து இயல்பு அழிந்தது

எனவும் கும்பகருணன் இராவணனிடம் கூறியதாகவரும் இச் செய்யுட்களையும் ஒப்பிட்டு நோக்குக.

இனி, காவலரக்கியர்கள் இராவணன் சீதாதேவியின் மேல் கொண்ட காதலை மெய்யன்பு எனப் பாராட்டி உரைத்துச் சீதாதேவியை மருட்ட முனைகின்றார்கள்.

மெய் அன்பு உன்பால் வைத்துளது அல்லால்
வினைவென்றோன்
செய்யும் புன்மையாது

என அவர்கள் சீதாதேவியை மிகத்துணிவுடன் கேட்கின்றார்கள்.

சுந். கா. 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணில் தீயோய்

155. மண்ணிற் றீய மானுயர் தத்தம் வழியோடும்
பெண்ணிற் றீயோய் நின்முதன் மாயும்
பிணிசெய்தாய்
புண்ணிற் கோலிட் டானன சொல்லிப்
பொதுநோக்கா
தெண்ணிற் காணுய் மெய்ம்மையை யென்றூர்
சிலரெல்லாம்.

கொண்டுகூட்டு: சிலரெல்லாம், பெண்ணில் தீயோய், புண்ணில் கோல் இட்டால் அன சொல்லி, மண்ணில் தீய மானுயர் தத்தம் வழியோடும் மாயும் நின்முதல் மாயும் பிணி செய்தாய், பொது நோக்காது எண்ணில், மெய்ம்மையைக் காணுய், என்றூர்.

பொருள்

சிலரெல்லாம் - அரக்கியர்களிற் சிலர், (சீதாதேவியை நோக்கி) பெண்ணில் தீயோய்-பெண்களிற் கொடிய (பண்புடைய) வளே, புண்ணில்-வெந்த புண்ணின்கண், கோல் இட்டால் அன சொல்லி - அம்பைச் செலுத்தினுற்போன்ற கொடிய மொழி களே, (எமது அரசனுகிய) இராவணனே எதிர்த்துச் சொல்லி, மண்ணில் - இந்நிலவுலகத்தின்கண் உள்ள மனிதர்களில், தீய மானுயர்-கொடிய மானிடர்களாகிய இராம இலக்குமணர்கள், தத்தம் வழியோடும் - தங்கள் தங்கள் (அவர் அவர்களுக்குரிய) தாய்வழி தந்தைவழி என்னும் இரண்டு குலங்களோடும் (வம் மிசங்களோடும்) மாயும் - அழிந்துபோகும்படியாகவும், நின் - உனது குலத்தின், முதல்-மூலமும் (வேரோடு) மாயும்-அழிந்து போகும்படியாகவும், பிணி செய்தாய் - நோயைப்போன்ற கொடுந்துன்பத்தை உண்டாக்கிவிட்டாய், பொதுநோக்காது - நடுநிலையில் நின்று ஆராயாது, எண்ணில் - ஒரு பக்கத்தையே சார்ந்து நின்று ஆராய்ந்தால், மெய்ம்மையை - உண்மையை, காணுய் - அறியமாட்டாய் (நடுவுநிலைமையில் நின்று ஆராய்ந் தால் உனக்கு உண்மை புலனுகும் என்பதாம்) என்றூர் - (ஆன படியால் நீ செய்யத்தக்கதைச் செய்வாயாக) என்று கூறினர்.

பொழிப்பு

அரக்கியர்களிற் சிலர் சீதாதேவியை நோக்கிப் பெண்களிற் கொடியவளே! வெந்த புண்ணின் கண் அம்பைச் செலுத்தினுற் போன்ற கொடிய மொழிகளே எமது அரசனுகிய இராவணனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்து நீ சொல்லியதினால் நிலவுலகத்திலுள்ள மனிதர்களிற் கொடிய மானிடர்களாகிய இராம இலக்குமணர்கள் தங்கள் தங்கள் தாய்வழி தந்தைவழி என்னும் இரண்டு குலங்களோடும் அழிந்து போகும்படியாகவும், அத்துடன் உனது குலமும் அழிந்து போகும் படியாகவும், நோயைப் போன்ற பெருந்துன்பத்தை உண்டாக்கி விட்டாய், நடுநிலையில் நின்று ஆராயாது ஒருபக்கத்தையே சார்ந்து நின்று ஆராய்ந்தால் உண்மையை அறியமாட்டாய்; ஆனபடியால் நீ செய்யத் தக்கதைச் செய்வாயாக என்று கூறினர்கள்;

விளக்கம்

இச் செய்யுளில் எங்கள் அரசனுகிய இராவணனே மதியாது அவன் முன்னிலையில் புண்ணில் அம்பை நுழைத்தாற்போன்ற கொடுமொழிகளைக் கூறி, நீ புகுந்த குலமும் பிறந்த குலமும் அழிந்துபோகும்படியான பெருந்துன்பத்தை உண்டாக்கி விட்டா யெனச் சீதாதேவியை அச்சுறுத்துகின்ற காவலரக்கியரின் கடிய மொழிகளைக் கேட்கின்றோம்.

சீதாதேவி இராவணனின் எண்ணத்தை ஏற்காமல் அவனை வைதுரைத்ததினால், தான் பிறந்த குலமும் புகுந்த குலமும் அழியக்கூடிய பெருந்துன்பத்தை வருவித்துக்கொண்டாள் என் பதை எண்ணிய காவலரக்கியர் அவளைப் பெண்ணிற் தீயோய் என வைதார்கள் என்க;

இராம இலக்குமணர்கள் சூர்ப்பணகையின் மூக்கு முதலிய உறுப்புக்களை வெட்டியும் கரன் முதலிய அரக்கர்களைக் கொன்றும் அரக்கர் குலத்திற்குப் பெருந்தீங்கு இழைத்தார்கள் என்பதை எண்ணிய காவலரக்கியர்கள், அவர்களை மண்ணில் தீய மானுயர் என வைதுரைத்தார்கள் என்க;

காமவேட்கையால் வருந்துகின்ற இராவணன் உள்ளத்தில் சீதாதேவி வைதுரைத்த வசை மொழிகள் முன்னமே தீயினால் வெந்துள்ள புண்ணில் அம்பைச் செலுத்தினாற் போலப் பெருந் துன்பத்தை உண்டாக்கி அதனால் அவன் உள்ளத்தில் கோபத்தை மிக்கெழச் செய்து விட்டன என்பதை உணர்த்தப் புண்ணிற் கோலிட்டால் அனை சொல்லி எனக் காவலரக்கியர்கள் சீதாதேவி யைக் கடிந்துரைத்தார்கள் என்பதைக் காண்கின்றோம்.

வெந்தபுண் – உவமானம், காமவேதனையால் வருந்துகின்ற இராவணனின் உள்ளம் - உவமேயம். துன்பமிகுதி-பொதுத்தன்மை யாகும்;

வெந்த புண்ணில் அம்பைச் செலுத்துதல் - உவமானம்; காம வேட்கையால் வருந்துகின்ற இராவணன் உள்ளத்தில் சீதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதுரைத்த வசைமொழிகள் புகுதல் - உவமேயம்: துன்பத்தை மீண்டும் மீண்டும் பெருக்குதலும் ஆறுதலேதனையும் - பொதுத்தன்மைகளாகும்;

இங்ஙனம் நீ எங்கள் அரசனுகிய இராவணனின் கருத்தை ஏற்காமல் மறுத்து நிற்பதினுல் நீ புகுந்த குலமும் பிறந்த குலமும் அழிந்து படும்படியான பெருந் துன்பத்தை உண்டாக்கி விட்டாயென, நாங்கள் கூறுகின்ற உண்மையை நீ நடு நிலைமையினின்று ஆராய்ந்து தெளிந்து ஆகவேண்டியவற்றைச் செய்வாயாக என மீண்டும் காவலரக்கியர்கள் சீதாதேவிக்கு அறிவெடுத்துரைக்கின்றூர்கள் என்பதை அறிகின்றேம்.

பொது நோக்காது எண்ணில் மெய்ம்மையைக் காணுய் என்பதே அரக்கியர்கள் கூறும் அறிவுரையாகும். இதனுல் நீ பிறந்தகுலமும் புகுந்த குலமும் அழியுமென அச்சுறுத்தியும், நாங்கள் கூறியவற்றை நடுநிலைமையில் நின்று ஆராய்ந்து காண்பாயாக என அறிவுரைத்தும் சீதாதேவியை வசப்படுத்தக் காவலரக்கியர்கள் முயல்கின்றூர்கள் என்பதை உணர்கின்றேம்;

புக்கவழியும் போந்தவழியும்

156. புக்க வழிக்கும் போந்த வழிக்கும் புகைவெந்தீ
ஒக்க விதைப்பா னுற்றனை யன்றே
வுணர்வில்லாய்
இக்கண மிற்றுய் யுன்னின மெல்லா மினிவாழ
சிக்க வுரைத்தே மென்று தெழித்தார்
சிலரெல்லாம்

கொண்டுகூட்டு: சிலர் எல்லாம், உணர்வில்லாய் புக்க வழிக்கும் போந்த வழிக்கும் புகை வெந்தீ ஒக்க விதைப்பாள் உற்றனை அன்றே இக்கணம் இற்றுய் இனி உன் இனமெல்லாம் வாழ, சிக்க உரைத்தேம் என்று தெழித்தார்.

பொருள்

சிலர் எல்லாம் - அரக்கிமார்களிற் சிலர், (சீதாதேவியை நோக்கி) உணர்வில்லாய்-(ஆராய்ந்துணரும்) அறிவில்லாதவளே, புக்கவழிக்கும் - நீ புகுந்த மரபாகிய தசரதன் குலத்திற்கும், போந்தவழிக்கும் - நீ பிறந்த மரபாகிய சனகன் குலத்திற்கும், புகைவெந்தீ - புகைகின்ற கொடுநெருப்பினை, ஒக்க விதைப்பான்-ஒருசேர (ஒன்றுக) வாரி இறைத்தற்கு (பரவச் செய்தற்கு) உற்றனை - நீ பொருந்தியுள்ளாய், இக்கணம் - (நாங்கள் கூறுகின்றபடி எங்கள் அரசனுகிய இராவணனின் கருத்தை நீ நிறைவேற்றுவிட்டால்) இந்தக் கணப்பொழுதிலேயே, இற்றுய் - நீ அழிந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிவாய், இனி - இனிமேல், உன் இனமெல்லாம் - உனது கூட்டமாகிய கற்றம் எல்லாம், வாழா - அழிந்துபோகும், சிக்க உரைத்தேம். உறுதிபாகச் சொல்லி விட்டோம். என்று தெழித்தார் - என்று அதட்டிக்கூறி அச்சுறுத்தினர்கள். அன்றே - அசை.

பொழிப்பு

அரக்கிமார்களிற் சிலர் சீதாதேவியை நோக்கி அறிவில்லாதவளே! நீ புகுந்த மரபாகிய தசரதன் குலத்திற்கும் நீ பிறந்த மரபாகிய சனகன் குலத்திற்கும் புகைகின்ற கொடு நெருப்பினை வாரி இறைத்தற்குப் பொருந்தியிருக்கின்றாய், நாங்கள் கூறுகின்ற கருத்தை நீ ஏற்காவிட்டால் இக்கணப்பொழுதில் அழிந்தொழிவாய், இனிமேல் உனது கூட்டமாகிய சுற்றமெல்லாம் அழிந்து போகும். உறுதியாகச் சொல்லி விட்டோம் என்று அதட்டிக்கூறி அச்சுறுத்தினர்கள் என்பதாம்.

விளக்கம் :

இச் செய்யுளில் நீ எமது அரசனுகிய இராவணனின் எண்ணத்தை ஏற்காமல் எதிர்த்து நிற்பதனால், நீ புகுந்த மரபாகிய தசரதன் குலமும் நீ பிறந்த மரபாகிய சனகன் குலமும் ஒருசேர எரிந்து அழிதற்கான பெருநெருப்பை மூட்டிவிட்டாயெனச் சீதாதேவியிடப் சொல்லி, அவளை அச்சுறுத்துகின்ற காவலரக்கியரின் கடிய மொழிகளைக் கேட்கின்றோம்.

புக்கவழிக்கும் போந்தவழிக்கும் புகை வெந்தீ
ஒக்கவிதைப்பான் உற்றனை அன்றே
உணர்வில்லாய்

எனக் காவலரக்கியர்கள் சீதாதேவியை நோக்கிக் கூறுகின்ற குரலிலே நீ ஒருத்தி பிறந்ததினால் நீ புகுந்த குலமும் அழியப் போகின்றது. நீ பிறந்த குலமும் அழியப்போகின்றது. இங்ஙனம் இரு பெரும் மரபுகளும் அழியத்தக்க பெருந்தீமையை இயற்றுகின்ற கொடும் பாவியாய் நீ விளங்குகின்றாய் என அச்சங்காட்டி அறிவுறுத்துகின்ற ஆற்றல் அலைமோதுகின்றது.

இராவணனின் எண்ணத்தை ஏற்றுக்கொள்ளாத சீதாதேவியின் செயலை நெருப்பாகக் கூறிய கம்பர் அந்நெருப்பினால் எரிந்தழிய நிற்கும் சீதை புகுந்த மரபையும், பிறந்த மரபையும் மரங்களாகக் கூறாது விடுத்துள்ளார் என அறிகின்றோம்.

இங்ஙனம் எடுத்துக்கொண்ட இரண்டு பொருள்களில் ஒன்றை உருவகம் செய்து மற்றைய பொருளை உருவகம் செய்யாமல் புலவன் கூறுகின்ற நெறியை ஏகதேச உருவகம் என்னும் அணியாகக் கொள்ளுதல் மரபாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சீதாதேவி இராவணனின் எண்ணத்தை ஏற்காது மறுத்துரைக்கும் செயலாகிய நெருப்பினுல், அவள் புகுந்த குலத்திலுள்ள உறவினராகிய மரங்களும், அவள் பிறந்த குலத்திலுள்ள உறவினராகிய மரங்களும் எரிந்துபடும் என்பதாம்.

சீதாதேவி புகுந்த மரபிலும் பிறந்த மரபிலும் வழிவழியாகப் பெருகிவருகின்ற உறவினர்களே, கிளைகளைப் பல திசைகளிலும் விட்டு வளர்ந்துள்ள மரங்களாக உருவகப்படுத்திக் கூறுமாறு பொருத்திவைத்த கம்பரின் புலமை பாராட்டற்தரியதாகும்.

சீதாதேவி இராவணனின் கருத்தை ஏற்காது மறுத்து நின்றதினுல்தான், அவள் புகுந்த குலமும் பிறந்த குலமும் சிறந்து விளங்கியது என்பதை உணராத காவலரக்கியர்கள்,

புக்கவழிக்கும் போந்தவழிக்கும் புகை வெந்தீ
ஒக்கவிடைப்பான் உற்றனை அன்றே
உணர்வில்லாய்

என இழித்துரைப்பார்களாயினர் என்க.

உன்குலம் உன்னது ஆக்கி உயர்புகழ்க்கு ஒருத்தி ஆய
தன்குலம் தன்னது ஆக்கி தன்னை இத்தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்கு ஈந்து வானவர் குலத்தை வாழ்வித்து
என்குலம் எனக்குத் தந்தாள் என்இனிச் செய்வது எம்மோய்

என அனுமான், சீதாதேவி இராவணன் கருத்தை ஏற்காது தன் கற்பையும் காதலையும் காத்திருந்த பெருந்தவத்தினுல் அவள் புகுந்த மரபாகிய உன் குலத்தையும், அவள் பிறந்த மரபாகிய தன் குலத்தையும் மேம்படுத்திவிட்டாளென, இராம பிரானிடம் கூறுவதாக வரும் இச்செய்யுளை ஒப்பிட்டு நோக்குக.

வெல்வான் என்கோன்

157. கொல்வா னுற்றோர் பெற்றியும் யாதுங்
குறையாதோன்
வெல்வா னங்கோன் றின்னுமின் வம்மென்
பவர்மெய்யும்
வல்வாய் வெய்யோ னேவலு மெல்லா
மனம்வைத்தாள்
நல்வாய் நல்லாள் கண்கள் கலுழ்ந்தே
நகுகின்றுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: கொல்வான் உற்றோர் பெற்றியும் நம்கோன் யாதும் குறையாதோன் வெல்வான் வம், தின்னுமின் என்பவர் மெய்யும் வல்வாய் வெய்யோன் ஏவலும் எல்லாம் மனம் வைத்தாள் (வைத்தவளாகிய) நல்வாய் நல்லாள் கண்கள் கலுழ்ந்தே நகுகின்றாள்.

பொருள்

கொல்வான் உற்றோர் - தன்னைக் கொல்லவந்த காவலரக்கியருடைய, பெற்றியும் - கொடுந்தன்மையும், நம்கோன் - நம் அரசனை இராவணன், யாதும் குறையாதோன் - ஒன்றிலும் ஓர் குறையும் இல்லாதோன், வெல்வான்-எவற்றிலும் வெற்றியே அடைபவன் (ஆனபடியால்) வம் - வாருங்கள், தின்னுமின் - (இவளைத்) தின்னுங்கள், என்பவர் - என்று அச்சுறுத்துகின்ற காவலரக்கியரின், மெய்யும் - உடலின் பரபரப்பும், வல்வாய் - கொடிய தீய சொற்களே பயிலும் வாயினை உடைய, வெய்யோன் - கொடியவனான இராவணன், ஏவலும் - (காவலரக்கியர்க்கு) இட்டகட்டளையும், எல்லாம் - ஆகிய இவற்றையெல்லாம், மனம் வைத்தாள் - மனத்தின்கண் எண்ணி, நல்வாய் - நல்ல அறமொழிகளைக் கூறுகின்ற வாயையுடைய, நல்லாள் - தூயவளாகிய சீதாதேவி, கண்கள் கலுழ்ந்தே - கண்களினின்று நீர் பெருக அழுதுகொண்டே, நகுகின்றாள் - (தனக்கு நேர்ந்த நிலைமையை நினைந்து) சிரிப்பாளானாள்.

பொழிப்பு

தன்னைக் கொல்ல வந்த காவலரக்கியருடைய கொடுந்தன்மையையும் நம் அரசனை இராவணன் ஒன்றிலும் ஓர் குறையும் இல்லாதோன், எவற்றிலும் வெற்றியே அடைபவன் ஆனபடியால் வாருங்கள்; இவளைக்கொன்று தின்னுங்கள் என்று தன்னை அச்சுறுத்துகின்ற காவலரக்கியரின் உடற் பரபரப்பையும், கொடிய தீய சொற்களையே பயிலும் வாயையுமுடைய கொடியவனாகிய இராவணன் அக்காவலரக்கியர்க்கு இட்ட கட்டளையையும் ஆகிய இவற்றையெல்லாம் தன் மனத்தின்கண் எண்ணி நல்ல அறமொழிகளைக் கூறுகின்ற வாயையுடைய தூயவளாகிய சீதாதேவி கண்களினின்று நீர் பெருக அழுது கொண்டே தனக்கு நேர்ந்த நிலைமையை நினைந்து சிரிப்பாளாயினாள்.

விளக்கம்

இச்செய்யுளில் காவலரக்கியர்கள் கொல்வோமென்று தன்னை அதட்டி அச்சுறுத்த, அழுகையும் சிரிப்புமுடையவளாய் விற்றிருந்த சீதாதேவியின் மனநிலை சொல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலரக்கியர்கள் தன்னைக் கொன்று தின்னப் போவதாகக் கூறுகின்ற வஞ்சினை மொழிகளையும், அவர்களின் உடலின் பரபரப்பையும் அவர்களுக்குக் கொடியோனாகிய இராவணன் கூறிச் சென்ற கட்டளை மொழியையும் எண்ணிய சீதாதேவியானவள் தனக்கு நேர்ந்துள்ள துன்பநிலையையும், அத்துன்ப நிலையுள்ளும் தான் தன் ஆருயிர்த் தலைவனாகிய இராமபிரானையே எண்ணித் தவங்கிடந்த ஆற்றலினால், தன் கற்பையும் காதலையும் களங்கமின்றிக் காப்பாற்றியிருக்கின்ற பெரும் வெற்றியையும் எண்ணியவுடன் அழுகையும் சிரிப்பும் ஒரே நேரத்தில் தோன்ற வீற்றிருந்தாள் என்பதாம்;

எல்லாம் மனம் வைத்தாள் நல்லாய்
நல்லாள் கண்கள் கலுழ்ந்தே நகுகின்றாள்.

எனக் கம்பர் சிரிப்பும் அழுகையும் கொண்டவளாய்ச் சீதாதேவி இருந்த மனநிலையை அப்படியே சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார் என்க.

கருணை பொழிந்து உலகுயிர்களையெல்லாம் வாழ்விக்கின்ற உலகின் தாயாகிய சீதாதேவியின் கண்கள் துயரத்தால் கண்ணீர் வடிக்கிற நிலையை எண்ணிய கம்பர் நல்லாள் கண்கள் கலுழ்ந்தே எனச் சொல்லித் துன்பப்படுகின்றார். இங்ஙனம் துன்பக் கண்ணீர் வடிக்கின்ற சீதாதேவியின் கண்கள் மிக அண்மையில் இன்பக் கண்ணீரை (ஆனந்தக் கண்ணீரை) வடிக்குமென்பதே கம்பரின் கருத்தாகும்.

என்றும் கொடிய சொற்களையே பயிலும் இராவணனின் வாயினை வல்வாய் என்றும், அவ்விராவணன் கூறிய கொடும் மொழிகளுக்கெல்லாம் மறுமொழியாக இனிய அறவுரைகளை எடுத்துக் கூறிய சீதாதேவியின் வாயை நல்வாய் என்றும் சொல்லிய கம்பரின் புலமை போற்றற்குரியதாகும்.

அன்னே நன்றென்றாள்

158. இன்னே ரன்ன வெப்பிய காலத் திடைநின்றாள்
முன்னே சொன்னேன் கண்டனை வின்
முடிவம்மா
பின்னே வாள்வா பேதுறு வீரேற் பிழையென்றாள்
அன்னே நன்றென் றாளவ ரெல்லா மவிவுற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுகூட்டு: இன்னேர் அன்ன எய்திய காலத்து இடை நின்ருள், அம்மா கண்ட கனவின் முடிவு முன்னே சொன்னேன், பின்னே வாளா பேதுறு வீரேல் பிழை என்ருள். (அதைக் கேட்ட சீதாதேவி) அன்னே நன்று என்ருள் அவர் எல்லாம் (அந்த அரக்கியர் களெல்லாம்) அவிவுற்ருர்.

பொருள்

இன்னேரன்ன - (சீதாதேவியானவள்) இத்தகைய அவலநிலை, எய்திய காலத்து - அடைந்த போது, இடை நின்ருள் - நடுநிலை திறம்பாதவளாகிய திரிசடை, (சீதாதேவிபை நோக்கி) அம்மா - அன்னையே; கண்ட கனவின் - நான் கண்ட கனவினையும், முடிவு, அதனல் எய்த இருக்கும் நற்பயனையும், முன்னே சொன்னேன் - முன்னமே (உம்மிடத்துச்) சொல்லியிருக்கின்றேன், பின்னே - அதன்பிறகு (இப்பொழுது) வாளா - வீணுக, பேதுறுவீரேல் - கலங்குவீராஞல்; பிழை - (உமது பெருந்தன்மைக்கு) தவருகும், என்ருள்-என்று கூறினுள்; (அதனைக் கேட்ட சீதாதேவி) அன்னே - தாய் போன்றவளே, நன்றென்ருள் - நல்லது என்ருள், அவர் எல்லாம் - (இங்ஙனம் சீதாதேவிக்குத் திரிசடை கூறிய கனவின் பயனைக் கேட்டுக்கொண்டிருந்த) அக்காவலரக்கிய ரெல்லோரும், அவிவுற்ருர் - அடங்கினர்கள்;

பொழிப்பு

சீதாதேவியானவள் இத்தகைய அவலநிலையினை அடைந்த போது நடுநிலை திறம்பாத திரிசடையானவள் சீதாதேவியை நோக்கி அன்னை போன்றவளே! நான் கண்ட கனவினையும் அதனல் எய்த இருக்கும் நற்பயனையும் முன்னமே உம்மிடம் சொல்லியிருக்கின்றேன். அதனை மறந்து இப்பொழுது வீணுகக் கலங்கு வீராஞல் அது உமது பெருந்தன்மைக்குத் தவருனதாகும் என்று கூறினுள். அதனைக்கேட்ட சீதாதேவி தாய் போன்றவளே நன் றென்று கூறினுள். இங்ஙனம் சீதாதேவிக்குத் திரிசடை கூறிய கனவைக் கேட்டுக்கொண்டிருந்த அரகியர்கள் எல்லோரும் (சீதா தேவிக்குத் துன்பம் செய்யாமல்) அடங்கி விட்டார்கள் என்ப தாம்;

விளக்கம்

இச்செய்யுளில் திரிசடையின் ஆறுதல் உரைகளைக் கேட்டுச் சீதாதேவி கவலை நீங்கியிருத்தலும், காவலரக்கியர்கள் அடங்கிச் சீதாதேவியாரைத் துன்புறுத்தாமலிருத்தலுமாகிய செயல்களை உணர்கின்றேம்.

காவலரக்கியர்கள் தன்னை அச்சுறுத்தி அதட்டிய செயலினுல் நிந்தை கலங்கிக் கண்ணீர் வடித்த சீதாதேவியின் அவல நிலையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட திரிசடையானவள், தான் முன்னுரைத்த கனவின் பயனைக் கேட்டிருந்தும் பின் இங்ஙனம் நீர் கலங்குதல் பெரும் பிழையாகுமெனக் கூறிச் சீதாதேவியைத் தேற்றுகின்றாள்: இதனை,

முன்னே சொன்னேன் கண்ட கனவின் முடிவு அம்மா
பின்னே வாளா பேதுறுவீரேல் பிழை என்றாள்

எனக் கம்பர் திரிசடையின் ஆறுதல் மொழிகளை எடுத்துக் கூறித் தானும் ஆறுதல் அடைகின்றார்: திரிசடை சீதாதேவியின் மேல் பேரன்புடையவளாய் விளங்கி அவளின் துன்பங்களைப் போக்கி ஆதரிக்கின்ற அன்புத் தாயாவாள் என்பதே கம்பரின் கருத்தாகும்: இதனை,

திரிசடை யென்னும் அன்பினுல் தாயினுமினியவள்

என முன்னரும் கம்பர் கூறியுள்ள பொருளுரைகளால் அறிக: இங்ஙனம் தாயினுமினியவளாகிய திரிசடை, சீதாதேவியை அம்மா என அழைப்பதையும், சீதாதேவி திரிசடையை அன்னை என அழைப்பதையும் நோக்கும் பொழுது, அவர்களில் எவர்க்கு எவர் அன்னை என்று சொல்ல முடியாத வகையில் அன்பினுல் இணைந்து விட்டார்கள் என்பதை உணர்கின்றோம். இங்ஙனம் அன்பினுல் ஒன்றுபட்ட திரிசடை, சீதாதேவிக்குக் கூறிய கனவின் பயனைக் கேட்ட காவலரக்கியர்களும் மனம் மாறிச் சீதாதேவியைத் துன்புறுத்தும் செயலை விட்டு அமைதியாக அடங்கியிருந்தார்கள் என்பதையும் கம்பர் கூறுகின்றார்:

அவர் எல்லாம் அவிவுற்றார்

என்பதே கம்பரின் அமைதி உரையாகும்: கருத்தொருமித்த திரிசடையும் சீதாதேவியும் கலந்துரையாடிய கனத்திறன்களைக் கேட்டவுடன் கல்லினும் கொடிய மனம் படைத்த காவலரக்கியர்களும் மனம் மாறி விட்டார்கள் என்பதை அறியும் பொழுது அன்பின் அகலத்தையும் ஆற்றலையும் எண்ணி யெண்ணி இன்பமடைய வேண்டியவர்களாகின்றோம்:

முன்பு நின்ற மூவுலகத்தினும்
அன்பின் மிக்கதோர் ஆக்கமுண்டாகுமோ

எனவரும் கம்பரின் பொருளுரைகளையும் நோக்குக:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவி நிலை நின்றுள்

159. அறிந்தா ரன்ன முச்சடை யென்பா
ளதுசொல்லப்
பிறிந்தார் சீற்ற மன்னனை யஞ்சிப் பிறிகில்லார்
செறிந்தா ராய தீவினை யன்னர்
தெறலெண்ணர்
நெறிந்தா ரோதிப் பேதையு மாவி நிலைநின்றுள்

கொண்டுகூட்டு: அறிந்தார் அன்ன முச்சடை என்பாள் அது சொல்ல, செறிந்தார் ஆய தீவினை அன்னர், சீற்றம் பிறிந்தார் (ஆயினும்) மன்னனை அஞ்சிப் பிறிகில்லார் (எனினும்) தெறல் எண்ணர் (ஆகவே) நெறிந்து ஆர் ஓதிப்பேதையும், ஆவி நிலை நின்றுள்.

பொருள்

அறிந்தார் அன்ன - மெய்யறிவு உடையவர்களைப் போன்ற வளாகிய, முச்சடை என்பாள் - திரிசடை என்பவள், அது சொல்ல - (தான்) கண்ட கனவும் அதன் பயனுமாகிய இவற்றைச் சொல்ல, செறிந்தார் ஆய - சீதாதேவியைச் சூழ்ந்து நெருங்கி நிற்கின்றவர்களாகிய, தீவினை அன்னர் - தீவினையைப் போல வருத்துகின்றவர்களான காவல் அரக்கியர்கள், சீற்றம் - தங்கள் உள்ளத்தின் கண் இராவணனின் தூண்டுதலால் மூண்டெழுந்த) சினம், பிறிந்தார் - நீங்கினர், (ஆயினும்) மன்னனை அஞ்சி - தம் வேந்தனாகிய இராவணனுக்குப் பயந்து, பிறிகில்லார் - சீதாதேவியை விட்டு நீங்காதவராஞர் (என்றாலும்) தெறல் - (சீதாதேவியை அச்சுறுத்தி அடக்கி) வருத்த, எண்ணர் - நினைபாராயினர், (இதனால்) நெறிந்தார் - சுருள் பொருந்திய (நெறிப்புக் கொண்ட) ஓதிப்பேதையும் - கூந்தலையுடைய பெண்ணாகிய சீதாதேவியும், ஆவிநிலை நின்றுள் - உயிர் நிலைத்திருக்கப் பெற்றாள்.

பொழிப்பு

மெய்யறிவு உடையவர்களைப் போன்றவளாகிய திரிசடை என்பவள் தான் கண்ட கனவும், அதன் பயனுமாகிய இவற்றை எடுத்துச் செல்லச் சீதாதேவியைச் சூழ்ந்து நெருங்கி நின்றவர்களும், தீவினையைப் போல வருத்துகின்றவர்களுமான காவல் அரக்கியர்கள் தங்கள் உள்ளத்தில் மூண்டெழுந்த சினம் நீங்கினராயினும், தம் வேந்தனாகிய இராவணனுக்குப் பயந்து, சீதாதேவியை விட்டு நீங்காதவராயினர். அங்ஙனம் நீங்காதிருந்தும் சீதாதேவியை வருத்த நினைந்திலர். சுருள் பொருந்திய கூந்தலையுடைய சீதாதேவியாரும், உயிர் நிலைத்திருக்கப் பெற்றாள் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம்

இச் செய்யுளில் திரிசடை கூறிய கனவின் பயனைக் கேட்ட காவலரக்கியர்கள் சீதாதேவியை வருத்துதலை விட்டு அடங்கியிருந்தார்கள் என்பதும், அதனால் சீதாதேவி அவலம் நீங்கியிருந்தாள் என்பதை அறிகின்றோம்.

திரிசடை மெய்யுணர்ந்த தவமுனிவர்களைப் போல மிகத் தண்ணளியும், தாய்மைப் பண்பும் நிரம்பியவளாதலால், அவன் கூறிய இனிய மொழிகளைக் கேட்ட காவலரக்கியர்கள் மனம் மாறிச் சீதாதேவியைத் துன்புறுத்தாது அடங்கிவிட்டார்கள் என்பதைக் கம்பர் மிக ஆராய்மையோடு கூறி மகிழ்கின்றார்.

அறிந்தா ரன்ன முச்சடை என்பாள் அதுசொல்ல
செறிந்தாராய தீவினை அன்னார் தெறலெண்ணார்
நெறிந்தார் ஓதிப் பேதையும் ஆவி நிலை நின்றாள்

எனுமிக் கவிதைத் தொடர்களைப் படிக்கும் பொழுது எங்கள் உள்ளத்திலும் எம்மை அறியாமலே ஓர் உவகை உணர்ச்சி எழுகின்றது.

கொல்லும் கொடிய காவலரக்கியர்கள், திரிசடை கூறிய இனிய அன்புரைகளால் உள்ளம் மாறிச் சீதாதேவிக்கோர் தீமையும் செய்யாது அடங்கிய சிறப்பை எண்ணும் பொழுது அறம் அழிந்து விடவில்லை என்ற உண்மையை அறிகின்றோம்.

காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும்
மாசுண்ட தில்லையால் அறத்துக்கு ஈறுண்டோ

என அனுமானுடன் சேர்ந்து நாமும் அறத்தை வாழ்த்துவோமாக.

நிந்தனைப்படலம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்கள்

1. பொது

1. கம்பரின் வரலாற்றையும் காலத்தையும் தருக.

2. இராமாயணத்தில் கம்பர் என்னென்ன உண்மைகளை நிலை நாட்டியுள்ளார்?

3. கம்பர், இராமாயணத்தில் எக்காலத் தமிழகத்தை எமக்குக் காட்டுகின்றார்?

4. சோழர் காலத் தமிழகத்தில் கம்பராமாயணத் தோற்றத்திற்குத்தக்க சூழ்நிலை எங்ஙனம் அமைந்திருந்தது.

5. சுந்தரகாண்டம் எனும் பெயர்க் காரணத்தை ஆராய்க.?

6. காட்சிப்படலத்தில் வைத்துக் கம்பர் காட்டும் பண்பாடுகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிப் படலம்

1; அசோகவனத்தில் புகுந்த அனுமானின் உள்ள நிலையைக் கூறுக;

2; சிறைச்சாலையில் இருந்த சீதாதேவியின் தவக்கோலத்தைக் கண்ட அனுமான் எங்ஙனம் வியந்து பாராட்டுகின்றான்;

3; சிறையிலிருந்த சீதாதேவியின் சிந்தனையைக் கம்பர் எங்ஙனம் எமக்குக் கூறுகின்றார்;

4. சீதாதேவி தன் தலைவனாகிய இராமபிரானின் குணங்களுள் எவற்றை எண்ணி எண்ணி இன்னல் அடைகின்றாள்;

5; திரிசடையின் சிறப்பைக் கம்பர் எங்ஙனம் பாராட்டுகின்றார்

6; சீதாதேவி, எவ்வெக்காலங்களில் தன், வலமும், இடமும் துடித்ததாகத் திரிசடைக்குக் கூறுகின்றாள்;

7; திரிசடை தான் கண்ட கனா நிகழ்ச்சிகளை எங்ஙனம் எடுத்துச் சீதாதேவியிடம் கூறுகின்றாள்;

8; பொன்னிறத் தும்பியொன்று சீதாதேவியின் காதில் ஊதிச் செல்லுதலைக் கொண்டு திரிசடை கூறும் நற்செய்தி யாது?

9; திரிசடை சீதாதேவியிடம் கூறிய உற்பாதங்கள் எவை? அவற்றால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்க.

10; இராவணன் அழிந்து படுவான் என்பதை எங்ஙனம் திரிசடை நிலை நாட்டி உரைக்கின்றாள்.

11; காவலரக்கியரின் தோற்றத்தையும், பண்பையும் விளக்குக?

12; அரக்கியர் நடுவில் சீதாதேவியைக் கண்ட அனுமானின் மனநிலையைக் கம்பர் எங்ஙனம் கூறுகின்றார்.

13. பின்வருவனவற்றை இடஞ்சுட்டி (சந்தர்ப்பங்காட்டி) விளக்குக?

(i) தன் குலப்பொறை தன்பொறை எனத் தணிந்தாளே?

(ii) வெம்மடங்கலை உன்னி வெதும்புவாள்

(iii) வாழிய உலகினி வரம்பில் நாளெலாம்.

14; "விரிமழைக் குலம் கிழித்து" எனத் தொடங்கும் செய்யுளில் உள்ள பொருட் சிறப்பைத் தருக;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தனைப் படலம்

15. சீதாதேவியிருக்கும் சிறைச்சாலையை நோக்கி இராவணன் வந்தமையைக் கம்பர் எங்ஙனம் கூறுகின்றார்?

16. ''ஊழிதோறும் புதிதுறும் சீர்த்தியான்'' எனச் சிறப்பிக்கப் பட்டவன் யார்? ஏன் அங்ஙனஞ் சிறப்பிக்கப்பட்டான்?

17. பின்வருந் தொடர்கள் சுட்டிக்காட்டும் பொருள்களை விளக்குக:

1. வெந்துறு புண்ணில் வேல் நுழைதல்.
2. வெவ்விடத்தை அமுதென வேண்டுதல்.
3. ஊசலாடும் உளம் ஒழிந்து ஓதுவான்.

18. நீனிறக் குன்றின் எனத் தொடங்கும் செய்யுளில் உவமான உவமேயங்களை விளக்குக.

19. மானிடர்களை இராவணன் எங்ஙனம் இகழ்ந்துரைக்கின்றான்.

20. இராமபிரானின் வில்லாற்றலையும் அருளுடைமையையும் சீதாதேவி எங்ஙனம் இராவணனுக்கு விளக்கிக் கூறுகின்றாள்.

21. மானுடர்கள் வலியர் என்பதைச் சீதாதேவி எங்ஙனம் நிலை நாட்டி உரைக்கின்றாள்.

22. இராவணனின் ஆண்மைக் குறைவை சீதாதேவி எங்ஙனம் இழித்துரைக்கின்றாள்?

23. பொற்கணை - எனத் தொடங்கும் பாட்டின் பொருளை எழுதுக

24. சிறு குறிப்பெழுதுக:

கார்த்த வீரியன்
இரணியன்
பரசுராமன்
மாரீசன்
குகன்
திரிசடை

25. கடிக்கும் வல்லரவும் எனத் தொடங்கும் செய்யுளின் பொருட் சிறப்பை ஆராய்க.

26. தன் தீய எண்ணத்திற்கு உடன்படாவிடின் என்னென்ன தீமைகளை இயற்றுவதாக இராவணன் சீதாதேவிக்குச் சொல்கின்றான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. இராவணனின் குடிச்சிறப்பு, கல்வி, அறிவு, அன்பு என்ப வற்றைக் காவல் அரக்கியர்கள் எங்ஙனம் பாராட்டியுரைக் கின்றார்கள்.

28. சீதாதேவி இராவணனின் தீய நினைவை மாற்றி நல்வழிப் படுத்துவதற்காக அவனுக்கெடுத்துக்கூறிய நீதிகள் எவை?

29. பொங்கரா நுங்கிக்கான்ற தூயவெண்மதி, என வரும் உவ மானத்தை உவமேயத்துடன் பொருத்தி, விளக்குக.

30. அனுமானின் இயல்பை ஆராய்க.

31. காட்சிப் படலத்திலும் நிந்தனைப்படலத்திலும் உள்ள நிகழ்ச்சிகளைக்கொண்டு, சீதாதேவியின் பண்புகளை ஆராய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் முதற் குறிப்பகராதி

1. காட்சிப்படலம்

	பக்க எண்		பக்க எண்
அரக்கிய ரயின்முத	122	துயிலெனக் கண்க	12
அரிது போகலோ	21	தெம்மடங்கிய	46
அரிய மஞ்சினே	17	தேங்கு கங்கைத்	51
அருந்து மெல்லட	35	தேவரும் பிழைத்திலர்	139
அவ்வயினரக்கிய	111	தோரண முறியுமாற்	94
ஆண்டகையிராவணன்	89	நஞ்சனையான்வனத்	76
ஆயது தேரினுன்	83	நலந்துடிக்கிறதோ	71
ஆயிடைத் திரிசடை	70	பரித்த செல்வ	59
ஆயிடை யுரையவிர்	120	பிடிமதம் பிறந்தன	91
ஆயிரந் திருவினக்	103	புனைகழலிராகவன்	137
ஆவியர் துகில்	25	பெற்ற தாயருந்	40
ஆழநீர்க் கங்கை	53	பேணு நோற்றது மனை	143
இருந்தன டிரிசடை	68	பொன்மனை புக்கவப்	105
இவ்விடை யண்ணலல்	108	மக்களும் சுற்றமும்	88
இன்னலம்பர	52	மங்கையர் மங்கலத்	97
உரங்கொடே மலர்ச்	57	மழுவின் வாயின	61
உன்னிறம் பசப்பற	81	மறந்ததெனினுதுமோர்	74
எண்ணினுக் களவிட	117	மன்னவன்றேவியம	98
எண்ணெய் தன்	87	மாசுண்ட மணியனுள்	134
எள்ளரு முருவினல்	127	மாடுநின்றவம்	3
என்றலுந் திரிசடை	80	மாண்டுபோயின	31
என்றனளியம்பிவே	99	முரனெனத்தகு	42
என்றிவை யினையன	151	மூனிவ ராக்கியர்	145
என்று சோகிபுக்	5	முனியொடு மிதிலையின்	73
என்னை நாயக	33	மூவகை யுலகையும்	129
ஏகவாளியவ்	63	மெய்த்த தாதை	56
ஒருபது கையின	113	மெய்த்திருப்பத	48
கண்டிலன் கொலா	30	வயிற்றிடை வாயினர்	112
கரிபரிவேங்கை மாக்	116	வரம்பிலா மதகரி	101
கலையினுடிரு	23	வன்கண் வஞ்சனை	38
கடக்கருமரக்கியர்	125	வன்மருங்குல்வாள்	9
கேழிலாணிறையிறை	140	விண்டொடர் மதியினை	96
சூலம் வாள் சக்கரம்	114	விரிமழைக் குலங்கிழித்	123
செல்வமோவது	149	விழுதல் விம்முதன்	14
தருமமே காத்ததோ	147	விற்பகலின்றியே	92
தழைத்த பொன்முலைத்	15	வீடினதன்றறன்	133
திரியுமாலிலங்கையு	93	வெங்கனல் முழுசியும்	141
துப்பினுற் செய்த	19	வெல்லிராதனை	65
துயிலகில யாதலிற்	85		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நிந்தனைப்படலம்

	பக்க எண்		பக்க எண்
அங்கண்மாஞால	287	தக்கதென்னுயிர்	244
அங்கயற் கருங்க	178	தந்திரி நெறியிற்	185
அஞ்சினையாதலா	263	தன்னிறத்தோடு	169
அஞ்சுவித்தானு	361	தனியனின்றமன்	327
அந்தரம் புகுந்த	163	தென்றமிழுரைத்தோன்	308
அந்தியினனங்க	187	தேவர் தேவியர்	246
அவ்விடத்தரு	217	தொழுயுறு புழை	180
அறிந்தா ரன்ன	379	தோடொறுந் தொடர்	166
அன்ன காலியி	325	தோற்றனை பறவைக்	269
அன்னபூஞ் சதுக்கஞ்	182	நான நெய் விளக்கு	160
ஆண்டவாளரக்கன்	330	நீநிறக் குன்றி	164
ஆயிடையரக்க	208	நோற்கின் ருர்களு	231
ஆயிரந்தடக்கை	312	பத்துள தலையுந்	266
ஆர்கலி யகழி	196	பதவியன் மனித	349
இப்பெருஞ் செல்வ	303	பயிலெயிற் றிரட்	174
இருவரென்று இகழ்ந்தனை	294	பள்ள நீர்	353
இழவெனக் குயிர்க்	238	புக்க வழிக்கும்	372
இழைபுரை மருங்கு	190	பூந்தண் வார்குழற்	228
இன்றிறந்தன	223	பூவிலோனுதி	300
இன்றெரன்ன	376	பெண்மையும் மழ	240
இனையதோர் தன்மை	206	பெற்றுடை வாளு	272
ஈசற்காயினு	220	பொருளும் யாளும்	233
ஈண்டு நாளு	235	பொற்கணன் நம்பி	296
ஈதுரைத்தழன்று	357	போயினனாக்கன்	363
உருப்பசியுடை	158	மண்ணிற் றீய	370
உலக முன்று	226	மல்லொடுதிரடோள்	257
உன்னையுங் கேட்டு	310	மலையெடுத் தெண்டிசை	278
என்றறத்துறை	321	மறந்திறம்பாத	305
ஏழைநின் னெளி	280	மாலையுஞ் சாந்துங்	193
ஒன்றுகேளுரை	335	மானுயரிவரன	290
கடிக்குங் வல்லரவுங்	315	மானென்பதறிந்து	337
காய்ந்தன சலாகை	253	முன் முன்னின்ருர்	366
குடிமை மூன்றுலகு	248	மூவருந் தேவர்	343
குன்று நீ யெடுத்த	275	மேருவை யுருவ	260
கூசி யாவி	211	வளர்ந்த தாளினன்	323
கேடகத்தோடு	198	வாழி சானகி	213
கொல்வனென்று	333	விரிதளிர் முகை	201
கொல்வானுற்	374	வீட்டுங்காலத்	242
சின வீரத்த	173	வெஞ்சின வாக்கரை	285
சிகரவண் குடுமி	156	வென்றேருமிருப்ப	341
சிற்றியற் சிறுமை	346	வையந்தந்த	369

சேர்வெண் 3479

வகுப்பெண் 894.811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org